THE LAW OFFICE OF
Gary Anandasangaree
PROFESSIONAL CORPORATION
• Real Estate (Buying, Selling & Re-Financing)
• Corporate • Commercial
• Wills & Estates • Immigration
416 321 1100
gary@galaw.ca

தாய் வீடு
THAIVEEDU FEBRUARY 2013 பெப்பிரவரி HOME & LIVING

FREE REAL ESTATE CLASSES
Get Your License Fast
Successful Real Estate Office with Over 200 Salespeople
SELVA VETTYVEL
Broker of Record
Tel: 416.568.4301
Bus: 905.201.9977
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently Owned and Operated, REALTOR®



# காவலுக்கு மரியாதை

## தமிழ் மரபுத் திங்கள் விழாக்கள் ஒரு பார்வை

படம்: துஷியந்தன் துரைரத்தினம்

RAMAN APPLIANCES
Quality Products, Certified Technicians Reliable Service & Reasonable Prices
எமக்கூடாக Furnace வாங்கும்போது ஒன்ராரியோ அரசு வழங்கும் Rebateஐப் பெற்றுக்கொள்ளலாம்
General Contractors For:
• Air Conditioning • Gas Furnaces • Central Vacuum
• Air Cleaners • Gas Fireplaces
• Garage Door Openers • Security Alarm
Tel: 647-893-4414
Email: info@raheatingcooling.com
Carrier turn to the experts
Raman Chelliah
President
647-893-4414
Scarborough : C105-6055 Steeles Ave. East, Scarborough, ON M1X0A7
Brampton : Unit # 11, 158 Kennedy Rd. S., Brampton, ON L6W3G7

Suren Nathan AMP
Mortgage Broker
License# M08004479
Dir. 416-436-1111
Office. 416-548-7475 Fax: 416-548-7496
suren@bonafidemortgage.ca
7 Eastvale Drive,Unit 203, Markham, ON, L3S 4N8
BonaFide Mortgage Solutions Inc.

FREE Home Value Estimates
GERARD RATNARAJAH, P.Eng.
Sales Representative
647.206.4494
Century 21 Innovative Realty Inc. Brokerage*
2250 Markham Road, Unit 3
Toronto, ON M1B 2W1

வீடு வியாபார நிலையம்
வாங்க விற்க
HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6
Bus: 416-298-3200, Fax: 416-298-3440, E-mail: kuna@kunahomes.ca
*Independently Owned and Operated.
Kunasegar Nagalingam
Sales Representative
Sujatha Kunasegar
Sales Representative
416.402.4545

Sivakumar Sivarajah
416-453-7777
RE/MAX
Realtron Realty, Inc.
Independently Owned & Operated
416-289-3333

Ahilan Thanabalasingham
Sales Representative
416.617.1767
Office: 905.471.0002
RE/MAX
Dynasty Realty Inc., Brokerage
Independently owned and operated

இனிய இல்லம் ஒளிமயமான எதிர்காலதிற்கு அடித்தளம்
மகேன் சிங்கராஜா
Sales Representative
Direct: 416.302.7283 (SAVE)
E-mail: msingarajah@trebnet.com
web: www.mahenonline.com
RE/MAX Vision Realty Inc., Realtor
2210 Marham Road, Unit-1, Toronto, ON M1B 5V6
Tel: 416.321.2228, Fax: 416.321.0002


LET US FIND YOUR
DREAM
HOME
Homelife Today Realty Ltd.
Brokerage*
31 PROGRESS AVE, UNIT 210, TORONTO, ON. M1P 4S6
BUS: 416.298.3200 • FAX: 416.298.3440
HOMELIFE
HIGHER STANDARDS
MULTI-USE SPACE FOR RENT
Markham / 14th Ave.
Total of 600 Sq Ft
$22.50 Sq Ft
Neilson / Mclevin
3 Storey condo located in a great area, 3 bdrms, 3 wshrms, large living room and backyard, fresh paint & more
$295,000
Lawrence / Mccowan Rd
Well maintained attractive home, 2+1 bdrms, 1 wshrms, cathedral ceilings, updated kitchen, walk-in bathtub, fin bsmnt
$349,900
Brimorton / Scarborough
Raised bungalow, 3+1 bdrms, 2 wshrms, large private yard, bright kitchen, hdwd flrs, high efficiency furnace, fin bsmnt
$374,900
16th Ave / Cornell Rouge blvd
2-Storey over 2000 sqft, 3 bdrms, 3 wshrms, modern kit, ceramic backsplash, catherdal ceiling, hdwd flrs
$489,800
Lisgar / Derry
Stunning & spacious freehold townhome, 3+1 bdrms, 3 wshrms, cathedral ceilings, luxury masters, rear deck, fin bsmnt
$405,000
Morningside / Sheppard Ave
Freehold townhome without maintenance fee, 3+1 bdrms, 3 wshrms, fin bsmnt with sep entrance
$409,800
Derry / 9th Line
Well maintained & decorated home, 3+1 bdrms, 3 wshrms, high ceiling, finished top to bottom fin bsmnt with full bath
$409,900
Mavis / Eglinton
Freehold town home with spacious & nice yayout, 3 bdrms, 3 wshrms, hdwd flrs, close to ll amenities, fin bsmnt
$417,000
Middlefield / Denison
Stunning 4+2 bdrms 2-storey, 4 wshrms, steps to Ttc & Yrt, grand sized masters, fin bsmnt with sep ent
$549,000
Britannia / 9th Line
Lovely semi-detached 3 bdrms & 3 wshrms home, hdwd flrs, interlocking walkway, cozy gas fireplace & much more
$429,999
Markham / Steeles
Semi-detached with 3+1 bdrms & 4 bath, open concept, dining / living hdwd flrs, fin bsmnt, Ttc & Yrt at door steps
$459,000
Markham / Bur Oak
Semi-detached, 3 bdrms, 3 wshrms, 9' ceiling, hdwd & laminate flrs, walking distance to go train, fin bsmnt
$459,900
Hwy 7 / 9th Line
Sunny south facing townhome overlooking park, 3 bdrms, 3 wshrms, open concept 9' ceilings, hdwd on main flr
$465,000
Steeles Ave E / Staines Rd
Bright & spacious 2181 Sq Ft detached home, 4 bdrms, 3 wshrms, granite counter Top & backsplash, hdwd t/o main flr
$549,900
Main St. / Bullock
2-Storey, 3+2 bdrms, 3 wshrms, huge master, walking distance to go station, fin bsmnt with sep ent
$467,000
Steeles / Birchmount
Upgraded 2-storey, 3 bdrms & 2 wshrms, close to Pacific Mall & Ttc, fin bsmnt perfect for young family, porch enclosure
$474,900
Williamson Rd / Park Place
Freehold townhouse in high demand Markham area, 3 bdrms & 3 wshrms, open concept, close to all amenities, fin bsmnt
$485,000
Morningside / Nightstar
Detached, 3+1 bdrms, 3 wshrms, huge yard, hdwd flrs t/o main flr, reco studio in bsmt, 9' ceilings
$489,500
*Independently Owned & Operated. Not intended to solicit properties currently listed for sale or individuals currently under contract with Brokerage
Vasanthy Niranjan
Real Estate Broker
416.845.8272
vasanthyne@gmail.com
DIAMOND AWARD WINNER 2009, 2010 & 2011 • TOP 5% IN CANADA
Raj Ariyanayagam
Real Estate Broker
416.930.4663
rajhomes@hotmail.com
GOLD AWARD WINNER 2009, 2010 & 2011

## பதினோராம் படி

தாய்வீடு பத்திரிகை பதினோராவது ஆண்டில் கால் பதிக்கிறது. வீடும் வீடுசார் வாழ்வியலுக்குமான பத்திரிகையாக 2003ம் ஆண்டு பெப்பிரவரி மாதம் 'வீடு' பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் 'நம்வீடு' என்று பெயர் மாற்றம் பெற்று இன்று 'தாய்வீடு' என்ற பெயருடன் வெளிவருகிறது.

பத்து ஆண்டுகள் என்பது மனித வரலாற்றில் ஒரு சிறு புள்ளியை விட சிறியது. ஆனால் இந்தப் பத்து ஆண்டுகளில் தமிழர் வரலாற்றிலேயே மிகத்துயரமான காலப்பகுதியையும், புலம்பெயர் நாடுகளில் நம்பிக்கைப் பொறிகளையும் கடந்து வந்திருக்கின்றோம். வாயைத் திறப்பதற்கும், ஓர் எழுதுகோலை வைத்திருப்பதற்கும் கூட அச்சமாக இருந்த, இருக்கின்ற காலத்திலும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். 'தாய்வீடு' இந்தக்காலப் பகுதியின் ஒரு சாட்சியாக வாழ்ந்திருக்கிறது. இந்த வரலாற்றைப் பதிவுசெய்வதில் தாய்வீடு தன்னாலான பணியைச் செய்திருப்பதாகவே எண்ணுகிறோம்.

இந்தப் பத்து ஆண்டுகளில் உள்ளடக்கத்திலும் வடிவமைப்பிலும் தாய்வீடு பெரும் மாற்றங்களைக் கண்டிருக்கிறது. இன்றைக்கு முக்கிய ஈழத்தமிழ் எழுத்தாளர்கள் உட்பட நூற்றுக்கு மேற்பட்ட எழுத்தாளர்கள், தமிழுலகின் முன்னணி ஓவியர்கள், முக்கிய புகைப்படக் கலைஞர்கள், வடிவமைப்பாளர்கள் பங்களிக்கும் ஒரு சஞ்சிகையாக தாய்வீடு பரிணாமம் அடைந்திருக்கிறது. சராசரியாக ஒரு தாய்வீடு இதழில் நாற்பதுக்கும் அதிகமான ஆக்கங்கள் வெளியாகின்றன. இவற்றில் வீடும் வாழ்வியலும் சார்ந்த கட்டுரைகள், இலக்கிய ஆக்கங்கள், ஓவியங்கள், புகைப்படங்கள் ஆகியவை அடங்கும்.

ஒழுங்கும் தொடர்ச்சியும் செம்மையும் உள்ள ஒரு சஞ்சிகை என்பதுடன் சமூகப் பொறுப்புள்ள ஓர் ஊடகமாகவும் 'தாய்வீடு' வெளிவரவேண்டுமென்பதே எமது குறிக்கோள்.

புலம்பெயர் தமிழர் சமூகத்தில் குறைந்துவரும் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதற்காகவே 'தாய்வீடு' இலக்கியப்பகுதிக்கு முக்கியத்துவம் வழங்கத் தொடங்கியது. இன்று தாய்வீட்டின் இலக்கியப் பக்கங்களும் படிப்போரிடையே அதிக கவனம் பெற்றுள்ளன.

'தாய்வீடு' ஏராளமான முக்கிய முன்னெடுப்புக்களையும் மேற்கொண்டுவருகிறது. இளையோரை உள்வாங்குதல், முக்கிய விடயங்கள் தொடர்பான சிறப்பிதழ்களை வெளிக்கொணருதல் என்பன இவற்றுட் சில.

தாய்வீட்டின் இந்தப் பயணம் ஏராளமானோரின் உழைப்பிலேயே சாத்தியமாகியிருக்கிறது. இந்தப் பயணத்தில் தூண்களாகவிருந்த, இருக்கின்ற படைப்பாளிகள், விளம்பரதாரர்கள், படிப்பாளர்கள் அனைவருக்கும் எமது நன்றி.

புலம்பெயர் மண்ணிலும் தாயகத்திலும் ஓர் ஆரோக்கியமான வாழ்வியலைக் கட்டியெழுப்பும் நோக்கில் தாய்வீடு தொடர்ந்து பயணிக்கும் என்று உறுதிகூறி எமது பயணத்தைத் தொடர்கிறோம்.

▪▪▪

முகப்பில்: கனடியத் தமிழர் பேரவையின் பொங்கல் விழாவில் ரொறன்ரோ காவற்றுறையின் தலைவர் **Bill Blair.**

*படம்: துசியந்தன் துரைரத்தினம்.*



| | | |
|---|---|---|
| **Publisher & Editor** | : | **P.J. Dilipkumar** |
| பதிப்பாளர், ஆசிரியர் | : | பி.ஜெ. டிலிப்குமார் |
| ஆலோசகர் குழு | : | சேரன், துஷி ஞானப்பிரகாசம், ஞானம் லெம்பட், கந்தசாமி கங்காதரன், கருணா, பொன்னையா விவேகானந்தன் |
| ஓவியங்கள் | : | ஆசை இராசையா (இலங்கை) ட்ராட்ஸ்கி மருது (இந்தியா) ஜீவா (இந்தியா) கருணா (கனடா) K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து) ரமணி (இலங்கை) |
| புகைப்படங்கள் | : | கருணா, துசியந்தன் துரைரத்தினம். K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து) |
| தட்டச்சு | : | கௌரி, ஜீவா, மஞ்சுளா ராஜலிங்கம், சாம் டானியல் |
| ஒப்புநோக்கல் | : | கௌரி, மஞ்சுளா ராஜலிங்கம், வீ. நடராஜா. |
| வரைகலை ஆலோசனை | : | கருணா (டிஜி வரைகலை அமையம்) |
| ரொறன்ரோ விநியோகம் | : | இராமநாதன் ரூபன் |
| மொன்றியால் தொடர்புகள் | : | சுகுமாரன் சின்னையா **1-514-299-3186** |
| ஒட்டாவா தொடர்புகள் | : | அலெக்ஸ் சிவசம்பு **1-613 -276-7253** |
| அஞ்சல் முகவரி | : | **Editor P.O.Box #63581 Woodside Square 1571 Sandhurst Cir. Toronto, ON. M1V 1V0** |
| **Tel** | : | **416-646-3422, 416-857-6406** |
| **Fax** | : | **416-849-0594** |
| **Web** | : | **www.thaiveedu.com** |
| **E-mail** | : | **info@thaiveedu.com** |

Printed on recycled paper


# தமிழ் மரபுத் திங்கள்: சடங்கா? சாதனையா?




கடந்த ஆண்டைப் போலவே இவ்வாண்டும் தமிழ் மரபுத் திங்கள் நிகழ்வுகள் நடந்தேறியுள்ளன. இம்முறை விற்பி, ஒஷாவா நகர சபைகளும் யோர்க் பிரதேசசபையும்கூட தமிழ் மரபுத் திங்கள் பிரகடனம் செய்தமை கூடுதல் மகிழ்வுக்குரிய விடயம்.




### ஈரல் வீக்கம்

**- கந்தையா செந்தில்நாதன்**

உணவு, நீர், மதுசாரம், மருந்து போன்றவற்றிலுள்ள ஏறத்தாழ 30 கிராம் வரையிலான மென்நஞ்சுப் பொருட்களை ஈரலினால் செயலிழக்கச் செய்யமுடியும்.




### விவேகமான வெப்பநிலைக் கட்டுப்படுத்தி

**- வேலா சுப்ரமணியம்**

Nest இன் உதவியுடன் வீட்டிற்கு வெளியில் இருந்தபடியே வெப்பத்தைக் குறைக்கவும், கூட்டவும் முடியுமாதலால் பெருந்தொகை பணத்தைச் சேமிக்க முடிகின்றது..




### நடக்கும் என்பார் நடக்காது, நடக்காது என்பார் நடந்துவிடும்

**- பொ. கனகசபாபதி**

அவ்வப்போது பிரளயங்கள் பல நடந்துள்ளதாக உலக வரலாறு கூறுகின்றது.




### மறந்துபோன பழந்தமிழர் உணவுவகைகள்

**- பால. சிவகடாட்சம்**

நம் மறந்துவிட்ட, ஆனால் உடலுக்கு நலம் விளைக்கும் சில உணவு வகைகளின் செய்முறைகள்.


**நீதிகேட்கும் நீதிதேவதையே! இலங்கையிற் பயிரே வேலியை மேய்கிறது** 4
அ. கணபதிப்பிள்ளை

**பேராசிரியர் சுவாமி விபுலானந்த அடிகளார்** 67
முருகேசு பாக்கியநாதன்

**கலாசாரப் போராளி** 74
சுல்பிகா இஸ்மாயில்

**பல்கலைக்கழகத்தில் தமிழ் வகுப்புகள்** 77
உதயணன்

**உருத்திரபுரம் குடியேற்றத் திட்டமும் அதன் வளர்ச்சியும்** 83
கா. நாகலிங்கம்

**கசெற்றால் குழம்பிய கலியாணம்** 85
செல்வம் அருளானந்தம்

**ஒமெல்லாஸை விட்டு விலகிச் செல்பவர்கள்** 90
என்.கே. மகாலிங்கம்

**நதி** 96
தேவகாந்தன்

**ஆகச் சிறந்த பிழை** 98
அ.முத்துலிங்கம்

**பன்முகக் கலைஞன் கிருஷ்ணராஜா** 102
ப. ஸ்ரீஸ்கந்தன்

**கலைத்தூது அருட்கலாநிதி நீ. மரிய சேவியர் அடிகள்** 104
தெளிவத்தை ஜோசப்

**புலம்பெயர் சமூகத்தில் பேசப்படாத கூத்துக்கலை** 107
சாம் பிரதீபன்

**நயகராவில் நடந்த யுத்தம்** 108
நிமால் நாகராஜா

**புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை** 110
வி. கந்தவனம்

**நான் லண்டன் வாசிதான்** 113
இளைய அப்துல்லாஹ்


*மேலும் ஆக்க விபரங்கள் 4ம் பக்கம்*

பெயர் தோற்றாத கட்டுரைகளுக்கு ஆசிரியரே பொறுப்பு.
ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பு.

# நீதிகேட்கும் நீதிதேவதையே!

# இலங்கையிற் பயிரே வேலியை மேய்கிறது

இலங்கையில் எப்பொழுதும் இல்லாதவாறு கடந்த 2012ஆம் ஆண்டு நீதித்துறைக்குச் சவாலான ஆண்டாக அமைந்துவிட்டது. நீதிக்கு உதாரணமாகக் காட்டப்படும் தராசு பலமுறை ஆட்டங்கண்டு சமநிலை பேணத்துடித்துக் கொண்டிருக்கிறது.

நீதி பிறளாதவனான சனிஸ்வரன் துலாவைப் பிடித்துக்கொண்ட உச்சக்களிப்பால் உலுப்பி விட்ட ஆட்டம் சமநிலைப் புள்ளியை நோக்கி வருவதற்குள் மனித உரிமைக்கு என்ன விலை கொடுக்கவேண்டி ஏற்படுமோ என்ற பயம் பாமரன் தொடக்கம் பாராளுமன்ற உறுப்பினர் வரையில் தொடங்கி வைக்கப்பட்டு விட்டது. எல்லாவற்றுக்கும் உச்சமாக அமைந்தது சிராணி பண்டாரநாயக்கா என்ற நீதிதேவதை நீதிகேட்கும் நிலைக்குத் தள்ளப்பட்டமை தான். இத்தனை பெருமைகளையும் புறந்தள்ளிவிட்டுப் புதிய ஆண்டு பிறந்திருந்கிறது தமிழர்களுடைய புத்தாண்டும், இந்து, கிறீஸ்தவ, இஸ்லாமிய மதங்களைத் தாண்டிப் பிறந்து விட்டது.

இலங்கையில் நீதியமைச்சர் ரவூவ்ஹக்கிம் இஸ்லாமியத் தமிழர், ரிசாட் பதியுதீன் பாராளுமன்ற உறுப்பினர் என்ற இஸ்லாமியத் தமிழரால் அந்தோனிப்பிள்ளை ஜுட்சன் என்ற கிறீஸ்தவத் தமிரான நீதிபதிக்கு நீதிமன்றச் செயற்பாடுகளின் பொழுது கொடுத்த இடையூறு தொலைபேசி அச்சுறுத்தல் வடிவில் விடுக்கப்பட்டது. கடந்த ஆடிமாதம் முதல் தொடங்கிய விதைப்பு தையில் உச்சநீதிமன்றத்தில் போய் அறுவடையாகியிருக்கிறது. பருத்தித்துறை இந்து நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரன் வீட்டின் மீதான தாக்குதல் பௌத்த நீதிபதி சிராணி பண்டாரநாயக்காவில் முடிந்திருக்கிறது.

இலங்கையில் மத, இனங்களுக்கிடையிலான ஐக்கியம் பேணப்படவேண்டும் என்பதற்கு முதற்படியாக நாங்களே எங்கள் கண்களைக் குத்திக் கொள்ளுகிறோமா? பயிர்களாகிய நாமே வேலியாக இருக்கவேண்டிய நீதித்துறையை மேயத் தொடங்கியிருக்கிறோமா? என்ற கேள்வி எழுத் தொடங்கியிருக்கிறது.

இராசபக்ஷ அரசு தமிழர்களிடம் ஆட்சியைக் கொடுத்துவிட்டுத் தனது நீண்ட காலத்திட்டம் என்ற ஒரு புதிய நிகழ்ச்சிநிரலின் கீழ்ச் சென்று கொண்டிருக்கிறது. சிங்களத் தமிழ்க் கலப்பால் இனஐக்கியம் ஏற்படலாம் என்ற யதார்த்தக் குடும்பவாதத்தை உதாரணமாகக் கொண்டு அந்த மாதிரியைப் பலாத்காரமாகத் திணிக்க முற்படுவது போல் தெரிகிறது.

சிங்களம் திணிக்கப்படாதிருந்தால் தமிழர்கள் சிங்களம் படித்திருப்பார்கள் தமிழர்கள் தெற்கிலிருந்து காலத்துக்குக் காலம் இனக்கலவரம் என்ற மாதிரி மூலமாகக் கலைக்கப் படாமலிருந்தால் சிங்களர்-தமிழர் கலப்பு மணத்தை ஒருவராலும் தடுத்து நிறுத்தியிருக்க முடியாது. சூழலை மாற்றுவதால் சூழலுக்கு இனமாகத் தமிழர்கள் மாறிவிடுவார்கள் என்ற வட-மேற்கிலங்கை உதாரணத்தைக் கொண்டு செயற்படும் இலங்கை அரசு நிறைவேற்று அதிகாரத்துறையினையே இறுக்கமாகப் பிடித்துக் கொண்டு அதனூடாக எதனையும் சாதித்து விடலாம் என்ற நம்பிக்கையைக் கொண்டிருக்கிறது.

அதிகாரத்தைக் கையில் எடுத்துக் கொள்ளும் ஒரு பிரிவினர் மற்றவர்களை அடக்கமுனைவது சனநாயகத்தின் பாற்படாதெனினும் அதுவே சர்வாதிகாரப் போக்குக்கு வழிவகுப்பதாக அமைகிறது. பிரதமநீதியரசர் சிராணி பண்டாரநாயக்கா விடயத்தில் நாடாளுமன்றத் தெரி



வுக்குழு நியாயமான முறையில் விசாரணையை நடத்தவில்லை என்று குற்றம் சுமத்திவிட்டுப் பிரதமநீதியரசர் நாடாளுமன்றத்தை விட்டு வெளியேறியமையும் மீண்டும் அழைக்கப் பட்டமையும் அவர் மீதான விசாரணையினைத் துரிதப்படுத்துவற்காக அமைந்தது. நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிலிருந்து வெளியேறிய எதிர்கட்சியைச் சேர்ந்த தெரிவுக்குழுவினர் தமது அதிருப்தியை வெளியிட்டனர்.

பிரதம நீதியரசருக்கு எதிரான நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒரு நோக்கத்தைக் கொண்டு செயற்படுவதாகக் குறிப்பிட்டனர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் விசாரணைக்கான மனு மீது கையொப்பமிட்டிருந்த வேளையில் ஏன் பிரதமநீதியரசர் மீதான குற்றச்சாட்டுகள் எவையெனத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை என்ற கோரிக்கையினை நடாளுமன்றத் தெரிவுக்குழுத் தலைவர் அமைச்சர் பிரியதர்சன யாப்பாவிடம் கேட்டிருந்தார்கள். அந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதும் அவர்கள் தங்களுக்கு உடன் பாடின்மையினைத் தெரியப்படுத்தும் முகமாக வெளியேறிவிட்டனர்.

**- அ. கணபதிப்பிள்ளை -**

இந்நிலையில் ஆளுங்கட்சியினரே அறிக்கையினைத் தயாரித்தனர் இதில் மூன்று குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டு நீதியரசர் ஒரு மாதத்துக்குள் பதவியிலிருந்து வெளியேற வேண்டும் என்றும் புதிய நீதியரசரை ஜனதிபதி நியமிக்க வேண்டும் என்ற முடிவும் செய்யப்பட்டதன் பிரகாரம் பிரதமநீதியரசராக மொகான் பீரிஸ் நியமனம் பெற்றிருந்தார். இவரின் நியமனத்தை ஐ.சீ.ஜே என்ற பன்னாட்டு நீதித்துறை வல்லுனர் ஆணையம் (International Commission of Jurists) இலங்கையின் எதிர்காலத்தில் சட்ட ஆட்சி அதன் முக்கியத்துவம் என்பவற்றில் தனது பாரதூரமான கரிசனையினை வெளியிட்டிருந்தது.

'மொகான் பீரிஸ் சுதந்திரமில்லாதியங்கும் சட்டமா அதிபராக இருந்தவர்' இவரது பதவிக் காலத்தில் பல அரசியல்வாதிகளின் வழக்குகள் மீளப்பெறப்பட்டிருந்தன என்ற குற்றச்சாட்டும் இருக்கிறது. அத்துடன் நவம்பர் 2011 ஐ.நா. குழுநிலையில் பிரகீத் எக்னெலிகொட 2010ல் சித்திரவதையின் பின் மறைந்தமையினை வெளிநாடு சென்றிருக்கலாம் என்று சொன்னதாக கூறப்பட்டதை ஜுன் 2012ல் கொழும்பு நீதிமன்றத்தில் ஆதாரமில்லாத கூற்று என்று ஒப்புக் கொண்டதனையும் மிகவும் பாரதூரமான குற்றமாகவும் சொல்லப்பட்டது.

அரசியற்திட்டப்பிரகாரம் பிரதமநீதியரசர் நியமனம் பிழையாகச் செய்யப்படவில்லையாயினும் நியமனத்துக்காகச் செய்யப்பட்ட செயற்பாடுகளின் வழிமுறைகள் கேள்வியை கேட்க வைத்திருக்கிறது என்றும் சொல்லப்படுகிறது.

சர்வவல்லமை பொருந்திய ஜே.ஆர். ஜெயவர்த்தனா தனது பதவிக்காலத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் முன்னரே இராஜினாமாக் கடிதங்களைப் பெற்றுக் கொண்டு தனது ஸ்திரத்தன்மையினைப் பேணி வந்ததாகச் சொல்லுவார்கள். அறுதிப் பெரும்பான்மையினைப் பெற்றிராத இந்த அரசாங்கம் எதிர்க்கட்சிகளினதும் சிறுபான்மைக் கட்சிகளினதும் ஆதரவினூடாகப் பெற்றுக்கொண்ட அறுதிப்பெரும்பான்மையை வைத்துக்கொண்டு சர்வாதிகாரப் போக்கில் செயற்படுவது சனநாகமல்ல என்று வாதிடவும் தொடங்கிவிட்டனர். நீதித்துறையினையும் அரசு தனது கையுள் போடுகிறது என்று ஜே.வி.பி பொதுச்செயலர் ரீல்வின் சில்வா குறிப்பிடுகிறார்.

பெரும்பான்மை சமூகம் செய்யும் சட்டங்களைப் பெரும்பான்மையிலுள்ள எதிர்க்கட்சிகள் எதிர்க்கும் நிலை ஒன்று உருவாக்கம் பெற்றிருப்பது நாடு விளிப்படைகிறது என்று நோக்கத்தக்கது. இது ஒருவேளை வெளிநாடுகளைத் திருப்திப்படுத்துவதற்காகவும் எதிர்காலத்தில் ஜனநாயகத்தின் பாதுகாவலர் என்று தங்களைக் கூறிக்கொள்ளவும் எடுக்கும் எதிர்க் கட்சிகளின் உபாயமாக நோக்குதலும்கூடும். இலங்கையில் சிறுபான்மையினருக்கு எதிரானதாக உருவாக்கம் பெற்ற சட்டங்களின் வாசிப்புகளின் பொழுது தமிழ்த்தலைவர்கள் பாராளுமன்றத்தில் வெளிநடப்புச் செய்து தமது எதிர்ப்பைத் தெரிவித்திருந்திருக்கிறார்கள். இருப்பினும் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தன. அப்பொழுது நடந்தவைகளைச் சனநாயகமாக ஏற்றுக்கொண்ட சர்வதேசம் இன்றைய பாராளுமன்ற நடைமுறைகளை எவ்வாறு குறைகூற முடியும் என்ற துணிவு பெரும்பான்மையிடம் இருக்கிறது.

அரசியற்திட்டம் அல்லது யாப்பு என்பது எவ்வாறு ஒரு அரசு வழிநடத்தப்பட வேண்டும் என்பதனை தெளிவுபடுத்துவதாக அமையும். புராதன இந்தியாவில் அர்த்தசாஸ்திரம், மனு தர்மசாஸ்திரம் என்பவற்றின் வழியில் மன்னர்கள் தமது ஆட்சியினை நடாத்தினார்கள். இந்த நடைமுறை இலங்கையிலும் பின்பற்றப்பட்டிருந்தது. இலங்கை அரசர்கள் மனுநீதியைப் பின்பற்றிய கதைகள் மகாவம்சத்தில் தெளிவு படுத்தப்பட்டிருந்தது.

அராபியப் படை எடுப்பு இந்தியாவில் சாரியா சட்டத்தை அறிமுகப்படுத்தி இருந்தாலும் ஐரோப்பியர் வருகையின் பின் பொதுச் சட்டம் அறிமுகமானது. இலங்கையிலும் கண்டிய, தேசவழமை, சாரியா சட்டங்கள் இன்று பொதுச் சட்டத்துக்குள் பிணைக்கப்பட்டுவிட்டன. சட்டம் எல்லோருக்கும் சமம் என்ற சட்ட வாட்சி மூலம் (Rule of Law) சமத்துவம் பேணப்படும் என்ற நம்பிக்கை எல்லோருக்கும் இருக்கிறது. அதேவேளை மனித குலத்துக்கும் அதன் வளர்ச்சிக்கும் தேவையான மனித உரிமைச் சாசனத்தினைப் பேணும் விதிகளை மதிக்க வேண்டிய தேவை எல்லாநாடுகளிலும் வலியுறுத்தப்படுகிறது. விளக்கமில்லாத விசாரணையூடாகத் தலை துண்டிக்கப்பட்ட இளம் பெண்ணுக்குக் கிடைக்காத நீதிபோல் இன்று பலருக்கு நீதி மறுக்கப்பட்டுக் கொண்டுதானிருக்கிறது.

நவீன சனநாயக சோஷலிச முறைகளில் உள்ள அரசுகளில் அரசாங்கத்தை நடாத்துவதில் சட்ட நிரூபணம் (சட்ட ஆக்கம்), சட்ட நிர்வாகம் (நிறைவேற்று அதிகாரம், ஜனாதிபதி அல்லது மந்திரிசபை), நீதிபரிபாலனம் என்ற மூன்று துறைகள் முக்கியம் பெறுகின்றன இந்த மூன்று துறைகளினதும் அதிகாரம் பிரிக்கப்படுகின்ற பொழுதிற்தான் ஒவ்வொருதுறையும் தனது தனித்துவத்தினைப் பேணமுடிகிறது. அதற்காகப் பல வரையறைகளும் எல்லை

*தொடர்தல் 36ம் பக்கம்*

## வீட்டினுள்ளே இன்னும் வருபவை...

**எமக்கு எவ்வாறு வருகின்றது கொலஸ்ட்ரோல்** 7
சிவா சுப்ரா

**ஆரோக்கியமான பற்கள்** 9
ரவிச்சந்திரிகா

**உணவு ஆரோக்கிய சமையல்** 12
சிவாஜினி பாலராஜன்

**ஆபத்தான மனநோயின் ஆரம்ப நிலை** 14
புஷ்பா கனகரட்ணம்

**கற்காலமா தற்காலம்?** 17
டெய்சி

**உறவுகள் பிரியும் போது** 18
போல் யோசேப்

**உங்களது வீட்டு பரிசோதனையில் சித்தி அடைவதற்கு அறிந்திருக்க வேண்டிவை** 23
மகேன் சிங்கராஜா

**ஆன்மீகம்** 25
கந்தையா பரநிருபசிங்கம்

**பணச் சேமிப்பும் சில பழக்கங்களும்** 26

**சமூகச் சட்ட ஆலோசனை நிலையம்** 32
சுதர்ஷி இக்னேஷியஸ்

**வெப்பத்தடையும் உங்கள் வீடும்** 34
பிரபா சின்னா

**கனடாவில் தனிநபரின் வங்குரோத்து நிலை** 38
வி. சிறி

**ஆபத்தான சாரதியா நீங்கள்?** 43
செந்தூரன் புனிதவேல்

**பிரிதலும் தீர்த்தலும்** 44
ஜீவா திசைராஜா

**நீங்கள் முகவருக்கூடாகத் தொழில் புரிபவரா? உரிமைகளைத் தெரிந்துகொள்ளுங்கள்!** 47
என். மிலான்

**எடுப்புச் சாய்ப்புக் கலியாணம்** 48
கதிர் துரைசிங்கம்

**சமூக நலன் சார்ந்த கொடுப்பனவுகள்** 52
ஆ.க. ஆனந்தநாதன்

**தாய் ஆக விரும்பும் பெண்களுக்கு** 57
சிவராசாலிங்கம்

**நகைச்சுவை / சிரிப்பு** 58
பொன். குலேந்திரன்

**உணவுத் தட்டுப்பாடு** 63
குமார் புனிதவேல்

**கோல்டன் குளோப் விருது 2013** 64
குரு அரவிந்தன்

**பாசத்தின் எல்லை** 72
பூர்வீகன்

**மாறுதல்கள்** 87
தெளிவத்தை ஜோசப்

**ஆயுட் காப்புறுதி விண்ணப்பமும் மருத்துவப் பரிசோதனைகளும்** 118
சிறீதரன் துரைராஜா

# தமிழ் மரபுத் திங்கள்: சடங்கா? சாதனையா?

கந்தசாமி கங்காதரன்



கடந்த ஆண்டைப் போலவே இவ்வாண்டும் தமிழ் மரபுத் திங்கள் நிகழ்வுகள் நடந்தேறி யுள்ளன. இம்முறை விற்பி, ஒஷாவா நகர சபைகளும் யோர்க் பிரதேசசபையும்கூட தமிழ் மரபுத் திங்கள் பிரகடனம் செய்தமை கூடுதல் மகிழ்வுக்குரிய விடயம். யோர்க் பிரதேச கல்விச்சபை (York Region District School Board – YRDSB) தமிழ் மரபுத் திங்களை ஏற்றுக்கொண்டு 150 தமிழ் மரபுத் திங்கள் சுவரொட்டிகளை வாங்கியுள்ளது. அத்தோடு ஆசிரியர்களுக்கும் தமிழ் மரபுத் திங்கள் பற்றிய தகவல்களைக் கொண்ட சுற்றறிக்கையும் அனுப்பப்பட்டது. தமிழ் மரபுத் திங்கள் பற்றி மாணவர்களுக்கு அற-வுறுத்தலும் ஆசிரியர்களுக்கு உதவியாக தமிழ் மரபுத் திங்கள் தொடர்பான இணை யத்தளங்கள் பற்றிய தகவல்களும் வழங்கப் பட்டன. அத்தோடு இயக்குநர் அவையின் ஜனவரி மாதக் கூட்டத்திலும் தமிழ் மரபுத் திங்கள் குறிப்பிடப்பட்டது.

இதுபோலவே டுறம் பிராந்தியக் கல்விச் சபை யும் (Durham District school Board – DDSB) தமிழ் மரபுத் திங்களை ஏற்றுக்கொண்டதோடு தைப்பொங்கல், தமிழ்ப் புத்தாண்டு பற்றிய விளக்கங்களோடு கூடிய சுவரொட்டியையும் வடிவமைத்து பாடசாலைகளுக்கு அனுப்பியது.

பல்வேறு அமைப்புகள், சங்கங்கள் தமிழ் மரபுத் திங்கள் சிறப்பு நிகழ்ச்சிகளை நடத்தி யிருந்தன. ரொறன்ரோ நகரசபை மண்டபத் தில் தமிழ் மரபுத் திங்கள் குழுவினர் ஏற்பாடு செய்த தொடக்க நிகழ்வு நகர, மாகாண, தேசிய மட்டங்களிலான மக்கள் பிரதிநிதிக-ளின் சமுகத்தில் சிறப்புற நடைபெற்றது.

தமிழ் மரபுத் திங்களில் தமிழருக்கு வாழ்த்துச் சொல்லி மகிழ்ந்தனர் பிரதிநிதிகள். சிலர் தங்கள் கட்சிசார் அரசியலையும் பேசிக்-சென்றனர்

கனடியத் தமிழர் பேரவை வழமைபோலவே இம்முறையும் பொங்கல் இரவு விருந்தை நடத்தியது. ஆண்டுதோறும் சில விருதுகள் வழங்கப்படுவதுண்டு. இம்முறையும் 3 விருது கள் வழங்கப்பட்டன. ‘மேன்மையான சேவைக் கான விருது’ (Service Excellence Award) பிரித்தானியாவை மையமாகக் கொண்டியங் குகின்ற, ஈழத்தமிழருக்கு நீதி வேண்டி உழைக் கும் Sri Lanka Campaign for Peace and Justice அமைப்பின் இயக்குநர் திரு. Fred Carver அவர்களுக்கு வழங்கப்பட்டது.

‘மாற்றங்களை ஏற்படுத்தும் தலைவருக்கான விருது’ (Leaders for Change Award) ரொறன்ரோ காவற்றுறையின் தலைவர் Bill Blair அவர்க ளுக்கு வழங்கப்பட்டது.

2009ம் ஆண்டு ரொறன்ரோ முழுவதும் நடை பெற்ற தமிழர் போராட்டங்கள், கவனஈர்ப்-புகளின் போது, ‘இந்தப் போராட்டங்களைக் காவற்றுறை அடக்கவில்லை, கட்டுப்படுத்த வில்லை’ என்று காரசாரமான குற்றச்சாட் டுகள் முன்வைக்கப்பட்டன. காவற்றுறைத் தலைவர் பதவி விலகவேண்டும் என்று கூடக் கோரிக்கைகள் எழுந்தன.

ஆனால், “தமிழர்கள் இந்நாட்டு மக்கள் என்ற வகையில் ஜனநாயக வழியிலான போராட்டங் களை நிகழ்த்துவதற்கு உரித்துடையவர்கள்” என்று கூறி சிறந்த முறையில் அந்நிலைமை யைக் கையாண்டமைக்காகவே இந்த விருது.

புதிதாக ஒரு விருது இம்முறை வழங்கப்பட் டது. 2009இன் துயர நிகழ்வுகளின்போது காயமுற்ற, மருத்துவ உதவிவேண்டிய எல்-லோருக்கும் தன்னால் இயலுமான வரையில் தன்னுயிரையும் பணயம் வைத்துச் சேவை செய்து, இராணுவத்திடம் பிடிபடாமல் நாட்டை விட்டு வெளியேறித் தலைமறைவாகவே வாழு







கின்ற, இனப்படுகொலைகளுக்கும் சாட்சியாக இருக்கும் மருத்துவர் ஒருவருக்கு ‘வாழும் வீரர் விருது’ (Living Hero Award) வழங்கப் பட்டமை மண்டபத்திலிருந்த பலரையும் நெகிழச் செய்திருந்தது.

குறைகள் களையப்படவும் திருத்தப்படவும் வேண்டுமென்ற கரிசனையேயன்றி வேறெந்த நோக்கமும் இல்லாது இக்கருத்துகள் பகிரப் படுவதை அனைவரும் உணர்ந்துகொள்வார் கள் என்ற நம்பிக்கையோடு, பல இடங்க ளிலும் நடைபெற்ற தமிழ் மரபுத் திங்கள் நிகழ்வுகள் தொடர்பான சில கருத்துகள்.

பொங்கல் விழா என்று எமது பண்பாட்டு விழாவொன்றை நடத்தும்போது கலை நிகழ்ச்சி களின்போது ஆடைகளில், கலைநிகழ்ச்சிக் கான பாடல்களில் தமிழுக்கும் தமிழ்ப் பண் பாட்டுக்கும் உரிய இடமளிக்கப்படவேண்டும். ஏற்பாட்டுக் குழுவினர் இதுவிடயத்தில் எதுவித விட்டுக்கொடுப்புக்கும் இடமளிக்கக்கூடாது. அதேவேளை கலைநிகழ்ச்சியை வழங்கும் மாணவர்களின் ஆசிரியர்களுக்கு எமது மொழி, பண்பாடு, பழக்கவழக்கம், ஆடைகள் போன்ற விடயங்களிலும் கொஞ்சமேனும் அறிவும் தெளிவும் அக்கறையும் வேண்டும். புதுமை என்ற பெயரில் மெல்ல மெல்லப் பரவும் அல்லது பரப்பப்படும் நச்சு விதைகளை முளைக்க முன்னரே இனம்காண்போம்.

தமிழர் விழா என்று சொல்லிக்கொண்டு சீன மொழிப் பாடலுக்கு நடனமாடுவதை எவ்வகை யிலும் நியாயப்படுத்தவே முடியாது. சீனமொ ழிப் பாடல் திட்டமிட்டுத் திணிக்கப்பட்டதாக யாரேனும் கருதவும் இடமுண்டு.

இலங்கை அரசுசார் நிகழ்ச்சிகளில் சீன மொழிக்கு இடங்கொடுக்கப்பட்டால் அதற்குக் காரணமுண்டு. கனடியத் தமிழர் நிகழ்வில்?

எமது பாரம்பரியம் பற்றி நுண்கலை ஆசிரி-யர்கள் எவ்வளவு அக்கறையோடிருக்கிறார்கள் என்பதை சீனமொழிப் பாடலுக்கான நடனம் வெளிச்சமிட்டுக் காட்டியது. இந்திப் பாடலுக் கும் தெலுங்குக் கீர்த்தனைக்கும் வடமொழிச் சுலோகத்துக்கும் Gangnam Style பாடலுக்கும் கூட சில நிகழ்வுகளில் நடனம் அல்லது யோகாசனம் நிகழ்த்தப்பட்டது. செம்மொழி யான எம்மொழி தமிழிருக்க ஏனிந்தப் பிறமொ ழிப் பாடல்கள்?

அதேவேளை இன்னொரு விழாவில் தமிழ்ப் பாடல்களுக்கு மட்டுமே நடனம் என்பதில் மிகக்கண்டிப்பாக இருந்தனர்.

இதுதான் அக்கறை.

மூறு மணி நேர விழாவில் பாதி நேரத்துக்கும் மேல் பாடல்கள், நடனங்களோடு ஒப்பேற்றா மல் ஆக்கபூர்வமான கலை நிகழ்ச்சிகளை முன்கூட்டியே திட்டமிடுவோம்.

நடனங்கள் ஏதோ ஒரு செய்தியை, கதை யைச் சொல்லும்வகையில் நடன அமைப்புச் செய்யக்கூடிய ஆசிரியர்களுக்கும் மாணவர் களுக்கும் கனடாவில் பஞ்சமா என்ன?

தொடர்தல் 51ம் பக்கம்

## நாடாளுமன்றில் தமிழ் மரபுத் திங்கள் பிரேரணை:

கனடிய நாடாளுமன்றத்தில், ஜனவரியைத் ‘தமிழ் மரபுத் திங்கள்’ எனப் பிரகடனம் செய்யக்கோரும் பிரேரணையை ஜனவரி 31ம் நாள் ஸ்காபரோ - ரூஜ் ரிவர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபைஈசன் சமர்ப்பித்தார்.

அமைச்சர் அல்லாத நாடாளுமன்ற உறுப்பினரே தனிநபர் பிரேரணையைச் சமர்ப்பிக்கமுடியும். பெரும்பாலான தனிநபர் பிரேரணைகள் (Private Member's Bill) தங்கள் தொகுதியின் பெயரை மாற்றும் கோரிக்கையோடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. 'Trans-Canada Airlines' என்பது 'Air Canada' ஆனது 1964இல் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த Jean Chrétien சமர்ப்பித்த தனிநபர் பிரேரணை மூலமே.

ஆனால், இனத்தின் நலன் சார்ந்து சமூகப் பொறுப்போடு ராதிகா சிற்சபைஈசன் இப்பிரேர-ணையை முன்வைத்திருக்கிறார்.

நாடாளுமன்றில் விவாதங்கள், வாக்கெடுப்புகளின் பின்னர் போதுமான ஆதரவு கிடைக்-கும்போது பிரேரணை சட்டமாகும்.

தமிழ் மரபுத் திங்கள் என்பது சட்டம் மூலமாக கனடா முழுவதும் ஏற்றுக்கொள்ளப்படும் நாளை அனைவரும் எதிர்பார்ப்போம்.


Trinity Events
when silence breaks, music speaks
PRESENTS
FEB 16th 2013
VIJAY
TV PARTNER
பிரபல பாடகர்கள்
Yuvan Shankar Raja
Karthik Raja
K J Jesudas
S P Balasubramaniyam
Hariharan
Mano
Karthik
Haricharan
Vijay Jesudas
Satyan
Bhavatharini
Chitra
Sadhana Sargam
Shweta Mohan
N S K Ramya
தென்னிந்திய திரைபிரபலங்கள்
Goutham Menon (Host)
Parthiban
Vivek
Sneha
Prasanna
Gobinath (Host)
Solo Singers
Priya Himesh
Priyadharshini
Rahini Sri (Super Singer)
Anita (Super Singer)
எங்கேயும் எப்போதும்
ராஜா
100க்கும் மேற்பட்ட இசை கலைஞர்கள் பங்குபெறும் மாபெரும் இன்னிசை நிகழ்ச்சி
AT ROGERS CENTRE TORONTO CANADA
ROGERS CENTRE
TOLL FREE:1.855.554.4554
ticketmaster
1-855-985-5000
www.trinityeventsonline.com
TICKETS : VVIP, $150.00(VIP), $100.00, $80.00, $60.00, $39.00

# எமக்கு எவ்வாறு வருகின்றது கொலஸ்ட்ரோல்

- சிவா சுப்ரா -

நாம் உண்ணுகின்ற சில வகை உணவுப் பொருட்களில் இருந்து இந்த கொலஸ்ட்ரோல் நமது உடலுக்குள் புகுந்து விடுகின்றது. அது மட்டுமல்ல நாம் உண்ணுகின்ற சில உணவுகளால் கொலஸ்ட்ரோல் நமது உடலில் உற்பத்தியும் செய்யப்படுகின்றது.

ஆடு, மாடு, கோழி, பன்றி இறைச்சி வகைகளிலும், முட்டை, பால் என்பனவற்றிலும் இந்தக் கொலஸ்ட்ரோல் உள்ளது. மிக முக்கியமாக முட்டை மஞ்சள் கரு, ஈரல், மூளை, சிறுநீரகம் என்பவற்றில் கொலஸ்ட்ரோல் அதிகமாக உள்ளது.

இத்தகைய கொலஸ்ட்ரோல் அதிகமாக உள்ள உணவுப் பொருட்களை உண்ணுவதால் குருதியில் உள்ள கலோஸ்ரோலின் அளவும் அதிகரிக்கின்றது.

மரக்கறி உணவுவகைளில் பொதுவாக கலோஸ்ரோல் இல்லை. ஆனால் நாம் சமைக்கும் போது சேர்க்கின்ற சில பொருட்கள் காரணமாக மரக்கறிகளில் கூட கொலோஸ்ரோல் சேர்க்கப்படலாம்.

"NO CHOLESTEOL" என்று முத்திரை இடப்பட்ட உணவுப் பொருட்களை உண்ணுவதால் நாம் நமது இதயத்தை பாதுகாக்கின்றோம் என்று எண்ணி விடாதீர்கள். இந்த முத்திரை இடப்பட்ட உணவுப் பொருட்களை உண்ணுவதாலும் நமக்கு இதய நோய்கள் ஏற்படலாம்.

## கொலஸ்ட்ரோலில் இரு வகை உண்டு:

tines கொலஸ்ட்ரோல் (Low- density lipo Protein) என்பது ஒரு வகை கலோஸ்ரோலாகும். இது கூடாத (Bad ) கலோஸ்ரோல் என்று அழைக்கப்படுகின்றது. இந்த LDL கலோஸ்ரோலே குருதியில் சுற்றித்திரிகின்றது. அளவுக்கு அதிகமான LDL கலோஸ்ரோல் குருதியில் இருக்குமாயின், அது மெல்ல மெல்லமாக குருதிக் குழாய்களின் சுவர்களில் படிந்து குருதி யோட்டத்தை தடைசெய்கின்றது. 160மில்லி கிராம் அல்லது அதற்கு மேலாக கொலஸ்ட்ரோல் குருதியில் இருக்குமாயின் குருதிக் குழாய்களில் படியத் தொடங்கு கின்றது. முக்கியமாக இதயத்திற்கும், மூளைக்கும் குருதியை விநியோகிக்கும் குருதிக் குழாய்களில் கொலஸ்ட்ரோல் படிவதன் காரணமாக குருதி ஓட்டத்தில் தடை ஏற்பட்டு ஒரு கட்டத்தில் மாரடைப்பு ஏற்பட வழி வகுக்கின்றது.

*தாய்வீடு பத்திரிகை பற்றிய*
*விமர்சனங்களை*
*எதிர்பார்க்கின்றோம்.*
*விமர்சனங்கள் எம்மை ஓர்*
*ஆரோக்கியமான*
*பாதையில் இட்டுச்செல்லும்.*

*E-mail: info@thaiveedu.com*
*Fax: 416-849-0594*
*Tel: 416-646-3422*

இதே சமயம் ஏற்கனவே இதயநோய் உள்ளவர்களுக்கு, இந்த LDL கொலஸ்ட்ரோல் 100 மில்லி கிராமுக்கு குறைவாக இருக்கவேண்டும்.

நீங்கள் கொலஸ்ட்ரோல் உள்ள உணவு வகைகளை உண்ணாவிட்டாலும் கூட நமது உடலுக்கு இந்த LDL கொலஸ்ட்ரோலை உற்பத்திபண்ணும் திறன் உள்ளது. இதை எப்போதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

> *கொழுப்பு இல்லாமல்*
> *நாம் உயிர்வாழ முடியாது.*
> *அதே சமயம்*
> *அளவுக்கு அதிகமான கொழுப்பு*
> *நமது வாழ்க்கையை*
> *முடிவுக்கே கொண்டு வந்துவிடும்.*



அதிகளவு கொழுப்பு நமது உணவில் இருக்கின்ற போதும் அதிகளவு Saturaed கொழுப்பை நாம் உண்ணும் போதும் நமது உடல் தானாகவே இந்த LDL கலோஸ்ரோலை அதிகமாக உற்பத்தி செய்கின்றது.

அடுத்த வகை HDL (High-density cholesterol ) என்று அழைக்கப்படும். இது நல்ல (Good) கொலஸ்ட்ரோல் ஆகும். இது குருதிக்குழாய்களில் படிவதில்லை. இதன் காரணமாக மாரடைப்பை இது ஏற்படுத்தாது. அதே நேரம் குருதியில் உள்ள கூடாத கொலஸ்ட்ரோலான LDL கொலஸ்ட்ரோலை, ஈரலுக்குக் கடத்திச் சென்று நல்ல கலோஸ்ரோல் ஆக (HDL கொலஸ்ட்ரோல்) மாற்றிவிட உதவுகின்றது. அதன் காரணமாகத்தான் நல்ல கொலஸ்ட்ரோல் ஆன HDL கொலஸ்ட்ரோல் மிக அபரீதமாக நமது உடலில் குறைந்து இருந்தாலும் மாரடைப்பு ஏற்பட வாய்ப்புண்டு என்று எச்சரிக்கப்படுகின்றது. நாம் உண்ணும் எந்த உணவிலும் இந்த நல்ல கலோஸ்ரோல் ஆன HDL இருப்பதில்லை. எமது உடலினால் இது உற்பத்தி செய்யப் படுகின்றது. உடற்பயிற்சி செய்யும் போது HDL கலோஸ்ரோல் அதிகமாக உருவாகின்றது.

"NO CHOLESTEOL" என்று முத்திரை இடப்பட்ட உணவுப் பொருட்களில் கலோஸ்ரோல் இல்லாமல் இருக்கலாம். ஆனால் அதேசமயம் அந்தப் பொருட்களில் Satur ated கொழுப்பு இருக்கலாம். அது எவ்வளவு உள்ளது என்பதை நாம் கண்டிப்பாக அறிந்து கொள்ளவேண்டும். ஏன் என்றால், குருதிக் கலோஸ்ரோலைக் கூட்டுவதில் நாம் உண்ணுகின்ற கலோஸ்ரோலை விட, நாம் உண்ணுகின்ற Saturated கொழுப்பே கூடுதல் பங்கு வகிக்கின்றன என்று ஆய்வுகள் கூறுகின்றன.

தனக்குத் தேவையான கலோஸ்ரோலை நமது உடலே உற்பத்தி செய்யுகொள்ளும் வல்லமை கொண்டது. எனவே அநாவசியமாக அளவுக்கு அதிகமான கலோஸ்ரோல் உள்ள உணவுகளை நாம் தவிர்த்துக் கொள்ளவேண்டும்.

நமது உடலில் உள்ள முக்கியமான உறுப்பான ஈரலும் கொலஸ்ட்ரோலை உற்பத்தி பண்ணுகின்ற வேலையைச் செய்கின்றது. பொதுவாகச் சொல்லுவதானால் 1,000 மில்லி கிராம் கொலஸ்ரோலைத் தினமும் இந்த ஈரல் உற்பத்தி செய்கின்றது.

தேங்காய்ப் பால் கறி, தேங்காயப் பூ சம்பல், தேங்காயப் பூ புட்டு, தேங்காயப் பூ சட்டினி, தேங்காய்ப் பூ சொதி என்பன எல்லாமே நம்மவர்களுக்க மிகவும் பிடித்த உணவுப் பண்டங்கள். இந்த தேங்காயில் கொலஸ்ட்ரோல் இல்லை என்பது உண்மை தான். அதில் ஒரு சந்தேகமும் இல்லை. ஆனால் தேங்காயில் இருக்கின்ற Saturated fat மாரடைப்பை ஏற்படுத்தக் கூடிய, கூடாத கொலஸ்ட்ரோல்ஆன LDL கொலஸ்ட்ரோலை நமது உடல் அதிக அளவில் உற்பத்தி பண்ணுவதற்குக் காரணமாக உள்ளது. எவ்வளவுக்கு எவ்வளவு தேங்காய் பாவித்த உணவுகளை உண்ணுகின்றோமோ, அந்தளவு வேகமாக அது எம்மை மரணத்தின் படிக்கட்டுகளில் இது இழுத்துச் செல்கின்றது.

கறி ஒன்றுமே இல்லை என்றவுடன், முட்டை பொரித்து சாப்பிடுவது இன்னொரு பழக்க தோசம் நமக்கு. முட்டைப் பொரியலும் புட்டும் சுவையாகத்தான் இருக்கும்.

ஒரு முட்டை மஞ்சள் கருவில் (நடுத்தர அளவு) 213 மில்லி கிராம் கொலஸ்ட்ரோல் உள்ளது. நமது குருதியில் உள்ள கொலஸ்ட்ரோலின் அளவை 200 மில்லி கிராமுக்கும் குறைவாக வைத்திருக்க வேண்டும் என்று தற்போது ஆலோசனை வழங்கப்படுகின்றது. மஞ்சள் கரு அடங்கிய முட்டை ஒன்றை நாம் சாப்பிட்டாலே போதும், அது அன்றைய தினம் நமக்குத் தேவையான கொலஸ்ட்ரோலின் அளவைத் தாண்டி விடும்.

இதே சமயம் மூன்று அவுண்ஸ் நிறையுடைய, தோல் நீக்கப்பட்ட கோழி இறைச்சியில் 90 மில்லி கிராம் கொலஸ்ட்ரோலே உள்ளது. மூன்று அவுண்ஸ் மீனில் இருப்பதோ 50 மில்லி கிராம் கொலஸ்ட்ரோல் ஆகும்.

நமது உடலுக்குத் தேவையான முக்கியமான உணவுவகைகளில் கொழுப்பும் ஒன்றாகும். நமது கலங்கள், தசை, நரம்புகள், குருதிக் குழாய்கள் என்று பலவும் கொழுப்பு இல்லாமல் உருவாக முடியாது. அத்தோடு உடலுக்குத் தேவையான உயிர்ச்சத்துக்களான A,D,E,K என்பனவற்றை உடல் பெற்றுக்கொள்வதற்கு கொழுப்பு அவசியம். ஏன் என்றால் இந்த உயிர்சத்துக்கள் கொழுப்பில் மட்டுமே கரையக் கூடிய உயிர்ச்சத்துக்களாகும். இவற்றை விட, உணவுப் பொருட்களின் சுவையையும், வாசனையையும் அதிகரிக்கச்செய்கின்ற வேலையையும் கொழுப்புச் செய்கின்றது.

கொழுப்பு இல்லாமல் நாம் உயிர்வாழ முடியாது. அதே சமயம் அளவுக்கு அதிகமான கொழுப்பு நமது வாழ்க்கையை முடிவுக்கே கொண்டுவந்துவிடும்.

நமது நாளாந்த உணவுத் தேவையின் முப்பது பங்கு கொழுப்பாக இருக்க வேண்டும். ஆனால் இதய நோய் உள்ளவர்கள் இதனைத் தவிர்த்து, தினமும் பத்து அல்லது இருபது வீதமான கொழுப்பபை மட்டுமே உள்ளெடுக்க வேண்டும் என்று American Heart Association அறிவுறுத்துகின்றது.

*siva.subra@thaiveedu.com*

■ ■ ■




Royal Shades inc.
Interior Windows Design Solutions
Draperies | Blinds | Shutters | Door & Lock Systems | Crown Molding
Over 17 Years Experience
Visit Our Showroom For Variety of selection
3031 Markham Road, Unit# 23 | Scarborough M1X 1L9
Tel: 416.562.0340 | 647 347 4474
info@royalshades.com | www.royalshades.com
Satisfaction Guaranteed

Thaas Sivathason
416.562.0340

# வாழ்வின் ஓர் அடையாளம் வீடு...



...

அங்குத் தூணில் அழகியதாய் நன்மாடங்கள் துய்ய நிறத்தினவாய்
அந்தக் காணி நிலத்திடையே ஓர் மாளிகை கட்டித் தரவேண்டும்
அங்குக் கேணியருகினிலே தென்னைமரம் கீற்று மிளநீரும்

பத்துப் பன்னிரண்டு தென்னைமரம் பக்கதிலே வேணும்
நல்ல முத்துச் சுடர்போலே நிலாவொளி முன்பு வரவேணும்
அங்குக் கத்துங் குயிலோசை சற்றே வந்து காதிற் படவேணும்

– மகாகவி பாரதி

**www.ranjanfx.com**




RED CARPET®
Royal Realty Ltd., Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED

**RANJAN FRANCIS XAVIER**
Sales Representative.

**Cell: 416-816-1220**
**Bus: 416–284–5555**

# LOW MORTGAGE RATES



**5 Year Fixed**
**2.99%**

## Ram Krish


Mobile Mortgage Specialist

Direct: **416-849-5363**

Suite# 500, 10 Milner Business Court,
Scarborough, ON M1B 3C6

* Some conditions apply.


RBC



- digi Media -

# ஆரோக்கியமான பற்கள் 11

கடந்த மாதம் பல் துலக்குவது பற்றிப் பேசினோம். தொடர்ந்து தவறான பல் துலக்கும் முறைகளால் பற்களுக்கு ஏற்படும் தீமையான விளைவுகளைப் பற்றிப் பார்ப்போம்.




படம்:1 Good and Bad Toothbrushes

Horizontal scrubbing (back and forth strokes) முறை மூலம் பற்களின் மேற்பரப்பு நாளடைவில் தேய்வது Abrasion எனப் படுகின்றது. இவ்வகைத் தேய்வு mechanical wearing ஆகும். அதாவது எந்த பக்டீரியாவோ இரசாயனப் பொருட்களோ இவ்வகைத் தேய்வுக்குக் காரணமாக இருப்பதில்லை. இத்தேய்வு வெளியே தெரியும் பல்லின் வேர்ப் பகுதியில் அதிகம் காணப்படும். ஏனெனில் cementum, dentine இரண்டும் enamelஐ விட மென்மையானவை. ஆனால் enamel உம் பாதிக்கப் படுகிறது. இவை cementum, enamel இரண்டும் சந்திக்கும் இடத்தில் V அல்லது U வடிவமான தடங்களாகக் காணப்படும். (படம் 2). Abrasion, Canines, Premolars ஆகிய பற்களின் Facial Surfaces ஐ அதிகமாகப் பாதிக்கிறது. Abrasion உள்ள பற்களுக்கு அருகில் உள்ள முரசும் தேய்ந்திருக்கக் கூடும்.

இப்படித் தேய்வு ஏற்பட்ட பற்களில் Caries ஏற்படுவது சுலபமாக இருக்கும். மேலும் அந்தப் பகுதியில் பற்கூச்சம் (Tooth Sensitivity) ஏற்படக் கூடும். Abrasion ஏற்படக் காரணங்களாய் இருப்பவை:

- Hard Textured Toothbrush
- முனை கூரான bristles கொண்ட Toothbrush
- Improper Toothbrushing: தவறான பல் துலக்கும் முறைகள்
- Toothbrushing with Excessive Force: பல் துலக்குவதில் அதிக அழுத்தம் பிரயோகித்தல்
- அதிக உராய்வுப் பொருட்கள் (Abrasives) கொண்ட பற்பசை, பல்பொடி

படம்:2 Toothbrush Abrasion, Lateral View of Premolars



அடுத்த முறை பல் துலக்கும் போது கண்ணாடியில் உங்கள் பற்களைப் பாருங்கள். இவ்வகைத் தடங்களை அவதானித்தால் உங்கள் பல் மருத்துவரிடம் இது பற்றிப் பேசுங்கள். Abrasion பற்றி அறிவதற்குப் பல் மருத்துவர் பின் வரும் கேள்விகளைக் கேட்கக் கூடும்.

- பல்லை அழுத்தித் தேய்க்கிறீர்களா?
- Hard Textured Toothbrush பாவிக்கிறீர்களா?
- முன்னும் பின்னுமாக brush பண்ணுகிறீர்களா?

உங்கள் பல் துலக்கும் முறைகளில் ஏதாவது மாற்றங்கள் செய்ய வேண்டியிருப்பின் அதை மருத்துவர் உதவியுடன் செய்யுங்கள். இதன் மூலம் இனி ஏற்படும் சேதத்தைக் தடுக்கலாம். இது வரை Abrasion ஏற்பட்ட பற்களைப் பாதுகாக்க அவை அடைக்கப்படலாம். இதற்கு பல்லின் நிறத்தைக்கொண்ட அடைக்கும் பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன.

## பற்பசைகள்:

Dentifrice என்ற சொல் பற்களையும் முரசையும் சுத்தப் படுத்தப் பயன் படுத்தப் படும் பற்பசை, ஜெல், பல்பொடி, ஆகியவற்றைக் குறிக்கும். Denti என்றால் பல், fricare (to rub) என்றால் தேய்ப்பது என்றும் பொருள் கொள்ளப்படும். Dentifriceகளை Toothbrush உடன் பயன்படுத்தும் போது plaque, பற்களின் மேற்பரப்பில் படியும் கறை (stains) ஆகியவை நீக்கப்படுகின்றன.

தொடர்ந்து செய்யப்படும் ஆராய்ச்சிகள் மூலம் பற்பசையில் பற்களுக்கும் முரசுக்கும் நன்மை பயக்கும் பொருட்கள் பல சேர்க்கப்படுகின்றன. இவைபற்றிப் பற்பசைப் பெட்டிகளில் எழுதப்பட்டிருக்கும். ஒரு நல்ல பற்பசை நச்சுத் தன்மை அற்றதாக, உறுதியான இரசாயனத் தன்மை கொண்ட பொருட்கள் கொண்டு தயாரிக்கப் பட்டதாக, சிறப்பான பயன்பாடு கொண்டதாக இருக்கவேண்டும். (Non toxic, chemically stable, effective)

ஆனால் ஒருவர் பற்பசை வாங்கும்போது மேலே குறிப்பிட்ட அம்சங்கள் இருப்பதைப் பார்த்துப் பற்பசை வாங்குவதில்லை. அவர் அதன் தோற்றம், வாசனை, அமைப்பு (பசை, ஜெல்) போன்ற அம்சங்களையே முக்கியமாக கவனத்தில் கொள்கிறார். இக்காரணங்களாலேயே பற்பசை தயாரிக்கும் நிறுவனங்கள் தங்கள் பற்பசைகள் பொது மக்களைக் கவரும் வண்ணம் இருக்க வேண்டும் என்பதற்காகக் கோடிக் கணக்கில் பணம் செலவு செய்கிறார்கள்.

ஒரு பற்பசையில் இருக்கும் பொருட்களைப் பார்ப்போம்.

- Active Ingredients or Therapeutic Agents
- Cleaning and Polishing Agents
- Humectants
- Detergents (Surfectants or Foaming Agents)
- Binders
- Preservatives
- Flavouring Agents
- Colourants

Active Ingredients பற்பசையின் பல், முரசு ஆகியவற்றின் நோய் நீக்கும் அல்லது நலம் பேணும் பொருட்கள் ஆகும். பற்பசைப் பெட்டிகளில் Medicinal Ingredients என்று குறிப்பிடப் பட்டிருக்கும் இவை பின்வரும் செயல்பாடுகளுக்குக் காரணமாக இருக்கின்றன.

- Dental Caries தடுப்பு: Sodium fluoride, Sodium monofluorophosphate ஆகிய இரண்டில் ஒன்று சேர்க்கப்பட்ட பற்பசை Fluoride பற்பசை எனப்படுகிறது. இவ்வகை பற்பசைகள் கொண்டு ஒரு நாளுக்குக் குறைந்தது இரண்டு தரம் பல் துலக்கும் போது caries ஏற்படும் சாத்தியக்கூறுகள் 20 – 30% வரை குறைகின்றது என்பது ஆராய்ச்சிகள் மூலம் நிரூபிக்கப் பட்டுள்ளது.
- பல்லின் ஏற்படும் கூச்சத்தைத் தடுப்பது: Potaasium nitrate, Strontium chloride
- Calculus உருவாவதைத் குறைப்பது: Troclosan, Zinc citrate, Pyrophosphate salts ஆகியவை plaque மீது கனிப்பொருட்கள் படிந்து calculus ஆக மாறுவதைத் தடுக்கின்றன.
- Plaque, Gingivitis ஆகியவற்றைக் குறைக்கும் Triclosan. இப்பொருள் பக்டீரியாவுக்கு எதிராக வேலை செய்கிறது.

Cleaning and polishing agents: இவை பற்களைச் சுத்தப்படுத்தி, மெருகேற்றி, பளபளப்பாக்குகின்றன. இப்பொருட்கள் Abrasives என்றும் அழைக்கப்படும். அவற்றை உராய்வுப் பொருட்கள் என்று சொல்லலாம். பல்பொடிகள் பற்பசையை விட அதிக உராய்வுப் பொருட்களைக் கொண்டுள்ளன. ஒரு சிறந்த Abrasive பற்களின் மேற்பரப்பை வழவழப்பாக்கும் அதே நேரம் enamel இல் அதிகத் தேய்மானம் ஏற்படுத்தித் தீங்கு விளைவிக்காமல் இருக்கவேண்டும்.

Humectants: பற்பசையின் நீர்த்தன்மையைப் பேணுவதற்கும், திறந்து வைக்கும்போது இறுகிக் கட்டியாவதைத் தடுப்பதற்கும் சேர்க்கப் படுபவை.

Detergents என்பவை பற்களில் இருக்கும் அழுக்கை இளக்குவதற்காகவும் நுரைப்பதற்காகவும் சேர்க்கப்படுபவை. பற்பசையில் மிகச் சிறிய அளவில் காணப்படுகின்றன.

Binders: பற்பசையின் திரவப் பொருட்களும் திண்மப் பொருட்களும் பிரியாமல் இருக்கச் சேர்க்கப்படுபவை. இவை பற்பசையின் உறுதித் தன்மையை, அதன் இயல்பான நிலையில் பேணுகின்றன. ஜெல் தன்மை கொண்ட பற்பசைகள் அதிக அளவு Bindersஐக் கொண்டிருக்கும்.

Flavouring and Sweetening Agents: பற் பசையின் சில பொருட்கள் கொண்டிருக்கும் கசப்பான சுவையை மறைப்பதற்காகச் சேர்க்கப் படுபவை.

Colourants: பற்பசை மக்களைக் கவரும் வண்ணம் இருப்பதற்காகச் சேர்க்கப்படுகின்றன. இவை பற்களில் கறைகள் ஏற்படுத்தாத, தவறுதலாகப் பற்பசையை விழுங்கினால் உடலுக்குப் பாதிப்பு ஏற்படுத்தாத பொருட்களாக இருக்கவேண்டும்.

அட்டவணை 1இல் பற்பசையில் காணப்படும் சில பொதுவான பொருட்கள் தரப்பட்டிருக்கின்றன. இவை பற்பசைப் பெட்டியில் Non Medicinal Ingredients எனக் குறிப்பிடப்பட்டிருக்கும்.



ரவிச்சந்திரிகா

நாம் பொதுவாகப் பயன்படுத்தும் இரு பற்பசைகளான Colgate, Crest ஆகியவற்றை

அட்டவணை 1

| | |
|---|---|
| Detergents | •Sodium lauryl sulphate USP<br>•Sodium N lauryl sarco-sainate |
| Abrasives | •Calcium carbonate<br>•Calcium pyrophosphate<br>•Silica, Siicates, Dehydrated silica gels<br>•Hydrated Aluminium oxide |
| Binders | •Mineral colloids<br>•Natural gums<br>•Seaweed colloids<br>•Synthetic celluloses |
| Humectants | •Glycerol<br>•Sorbitol<br>•Propylene glycol |
| Preservatives | •Alcohol<br>•Benzoates<br>•Formaldehydes<br>•Dichlorinated phenols |
| Sweeteners | •Artificial non cariogenic sweeteners |
| Flavouring Agents | •Essential Oils (Cinnamon, Peppermint, clove)<br>•Menthol |
| Colouring agents | •Vegetable dyes |

எடுத்துக்கொள்வோம். அவற்றின் பெட்டிகளில் குறிப்பிடப்பட்டுள்ள பயன்கள் அட்டவணை 2

அட்டவணை 2

| Colgate | Crest |
|---|---|
| Helps Prevent Cavities, Gingivitis, Plaque/ Fights Tartar, Freshens Breath, Gently Cleans | Fights cavities, fights tartar |
| With Brushing Helps to: Prevents tooth cavities, Prevent tartar, Prevent plaque buildup, Prevent gum inflammation, | Helps prevent gingivitis, helps prevent plaque, helps control plaque controlling bacteria that contribute to the development of gingivitis |
| Reduce gum bleeding | Builds increasing protection against painful sensitivity of the teeth to cold, heat, acids, sweets on contact |
| Fights bacteria for 12 hours | Wshitens teeth by removing surface stains and inhibiting tartar buildup, kills bad breath bacteria and freshens breath |

இல் தரப்பட்டிருக்கின்றன. கவனித்துப் பார்த்தால் ஒரே விஷயங்களைத்தான் வெவ்

தொடர்தல் 17ம் பக்கம்



HOMELIFE
HIGHER STANDARDS

Gnani & Judy
REAL ESTATE
416.937.8090

to buy, sell
houses, condos,
investment properties,
businesses and land



Gnanendran Narasingham
Mobile: 416.937.8090

Judy Gnanendran
Mobile: 416.629.9797

HOMELIFE GTA REALTY INC.,
5215 Finch Ave. E. Suite 203,
Toronto, ON. M1S OC2

INDEPENDENTLY OWNED &
OPERATED, REALTOR

Our Mission...
To give our clients
the best real estate
advice and service
resulting in effectively
fulfilling their needs..



$307,900

## Front & Spadina
1Bedroom Condo...
One Year Old TRIDEL..
Close to All Amenities..
Great Investment...



$399,900

## Yonge & Carlton
1+Den Condo....
Include Parking & Locker...
Close to Universities...
Great Investment...




$3.6 Million

## Fort Erie..
Brand New Gas Station..
7Million/ Liters.....
1Hr 45 Mins from Toronto...
500 K Net Income..




$2.2 Million

## Port Hope..
8 Acres HWY Commercial..
On HWY 2 In Port Hope..
Great Opportunity For Builder
Developer....




$2 Million

## Bowmanville..
10 Acres Multi Residential..
Approved Plan for160 Homes
Adjacent Parcels Already
Developed..




From $999k

## Pickering...
Luxury Home....
3500sft with 3 Garages...
9' & 10' Ceilings..W/O Bsmt
Great Practical Layout....



$1950.00

## Brimley Ellesmere
3 Bedroom Home...
Fin. Bsmt Apt with 2 Bedroom
Suitable For 2 Families..
Great Birkdale Location..



Lease

## Kennedy & 401
1+Den Condo for $1350
2 Bedroom for $1425
Close to All Amenities..
Great Layout....

Gateway

$49,000

## Runnymede...
Runnymede & Bloor Subway
Convenient Store...
$400 to $500 Sale per Day..
Potential for Improvement..
...

# ஈரல் வீக்கம்



## கந்தையா செந்தில்நாதன்

- Echo - Cardiographer -

## இதயம் மலர்கிறது - 50

எமது உடலில் உள்ள பிரதானமான உறுப்புகளில் ஈரலும் ஒன்று. இது வலது பக்கத்தில் நெஞ்சு எலும்புக் கூட்டிற்குக் கீழே அதாவது வயிற்றுப் பகுதியில் பிரிமென் தகட்டுடன் அணைத்தவாறு அமைந்துள்ளது.

நாம் உட்கொள்ளும் உணவு, மருந்துப் பொருட்கள், மதுசாரம் என்பன குடலினால் உறிஞ்சப்பட்டு ஈரல் நாளத்தினூடாக ஈரலில் சேர்க்கப்படும். ஈரலானது உறிஞ்சப்பட்ட எல்லாப் பதார்த்தங்களையும் கண்காணித்த பின்பு மிகவும் தேவையான பதார்த்தங்களைப் பலவித இரசாயனத்தாக்கங்கள், வடிகட்டல் முறைகள் போன்றவற்றால் சீர் செய்த பின்பு குருதியோட்டத்தினுள் சேர்க்கின்றது. ஈரலினால் ஏறத்தாழ 30 கிராம் வரையிலான மென்நஞ்சுப் பொருட்களை செயலிழக்கச் செய்ய முடியும். எமது உணவு, பருகும் நீர், மதுசாரம், மருந்துகள் என்பனவற்றில் மென் நஞ்சுகள் உண்டு. இதன் காரணமாகத்தான் மதுசாரம் அதிகளவில் குடிப்பது ஈரலைத் திணறடிக்க வைத்துப் பின்பு செயலிழக்கச் செய்து ஈரல் அழற்சியை ஏற்படுத்திவிடுகின்றது.


### நன்மைகள் பல செய்யும் ஈரலிற்கு உபாதையை ஏற்படுத்தும் காரணிகள் என்ன?

- மதுசாரம் - அளவுக்கதிமாக உட்கொள்ளுதல்
- செங்கமாரி – A, D
- செங்கமாரி – B, C, E
- கணைக் காய்ச்சலை ஏற்படுத்தும் Epstein – Barr வைரசுக்கிருமி.
- அதிகளவு மென்நஞ்சுகள்.
- சில மருந்துகள் - Tylenol, Advil, Motrin, Aspirin, Naproxen அளவுக்கு அதிகமாகப் பாவித்தல்.
- சில மூலிகைகள் - Cascara, Kava என்பன.
- மஞ்சட் காய்ச்சல்.
- அமீபா கிருமியால் ஏற்படும் வயிற்றோட்டம் அதைத் தொடர்ந்து ஏற்படும் அமீபா ஈரல் கட்டு (Amoebic Liver Abscess)
- குடற்புழுக்கள்
- பக்ரீறியாக் கிருமிகளின் தாக்கம்.
- பிழையான குருதி ஏற்றம்.

ஒவ்வொரு தடவையும் குருதியானது இதயத்தினால் பாய்ச்சப்படும் பொழுது அதில் பத்து வீதமான குருதி ஈரலிற்குச் செல்கின்றது. இதன் நிறை ஏறத்தாழ ஒன்று தொட்டு ஒன்றரைக் கிலோ கிராம் வரையில் வேறுபடும். எமது சமிபாட்டிற்குத் தேவையான பித்தம் ஈரலினால் சுரக்கப்பட்டு பித்தப்பையில் சேகரித்து வைக்கப்பட்டு தேவையான பொழுது பாவனையாகின்றது. சில ஊட்டச் சத்துக்கள், மாப்பொருள் என்பன ஈரலில் சேகரித்து வைக்கப்பட்டு தேவையான பொழுது பாவிக்கப்படுகின்றன. பல ஹோமோன்களை உருவாக்கி உடற்தொழிற்பாட்டிற்கு உதவி புரியும் இந்த ஈரல் மேலும் உடலுக்குத் தேவையான பல தொழிற்பாடுகளை செய்து வருகின்றது. வைற்றமின் B co சத்தும் அளவான வைற்றமின் C யும் ஈரலின் மேம்பாட்டிற்கு உதவுகின்றன. ஈரலில் சில ஊறுகள் நிகழ்ந்தாலும் அது தன்னைத் தானே திருத்தி அமைத்துக் கொள்ளும் சிறப்பைப் பெற்றுள்ளது. எனெனினும் அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகும் என்ற கூற்றுக்கு அமைய மதுசாரம், போதை மருந்துகள் என்பனவற்றால் பாரிய ஊறுகள் நிகழும் பொழுது சில சமயங்களில் மாற்று ஈரல் பொருத்த வேண்டி ஏற்படலாம்.

### கொழுப்பு ஈரல் வியாதி (Fatty Liver Disease):

ஒருவருடைய உணவில் உள்ள கொழுப்பின் அளவு அவரது உடலினால் கையாளக் கூடிய கொழுப்பின் அளவிற்கு மேலதிகமாகக் காணப்பட்டால் அவை ஈரலில் சேகரமாகும். தினமும் அதிகளவு கொழுப்பு உண்பவர்களில் சிலரிற்கு இக்கொழுப்பானது தொடர்ந்து ஈரலில் படிந்து வரும். சிறிதளவு கொழுப்பு படிவது சாதாரணமானது. ஆனால் மேலதிகமாக இக் கொழுப்புகள் ஈரலின் கலங்களில் படியும் பொழுது படிப்படியாக கொழுப்பின் அளவு கூடி அது ஈரலில் அழற்சி போன்ற ஊறுகளை ஏற்படுத்திவிடும். இறுதியில் நிரந்தரமான நார்த்தன்மையை ஏற்படுத்துமளவிற்கு இக் கொழுப்புப் படிவு கூடிவிடலாம்.



### காரணங்கள் என்ன?

- அதிக உடற்பருமன்.
- கொழுப்புகளை உரிய இடங்களிற்கு இட்டுச் செல்லும் பதார்த்தங்களை உருவாக்க நிறை புரதங்கள் உணவில் சேர்க்கப்படுதல் வேண்டும். தொடர்ச்சியாகப் பல நாட்களுக்குப் புரதப் பற்றாக்குறைவான உணவு உட்கொள்ளும் பொழுது இந்நிலை ஏற்படுகிறது.
- நீரிழிவு நோய்/இன்சுலின் தடை நிலை
- அதிக குருதி அமுக்கம்
- பரம்பரை
- மதுசாரம், Steroids போன்ற மருந்துகள்.
- மது காரணமாக அமையாத ஈரல் வீக்கம் (Non Alcoholic Steato Hepatitis)

மதுசாரம் குடிப்பவர்களுக்கு ஏற்படும் ஈரல் வியாதி போன்று மதுசாரம் குடிக்காதவர்களுக்கு ஏற்படும் ஈரல் வியாதி. இவ்வியாதி ஈரலை மிகவும் ஊறுசெய்து இறுதியில் ஈரல் செயலிழப்பிற்கு இட்டுச் செல்லலாம். உடற்பருமன் அளவாக இருக்கும்படி பார்த்துக் கொள்ளுதல் சாலவும் சிறந்தது. சிறுவர்களுக்கும், வளர்ந்தவர்களுக்கும் உடற்பருமன் பேணுதல் மிகவும் நல்லது.

### குணங்குறிகள்:

- ஈரல் வீங்கி வரும் பொழுது அது வயிற்றினுள் ஒருவித அமுக்கத்தை ஏற்படுத்துவதால் வயிற்றுப் பகுதியில் ‘முட்டு’ போன்ற உணர்வு இருக்கும்.
- எந்த நேரமும் உடலில் அசதி போன்று உணர்வு அடிக்கடி ஏற்படும்.
- சில சமயங்களில் மூட்டு நோவு, தலைவலி, தோற்புரை, சத்திக் குணம், நாவில் ருசிமாற்றம், நீண்ட நேரத்தூக்கம், அதிக களைப்பு என்பனவும் காணப்படலாம்.
- சிறுநீர், கண்களில் வெண்படலம் என்பன மஞ்சளாக மாறலாம்.

### நோய்காணல்:

- வயிற்று பகுதியை உணர்ந்து பார்க்கும் பொழுது இரண்டு தொட்டு நான்கு விரல்கள் அகலத்திற்கு வலது பக்க விலாவின் கீழே ஈரல் வீக்கம் உணரக் கூடியதாக இருக்கும். தற்போது Ultra Sound மூலம் இதனைக் கண்டு கொள்ளார்கள்.
- சில சமயம் இவ்வீக்கம் ஈரல் கட்டு (Liver Abscess), புற்று நோய் (Cancer) போன்ற காரணத்தாலும் ஏற்படலாம். இதற்கு வைத்தியர்கள் ஈரற்பகுதியில் ஊசி மூலம் சிறு பகுதியை எடுத்து (Needle Biopsy) பரிசோதித்து பார்ப்பார்கள்.

### சிகிச்சை:

- உடற்பருமன் குறைத்தல்.
- நீரிழிவு நோய் மருத்துகள் ஒழுங்காக உட்கொண்டு நோயைக் கட்டுப்பாட்டும் வைத்திருத்தல்.
- எக்காரணமும் இல்லாமல் ஈரல் வீக்கம் ஏற்படும் பொழுது, அதைக் கட்டுப்படுத்த கொழுப்புக் குறைந்த உணவு வகைகளை உட்கொள்ளுதல் நன்று.
- மதுசாரத்தை அறவே தவிர்த்தல் மிகமிக நன்று.
- அடிக்கடி வைத்திய பரிசோதனை செய்து கொழுப்பை கட்டுப்பாட்டில் வைத்திருத்தல்.
- இது தவிர ஏற்கனவே குறிப்பிட்டுள்ள பன்னிரண்டு வகையான காரணங்களையும் வைத்திய பரிசோதனைகள் மூலம் உங்கள் குடும்ப வைத்தியர்கள் உறுதிப்படுத்தி என்னென்ன பரிகாரம் செய்ய வேண்டுமோ அவற்றை அவர்கள் பரிந்துரைக்கும் பொழுது அச்சிகிச்சை முறையைப் பின்பற்றி குணம் பெறுதல் ஈரலின் ஆரோக்கியத்தை வளம்படுத்தும்.
- HEP ‘B’, ‘C’ போன்றவற்றிற்கு அதற்குரிய வைரசு எதிர்ப்பு மருந்துகள் கொடுப்பார்கள்.
- சுயமாகவே ஈரலில் ஏற்படும் சுயநிர்ப்பீடன (Autoimmune) வீக்கத்திற்கு Corticosteroids மருந்துகள் கொடுப்பார்கள்.
- HEP ‘B’ தொற்றியவர்களுக்கு 24 மணி நேரத்தினுள் கொடுக்கக் கூடிய உடனடி நிவாரண மருந்தாகிய Hepatitis ‘B’ Immune Globulin (HBIG) தற்சமயம் உண்டு. ஆகக் கூடியது 48 மணி நேரத்தினுள் கொடுத்தல் வேண்டும். அதன் பின்பு அவ்வளவாக நல்ல பலனைக் கொடுக்காது.
- HEP ‘C’ தொற்றியவர்களுக்கு இத்தகைய உடனடி நிவாரண மருந்து (Immune Globulin) கண்டு பிடிக்கப்படவில்லை.

### ஈரலின் சிறப்புகள் என்ன?

- உறிஞ்சப்பட்ட உணவின் பகுதிகளைக் கண்காணித்து சீர் செய்தல்.
- மென்நஞ்சுகளை அகற்றுதல்.
- நாம் உட்கொள்ளும் மருந்துகள் ஈரல் மூலமும், சிறுநீரகம் மூலமும் அகற்றப்படுகின்றன.
- கிருமித் தொற்றுக்களைக் கட்டுப்படுத்தும்.
- கொலெஸ்ரெறோல் உற்பத்தியைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் (சிலரிற்கு அதிகளவில் உற்பத்தி செய்வது வியாதியாகும்.)
- குருதியை உறையைப் பண்ணும் காரணிகளை உருவாக்கும்.
- பித்தம் சுரக்கும்.
- மேலும் பல நூற்றுக் கணக்கான தொழில்களை ஈரல் செய்வதனால் உடலின் சமநிலை வெகுவாகப் பேணப்படுகின்றது.

ஈரலின் சிறப்புக்களை இக்குறுகிய கட்டுரையில் அடக்க முடியாது. இதை படிப்பவர்கள் நாம் ஏன் ஈரலைப் பக்குவமாகப் பேணுதல் வேண்டும் என்பதற்குப் போதிய சான்றுகளை அறிந்து கொள்கிறார்கள். உதாரணமாக HEP ‘C’ என்பது பாலியல் நோய்களில் ஒன்றாக வர்ணிக்கப்படுகிறது. அல்லாவிடில் இரத்தம் ஏற்றும் பொழுதும் ஒருவரைத் தொற்றிக் கொள்ளலாம். கனடாவில் 1985 முதல் எல்லாக் குருதிகளும் HIV, HEP ‘C’ போன்ற கிருமிகள் இருக்கின்றனவா என்று பரிசோதித்த பின்பே ஏற்றுவதனால் இங்கு பயப்படத் தேவையில்லை. எனினும் வேறு நாடுகளில் இந்தப் பரிசோதனைகள் எந்த அளவிற்கு இருக்கின்றன என்பது தெரியாது. அந்த நாடுகளில் இருந்து HEP ‘C’ தொற்றுடன் வந்த ஒருவரிடம் பாதுகாப்பற்ற முறையில் உறவு கொள்வதன் மூலம் இந்த HEP ‘C’ தொற்றிக்கொள்ளலாம். குணங்குறிகளும் உடன் தெரியவராது. இரத்ததானம் செய்யும் பொழுது கூட இவர்களிடம் இருந்து இரத்த வங்கியானது குருதியைப் பெற்றுக்கொள்ளமாட்டாது.

இது பற்றிய அறிவும், விழிப்புணர்வும் இவை எல்லாவற்றிலும் இருந்து எம்மைப் பாதுகாப்பதற்குத் தேவையானவையாகும். HEP ‘B’, ‘C’ மட்டுமே குருதி மூலமும், அல்லது பாதுகாப்பற்ற உடற்சேர்க்கை மூலமும் தொற்று நோய் ஏற்பட்ட ஒருவரிடம் இருந்து இன்னொருவருக்குக் கடத்தப்படுகின்றன. ஏனைய ஈரல் நோய்கள் அப்படியல்ல என்பதைக் கவனிக்கவும்.

*senthilnathan.kandiah@thaiveedu.com*

■ ■ ■



SUTHAN
Namasivayam
Sales Representative
647-988-3866
suthanhome@rogers.com




Find your Dream Home with ME...
Friendly Service &
Professional Results...
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Office : 905-201-9977
Fax : 905-201-9229
* Independently Owned and Operated

# உணவு

# ஆரோக்கிய சமையல்

சிவாஜினி
பாலராஜன்



கீன்வா ஏன் எமது உணவில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். அவ்வாறு சேர்த்துக் கொள்வதனால் என்னென்ன நன்மைகள் உண்டு என்பதனைச் சொல்வதாயின் தொடர் கதையாகிவிடும். அதனால், முதலில் கீன்-



வாவிலுள்ள நன்மைகள் சிலவற்றை எடுத்துக் கொண்டு கீன்வாவினை எவ்வாறு எமது அன்றாட உணவு உள்ளெடுப்பில் சேர்த்துக் கொள்ளலாம் எனப் பார்ப்போம்.

கீன்வாவினை மூன்று நேர உணவிற்கும் ஏற்ற வகையில் தயார் பண்ணிக் கொள்ளலாம்.

முதலில் காலை உணவிற்காக இதனை எவ் வாறு தயார் செய்யலாம் எனப் பார்ப்போம்.

இங்குள்ளவர்கள் அனைவரும் பொதுவாக காலை உணவாக பாண், சீரியல் அல்லது ஓட்ஸ் கஞ்சி சாப்பிடுவதுதான் வழக்கம். இருப்பினும் இந்த கீன்வாவினையும் ஓட்ஸ் மாதிரி செய்து சாப்பிடலாம். இது சாப்பிடக் கூடிய விதமாக சுவையாகத் தான் இருக் கின்றது. நான் செய்து பார்த்து சாப்பிட்டி- ருக்கின்றேன். எனவே நீங்கள் முயல்வதற்கு தயங்கத் தேவையில்லை.

### காலை உணவு:

2 கப் 2% பால்
1 கப் சுத்தப்படுத்திய கீன்வா
3 மேசைக்கரண்டி மண்ணிற சீனி (சர்க்கரை வியாதி இருப்போர் splenda)
1/8 தேக்கரண்டி கறுவாத்தூள் (இதன் சுவை விரும்பியவர்கள் கொஞ்சம் கூடுதலாக சேர்த்துக் கொள்ளலாம்)

1 கப் நீல நிற பெரிப் பழம் (இந்தப் பழத்தில் நிறைய அன்ரி ஒக்சிடன்ற் உண்டு. அன்ரி ஒக்சிடன்ற் இருப்பது ஏன் நல்லது என்னும் விளக்கத்தினைப் பின்னர் பார்ப் போம்)

பாலைக் கொதிக்கவைக்கவும். கீன்வாவினை நன்றாகச் சுத்தம் செய்து அதனையும் கொ- திக்கும் பாலுள் போட்டு நன்றாக மெல்லிய சூட்டில் அவிய விடவும். கிட்டத்தட்ட ¾ பங்கு பால் கீன்வாவினால் உறிஞ்சப்பட்ட பின்னர் சீனியினையும் போடவும். பால் நன் றாக வற்றிய பின்னர் அடுப்பிலிருந்து நீக்கி அதனுள் பழத்தினையும் கறுவாத் தூளினை யும் சேர்த்துக் கிளறிப் பரிமாறவும்.

இதில் நீல நிறபெரிப் பழங்களுடன் உங்க ளுக்கு விருப்பமான வேறு பழங்களையும் சேர்த்துக் கொள்ளலாம்.

இதனை இன்னொரு வகையிலும் செய்து கொள்ளலாம். கீன்வாவினை தண்ணீர், கறுவாத்தூள், வனிலா சேர்த்து கலவையி னுள் அவியவிடவும். கீன்வா நன்றாக அவிந்த பின்னர் அதனுள் சர்க்கரையற்ற அப்பிள் சோஸ் (unsweetened apple sauce) முந்திரிகை




வற்றல் இளஞ்சூட்டுப் பால் என்பவற்றை போட்டு நன்றாக்க் கிளறி (மிகவும் சிறிதாக வெட்டிய அப்பிள் துண்டுகள் போட்டால் நன்றாக இருக்கும்) பரிமாறவும்.

...தொடரும்

sivagini.bala@thaiveedu.com

■ ■ ■



# வீட்டுக்கடன் காப்புறுதி திட்டம்
# Mortgage Life Insurance

"Before sign up for the Mortgage life Policy you should shop around.
The Banks offer convenience, but individual Insurance sold by Life Insurance companies offer Portability, Flexibility and a Better Deal."

### வங்கிக் கடன் காப்புறுதி

01 வங்கியே உடமைக்காரர்.
02 வங்கியின் அதிகாரத்தில் இருக்கிறது.
03 கடன் தவணைகள் தவறினால் காப்புறுதி செயலிழந்து விடும்.
04 வங்கியே பாத்தியக்காரர்.
05 உங்கள் காப்பு தொகை குறைந்துகொண்டே வரும்.
06 காப்புறுதிக்கு திரும்பவும் விண்ணப்பிக்கவேண்டும்.
07 காப்புறுதி தொகை, கடன் தொகையை தாண்டக்கூடாது.
08 கடனை முற்றிலும் தீர்க்கவேண்டும்.
09 நீட்டவோ மாற்றவோ முடியாது.
10 திட்டமில்லாத வைப்புகளுக்கு சலுகை இல்லை.
11 காப்புறுதி எடுத்தவர் இறந்த பிற்பாடே வங்கி அதன் தராதரங்களை முற்றாக ஆராயும்.
12 வங்கி காப்புறுதி மிகவும் கூடிய செலவு.
13 வங்கி காப்புறுதியை எப்போதும் லண்டன் லைஃப் காப்புறுதிக்கு மாற்றலாம்.
14 முடிவு உங்களுடையது, வங்கியுடையது அல்ல.

### லண்டன் லைஃப் காப்புறுதி

01 காப்புறுதி எடுத்தவரே உடமைக்காரர்.
02 காப்புறுதி எடுத்தவரே அதிகாரம் கொண்டவர்.
03 கடன் தவணைகள் தவறினாலும் காப்புறதி செயலிழக்காது.
04 உங்கள் பாததியக்காரராக யாரையும் நீங்கள் நியமிக்கலாம்.
05 உங்கள் காப்புதொகை நிரந்தரமானது, காப்புறுதித் தவணையும் ஒரே அளவானது.
06 கடன் உதவியவரை மாற்றினாலும் காப்புறுதி தொடரும்.
07 காப்புறுதித் தொகையை உங்கள் தேவைப்படியும் வசதிப்படியும் தீர்மானிக்கலாம்.
08 உங்கள் உரிமைக்காரர் பணத்தை தக்கவைத்துக்கொண்டு அதன் வருமானத்தில் 10 தவணைகளைக் கட்டலாம்.
09 உங்கள் காப்புறுதியை மிண்டும் புதுப்பிக்கலாம்; மாற்றலாம்.
10 திட்டமில்லாத வைப்புகளுக்கு சலுகை உண்டு.
11 காப்புறுதிகளின் தராதரம் விண்ணப்ப சமயத்தில் தீர்மானிக்கப்படும்.
12 எங்களுடையது போட்டிகளை எதிர்த்து நிற்கும் வல்லமை கொண்டது.
13 மேற்சொன்ன காரணங்களினால் இதுவே சிறந்தது.

Freedom 55 Financial
A division of London Life Insurance Company




**பாலா பாலசுந்தரம் B.Eng, CHS.**
**Certified Health Insurance Specialist**
**Office: 416-291-0451 Ext.227**
**Cell: 416-518-9489**
**300-2075 Kennedy Rd, Toronto. ON M1T 3V3**
**E-mail: bala.balasundaram@freedom55financial.com | Now Representing Manulife, Sunlife & Greatwest Life.**

## WHO PAYS LAND TRANSFER TAX, LAWYER FEE AND THE INSPECTION

**Staines Rd.**

4 Bedrooms, 3 Washrooms
**$599,900**


**Brock Rd. (Pickering )**

4 Bedrooms, New House
**$549,900**

**Warden & Ellesmere**

3 Bedrooms, Bsmt. Apt.
**$479,900**


**Morningside & Sheppard**


3246 Sq.ft. Industrial Unit
**$379,900**

**Victoriapark Ave.**

2+2 Bedrooms, Bsmt.Apt
**$459,900**

**Morningside Ave.**

4 Bedrooms, Finished Bsmt.
**$449,900**

**60 TownCentre Crt.**

1 Bedroom
**$219,900**

**430 McLevin Ave.**

2+1 Bedrooms, 2 Washrooms
**$194,900**

**Punch Sockalingam** Broker **416-786-2463**

Century 21
Affiliate Realty Inc. Brokerage -416-290-1200

## Buying Properties
**Dominican Republic or Havana Cuba**
**Through referral Century21 worldwide services**
**Please call me**



# ஆபத்தான மனநோயின் ஆரம்ப நிலை

## (Early Psychosis)


புஷ்பா கனகரட்ணம்
- உளவியல் நிபுணர் -

உளநலத்தாக்கங்களை மேலெழுந்தவாரியாக பார்ப்போமானால், ஆபத்தான மற்றும் ஆபத்தல்லாத நோய்நிலைகள் என்று பிரிக்கலாம். ஆபத்தான நோய்நிலைகளில் தீவிர மனச்சோர்வு (Serious depression or major depression) அடங்கும். மிகவும் முக்கியமாக யதார்த்த பிறழ்வுடன் கூடிய நோய்நிலைகள் அடங்கும். யதார்த்த பிறழ்வு (psychosis) பல உளநோய் நிலைகளில் ஏற்படலாம். முதல் முறையாக இந்த யதார்த்த பிறழ்வு ஏற்படும் போது இதனை early psychosis அல்லது first episode psychosis என்பார்கள். யதார்த்தத்துடன் ஒவ்வாத நம்பிக்கைகள் (delusions), இல்லாத ஒன்றை புலன்களால் உணர்தல் (Hallucinations), அதீத சந்தேகம், சிந்தனையிலும் பேச்சிலும் ஒழுங்கின்மை போன்றவை Psychosis நோய்நிலையின் அறிகுறிகளாகும்.

கிட்டத்தட்ட 3 வீதமான மக்கள் தங்கள் வாழ்க்கைக் காலத்தில் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் மேற்குறிப்பிட்ட நோய்நிலை அறிகுறிகளை உணர்கிறார்கள் என புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. Psychosis ஆண்களையும், பெண்களையும் ஒரே விகிதாசாரத்தில் தாக்குகிறது. முதல் கட்ட நோய்நிலை பொதுவாக இளம்பருவத்தில் இருந்து முழு வளர்ச்சியை ஒருவர் எட்டும் காலகட்டத்திற்குள் தாக்குகிறது. அதாவது 17இலிருந்து கிட்டத்தட்ட 24 அல்லது 25 வயதிற்குள் முதல் அறிகுறிகள் தோன்றுகின்றது. ஆரம்ப கட்டத்திலே Psychosisகான சிகிச்சை பெறுவது நோயின் மாற்றமுடியாத தன்மையை தடுத்து விட உதவுகிறது. நாட்பட்டுப் போகும் போது குணமாக்க முடியாத ஒரு நிலை ஏற்படலாம்.

### உறவினர்கள் அல்லது நண்பர்கள் எப்படி அடையாளம் காணலாம்:

ஆரம்ப கட்டத்திலே Psychosisஐ கண்டு அறிவது கடினம் தான். ஏனெனில் இது இளம் பருவத்திரை தாக்குவதால், விடலைப்பருவத்து பிரச்சினைகள் என நாம் அக்கறை இன்றி விட்டுவிடக்கூடும். இந்த அறிகுறிகளால் பாதிக்கப்படும் நபருக்கும் இது ஒரு குழப்பமான நிலையை தோற்றுவிப்பதால் பயம் காரணமாகவோ வெட்கம் காரணமாகவோ வெளியில் சொல்லாமல் தவிர்க்கப் பார்ப்பார்கள். சிலர் இது மனநோய்க்கான ஆரம்ப அறிகுறிகள் என்று கருதுவதில்லை. மற்றவர்களும் இது தானாகச் சரியாகிப் போய் விடும் என்ற எதிர்பார்ப்பில், நம்பிக்கையில், எதுவுமே செய்யாது விட்டுவிடுவார்கள். Psychosis ஒருவரின் உணர்வுநிலையில், சிந்தனையில், மற்றும் பழக்க வழக்கங்களில் மாற்றங்களை ஏற்படுத்துகிறது.

சிலபேருக்கு முழுமையான அறிகுறிகள் தோன்ற முன் ஒரு சில மாதங்களுக்கு உணர்வுநிலை, எண்ணங்கள், பழக்க வழக்கங்களில் சில மாறுபாடுகள் தோன்ற ஆரம்பிக்கும். சமூகத்தில் இருந்து ஒதுங்குதல், கவனக்குறைவு, மனதை ஒருமைப்படுத்த முடியாமை, மனச்சோர்வு, நித்திரைப் பிரச்சினைகள், பதட்டம், சந்தேகம், பாடசாலை/ வேலை தவிர்த்தல், எரிச்சல் போன்றவை பொதுவாக இந்தக் காலகட்டத்தில் தோன்றும். இந்த அறிகுறிகள் மிகப் பொதுவானவை. அத்துடன் சாதாரணமாக விடலைப்பருவத்தில் தோன்றக்கூடியவை. இப்பாடியான அறிகுறிகள் நீண்ட நாட்களுக்கு நீடிக்கின்றனவா என அவதானிக்க வேண்டியது அவசியம். ஏனென்றால் சிகிச்சை எவ்வளவு விரைவாக ஆரம்பிக்கின்றதோ, அவ்வளவுக்கு குணமாக்கும் சந்தர்ப்பமும் அதிகரிக்கின்றது.

எல்லோருக்கும் இந்த (மேற்கூறிய) அறிகுறிகள் முதலில் தோன்றும் என்று சொல்லமுடியாது. ஆனால் நிச்சயமான Psychotic அறிகுறிகளை சில வெளிப்படையான அறிகுறிகள், சில மறைமுகமான அறிகுறிகள் என நாம் வேறுபடுத்தலாம். வெளிப்படையான அறிகுறிகள் என பார்க்கும்போது, ஆணித்தரமான தவறான நம்பிக்கைகள் ஒரு அறிகுறி.

> “ஆரம்ப கட்டத்திலே Psychosisஐ கண்டு அறிவது கடினம் தான். ஏனெனில், இது இளம் பருவத்திரை தாக்குவதால், விடலைப்பருவத்துப் பிரச்சினைகள் என நாம் அக்கறையின்றி விட்டுவிடக்கூடும்.”

உதாரணமாக:- மற்றவர்கள் பின்தொடர்கிறார்கள், தனக்கு எதிராக சதி செய்கிறார்கள், தம்மைப்பற்றி மறைமுகமாக மற்றவர்கள் கதைக்கிறார்கள், தொலைக்காட்சியில் அல்லது வானொலி, பத்திரிகையில் தன் மனதில் தோன்றுவதை அறிந்து ஒளி/ ஒலிபரப்புகின்றார்கள், பிரசுரிக்கிறார்கள், வேறுமக்களோ, சக்திகளோ தன்னை கட்டுப்படுத்துகிறார்கள், தனக்கு அதீதமான ஒரு வல்லமை அல்லது சக்தி இருக்கிறது. இப்படியான நம்பிக்கைகளை ஆங்கிலத்தில் delusions என்பார்கள். அடுத்து அசாதாரண புலன் உணர்வுகள், இதை ஆங்கிலத்தில் hallucinations என்பார்கள். இல்லாத ஒன்றை பார்த்தல், கேட்டல், உணர்தல், நுகர்தல் என்பன இதில் அடங்கும். பொதுவாக சப்தங்களை அல்லது குரல்களை கேட்பது ஒரு பொதுவான அறிகுறியாக இருக்கும். இந்த அறிகுறிகளை உணர்பவர் இதனை உண்மை என்று ஆணித்தரமாக நம்புவார். இதனால் ஒருவர் வழமைக்கு மாறாக நடக்க ஆரம்பிக்கும் போதுதான் மற்றவர்கள் இதனை பிரச்சினையாக கருதத் தொடங்குவார்கள். ஒழுங்கற்ற பேச்சும் பழக்கவழக்கங்களும் அடுத்த அறிகுறி. ஒருவிடயத்தில் இருந்து இன்னொரு விடயத்திற்கு அடிக்கடி மாற்றி மாற்றி கதைப்பார்கள் அல்லது பேச்சில் ஒரு விளக்கம் இல்லாமல் இருக்கும். அவர்கள் பழக்கவழக்கங்களும் அசாதாரணமாக இருக்கலாம். உதாரணமாக கவலைக்குரிய ஒரு விடயத்தை சிரித்தவாறு சொல்லக்கூடும். நாளாந்த நடவடிக்கைகளில் (உதாரணமாக சமைத்தல், காலைக்கடன்கள்) ஒழுங்கின்மை அல்லது மாறுபாடு, குழப்பம் இருக்கலாம்.

வெளிப்படையான அறிகுறிகள் போன்று இல்லாமல், மறைமுகமான அறிகுறிகளை அவதானிப்பது கடினம். சாதாரண இயக்கநிலையை விட எல்லாம் குறைந்து இருக்கும். உதாரணமாக உணர்வுநிலை வெளிப்பாடு, பேச்சு, மற்றும் விஷயங்களை ஆரம்பித்து செய்வது போன்றவற்றில் ஓர் உறைநிலை இருக்கும். இவற்றோடு மனச்சோர்வு, பதட்டம், தற்கொலைக்கான எண்ணங்கள், போதைப் பொருள் பாவனை போன்ற பிரச்சனைகளும் இருக்கலாம்.

ஆரம்ப Psychosisஇன் போது தற்கொலைக்கான சாத்தியக்கூறு அதிகமாக இருக்கிறது. 10% - 30% வரையானவர்கள் முதன்முறை துறைசார் உதவியை நாடமுன்பே தற்கொலை முயற்சியில் ஈடுபடுவதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. அத்துடன் 20% - 51% வரையானவர்கள் சிகிச்சையில் ஈடுபட்டுக்கொண்டு இருக்கும் போது கூட தற்கொலை எண்ணங்களை கருத்தில் கொள்கிறார்கள். ஏனெனில் ஆரம்ப Psychosis ஒரு குழப்பமான, பயமுறுத்தக்கூடிய அனுபவமாக இருக்கும். அறிகுறிகள் அசாதாரணமாகவும் ஒருவரை மிகவும் பாதிப்பதாகவும் இருக்கின்றன. சுற்றுச் சூழலிலும் ஆதரவோ புரிந்துணர்வோ இல்லாமல் போகும்போது பாதிக்கப்பட்டவர் இரட்டிப்பான துன்பத்துக்கு ஆளாகிறார். முதல் கட்ட Psychosisஇனால் பாதிக்கப்பட்டவர்களிடையே அதீத போதைப் பொருள் பாவனையும் இருக்கிறது. குடும்பப் பின்னணியின் பாதிப்பு இருக்கும் நபர்களுக்கு, அதாவது வேறு குடும்ப அங்கத்தினருக்கு Psychosis சார்ந்த நோய்நிலைகள் இருப்பின், போதைப் பொருள் பாவனை Psychosis ஏற்படும் சாத்தியக்கூறை அதிகரிக்கும். Psychosis இனால் பாதிக்கப்பட்ட, பாதிக்கப்படாத இளம்பருவத்தினர் இருசாராருமே, போதைப்பொருள் பாவனைக்கு ஒரே காரணங்களைத் தான் சொல்கிறார்கள். இருப்பினும் Psychosisஇன் பாதிப்பு இருப்பவர்கள், அதனால் ஏற்படும் வெளிப்படையான அறிகுறிகளில் இருந்து மீள ஒரு வழியாக போதைப் பொருள்களை நாடலாம்.

### ஏன் யதார்த்த பிறழ்வு (Psychosis) ஏற்படுகிறது?

முதல் யதார்த்த பிறழ்வு ஏற்படுவதற்கான காரணங்கள் பலவாக இருக்கலாம். இதுதான் என உறுதியாக ஒரு காரணத்தை சொல்லமுடியாது. ஆய்வுகளின் படி மரபியல், உயிரியல் சார்ந்த காரணங்களுடன் சூழ்நிலைத் தாக்கங்களும் இணையும் போது முதல்கட்ட Psychosis ஏற்படும் சந்தர்ப்பம் அதிகரிக்கிறது. மூளையின் இரசாயன மாற்றங்களும் தாக்கத்தை ஏற்படுத்தலாம். மன உளைச்சலை ஏற்படுத்தும் ஏதாவது ஒரு சம்பவமும் இத் தாக்கத்தை ஏற்படுத்தலாம். உதாரணமாக திடீர் இறப்பு, அதிர்ச்சி, ஏமாற்றம், பொருளாதார பிரச்சனைகள், குடும்ப உறவுகளில் சிக்கல், மது மற்றும் போதை பொருள் பாவனை போன்றவற்றை சொல்லலாம்.

ஒருவரில் Psychosis ஏற்படும் சாத்தியக்கூறு அல்லது பாதிப்பு அதிகமாக இருப்பின், சில சூழ்நிலைத் தாக்கங்கள், இந்த சாத்தியக்கூறு குறைவாக இருப்பவர்களைவிட ஒப்பீட்டளவில் முன் குறிப்பிட்டவர்களில் கூடுதலான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. Psychosis ஏற்படுவதற்கான பாதிப்பை ஒரு குறிப்பிட்ட நபரின் குடும்பப் பின்னணியில் இதே நோய்கள் இருத்தல், பிறப்பின் போது ஏற்படும் பிரச்சினைகள், மற்றும் மூளைத்தாக்கங்களின் அடிப்படையை வைத்து கணிப்பிடலாம். சில உடல் நோய்கள் கூட யதார்த்த பிறழ்வை ஏற்படுத்தலாம். அதனால் எவ்வளவு விரைவில் உளநலத்துறை சார் நிபுணர்களை அணுகுகிறீர்களோ, அவ்வளவுக்கு குணமடைதலும் இலகுவாக இருக்கும்.

சிகிச்சைமுறைகள் Psychosis பற்றிய விளக்கமும் தகவல்களையும் நோயாளிக்கும் அவரை நெருங்கியவர்களுக்கும் கொடுப்பது சிகிச்சையின் ஒரு முக்கிய அம்சமாகும். இது சம்பந்தப்பட்ட நபருக்கும் குடும்பத்திற்கும் மிக உதவியாக இருக்கும். மருந்துகள் சிகிச்சையின் ஒரு முக்கிய பங்காக அமையும். மருத்துவ சிகிச்சை வெளிப்படையான அறிகுறிகளை கட்டுப்படுத்தி மீண்டும் இந்த அறிகுறிகளை தோன்றவிடாது தடுக்கும். இம் மருந்துகளின் பாவிப்பால் ஏற்படும் பக்கவிளைவுகள் நாளடைவில் குறைந்துவிடும். சிலருக்கு பக்கவிளைவுகள் ஏற்படுவதில்லை. உளநலமருத்துவர் இது சம்பந்தப்பட்ட ஆலோசனைகளை வழங்குவார். மன உளைச்சலை குறைத்து ஆரோக்கியமான வாழ்க்கை முறையை கடைப்பிடிப்பது நோய்நிலையை கட்டுப்பாட்டில் வைத்திருக்க உதவும். உளவியல் சார்ந்த நிபுணர்கள் இதற்கான ஆலோசனைகளை வழங்குவார்கள். இது போன்ற உளவியல் சிகிச்சை தனிப்பட்ட முறையில் அல்லது குழுக்களில் வழங்கப்படும். குடும்ப உறுப்பினர்கள் சம்பந்தப்பட்டவரின் சிகிச்சையில் முக்கிய பங்கை வகிப்பார்கள். ஏனெனில் குடும்பத்தில் புரிந்துணர்வு இருக்கும்போது நோயை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது இலகுவாகிறது.


சிலவேளைகளில் மிகப்பெரிய மனஉளைச்சல் ஏற்படும்போது திடீரென யதார்த்த பிறழ்வு ஏற்படலாம். இப்படியான அறிகுறிகள் பொதுவாக ஒருமாத காலத்திற்குள் மறைந்துவிடும். சாதாரணமாக, Psychosisஇனால் பாதிக்கப்படுபவர்கள் ஆபத்தானவர்கள் அல்ல. தம் அறிகுறிகள் காரணமாக அவர்கள் எதிர்பாராத விதங்களில் நடக்கலாம். ஆனால் மற்றவர்களுக்கு தீங்கு விளைவிக்கும் விதமாக நடப்பது மிகக்குறைவு. தமக்குத் தாமே ஆபத்தை ஏற்படுத்தும் சாத்தியக்கூறு தான் அதிகம் என்று சொல்லலாம்.

Psychosisஇனை குணமாக்க முடியும். பலபேர் சிகிச்சையுடன் நல்ல முறையில் வாழ்கிறார்கள். அத்துடன் பலபேர் ஆரம்பநிலையில் ஏற்படும் யதார்த்த பிறழ்வின் பின் முழுமையாக குணமடைகிறார்கள். அறிகுறிகள் இரண்டாம் முறை அவர்களை தாக்குவதில்லை. ஆரம்ப நிலையில் ஏற்படும் அறிகுறிகளை கண்டறிந்து, எவ்வளவு விரைவில் துறைசார் உதவி பெறுகிறார்களோ அவ்வளவுக்கு குணமடைதலுக்கான சாத்தியக்கூறும் அதிகரிக்கிறது.

*Pushpa.kanagaratnam@thaiveedu.com*

■ ■ ■

### உலகப்புகழ் பெற்ற கொட்டாவி:



அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா இரண்டாவது தடவை பதவியேற்று உரையாற்றிக்கொண்டிருந்த போது, அவருடைய 11 வயது மகள் சாஷா கொட்டாவி விட, twitter இல் இதுவும் அதிகம் ஆதரவாக விமர்சிக்கப்பட்ட ஒன்றாகிவிட்டது. பலரும் சாஷா மீது பரிவாகவே கருத்திட்டனர்.

ஒபாமா 2008 இல் ஜனநாயகக் காட்சி மாநாடொன்றில் பேசிக் கொண்டிருக்கும் போதும் சாஷா கொட்டாவி விட்ட படத்தைத் தேடியெடுத்து வெளியிட்டு மகிழ் கின்றன இணைய ஊடகங்கள்.

இதை வாசிக்கும் போது எத்தனை முறை கொட்டாவி விட்டீர்கள்?

குட்டான்


உங்கள் திருப்தியே... எனது வெற்றி...
$449,900
Cliff/Central Pkwy
4 Bed Room, 2 Washroom
Well Maintained Spacious Home
$474,900
Ellesmere/Neilson
4 Bed Room, 3 Washroom
4 Level Home
$499,000
Kingston Rd / Scarborough
3 Bed Room, 4 Washroom
Newly Built Detached Home
$549,900
Rosebank / Strouds
5+2 Bed Room, 4 Washroom
Creat Location
$609,900
9th Line / 14th Ave
4 Bed Room, 3 Washroom
Upgrade
$600,000
Dufferin/ Rutherford
4 Bed Room, 4 Washroom
Skylite!Up-Grades Thruout
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife Today
Realty Ltd., Brokerage
Independently Owned and operated
Free HomeLife Home Warranty Program
Flexible Commission
Free Market Evaluation
Ikea Aickiyaseelan
ஐக்கியா ஐக்கியசீலன்
Sales Representative
Cell: 416-669-8104 Off: 416-298-3200


தமிழரின் நிர்வாகத்தில்
Nilax optical
☑Designer eye glasses
☑safety eye glasses
☑contact lenses
☑Designer sun glasses
எமது நிலையத்திலே கண் பரிசோதிக்கப்படும்
தொடர்புகளுக்கு:
(416) 298- 2111
(KENNEDY/FINCH)
3852 FINCH AVE EAST
UNIT # G04 TORONTO, ON M1T 3T9
$50 Eye exam
with purchase of complete glass
FREE Eye exam
with purchase of complete glass
over $299.00
BUY ONE GET ONE FREE


modern services.
professional results.
WIGNA SHIVA
real estate sales representative
416.317.8449 | WIGNA.CA
RED CARPET ROYAL REALTY LTD., Brokerage. Independently Owned and Operated
204-880 Ellesmere Road., Toronto, ON M1P 2W6


கண்கள் உங்களுக்கு உலக அழகைக் காட்டுவது போல் பற்கள் உங்கள் அழகை உலகிற்குக் காட்டுகிறது
Markham NS Dental
Care, Comfort, Convenience, Confidence.......
Dr. நளினி சுதர்சன் DDS
Family and Cosmetic Dentistry
உங்கள் அனைத்து பற் சிகிச்சைத் தேவைகளுக்கு நாடுங்கள்
New Patients and Emergencies always Welcome
FREE
15 Mins in office Teeth Whitening
Oral Cancer Screening
Cosmetic & Implant
Consultation and Advice
Preventative Care
• Dental Hygiene
• Fluoride Treatment
• Sealants
• Oral Cancer Screening
Periodontic Services
• Gum Treatment
• Scaling and Root Planning
Endodontic Services
• Root Canal Therapy
General & Cosmetic Dentistry
• Tooth-Coloured Fillings
• Porcelain Veneers
• Teeth Whitening
• Cosmetic Bonding
• Crowns & Bridges
• Inlays & Onlays
• Complete & Partial Dentures
• Implant Supported Dentures
• Dental Implant Restorations
Oral Surgery
• Tooth Extractions
• Wisdom Teeth Removal
Implant
Braces
Sedation Dentistry NEW
Sports Dentistry
Seniors Dentistry
Children Dentistry
Emergency Dental Care
Sedation Dentistry
Sedation dentistry program was designed to offer fearful patients a safe, comfortable means of receiving the treatment they need.
Treats all age groups, including children
All aspects of dentistry practiced
Education & Prevention
Open Seven Days A Week
www.MarkhamNSDental.com
9293 Hwy 48, Suite 4, Markham, ON. L6E 1A3 905-472-4111
MON - SAT 9:00 AM - 8:00 PM
SUN 10:00 AM - 5:00 PM

# கற்காலமா தற்காலம்?

தற்காலம் கற்காலமா என்று நம்மை நாமே கேட்டுப் பார்க்கும் படியான சம்பவங்கள், சமீபகாலமாக நிகழ்ந்து கொண்டு இருக்கின் றன. மிகக் சொடூரமாகவும் பயங்கரமாகவும் மனிதரால் மனிதருக்கு இழைக்கப்படும் அநீதிகளை காணும்பொழுது – மிகுந்த அச்சுறுத்தலையும், எதிர்காலம் குறித்த பயத் தையும் தருகிறது.

புத்தாண்டு பிறக்கும் முன், கடந்த டிசம்பர் மாதம் டில்லியில் நடந்த சம்பவம் ஒன்று ஒட்டுமொத்த உலகத்தையும் இந்தியாவின்-பால் திரும்பிப் பார்க்க வைத்து, திடுக்கிடச் செய்தது. 23 வயது மருத்துவ கல்லூரி மாணவி, மது அருந்தியிருந்த வண்முறை கும்பலால் பேரூந்தில் வைத்து பாலியில் பலாத்காரம் செய்யப்பட்டு, பேரூந்து ஓட ஓடவே தூக்கி விசப்பட்டாள். முதலில் டில்லி யிலும் பின் சிங்கப்பூரிலும் அளிக்கப்பட்ட மருத்துவ சிகிச்சை பலன் அழிக்காமல் உயிர் நீத்தாள்.

இது மட்டும் அல்ல, இது போன்ற பெண்க ளிற்கு எதிரான பாலியில் பலாத்கார வண் முறைகள் இங்கும் அங்கும் நடந்து கொண்டு தான் இருக்கின்றன.

நடந்த சம்பவம் குறித்த சில அரசியல்வாதிகள், பொது மக்களின் பார்வை மிக மோசமாக இருக்கின்றது. உதாரனமாக: ‘சம்வத்தன்று ஏன் அந்தப் பெண் வெளியே வரவேண்டும்?’ என்று சில அரசியல்வாதிகள் கேள்வி தொடுக்கின்றனர். பாதுகாப்பு தரவேண்டிய பொறுப்புள்ள, மக்களால் தெரிவு செய்யப்பட்ட இவர்களின் இதுபோன்ற பேச்சு கவலையளிக்கிறது.

பொது மக்களில் சிலர் ‘பெண்கள்’ உடை அனியும் விடயத்தில் கவணம் செலுத்த வேண்டும் என்று சொல்கின்றனர். உடை ஒரு காரணம் எனில், பள்ளிக்கு சென்று வந்த 10 வயது சிறுமி ஏன் பாதிக்கப்பட வேண்டும். (தமிழ்நாட்டில் வேலூர் மாவட்டம் கம்மன்குப்பம் கிராமத்தில் பள்ளிக்கு சென்று வந்த பத்து வயது சிறுமியை பாலியில் பலாத் காரம் செய்தார் நாற்பது வயதான நபர்.
*- ஆதாரம்: த ஹிந்து - ஜனவரி 08.2013*)

இன்னும் ஒரு சாரார், சட்டங்களும் அதன் தண்டனைகளும் இப்படிப்பட்ட கொடுஞ்செ யல் புரிவோருக்கு மிகச் கொடுமையாக -




ஏன் தூக்கு தண்டனை கூட வழங்கலாம் என்று வலியுறுத்துகின்றனர். தூக்கு தண்டனை மட்டும் தீர்வாக அமையுமா...?

இந்திய நீதிமன்றில் பெண்களுக்கு எதிராக விளைவிக்கப்படும் குற்றங்களுக்கு – தண் டனை அளிக்கும் வகையில் பல சட்டங்கள் இருக்கின்றன. இருந்தும், இப்படிப்பட்ட கொடு மைகள் நிகழ்ந்து கொண்டு தான் இருக் கின்றன. ஏன் எதனால் என்ற கேள்வியோடு உற்று நோக்கையில் கட்டுப்பாடு / ஒழுக்கம், குடும்ப அமைப்பு என்று எல்லாவற்றையும் குறித்த நம் பார்வையை மீள்ஆய்வு செய்ய வேண்டி உள்ளது.

### கல்வி:

முந்தைய நம் கல்வி முறை நீதிநெறிக் கல்வி – Moral Education ஆக இருந்தது. திருக் குறள், ஆத்திசூடி, புறநானாறு அகநானூறு போன்ற நம் ஒப்பற்ற படைப்புகள் - வாழும் கலையை நமக்கு போதித்தன. தற்பொழுது உள்ள கல்வி முறை பொருள் சார்ந்த Money Making Education ஆக இருக்கின்றன.

### கட்டுப்பாடு / ஒழுக்கம்:

தற்பொழுது தனி நபர் ஒழுக்கம், Self Dici-pline என்பது கேள்விக் குறியாக இருக்கிறது.



டெய்சி

இதை குழந்தைகளுக்கு பெற்றோர் தான் போதிக்க வேண்டும். எந்த ஒரு விடயத்தை யும் குழந்தைக்கு 5 வயதிற்குள் போதிக்க வேண்டும் எனச் கூறுகின்றனர்.

*ஒழுக்கம் விழுப்பம் தரலான் - ஒழுக்கம்*
*உயிரினும் ஓம்பப் படும்.*

### குடும்ப அமைப்பு:

அமெரிக்காவிலும் பிரிட்டனிலும் வண்முறை செய்பவர்களில் 85%த்தினர் 20 வயதிற்கும் குறைந்தவர்களாவே இருக்கின்றனர். சமீபத்-திய உளவியலாளர்களின் ஆய்வின்படி குடும்ப சூழ்நிலையில் போதுமான அன்பும் அக்கறை யும் சரிவர அமையப்பெறாதவர்களே, பின் னாளில் வன்முறைச் செயல்களில் ஈடுபடுவ தாகக் கண்டறியப்பட்டுள்ளது.

சமுதாயத்தில் ஒரு விழிப்புணர்வு வரவேண் டும், நடந்த / நடக்கின்ற சம்பவங்களுக்கு நேரிடையாக நாம் காரணம் அல்ல என்ற போதிலும், நம்மிடையே நல்ல சித்தனைக ளும் அன்பும் மனிதநேயமும் மலரவேண்டும்.

ஊடகங்கள் சமூகத்தின் கண்ணாடியாகவும், இப்படிப்பட்ட சம்பங்களுக்கு ஒரு நல்ல முடி வைத் தரும் தூரநோக்குப் பார்வை கொண் டனவாகவும் இருக்க வேண்டும் என்பதையே விரும்புவோம்.

*daisy@thaiveedu.com*

■ ■ ■

# ஆரோக்கியமான...

9ம் பக்கத் தொடர்ச்சி...

வேறு சொற்கள் கொண்டு இப்பற்பசைகள் குறிப்பிடுகின்றன என்பதைப் புரிந்து கொள் வோம்.

இது தவிர பற்பசைகள் வெவ்வேறு வயதி-னருக்கு ஏற்றதாகவும் தயாரிக்கப்படுகிறது. Colgate நிறுவனம் சிறுவர்களின் பற்பசையை 0-2, 2-5, 5-8, 8-12 வருடங்கள் என்று நான்கு காலகட்டங்களுக்கு ஏற்பப் பிரிக்கிறது. இதன் அடிப்படைக் காரணம் ஒவ்வொரு வயதிலும் அவர்களின் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் ஏற்பத் தேவைகள் வேறுபடுகின்றன.

ஒரு குழந்தைக்கு முதன் முதலில் அறிமுகப் படுத்தும் பற்பசை, குழந்தைகள் தவறுதலாகப் பற்பசையை விழுங்கினால் ஆபத்து ஏற்படுத் தாததாக இருக்கவேண்டும். இதன் காரணமாக குழந்தைகளின் பற்பசைகளில் Fluoride சேர்க்கப்பட்டிருக்க மாட்டாது. செயற்கையாக நிறமூட்டப் பட்டிருக்காது.


மேலும் வளரும் சிறுவர்களைக் கவர்வதற் காகப் பற்பசைப் பெட்டிகளில் அந்தந்த வயதினருக்கு ஏற்ப எல்மோ, ஸ்பைடர்மான், ஹலோ கிற்றி, டோரா என்று பல விதமான படங்கள் அச்சிடப்படுகின்றன. அதில் கூட ஆண், பெண் இரு பாலாருக்கும் வித்தியாச மான படங்கள் இருக்கின்றன. சிறுவர்களுக்கு விருப்பமான flavor ஆக பபிள்கம், ஸ்ட்ரோ-பெரி ஆகியவை கருதப்படுகின்றன. பன்னி-ரண்டு வயதுக்கு மேற்பட்டவர்கள் பயன் படுத்தும் பற்பசைகள் அனேகமாக Mint Flavour ஐக் கொண்டிருக்கும்.




படம்: 3 - Toothpastes for children

Hello Kitty Spider Man Elmo

பற்பசைகள் எத்தனை அழகான பெட்டிகளில் வந்தாலும், எவ்வளவு இதமான வாசனைக-ளுடன் இருந்தாலும், அந்த அழகும் வாச னையும் உங்கள் வாயின் நலம் பேண அவசி யமானவை அல்ல. பற்களைச் சுத்தமாக வைத்திருக்க சரியான பல் துலக்கும் முறை யைத் தேர்ந்தெடுக்க வேண்டும், ஒரு நாளுக்கு இரண்டு தரமாவது பல் துலக்க வேண்டும். முக்கியமாக சிறுவர்களுக்கு அழகான படங்கள் போட்ட பற்பசைகள் வாங்கித் தருவதுடன் பெற்றவர்களில் கடமை தீர்ந்துவிடாது. அவர் கள் பல் துலக்க உதவி செய்வதும், மேற்-பார்வை செய்வதும் மிக முக்கியமாகும்.




படம்: 4 - CDA Seal




படம்: 5 - Showing Expiry month and year

நீங்கள் வாங்கும் பற்பசைகளில் ADA, CDA முத்திரை இருக்கிறதா என்று பார்த்து வாங்குங்கள். (படம் 4). எல்லாப் பற்பசை களுக்கும் காலாவதியாகும் மாதம், வருடம் உள்ளது. அதுவும் அதன் பெட்டியில் குறிக் கப் பட்டிருக்கும். (படம் 5).

நீங்கள் வாங்கும் பொருள் எதுவாயினும் அது பற்றி அதன் பெட்டியில் எழுதியிருப்பதை வாசிப்பதை வழக்கமாகிக் கொள்ளுங்கள். நாளடைவில் தரம் உயர்வான பொருட்களை வாங்க இப்பழக்கம் உதவியாக இருக்கும்.

**உசாத்துணை:**


- Wilkins, E. M. *Clinical Pracitce of the Dental Hygienist* (2005). Baltimore, MD: Lippincourt Williams & Williams
- Weinberg, M.A, Westphal, C Froum, S.J, Palat M.*Comprehensive Periodontics for the Dental Hygienist* (2006).

Upper Saddle River, New Jersey: Pearson Education Inc.

- Darby, M. L., Walsh, M. M. *Dental Hygiine; Theroy and Practice* (2003). St Louis, Missouri: Elsevier
- http://www.colgate.ca/app/Kids-World/CA/EN/Kids-Products/Ages-0-2/My-First-Colgate.cvsp
- Spiderman Toothpaste image (2012) Retrieved from http://www.crest.com/en-CA/crest-products/kids-toothpaste-spiderman.aspx
- Kid’s Sesame Street Toothpaste Image (2012) Retrieved from http://www.crest.com/en-CA/crest-products/sesame-street-toothpaste.aspx
- Kid’s Hello Kitty Toothpaste Image (2012) Retrieved from http://www.crest.com/en-CA/crest-products/hello-kitty-toothpaste.aspx
- Good and Bad Toothbrushes image retrieved on 30th January 2013 from http://www.sso.ch/index.cfm?509354F3D9D9424C43B72B506B9C2233


*This article is not to be reproduced in part or whole without the author’s position*

*ravichandrika@thaiveedu.com*

■ ■ ■

சொர்க்கமே என்றாலும் அது சொந்த வீடு போல வருமா...

Uthayan Alex Sivasambu B.Sc. (Hons), M.B.A
Broker

Ottawa: 613.276.SALE (7253)
Toronto: 416.659.SELL (7355)
alex-sivasambu@coldwellbanker.ca, www.sivasamburealty.com

COLDWELL BANKER



# உறவுகள் பிரியும் போது

## (Grief / Bereavement Counseling)

‘பிறப்பு என்பதே இறப்பதற்கான ஒருவிதை. பிறக்கும் போது நம் முதற்கண்ணீர் நாம் வாழ்வதற்காக, இறக்கும்போது அடுத்தவர் கண்ணீர் நாம் விடைபெறுவதற்காக.’ இந்த இரண்டு கண்ணீருக்கிடையான இடைவெளி வாழ்க்கையில் நமக்குள் எத்தனை உறவுகள் பிரிவுகள்.

உறவுகள் திடீரென நம்மைவிட்டு பிரியும் போது ஒவ்வொருவருக்குள்ளும் ஏற்படும் வலிகள், தாக்கங்களை எல்லாருமே அனுபவித்திருக்கிறோம். ஆனால் இதைப்பற்றிய கட்டுரைகள் பெரும்பாலும் தமிழில் மிகக் குறைவு என்றே சொல்லலாம். ஆனால் உள்ளத்தை ஆறுதல்படுத்துகின்ற திரைப்படப் பாடல்கள் குறிப்பாக பழைய பாடல்கள் நிறையவே உண்டு.

உறவுகள் பிரியும் போது மற்ற உறவுகள் ஆற்றுப்படுத்துகின்ற வகையில் மருத்துவ உளவியல் ரீதியாக Grief / Bereavement Counseling என்பது பற்றி ஆங்கிலத்தில் நிறைய நூல்கள் உள்ளன. அது மட்டுமல்ல உளவியலில் அண்மைக்காலமாக இத் துறை குறித்த விழிப்புணர்வு அதிகமாகி வருகிறது. என்றாலும், தமிழர் பண்பாட்டில் இப்படியான விடயங்கள் குறித்து ஒரு சரியான அணுகுமுறை ஏற்கனவே நடைமுறையில் இருப்பது மிகவும் போற்றுதற்குரியதாகும். அதுமட்டுமல்ல தென்கிழக்காசிய சமூகங்களில் பெரும்பாலும் ஒரே மாதிரியான நடைமுறைகள் தொன்று தொட்டு பேணப்பட்டு வருகிறது.

தன்னுடைய மகனை இழந்த தாய் அந்த சிறுவனை தோளில் சுமந்து கொண்டு கௌதம புத்தரிடம் சென்றாள். ‘மகானே உங்களுடைய ஆற்றலைப் பயன்படுத்தி மகனை உயிர்ப்பியுங்கள்’ என்று மன்றாடினாள். அதற்கு புத்தர் அவளிடம், ‘சுற்றியுள்ள கிராமங்களிலுள்ள எல்லா வீடுகளுக்கும் சென்று எந்த வீட்டில் இறப்பு நடக்கவில்லையோ அந்த வீட்டில் கொஞ்சம் மிளகு வாங்கிக் கொண்டுவா’ என்றாராம். அவளும் மாலை வரை ஊரெல்லாம் சுற்றிவிட்டு வெறுங்கையோடு வந்தாள்.

ஆம் மரணம் என்ற பேரிழப்பு ஏதோ ஒரு வகையில் எல்லாரின் வாழ்க்கையிலும் தாக்கத்தையும், அனுபவத்தையும் ஏற்படுத்தியிருக்கும்.

மண்ணுக்கும், பொன்னுக்கும், பணத்திற்கும் பதவிக்கும், அத்தனைக்கும் ஆசைப்படும் மனித மனத்திற்கு மரணத்தின் மீது மட்டும் ஆசையில்லை. ஆவலில்லை. நிரந்தரமில்லா மனிதனுக்கு நிரந்தரமான மரணத்தின் மீது ஆசையில்லாமல் போனது ஆச்சரியம் தான். அதனால் தான் மரணபயம் என்பதும், அதன் பின்னான விளைவுகளும் மனித சமூகத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. நமது சமூகத்தில் போராட்ட வரலாற்றின் காரணமான உயிரிழப்புகள், பிரிவுகள், அதன் பாதிப்புகள் நம்மில் பெரும்பாலானோரை ஏதோ ஒரு வகை பாதித்துள்ளது என்பது உண்மை. அதிலும் குறிப்பாக முள்ளிவாய்க்கால் அவலத்தின் பின்னான விளைவுகள் எத்தகைய பாதிப்புகள் எதிர்காலத்தில் உண்டாக்கப்போகிறது, என்பது பற்றி சில மாதங்களுக்கு முன்பு எழுதிய ‘முள்ளிவாய்க்கால் சின்றோம்’ என்ற கட்டுரையில் விரிவாக எழுதியிருந்தேன்.

துக்கம், சோகம் என்ற உணர்வுகள் ஒரு மனிதனில் பல்வேறு படிநிலைகளில் பிரதிபலிப்புகளையும் பாதிப்புகளையும் வருவிக்கின்றன. இதன் வெளிப்பாடுகள் எப்போதும், எல்லாருக்கும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை வயது. சம்பவம், விபத்து, நோயின்தன்மை, உறவுமுறை, நேசம் போன்ற பல காரணிகளை அடிப்படையாகக் கொண்டது.

அண்மையில் அமெரிக்காவில் Sandy Hook பள்ளியில் பிஞ்சுக்குழந்தைகள் இயந்திரத் துப்பாக்கி இளைஞனால் வெறித்தனமாகச் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் உலகையே உலுக்கியது. அதன்பின்பு அந்த சிறிய நகரமே சோகத்தில் ஆழ்ந்தது. உறவுகளை ஆறாத் துயரின் ஆழத்திற்கே இட்டுச்சென்றது. இதைப் பற்றி பெரும்பாலான தொலைக்காட்சிகளில் செவ்விகள் வழங்கிய மருத்துவர்கள், மனோதத்துவ நிபுணர்கள், உளவியல் ஆற்றுப் படுத்தல் நிபுணர்கள் - Grief Bereavement Counseling அதாவது துக்கம், சோகம் பேன்ற உணர்ச்சிகளின் போது வழங்கப்படும் ஆற்றுப் படுத்தல் ஆலோசனைகள் போன்ற விடயங்களைக் குறித்து தொடர்ந்து விவாதங்களை நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

உறவுகள் பிரியும் போது பெரும்பாலும் அதன் ஆரம்ப பிரதிபலிப்புகள் உடல்ரீதியாக, உளரீதியாக, உணர்வுரீதியாக, பழக்கவழக்கரீதியாக, ஆத்மீகரீதியாக சமூகரீதியாக இப்படி பல்வேறு நிலைகளில் வெளிப்படும். துக்கம், சோகம் போன்ற உணர்வுகள் நம்மோடு வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் மறையும் போது மட்டுமல்ல தாயின் கருவிலுள்ள பிறவாத சேய்க்கும் தாய்க்கும் இடையான பாசப்பிணைப்பு முதல் தொடங்குகிறது. கருச்சிதைவு, இறந்து பிறத்தல் (Still Birth) போன்ற நிலைகளிலும் கூட தம்பதிகளிடம் இது போன்ற பாதிப்புகள் இருக்கிறது என்பது ஆய்வுகளில் நிருபணமாகியுள்ளது.

உறவுகள் பிரிவின்போது தூக்கம் மற்றும் சோகவுணர்வு மேலோங்கி நிற்கும் நேரங்களில், முதல் வெளிப்பாடு அதிர்ச்சியாகும். ஒருவருக்கு இவ்விதமான அதிர்ச்சி ஏற்படும் போது மூளையிலும், இரத்தக் குழாய்களிலும், சுவாசத் தொகுதியிலும் மனதிலும் பாரிய திடீர் மாற்றங்கள் உண்டாகலாம். தன்னுடைய ஒரே மகன் விபத்துக்குள்ளாகி இறந்த செய்தியைக் கேட்டவுடன் தாயாருக்கு சில நிமிடங்களில் ‘ஸ்றோக்’ என்ற பக்க வாதம் ஏற்பட்டு செயலிழந்து போனதை சேலத்தில் மருத்துவராக பணியாற்றிய போது நேரில் கண்ட அனுபவம் எனக்குண்டு. இதே போல பல அனுபவங்களை என்னால் உதாரணமாகக் குறிப்பிட இயலும். எனவே உடனடியாக அதிர்ச்சியின் விளைவு உடலில் எத்தகை விளைவுகளையும் ஏற்படுத்தலாம். அதே போல மன அதிர்ச்சிக்குள்ளாகி நீண்ட நாளாகியும் மனநிலை பாதிப்புகளிலிருந்து மீளாமல் இருப்பவர்களுமுண்டு.

அடுத்தது, நம்பமுடியாமல் இருத்தல் அல்லது நடைபெற்ற சோக நிகழ்வை ஏற்றுக்கொள்ள மறுத்தல். இது ஒரு கனவாக இருக்கக்கூடாத, வெறும் கற்பனையாக இருக்காதா, அப்படி நடந்திருக்கவே முடியாது என்றெல்லாம் மனதிற்குள் ஒரு கற்பனையான பிரம்மையுணர்வு மேலோங்கி நிற்கும். இந்த உணர்வுகள் சிலருக்கு தொடர்ச்சியாகி மனபிரம்மை நோயாக மாறவாய்ப்புள்ளது.

துக்கத்தின் பின்னான இன்னொரு பிரச்சினை என்னவென்றால் குற்ற உணர்வுகள் மேலோங்கத்தொடங்குதல். ஆம் எனது அக்கறையின்மை, கவனக் குறைவு போன்றவைதான் அவரின் இறப்பிற்கு காரணமாக அமைந்திருக்கலாம் என்கிற குற்றவுணர்வு. கவனக் குறைவினால் அவருக்கு இந்த விபத்து நடந்தது. நான் அப்படிச் செய்ததினால் தான் இந்தச் சம்பவம் நடந்துவிட்டது, சரியான நேரத்தில் ஆலோசனைகள் சொல்லியிருந்தால் இப்படி நடந்திருக்க வாய்ப்பில்லை, நான் வீட்டில் இருந்திருந்தால் இப்படி நடந்திருக்காது. இப்படி எத்தனையோ காரணங்களைச் சொல்லி மனதிற்குள் குமும்பிக் கொள்ளும் குற்றவுணர்வுகள் அடிக்கடி வந்துகொண்டேயிருக்கும். அதனால் தாழ்வு மனப்பான்மை விரக்தி போன்றவை மேலோங்கி ஒருவர் தவறான முடிவுகளை எடுக்க வழிவகுக்கலாம். அது மட்டுமல்ல நடந்த சம்பவத்தினை தொடர்புபடுத்தி மற்றவர்கள் மீது குற்றம் சுமத்தி அதனால் பிறகு பல பிரச்சினைகள் எழுவதற்கு வாய்ப்புகளுள்ளது.

உறவுகள் பிரியும் போது உடனடியாக வெளிப்படும் இன்னொரு உணர்வு கோபம். சூழ்நிலைகள் பரபரப்பாக இருப்பதால் பெரும்பாலும் யாரும் இதை அதிகம் வெளிப்படுத்துவதில்லை. ஆனால் உள்ளுக்குள் அதாவது உள்ளத்திற்குள் வைத்து அடக்கிக் கொண்டிருப்பார்கள். உதாரணமாக இவ்வாறனான கோபம் பல பரிமாணங்களில் வியாபிக்கும். முதலாவது இறந்தவர் மீது, ஆம் தன்னைப்பற்றி அவர் அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை, தன்னுடைய நோயைப்பற்றி கவலைப்படவில்லை, சரியாக மருந்துகள் சிகிச்சைகள் எடுத்துக் கொள்வதில்லை அதனால் தான் இப்படி ஆகிவிட்டது. அல்லது நண்பர்களுடன் சேர்ந்து குடியும் கும்மாளமுமாக இருந்தார் அதனால் தான் கடைசியில் இது நடந்தேறிவிட்டது. வீட்டிலே எப்போதும் சாப்பிடுவதில்லை எப்போதும் கடைகளில் கண்டதையும் சாப்பிடுவதால் தான் கடைசியில் மாரடைப்பு வந்துவிட்டது. இப்படி பாதிப்புக் குள்ளானவர் மீது கோபப்படுவது ஒருவகை.

இரண்டாவது குறிப்பிட்ட சம்பவத்திற்கு நேரடியாக யார் காரணமாக இருந்தார்களோ அவர்கள் மீது அதாவது விபத்திற்கு காரணமாக இருந்தவர்கள், தற்கொலை அல்லது கொலைக்கு காரணமாக இருந்தவர்கள், இவ்வாறாக நேரடியாக அல்லது மறைமுகமாக அந்த குறிப்பிட்ட மரணத்திற்கு காரணமாக இருந்தவர்கள் என்று கருதப்படுபவர்கள் மீது அல்லது சந்தேகப்படுகின்ற வகையில் மனதில் எதையோ நினைத்து இந்த நபர்கள் தான் காரணம் என்று ஊகங்களின் அடிப்படையில் தீர்மானித்து கோபப்படுவது ஒரு வகை.

மூன்றாவது வகை பொதுவாகவே மருத்துவர்கள், மருத்துவமனைப் பணியாளர்கள், அவசர உதவி பணியாளர்கள், அதிகாரிகளின் அக்கறையின்மை இப்படி ஒரு நீண்டபட்டியலில் சிலர் மீது குற்றச்சாட்டுகளை வைத்து கோபப்படுவது. நோயை சரியாக முதலே கண்டு பிடித்து சிகிச்சை செய்திருந்தால் காப்பாற்றியிருக்கலாம் அல்லது விபத்து நடந்தும் அவசர உதவிப் பணியாளர்களின் தாமதத்தினால் தான் இப்படி ஆகிவிட்டது. உதாரணமாக அமெரிக்க பள்ளிக்கூட துப்பாக்கிச் சூடு சம்பவத்தில், ஒரு பள்ளி ஆசிரியையின் மகனிடம் எப்படி இராணுவத்தினர் பயன்படுத்தும் அதிநவீன துப்பாக்கிகள் வந்தது. அதற்கு உரிமம் வழங்கியவர்கள் யார். மனநிலை





போல் யோசேப்
ஹோமியோ மருத்துவ நிபுணர்

பாதிக்கப்பட்ட அவன் ஏன் சிகிச்சை எடுத்துக் கொள்ளவில்லை. இப்படி நூற்றுக்கணக்கான கேள்விகள் விடைதெரியாத புதிர்கள், காரணமானவர்கள் பலர் மீது நமக்கே கோபம் வருகிறது.

நான்காவது கடவுள் மீது கோபம் ஏன் இப்படி சோதிக்கிறார், கடவுளுக்கு கண்ணே இல்லையா, ஆலயங்களுக்கு தவறாது செல்கிறோம், தானதருமங்கள் செய்கிறோம், விரதமிருக்கிறோம், எல்லாக் கடவுளையும் எப்போதும் கும்பிடுகிறோம், இப்படியிருக்க பிறகு ஏன் இந்த சோதனைகள். என்று கோபப்படுகிறோம்.

அடுத்த கோபம் யார் மீதென்றால் யாரை எதிரிகள் என்று கருதுகிறோமோ அவர்கள் மீது, அவர்களின் சாபம் தான் இதற்கு காரணம். அவர்கள் தான் ஏதோ செய்வினை சூனியம் செய்துவிட்டார்கள் போலும் அதனால் தான் இப்படி திடீர் மரணம் ஏற்பட்டது என்று பலர் பேசக் கேள்விப்பட்டிருப்பீர்கள். இன்னொரு விடயத்தையும் குறிப்பிட்டாக வேண்டும். சிலர் தங்களின் மூதாதையர் மீது பழி சுமத்துவார்கள். அவர்களின் பாவங்கள், சாபங்கள் தான் காரணம் அல்லது முன் ஜென்மபலன் என்றெல்லாம் உறவுகளின் பிரிவுக்குப் பின்பு கோபம் என்பது பல்வேறு பரிமாணங்களை எடுக்கிறது.

மேலும் உள்ளத்தின் பிரதிபலிப்புகளாக ஏமாற்றம், விரக்தி, எதிர்காலம் குறித்த பயம், ஏக்கம் வாழ்க்கையில் வெறுப்பு, நம்பிக்கையின்மை, கனவுகள், தற்கொலை எண்ணம், தீர்மானங்களை எடுப்பதில் தடுமாற்றம், தனிமையுணர்வு, பாதுகாப்பற்றதன்மை போன்ற மனச்சோர்வு, மன அழுத்த நோய்க்கான குணங்குறிகளும் தோன்றத் தொடங்கிவிடும். அதனைத் தொடர்ந்து உடலின் பிரதிபலிப்புகளாக தூக்கமின்மை, பசியின்மை, தலையிடி, அடிக்கடி பெருமூச்சுவிடுதல், உடலின் சில பகுதிகளில் வலிகள் தோன்றுதல், இதயப்படபடப்பு, தலைசுற்றல் மயக்கம், வாந்தி வருவது போன்ற உணர்வு, கழுத்துமற்றும் தலையின் பிடரிப் பகுதியிலுள்ள தசைகளில் இறுக்கம் - வலி இப்படி பலவிதமான குணங்குறிகள் புதிதாக தோன்றலாம். இவை சிலகாலம் தொடரும் போது நாட்பட்ட நிலையில் பிறகு மனம் சார்ந்த உடல் நோய்களாக மாற வாய்ப்புள்ளது (Psychosomatic Disorders). இது ஆளுக்காள், சம்பவங்களின் தன்மை, உறவு நிலை, உள்வாங்கும் தன்மையும் அதன் பிரதிபலிப்பும் போன்றவற்றின் அடிப்படையில் மாரடைப்பு, ஸ்றோக் (பக்கவாதம்) போன்ற திடீர் உடலியல் மாற்றங்களும் உருவாகலாம்.

### துன்பியல் ஆற்றுப்படுத்தல்:

இதுவரை உறவுகள் பிரியும் போது அதன் உடலியல் உளவியல் தாக்கங்களின் பல்வேறு பரிமாணங்கள் பற்றி விரிவாகப் பார்த்தோம். இனி அவற்றை எவ்வாறு தீர்த்தல், சமநிலையை எற்றாறு பேணுதல் போன்ற விடயங்களை சுருக்கமாக பார்ப்போம்.

சோகத்திலிருந்து மீண்டுவருதல் என்பது சாதாரண இலகுவான விடயமல்ல. துக்கத்தின் உணர்வு நிலைகளில் நீங்கள் எவ்வாறு செயற்படவேண்டும் என்பதை மற்றவர்கள் கட்டுப்படுத்த அனுமதிக்காதீர்கள். ஒருவர் அளவுக்கு அதிகமாக துக்கப்படுகிறார் என்றோ அல்லது துக்கப்படவில்லையென்றோ மற்றவர்கள் நினைக்கலாம். அதை உங்களிடமும் சொல்லலாம். சமய, சமூக, (Social Status) வரம்பு முறைகளை உங்களுக்குள் திணிக்க முயற்சி செய்யலாம். அவை பாதிப்புகளை தான் கொண்டுவரும். உங்களின் உள்ளார்ந்த உணர்வு உங்கள் பாணியில் வெளிப்படுத்த உங்களுக்கு உரிமையுண்டு.

தொடர்தல் 36ம் பக்கம்



புதிய, பாவித்த HONDA வாகனங்களுக்கு நாடுங்கள்!
2240 MARKHAM ROAD, SCARBOROUGH, ON M1B 2W4 (Markham & Finch)
Certified Used Cars
USED HONDA CARS
2009 Honda Civic 84,495 Km
2008 Honda Civic LX 94,083 Km
2008 Honda Civic 69,352 Km
2008 Honda Civic 91,178 Km
2008 Honda Accord EX-L 44,720 Km
2008 Honda Odyssey 107,450 Km
2008 Honda CR-V EX 64,073 Km
2008 Honda CR-V 72,462 Km
Certified Used Vehicles
THE ALL-NEW 2013 ACCORD IS HERE.
AJAC AWARD FOR BEST NEW FAMILY CAR (UNDER $30,000)
LEASE THE ALL-NEW 2013 ACCORD LX FROM
$258@2.99% APR
HOLIDAY BONUS $1000
ON 2012 CIVIC & CR-V MODELS
BRING HOME VALUE
$97@1.99% APR
BRING HOME SAFETY
$288@0.99% APR
OR GET UP TO $5000
PLUS $500 HONDA DOLLARS
IN CUSTOMER CASH INCENTIVES ON OTHER SELECT 2012 MODELS
DEALS TOO GOOD TO MISS!
Formula Honda
Where You're treated like family
Office: 416-754-4555
www.formulahonda.com
ராஜா தர்மலிங்கம்
Direct: 647-833-4998
rajah@formulahonda.com
Shan சர்வானந்தன்
Direct: 416-720-1184
atheesans@formulahonda.com

# ROGERS

## தரமான சேவைகள் ஒப்பற்ற விலையில்

**ROGERS BASIC Digital Cable**
$32.48 /mo. for 6 months
Regular price $45.97



**ROGERS HI-SPEED LITE INTERNET**
$32.99 /mo. for 6 months
Regular price $46.99
Modem included



**ROGERS HOME PHONE**
*Unlimited long Distance*
(With 2 Calling Futures)



$23.91 /mo. for 6 months
* (With 2 Calling Features)
(1 Year)

6 Months FREE
(1Year term only)

**New Home Offer**
- Home phone
- Hi-Speed Internet
- Cable VIP TV pacage

*Free calls to Sri lanka, India, Europ Australia and Whole World!*

புதிய பொதிகள் தமிழ் பிறெஸ்டீஜ் பொதி
$46.46' mo. VIJAY SUN TV JAYA TV tvi KTV Tamil One

புதிய பொதிகள் தமிழ் இலீட் பொதி
$30.30' mo. VIJAY SUN TV JAYA TV KTV



**Daniel Ravindran**
Advisor, Rogers Cable Communications Inc.
416-817-7977 / 1-866-360-7977
டானியல் ரவீந்திரன்
நம் மக்கள் மத்தியில் 12 வருடங்களுக்கு
மேலான சிறந்த சேவை!
daniel.ravindran@rci.rogers.com

ROGERS™


அடுத்த தலைமுறையின்
பாதுகாப்பிற்கான முதற்படி...
கா ப் பு று தி
• Life Insurance • Travel Insurance
• Non-Medical Insurance • Critical Illness Insurance
• Mortgage Insurance • Disability Insurance
• RESP • RRSP
INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.
Assumption Life
Unity Life of Canada
RBC Insurance
Canada Life
BMO Insurance
Kuna Nagalingam
Insurance Agnet
Dir: 416-402-4545
Royal Brokers Corp.
Insurance & Investments Solutions
Office: 416-298-4722, Fax: 416-298-4664
80 Nashdene Ave. , Unit 25&26, Toronto, ON M1V 5E4


#1
RE/MAX
Buy or Sell
Call me first!!!
416-567-7675
Experienced full time Realtor
Honest & Hardworking
Team of Realtors work for you
Worry free listing
Satisfaction guaranteed
RE/MAX
100 Percent Club
Always working for you!!!
Shan Thayaparan
Sales Representative
Re/Max Vision
Realty Inc. Brokerage
www.shan123.com
416-321-2228
Not intend to solicit property currently listed for sale or individuals under contract
Connect through

# LONG-TIME SCARBOROUGH RESIDENT AND HOSPITAL PATIENT WINS GRAND PRIZE IN CAR RAFFLE




Seelal Binda, the winner of this year's Win A Car Charity Raffle at centre with Guy Bonnell, Vice President, Community Development, TSH on left and Rob Gardiner, Sales Manager, Scarborough Toyota on right.



Seelal Binda, the winner of this year's Win A Car Charity Raffle at centre, Gerry Macdonald, General Manager, Scarboro Toyota on right and Rob Gardiner, Sales Manager, Scarborough Toyota on left.



Benafsha Saleh, Product Advisor at Scarborough Toyota, presented the keys to a brand new 2013 Toyota Corolla to Seelal Binda, the winner of this year's Win A Car Charity Raffle. Proceeds from the annual event supported the Cancer Care Program at The Scarborough Hospital.

Seelal Binda's plans to buy a new car were pleasantly intercepted when he received a call from The Scarborough Hospital Foundation informing him that he just won a 2013 Toyota Corolla. The brand new car, donated by Scarborough Toyota, was the grand prize in this year's Win A Car Charity Raffle hosted by the Foundation to raise funds for The Scarborough Hospital.

"We've used the hospital since we came to Scarborough and we've always been treated well," said Mr. Binda, who immigrated to Canada from Trinidad with his family in 1970. "Whatever I can afford to give back, I give."

Mr. Binda has been receiving ongoing treatment at the hospital's Birchmount campus for about two years now, but has a long history with both sites including the births of his two children at the General campus.

He also has a history with Corollas, and after owning one for 15 years with great service, was thrilled to get another – especially for $50, the cost of three raffle tickets. The 2013 Toyota Corolla was presented to Mr. Binda on January 18.

In total, more than 3,200 tickets were sold in the 2012 raffle. Proceeds benefitted the hospital's Cancer Care program which provides excellent care to a high volume of patients and maintains a low wait time for treatment. The program's vision is to create an integrated Cancer Care program to streamline services, increase efficiency and improve access for Scarborough residents.

There were 13 prizes in this year's raffle, including Mr. Binda's new car. Other prizes included two cash prizes of $2,500 and 10 Apple iPads.

"We want to congratulate all the winners in this year's raffle," said Michael Mazza, President of The Scarborough Hospital Foundation. "We also wish to thank each and every person who purchased a raffle ticket or donated their time to support this event. It is through their remarkable kindness that we are able to raise funds for the hospital's programs and services, and enhance healthcare in our community."



# உங்களது வீட்டு பரிசோதனையில் சித்தி அடைவதற்கு அறிந்திருக்க வேண்டிவை

மகேன் சிங்கராஜா
- வீடு விற்பனைப் பிரதிநிதி -



### பழுதடைந்துள்ள குழாய்த் தொகுதி:

உங்கள் வதிவிடத்தில் உள்ள குழாய்களின் தொகுதியில் பழுது ஏற்பட்டிருந்தால் குழாய் களில் இருந்து நீர் கசிவு ஏற்படுதல் குழாய்களில் அடைப்பு ஏற்படுதல் ஆகிய இருவழிகளில் அது வெளிக்காட்டலாம். மேலெழுந்த வாரியாக பார்வையிடுவதன் மூலம் நீர்க்கசிவை கண்டு பிடிக்கலாம். அதேநேரம் ஓர் வீட்டுப் பரிசோதகர் உங்களது வீட்டின் ஆக உயரத்தில் உள்ள குளியலறையின் சகல வடி குழாய்களையும் (Faucets) திறந்து விடுவதன் மூலம் நீரின் அழுத்தத்தை அள விட முடியும். நீர் ஓடிக் கொண்டிருக்கும் சத்தத்தை கேட்கக்கூடியதாக இருந்தால், குழாய்களின் அளவு சிறியவை என அறிய முடியும். மூடிய வடி குழாய்களை மீண்டும் திறக்கும் போது வெளியேறுகின்ற தண்ணீர் அசுத்தமாக காணப்பட்டால் குழாய்களில் கறள் தன்மை ஏற்பட்டுள்ளதை அறியலாம். இதன் காரணமாக குடிநீரின் தரம் கடுமையாகப் பாதிக்கப்படலாம்.

### ஈரலிப்பான நிலக்கீழ் வதிவிடப் பகுதி:

இந்த விதமான சூழ்நிலையில் ஓர் வீட்டுப் பரிசோதகர், தரைப்பகுதியில் இருந்து சில அங்குலங்கள் உயரத்தில் வெண்ணிறமான கனிப்பொருள் படிவு உள்ளதா எனவும், நிலக்கீழ் வதிவிடப் பகுதியின் தரையில் பொருட்களை பாதுகாப்பாக சேமித்துவைக்க முடியுமா எனவும் பரிசோதிப்பார். ஈரப்பதனுடைய தன்மை நிலவுமாயின் அதன் விளைவாக பூஞ்சண மணம் ஏற்படுவது தவிர்க்க முடியாதது.

உங்களது வீட்டின் நிகரப் பெறுமதி விலை என்னவாக இருக்கும் என்பதன் அடிப்படையில் நீங்கள் பொருத்தமான திருத்த வேலைகளை மேற்கொண்டு ஈரப்பதனை அகற்ற முடியும்.

### தேவைக்கு குறைவான மின்சார கம்பிகள் இணைப்பு:

உங்களது வீட்டில் குறைந்தது 100 அம்பியர்கள் அளவிலான சேவைகள் இருக்க வேண்டும். அது தெளிவாக அடையாளமிடப் பட்டிருக்க வேண்டும். மின்சார கம்பிகள் பித்தளை அல்லது அலுமினியத்தினால் ஆக்கப்பட்டிருக்க வேண்டும். உங்கள் வீட்டில் உள்ள மின் இயக்க பாதைகள் தேவைக்கு குறைவாக உள்ளதா என்றும் தீ ஏற்படும் வாய்ப்பு உண்டா என்றும் கணிப்பீடு செய்வதற்காக வீட்டுப் பரிசோதகர் உங்கள் வதிவிடத்தில் உள்ள, மின்சார விநியோக இணைப்பு சொருகிகளை (Electrical Plugs) அவதானிப்பார்.

### வெப்பமாக்கும் தொகுதிகளும் குளிரூட்டும் தொகுதிகளும்:

ஓர் வீட்டில் வெப்பமேற்றுதல் குறைவாக இருப்பதற்கு, தேவைக்குக் குறைவான குளிர் தடுப்பு, வெப்பத்தை ஏற்படுத்தும் தொகுதி நன்கு செயல்படாத நிலை, ஆகிய இரண்டுமே முக்கிய காரணமாகும்.

உங்களது உலை அடுப்பு (Furnace) அதன் சராசரி வாழ்க்கைக் காலமான 15-25 வருடங்களுக்கு மேற்பட்டதா என வீட்டுப் பரிசோதகர், அதனைப் பரிசோதித்து அதன் செயற்படும் திறனை உறுதிப்படுத்துவார்.

உங்கள் வீட்டில் வாயுவை வலிந்து செலுத்தும் அமைப்பு முறை (Forced air Gas System) இருக்குமானால் உங்கள் வீட்டில் உள்ள வெப்ப பரிமாற்று (Heat Exchanger) நன்கு பரிசோதிக்கப்படும். அவை பாதிப்படைந்திருந்தால் நீங்கள் ஓர் புதிய வெப்ப பரிமாற்றியை பொருத்த வேண்டும்.

### கூரையில் ஏற்படும் பிரச்சினைகள்:

புயற்காற்று காரணமாக பொறிமுறைக்குரிய பாதிப்பு அல்லது Asphalt ஒட்டுக் கூரைகள் பழுதடைதல் போன்றவை ஏற்படலாம். அதன் காரணமாக நீர் ஒழுக்குகள் ஏற்படலாம். பீலிகளில் ஒழுக்கு ஏற்படுவதன் மூலம் வெளிப்புற சுவர்களினூடாக தண்ணீர் கீழே வடிவதனால் வீட்டின் வெளிப்புறத்தில் ஏற்படும் இந்த பிரச்சினை ஓர் பாரிய உட்புறப் பிரச்சினையாக மாறுகிறது.

### ஈரப்பதனுடைய முகட்டு இடைவெளிகள்:

- நிலக்கீழ் வதிவிட பகுதியில் ஏற்படும் ஈரப்பதனுடைய தன்மை.
- காற்றோட்டம் ஏற்படுத்துவதில் உள்ள பிரச்சினைகள்.

மின்சார / வெப்ப தடை ஏற்படுத்துவதில் உள்ள பிரச்சினை அல்லது நீராவித் தடுப்புக்கள் என்பவையும் ஒன்றிணைந்து செயற்படுவதனால் வீட்டின் முகட்டுப் பகுதியில் நீர், ஈரலிப்பு பூஞ்சணம் என்பவை ஏற்படலாம். தன் விளைவாக கூரை, வீட்டின் கட்டமைப்பு, கட்டிடப் பொருட்கள் என்பவை அவற்றின் வழமையான பாவனைக் காலத்திற்கு முன்னதாக பழுதடையலாம்.

### மரம் உக்கி போதல்:

கதவுச் சட்டம், கண்ணாடிச் சட்டம், மரத்தினால் ஆன வேலிகள் ஆகியவற்றில் இது ஏற்படுகிறது. இவைகள் சமீபத்தில் வர்ணம் தீட்டப்பட்டிருந்தால் வீட்டுப் பரிசோதகர் அதனை நுணுக்கமாக ஆராய முடியும்.


### செங்கற்கள் பதிப்பு:

செங்கற்களை மீளப் பதித்தல் என்பது செலவு மிக்க திருத்த வேலை. ஆனால் இதைக் கவனிக்காமல் விட்டால் இதன் காரணமாக வீட்டினுள் தண்ணீர் உட்புகுந்து ஈரப்பதன் ஏற்படலாம். இதனால் செங்கற்கள் உடைந்து விழுந்து புகைபோக்கி அடைப்புக்கு உள்ளாகலாம் அல்லது புகைபோக்கி உடைந்து வீட்டின் கூரையின் மீது விழலாம்.

### பாதுகாப்பற்ற மின் இயக்க பாதை:

வழமையாக சட்டப்படி அனுமதிக்கப்படுகின்ற அளவை விட அதிகமான அம்பியர்கள் அளவிலான மின்சாரம் பயன்படுத்தப்பட்டால் தீவிபத்து ஏற்படும் அபாயம் உண்டு. வீடுகளில் பொதுவாக 15 அம்பியர்கள் அளவு-

*தொடர்தல் 30ம் பக்கம்*



# Computek College

BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY

Registered as a private career college under the Private Career Colleges Act, 2005.



Are you unemployed, or underemployed?
Are you receiving or received EI in the past 4 years?
Re-entering the workforce after Maternity or Parental leave?
Interested in training for a new career in Ontario?

*Second Career provides laid-off workers with:*
- *Skills training to help them find jobs in high-demand occupations in Ontario*

*Second Career provides up to $28,000 for:*
- *Tuition, Books*
- *Other instruction costs such as manuals or workbooks*
- *Transportation*
- *A basic living allowance*

(Source: http://www.tcu.gov.on.ca/eng/secondcareer/)

SECOND CAREER
& CLIENTS WELCOME

## Diploma Courses

Community Services Worker
(Scarborough Campus)
Accounting & Payroll Admin
(Scarborough Campus)
Early Childcare Asst (ECA)
(Markham & Scarborough Campus)
Personal Support Worker (PSW)
(Markham & Toronto Campus)
Medical Office Administration
Computerized Accounting
Business Administration
Network Engineering

## Certificate Courses

Bank Teller Course
Food Service Worker, Food Handler Course
Canadian Securities Course
Web Development, Software Testing
A+( Computer Assembly & Repair)
Medical Billing
AccPac, Simply Accounting, QuickBooks
MS Office

## Food Handler Course

*Next batch:*
**Saturday Dec 15th , 9am - 3pm**

## Bank Teller Course

*Next batch:*
**Wednesday Jan 23rd , 6 pm - 9pm**

## Early Childcare Assistant (ECA)

*Next batch:*
**Monday Jan 7th**

CALL TO REGISTER

**416.321.9911**

WWW.COMPUTEK.EDU

Financial assistance may be available to those who qualify

**Markham**
Markham / Steeles
905.471.3344

**Scarborough**
Kennedy / Sheppard
416.321.9911

**Toronto**
Kennedy / Eglinton
416.285.9941

# ஆன்மீகம்

ஒரு தனி மனிதனின் சடத்துவமற்ற சாராம்சம் அவனது ஆன்மா என்றழைக்கப்படும். ஆன்மீகம் என்பது அவனது ஆன்மாவைப்பற்றியதும், அதோடு தொடர்புடையதும், அதனால் ஆனதும் அல்லது அதனைப் பாதிக்கின்றதுமான எல்லா விடையங்களுமாகும்.

சமயங்கள், ஆன்மீகம் எல்லாம் நம்பிக்கையின் பாற்பட்ட ஐதீகங்கள். இவற்றைப்பற்றிய கட்டுரைகளை எழுதும் போது அவரவர்க்குரிய அனுபவங்கள், கற்றறிந்தவை, கண்ணோட்டம், போன்றவை செல்வாக்குச் செலுத்தும். எனவே இக்கட்டுரையில் வரும் கருத்துக்கள் சில வாசகர்களின் நம்பிக்கைகளுக்கு ஒவ்வாததாகவும் அமையலாம்.

ஆன்மீகத்திற்கும் சமயங்களுக்கும் என்ன தொடர்பு? சமயங்கள் மனித வாழ்க்கையை நல்வழிப்படுத்த உருவானவை என்று கூறப்படும். இந்த வகையில் சில சமயங்கள் ஆன்மாவை அழிவில்லாத ஒன்று என நம்புகின்றன. இந்த நம்பிக்கையின் அடிப்படையில் ஆன்மா பல பிறப்புக்களை எடுக்கும் எனக் கூறுகின்றன. இந்த அழிவில்லாத ஆன்மா முடிவிலியாக மறுபிறப்புக்களை எடுத்துக் கொண்டே இருப்பதில்லை என்றும் பல மறுபிறப்புக்களுக்குப் பின் ஒன்றில் மோட்சமடையும் அல்லது நரகத்திற்குள் தள்ளப்படும் என்கின்றன. மோட்சம் என்பது எல்லாம் வல்ல இறைவனுடன் இரண்டறக்கலத்தல் என்பர். இது நிர்வாண நிலை என்று கூறப்படும். இதுவே ஆன்மாவின் இறுதி இலக்காக இருக்கவேண்டும் என்று சமயகுரவர்கள், ஞானிகள், ரிசிகள் கூறிச் சென்றனர். இதனால் சமய நம்பிக்கை உள்ளவர்கள் எல்லோரும் இதையே விரும்புவர். இதை ஆன்ம ஈடேற்றத்திற்கான நடவடிக்கைகள் மூலமே சாத்தியமாக்கலாம் என்பது ஐதிகம்.

சமயங்களைப் பொறுத்தமட்டில் அவை இரு கூறுகளைக் கொண்டவை. ஒன்று சமய மெஞ்ஞானம் மற்றையது சமய அனுட்டானங்கள், வழிமுறைகள். சமய மெஞ்ஞானிகள் கடவுளை எண்ணக்கரு நிலையில் வழிபட மற்றையவர்கள் அனுட்டாண, சடங்குமுறைகளில் குறியீடுகளை வைத்து வழிபடுகின்றனர், விக்கிரகங்களை வைத்து வழிபடுவதற்கு பெரும்பாலும் கோயில்களை ஆக்கியுள்ளனர்.

இவை ஒரு புறமிருக்க சில சமய மெஞ்ஞானிகள் கடவுளை ‘அன்பே கடவுள்’ என்று கூறிச்சென்றதுடன் ‘மக்கள் சேவையே மகேசன் சேவை’ என்றும் சொல்லிப்போந்தனர். இந்தக் கருத்துக்களை வலியுறுத்துவதாகவே இராம கிருஷ்ண பரமஹம்சர் கூறினார். ‘உலகிலுள்ள ஜீவராசிகள் எல்லாம் கடவுளின் அவதாரங்களே. எனவே மனிதவர்க்கத்திற்கான சேவை மூலம் கடவுளுக்குச் சேவை செய்யலாம்’

மேற்கூறிய வித்தியாசமான கருத்துக்கள் ஒரு புறமிருக்க, ஆன்ம ஈடேற்றத்திற்காக இருக்கும் மனிதப்பிறவியை நன்றாகப் பயன்படுத்துவதே புத்திசாலித்தனமானதும், நிதர்சனமுமாகும். ஏனெனில் தமிழ் மூதாட்டியார் ஔவையார் கூறியதுபோல் ‘அரிது, அரிது மானிடராதல் அரிது’.

‘நிகழ்காலத்தில் வாழ்’ என்ற கூற்றிற்கிணங்க நிதர்சனமான மனிதப் பிறவியிலேயெ ஆன்ம ஈடேற்றத்திற்கான பெரும் பகுதியான நடவடிக்கைகளை செய்யவேண்டும். இதனை எவ்வாறு நிறைவேற்றலாம்? தனிமனிதனின் வாழ்நாளை இயலுமானவரை நீடித்து அந்தக் காலத்தில் திட்டமிட்டு செய்ய வேண்டிய அனைத்து ஈடேற்ற நடவடிக்கைகளையும் செய்தல். தனிமனிதனின் வாழ்நாளை எவ்வாறு இயலுமான வரை நீடிக்கலாம்? மனிதர்களின் ஆரோக்கிய வாழ்விற்கான விதிமுறைகளைப் பின்பற்றி வாழவேண்டும். இப்பொழுது ஆரோக்கிய வாழ்வின் விதிமுறைகளைச் சற்றுக் கவனிப்போம். சமநிலை உணவு, உடற்பயிற்சி, தியானம், நஞ்சகற்றல், மனவழுத்தத்திலிருந்து விடுபடச் செய்யவேண்டிய செயல்கள், யோகாசனப்பயிற்சி வைத்திய விழிப்புணர்வு போன்றவை.

ஒருவருக்குத் தேவையான உணவு அவரது வயது அவர் செய்யும் வேலை, அவரது உடல்நிலை போன்றவற்றில் தங்கியுள்ளது. எனவே இவற்றைக் கருத்திற்கொண்டு அவரது தேவைகளை மட்டுமட்டாகப் பூர்த்தி செய்யும் அளவுகளில் மட்டும் உணவுகளை உட்கொள்ளவேண்டும். அவரது தேவைக்குக் குறைவானதாகவோ அல்லது அதிகமாகவோ எடுத்தல் அவரது ஆரோக்கியத்தைக் கெடுத்துவிடும்.

உடற்பயிற்சிகள் ஒருவரது மேலதிக கலோரியை (எடைச்சத்தியை) எரித்துவிடுவதுடன், சுவாச மற்றும் குருதிச் சுற்றோட்டத் தொழிற்பாடுகளை அதிகரித்தல், தசைகளை இளக்கி நீட்டல் போன்ற இன்னோரன்ன நன்மைகளை ஏற்படுத்தும். இவ்வாறே சடத்துவ கூற்றின் அடிப்படைகளுக்குப் புத்துயிர் ஊட்டும்.

தியானம் முனைப்பாக்கல், அல்லது ஒரு வழிப்படுத்தலை ஒரு விடையம் சார்பாக விருத்தி செய்ய உதவும். இவ்வாறே இது நேர்த்தியான தொழிற்பாடுகளைச் செய்ய உதவுவதுடன் ஒருவரின் உலோகாயுத வாழ்வின் நிலைநிறுத்தலை அதிகரிக்கும்.

இன்றைய நவீன உலகில், மனிதன் அவனது சூழல்சார் நச்சுப்பொருட்களுக்கு தன்னை வெளிக்காட்டுகின்றான். இவ்வாறான நச்சுப் பொருட்களை தனது உடலிலிருந்து அகற்ற போதிய அளவு நீரருந்தல், நார்ச்சத்து அதிகமுள்ள உணவுகளை உண்ணல், மற்றும் மூக்குக் குளாய்க்கழுவல் போன்றவற்றைச் செய்யவேண்டும்.

நவீன வாழ்க்கை ஒருவரின் வாழ்வில் ஏதோ ஒரு கட்டத்தில் மனவழுத்தத்தை ஏற்படுத்தலாம். மனவழுத்தத்திலிருந்து விடுதலை பெற சமூகவுறவாடல், திட்டமிட்டவகையில் தொழிற்பாடுகளில் தங்களை ஈடுபடுத்தல் மற்றும் ஆலயங்களுக்கச் சென்று சமயவழிபாடு



**கந்தையா பரநிருபசிங்கம்**

களில் ஈடுபடல் போன்றவற்றைச் செய்யலாம்.

மேலும் நவீன வாழக்கைமுறையில் உள, உடல் நலம்சார்பான பலவைத்தியப் பிரச்சினைகள் மலிந்து கிடக்கின்றன. இவற்றைப் பற்றிய விழிப்புணர்வும், ஜாக்கிரதையும் ஒவ்வொருவரும் கொண்டிருத்தல் நன்மை பயக்கும். இதனால் வைத்திய நிலைமைகளை நேரகாலத்துடன் இனம்கண்டு அவற்றிற்குப் பரிகாரம்தேடி வாழ்நாளை நீட்டிக்கொள்ளலாம்.

சகமனிதர்களிடையே ஒருவரின் ஆன்மாவின் ஆளுமையே நிலைந்துநிற்கும். எவனொருவன் தனது ஆளுமையை ஈடேற்றிக் கொள்கிறானோ அவன் தனது சக மனிதர்களிடையே தனது ஆன்மாவை வாழவிடுவதற்கும், ஞாபகப்படுத்திக் கொள்வதற்கும் ஏதுவாகின்றான். ஆளுமை என்பது ஒருவரின் பௌதிக (உடல்) அமைப்பு, கல்வி அடைவுகள் மற்றும் மனவெழுச்சி அமைப்பு ஆகியவற்றைக் குறிக்கும்.

எவ்வாறு ஒருவருடைய பௌதிக அமைப்பு ஒருவருடைய ஆளுமையைச் செல்வாக்குச் செலுத்துகின்றது? உயரமான சுமாரான உடற்பருமன் கொண்ட ஒருவர் குட்டையான, அதிக பருமனுடையவரை விட அவர்களது சக மக்களால் ஈர்க்கப்படுகின்றார். மேலும் எவ்வாறு ஒருவர் தன்னை மற்றவர்களுக்கு முகப்படுத்திக் கொள்கின்றாரோ அதுவும் அவரது ஆளுமையைத் தூக்கிவிடும். எனவே ஒருவரின் பௌதிக அமைப்பு அவரது ஆளுமைக்கு வலுச்சேர்க்கும் என்பதைக் குறைத்து மதிப்பிட முடியாது. மறுபுறுத்தில் ஒருவரின்

தொடர்தல் 30ம் பக்கம்


**........... வாங்க வீடு விற்க ...........**

**$ 489,900**
96 Pogonia Street



3 Bed RM - 3 Wash RM
Approx. 8 yrs new
Scarborough
Staines & Steeles

**$ 499,900**
21 Thistle Avenue




3 Bed RM - 3 Wash RM
Approx. 6 yrs new
Richmond Hill
Yonge & Jefferson

**$ 125,000**
1950 Kennedy Road



3 Bed RM Condo
Two Units Available
Maintenance $493.00
Kennedy & Hwy 401

குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ் பெற்றுக்கொள்ள

MORTGAGE ALLIANCE
2005 Sheppard Ave. E. # 200
Toronto, ON M2J 5B4
Bus-416 499 5454
Fax-416 499 8366
Lic: # 10530



Kathir Kathirgamanathan, B.A.
Real Estate & Mortgage Broker
*Multi Award Winner*

Call me any time
416 230 6462
or e mail: kathirhomelife@gmail.com

HOMELIFE
Future / Realty Inc.
Brokerage
*Independently owned and operated*
Bus: 905 201 9977
Fax: 905 201 9229
*Higher Standards Agents! - Higher Results!!*
HOMELIFE HIGHER STANDARDS

# பணச் சேமிப்பும் சில பழக்கங்களும்

சமீபத்தில் பல் மருத்துவரிடம் சென்று பரிசோதித்துக் கொண்டபோது, எனது பல்லில் குழி இருப்பதை அறிந்தேன். அதை நிரப்ப வேண்டிய அவசியம் இருப்பதையும் அறிந்து கொண்டேன். அதற்கான செலவில் ஒரு பகுதி மட்டுமே என்னுடைய காப்பீட்டுப் பொலிசி மூலம் கிடைக்கும். எனவே, எனது கையில் இருந்து 270 டாலர்களை நான் செலவிட வேண்டியிருக்கும். பல்லில் இருக்கும் குழியை அடைத்துக் கொள்ள பணம் செலவு செய்வது மகிழ்ச்சி அடையக் கூடிய விஷயம் அல்ல. 270 டாலர்கள் என்பது அதிகமான தொகை. பல் சிகிச்சைக்காக அவ்வளவு தொகையைத் தருவதற்கு நான் விரும்ப வில்லை. ஒழுங்காக பல் துலக்கி இருந்தால் இவ்வளவு பெரிய தொகையை பல் மருத்துவத்துக்குச் செலவு செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காதே என்று நினைத்துக் கொண்டு மருத்துவரிடம் இருந்து திரும்பி வந்தபோது, இதேபோல தினசரி வழக்கத்தில் மிகக் குறைந்த செலவில் அல்லது எந்தச் செலவும் இல்லாத சில பழக்கங்களைத் தொடர்ந்து கடைபிடித்தால் பணத்தை சேமிக்க முடியுமே என்று உணர்ந்தேன்.

### பல் துலக்குதல் மற்றும் மெருகூட்டுதல்:

இதுதான் இப்போதைக்கு என்னுடைய முதல் முன்னுரிமையைப் பெறும் விஷயம். ஏனென்றால் இதுதான் இப்போது எனக்கு செலவு வைத்துள்ளது. பல் துலக்குவது, பற்களுக்கு இடையில் உள்ள இடைவெளியை நன்றாக சுத்தம் செய்வது ஆகியவற்றைத் தொடர்ந்து செய்து வந்தால் பற்களில் குழி விழுவதையும், பற்களின் வேர்ப் பகுதி சேதம் அடைவதையும் தடுக்க முடியும். நீங்கள் காப்பீடு செய்திருந்தாலும், செய்யாவிட்டாலும் அதை சரி செய்வதற்கு நிறைய செலவாகும். ஆனால், முன்னெச்சரிக்கையாக இருந்து இவற்றைத் தவிர்ப்பது விலைமதிப்பு இல்லாதது.

### தொடர்ந்து உடற்பயிற்சி:

தொடர்ந்து உடற்பயிற்சி செய்யும்போது உங்கள் உடலின் நோய் எதிர்ப்பு சக்தி வலுவடைகிறது. தசைகளும், மூட்டுகளும் வலுவடைகின்றன. அதனால் உடல்நலக் குறைவும், காயங்களும் வராமல் தடுக்கப் படும். அதனால் மருத்துவரிடம் செல்ல வேண்டிய அவசியம் குறைந்துவிடும். மருந்துகள் வாங்க நிறைய செலவிட வேண்டியிருக்காது. வேலை நேரத்தை மருத்துவத்துக்காக செலவிட வேண்டிய தேவையும்வராது.

### நீர் குடியுங்கள்

தண்ணீர் குடிப்பதால் உடலின் பாகங்கள் தூய்மை செய்யப்படுகின்றன. உடலில் உள்ள நோய்க்கிருமிகளை வெளியே எடுத்துச் செல்ல இது உதவுகிறது. தோலின் ஈரத்தன்மையைப் பாதுகாத்து, உடலின் வெப்ப நிலையை சீராக வைத்துக் கொள்ளவும் இது உதவுகிறது. அதனால் மேலே சொன்னவாறு மருத்துவச் செலவுகளையும் சேமிக்கிறது.





### கைகளைக் கழுவுங்கள்:

கைகளைக் கழுவுமாறு உங்கள் தாயார் பல நூறு முறை சொல்லி இருப்பார். ஏனென்றால் அவ்வாறு செய்வது, உடல்நலக் குறைவை உருவாக்கும் கிருமிகளைக் கொன்றுவிடும் என்பது அவருக்கு நன்றாகத் தெரியும். (இதனால் உங்களின் மருத்துவச் செலவும் குறையும்).

### சத்தான உணவை சாப்பிடுங்கள்:

காய்கறிகள், பழங்கள், முழு தானியங்கள், பால் பொருள்கள் போன்ற சத்தான உணவு வகைகளைச் சாப்பிடும் போது நீண்ட நேரத்துக்கு உடலுக்கு சக்தி கிடைக்கும். எனவே, குறைவான உணவு அளவு மட்டுமே போதுமானது. இதனால் உங்கள் உடல் சத்தான எரிபொருளில் (சக்தியில்) இயங்கும். இதனால் உங்கள் வேலைகளை முடிக்க அதிக சக்தி கிடைக்கும்.

### புகைபிடிக்காதீர்கள்:

சிகரெட்டுகள் செலவு வைக்கக் கூடியவை மட்டுமின்றி, உடல்நலனுக்கு மிகவும் கேடு விளைவிப்பவை. ஒரு சிறிய பெட்டி சிகரெட் விலை எட்டு டொலர் விலை என்பதுடன், புகைபிடிப்பதால் பல உடல்நலக் கேடுகள் ஏற்பட்டு மருத்துவரிடம் அடிக்கடி செல்ல வேண்டிய தேவையும் ஏற்படும். உங்களுக்கு மட்டுமல்ல உங்கள் குடும்பத்தாரையும் கான்சர்நோயின் தாக்கத்திற்கு உட்படுத்தவேண்டிவரும்.

### போதிய தூக்கம் தேவை:

போதிய அளவுக்கு தூக்கம் இல்லாமல் போனால், உங்கள் மூளை முழு அளவில் செயல்படாமல் இருக்கும் என்பதால் நீங்கள் தெளிவான முடிவுகளை எடுக்க மாட்டீர்கள். நீங்கள் களைப்பாக இருக்கும்போது நிறைய செலவு செய்யவும், நிறைய சாப்பிடவும் வாய்ப்புகள் இருக்கின்றன.

### உங்கள் பிரச்சினைகளை பேசுங்கள் அல்லது எழுதுங்கள்:

கோபமாக இருக்கும் போதும், வெறுப்புடன் இருக்கும் போதும், மன அழுத்தத்துடன் இருக்கும் போதும் கூட நீங்கள் நிறைய செலவு செய்யும் மற்றும் நிறைய சாப்பிடும் மனநிலை இருக்கும். பிரார்த்தனை செய்வதன் மூலமும், உங்கள் பிரச்னைகளை பற்றி நண்பருடன் பேசுவதன் மூலமும், அல்லது ஒரு குறிப்பு புத்தகத்தில் எழுதுவதன் மூலமும் உங்கள் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள முடியும் - எந்தச் செலவும் இல்லாமலே.

### கைத்துவாலைகளின் மறுபயன்பாடு:

அழுக்குத் துணிகளைத் தனியாக வைத்திருப்பதைப் போல, கைத்துவாலைகளையும் ஒன்றுக்கு மேற்பட்ட முறைகள் பயன்படுத்துவதால் சலவைக்கு தரும் செலவை சிறிது குறைக்கும். கைத்துவாலையை தரையில் வீசி எறிவதோ, அழுக்குத் துணி கூடையில் போடுவது எளிதுதான். ஆனால், அதை உலர்த்தி மறுபடியும் பயன்படுத்தினால், பணத்தையும், சக்தியையும் சேமிக்கலாம். வெளிப்படையாகச் சொன்னால், கைத்துவாலையை உலர்த்தி பயன்படுத்துவதால் எவ்வளவு அழுக்கு சேர்ந்துவிடும்? உங்கள் கைத்துவாலையை இரண்டு அல்லது மூன்று முறை பயன்படுத்துவதற்கு எந்தத் தடையும் இருப்பதாகத் தோன்றவில்லை.

### வீட்டில் இருக்கும்போது அதற்கேற்ப உடை அணியுங்கள்:

குளிர்ச்சியான சூழ்நிலை இருக்குமானால், வெப்பம் உருவாக்கும் கருவியை இயக்குவதற்கு முன்பு கம்பளி சட்டையை அணிந்து கொள்ளுங்கள். இதனால் வெப்பக் கருவிக்கான மின்செலவு குறைந்து, உங்களின் பணம் மிச்சமாகும்.

### மறுபயன்பாடு:

முடிந்தவரை பொருள்களை மறு உபயோகம் செய்வதால் குறைவான குப்பை சேரும். அதிக குப்பை என்பது அதிக செலவு.

### மிச்சமானதை சாப்பிடுங்கள் அல்லது தேவைக்கு ஏற்ப சமையுங்கள்:

மிச்சமான உணவுப் பொருளை சாப்பிடுவதன் மூலம் சாப்பாடு வீணாகப் போவது தவிர்க்கப்படுகிறது. அதனால் நீங்கள் வாங்கும் பொருள்களுக்கான செலவு குறைகிறது. இரண்டாவது முறை சமைக்க வேண்டியது இருக்காது என்பதால் சமைப்பதற்கான செலவும் குறைகிறது. மிச்சமானதை சாப்பிடுவது உங்களுக்குப் பிடிக்காது என்றால், அன்றைய தேவைக்குப் போதுமான அளவுக்கு மட்டுமே சமைத்துக் கொள்ளுங்கள்.

### திட்டமிட்டு செயல்படுங்கள்:

திட்டமிடாமல், தாறுமாறான செயல்பாடுகளால் செலவுதான் அதிகரிக்கும். உங்களுக்கு வேண்டிய ஏதாவது ஒன்று கிடைக்காமல் போய், அதைப் புதிதாக வாங்க வேண்டிய அவசியம் எப்போதாவது ஏற்பட்டிருக்கிறதா? ஏற்கெனவே வீட்டில் பலசரக்குப் பொருள்கள் வைக்கும் அறையில் இருக்கிற பொருளை மறுபடியும் பலசரக்குக் கடையில் எப்போதாவது வாங்கி இருக்கிறீர்களா? திட்டமிட்டு செயல்பட்டால் வீட்டில் எந்தப் பொருள்கள், எங்கே இருக்கின்றன என்பது தெரியும். எனவே, அதை புதிதாக வாங்கும் செலவு குறைவதுடன், அதைத் தேடும் நேரமும் மிச்சமாகும்.

### வாகனம் ஓட்டுவதில் கவனம்:

பெட்ரோல், வாகன எரிபொருள் விலைகள் உயர்ந்துவிட்ட நிலையில் இந்த யோசனையை நீங்கள் நிறையவே கேட்டிருப்பீர்கள். வெளிப்படையாகச் சொன்னால், உரிய வேகத்தில் செல்வது வாகனத்தின் எரிபொருள் செலவைக் குறைப்பதுடன் உங்கள் பணத்தையும் சேமிக்கும்.

FRENCH TUITION
பிரெஞ்சு வகுப்புகள்
திறமை வாய்ந்த ஆசிரியரால் French மொழி, தரம் 4இல் இருந்து தரம் 12 வரை கற்றுக் கொடுக்கப்படுகின்றது.
தொடர்புகளுக்கு:
நளா: 905 808 2064

வீடு வாங்குவதற்கும் விற்பதற்கும்

Century 21
Service Plus
5855 Taschereau Blvd (Office)
Brossard, Quebec. J4Z 1A5
Email : sugumaran@sympatico.ca
Office : (514) 299-3186
(450) 926-1881

Sugumaran Sinnaiah
Chartered Real Estate Broker

# Best Insurance for Low Rates

## Life Insurance

- Non Medical Insurance
- Critical Illness Insurance
- Mortgage Insurance
- RRSP - Start from $25
- RESP - Start from $25
- Travel Insurance
- Investment Loan
- Home Equity Line of Credit

**நீங்கள் வைத்திருக்கும் காப்புறுதி சரியானதா?**
**உங்களுக்கு அது போதுமானதா?**
**உங்களுக்கு மேலதிக காப்புறுதி தேவைப்படுகிறதா?**

மற்றும் **RRSP, RESP** போன்ற எந்த தேவைகளுக்கும் என்னை அழையுங்கள்.

MEDICAL INSURANCE FOR
**SUPER VISA**
**100%**
REFUND IF VISA DENIED

**No body beats my price!**
**No body beats my service!**

**REFER your friends or Family & Get Rewards**

RBC Insurance · Manulife · Industrial Alliance Insurance and Financial Services Inc. · Desjardins · Assumption Life Financial Services · BMO Insurance · Sun Life Financial

## Thana Manickavasagar
Broker

Cell : **416-728-5772**
Off : **416-519-3896**
Fax : **647-547-8147**



E-mail : thana7@gmail.com Web : www.thana.ca
*80 Nashdene Road, Unit D218, Scarborough, ON, M1V 5E4*

---




# Kannan Kankesu

REAL ESTATE BROKER
&
INVESTMENT ANALYSIST


kkankesu@gmail.com
www.kannan.ca

RED CARPET. Royal Realty Ltd. Brokerage

880 Ellesmere Road, Suit 204, Toronto, ON

Dir: 416 834 4200
Off: 416 284 5555


பொருளாதார ஏற்ற இறக்கத்தை Real Estate Market ன் மாற்றங்களோடு ஒப்பிட்டு சிறந்த முதலீடுகளை அறிந்துகொள்ள..........




Toronto
Scar Golf Club/Brimorton $389,900
3+2 BR, 2WR, Sep Entrance,Detached .




Toronto
Markham/Sheppard $199,900
3BR, 2WR, Townhouse.



Toronto
Mc Cowan/ sheppard $199,000
4BR, 2 WR, Condo Apt



Stouffville
Hoover Park/East Of 9 Th Line $550,000
3 Yr, 4BR, 4 WR, Detached.



For Lease
1200 SqFeet, Office Use/Food Related, 2 W.Room
Front And Back Entrance, Asking 1500 Net Lease



Ajax
Westney/Rossland $550,000
6 Yr, 4BR, 3 WR, Detached.

# விவேகமான வெப்பநிலைக் கட்டுப்படுத்தி



வேலா சுப்ரமணியம்

- Certified Home Inspector -

## Smart/Learning Thermostat Controller:

பொதுவாகக் கூறுவதானால் சாதாரணமாக ஒரு வீட்டின் மையப்பகுதியில் பொருத்தப் பட்டிருக்கும் Thremostat Controller தான் முழு வீட்டிற்குமுரிய வெப்ப அளவைக் கட்டுப்படுத்தி எமது விருப்பத்திற்கு ஏற்றவாறு வெப்பமாக்கி யையோ (Furance) அல்லது குளிரூட்டியையோ இயங்கவைத்துக் கொண்டிருக்கிறது என்பது பலருக்குத் தெரியும். இத்தகைய கட்டுப்படுத் திகள் பழைய தொழில் நுட்பங்கள் (Analog) கொண்டவையாகவும் கடந்த சில ஆண்டு களாக Digital தொழில் நுட்பத்திற்கு மாற்றப் பட்டு அவை Programable Thermostat ஆக மாற்றம் பெற்றமையும் பலரும் அறிந்ததே. Programable Thermostat பற்றியும் அதன் பயன்பாடுபற்றியும் கடந்த காலக் கட்டுரைக-ளில் விளக்கி இருக்கிறேன்.

ஆனால் தற்போது இவை பழங்கதை ஆகி விட்ட நிலையில் இத்துறையில் அறிமுகப் படுத்தப்பட்டிருக்கும் புதிய தொழில் நுட்பம் பற்றிக் குறிப்பிட விளைகிறேன்.

தற்போது பலராலும் பேசப்பட்டுக் கொண்டி ருக்கும் பிரபல்யம் அடைந்துவரும் Smart Thermostat Controller பற்றி அறியவேண்டியது மிக அவசியமானது. Ipod, Iphone இவற்றைக் கண்டுபிடிக்கக் காரணகர்த்தாவாக இருந்த Tony Faddell, Matt Rogers ஆகிய இருவரும் அப்பிள் நிறுவனத்தில் இருந்து விலகி முற்றி லும் மாறுபட்ட ஒரு புதிய துறையில் புகுந்து Smart Thermostat Controller என்பதைக் கண்டுபிடித்திருக்கிறார்கள் இதன் பெயர் 'Nest'. மிக அழகான முறையில் வட்டமாக வடிவ மைக்கப்பட்டிருக்கிறது 3.2" விட்டம், 1.3" அங்குல தடிப்பு கொண்டது. பார்ப்பதற்கு அழகானது மட்டுமல்ல இயக்க ரீதியில் ஆச்சரியத்தக்க பல பண்புகளைக் கொண்டுள்ளது. இதனைக் கண்டுபிடித்த Tony Faddell அவர்கள் தனது பேட்டி ஒன்றில் தனது பெற்றோர், 30 வருடத் தின் முன்னர் கண்டுபிடிக்கப்பட்ட தொழில் நுட்பத்தில் உருவான பழைய Thermostat உடன் பட்ட அவஸ்தையே இப்படியான ஒரு புதிய தொழில் நுட்பத்தை உருவாக்க முக்கிய உந்து சக்தியாக இருந்தது என்று கூறியதை வைத்துக் கொண்டே இது எவ்வளவு இலகு வானதாக உருவாக்கப்பட்டிருக்கும் என்பதை அனுமானித்துக் கொள்ளலாம்.

பலரது வீட்டில் உள்ள Programable Thermostat ஐ 90%க்கு மேற்பட்டோர் முறையாகப் பாவித்துப் பயன் அடைவதில்லை. திங்கள் முதல் வெள்ளிவரை அல்லது சனி ஞாயிறு என்று பலதரப்பட்ட விதத்தில் அதனைத் தயார் படுத்துவதில் உள்ள சிரமம் காரணமாக பலரும் அதனைக் கண்டு கொள்வதில்லை. மாறாக ஒரு Setup மட்டும் செய்வார்கள். 23ºC ! and Hold!! வேறெதுவும் செய்வதில்லை.

வீட்டிற்குரிய மின்சார, எரிவாயு செலவில் 55% - 70% வீதமானவை வெப்பமாக்கல் அல்லது குளிரூட்டலால் ஏற்படுத்தப் படுகின் றது என்று பல ஆராய்ச்சிகள் கூறுகின்றன. சுமார் 1 பாகை குறைப்பதன் மூலம் 5% கட்டண சேமிப்பை ஏற்படுத்தலாம் என்பது மற்றுமொரு ஆய்வில் கூறப்பட்டுள்ளது. வீட் டில் ஒருவரும் இல்லாத நேரங்களில் வீடு முழுவதுமே வெப்பமாக வைத்திருக்கப்பட வேண்டும் என்ற அவசியம் இல்லை. அத்து டன் இரவில் நித்திரைக்குப் போகும்போது அதிகளவு வெப்பம் அவசியம் அற்றது. அதிக விலை கொடுத்து வாங்கும் கம்பளிப் போர் வைகளை முழுக்க முழுக்கப் பாவிக்காது

## வீடும் விடியலும் - 81

நித்திரையில் வெப்பம் தாங்க முடியாத நிலை யில் ஒதுக்கிவிடுவது அவசியமா? அல்லது போர்வைக்குள் உறங்குவது சுகமானதா? இந்தக் கேள்விகளுக்கு பதில் காணும் போது அதற்குரிய பெறுமதியையும் மனதில் கொள்ள வேண்டும். இவ்வாறான சகல கோணங்க ளையும் கருத்திற்கொண்டு உருவாக்கப்பட்டி ருப்பதே 'Nest'.

### வியக்கத்தக்க சில பண்புகள்:

### Learning:

தானே எங்களது பழக்க வழக்கங்களையும் நடமாட்டத்தையும் அவதானித்து பழகிக் கொண்டு அதன்படி செயற்படும். முதலாவது கிழமை எமது வசதிக்கேற்றவாறு சில்வர் துக் கொள்ள முடியும். அதன்பின்னர் Smart Phone மூலமாக எங்கு இருந்து கொண்டும் 'Nest'ஐ இயக்க அல்லது கட்டுப்படுத்த முடியும். Iphoneக்குரிய அல்லது Androidக்குரிய Small Appsஐ இலவசமாக பதிவிறக்கம் செய்து பயன்படுத்தலாம். இளையத்தள இணைப்புள்ள கணினி மூலமும் அல்லது Tablet PC மூலமும் உலகில் எந்தப் பாகத்தில் இருந்தும் உங்கள் வீட்டு Thermostat ஐ கட்டுப்படுத்தலாம் என் பது எவ்வளவு வசதியானது? உதாரணமாக வேலையில் இருந்தபடியே வீட்டிற்கு வருவ தற்கு 2 மணித்தியாலத்திற்கு முன்னர் வெப் பமாக்கியை இயங்க வைத்துவிட்டு வீட்டிற்குள் கால் வைக்கும் போது, வீடு எமக்கு ஏற்ற வெப்ப அளவுடன் இருக்கும் என்றால் குளிரை உணரும் சந்தர்ப்பமே இருக்காது அல்லவா? குறிப்பாக பலரிடமும் தற்போது விடுமுறை கால வீடுகளும் இருப்பதாக அறிகிறோம். இத்த கைய வீடுகளுக்குப் போகுமுன்னரே வீட்டைக்

> **"The new Nest thermostat is brilliant, not only does it adhere to commands sent from your smart phone, it also learns your patterns and adjusts to your schedule in real time, as you use it, no programming required.**
> **It knows when you usually get up, when you go to work, when you come home, when you go to bed.**
> **It can give you digital readouts of energy usage and automatically adjust to make you both comfortable and economically efficient".**










டயலை வெப்ப அவைக் கூட்டுவதற்கோ, குறைப்பதற்கோ பாவித்தால் அதனை இது நினைவில் வைத்துக்கொள்ளும். உதாரணமாக காலை எழுந்தவுடன் 23ºC பாகைக்குக் கூட்டி, வீட்டை விட்டு வெளியேறும் போது 19ºC பாகைக்குக் குறைத்துவிட்டு, பின்னர் வீட்டுக்கு வந்ததும் மீண்டும் 23ºC பாகைக்குக் கூட்டி விட்டு பின்னர் படுக்கைக்குச் செல்லும்போது 21ºC பாகைக்கு குறைத்து விட்டால், இந்தப் பழக்கத்தை நினைவில் வைத்துக்கொண்டு அதன்படியே செயற்படும். தொடர்ந்தும் Nestஐ தொடவேண்டியதில்லை. மிகவும் வேகமாக எங்களது பழக்கத்தைப் பதிவு செய்து நினை வில் வைத்துக் கொண்டு செயற்படுகிறது.

### WIFI:

எல்லாவீட்டிலும் இணையத்தள வசதியிருக்கும் கூடவே ஒரு Wireless Router ம் இருக்கும் அந்தவகையில் முதற்தரம் பொருத்தும் போதே உரிய Password ஐ போட்டு எமது வலைய இணைப்புடன் ஒரு கணினி போல இனைத் குறிப்பிட்ட நேரத்திற்கு முதல் வெப்பமாக்கி விட்டுச் செல்லலாம் என்பது மிக அற்புதமானது.

### Away Home:

இந்த Nest வீட்டில் உங்கள் நடமாட்டத்தை அவதானித்துக் கொள்ளும். 150 பாகை சுற்ற ளவுக்குள் சன நடமாட்டம் இல்லை என்றால் இது தானாவே வெப்பமாக்கியை உரிய நிலை யில் நிறுத்திவிடும். பின்னர் நடமாட்டத்தை அவதானித்ததும் தானே உரிய வெப்ப நிலையை நோக்கி இயங்கத் தொடங்கிவிடும். ஒரு குட்டி 'Robot' ஒன்று எல்லாவற்றையும் வீட்டிற்குள் இருந்தபடி அவதானித்துக் கொண்டிருக்கிறது என்று சொல்லாம்.

### ஒப்பீட்டு அறிக்கை:

இதனைப் பொருத்தியவுடன் இணையத்தளத் திற்கு சென்று Nest உடன் ஒரு கணக்கை ஏற்படுத்திக்கொண்டால் நாளாந்த பாவனை, அயல்வீட்டாருடனான ஒப்பீடு, காலநிலை மாற் றத்தின் தாக்கம் என்பவற்றை உள்ளடக்கிய விபரமான அறிக்கைகளை பார்க்கவும் ஏற்ற-வாறு திட்டமிடவும் வசதி செய்யப்பட்டிருக் கிறது. முதற்தரம் Nest பொருத்தப்படும்போது உங்கள் வீட்டிற்குரிய தபால் இலக்கம் (Postal Code) உள்ளிடப்படவேண்டும்.

### Installation:

மிக இலகுவான முறையில் பொருத்தும் விதத் தில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. பழைய Thermostatஐ துண்டிக்கும்போது உரிய கம்பிக ளுக்குரிய அடையாளங்களை உறுதிப்படுத் தக்கூடிய Labels தரப்பட்டிருக்கும். அவதான முள்ள சாதாரண ஒருவரால் கூட இதனைப் பொருத்த முடியும்.

'Nest' தற்போது 2வது Generation பாவனைக்கு வந்துள்ளது. Apple நிலையங்களிலும் Lowes, Home Dept போன்ற கட்டிட நிர்மாண கடைக ளிலும் $249.99 டொலருக்கு விற்கப்படுகின் றது. சாதரண Thermostat control களுடன் ஒப்பிடும் போது $200 டொலர் அதிகமானாலும் செலவிடும் ஒவ்வொரு சதமும் பெறுமதியானது எனப்பலரும் மதிப்பிட்டிருப்பதை இணையத் தளங்களில் காணலாம். சுமார் 14% - 26% வரை கட்டன சேமிப்பை ஏற்படுத்தலாம் என Nest இளையத்தளம் கூறுகின்றது. ஆனால் பழைய Programable Thermostatஐ ஒழுங்கான முறைப்படி பாவிப்பவர்கள் அதிக சேமிப்பை அடைவார்கள் என்று கூற முடியாது என்பதும் அத்துடன் வீட்டில் 24 மணித்தியாலமும் இருக் கக் கூடியவர்கள் உள்ள சூழ்நிலையிலும் அதிக சேமிப்பை எதிர்பார்க்க முடியாது என்பது எனது கருத்து. ஆனால் பழைய Thermostatல் உள்ள குழப்பம் காரணமாக அவற்றை முறையாக பயன்படுத்தாதவர்களும், அனை-வரும் பகற்பொழுதில் வீட்டை விட்டு வெளி-யேறிப் பின்னர் வீடுவந்து சேரும் சூழ்நிலையில் உள்ளவர்களும் அதிக பலனடையும் சந்தர்ப் பம் உள்ளது. அத்தகையவர்களுக்கும் இளம் சந்ததியினருக்கும் இது ஒருவரப்பிரசாதம்.

இதனது தரத்தை மேலும் உயர்த்தும் விதத் தில் மேலும் பல மென்பொருட்களை உரு-வாக்குவதில் மிக மும்முரமாக 'Nest Team' இறங்கி இருப்பதைப் பார்க்கின்ற போது காலப்போக்கில் எல்லோரது வீட்டிலும் iPhone அல்லது iPad போல 'Nest' தான் இருக்கப் போகின்றதோ என்ற கேள்வி எழுகின்றது?

காலம் பதில் சொல்லும்.

மேலதிக விபரங்களுக்கு : www.nest.com

### வாசகர் கவனத்திற்கு:

இத்தைய Thremostatஐ வீடு வீடாக விற்பனை செய்து பணம் சம்பாதிக்க சில ஸ்தாபனங்கள் Eco/Energy என்ற பெயரில் முளைத்துள்ளன. மிக அவதானமாக இருங்கள். எனக்கு நடந்த சம்பவத்தை வாசகர்களின் நலனைக் கருதி பகிர்ந்து கொள்கிறேன்.

சுமார் 2 வாரங்களுக்கு முன்னர் வாசலில் ஒருவர் முறையான உடுப்புகளுடன் ID தொங்க விட்டபடி கதவைத்தட்டினார். ஆங்கிலத்தில், இலவசமாக Smart Thermostat உங்கள் பகு தியில் பொருத்துகிறோம்! எனக்கு ஆச்சரி-யமாக இருந்தது… தொடர்ந்து $20-25 டொ லர்கள் மாதாந்தம் சேமிக்கலாம் என்று கூறப் பட்டது. இலவசம், மாதம் $25 டொலர் என்ற தும் எனது மனமும் சிறிது ஆசைப்பட்டது. விருந்தாளி உள்ளே அழைக்கப்பட்டார். நீர் மாகாண அரசில் இருந்து அல்லது அது போன்ற அமைப்பில் இருந்து வருகிறீரா என்று கேட்டேன். இல்லை நாங்கள் தனியார் கம்பனி. நீங்கள் ஒன்றும் கையால் பணம் செலுத்த வேண்டியது இல்லை. உங்களுக்கு கிடைக்க இருக்கும் சேமிப்பில் இருந்து $14.95ஐ மாதாந் தம் எடுத்துக் கொள்ளுவோம்! 3 வருட ஒப் பந்தம்!! அப்போது தான் இவர்களது கபடப் பேச்சுப் புரிந்து கொண்டது. உடனே நான் 1 நிமிடம் என்று கூறிவிட்டு பொருத்தத் தயார் நிலையில் வைத்திருந்த எனது 'Nest'ஐ எடுத்துக் காட்டி இதுவா? 3 வருட ஒப்பந் திற்கு என்று கேட்டேன் வந்தவர் அசடுவழிய "O Man" என்று கூறிவிட்டு பேச்சு மூச்சின்று காணாமல் போய்விட்டார்.

'Rogers' நிறுவனமும் இது போன்ற ஒரு தொழில் நுட்பத்தை ஏற்கனவே அறிமுகப் படுத்தி 'All in one' என்ற பெயரில் மாதாந்தக் கட்டணத்திற்கு சந்தைப்படுத்துகிறது என்ப தையும் கவனத்திற் கொள்ளவும்.

'வாசகர்களே சிந்தித்து செயற்படுங்கள்'

velasubramaniam@thaiveedu.com

■ ■ ■



## எண்ணம் போல் உங்கள் இல்லங்களை, வியாபார நிலயங்களை விற்க, வாங்க அழையுங்கள்.



# Sell your home **faster** and more **money**

Gardenview/Conlin




3 Bedrooms, 3 W Rooms
Fireplace

Brimorton/Scarborough Gold




3+1 Bedrooms, 2 W Room
Hardwood Floor

Markham/Steeles




4 Bedrooms, 3 W Rooms
Ceramic Floors

9th Line And Reeves Way




3 Bedrooms, 3 W Rooms
Ceramic,Hardwood Floors

Morningside/Nightstar




3+1 Bedrooms, 3 W Rooms
Hardwood Floor

16th Are/Cornell Rouge Blvd




3 Bedrooms, 3 W Rooms
Ceramic,Hardwood Floors

Hwy 7 E/9th Line





3 Bedrooms, 3 W Rooms
Hardwood Floor

Middlefield/Highglen





4 Bedrooms, 3 W Rooms
Ceramic Floors

Morningside / Old Finch




5+2 Bedrooms, 5 W Rooms
Ceramic, Hardwood Floors

9th Line / 14th Ave




4 Bedrooms, 3 W Rooms
Ceramic, Hardwood Floors

Morningside & Finch




4+1 Bedrooms, 4 W Rooms
Hardwood Floor

Castlemore/Hwy 48




4 Bedrooms, 5 W Rooms
Ceramic, Tile Floors

Mccowan/Stonebridge




5 Bedrooms, 5 W Rooms
Hardwood Floor

Millard/Braith




4 Bedrooms, 4 W RoomsC
Gas Fireplace

Grand & St Clair



Business For Sale

## When you list your home with Mike,you receive these Guarantees.

Your home advertised 24 hours a day until it is sold

Your home advertised in full color prints ads every week until it is sold

Our team of specialists for the same price as hiring a single agent

**Your home sold in 30 days or we buy it**




RE/MAX

**Elaguppillai Srinathan (Mike) B.Sc**

Sales Representative

**Direct 416 - 276-1225**

Email: esrinathan@yahoo.com

**Ph1-7800 Woodbine Ave**
**Markham, ON L3R 2N7**
**Office: 905-470-9800**
**Fax: 905-470-7770**


KZG 647-200-5833

I can also assist you Mortgage financing, Home Inspection Real Estate lawyer

# உங்களது வீட்டு...

23ம் பக்கத் தொடர்ச்சி...

டைய மின் இயக்க பாதைகளே அமைக்கப்படுவது வழக்கம்.

## தேவையான அளவுக்குரிய பாதுகாப்பு அம்சங்கள்

நீங்கள் ஒரு பாதுகாப்பு சேவை நிறுவனத்திடமிருந்து பாதுகாப்பு அமைப்பை கொள்வனவு செய்திருக்கக் கூடினும், உங்களது வீட்டில் யன்னல் கண்ணாடிகள் வீட்டுக் கோடி (Patio) என்பவற்றில் சரியான பூட்டுக்கள் உள்ளனவா, கதவுகளில் Dead Butts அமைப்பு பொருத்தப்பட்டுள்ளதா, வீட்டின் ஒவ்வொரு அறையிலும் ஒவ்வொரு மட்டத்திலும் காபன் மொனக்சைட் (Co) வாயுவை கண்டறியும் கருவிகளும், புகை கண்டறியும் கருவிகளும் உள்ளனவா என வீட்டைப் பரிசோதிப்பவர் அவதானிப்பார்.

## கட்டமைப்பு அத்திவாரத்தில் ஏற்படும் பிரச்சினை:

ஒரு வீட்டின் கட்டமைப்பின் நம்பகத்தன்மையும், தரமும், மிகவும் அவசியம். எனவே வீட்டை பரிசோதனை செய்பவர் வீட்டின் அடித்தளம் பற்றி நன்கு ஆராய்வார்.

## வளியை குளிரூட்டும் கருவியை பராமரித்தல் A/c Maintenance :

ஓர் வீட்டின் மத்திய குளிரூட்டல் அமைப்பு இரு பகுதிகளைக் கொண்டது.

1. வெளிப்புறத்தில் - ஒரு காற்று அமுத்தி (Compressor) ஒடுக்கும் சுருள். ஓர் கற்றாடி என்பவற்றை கொண்டிருக்கும்.

2. உட்புறத்தில் - காற்றை ஆவியாக்கும் ஓர் சுருள், சூடான வளி உலையின் விநியோகக் குழாயினுள் பொருத்தப்பட்டிருக்கும்.

வீட்டினுள் உள்ள வெப்பம் இழுக்கப்பட்டு குளிரூட்டும் பொருளினால் குழாய்களினூடாக கொண்டு செல்லப்பட்டு வீட்டுக்கு வெளியே உள்ள ஒடுக்கும் சுருளுக்கு எடுத்து செல்லப்படுகிறது.

வெப்பமேற்றும் உலைகளைப் போலன்றி, குளிரூட்டல் கருவிகளை அடிக்கடி பராமரிப்பு செய்ய வேண்டியதில்லை எனினும் நன்கு பராமரிக்கப்பட்ட குளிரூட்டும் அமைப்புகள் வீட்டில் சிறந்த தன்மையுடைய குளிரூட்டும் தன்மையை ஏற்படுத்தும். அதனால் குறைவான செலவில் உங்கள் வீட்டைக் குளிரூட்ட முடியும். அதே சமயம் குளிரூட்டும் உபகரணம் நீண்ட காலம் பாவிக்கக் கூடியதாக அமையும்.

உங்கள் வீட்டில் பொருத்தப்பட்டுள்ள குளிரூட்டும் சாதனத்தை நன்கு பராமரிப்பது பற்றிய விபரங்களை உங்களுக்கு வழங்கப்பட்ட உரிமையாளர்களுக்கான வழிகாட்டி (Owner's Manual)யில் இருந்து அறியலாம்.

எனினும் சில முக்கியமான சேவைகளை பெற்றுக் கொள்வதற்கு இத்துறை சார்ந்த தொழில் நிபுணர்களை அழைக்க வேண்டும்.

## பாதுகாப்பான கைப்பிடிகள் Railings / Guards:

வீடுகளைச் சூழ ஏற்படும் மரணங்களில் 40% வீதமானவை தற்செயலாக தவறி விழுவதனால் ஏற்படுகிறது என நோய்க் கட்டுப்பாடு மற்றும் காயங்களைத் தடுத்தலுக்கான நிறுவனம் (CDC) மதிப்பீடு செய்துள்ளது. அவசர சிகிச்சைக்காக செல்பவர்களில் 20 சதவீதமானோர் கீழே விழுந்து காயமடைந்தவர்கள் என புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இவற்றுள் 50 சதவீதமானோர் வீடுகளில் படிகளில் தடக்கி விடுவதனால் கடுமையான காயங்களுக்கு உட்பட்டவர்களாகும்.

Railings. Guards ஆகியவை சரியாகப் பொருத்தப்பட்டிருந்தால் இவ்வகையான காயங்களை குறைக்க முடியும்.

**Railings:** படிகளில் ஏறும் போது இறுக்கமாக பற்றிப் பிடிப்பதற்கு Railings உதவுகின்றன.

**Guards:** படிக்கட்டுக்கள் அல்லது தளம் (Deck) அல்லது மொட்டை மாடி (Balcony) ஆகியவற்றில் இருந்து கீழே விழுந்து விடாமல் பாதுகாக்கின்றன.

mahensingaraja@thaiveedu.com

■ ■ ■

# ஆன்மீகம்...

25ம் பக்கத் தொடர்ச்சி...

ஆளுமை அவரது பௌதிக அமைப்பில் அதிகம் தங்கியுள்ளது என்றும் கூறிவிட முடியாது.

ஒருவரின் கல்வி அவரது ஆளுமையை நிர்ணயிப்பதில் அதிகம் பங்குகொள்ளும். ஏனெனில் கற்றவர்களுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பது தமிழ்முதுமொழி. ஆனால் உயர் எழுத்தறிவுள்ளவர்கள் உயர் ஆளுமை கொண்டவர்களாக இருக்கமுடியாதென்றில்லை. கல்வியின் தற்கால நியாயமானதாகத் தோன்றும் வரைவிலக்கணம்; கல்வியால் ஒருவன் அறிவு, திறன், மனப்பாங்கு ஆகியவற்றைப் பெற்றுக்கொள்கின்றான். எனவே கல்விகற்றவன் அறிவு, திறன் ஆகியவை இரண்டை மட்டும் கொண்டிருந்து தனது சமூகம், நாடு மற்றும் மானிடம் சார்பாகப் பொருத்தமான மனப்பாங்கு இல்லாதவனாக இருந்தால் அவனை உண்மையான கல்விகற்றவன் என்று கூறிவிடமுடியாது.

ஒருவனின் உணர்ச்சிக் கட்டமைப்பு அவனது ஆளுமைக்கு மற்றைய கூறுகளுக்கு நிகராக முக்கியமானது. எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தளம்பாத உணர்ச்சித் தூண்டற் பேறுகளை எவனொருவன் கொடுக்கின்றானோ அவன் உயர் ஆளுமை கொண்டவனாவான். சக மனிதர்களின் அவரவர் தனித்துவ வித்தியாசத்தை உணர்ந்து அவர்களின் மனதினைப் புண்படுத்தாத தூண்டற்பேறுகளை எவனொருவன் கொடுத்து வருகின்றானோ அவன் உயர் ஆளுமையுடையவன். மாறாக தன் சமுதாயத்தால் உயர்ந்தது என எண்ணப்படும் கல்விநெறிகளைக் கற்றோ அல்லது உயர் பட்டறிவைப் பெற்றிருந்தோ சக மக்களை முட்டாள்கள், அறிவிலிகள், பேயர்கள் என்று கணித்து அவர்களுக்கு மனதைப் புண்படுத்தும் தூண்டற் பேறுகளைக் கொடுப்பவன் ஆளுமையற்ற பேர்வழி.

ஆன்மீகம் தனிமனிதனதும், சமூகத்தினதும் மற்றும் மனிதவர்க்கத்தினதும் மேம்பாட்டை ஒட்டியதாகவே இருக்க வேண்டும். அதை விடுத்து படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோயில் என்ற போலியான சமய நடவடிக்கைகளை விட்டு சமயத்தின் உள்ளாந்த நோக்கம் என்ன என்பதை நன்கறிந்து சமயத்தினை ஓர் உறுதுணையாக மட்டுமே வைத்துக்கொண்டு ஒவ்வொரு மனிதனும் தனது ஆன்ம ஈடேற்றத்திற்கான எல்லா நடவடிக்கைகளையும் செய்து பரம்பொருளுடன் இரண்டறக் கலக்க எத்தனிக்க வேண்டும்.

முடிவாக, ஒரு மனிதன் தனது ஆன்ம ஈடேற்றத்திற்காக மக்கள் சேவையே மகேசன் சேவை மற்றும் அன்பே சிவம் என்ற சமய மெஞ்ஞானிகளின் உணர்ந்தறிந்த முடிவிற்கேற்ப இயங்கி இந்தப் பெறுதற்கரிதான மானிடப்பிறப்பில் தன்னை அர்த்தபுஷ்டியும் ஈடுபடுத்த வேண்டும். சடங்கு, சம்பிரதாயம் போன்ற சமய நடவடிக்கைகளில் அதிக நேரத்தையும், பணத்தையும் செலவுசெய்து தன் வாழ்நாளைக் தொலைத்து தனது ஆன்ம ஈடேற்றத்திற்கான சந்தர்ப்பத்தையும் இழந்து பரம்பொருளுடன் சங்கமிக்கும் அரிய சந்தர்ப்பத்தையும் கோட்டைவிடக்கூடாது.

'ஆன்ம ஈடேற்றம் அன்பினாலும், மக்கள் சேவையினாலும் வருமே தவிர போலியான சமய நடவடிக்கைகளால் அல்ல'


*paranirubasingam.k@thaiveedu.com*

■ ■ ■



Raj. A. Rasaratnam
B.Com.
Sales Representative
416-726-8055
argaccountax@rogers.com
HomeLife/ GTA Realty Inc.
Real Estate Brokerage*
5215 Finch Ave. E., Suite #203,
Scarborough, ON. M1S 0C2
*Independently own and operated

ARG Accountax
Income Tax & Accounting Solutions
Moved to NEW Location:
5215 Finch Ave. E., Suite #252,
Scarborough, ON. M1S 0C2




416-726-8055
Mortgage arrangement, Business incorporation and corporate tax preparation

- மோட்கேஜ் பேமென்ட் பிந்திபோச்சு !
- புறப்பட்டி ரக்ஸ் பேமென்ட் பிந்திபோச்சு !
- கிரடிட் காட்டிலையும் எடுக்க காசு இல்ல !
- றினுவல் வந்திருக்கு ஆனால் வட்டி கூட போட்டிருக்கினம் !

*போனில எல்லாம் செய்து தரலாம் எண்டு சொல்லுவினம்! பிறகு ........................... ......*

இந்தா, அந்தா, எண்டு இழுத்தடிப்பு !

கடைசி நேரத்தில கையை விடுகிறது !

போன் அடிச்சா எடுக்கிறதில்ல , !!!

உதுக்குத்தானே இப்ப **வோக் - இன்**

**மோட்கேஜ் கிளினிக்** நடக்குது. !

அங்க நேரபோனால்தான் உதுக்கு சரி! ! !

**சனிக்கிழமை தோறும் 9.00 am - 5.00 pm வரை**



# 416-644-3555

**CENTUM Rapid Mortgages Inc.**

FSCO LIC # 10156

Office: T.P: 416-644-3555 Fax: 888-644-3556

211-80 Nashdene Road, Scarborough ON M1V 5E4



**தயா PK கந்தையா** BAS, ABR, AMP
**Principal Broker / President**
FSCO License # M 08001083
**T.P : 416-716-8707**

**ஜெ. இராசதுரை (Jey)** MBA, BBA (Hons), AMP
**Mortgage Development Manager & Agent**
FSCO License # M 09001428
**T.P : 416-624-4843**

rapid realty inc. 416-259-2002 "Rapid Response; Rapid Results"

# சமூகச் சட்ட ஆலோசனை நிலையம்

சுதர்ஷி இக்னேஷியஸ்



## சமூகச் சட்ட ஆலோசனை நிலையம் (Community Legal Clinic) என்றால் என்ன?

சமூகச் சட்ட ஆலோசனை நிலையங்கள் இலாபம் கருதாது தனித்துவமாக இயங்கு கின்ற நிலையங்கள் ஆகும். ஒவ்வொரு சமூ கச் சட்ட ஆலோசனை நிலையமும் அது அமைந்துள்ள பிரதேசத்தில் வாழ்கின்ற பொது மக்கள் இணைந்து தனித்துவமாக உருவாக் கப்பட்ட இயக்குனரவையினால் (Board of Directors) இயக்கப்படுகின்றது. சட்டம் சார்பான சேவைகளை வழங்குவதற்காக, இங்கு பொது வாக வழக்கறிஞர்கள் மற்றும் சமூக சட்ட அலுவலர்கள் (Community Legal Workers) வேலைக்கு அமர்த்தப்படுவார்கள். இவர்களோடு இணைந்து அவ்வப்போது சட்டம் பயிலும் மாணவர்களும் சேவைகளை வழங்கு வார்கள்.

சமூகச் சட்ட ஆலோசனை நிலையங்களுக் கான பெரும் பகுதியான நிதியுதவியை ஒன்ராறியோவின் சட்ட உதவி நிலையம் (Ontario Legal Aid) வழங்கி வருகின்றது. ஒன்ராறியோ மாகாணம் முழுவதிலும் கிட்டத் தட்ட 77 சமூகச் சட்ட ஆலோசனை நிலை யங்கள் இயங்குகின்றன. இவற்றில் 17 நிலை யங்கள் குறிப்பிட்ட தேவைகளை (Examples: elderly, the disabled, urban Aboriginals, and persons with HIV/AIDS) அடிப்படையாகக் கொண்டு விசேட சேவைகளை வழங்கி வரு கின்றன. இவை Specialty Legal Clinics என அழைக்கப்படுகின்றன.

பொதுவாக இங்கு வழங்கப்படுகின்ற சேவை களுக்கு கட்டணம் அறவிடப்படமாட்டாது.

அதிலும் குறிப்பாக நீங்கள் ஏதாவது சமூக நிதியுதவி (Social Assistance) பெற்றுக்கொண்டு இருந்தாலோ (உதாரணமாக Welfare, ODSP or Worker's compensation) அல்லது உங்கள் வருமானம் குறிப்பிட்ட தொகைக்குக் குறை வாக இருந்தாலோ (meet low-income eligibility), இவர்களின் சேவைகளை பெறுவதற்கு தகைமை உடையவர்களாக இருப்பீர்கள்.

ஒவ்வொரு நிலையமும் அது அமைந்துள்ள பகுதி மக்களுக்கு உதவுமுகமாக, அந்தப் பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களின் தேவைகளை அடிப்படையாக வைத்தே தமது சேவை களை நிர்ணயிக்கின்றன. இந்த நிலையங்கள் வழங்குகின்ற சேவைகள் ஒன்ராறியோவின் சட்ட உதவி நிலையத்தினால் (Ontario Legal Aid) வழங்கப்படுகின்ற சேவைகளைப் பார்க் கிலும் வேறுபட்டுக் காணப்பட்டாலும், அந்த சேவைகளைச் சார்ந்து, ஒரு வெற்றிடத்தை நிரப்புமுகமாக, ஒன்ராறியோவின் சட்ட உதவி நிலையத்தினால் வழங்கப்படாத வேறு சேவை களை வழங்கி பொதுமக்களுக்கு உதவுகின்றன.

### சேவைகள்:

இந்த நிலையங்கள், பல்வேறுபட்ட சட்ட சார்பான பிரச்சினைகளுக்கு, அவை தொடர் பான தகவல்கள், ஆலோசனைகள் மற்றும் இலவசமான சட்டப் பிரதிநிதித்துவத்தை வழங்கி பொதுமக்களுக்குச் சேவைபுரிகின் றன. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இந்த சட்ட சார்பான பிரச்சினைகள் மக்களின் அடிப் படைத் தேவைகளை மையமாக வைத்தே அமைகின்றன. இன்னும் குறிப்பாகச் கூறினால், சமூகச் சட்ட ஆலோசனை நிலையங்கள் வறுமைச் சட்டத்தின் (Poverty Law) கீழ், குறைவான வருமானம் பெறுபவர்களுக்கும், வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்களுக்கும் மற்றும் வாழ்க்கைத்தரம் குறைந்த நிலையி லுள்ள சமூகத்தினருக்கும் சேவைகளை வழங்கு கின்றன.

அநேகமான சமூகச் சட்ட ஆலோசனை நிலை யங்கள் உங்கள் வருமானத்தை கருத்திற் கொள்ளாது சுருக்கமான அறிவுரையை (or Summary Advice) வழங்குவார்கள்.
இவர்களின் சேவைகளை மேலும் விரிவாக விளக்குவதற்கு பின்வரும் ஒருசில உதாரணங்களைக் குறிப்பிடலாம்:

சமூக நிதியுதவிக்கான விண்ணப்பம் மறுக் கப்பட்டால் (if ODSP or OW or CPP benefit is rejected) அல்லது பிழையான காரணத் திற்காக வேலைநீக்கம் செய்யப்பட்டால் உங்கள் பிரதேசத்திலுள்ள சமூகச் சட்ட ஆலோசனை நிலையத்தை நீங்கள் நாடலாம்.

அத்தோடு வாடகைக்கு நீங்கள் குடியிருக் கும் வதிவிடத்தின் உரிமையாளர் உங்களை நியாயமின்றி வெளியேறுமாறு கூறினால், அதிலும் குறிப்பாக வாழ்விட வாடகைக் குடியிருப்புகள் சட்டத்தில் (Residential Tenancies Act) குறிப்பிட்டுள்ள உரிமைகளுக்கும் பொறுப்புகளுக்கும் மாறாக ஓர் ஆதனவுரிமையாளர் செயற்பட்டால், சமூகச் சட்ட ஆலோசனை நிலையமூடாக நீங்கள் சட்ட ஆலோசனை மற்றும் பிரதிநிதித்துவத்தைப் பெறலாம்.

சமூகச் சட்ட ஆலோசனை நிலையங்கள் சட்டரீதியான சேவைகளை வழங்குவதோடு, சமூக அபிவிருத்தி, பரிந்துரை வழங்குதல், சட்டக் கல்வி மற்றும் சட்ட சீர்திருத்தம் போன்ற செயற்பாடுகளிலும் தம்மை ஈடுபடுத்தி வருகின்றன.
அனைத்து சமூகச் சட்ட ஆலோசனை நிலை யங்களும் ஒரே மாதிரியான சேவைகளை வழங்காவிட்டாலும் பொதுவாக கீழே குறிப் பிட்டுள்ள அம்சங்கள் சார்ந்த பிரச்சினைக ளுக்கு உதவிகளை வழங்குகின்றன:

- வாடகைக் குடியிருப்பாளர்களின் உரிமை கள் (Tenant rights),
- ஒன்ராறியோ வேக்ஸ் (Ontario Works)
- ஒன்ராறியோவில் வலுவளர்களுக்கான ஆதர வுச் சேவை (Ontario Disability Support Program)
- தொழிற் காப்புறுதி (Employment Insurance)
- தொழில் புரியும் இடத்தில் பாதுகாப்பு மற்றும் காப்புறுதி (Workplace Safety and Insurance)
- ஊழியர்களுக்கான இழப்பீடு (Workers' Compensation)
- அரசாங்க ஓய்வூதியம் (Government pensions)
- அகதி மற்றும் குடிவரவு (Refugee and Immigration)
- தொழில் சார்ந்த உரிமைகள் (Employment rights)
- குற்றச் செயற்பாடுகளால் ஏற்பட்ட இழப்பு களுக்கான ஈடு (Criminal injuries compensation)
- மனித உரிமைகள் (Human rights)

உங்கள் பிரதேசத்திலுள்ள சமூகச் சட்ட ஆலோசனை நிலையத்தைத் தொடர்பு கொள்வதற்கு:

ஒன்ராறியோவின் சட்ட உதவி நிலையத்தி னைப் பின்வரும் தொலைபேசி இலக்கங்களில் அழைக்கலாம்
**Toll-free: 1-800-668-8258**
**Toronto area: 416-979-1446**
**Toll-free TTY: 1-866-641-8867**
**Toronto area TTY: 416-598-8867**
அல்லது பின்வரும் இணையத்தளத்திற்கு செல்லுங்கள்: **http://yourlegalrights.on.ca/service-type/legal-clinics-general-service.**

sudahrshi.ignatious@thaiveedu.com

■ ■ ■








Look forward to a brighter investment horizon.
Ask me about **Money for Life**™ from Sun Life Financial.

I'm **Ahilan Balachandran**, B.Comm, CLU, CFP®, CHS.
Call, write or visit me any time.
Tel: 416-412-0401 ext 2302
Cell: 416-894-2009
ahilan.balachandran@sunlife.com
www.sunlife.ca/ahilan.balachandran
1300 - 2075 Kennedy Road
Scarborough, ON M1T 3V3

Sun Life Financial
Life's brighter under the sun

© Sun Life Assurance Company of Canada, 2012.

# வெப்பத்தடையும் உங்கள் வீடும்

பிரபா
சின்னா



## உங்கள் வீட்டிற்கு வெப்பத்தடை செய்தல் Insulating Your House:

முன்னோர்கள் நன்றாகத் திருத்தம் செய்யப்படாத வீடுகளில் வசித்திருந்தாலும், தற்காலத்தில் எல்லோரும் வசதியான வாழ்க்கை வாழக்கூடிய வீடுகளையே விரும்புகின்றனர். இன்றைய கால கட்டத்தில் ஒரு சுகாதாரமான வீடொன்பது முற்றாக மூடப்பட்டதாகவும், வெப்பமும் குளிரும் வெளியிலிருந்து உள்ளேயும், உள்ளிருந்து வெளியேயும் செல்லாமல் இருக்கத்தக்கதாக, வெப்பத்தடை செய்ததாகவும், சிறந்த காற்றோட்டத்தைக் கொண்டதாகவும் இருக்கும்.

சிறந்த வெப்பத்தடை என்பது காலநிலையைச் சமாளிப்பதற்கு அணிகின்ற உடை போன்றதாகும். கம்பளியினாலான ஒரு குளிரங்கி (Sweater) காற்றும் மழையும் இல்லாத ஒரு குளிர் காலத்தில் உங்களைச் சூடாக்கப் போதுமானதாகும். ஆனால் காற்றோடு கூடிய மழை வேளையில் அதற்கு மேல் ஓர் ஈரம் புகாத மேலங்கி (Nylon Coat) அணிந்தாலே உங்களை நனையாமல் வைத்திருக்க முடியும். ஒரு வீடும் அதே போலத்தான். வீட்டில் வெளிப்புறத்தில் செங்கட்டிகளுக்குப் பின்னால் Air Barrier உண்டு. இது Nylon coat எப்படிக் காற்றையும் மழையையும் உட்புகாமல் தடுக்கின்றதோ அதேபோல்தான் Air Barrierஉம் தொழிற்படுகின்றது. அதன்பின்னால் இருக்கும் வெப்பத்தடை, Sweaterஐப் போல் தொழிற்பட்டு நீராவியை வீட்டினுள் செல்லவிடாது பாதுகாத்து வீடு சேதமடையாமலும் குளிரடையாமலும் பாதுகாக்கும்.

உங்கள் வீட்டில் வெப்பத்தடை சீராக இல்லை என்பதைக் கீழ்வரும் அறிகுறிகளினால் அறிந்து கொள்ளலாம்.

### குளிர் காலங்களில்:

- சுவர்கள் கையால் தொடும்போது மிகவும் குளிராக இருந்தல்.
- வீட்டின் தரை குளிராக இருத்தல்.
- வீடு சூடேற்றுவதற்கான கட்டணம் கூடதலாக இருந்தல்.
- வீட்டின் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு வெப்பநிலைகள் காணப்படுதல்.
- சுவர்களில் பூஞ்சணம் பிடித்திருத்தல்.

### கோடை காலத்தில்:

- வீட்டினுள் வெப்பம் அதிகரித்து அசௌகரிய நிலை காணப்படல்.
- வீட்டைக் குளிர்விப்பதற்கான ACக்குரிய கட்டணம் கூடலாக இருத்தல்.
- எவ்வளவு வெப்பநிலையைக் குறைத்தாலும் வீட்டினுள் சௌகரியமான அளவு குளிர் வராதிருத்தல்.
- நிலக்கீழ் அறையில் பூஞ்சணம் பிடித்திருத்தல்.

### வெப்பத்தடையின் திறன்:

இதை R Value, RSI Value கொண்டு அறியலாம் வெப்பத்தடைக்குரிய பொருட்களில் இந்தப் பெறுமதிகள் குறிக்கப்பட்டிருக்கும். இப்பெறுமதி கூடுதலாக இருந்தால், அப்பொருள் வெப்பத்தைக் கூடத்தடை செய்யும் என்பதே கருத்தாகும் ஆயினும் வெப்பத்தடையைச் சுற்றி காற்றிடை வெளிகளும் காற்றோட்டமும் இருக்குமாயின் உண்மையான R Value குறைக்கப்படலாம்.

### திறமையான வெப்பத்தடை அமைப்பு:

இந்த அமைப்பானது குறைந்த அளவு பணச் செலவில் கூடிய அளவிற்கு வெப்பத்தையும் நீராவியையும் கடந்தாது பாதுகாக்கக் கூடியதாகும். இந்த அமைப்பில் காணக்கூடியவை.

### Air Barrier:

இது உள், வெளி வளிகள் அசைந்து இதனூடாகச் செல்வதைத் தடுக்கும்.
கவனமாக அடைக்கப்பட்ட இடைவெளிகள்.

### Thermal Bridge:

இது குறைந்த R Value கொண்டதாகவும் சூடான பக்கத்திலிருந்து வெப்பத்தடையின் குளிர்ந்த பக்கம் வரைக்கும் இருக்கும்.



### Vapour Barrier:

இது Blytholene ஆல் ஆனது. இது சூடான உட்பக்கத்திலிருந்து நிரவியானது குளிர்ந்த கட்டட வெளிப்பாகத்திற்குச் செல்லாது தடுக்கின்றது.

### Drying Potential:

இது வெப்பத்தடையிலும் தேங்கியிருக்கும் நீராவியை வெளியேற்றுகின்றது.

### Wall Insulation:

வீடுகளின் சுவர்கள் இரண்டு வகைப்பட்டவை.

- மரச்சட்டங்களால் ஆனது.
- செங்கல்லால் ஆனது

முதலாவது வகையில் வெப்பத்தடைப் பொருட்கள் சுவரிலுள்ள இடைவெளிகளில் நிரப்பப் படும். இரண்டாவது வகையில் இடைவெளிகள் போதுமானதாக இருக்காத படியால் கட்டட நிபுணர் தாமாகவே இடைவெளிகளை ஏற்படுத்த வேண்டும் இடைவெளிகள் கொண்ட புதிய சுவர் வீட்டின் உட்பகுதியில் கட்டப்பட்டுப் பின் வெப்பத்தடை செய்யப்பட வேண்டும் அல்லது சுவரின் வெளிப்பக்கத்தில் Board Stock செய்தும் வெப்பத்தடை செய்யலாம்.

உட்சுவரில் செய்வது செலவு கூடியதாகும். Air Barrierஉம் Vapour Barrierஉம் தேவைப் படும். பூச்சுப் பூசப்பட்ட உலர்ந்த உட்சுவர் Vapour barrier ஆகத் தொழிற்பட்டாலும் யன்னல்கள் மின் இணைப்புக்கள் நிலங்கள் ஆகியவற்றினூடாக வளிப் பரிமாற்றம் நடைபெற ஏதுவாகவுள்ளது. ஆகவே இந்த இடங்கள் கவனமாகக் கவனிக்கப்பட்டுத் திருத்தம் செய்யப்படல் வேண்டும். அல்லாதுவிடில் பூஞ்சணம் வளர்ந்து சுவர்கள் பழுதடைவதோடு வெப்பத்தடைத் திறனும் குறையும் வெப்பத்தடைச் சாதனங்கள் இடைவெளிகளை முற்றாக நிரப்பக் கூடியவையாகவும் இருத்தல் வேண்டும். Spray Foam போன்றவை சிறந்தவையாகும்.

### Attic Insulation:

வீட்டின் கூரையை வெப்பத்தடை செய்வது அதிக செலவுள்ள ஒன்றாகும் வழமையாக Ceilingஇற்கு மேல் உள்ள பகுதி மிகவும் எளிதாக வெப்பத்தடைப் பொருள்களால் நிரப்பப்படும் Ceiling இல் உள்ள Air barrier சுடான வீட்டினுள் உள்ள வளியைக் குளிர்ந்த கூரைப்பகுதிக்குச் செல்லவிடாது தடுக்கக் கூடியதாக இருக்க வேண்டும். இதில் உள்ள பொருத்துக்கள், சுவர்களின் மேற்பகுதி, குழாய்கள் இணைக்கப்படும் பகுதி ஆகியவற்றில் வளிக்கசிவு உண்டா என அவதானித்தல் வேண்டும் அதே வேளையில் புதிதாகச் சேர்க்கப்படும் வெப்பத்தடைப் பொருட்களினால் வளிச்சுற்றோட்டம் தடைப்படாது பார்த்துக் கொள்ளல் வேண்டும்.

### Basement Insulation:

நிலக்கீழ்ச் சுவர்களினூடாகவே அதிகளவு நீராவிப் பரிமாற்றம் நடைபெற ஏதுவாகின்றது. வெப்பத் தடை செய்வதற்குச் சிறந்த முறை சுவரின் வெளிப்பக்கத்தில் செய்வதே ஆகும். Polythelene, Fiberglass போன்றவற்றால் வெளிச்சுவரில் வெப்பத்தடை செய்வதனால் சுவர்கள், பழுதடையாமலும் அதேவேளை நீர் வழிந்தோடக் கூடியதாகவும் உள்ளது. அதோடு கூட நிலக்கீழ்ச் சுவர்கள் அறை வெப்பநிலையில் உள்ளதால் உட்சுவர்களில் நீராவிபடிதல் தடுக்கப்படுகின்றது.

### வெப்பத்தடையும் சில தீமைகளும்:

இந்த முறையில் வெப்பத்தடை செய்வதில் சில தீமைகளும் உண்டு.

- அதிகளவு பணச் செலவு
- Landscape செய்வதில் உள்ள இடைஞ்சல்.
- Insulation செய்த பகுதியை மூடுதல்.

உட்சுவரில் வெப்பத்தடை செய்வது இலகுவானதும் செலவு சுருக்கமானதுமாகும். ஆயினும் நிலக்கீழ் அறைச் சுவர்கள் சுற்றிலும் உள்ள நிலத்தின் வெப்பநிலையில் இருப்பதனால் வீட்டினுள் உள்ள குளிர்ந்த வளி சுவர்களில் நீராவிப்படிவை ஏற்படுத்தும். எனவே நீராவிப்படிவு உள்ள வீடுகளுக்கும் இந்த முறை உசிதமானது அல்ல.

prabha.sinna@thaiveedu.com

■ ■ ■

SELS Inc.
CARRIER & RIDE SERVICES
OTTAWA ➡ KINGSTON ➡ TORONTO ➡ HAMILTON

Ottawa Greenboro பஸ் தரிப்பிடத்திலிருந்து புறப்படும் நேரம்:
திங்கள் to வெள்ளி காலை 10:00 மணிக்கும் மாலை 6:30 மணிக்கும்
ஞாயிறு மாலை 4:00 மணிக்கும் புறப்படும்.

Toronto வில் இருந்து புறப்படும் நேரம்:
திங்கள் to வெள்ளி காலை 10:00 மணிக்கும் மாலை 6:30 மணிக்கும்
ஞாயிறு மாலை 4:00 மணி

Parcels + Courier எதுவாயினும் உரிய இடத்துக்குப் பாதுகாப்பாகக் கொண்டு போய்ச் சேர்க்கப்படும்.

நீண்ட விடுமுறை மற்றும் வார நிறைவு நாட்களில் சிறப்புச்சேவை உண்டு!

We also do small Moving and Parcel delivery all over Ontario!

உங்கள் மனநிறைவே எங்கள் தரம்!

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள்:
குமரன் (செல்வா) 613.889.8733 / 647.648.0166
மின்னஞ்சல்: sels4ride@gmail.com

ROOM ABOVE THE GARAGE TOO COLD ?
உங்கள் garageற்கு மேல் உள்ள வீட்டின் பகுதி தற்போது அதிக வெப்பமாகவோ அல்லது பனிக்காலத்தில் அதிக குளிராகவோ இருக்கின்றனவா?
அதற்கான விடையைப்பெற இன்றே அழையுங்கள்


An intelligent choice of insulation
for higher performance & air sealing
416.912-2449
sprayfoam CARE
CARE AS IF IT'S OUR OWN
We also do attic insulation



**People don't plan to fail, but they do fail to plan**

- Estate Planning
- Disability Income Insurance
- Critical illness Insurance
- Mortgage Insurance
- No medical exam Life Insurance
- Permanent Life Insurances
- Term Life Insurance
- Travel & Visitor Insurance
- RRSP Loan / Investment
- RESP

You don't have to take life the way it comes to you...
You can design your life to come to you the way you want!

**நாளை நம் கையில்**
**இன்றே செயற்படுங்கள்**



*As an Independent Insurance Broker,*
*I will shop around for you and get you the best rate...*

**Guna Thuraisingham** M.A.Sc (Eng.)
*Independent Insurance Advisor*
**Dir: 416 528 1407**
Tel: 905 230 4986 | guna@elite-associates.ca
www. elite-associates.ca

**Auto & Home Insurance**
குறைந்த கட்டணத்தில் பெற்றுத் தரப்படும்

INDUSTRIAL ALLIANCE · RBC Royal Bank · Assumption Life · Desjardins · Manulife · Foresters



**வர்த்தக நிறுவனங்கள் வாங்க, விற்க**

**Home Life**
GTA Realty Inc., brokerage
206-1711 McCowan Road, Scarborough, ON. M1S 3YS
Bus: 416-321-6969 Fax: 416-321-6963

HOMELIFE
Highest Standards

**Baskaran Sinnadurai**
Commercial & Residential Sales Representative
**416-880-8585**








**BRAND NEW**
**BANQUET HALL,**
**INDUSTRIAL**
**AND**
**WAREHOUSE**
**IN 4.7 ACRE LAND**

# நீதிகேட்கும் நீதி...

4ம் பக்கத் தொடர்ச்சி...

களும் சமநிலைகானத்தடைகளும் உருவாக்கப்பட்டு இருக்கும். அதிகாரப்பிரிப்பு (Separation of Power) செயற்படாத நிலையில் அரசாங்கம் சர்வாதிகாரப் போக்கினை நோக்கிச் செல்கிறது என்ற கருத்தினை மக்கள் தெரிந்து கொள்ளவேண்டும்.

மக்களினால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் தங்களுக்கு மக்கள் கொடுத்த ஆணையைத் தவறாகப் பயன்படுத்துவதன் மூலம் சட்டத்தினை வியாக்கியானம் செய்யும் நீதித்துறையினை வழிநடத்த முயலுகிறார்கள் என்ற வாதம் பயிர் வேலியை மேய்வதாக அமைந்து விடுகிறது.

சட்டத்தை இயற்றுவது பாராளுமன்றத்தின் வேலை அதற்காகவே மக்கள் தெரிந்தெடுத்த பாராளுமன்ற உறுப்பினர்களிருக்கிறார்கள். அவர்களது சுதந்திரம் பேணப்படவேண்டும். இன்று தமிழ் அரசியல்தலைவர்கள் பலரும் குறிப்பாக வன்னி மாவட்டப்பாராளுமன்ற உறுப்பினரும் தமது பாதுகாப்பின்மையினை உணரத் தொடங்கியிருக்கின்றனர்.

மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட ஜனதிபதி, நிறைவேற்று அதிகாரம் கொண்டவர், தனது மந்திரி சபையூடாக அதனை நிறைவேற்றும் பொழுது பாராளுமன்றத்தையோ, நீதித்துறையை விலைக்கு வாங்குவதோ, கட்டாயப் படுத்துவதோ சரியானதாக அமையப்போவதில்லை. மக்களால் தெரியப்பட்ட ஜனாதிபதியையே விசாரணைக்குட்படுத்தும் அமெரிக்க ஜனநாயகத்துடன் நோக்கும்பொழுது இலங்கையில் சமநிலைபேணும் தடைகள் சரிவர இயங்கவில்லை என்ற கருத்தினை மக்கள் பெற்றுக்கொள்ளும் நிலைமைகள் உருவாகி வருவதனைக் காணமுடிகிறது.

அரசியற்திட்டம் உருவாக்கப்பட்ட பொழுது அதிகாரங்களும் பெறுப்புக்களும் இம்மூன்று துறைகளுக்குமிடையில் பிரிக்கப்படுவதனை உறுதிசெய்வதுடன், எந்த ஒரு துறையும் மற்றையதனைவிடக் கூடிய அதிகாரத்தினைப் பெற்றிருக்கக்கூடாது என்பதனையும் தெளிவாக்கொண்டிருக்கிறது.

நாம் அரசியற் திட்டங்களை மாற்ற வேண்டும் என்று அடிக்கடி கூறிக்கொள்வதும் மாற்றுவதும் இலங்கையில் சர்வ சாதாரணமாகி விட்டது. மூன்றில் இரண்டு பலங் கொண்ட பெரும்பான்மை அரசுகள் இயல்பாகவே அதற்குத் துணிந்துவிடுகின்றன. இதற்கு இன்றைய அரசாங்கமும் விதிவிலக்காகிவிட முடியாது. இப்பொழுது செய்யக் கூடிய மாற்றம் தமிழர்களினதும் ஏனைய வகைச் சிறுபான்மையினரதும் கௌரவத்தினையும் பாதுகாப்பினையும் உறுதிப்படுத்தக் கூடிய மாற்றத்தைக் கொண்டு வருமாயின் அது வரவேற்கத்தக்கதேயாகும்.

இலங்கை வரலாற்றில் தமிழர்களுக்குச் சாதகமான அல்லது பாதகமான நிலைப்பாடொன்றினைச் செய்ய வேண்டுமாயின் அது சர்வாதிகார அரசாங்கத்தினால் தான் முடியும் என்ற நிலைப்பாடு உறுதியாகியுள்ளது. இன்று நாம் எதனை உருவாக்கப்போகிறோம். பிழையான பாதையால் செல்லும் அரசாங்கம் இறுதியில் நல்ல இடத்தைக் கொண்டு சேர்க்குமாயின் அது பாராட்டப் படவேண்டியதே. ஆனால் பழிவாங்குதலையும் இனவிரோதங்களையும் தூண்டக்கூடிய செயற்பாடுகள் குறுகிய காலத்துக்கு ஒருசிலருக்கு மகிழ்ச்சியைக் கொடுத்து மறையும் தன்மையானது என்பதனை ஆட்சியாளர்கள் மறந்துவிட முடியாது.

என். மாணிக்கம் என்பவர் இந்தியாருடேயில் வெளியிட்ட கருத்தினை இங்கு குறிப்பிடுதல் பொருத்தமானது 'நமது நாடு ஒரு குடியரசு நாடு. குடிமக்களைப் பாதுகாப்பது நமது பார்லிமன்ட் வாயிலாகச் சுப்பிரீம் கோட். மக்களின் உரிமையினைப் பேணிக்காப்பது நம் அரசியல்சாசனம். அந்த அரசியல் சாசனத்தைக் கட்டிக் காப்பது சுப்பிரீம்கோட். அரச அதிகாரப் பொறுப்பிலிருப்போர் அரசியல் சாசனப்படி நடக்க உறுதி எடுத்துக் கொண்டவர்கள் அவர்கள் கோட் உத்திரவுகளுக்குத் தலைவணங்க வேண்டும். இல்லையென்றால் அரசியற்சாசனத்துக்கும் நாட்டின் ஒருமைப் பாட்டிற்கும் எதிரானவர்களாகிவிடுவார்கள்.'

நீதித்துறை ஒரு நாட்டில் முக்கியமானது போல் சட்டவாக்கமும் முக்கியமானது அதனை மக்கள் தெரிந்து கொள்ளவேண்டும் அண்மையில் கனடா நாட்டில் ஆட்கடத்தலுக்கு எதிரான சீ 31 பற்றிக் கருத்து வெளியிட்ட நீதிபதி ஆர்னி சில்வமான் (Arne Silverman) அச்சட்டம் உண்மையான பிரச்சினையினை அணுகத்தவறி விட்டது எனவும் இது கடைசியில் மனிதாபிமான உதவியாளர்களைச் சட்டத்தின் முன் நிறுத்திவிடும் என்றும் இந்த இடைவெளியை நிரப்ப வேண்டியது பாராளுமன்றத்தின் வேலை என்பதனை தெரிவுபடுத்தி அதிகாரப்பகிர்வின் எல்லையினை நன்கு தெளிவுபடுத்தியிருந்தார். 'This is not the court's job, nor does it have the authority to choose what those priorities are or should be. This is the job of Parliament,' Judge Silverman ruled.

அதிகாரப்பிரிப்பு தனியாக அரசியல் விஞ்ஞான மாணவர்களுக்கான பாடமாகவன்றி நடைமுறையில் பிரயோகிக்கப்படுகின்ற பொழுதில் அதனால் பயனடைபவர்கள் மக்களாகிய பயிர்கள் தான். இங்கு பெறுப்புடன் நடக்கவேண்டிய மக்களின் பிரதிநிதிகள் மக்களை நோக்கிச் செல்லும் நாள்வரை தான் தோன்றித்தனமாக நடப்பது சனநாயகமாகி விடாது.



kanapathipillai.a@thaiveedu.com

# உறவுகள் பிரியும்...

18ம் பக்கத் தொடர்ச்சி...

ஏனென்றால் அழுவதற்கும் சிரிப்பதற்கும் பயிற்சிப்பட்டறைகள் வைத்து பாசத்தில் வேஷம் கலக்கும் சமூகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

பைபிளில் இவ்வாறு ஒரு குறிப்பு இருக்கிறது. 'உண்மையான நண்பன் எல்லாக் காலத்திலும் நேசிக்கிறான், கஷ்டகாலத்தில் உன்னோடு இருக்கிறான், உதவியை நாடுவதற்கு, பேசுவதற்கு, அழுவதற்கு பயப்படாதே, அழுகிறவர்களுடனே அழுங்கள்'. ஆம் துக்கப்பட அனுமதியுங்கள். துக்கிப்பது உணர்ச்சிகளை வெளியேற்றும் வடிகாலாக அமைகிறது. உணர்வுகளை உள்வாங்கி அழுத்தத்தை இயல்பாக அதன் பாணியில் வெளிக்காட்டுவது அவசியமாகிறது. இது உங்களில் சமநிலையைப் பேண உதவுகிறது. கண்ணீர் சிந்துதல் குணமாதலின் முக்கிய படியாகும்.

பேசுவது, கேட்பது இவையிராண்டுமே துக்கத்தை வெளிப்படுத்தும் வடிகாலாக இருக்கிறது. ஷேக்ஸ்பியர் இவ்வாறு சொல்கிறார் 'துக்கத்திற்கு சொல்வடிவம் கொடுங்கள், சொல்வடிவம் பெறாத துக்கம் பாரமான இதயத்தை நொருங்கச் செய்கிறது.'

பொறுமையுடனும் அனுதாபத்துடனும் கவனித்துக்கேட்கிற உண்மையான உறவுகளிடம் உங்களின் உள்ளக்குமுறலான உணர்ச்சிகளைப்பற்றிப் பேசுவது நிச்சயம் ஆறுதலைத் தரும்.

துக்கம் விசாரித்தல் - என்பது பொதுவாக எல்லா சமூகங்களிலும் உள்ள நல்ல பண்பாடு, நமது சமூகத்தில் உள்ள சில நடைமுறைகளையும் ஏற்றுக்கொண்டு போற்றித் தான் ஆகவேண்டும்.

அண்மையில் உறிவினர் ஒருவரின் மரணச் சடங்கில் இறுதியாத்திரை செல்ல முதல் எல்லா ஆயத்தப்பணிகளும் முடிவுற்ற நிலையில் அந்த மண்டபத்தில் ஒரே அமைதி. அப்போது நான் அவரைப்பற்றி கண்ணீரோடு எழுதிய கவிதையைப் படித்த போது அவரின் உறவினர்கள் கதறி அழுத காட்சி என்கண்களைக் கலங்கவைத்தது. சில நாட்களின் பின்பு அவரின் பிள்ளைகள் என்னிடம் 'உங்களின் அந்த கவிதை எங்களுக்கு எவ்வளவு மன ஆறுதலைத் தந்தது' என்று சொன்னார்கள். ஆம் வார்த்தைகளுக்கு அவ்வளவு வலிமையான காயம் ஆற்றும் சக்தியிருக்கிறது. இனிய வார்த்தைகள், நம்பிக்கையூட்டும் வார்த்தைகள், மனதை உருகச்செய்யும் வார்த்தைகள் மனக்காயத்தை ஆற்றும் நல்ல மருந்துகள்.

அடுத்து, 'குற்ற உணர்வுகளை சமாளித்தல்' ஆற்றுப்படுத்தலில் ஒரு முக்கியமான படியாகும். கட்டுரையின் முன்பகுதியில் குற்ற உணர்வுகள் ஏன், எப்படிப்பட்ட காரணங்களினால் வருகிறது என்பதை விளக்கியிருந்தேன். உங்களின் அக்கறையின்மை, கவனக்குறைவு போன்றவற்றால்தான் இந்த இறப்பு, இழப்பு நடந்திருக்கலாம், இதற்கு நானும் ஒரு காரணமாகி விட்டேனோ என்ற குற்றமனப்பான்மை மேலோங்கியிருக்கலாம். மனதைத் தேற்றி, திட்டமிட்டு நடந்தது அல்ல, தற்செயலானது தான் என்பதை உணர்ந்துகொள்ளவேண்டும். அதுமட்டுமல்ல உறவுகளும் நண்பர்களும், ஆற்றுப்படுத்துபவர்களும் அவருக்கு இதை உணரும்படி, புரிந்துகொள்ளும்படி செய்வது அவசியமாகிறது.

மேலும் கோபம் என்ற உணர்ச்சி பொதுவாக மேலோங்கியிருக்கும். அதற்கான காரணங்களையும் முன்னரே விளக்கியிருந்தேன். ஆம் அந்த துக்கத்திற்கு யார் காரணம் என்ற உணர்வு, அவர்கள் மீதான கோபம், பழிவாங்கும் தன்மை போன்றவற்றை சமாளிப்பது மிகவும் பொறுப்பான ஒரு விடயமாகும். கோபத்தை வெளிக்காட்டுவதன் மூலமாக அதிலிருந்து மீளமுடியாது. இன்னொருவரோடு பகிர்ந்து கொள்வது, மனம்விட்டுப் பேசுவது, உண்மையில் என்ன நடந்தது என்பதை அறிந்துகொள்வது போன்றவைதான் கோபத்திற்கு சரியான வடிகாலாக அமையும். அப்படி மனம்விட்டுப் பேசும்போது அதைக் கேட்கிற நபர் எரிகிற நெருப்பில் எண்ணை ஊற்றுபவராக இருக்கக்கூடாது. பொறுமையோடு செவிமடுப்பதையும், ஆலோசனையல்ல ஆறுதல் சொல்பவராகவும் இருப்பது அவசியம். கோபத்தை அடக்கிக்கொள்வது ஆபத்தானதாகும். (சில மாதங்களுக்கு முன்பு எழுதிய 'சினம்காக்க' என்ற கட்டுரையை படித்துப் பாருங்கள்) இச் சூழ்நிலையில் எச்சரிக்கையோடு நடந்துகொள்வதும், முக்கியமான தீர்மானங்கள் எடுப்பதை தள்ளிப்போடுவதும், உங்களுக்குள் பொறுமைகாத்தலும், மற்றவர்களோடு பொறுத்துப்போவதும், நல்ல நண்பர்களை, உறவுகளை சார்ந்திருத்தலும், தனிமையைத் தவிர்த்தல் என்பதும் முக்கியமாகும். துக்கத்தை, கோபத்தை சமாளிக்க தூக்க மாத்திரைகள், ஊக்கமருந்துகள், மனச்சோர்வுக்கான மருந்துகள், மதுபானம், போதை மருந்துகள் போன்றவற்றை எடுத்துக் கொள்ளக்கூடாது.

சில நாட்களில் பின்பு வழக்கமான வேலைகளைத் தொடரலாம். உடற்பயிற்சிகள், தியானம், யோகாசனம், கூட்டுப்பிரார்த்தனை போன்றவிடயங்களில் கவனத்தை திசைதிருப்பலாம்.

ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தைகள், செய்கிற உதவிகள் மட்டுமல்ல, நண்பர்கள், உறவுகள் பாதிக்கப்பட்டவரின் வீட்டுக்கு அடிக்கடி சென்று தாமாக முன்வந்து பேசிக்கொண்டிருப்பது மட்டுமல்ல வீட்டில் உள்ள அவசியமான பணிகளைச் செய்வது மேன்மேலும் அவர்களை ஆறுதல் படுத்தும். அவர்களை தங்கள் வீட்டுக்கு அழைத்தும் ஆறுதல் படுத்தலாம்.

இறந்தவரின் நினைவாக பிரார்த்தனைகள் செய்வது, ஆதரவற்றோர் இல்லங்களுக்கு உணவளிப்பது, தான தர்மங்கள் செய்வது போன்றவை மனதிற்கு இதமானதாகும். துக்கத்திலிருப்பவர்களிடம் 'எல்லாமே நன்மைக்குத்தான்' என்ற சொல்லை பயன்படுத்தாதீர்கள். அது மட்டுமல்ல உங்கள் சொந்த அனுபவங்களை பகிர்ந்து கொள்ளாதீர்கள்.

அவர்கள் பாவித்த பொருட்கள், உடமைகள், நினைவுப்பொருட்கள், படங்கள் போன்றவற்றை சிலகாலம் பாதுகாத்து வைக்கலாம். அவற்றை உடனடியாக அகற்றுவது அவ்வளவு நல்லதல்ல. அவை மலரும் நினைவுகளை மலரச் செய்து மனதை ஆறுதல் படுத்தும்.

*paul.joseph@thaiveedu.com*

■ ■ ■

## Annual General Meeting and Recognition - 2013








உங்கள் புதிய முகவரி காட்டும் முகவர்கள் நாங்கள்
Birchmount & Finch
$ 179,900
1+1 Bedrooms + 1 Washrooms
Mccowan & Steeles
$ 185,000
1+1 Bedrooms + 1 Washrooms
Mccowan & Steeles
$ 219,000
2 Bedrooms +2 Washrooms
Birchmount & Finch
$ 235,000
2+1 Bedrooms +2 Washrooms
Mccowan & Steeles
$ 240,000
2+1 Bedrooms + 3 Washrooms
Morningside & Staines
$ 489,900
3+1 Bedrooms + 3 Washrooms
Morningside & Staines
$ 439,000
3 Bedrooms + 3 Washrooms
Steeles & Staines
$ 549,900
4 Bedrooms + 3 Washrooms
Morningside & Nightstar
$ 489,500
3+1 Bedrooms + 3 Washrooms
Morningside & Staines
Finished Basement with Sep. Entrance
$ 514,900
4+1 Bedrooms + 4 Washrooms
Midland & Lawerence
479,900
3+2 Bedrooms + 2 Washrooms
Markham & Ellesmere
$449,900
3+1 Bedrooms + 2 Washrooms
Markham & Lawerence
Finished Basement with Sep. Entrance
$ 439,000
3 Bedrooms + 2 Washrooms
Steeles & Staines
Finished Basement
$ 534,900
4+1 Bedrooms + 3 Washrooms
Scar.Golf & Brimorton
Finished Basement with Sep. Entrance
$ 379,900
3+1 Bedrooms + 2 Washrooms
Westney & Taunton
Ajax
354,900
3 Bedrooms + 3 Washrooms
Salem & Williamson
Ajax
$439,900
3 Bedrooms + 3 Washrooms
Rossland & Salem
Ajax
$ 579,000
4+1 Bedrooms + 3 Washrooms
Westney & Taunton
Ajax
Finished Basement with Sep. Entrance
$ 529,900
4 Bedrooms + 4 Washrooms
Rossland & Audley
Ajax
$ 520,000
4+2 Bedrooms + 4 Washrooms
Taunton & Baldwin
Whitby
$ 449,000
4 Bedrooms + 3 Washrooms
Rossland & Salem
Ajax
$ 599,000
4+1 Bedrooms + 3 Washrooms
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Pho:(905)-201-9977 Fax :(905)-201-9229
*Independently Owned and Operated
Mugunthan Nadarajah
Sales Representative
Direct: 416-276-8025
www.realhouse.ca
Thamil Suberamaniam
Sales Representative
Direct: 416-358-6200
SELLING-BUYING-INVESTING

# கனடாவில் தனிநபரின் வங்குரோத்து நிலை

## (Personal Bankruptcy in Canada)



வி. சிறி

கனடாவில் வங்குரோத்து நிலை என்பதன் எண்ணக் கருத்து உங்களது கடன்கள் அனைத்தையும் முழுமையாக இல்லாமல் செய்வதற்காக நீங்கள் உங்களது சொத்துக்கள் அனைத்தையும் வங்குரோத்து செயற்பாட்டுக்கான நம்பிக்கை பொறுப்பாளரிடம் (trustee in bankruptcy) ஒப்படைப்பதாகும். வங்குரோத்து செயற்பாட்டின் உதவியின் மூலம், அதிகளவு கடன் சுமையை உடைய ஒருவர் புதிய வாழ்வைத் தொடக்குவதற்கு வழி ஏற்படுகிறது.

தனியார் வங்குரோத்து என்பது கனடிய மத்திய அரசாங்கத்தின் the Bankruptcy & Insolvency Act என்ற சட்டத்துக்கு உட்பட்ட சட்டவியல் செயற்பாடாகும். நேர்மையான வாழ்க்கை நடத்தும் ஒருவர் துரதிஷ்டவசமாக கடனாளியாகும் நிலை ஏற்படுமானால் இந்தச் சட்டம் அவருக்கு நிவாரணம் வழங்கும். அதே சமயம் அவருக்கு கடன் வழங்கியவர்கள் யாவரும் சமமான வகையில் நடத்தப்படுவதற்கும் இந்தச் சட்டம் வழி வகுக்கிறது.

கனடாவில் ஒருவர் வங்குரோத்து நிலைக்கு செல்வதற்கு தகுதி பெறுவதற்கு அவர் இந்த நாட்டில் வசிப்பவராக அல்லது இங்கு வர்த்தக துறையில் ஈடுபடுபவராகவும், அவர் தனது கடனை செலுத்த முடியாதவராகவும் (Insolvent) இருக்க வேண்டும். அதன் அர்த்தம் பின்வருமாறு:

- அவர் குறைந்தது $1,000 கடனுடையவராக இருக்க வேண்டும்.
- திருப்பி செலுத்த வேண்டிய வேளையில் கடனை கொடுக்க முடியாத நிலையில் இருக்க வேண்டும்.

### வங்குரோத்து நிலை செயற்பாட்டுக்கான கட்டணம்:

வங்குரோத்து நிலை செயற்பாட்டுக்கான நம்பிக்கை பொறுப்பாளர்கள் யாவரும் மத்திய மத்திய அரசின் அனுமதி பெற்றவர்கள். அவர்களது கட்டணங்கள் யாவும் சட்டத்தினால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எனவே வங்குரோத்து நிலைச் செயற்பாட்டிற்கான கட்டணம் நியாயமானதாகவே அமையும்.

### கடன் வழங்கியவர்களின் செயற்பாடுகள் நிறுத்திவைக்கப்படும்:

வங்குரோத்து நிலை செயற்பாடு சட்டபூர்வமானது. எனவே, இச்செயற்பாடு தொடங்கிய பின்பு, கடன் வழங்கியவர்களின் செயற்பாடுகள் யாவும் நிறுத்திவைக்கப்படும் (Stay of proceedings). இதன் காரணமாக உங்களது சம்பளத்தில் இருந்து பணம் கழிக்கப்படுதல் (Garnishment), சட்ட நடவடிக்கை எடுக்கப்படுதல், கடன் வழங்கியவர்கள் உங்களை தொலைபேசியில் அழைத்தல் ஆகிய செயற்பாடுகள் யாவும் தடுத்து நிறுத்தப்படும்.

### வங்குரோத்துநிலையில் இருந்து விடுபடுவதற்கான காலம்:

நீங்கள் முன்பு எப்பொழுதும் வங்குரோத்து நிலைக்கான செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்காதவராக இருப்பவராகவும், தற்போதைய வங்குரோத்து நிலை தொடர்பான கடமைகள் பொறுப்புக்கள் என்பவற்றை முழுமையாக நிறைவேற்றியவராகவும் இருந்தால், பொதுவாக ஒன்பது மாதத்தின் பின்பு உங்களால் வங்குரோத்து நிலை பொறுப்புக்களில் இருந்து விடுபட முடியும். (வங்குரோத்து நிலையில் இருந்து விடுபடுவதற்கு நீதிமன்றம் விதித்துள்ள ஆகக் குறைந்த காலம் இதுவாகும்)

உங்களது வங்குரோத்துநிலை தொடர்பான தகவல்கள் ஆறு வருடங்கள் வரை பதியப் பட்டிருக்கும். இதன் காரணமாக எதிர்காலத்தில் நீங்கள் கடன் பெறக்கூடிய தகைமை பாதிக்கப்படலாம்.

### கனடாவில் தனிநபரின் வங்குரோத்து நிலை (Personal Bankruptcy in Canada):

ஒரு தனி நபர் வங்குரோத்து நிலைக்கு விண்ணப்பிக்க வேண்டி ஏற்படுவதற்கான காரணம் என்ன?

> “ வங்குரோத்து நிலை செயற்பாடு தொடங்கிய பின்பு, உங்களது சம்பளத்தில் இருந்து பணம் கழித்தல், கடன் வழங்கியவர்கள் உங்களைத் தொலைபேசியில் அழைத்தல் போன்ற செயற்பாடுகள் யாவும் தடுத்து நிறுத்தப்படும். ”

பெருமளவு கடன் சுமை காரணமாக நீங்கள் நிதி நெருக்கடியை சந்திக்க நேரிடும் போது, வங்குரோத்து நிலைக்கு விண்ணப்பம் செய்து உங்கள் பிரச்சினைக்கு முடிவு காண்பது பற்றி நீங்கள் சிந்திக்கலாம். கனடாவில் ஒவ்வொருவருடமும் ஏறக்குறைய 100,000 பேர் தனிநபர் வங்குரோத்து நிலை (Personal Bankruptcy) அல்லது கடன் பெற்றவர்கள் முன்வைக்கும் ஆலோசனைகள் (Consumer Proposal) என்ற செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

### உங்களுக்கு பின்வரும் பிரச்சினைகள் ஏதாவது உண்டா?

- வேலை இழப்பு அல்லது தனிப்பட்ட வர்த்தக செயற்பாட்டில் நஷ்டம் ஏற்பட்டதனால், வருமான இழப்பு ஏற்படுதல்.
- உங்களது வருமானத்தில் இருந்து திரும்ப செலுத்த முடியாத அளவுக்கு அதிக அளவான மாணவர் கல்விக் கடன் இருத்தல்.
- விபத்து அல்லது கடுமையான நோயின் காரணமாக பெறப்பட்ட கடனைத் திருப்பிக் கட்ட முடியாத நிலை ஏற்படுதல்.

### நீங்கள் எதிர்நோக்கும் நிதி நெருக்கடிக்கு தனிப்பட்ட முறையிலான வங்குரோத்து மட்டுமா ஒரே தீர்வு?

இல்லை. தனிப்பட்ட முறையிலான வங்குரோத்து நிலைக்கு விண்ணப்பிப்பதற்கு முன்பு நீங்கள் பல்வேறு மாற்றுவகையிலான தீர்வுகளை ஆராய்வது அவசியம். அவ்வாறான சில தீர்வுகள் பின்வருமாறு.

- உங்களது கடன்களை ஒன்றிணைக்கும் கடன் (Debt Consolidation Loan) பெறுதல்.
- Credit Counseling பெற்று உங்களது கடனை கட்டுப்படுத்த முயற்சி செய்தல் (Credit Counselling & Debt Management).
- கடன் பெற்ற ஒருவர் கடன் வழங்கியவர்களிடம் பெற்ற தொகையின் ஒரு பகுதியை திரும்ப செலுத்துவது தொடர்பாக ஆலோசனைகளை முன்வைத்தல். (Consumer Proposal)
- தனியார் வங்குரோத்து நிலைக்கான செயற்பாடு (Personal Bankruptcy) க்கு முயற்சித்தல்.

மேலே உள்ள நான்கு தீர்வுகள் ஒவ்வொன்றும் அதற்கு முன்பு குறிப்பிடப்பட்டுள்ள தீர்வை விட கடுமையான தன்மையுடையது. எனவே மேலே குறிப்பிடப்பட்ட நான்கு வகை தீர்வுகளையும் அதே ஒழுங்கு வரிசையில் ஆராய வேண்டியது அவசியம்.

இவற்றில் எது உங்களுக்கு பொருத்தமானது என்று நீங்கள் முடிவு செய்வதற்கு, அனுமதி பெற்ற வங்குரோத்து நிலை பொறுப்பாளர் ஒருவரின் உதவியைப் பெறமுடியும்.

### தனிநபர் வங்குரோத்து நிலையினால் ஏற்படும் நன்மை, தீமைகள்.

**நன்மைகள் (Advantages):**

- நீங்கள் பெற்ற கடனை, உங்களிடமிருந்து பெறுவதற்கு சட்டபூர்வமான நடவடிக்கை எடுத்தல், உங்களது சம்பளத்தில் இருந்து பணம் (aynishment) கழிக்கப்படுதல், பணம் அறவிடுவதற்கான தொலைபேசி அழைப்புக்கள் என்பனவற்றில் இருந்து பாதுகாப்பு வழங்கப்படுகிறது.
- நீங்கள் பெற்ற உத்தரவாதமற்ற கடன்கள் (Unsecured Debts) முற்றாக நீக்கப்படுகிறது.
- சட்டபூர்வமான இந்த செயற்பாட்டை மிக விரைவாக செய்து முடிக்கலாம்.
- உங்களது பிரச்சினைக்கான ஏனைய தீர்வுகளை விட வங்குரோத்து நிலை செயல்ப்பாடு மிகவும் குறைந்த செலவுடையது.

**தீமைகள் (Disadvantages):**

- நீங்கள் கடன் பெறக்கூடிய தன்மை கடுமையாக பாதிக்கப்படும்.
- நீங்கள் உங்களது உடமைகள் சிலவற்றை வங்குரோத்து நிலை பொறுப்பாளரிடம் ஒப்படைக்க வேண்டி நேரிடலாம்.

நீங்கள் வங்குரோத்து நிலையில் இருக்கும் காலப்பகுதியில் உங்களது வரவு, செலவு பற்றிய விபரமான பதிவுகளை (Detailed records of your income and expenses) பதிவீடு செய்து வைக்க வேண்டிய கட்டாயம் உண்டு.

### உங்ககளது கடன்களில் இருந்து விடுபடுவதற்கான விதிவிலக்குகள்.

**A. உத்தரவாதமற்ற கடன் (Unsecured Debts)**

வங்குரோத்து நிலை செயற்பாடு என்பது

- கடன் அட்டை (Credit cards)
- தனிப்பட்ட கடன் (Personal Loans),
- வருமான வரி (Income Tax)
- உங்கள் வங்கி கணக்கில் உள்ள தொகையை விட மேலதிகமாக பணம் எடுத்தல் (Over Draft)

போன்ற விடயங்களுடன் மட்டுமே ஈடுபடுகிறது.

**B. உத்தரவாதத்துடன் பெறப்பட்ட கடன் (Secured Debt):**

கார் வாங்குவதற்காக பெறப்பட்ட கடன் (Car Loan) வீட்டு அடைமானக் கடன் (Mortgage) ஆகியவை வங்குரோத்து நிலை செயற்பாடுகளில் உள்ளடக்கப்படுவதில்லை. ஏனெனில் இவ்வகையான கடன்களை பெறும் போது ஏதாவது ஒரு சொத்தை பொறுப்பாக வைத்து அந்த உத்தரவாதத்தின் அடிப்படையிலேயே நீங்கள் கடன் பெறுகிறீர்கள். எனவே நீங்கள் அவர்களுக்கு செலுத்த வேண்டிய கடனை உங்களிடமிருந்து பெறுவதற்கு அவர்கள் வங்குரேத்து நிலை செயற்பாட்டினூடாக செயற்பட வேண்டியதில்லை.

**குறிப்பு:** உத்தரவாதமின்றி பெறப்பட்ட ஒரு சில வகை கடன் பொறுப்புக்களில் இருந்து வங்குரோத்து மூலம் விடுபட முடியாது.

**உதாரணம்:**

- நீங்கள் உங்களது கல்வியை முடித்து 7 வருடங்களுக்கும் குறைவான காலம் வரையிலான, மாணவர்களது கடன் (Student Loan)
- தாபரிப்பு பணம் (Alimon payment), பிள்ளை பராமரிப்புக்கான பணம் (child support).


சொத்துக்கள் முழுவதையும் ஒப்படைப்பது தொடர்பான விதிவிலக்குகள் (Exceptions to the Surrender of all Assets) பற்றிய விபரங்களுடன், ஜனவரி மாதத்தொடர் வளரும்...

sri.v@thaiveedu.com

■ ■ ■

Consult Ranjan
Project Management & Construction Services
Consulting | Engineering | Management
KNOWLEDGE THAT GETS RESULTS
Tel.: 416.627.5664
E-mail: ranjan@consultranjan.com
www.consultranjan.com
Team Leadership • Expert Testimony • Municipal Planning • Project Management • Development Planning • Specifications Review • Contract Administration • Zoning Changes • Building Permits • Plan Review • Public Relations • Construction Technology • Industrial Reuse Strategies


www.NewReleaseCondo.com
SUJAN SHAN .com
Real Estate Broker 416.262.2000
5 YEARS RATE
2.84%
Please call for details
Conditions may apply
Condo DEAL of the month
Asking only
$329K
Park Side Village Mississauga
Assignment Unit, Never Lived in 2 Bed, 2Bath, 750sf, Including Parking and locker. Top of the model finishes, 10" Ceiling, Next to Square One, Easy Access to HWY.
Condo Listing
www.NewReleaseCondo.com
Asking $398K
Pier 27 Condos
1 Bed, 500sf, Right on the water
Asking $540K
ICE Condos Ph1
2Bed, 2Bath, 780sf, Including Parking
Call for more unit availability
Asking $370K
ICE Condos Ph2
1Bed, 500sf, Best View, Next to Union Station
Asking $460K
Charlie Condos
1+Den, 721sf, Best View, Higher Floor
Asking $490K
FLY Condos
2Bed, 2Bath, 900sf, next to CN Tower
U Condos
Next To U of T, Many Units for Assignments
Asking $350K
L Tower
1Bed, 490SF, Higher Floor, Next to union station
Asking $360K
Monde Condos
Great Gulf Project, Many Units For Sale
2 Years Rental Guarantee
2 Years Mortgage Interest Free
2 Years Free Maintenance
2% Cash Credit
Asking $280K
Britt Condos
Next to U of T, York Ville Shopping, 5 Major Hospitals
Aura Condos
Tallest Tower, 80 Storey, Lots of Assignments for Sale
THREE HUNDRED
Asking $370K
300 Front Street
by Tridel, 1Bed, higher floor
Asking $350K
BISHA Condos
Heart of Entertainment District, BEST HOTEL CONDO
SUJAN SHAN
Real Estate Broker
@NewReleaseCondo
Investor, Engineer & Real Estate Professional; specialized in pre-construction condominium sales in Toronto area with Passion!
Direct: 416.262.2000 • www.NewReleaseCondo.com
RE/MAX
Vision Realty Inc., Brokerage
Office: 416.321.2228
1-2210 Markham Rd. Toronto, ON M1B 5V6


Buying Or Selling
Residential, Commercial, Land
& Investment Properties
Brimley/Sheppard $35,000 For Sale
Jane/Yorkwoods $105,000 For Sale Bedrooms 3, Washrooms 2
Jane/Finch $124,900 For Sale Bedrooms 2, Washroom 2
Eglinton/Kennedy $289,000 For Sale Bedrooms 3, Washrooms 2
Neilson/Mclevin $328,900 For Sale Bedrooms 3, Washrooms 3
Lawrence/Midland/Eglinton $399,800 For Sale Bedrooms 3+2, Washrooms 2
Highway 401/Mccowan $399,990 For Sale
Britannia/9th Line $439,800 For Sale Bedrooms 3+2, Washrooms 4
North Of Lawrence $459,300 For Sale Bedrooms 3+2, Washrooms 2
Gore/Ebenezer $469,000 For Sale Bedrooms 3+1, Washrooms 4
Staines/Morningside/Steeles $489,900 For Sale Bedrooms 3+1, Washrooms 3
Hoover Park & 9th Line $499,900 For Sale Bedrooms 3, Washrooms 3
9th Line /14th Ave $679,900 For Sale Bedrooms 4+2, Washrooms 5
Scarborough Golf Club & Ellesmere $409,000 For Sale Bedrooms 3+2, Washrooms 2
HOMELIFE
HIGHER STANDARDS
Sathy Sivasubramaniam Sales Representative
2004/2005 Silver Award
2006/2009 Platinum Club Award
2010 / 2012 Chairman Club Award Top 5% Sales Rep in Canada
2011 / 2012 Sales person of the Year
For Sellers:
Free Market Evaluation Available
Competitive commission Packages available
Will pay for Staging & Consultation
Will pay for the Professional Photographer
Virtual Tour
Color Brochure
Will do open house until house get sold.
Will market your home with social medias
For Buyers
Will find the home in any area within your budget
Get you the lowest mtg. rate
1 Year Home Warranty Available for Limited Time
Preferred pricing on Furniture, Appliances & Electronics through "The Brick" up to 35% off
HomeLife/Future Realty
205-7 Eastvale Drive, Markham, Ont L3S-4N8
Office: 905-201-9977 / Fax: 905-201-9229 / Direct: 416-624-5044 E-mail-homelifesathy@gmail.com www.homelifesathy.com




# ஒரு கடுமையான சுகவீனம் உங்களைத் தாக்கும் போது, நீங்கள் கவலைப்பட விரும்புகிற கடைசி விஷயம் என்பது பணம் தான்

நாம் அனைவருமே நமது எதிர்காலம் குறித்து சிந்தித்திருக்கிறோம் மேலும் நாம் செய்து முடிக்கவும் அனுபவிக்கவும் விரும்புகிற விஷயங்களைக் குறித்து நாம் கனவு கண்டிருக்கிறோம். சில நேரங்களில், நமது திட்டங்களை மாற்றிவிடுகிற, எதிர்பாராத திருப்பங்களும் நமது வாழ்க்கையில் வந்து விடலாம் என்பதும் நமக்குத் தெரியும்.

அது போன்ற எதிர்பாராத திருப்பங்களில் ஒன்று தான், ஒரு சுகவீனம் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்படுவது. அதிர்ஷ்டவசமாக, முன் எப்போதும் இல்லாத அளவிற்கு, கடுமையான சுகவீனங்களிலிருந்தும் நாம் உயிர்பிழைத்து வாழ்கிறோம் என்பதை மருத்துவத் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் சாத்தியமாக்கியுள்ளன. அது போன்ற சுகவீனங்களிலிருந்து மீண்டு வருவதற்கான பாதை மிகவும் வேதனை மிகுந்ததும், அதிகச் செலவு பிடிப்பதுமாக இருப்பதால், நீங்கள் சுகவீனங்களிலிருந்து மீண்டு வரும் போது நீங்கள் கடைசியாகக் கவலைப்பட விரும்புகிற விஷயம் உங்கள் நிதிகள் தான்.

## ? உங்களுக்குத் தெரியுமா?

50 வயதுடையதோர் தம்பதியர், ஒரு கடுமையான சுகவீனத்தை அனுபவிப்பதற்கான நிகழ்தகவு




* ஆண் மற்றும் பெண் வயது 50 மற்றும் தனியாக இருப்பவர் என்ற அடிப்படையில்


நீங்கள் ஒரு கடுமையான சுகவீனத்தை சந்திக்கிற பட்சத்தில், உங்களது திட்டங்களும் தற்போதைய வாழ்க்கை முறையும் எவ்விதம் மாற்றமடையலாம்?

நீங்கள் என்ன செய்வதைத் தேர்ந்தெடுப்பீர்கள்? இவை, நீங்களே உங்களிடம் கேட்கத் தகுதியுள்ள கேள்விகளாகும்.

## கோரிக்கைகளில் $155 மில்லியன் அளவிற்கும் மேலான தொகையை செலுத்தியிருப்பதோடு, மீண்டு வருவதில் கனடா நாட்டவர்கள் கவனம் செலுத்த உதவுகிறது

உதவுவதற்காக இங்குள்ளது சன் லைஃப் ஃபினான்சியல். சன் லைஃப் ஃபினான்சியல் நிறுவனத்தின் கடுமையான சுகவீனக் காப்பீட்டின் மூலம், உங்களை திடீரென ஒரு கடுமையான சுகவீனம் தாக்குகிற பட்சத்தில், உங்கள் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதில் நீங்கள் கவனம் செலுத்த முடியும்.

2011 ஆம் ஆண்டில் கொடுத்துள்ள பலன்கள்




2011 ஆம் ஆண்டில் நாங்கள் கனடா நாட்டவர்களுக்கு எவ்விதம் உதவி செய்தோம் என்பது குறித்த சில விபரங்கள் இதோ:

- கொடுத்துள்ள எமது சராசரி கோரிக்கைத் தொகை: $76,259
- ஓர் பலன் பெற்றவரின் சராசரி வயது: 49
- பாலிசி வாங்கிய ஐந்து ஆண்டுகளுக்குள் கோரிக்கைகள் கொடுத்துள்ளது: 36%

## *கேள்விகள்?*

நம்பகமான சுகாதாரக் காப்பீட்டுத் தீர்வுகள் கொண்டு, எதிர்காலத்திற்கான உங்கள் இலக்குகளை நீங்கள் அடைய உதவுவதற்கு இதோ நாங்கள் இருக்கிறோம். ஆண்டாண்டு காலமாக, கனடா நாட்டவர்களுக்குக் கடுமையான சுகவீனக் காப்பீட்டை வழங்குவதில் சன் லைஃப் ஃபினான்சியல் நிறுவனம் முன்னோடியாக இருந்து வருகிறது மேலும் உங்கள் ஆயுள்கால நிதிப் பாதுகாப்பை நீங்கள் அடைந்து கொள்ள உதவுவதற்காக, நாங்கள் தொடர்ந்து புதுமையான தீர்வுகளை வழங்கி வருகிறோம்.

உங்கள் எதிர்காலத்திற்கானதோர் திட்டத்தை உருவாக்குவது குறித்து இன்றே என்னிடம் பேசுங்கள்.



**Ajith Sabaratnam**
Bus 416-439-2800
Cell 647-401-5800
ajith.sabaratnam@sunlife.com
www.sunlife.ca/ajith.sabaratnam

Sun Life Financial
Life's brighter under the sun

© Sun Life Assurance Company of Canada, 2013.



# TIME FOR SOLUTIONS

## மாதாந்தக் கட்டணங்கள், நிதி நெருக்கடிகளுக்கான தீர்வு காண இதுவே தருணம்

உங்கள் அனைத்து மாதாந்தக் கட்டணங்களையும் ஒவ்வொன்றாக செலுத்துவதை விட, அவை அனைத்தையும் ஒன்று சேர்த்து மீள் அடமானக் கட்டணம் மூலம் செலுத்த முடியும். இதன் மூலம் பெருமளவு பணத்தை சேமிக்க முடியும்.

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | 320,000 @ 5.4% | 1,934.67 | - |
| Car Loan | 21,000 @7.5% | 764.25 | 0.00 |
| Line of Credit | 16,000 @ 6.5% | 566.67 | 0.00 |
| Line of Credit 2 | 12,500 @ 7% | 447.92 | 0.00 |
| Credit Card 1 | 8,800 @ 12% | 352.00 | 0.00 |
| Credit Card 2 | 5,200 @ 19% | 238.34 | 0.00 |
| Store Card | 3,000 @ 24% | 150.00 | 0.00 |
| New Mortgage payment | 386,500 @ 2.8% | | 1,584.80 |
| Total Dept | | 386,500.00 | 386,500.00 |
| Total Payment | | **4,450.85** | **1,584.80** |

இதன் மூலம் மாதாந்தம்

**$2,866.05**

சேமிக்க முடியும்

-digi Media Creations-

**Suren Nathan** AMP
Mortgage Broker
License# M08004479

Dir. **416-436-1111**

Office. 416-548-7475 Fax: 416-548-7496
suren@bonafidemortgage.ca,
7 Eastvale Drive,Unit 203, Markham, ON, L3S 4N8



BonaFide
Mortgage Solutions Inc.
the true freedom...

# ஆபத்தான சாரதியா நீங்கள்?



செந்தூரன் புனிதவேல்
- காப்புறுதி முகவர் -

நாம் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் ஆபத்தான சாரதியாக இருந்திருப்போம். எங்கள் கவனத்தை திசைதிருப்ப சில சமயங்களில் C.D. மாற்றுவதற்கு, வாகனத்தில் இருந்து குழந்தை அழுவது, அவசரம் இப்படி பல காரணங்கள் இடம் கொடுப்பதுடன் இன்றைய நவீன மயப்படுத்தப்பட் வாகனங்களும் பாதைகளும் கூட காரணமாகின்றது. முன் எப்போதுமில்லாமல் வேகமாக வாகனத்தை செலுத்துவதால் இப்படி எல்லாம் நடக்கிறது.

கனடாவில் ஒவ்வொரு நாளும் ஏழுபோருக்கும் அதிகமானவர்கள் வாகனவிபத்துகளில் உயிர் இழக்கிறார்கள். இது வன்முறையால் ஏற்படும் மரணங்களிலும் ஐந்து மடங்கு அதிகமாகும். ஆனால் கொலைகள் தாம் பத்திரிகை தலையங்கங்களில் காணப்படுகின்றது. ஆபத்தான விதத்தில் வாகன விபத்துகள் ஏற்படும் வேளைகளில் அவை முதல்பக்க செய்தியாக வருவதில்லை. இதில் வேதனைக்குரிய விடயம் என்னவென்றால் இந்த மரணத்தை ஏற்படுத்திய சாரதியோ அல்லது மரணித்தவரோ விரும்பவில்லை என்பதுடன் இது தவிர்க்கப்படக் கூடிய ஒன்று.
எவ்வளவு பிரசங்கம் செய்தாலும் இதை மக்கள் உணருவதாகத் தெரியவில்லை.

வேகத்தைக் குறைத்து வேதனையை தவிர்த்துக்கொள்ளுங்கள்.

அண்மையில் பிரிடிஷ் கொலம்பியா காப்புறுதி அமைப்பு (அரசாங்கம் நடத்துவது) இளைஞர்கள் சம்பந்தப்பட்ட மரண விபத்துகளில் 60 விழுக்காடு வேக மிகுதியால் ஏற்பட்டது என கணித்துள்ளார்கள்.

வாழ வேண்டிய இளைஞர்கள் இப்படி மரணிக்க வேண்டுமா?, சில விபத்துகள் 60 கி.மீட்டர் வேகத்தில் செலுத்தவேண்டிய பாதையில் 150 கி.மீட்டர் வேகத்தில் செலுத்தி விபத்துக்குள்ளாகி இறந்துள்ளார்கள். இது தேவைதானா என்று சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் பொலீஸ் டிக்கட்டிற்கு பயந்து மெதுவாக ஓட்டுவதிலும் ஒரு முட்டாளின் பிணமாக மாறாதிருப்பதற்கு சற்று வேகத்தை குறைத்து செலுத்தலாமல்லவா.

## யமன் வந்த செல்போன்:



ரிச்சட் ஸ்குவி என்பவர் சாதாரணமாக எல்லா கனேடியர்களும் செய்வதைத்தான் செய்தார். அவரும் அவர் இரண்டுவயது மகளும் சில வருடங்களுக்கு முன் புகை வண்டியில் அடிபட்டு இறந்தார்கள்.

ஸ்குவி செல்போனில் கதைத்தவண்ணம் புகைவண்டி கடவையை நோக்கி பிக்கரிங்கில் செலுத்திக்கொண்டிருந்தார். அங்கு சிவப்பு விளக்கு எரிவதையோ, மணி அடிப்பதையோ அவர் கவனிக்கவில்லை. அவர் அவதானம் முழுவதும் சம்பாஷணையில் இருந்தது. மெதுவாக வந்துகொண்டிருந்த CP ரெயில் 'கூட்ஸ் வண்டி' அவர் வாகனத்தை இடித்து பலநூறு அடிக்கு அப்பால் கொண்டு செலுத்தி நின்றது. மரணப் பரிசோதனை வைத்தியர் ஒண்டாரியோ மாநில அரசாங்கத்திற்கு வாகனம் செலுத்துகையில் செல்போன் பாவிப்பதை தடை செய்யும் சட்டத்தை கொண்டுவருமாறு சிபாரிசு செய்தார். அந்த அதிகாரி செல் போன்கள், வானொலிகேட்பது அல்லது சக பயணியுடன் கதைப்பதிலும் கூடிய கவனக்குறைவை ஏற்படுத்தும் என்று அவதானித்துள்ளார்.

பலர் செல்போன் கதைப்பதும் அருகில் உள்ளவருடன் கதைப்பதும் ஒரே அளவு கவனக்குறைவை ஏற்படுத்துகிறது என்று வாதிடுகிறார்கள். ஆனால் வைத்திய அதிகாரி குறிப்பிடுகையில் பல சந்தர்ப்பங் களில் சகபயணி கவனத்தை சற்று திருப் பினாலும் பல சந்தர்ப்பங்களில் ஆபத்து களை சுட்டிக்காட்டி விபத்துகளை தவிர்த்துக்கொள்ள உதவியுள்ளார்கள் என்று தொ- ிவித்துள்ளார்.

இன்று கனடாவில் செல்போன் பாவிப்பு பெருமளவில் கூடியுள்ளது. முன்பு ஓர் இருவர் பாவிக்கையில் வீதியில் ஓர் இரு முட்டாள்கள் தான் வாகனம் செலுத்தினபடியால் மற்றைய சாரதிகள் முட்டாள்களை அனுசரித்து செல்ல முடிந்தது. ஆனால் எண்ணிக்கை பெருமளவில் கூடியுள்ளதால் சட்டமூலம் இந்த ஆபத்தை தவிர்க்க வேண்டியுள்ளது.

சில வருடங்களுக்கு முன் அலாஸ்காவில் விபத்தை ஏற்படுத்திய சாரதிக்கு கொலை வழக்கு பதியப்பட்டது. DVDஇல் படம் பார்த்துக்கொண்டு செலுத்தியுள்ளார்.

தற்போது மினிவான்கள், போன்றவற்றில் தொழிற்சாலையில் செய்யப்படும் வேளையில் DVD படச் சாதனமும் வீடியோ விளையாட்டுகளும் பூட்டப்படுகிறது. இவை பயண சலிப்படைந்த பிள்ளைகளும், பராமரித்து களைத்துப்போன பெற்றோருக்கும் பெரும் வரவேற்கப்படுவதொன்றாகியது. ஆனால் இதில் பிரச்சினை என்னவென்றால்

*தொடர்தல் 44ம் பக்கம்*



# பிரிதலும் தீர்த்தலும்

## குடும்ப சட்டம் - 4

ஜீவா திசைராஜா



### பிரிதலும் உங்களுக்கிடையிலுள்ள விடயங்களை தீர்த்தலும் (Separating and Settling the issues between you):

கடந்த இதழில் வாழ்க்கைத் துணைகள் பிரியும் போது ஏற்படும் பிரச்சினைகளை எவ் வழிகளில் தீர்க்கலாம் எனப் பார்த்தோம். அதாவது மத்தியஸ்தர் (Mediator), சமரச பேச்சுவார்த்தையாளர் (Arbitrator) ஆகியோரின் துணையுடன் பிரச்சினைகளை தீர்க்கும்போது இதன் மூலம் காலத்தையும் பணத்தையும் விரயமாக்காது பிரச்சினைகளைத் தீர்க்கலாம் எனவும் பார்த்தோம்.

திருமணமான தம்பதிகளுக்கும் (Married couple) திருமணமாகாது சேர்ந்து வாழும் தம்பதியினருக்கும் (Comon law couples) சொத்துக்களை பிரிப்பதில் ஒரே மாதிரியான உரிமைகள் இல்லை. பொதுச்சட்ட தம்பதியினரின் பிரச்சினைகளை எவ்வாறு தீர்க்கலாம் என்பதையும் மத்தியஸ்தரை எவ்வாறு தெரிவு செய்யலாம் என்பதையும் இப்போது பார்ப்போம்.

### பொதுச்சட்ட தம்பதிகள் (Common law couples):

**நாங்கள் திருமணம் செய்யாது ஒன்றாக வாழ்ந்து வருகின்றோம். அத்துடன் எமக்கு ஒரு பிள்ளையும் உண்டு. நாம் சேர்ந்து வாங்கிய ஒரு வீடும் ஒரு மோட்டார் வாகனமும், அநேக தளபாடங்களும் எமக்கு உண்டு. நாங்கள் பிரச்சினைப்பட்டுக் கொண்டு இருக்கிறோம் (not getting along), அத்துடன் நாம் பிரிவதைப் பற்றியும் பேசுகின்றோம். நாம் ஓர் பிரிவு உடன்பாட்டை எழுதலாமா?**

ஆம். பொதுச் சட்ட தம்பதியினர் திருமணமான தம்பதியினரைப் போல பிரிவு உடன்படிக்கையை எழுதி கைச்சாத்திடலாம். நீங்கள் இருவரும் உங்கள் உடன்படிக்கையில் உங்களுக்கு என்ன தேவையோ அதனை உள்ளடக்கலாம். உடன்படிக்கையில் கைச்சாத்திட முன்பாக, வெவ்வேறு சட்டத்தரணிகளை பார்ப்பது முக்கியமாகும்.

### மத்தியஸ்தரை (mediator) பார்த்தல்:

மத்தியஸ்தர் பொதுவாக சமூக சேவையாளர், சட்டத்தரணிகள், உளவியலாளர்கள் அல்லது ஏனைய நிபுணத்துவம் வாய்ந்தவர்களாக இருப்பர். இந்த நிபுணத்துவம் வாய்ந்தவர்கள் குடும்ப மத்தியஸ்தர்களாக வேலை செய்யும் போது அவர்களுடைய தொழிலானது, நீங்கள் எதை விரும்புகிறீர்கள் என்பதை கேட்பதும், தாபரிப்பு கொடுப்பனவுகள், சொத்துப்பிரிப்பு, பிள்ளைகளைப் பொறுப்பெடுத்தல் தொடர்பாக ஓர் உடன்பாட்டை அடைவதற்கு உங்களுக்கு உதவுவதுமாகும்.

மத்தியஸ்தம் வகிப்பவர்கள் பக்கச்சார்பாக இருக்க மாட்டார்கள். அவர்கள் உங்களுக்காக தீர்மானம் எடுக்கமாட்டார்கள். அத்துடன் உங்களுக்கு சட்டரீதியான ஆலோசனையும் கொடுக்க மாட்டார்கள். ஒரு மத்தியஸ்தரை (Mediator) நீங்கள் பார்ப்பதற்கு முன்பாக உங்கள் சட்டத்தரணியுடன் நீங்கள் கதைக்க வேண்டும். மத்தியஸ்தம் (Mediation) ஆரம்பிக்க முன்பாக சட்டம் மற்றும் உங்கள் உரிமைகளையும் கடமைகளையும் பற்றி நீங் கள் அறிந்திருக்க வேண்டும். மத்தியஸ்தம் நடைபெறும்போது உங்கள் சட்டத்தரணி உங்களுடன் வரமாட்டார்.

உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் என்ன வேண்டும் என்பதை உங்களால் சொல்ல முடியும் என்பதையும் உங்கள் கருத்துக்களுக்காக நீங்கள் வாதாட முடியுமென்றும் திடநம்பிக்கையுடன் நீங்கள் இருந்தால், நீங்கள் மத்தியஸ்தத்தை முயற்சிக்கலாம். ஒரு பக்கச்சார்பற்ற நபரின் உதவியுடன் தம் விடயங்களைத் தீர்ப்பதற்கு (settle things) இது உங்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுக்கும்.

மத்தியஸ்தம் செயற்படும் முறை குறித்து உங்களுக்கு மகிழ்ச்சியளிக்கவில்லை எனின் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் நீங்கள் அதனை விட்டு நீங்கலாம். உங்களுக்கு பதிலாக ஒரு சட்டத்தரணி பரஸ்பர பேச்சுவார்த்தை நடத்துவார். அந்த சந்தர்ப்பத்திலும் ஓர் உடன்பாட்டை அடையமுடியாவிடின், நீங்கள் நீதிமன்றிற்கு சென்று நீதிபதி மூலம் அதனைத் தீர்க்கும்படி செய்யலாம்.

### மத்தியஸ்தம் சரியான முறையில் செயற்படாவிடின் மத்தியஸ்தத்தின் போது என்ன நடந்தது என்பதை மத்தியஸ்தர் நீதிமன்றத்திற்கு சொல்லலாமா?

இது நீங்கள் 'திறந்த' மத்தியஸ்தத்தையா அல்லது 'மூடிய' மத்தியஸ்தத்தையா தெரிவு செய்தீர்கள் என்பதில் தங்கியுள்ளது. மத்தியஸ்தம் ஆரம்பிக்க முன்பாக, நீங்களும் உங்கள் வாழ்க்கைத் துணையும் இது குறித்து தீர்மானிக்கலாம். திறந்த மத்தியஸ்தத்தில், மத்தியஸ்தத்தின்போது என்ன நடந்தது என்பது குறித்து மத்தியஸ்தம் வகித்தவர் ஒரு முழு அறிக்கையை எழுதுவார். அத்துடன் அவர் அதில் தான் எதனை முக்கியமாக எண்ணுகிறாரோ அதனையும் அதில் எழுதுவார். இத்தகவல் நீதிமன்றத்திற்கு கிடைக்கக் கூடியதாக இருக்கும். மூடிய மத்தியஸ்தத்தில், மத்தியஸ்தம் வகிப்பவரின் அறிக்கையானது நீங்கள் என்ன உடன்பாட்டுக்கு வந்தீர்கள் அல்லது எந்த ஓர் உடன்பாட்டிற்கும் வரவில்லை என்பதை மட்டுமே காட்டும்.

### எவ்வாறு ஒரு மத்தியஸ்தம் வகிப்பவரை கண்டுபிடிக்கலாம்? மத்தியஸ்தர் நல்லவர் என்று எனக்கு எவ்வாறு தெரியும்?

நீங்கள் குடும்ப மத்தியஸ்தத்திற்கான ஒன்ராறியோ அமைப்பைத்தை (Ontario Association for Family Mediation) அல்லது ஒன்ராறியோவின் ADR சிறுவனம் (ADR Institute of Ontario) மூலம் மத்தியஸ்தர்களின் பெயர்களைப் பெற்றுக்கொள்ள முடியும். சட்டத்தரணிகளுக்கும் பொதுவாக உள்ளூர் மத்தியஸ்தர்களின் பெயர்கள் தெரிந்திருக்கும். சில சமூகங்களில், குடும்ப நீதிமன்றுடன் தொடர்புபட்ட மத்தியஸ்த சேவைகள் உண்டு. இந்த சந்தர்ப்பத்தில் மத்தியஸ்தர்களாக ஒரு நிபுணத்துவ அனுமதிப்பத்திரம் வழங்கும் நிறுவனம் எதுவும் இல்லை. மத்தியஸ்தரின் அனுபவம் மற்றும் பயிற்சி பற்றி கேட்க வேண்டியது உங்களைப் பொறுத்ததாகும். நீங்கள் திருப்தி அடையாவிடில் அல்லது உங்களுக்கு அந்த மத்தியஸ்தர் ஒத்துவராவிடில், வேறு மத்தியஸ்தரை நீங்கள் தேடலாம்.

### மத்தியஸ்தம் செலவு கூடியதா?

மத்தியஸ்தத்திற்கான செலவு வேறுபட்டது. சில சமூக குழுக்கள் உங்கள் வருமானத்திற்கு ஏற்ப என ஓர் கட்டணத்தை மத்தியஸ்த சேவைகளுக்காக அறவிடலாம். தனியார் மத்தியஸ்தர்கள் தமது சொந்த வியாபாரமாக இதனை நடத்தினால் அவர்களது கட்டணங்கள் அதிகளவில் வேறுபடும்.

**உசாத்துணை:**

- www.attorneygeneral.jus.gov.on.ca/english/family/
- http://www.ontario.ca/en/life_events/divorce/004682.html
- http://www.onefamilylaw.ca/

jeevathisairajah@thaiveedu.com

■ ■ ■

# ஆபத்தான சாரதி...

43ம் பக்கத் தொடர்ச்சி...

சில சமயங்களில் பின்னால் இருந்த DVDகள் முன்னால் தாவிவிடுவதே.

வாகனத்தைச் செலுத்துவது ஒரு பெறுப்பான வேலை. செலுத்துவதில் முழு அவதானமாயிருப்பதவசியம். பல வேலைகள் செய்ய முற்படுவதால் விபத்துகள் ஏற்படுகின்றன. சாரதிகளிடம் செய்த கணிப்புப்படி 80 வீதமானவர்கள் வேறு வேலைகள் செய்ததை ஒப்புக்கொண்டுள்ளார்கள். அதேவேளை 90% மானவர்கள் மற்றவர்கள் வாசிப்பதை சாப்பிடுவதை, செல்போனில் விவாதிப்பதை அவதானித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்கள். மேலும் 84% விகிதமானவர்கள் தாம் அவசரப்பட்டு (aggressive drive) வாகனத்தை செலுத்தியுள்ளதாயும் அதற்கு காரணமாக 74% விகிதமானவர்கள் இயலாமையையும் சலிப்பையும் தெரிவித்துள்ளார்கள். பலர் மேக்கப் போடுவது, சேவ் எடுப்பது, இப்படியே பட்டியலை நீட்டிக்கொண்டே போகலாம்!.

2002ம் ஆண்டு ஒரு அமெரிக்க காப்புறுதி அமைப்பு வாகனங்களில் உண்ணப்படும் உணவுகளினாலும் விபத்தேற்பட்ட பட்டியலை பிரசுரித்திருந்தது. இதில் காப்பி முதலிடத்தையும் அடுத்து உஷ்ணமான சூப்பும் இடம் பெற்றுள்ளது. நல்ல காலம் அவர்கள் டொரண்டோவை கேட்கவில்லை அல்லாவிட்டால் சிக்கன் புரியாணியும் கூட வந்திருக்கும்! எங்களில் எத்தனை பேர் வேலைக்கு போகும் வழியில் Tim Hortons இல் கோப்பி எடுப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளோம். ஒரு கணிப்பின்படி 57% சாரதிகள் உண்பதாகவும் அதில் 20% சாரதிகள் சந்தர்ப்பத்தில் காலால் Steering இனை பிடித்துள்ளதாயும் தெரிவித்துள்ளனர்.

> "கனடாவில்
> ஒவ்வொரு நாளும் ஏழுபோருக்கும்
> அதிகமானவர்கள் வாகனவிபத்துகளில் உயிர்
> இழக்கிறார்கள். இது வன்முறையால் ஏற்படும்
> மரணங்களிலும் ஐந்து மடங்கு அதிகமாகும்"

### வாகனம் செலுத்த தகுதி?

எட்மன்டனில் ஒரு சுவையான விபத்து. ஒரு பெண், மோட்டார் சைக்கிளில் வந்தவரை அடித்துவிட்டு ஓடிவிட்டார். துரத்திப் பிடித்த போது அவர் சிரித்துக்கொண்டு பாடினாராம். தான் நாயுடன் கதைப்பதாக கூறியுள்ளார். அவரை வீடியோ டேப்பில் எடுத்து வழக்கு மன்றத்தில் காட்டியபோது அவர் தான் இறைவனுடன் தொலைபேசி கதைத்ததாக கூறியுள்ளார். பொலிஸ் அதிகாரி இங்கு உம்மை ஏன் கொண்டுவந்துள்ளோம் தொியுமா? என்று கேட்டதற்கு "நான் ஒரு கதைக்கும் நாய் அது உங்களுக்கு பகிடியாயுள்ளது" என்றார்.

நீதிபதி தண்டனை வழங்குகையில் அவர் அன்றைய தினம் போதைவஸ்து பாவிக்காவிட்டாலும் அவர் போதை வஸ்துவின் தாக்கத்தில் இருந்துள்ளார் என குறிப்பிட்டுள்ளார்.

இன்று பாதைகளில் பல மூளை பாதிக்கப்பட்டவர்கள் வாகனம் செலுத்துகிறார்கள். நீங்கள் தான் கவனமாக வாகனத்தை செலுத்தவேண்டும். உங்கள் குடும்பத்துக்கு நீங்கள் மிக்க அவசியம்.


*தமிழாக்கம்: குமார் புனிதவேல்*


senthuran.punithavel@thaiveedu.com

■ ■ ■

GP TELECOM
இரமணன் திரு
(முன்னாள் பெல் கனடா ஊழியர்)

Security Camera Systems
Telephone and Voice Mail Systems
Voip Phone Systems - Wireless Networks
Surveillance Cameras
Voice and Data Structured Cabling
Professional Cable Fishing for
Residential and Commercial Buildings
416.203.0344




உங்கள் குழந்தைகளின் எதிர்கால வளர்ச்சிக்கு
இன்றே திட்டமிடுங்கள்!
RESP கல்விச் சேமிப்புத் திட்டம்
சிறந்த ஆலோசனை! தெளிவான விளக்கம்!
அனுபவமும் திறமையும் வாய்ந்த எம்மை நாடுங்கள்!
iNFORCE LIFe
Financial Services Inc.
A professional team providing BENEFIT SOLUTIONS for small business
WE DEAL WITH VARIOUS INSURANCE COMPANIES TO GET YOU THE BEST
HEALTH BENEFIT PLANS FOR YOUR EMPLOYEES
CHANDRAN RASALINGAM CHS
Direct: 416 321 6000 / 416 909 0400

# FOR ALL YOUR COMMERCIAL/INVESTMENTS

## Commercial/Retail Office/Residential (Yonge &Finch)



| Unit | Gross Area - Sq.Ft | Net Area - Sq.Ft | Price Per Sq.Ft. | Price | Level |
|---|---|---|---|---|---|
| 102 | 872 | 849 | $874 | $762,900.00 | Ground |
| 103 | 719 | 700 | $887 | $637,900.00 | Ground |
| 104 | 876 | 770 | $816 | $714,900.00 | Ground |
| 108 | 720 | 701 | $870 | $626,900.00 | Ground |
| 109 | 779 | 759 | $881 | $686,900.00 | Ground |
| 110 | 704 | 686 | $884 | $622,900.00 | Ground |
| 203 | 681 | 590 | $525 | $357,800.00 | 2nd Floor |
| 204 | 584 | 505 | $525 | $306,800.00 | 2nd Floor |
| 211 | 807 | 705 | $514 | $414,800.00 | 2nd Floor |
| 212 | 772 | 674 | $514 | $396,800.00 | 2nd Floor |
| 216 | 717 | 616 | $514 | $368,800.00 | 2nd Floor |
| 217 | 539 | 461 | $526 | 4283,800.00 | 2nd Floor |

## Meadowvale/Sheppard



$275,000

2 Bedrooms Condo-Townhouse with Finished Basement. Single Built-In Garage and Private Driveway. Condo Maintenance Fee $215. Better than a Condo Apartment. Demand Location!

## Westney/Tauntan - Ajax



$529,000

4 Bedrooms Less than a Year Marshall Built Home in Ajax. 2375 Sq.Ft, Spacious Home. Back on to Ravine & River. Beautiful View from Master BR 9 Feet Ceiling.

## 23 Acres Hobby Farm

23 Acres Hobby Farm Land with 4 Bedrooms House Located 1 Hr & 15 Min. from GTA. A rare find with Recenly Renovated House.



$369,000



## Esso Gas Station




$4.30 Million

Very Busy Esso Gas Station with Drive-Thru Country Style in Richmond Hill.
Half Acre Land. High Volume Convenience Store with Lotto. Approx. 6 Mil. Litres Vol/Yr.

## Petro Canada Gas Station




$6.Million

One of the Busiest Petro Canada Station with Car Wash, Convenience Store & Another Rental Income. Gas Vol Approx. 10 to 11 Mil. Litres/Yr. Store Sales: Approx $1.5 Mil/Yr. Call for Details.

## Ultramar Gas Station




$2.5 Million - $3.5 Million

Two Brand New Ultramar Gas Stations Available on a Busy Hwy. Just 30 Min from Scarborough. One with Tim Hortons & Other with Country Style. Very Attactive Projections. Please Call for Details.

## Ultramar Gas-Station $2.68 Million

Ultramar

1 Year Old Ultramar Gas Station. Close to Barry - 1Hr. 15 Min from Scarborough. 7 Mil. Vol/Yr. Very Good Sales Record in C-Store with Lotto. Please Call for Details.

## APARTMENTS



From 2 Units to 70 Units Apartments Available from Different Price Ranges

## BANQUET HALLS



Please Contact for More Details

## Business Within Subway $89,000

GATEWAY NEWSTANDS

Low Rent and Money Making Business within a Subway. Lotto Commission itself around $2K

## Supermarket/Grocery $89,000



Busy South-Asian Grocery Store for Quick Sale. Monthly Sale Approx: $70K/Month.Reasonable Rent. Call Me for Details...



நம்பிக்கையுடன் அழையுங்கள்....

**Thurairajah RAMESH** (B.Sc. Eng.)

Sales Representative

HOMELIFE

Homelife GTA Realty Inc. Brokerage

c: 416-917-9957 b: 416-321-6969

## நீங்கள் முகவருக்கூடாகத் தொழில் புரிபவரா?

# உரிமைகளைத் தெரிந்து கொள்ளுங்கள்!

சென்ற இதழின் தொடர்ச்சி...

முகவருக்கூடாகத் தொழில் புரிபவர்களது உரிமைகளும் அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய விடயங்களையும் கடந்த இதழில் பார்த்திருந்தோம். அதன் தொடர்ச்சியை இங்கே தருகின்றேன். கடந்த இதழை வாசிக்க தவறியவர்கள் www.thaiveedu.com என்ற இணையத்தளத்திற்கு சென்று வாசித்தறிந்து கொள்ளலாம்.

### நீங்கள் வேலைக்கு நியமன மாகியும் வேலைக்கு இன்னும் அமர்த்தப்படவில்லை. அதனால், உங்களிற்கு அரசு விடுமுறைச் சம்பளம் கிடைக்காது என்று உங்களுடைய தற்காலிக முகவர் உங்களிடம் கூறுவது சரியானதா?

வேலைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அரசு விடுமுறைகளுக்கான உரிமைகளை பெறும் தகுதி இல்லாதவர்கள் என்று கூறும் சட்டத்தை; 2008ல் அரசு இயற்றியுள்ள சட்ட மசோதா ரத்துச் செய்துள்ளது. அரச விடுமுறைகளுக்கான உரிமைகள் தற்காலிக ஏஜன்சி ஊழியர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்தவே அரசு இதை கொண்டு வந்துள்ளது. வேலைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என்பதை காரணம் காட்டி, அரசு விடுமுறைகளுக்கான சலுகைகளை இனிமேல் முகவர்கள் தட்டிகழிக்க முடியாது.

### அடுத்த அரசு விடுமுறைக்கான ஊதியத்தை உங்களுடைய முகவர் உங்களிற்கு தரவில்லை என்றால் என்ன செய்யலாம்?

அதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் மற்றும் உங்கள் அரசு விடுமுறை தின ஊதியத்தை எப்படி நீங்கள் கணக்கிட வேண்டும் என்பதற்கு எங்களை அழையுங்கள் உங்களுடைய ஏஜென்சி அதன் அனைத்து ஊழியர்களுக்கும் அரசு விடுமுறை தின ஊதியத்தை ஒழுங்காக வழங்கி வருகிறதா என்பதை உறுதி செய்ய தொழிலாளர் நடவடிக்கைகளிற்கான மையத்தை தொடர்பு கொண்டு கலந்தாலோசியுங்கள் (Worker's Action Centre. 416-531-0778 Ext 224 அல்லது www.workersactioncentre.org).

### உங்கள் முகவர் இதுபோன்ற சட்டங்களிற்கு புறம்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டால் அதிலிருந்து உங்களை எவ்வாறு பாதுகாத்துக் கொள்வது?

- நீங்கள் வேலை பார்த்த அனைத்து திகதி மற்றும் மணி நேரங்கள் ஆகியவற்றிற்கான ஆவணங்களை பாதுகாப்பாக வைத்திருங்கள்.
- உங்கள் அனைத்து paystubs மற்றும் T4களின் நகல்களை வைத்திருங்கள் நீங்கள் முகவரை விட்டு விலகும் போது நீங்கள் வேலை பார்த்ததற்கான ஆதார (ROE) நகலைத் தயார் செய்து கொள்ளுங்கள்.
- உங்களுக்கு எதுவெல்லாம் சேரவேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்களோ அது குறித்து உங்கள் முகவருக்கு சுருக்கமாக ஒரு கடிதம் எழுதுங்கள். அவைகளை திரும்பதருவதற்கு ஒரு காலகெடு அவர்களுக்கு விதியுங்கள். நீங்கள் இன்னமும் முகவரிடத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்தால் நீங்கள் சில இன்னல்களை சந்திக்க நேரிடலாம். அது சம்பந்தமாக ஒரு திட்டத்தை கலந்தாலோசிப்பதற்கு workers' Action Centerஐ தொடர்பு கொள்ளுங்கள்.

தொழிலாளர் அமைச்சகத்தின் இணையதளம், உங்களுக்கு உதவவேண்டும் என்ற நோக்கத்தில் ஒரு அரசு விடுமுறைக்குரிய சம்பளத் தொகையை கணக்கிடுவதற்கு ஒரு இலகு முறையை நியமித்துள்ளது.

- உங்களுக்கு சம்பளம் தரவேண்டிய தகதியிலிருந்து 6 மாதங்களுக்குள் உங்கள் சம்பளப்பாக்கி சம்பந்தமாக நீங்கள் தொழிலாளர் அமைச்சகத்திற்கு புகார் எழுதி கொடுக்க வேண்டும்.

ஒரு முகவர் நிறுவனம் சட்டத்திற்கு புறம்பாக செயல்படுகிறது என்பதை நீங்கள் கண்டு பிடிக்கும் போது, அதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதற்கு, தொழிலாளர்களின் நடவடிக்கைகளிற்கான மையத்துடன் தொடர்பு கொள்ளுங்கள். உங்களுடைய சகல விடயங்களும் இங்கே மிக இரகசியமாகப் பேணப்படும்.

### உங்களுக்கு உதவி தேவைப் படின் நாட வேண்டிய இடங்கள்:

**Workers' Action Centre (தொழிலாளர்களின் நடவடிக்கைகளிற்கான மையம்):** உங்கள் உரிமைகள் பற்றி மேலும் கூடுதல் விபரங்களுக்கு நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் 416-531-0778 அல்லது இணையத்தளம் www.workersactioncentre.org.

**தொழிலாளர் அமைச்சகம்:** சம்பளம் தரவேண்டிய தேதியிலிருந்து 6 மாதங்களுக்குள் உங்கள் சம்பள பாக்கிகள் சம்பந்தமாக தொழிலாளர் அமைச்சகத்துக்கு நீங்கள் புகார் எழுதிக் கொடுக்க வேண்டும். உங்களுக்கு உதவவேண்டும் என்பதற்காக தொழிலாளர் அமைச்சகம் ஒரு அரசவிடுமுறை கணக்கீட்டு இலகு முறையை தனது இணையத்தளத்தில் நிறுவியுள்ளது.

**மனித உரிமைகள் சட்ட சேவை மையம்:** இவ்வமைப்பின் முகவரிக்கு இலவச தொலை பேசி எண் 1-800-531-551இன் மூலம், அல்லது www.labour.gov.on.ca இணையதளத்தின் மூலம் தொடர்புகொள்ளலாம். நீங்கள் பாகுபாடாக நடத்தப்படுகிறீர்கள் என்பதை உணர்ந்தால் இந்த இலவச சட்ட மையத்தின் சேவைகளை நீங்கள் நாடலாம். அதற்கான இலவச தொலைபேசி எண் 1 866 625 5179 அல்லது இணையதளம் www.hrisc.on.ca.



என். மிலான்

### மனித உரிமைகள் மற்றும் தற்காலிக ஏஜன்சி தொழிலாளர்கள்:

ஒரு தற்காலிக முகவர்; இனம், நிறம், மொழி, பிறப்பிடம், வயது, பாலினம், உடல்க் குறைபாடு, திருமணம், குடும்ப சமூக அந்தஸ்து, மதம், குடியுரிமை மற்றும் மன்னிக்கப்பட்ட குற்றவியல் செயல்கள் ஆகியன அடிப்படையில் வேலை செய்யும் இடத்தில் யார்யாரை எந்தெந்த வேலைக்கு அல்லது பணிக்கு அனுப்பவேண்டும் என்று பாகுபாடு காட்டுதல் மற்றும் கொடுமை செய்தல், ஆகியவற்றை மனித உரிமைகள் சட்டம் தடை செய்துள்ளது. உங்களுக்கு ஒரு வேலை அளிப்பதற்குமுன் தற்காலிக முகவர், உங்கள் SIN, பாஸ்போட், பிறந்த தேதி அல்லது பிறந்த நாடு சம்பந்தமாக உங்களிடம் விசாரிப்பது சட்டத்திற்கு புறம்பான விடயமாகும். தான் பாகுபாடுடன் நடத்தப்படுகிறோம் என்று நினைக்கும் ஒரு தொழிலாளர் அது குறித்து மனித உரிமைகள் தீர்ப்பாயத்திடம் புகார் செய்யலாம். உங்கள் மீது காட்டப்பட்ட பாகுபாடு பற்றி விபரமாக எழுதி வையுங்கள். இதுபற்றிய புகார் ஒன்றை கொடுக்க நீங்கள் நினைக்கும் போது அது உங்களுக்கு உதவியாக இருக்கும்.

milan@thaiveedu.com

■ ■ ■


# SOLUTIONS

**IMMIGRATION CONSULTING INC.**
**1183 FINCH AVENUE WEST, SUITE 508,**
**TORONTO, ONTARIO M3J 2G2**
**www.immsol.com**

**Sol Gombinsky**
*(Former Manager with Immigration Department, Government of Canada, Former President of Canadian Association of Professional Immigration Consultants (CAPIC))*
**Certified Immigration Consultant**
**ICCRC Membership # R411199**



**Experience:**
- Over 30 years of service in the Immigration Department, Government of Canada.
- Over 15 years of experience in Immigration Consulting.

**Cari Gombinsky**
**Certified Immigration Consultant**
**ICCRC Membership # R411207**



**Experience:**
- Over 10 years of experience in Immigration Consulting

**CONTACT:**

**Shon P. John**
**Immigration Services Manager**
**Work: 416-661-6376**
**Cell: 647-787-7889**
**Email: shonj@immsol.com**



**Our Strengths:**
- Experience and expertise in all Canadian immigration matters
- Services you can trust

**Our immigration services include:**

**Permanent Residence:**
1. Canadian Experience Class
2. Provincial Nominee Programs
3. Federal Skilled Worker Program
4. Federal Skilled Trades Program ( a new program introduced in January 2013)
   - *Welders, Electricians, Carpenters, Plumbers etc. qualify*
5. Family sponsorship (Inside and Outside Canada)
6. Live-in Caregivers

**Other in-land immigration:**
1. Refugee Claim
2. Detention Review
3. Deferral of Deportation
4. Humanitarian and Compassionate cases
5. Citizenship Application
6. Application for Permanent Resident Card

**Temporary Residence:**
1. Study Permit
2. Work Permit: (Inside & Outside Canada)
3. Temporary Resident Visa (Single & Multiple Entry)
4. Super Visa
5. In-land temporary resident status: extension of status, and change of status

**Hearings and Appeals:**
1. Sponsorship Appeals
2. Residency Obligation Appeals
3. Admissibility Hearing
4. Removal Order Appeals
5. Refugee Claim

**We provide services in English, Tamil, Malayalam, and Hindi**

# எடுப்புச் சாய்ப்புக் கலியாணம்

மனைவி அமைவதெல்லாம் காதலன் (விட்டுக்) கொடுத்த வரம்
கணவன் அமைவதெல்லாம் காதலி (விட்டு) இட்ட வரம்.

•

காதலி Miss ஆக இருக்கும் வரை என்னை நன்றாக Understand பண்ணினாள். கலியாணமாகி எனது Mrs ஆனபிறகு என்னை Miss Understand பண்ணுகிறாள்.

•

**மாலா:** என் காதலன் இப்படிச் செய்வார் என்று நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.
**மீனா:** என்ன! ஏன் கலியாணம் செய்ய மாட்டேன் என்று சொல்லுறானா?
**மாலா:** அப்படிச் சொன்னால் பரவாய் இல்லையே! என்னைத்தான் கலியாணம் பண்ணுவேன் என்று அடம் பிடிக்கிறான்.

•

**காதலன்:** உனக்காக நான் என் உயிரையே கொடுக்கத்தயாராக இருக்கிறேன்.
**காதலி:** நன்றி. அது இருக்கட்டும். நாளைக்கு நாலு மணிக்கு அங்காடிக்கு (Mall) வாரும், ஆறுதலாக இருந்து கதைப்பம்.
**காதலன்:** இன்று இரவு வானிலை அறிக்கையைப் (Whethear forecast) பார்த்து விட்டுச் சொல்லுறன்.

•

**சேகர்:** மாலாவுக்கு காது கேட்காதா?
**ரகு:** எனக்குச் தெரிஞ்சளவு அவளுக்கு அப்படி ஒரு பிரச்சினையும் இல்லை. ஏன்?
**சேகர்:** நான் ஒண்டு கேட்டால் அவள் என்னவோ ஒண்டு சொல்லுறாள்.
**ரகு:** நீ என்ன கேட்டனீ? அவள் என்ன சொன்னவள்?
**சேகர்:** 'என்னை நீ காதலிக்கிறியா' எணடு நான் கேட்டன். செருப்பு பிஞ்சிடும் எண்டு அவள் சொல்லிறாள்.

•

**சேகர்:** வியாழன் எண்டும் பாராமல் விமலன் Feb 14 ஆம் திகதி கலியாணத்தை வைச்சிருக்கிறான். அவனுக்கு என்ன விசரே?
**ரகு:** அவனுக்கு விசர் இல்லை, விசயத்தோட தான் செய்யிறான். இஞ்சை வெள்ளை ஒண்டிலை காதல், கலியாணம் கட்டுறது ஊரில் இருந்து வாற பெட்டை ஒண்டை. Feb 14ம் திகதி கலியாணம் வைச்சால் வருசாவருசம் காலையில் காதலர் தினம் கொண்டாடலாம். மாலையில் கலியாண நாள் கொண்டாடலாம் இப்ப விசயம் விளங்குதோ.

•

**காதலன்:** (பின்னால் வந்து காதலியின் கண்ணைப் பொத்திக் கொண்டு) யார் எண்டு சொல்லும் பார்க்கலாம்.
**காதலி:** எனக்கு மூண்டு Chance (சந்தர்பம்) தாருங்கோ... சேகர்?, குமார்?, யோகன்?

•

**காதலி:** எனக்கு எழுதும் ஒவ்வொரு காதல் கடிதத்திலும் 'படித்துவிட்டு அடுப்பில் போட்டுக் கொழுத்தவும்' என்று குறிப்பு எழுதுகிறீர்களே, ஏன்?
**காதலன்:** உன்னைக் கலியாணம் பண்ணிறவன் கண்ணிலை பட்டால் உன் நிலைமை என்ன ஆகும்? சிந்தித்துப்பார்!

•

**ஆசிரியர்:** 'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' என்ற வாசகத்தை விளக்குக.
**மாணவன் 1:** உப்பு நன்றாகப் போட்டு உருசியாகச் சமையல் செய்யும் Takeout கடை உரிமையாளரை, உயர் இரத்த அழுத்தம் உள்ள வாடிக்கையாளன் உயிர் உள்ள வரை நினைத்தபடியே இருக்க வேண்டும்.
**மாணவன் 2:** பனிப்பொழிவு முடிந்த உடன் வந்து வீதிக்கும் நடைபாதைக்கும் உப்புப் போடுபவர்களை நாம் Winter உள்ளவரை நினைக்கவேண்டும்.

•

**வீட்டுக்காரி:** குமர்ப் பிள்ளைகள் இரண்டையும் தனியாக வீட்டிலை விட்டிட்டு தாயும் தகப்பனும் 'நீ தானே என் பொன்வசந்தம்' பார்க்கப் போட்டினம். குசினிப் பக்கத்தாலை புகை ஏதோ வாறமாதிரிக் கிடக்குது. எங்கையாலும் நெருப்புப் பிடிச்சுதோ தெரிய இல்லை. என்ன செய்வம்? 911 அடிச்சு தீ அணைக்கும் படையைக் கூப்பிடுவமோ?
**வேலைக்காரி:** அவரசப்படாதேங்கோ அம்மா! முதலிலை எங்கடை ஐயாவை அனுப்புங்கோ. அவர் நல்லாய் அணைப்பார். ஐயாவுக்கு ஏலாட்டி 911ஐ அடிப்பம்.

•

**நோயாளி:** நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.
**குடும்ப வைத்தியர்:** நோயுற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

•

**கனகர்:** திரு.திருமதி கனகர் எண்டு போட்டு, மகளின்ர கலியான அழைப்புக் காட் எனக்கு அனுப்பி இருக்கினம். எத்தனைபேர் எண்டு இரண்டு கிழமையில பதில் வேணுமெண்டு போட்டு இருக்கு. பெட்டிகள் கொண்டு வாறதைத் தவிர்க்கவும் எண்டும் போட்டு இருக்கு. என்ன செய்வம் எண்டு யோசிக்கிறன்.
**விநாயகர்:** கலியாணம் எண்டால் தம்பதிகளாகப் போறதுதானே முறை. சும்மா இருக்கிற நீங்கள் போறதுக்கு என்ன யோசனை?
**கனகர்:** ஒரு கோப்பைக்கு 95 டொலர் எண்டு கேள்விப்பட்டன் என்னாலை 50 டொலர் தான் கொடுக்க கூடியதாக இருக்கும். நாங்கள் இரண்டு பேரும் போனால் அவைக்கு 140 டொலர் நட்டம்.
**விநாயகர்:** செல்லற்ரை எடுப்புச்சாய்புக்கும் மண்டபக்காரன்ரை Mortageக்குமாக அவை 95 குடுக்கினம். அது அவையின்ரை பிரச்சினை. உம்மை அழைச்சிருக்கினம் அல்லோ, தம்பதிகளாய் போய் தம்பதிகளை வாழ்த்திப் போட்டு முடிஞ்சதைக் கொடுத்திட்டு வாரும்.
**கனகர்:** சரியான அறிவுரை. இந்த எடுப்புச் சாய்ப்பாலை முந்தி 700 - 800 பேர் கலந்து நடந்த கலியாணங்கள் இப்ப 200 - 300இல வந்து நிக்குது.

> "ஒரு கோப்பைக்கு 95 டொலராம்,
> என்னாலை 50 டொலர் தான் கொடுக்க
> கூடியதாக இருக்கும்.
> நாங்கள் இரண்டு பேரும் போனால்
> அவைக்கு 140 டொலர் நட்டம்."

- கதிர் துரைசிங்கம் -
*kathir.thuraisingam@thaiveedu.com*

■ ■ ■

வீடு வாங்க விற்க

Birchmount & Ellesmere

3+3 Bedrooms, 2 Washrooms

Morningside & Old Finch

4 Bedrooms, 3 Washrooms

Morningside & Finch

4 Bedrooms, 4 Washrooms

Century 21
Affiliate Realty Inc. Brokerage

பகீரதன் சகாதேவன்
416-908-6003
905-470-0063
Office : 416-290-1200 Fax : 416-290-1900


www.HousesinMarkham.com


























HOMELIFE HIGHER STANDARDS

NANO COMPUTER

# Experienced Full Time Realtor

*Homelife/Future Realty Inc.*, *Brokerage**
205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8
Bus: (905) 201-9977 Fax: (905) 201-9229
** Independently Owned and Operated.*

**RAJ NADARAJAH**
Sales Representative
**Direct: 416-333-6115**
**E-mail: nanohomes@gmail.com**









☞ முன் வரிசை இருக்கைகள்!

☞ டிக்கெட் மாஸ்டர் கட்டணம் $11 இல்லை!

☞ இலவசமாக டிக்கெட் டெலிவரி!

☞ போனில் உங்கள் டிக்கெட்களை பதிவு செய்யலாம்!

VVIP Tickets Available at Special Discount

Tickets $39, $60, $80, $100 & VIP

Call Riaz

647 866 3160

647 407 4098

# தமிழ் மரபுத் திங்கள்...

5ம் பக்கத் தொடர்ச்சி...

எத்தனை நாளைக்குத்தான் குறித்த சில பாடல்களுக்கே நடனமாடுவதைப் பார்த்துக் கொண்டிருப்பது?

சிலம்பம், கரகம், காவடி, புலியாட்டம், கோலாட்டம், கும்மி என்று தமிழ்ப் பாரம்பரியக் கலைகள் பலவும் பல நிகழ்ச்சிகளிலும் அரங்கேறியமை மகிழ்வைக் கொடுத்தது.

சில நடனங்களில் போதிய பயிற்சியின்மையும் உணரப்பட்டது.

ஒரு விழாவில் ‘அன்பே சிவம்...’ பாடல் பின்னணியில் ஒலிக்க யோகாசனம்...

அழகான, பொருத்தமான தேர்வாக இருந்ததையும் பாராட்டவேண்டும்.

நடனத்துக்கான பாடல் இறுவட்டில் (CD) பதிவுசெய்து கொண்டுவந்து தரப்பட்டால் தம்மிடமுள்ள கருவிகளோடு அவ்விறுவட்டு ஒத்திசைந்து இயங்குகிறதா என்பதை முன்கூட்டியே உறுதிசெய்துகொள்ளவேண்டியது ஒலி அமைப்பாளர்களின் கடமை. மாணவர்கள் நடனத்துக்குத் தயாராக மேடையில் நிற்கும்போது இறுவட்டு இயங்காமல் மாணவர்கள் மேடையிலிருந்து இறங்கிய சங்கடமும் தமிழ் மரபுத் திங்கள் நிகழ்வொன்றில் நடந்தது.

சில தமிழ் மரபுத் திங்கள் விழாக்களில் அவையோருக்கு நடுவே அல்லது அவையோருக்கு முன்னால் வீடியோ படப்பிடிப்பாளர்கள் வரிசை கட்டி நின்றனர். பார்வையாளர்கள் என்றால் எல்லா முதுகுகளையும் பொறுமையாகப் பார்த்துக் கொண்டிருப்பார்கள் என்ற எண்ணம் சிலருக்குண்டு.

ஒரு விழாவில் நிகழ்வுகளைப் பார்ப்பதில் அவையோருக்கு இடையூறேதுமில்லாமலிருக்கும் பொருட்டு மண்டபத்தின் பின்பகுதியில் ஓரளவு உயரமான மேடை அமைத்து வீடியோ படப்பிடிப்பாளர்களுக்கான இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. இதை எல்லோரும் பின்பற்றினால் பார்வையாளர்கள் மகிழ்வர்.

சிறு குழந்தைகளே மனனஞ்செய்து அழகாகவும் இனிமையாகவும் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடுவதைப் பல இடங்களிலும் பார்த்திருக்கிறோம். சில நிகழ்வுகளில் பெரியார்களே எழுதிவைத்துப் பார்த்துப் பார்த்துப் பாடியதையும் பார்த்தோம். பத்து வரிகளே கொண்ட தமிழ்த்தாய் வாழ்த்தை மனனஞ்செய்ய மனமில்லையோ? மனனஞ்செய்து பாடக்கூடிய சின்னஞ்சிறு குழந்தைகளுக்கு இந்த மேடைகளில் வாய்ப்புக் கொடுத்து ஊக்கப்படுத்தலாமே!

வேறொரு தமிழ் மரபுத் திங்கள் நிகழ்வில், ஏற்பாட்டுக் குழுவினர், ‘தமிழ்ப் பாரம்பரிய உடைகளில் வாருங்கள்!’ என அறிவுறுத்தியிருந்தனர். இந்நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கிய இருவரில் பெண் சேலை அணிந்திருந்தார். சரி... ஆண் வட இந்தியப் பாணியில் ‘குர்தா’ அணிந்திருந்தார். பல இடங்களிலும் பெண்கள் சேலை அணிந்து பாரம்பரியத்தைக் கட்டிக்காக்க, ஆண்கள் குர்த்தாவிலே வலம் வந்தனர். சில நிகழ்வுகளுக்கு வந்திருந்த பொதுமக்களில் பலர் வேட்டியணிந்திருந்ததையும் பாராட்டி வரவேற்கவேண்டும்.

என்ன செய்வது? எங்கள் பாரம்பரிய ஆடை அணிந்தமைக்குப் பாராட்டுத் தெரிவிக்கும் நிலையிலேதான் தமிழ்ச் சமூகம் உள்ளது.

சில இடங்களில் சிறுவர்கள் அழகாகப் பேசினர். சில வேளைகளில் மனனஞ்செய்துகொண்டு வந்ததை அவையினரைப் பார்த்ததும் மறந்துவிடுவது இயல்பு. அவ்வாறு நிகழ்ந்தால், அடியெடுத்துக் கொடுத்தால் போதும்... பேச்சு சரளமாக வரும். ஒரு நிகழ்வில் மனனஞ்செய்ததை மறந்த சிறுவனை ஊக்கப்படுத்தி அவனைப் பேசவைப்பதை விடுத்து, தொகுத்து வழங்கியவர் சிறுவனிடமிருந்து ஒலிவாங்கியை ‘வெடுக்’கென இழுத்துப் பறித்து, மேடையை விட்டு சிறுவனை வெளியேற்றியதைக் கண்டபோது வேதனையாக இருந்தது. இனி அந்தச் சிறுவனை இத்தகைய நிகழ்வுகளிலே பங்கேற்கவைப்பது இலகுவில் நடக்குமா?
இத்தகைய நிகழ்வுகளுக்குச் சின்னஞ்சிறுவர்களோடு வரும் பெற்றோர் நவீன இலத்திரனியல் விளையாட்டுக் கருவிகளை உங்கள் பிள்ளைகள் வைத்து விளையாடும்போது ஏனைய அவையோருக்கு இடைஞ்சலாக இல்லாதிருப்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். அத்தோடு, ‘என்ன நிகழ்வுக்குப் போகிறோம்’ என்ற விபரங்களையும் முடிந்தவரையில் விளங்கப்படுத்திக் கூட்டிக்கொண்டு வந்தால் எதிர்கால சந்ததிக்கும் எம் மொழி, பண்பாடு, வரலாறு பற்றிய ஆர்வம் உருவாக உறுதுணையாக இருக்கும்.

மார்க்கம் நகரப் பொங்கல் விழாவிலே நகர முதல்வர் மணித்தியாலக்கணக்கில் கலந்துகொண்டிருந்தார். சில விழாக்களில் காவற்றுறை அதிகாரிகளை முழுநேரமும் பார்க்க முடிந்தது. ஆனால், ஒரு நிகழ்வில் சிறிய இடைவேளை விடப்பட்டபோது வந்திருந்த தமிழ் மக்கள் பலரைக் காணவில்லை. தமிழ்ச் சமூகத்தில் நிகழ்ந்த தேர்தல்களில் தேர்வானவர்கள் கூட தமிழ் மரபுத் திங்கள் என்று தமிழர் வரலாற்றையும் பண்பாட்டையும் வாழ்வியலையும் சிறப்பிக்கும் நிகழ்வுகளில் தலையைக் காட்டிவிட்டுப் போவது வரவேற்கத்தக்கதல்ல. 2-3 மணிநேரம் எமது நிகழ்வுகளில் ஆற அமர இருந்து செல்லமுடியாதவர்களை எமது பிரதிநிதிகள் என்று சொல்ல சற்று அல்ல... நிறையவே சங்கடமாக உள்ளது.

பல்லின சமூகத்தவர்களும் வருகை தருகின்ற, தமிழ்ச் சமூகத்தின் முக்கியமான நிகழ்வுகளாகத் தமிழ் மரபுத் திங்கள் விழாக்கள் மாறி வருகின்றன. மக்கள் பிரதிநிதிகள் அதிகாரிகள், கட்சிகளின் பிரமுகர்கள், காவற்றுறை அதிகாரிகள், மைய ஊடகங்களின் நிருபர்கள் என்று பலரும் வந்து போகும் விழாக்களில் பாதுகாப்பு என்ற விடயத்தில் அதீத கவனம் தேவை. ஒரு விழாவில் மேடைக்கருகே, வீடியோ படப்பிடிப்பாளர்களின் கருவிகளும் மின்னிணைப்பு வயர்களும் ஒழுங்கற்ற முறையிலும் யாரையேனும் தடக்கி விழுத்தக்கூடிய முறையிலுமே இருந்தன. ஒரு விருந்தினேரோ கலந்துகொள்ளும் பொதுமக்களில் ஒருவரோ அல்லது ஒரு குழந்தையோ தடக்கிவிழுந்து காயமுற்றாலே அந்த நிகழ்வு அடிபட்டுப்போய்விடும். காவற்றுறை, முதலுதவி வாகனங்களின் விளக்குகள் சுழன்றபடி அந்த இடமே விழாவுக்குரிய களையை இழந்து திகில் நிறைந்த இடமாக மாறிவிடலாம்.

தமிழ் மரபுத் திங்கள் மட்டுமல்லாது எல்லா நிகழ்வுகளிலுமே மக்கள் பாதுகாப்பு விடயத்தில் கண்டிப்பான கவனம் தேவை. சில மண்டபங்களில் போதுமான இடர்க்கால வெளியேறும் வழிகள் (Emergency Exits) இல்லை.

தமிழ் மரபுத் திங்கள் விழாக்களில் எங்காவது சுவைமிகுந்த இலக்கிய உரைகள் நிகழ்ந்ததா என்று தேடிப்பார்க்கவேண்டியுள்ளது. பேருரைகள் வேண்டாம். சிற்றுரைகளாவது...? கனடாவில் வாழும் இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், ஈழத்தைச் சேர்ந்த தமிழறிஞர்களைத் தேடிக் கண்டுபிடித்து இவ்வாறான மேடைகளுக்கு அழைத்துவரவேண்டும்.

‘இவ்வாண்டின் தமிழ் மரபுத் திங்கள் நிகழ்ச்சிகளை நடத்தி முடித்தாயிற்று. இனி அடுத்த ஆண்டு பார்த்துக்கொள்வோம்’ என்று இந்தச் சிந்தனையே இல்லாதிருந்துவிட்டு 2013 டிசம்பரில் அரக்கப்பரக்க ஓடித்திரியாமல் தொடர்ச்சியாக ஆண்டு முழுவதுமே பல்லின சமூகத்துக்கும் தமிழ் மரபை எடுத்துச்செல்லவும் எடுத்துச்சொல்லவும் நாம் அனைவரும் ஓயாது உழைக்கவேண்டியதன் தேவையை உணர்ந்துகொள்வோம்.

ஒரு விழாவை நடத்தி முடிப்பதன் வேலைப் பளுவை நாம் அறியாதோரல்லர். நூற்றுக்கணக்கில், ஆயிரக்கணக்கில் செலவு செய்து நாட்கணக்கில் திட்டமிடப்பட்டு நடத்தப்படும் விழாக்கள் சிலவேளைகளில் மிகச் சிறிய ஒரு விடயத்தினால் சிறப்புப்பெறாது போகலாம். எனவே எல்லா வகையிலும் இயலுமான வரையிலும் கவனத்துடனும் அக்கறையுடனும் விழாக்களை ஒருங்கமைப்போம். சிறப்புற நடத்துவோம்.

இல்லாவிடில் தமிழ் மரபுத் திங்கள் விழாக்கள் ஆண்டுதோறும் ஜனவரியில் நிகழும் சடங்காகிப்போய்விடும்.

*gangatharan.k@thaiveedu.com*

■ ■ ■



## சமூக நலன் சார்ந்த கொடுப்பனவுகள்:

# பாதகமான முடிவும் மீளாய்வும்



ஆ.க. ஆனந்தநாதன்

**கனடிய மத்திய அரசின் சமூக நலன் சார்ந்த கொடுப்பனவுகளும் நன்மைகளும்! பாதகமான முடிவும் மீளாய்வு/ மேன்முறையீட்டு முறைமைகளும்:**
கனடிய மத்திய அரசின் CPP ஓய்வூதியமும் CPP வலுவளரினர் நன்மைகளும் RDSP வலுவளரினர் சேமிப்புத் திட்டத்தின் விண்ணப்பத்தின் பாதகமான முடிவை எவ்வாறு மீளாய்வு / மேன்முறையீடு செய்யும்படி கேட்கும் முறைமைகளும் (How to ask service canada to reconsider /Appeal their decision on your CPP/CPP Disability and RDSP Application Decision Internal Reviews/ Appeals Process) இப்போது நீங்கள் உங்க ளுடைய கனடிய மத்திய அரசின் மேற்கூறிய சமூகநலக் கொடுப்பனவுகளுக்கு உங்களு டைய விண்ணப்பங்களைச் Service Canadaக்கு ஊடாகச் சமர்பிக்கும் போது, நீங்கள் அக் கொடுப்பனவுகளுக்கும், நன்மைகளுக்கும் அவர்களது தகுதி காண் தகைமைகளான both ‘Severe’ and ‘Prolonged’ and must prevent you from being able to work any job on a regular basis திருப்திகரமாகப் உங்களது மருத்துவ சான்றிதழ்கள் மூலம் பூர்த்திசெய்யாதவிடத்து, உங்களது விண்ணப்பங்கள் Service Canadaவினால் நியமிக்கப்பட்ட Medical Adjudictorsகளால் நிராகரிக்கப்பட்டால் அல்லது அவர்கள் உங்களது மேற்கூறிய விண்ணப்பங்களின் முடிவுகளைத் தீர்மானிப்பதற்கு மேலதிக தகவல்களைச் சமர்பிக்கும் படியான முடிவுகளை எடுத்தால், அவர்களின் அம்முடிவுகளை புதிய மருத்துவத்தகவல்கள் மூலம் உங்களது வலுவளர் தன்மை மற்றும் நிலைமைகளை எடுத்துக்கூறி அவர்களது பாதகமான முடிவுகளை எவ்வாறு மீளாய்வு/ மேன்முறையீடு செய்யும் முறையைப் பற்றி இவ்வாக்கத்தில் விபரமாகப் பார்ப்போம்!.

இம்மேன்முறையீடு / மீளாய்வு படிமுறையை மிகச் சுருக்கமாகப் பின்வரும் வினாக்களுக்கு விடைதேடும் முயற்சியாகப் பார்ப்போம்.

முதலில் உங்களது Canada Pension Plan (CPP) or CPP Disability Benefit விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு Notice of Decision service canadaஆல் அனுப்பியிருந்தால் அவர்களது அப்பாதகமான முடிவை எவ்வாறு மாற்றுவது.

### CPP/CPP Disability I want my decision changed:

I was turned down what are my Rights?
How do I get my decision changed?
Contract information for Reviews/appeals?
How do I Prepare for my Reviews, Appeals?
Do I have to pay for a review or an appeal?
When will I know the decision?
What happens if I win an appeal?
Can I do any thing else?

மேலே நான் குறிப்பிட்ட ஆங்கிலத்தில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு சுருக்கமான பதிலை பின்வரும் பந்திகளில் பார்ப்போம்.

உங்களுடைய CPP Disability விண்ணப்பம் Service Canadaவினால் நியமிக்கப்பட்ட Medical Adjudicatorஆல் நிராககரிக்கப்பட்டால் நான் ஏற்னவே கூறியது போல அவர்களது அப்பாதகமான முடிவோடு நீங்கள் உடன் படாமல் அவர்களை மீளாய்வு செய்யும்படி கேட்பது உங்களது அடிப்படை உரிமையாகும். நான் முன்னைய கட்டுரைகளில் குறிப்பிட்டது போல உங்களுடைய விண்ணப்பத்தோடு அவர்களுக்கு அனுப்பிய உங்களது மருத்துவச் சான்றிதழ்களின் பிரதிகளோடு அல்லது புதிய உங்களது வலுவாளர் தன்மையை உறுதிப்படுத்தும் மருத்துவ ஆவணங்களோடு அவர்கள் தரும் 90 நாட்கள் காலக்கெடுவுக்குள் உங்களது மீளாய்வு / மேன்முறையீட்டு விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கவேண்டும். பின்வரும் மூன்று படிமுறைகளில் நீங்கள் உங்களது மீளாய்வு விண்ணப்பத்தை Service Canadaவுக்குச் சமர்ப்பிக்கலாம். There are three opportunities to request a review of your CPP disability benefit application. These must occur in the following order they are:

**Step 1:** முதற்படியில் நீங்கள் உடனடியாக உங்களது மீளாய்வு விண்ணப்பத்தை சமர்ப்பித்தல் வேண்டும். Send a written request to service Canada for reconsideration. If you are dissatisfied with their decision நீங்கள் அவர்கள் எடுத்த தீர்மானத்தில் அதாவது உங்களது மீளாய்வு விண்ணப்பத்தில் அவர்கள் மேற்கொண்ட தீர்மானத்தில் திருப்திப் படா விட்டால் இரண்டாவது படி முறைக்குப் போகலாம்.

**Step 2:** அவர்களது Internal reviewஇலும் நீங்கள் திருப்திப்படாவிட்டால் நீங்கள் உங்களது மேன்முறையீட்டை அவர்களது Commissioner of Review Tribunalsக்கு அனுப்பலாம். Send an appeal to the office of the commissioner of Review Tribunals. If you are dissatisfied with this decision.

**Step 3:** மூன்றாவது படிநிலையில் Pension appeals boardக்கு உங்களது மேன் முறையீட்டை அனுப்பலாம். Send your appeal to their Pension appeals board இவ்விடத்தில் நீங்கள் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விடயமென்னவெனில் ஒவ்வொரு படிநிலைகளிலும் நீங்கள் உங்களது மீளாய்வு/ மேன்முறையீட்டு விண்ணப்பத்தை எழுத்து மூலம் அவர்களால் தரப்பட்ட குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் விண்ணப்பித்தல் வேண்டும். At every level, you must make your request in writing within specific time limits. You can request a review of any decision made on your application, including for example.

உங்களது CPP/CPP Disability Benefit கனடிய ஓய்வூதிய வலுவளர் விண்ணப்பம் முற்றாகவே நிராகரிக்கப்பட்டால், உங்களுக்குத் தரப்படும் CPP ஓய்வூதியத்தின் நன்மைக்கான பணம் குறைக்கப்பட்டால், உங்களுக்குத் தரப்படும் CPP Benefitக்கான திகதி/தொடங்கும் காலம் பிந்தினால் அல்லது தாமதித்தால், அல்லது உங்களது CPP Disability payment முற்றாக இரத்துச் செய்யப்பட்டிருந்தால் நான் மேலே கூறிய மூன்று படிநிலைகளிலும் நீங்கள் அவர்களது முடிவை எதிர்த்து மாற்றியமைக்கும்படி அவர்களால் தரப்படும் காலக்கெடுவுக்குள் மீளாய்வு செய்யும் படி உங்களது மேன்முறையீட்டை எழுத்து மூலம் விண்ணப்பிக்கலாம்.

### Things to keep in mind in your appeal or reconsideration process:

முதலில் Service canada வினால் தரப்படும் 90 நாட்களுக்குள் உங்களது மீளாய்வு/ மேன்முறையீட்டை எழுத்துமூலம் அவர்களுக்கு அறிவிக்கவேண்டும்.

உங்களுடைய பெயர் தற்போதைய முகவரி அத்தோடு உங்களுடைய Social Insurance Number (SIN) முக்கியமாக உங்களது மீளாய்வு விண்ணப்பத்தில் குறிப்பிடுதல் வேண்டும்.

Please Note: “You are responsible for providing all information required to support your case. you can provide this information when you appeal or after letting know service Canada in writing that you want to appeal”

இது மிக மிக முக்கியமானதாகும். இவ்வாறே எல்லா மீளாய்வு / மேன்முறையீட்டு படிமுறைகளிலும் நீங்கள் கட்டாயம் எழுத்து மூலம் உங்களது மீளாய்வு விண்ணப்பத்தை தக்க ஆவணங்களோடு Service canadaவுக்குச் சமர்ப்பித்தில் வேண்டும். இது உங்களுடைய முக்கிய பொறுப்பாகும். 90 நாட்கள் காலக்கெடு மிக முக்கியமானதாகும்.


ஒரு மாதத்திற்கு முன்பே உங்களது மேன்முறையீட்டை Service canada விசாரிப்பதற்கு முன்பு அவர்களால் ‘Explanation of the Decision’ அவர்கள் ஏன் உங்களது மீளாய்வு விண்ணப்பத்தில் பாதகமான முடிவை எடுத்தார்களென்று விளக்கி மேற்கூறிய ஆவணத்தை அல்லது கடிதத்தை உங்களுக்கு அனுப்புவார்கள். இந்த ஆவணம் / கடிதம் மிகத்துல்லியமாக விபரமாகத் தங்களது பாதகமான முடிவை உங்களது விண்ணப்பத்தில் ஏன் எடுத்தார்களென்றும் அடுத்த படியாக நீங்கள் என்னசெய்யவேண்டுமென்பதையும் விளக்குவார்கள். 90 நாட்கள் காலக்கெடு தந்து உங்களது மேன்முறையீட்டை அடுத்தபடிக்கு மீளாய்வு விண்ணப்பிக்கும்படி ஊக்குவார்கள். Service canadaவின் உங்களது மீளாய்வு / மேன்முறையீட்டுக்கு பதிலளிக்கும் காலம் 70% விண்ணப்பங்களில் 120 நாட்கள் அல்லது நான்கு மாதங்களாகும். முக்கியமாக நீங்கள் ஏதாவது மேலதிக மருத்துவத்தகவல்கள் உங்களது மீளாய்வு/ மேன்முறையீட்டு விண்ணப்பத்தோடு கொடுத்திருந்தால் / கொடுக்கவேண்டியிருந்தால் அவர்கள் இன்னும் மேலதிக நேரம் எடுப்பார்கள், (Note) If additional information is needed, it may take longer to process your appeal/ internal review application. Service canadaவின் எல்லா மேன்முறையீட்டு படிமுறைகளிலும் உங்களது விண்ணப்பத்திற்குப் பாதகமான முடிவையே அவர்கள் எடுத்தால் இறுதியாக நீங்கள் உங்களது மேன்முறையீட்டு மனுவை Federal Courtக்கு கனடிய மத்திய அரசின் நீதிமன்றுக்கு எடுத்துச் சென்று சட்டத்தரணிகளைக் கொண்டு உங்கள் பக்க நியாயத்தை எடுத்துக்கூறி வாதிட்டு நியாயம் கேட்கலாம். 30 நாட்களுக்குள் கனடிய மத்திய அரசின் நீதிமன்றம் தங்களது நியாயத்தை உங்களது மேன்முறையீட்டு மனுவில் மேற்கொள்ளும்.

இவை பற்றிய மேலதிக தகவல்களையும் விண்ணப்பத்தாரிகள் தத்தமக்கு அண்மையிலுள்ள Service Canada கிளைகள் மூலமோ அல்லது CPP Pension Appeals Board (PAB), Commissioner of Review Tribunals (OCRT) அல்லது Federal court for Judicial Reviewவினிலோ அல்லது Service Canada இன் www.servicecanada.gc.ca என்னும் அவர்களது இணையத்தம் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

ananthanathan@thaiveedu.com

■ ■ ■

### மாறுவார்களா இவர்கள்?



தமிழிசைதான் கருநாடக இசையென்பதனைப் பல கலைஞர்கள் ஏற்றுக்கொள்ளுகின்றனர். ஆனால் தமிழில் பாடினால் அல்லது தமிழ்ப் பாடல்களை மாணவர்களுக்குச் சொல்லிக்கொடுத்தால் தம்மை மற்றவர்கள் தரக்குறைவாக எண்ணிவிடுவார்களோ என எண்ணுகின்றார்கள். அவர்களில் குற்றமில்லை. காரணம் தாய்மொழியில் கதைப்பதனைத் தரக்குறைவென எண்ணும் மக்களல்லவா நாம்.

தமிழே உருவானவன் முருகன் என்போம்.

சங்கத் தலைமைப் புலவனாய் இருந்து தமிழ் வளர்த்த தென்னாடுடைய சிவனென்போம். அவனது பாடல் பதினோராந் திருமுறையில் உள்ளதாய்ப் பகர்வோம். ஆனால், அவனை வழிபடுவதற்குத் தமிழ் உகந்ததல்ல எனச் செத்துப்போன மொழியில் வழிபாடு செய்வோம். இதே கருத்தை அனைவரும் தொடர்ந்து சொன்னபடி இருக்கின்றோமே தவிர எவருமே மாற்றத்தை ஏற்படுத்த முன்வருகின்றோமில்லை. தமிழில் வழிபாடுகள் நடந்தால்தான் கோயிலுக்கு வருவோமென்றோ அல்லது தமிழ்ப் பாடல்களைக் கற்பித்தால்தான் எமது பிள்ளைகளை இசை கற்க அனுப்புவோம் என்றோ நாங்கள் கூறும் நிலை என்று வருகின்றதோ அன்றுதான் மற்றவர்கள் மாறுவார்கள். மாற்றம் என்பது எங்களிலிருந்தே ஆரம்பிக்க வேண்டும்.

- ரொறன்ரோ இசை ஆசிரியர் திரு. வர்ண இராமேஸ்வரன்.
(Facebook - முகநூலில்)

• வலுவளருக்கான (Disabled Persons) உடல்/உளநலப்பாதிப்பு மதிப்பீடு
• சமூகநலக் கொடுப்பனவு (Social Benefit)
• RDSP Tax Credit Certificate மூலம் RDSP சேமிப்பு
• மாநில அரசின் ODSP மத்திய அரசின் RDSP விண்ணப்பங்கள்

A.K. Ananthanathan, MA, MSW, RSW
Leglly Licensed Medical & Clinical Registered
Social worker with Ontario College of social workers and social services workers (OSWSSW)

தொலைபேசி இலக்கம்: Tel: 905-572-6854 தொலைநகல் இலக்கம்: Fax: 905-572-6854 மின்னஞ்சல் முகவரி: E-maill: kanathan2003@hotmial.com

# *Thinking of Selling Your Home OR Finding the Perfect Neighbourhood*


## Selling COMMISSION FROM $999 + H.S.T

♦ Maximum exposure of your property through Virtual tour and web exposure until sold ♦ Full service MLS/TREB ♦ Open house

வீட்டில் திருத்த வேலைகள் இருப்பின் அதற்கான செலவுத் தொகை **2 மாதங்களுக்கு வட்டியின்றி** ஒழுங்கு செய்து தரப்படும்.

## கூடிய விலையில் விரைவான விற்பனை!

**Neilson/Mclevin**



3 BR
3 WR
Finist BSMT

**$328,900**

**Markham & Lawrence**



3+2BR
2 WR
Finist BSMT
SPRT ENT

**$459,300**

**Hoover Park & 9th Line**



3 BR
3 WR

**$499,900**

**Morningside/Finch**



4 BR
3 WR
Finist BSMT

**$509,000**

**Meadowvale & Ellesmere**



3+1BR
4 WR
Finist BSMT

**$559,000**

**NEED MORE HOUSES FOR LISTING**

## ♦ வீடு வாங்குவோர் கவனத்திற்கு!

கொள்வனவின் போது வழக்கறிஞர் ஊடாக

**50% (Cash Back) உத்தரவாதம்!!!**

சரியான நேரத்தில் சரியான முகவரை நாடுங்கள்.



**HomeLife/Future**
Realty Inc., Brokerage*
*Independently Owned and Operated
**Bus : 905-201-9977** Fax : 905-201-9229
205-7 Eastvale Drive, Markham ON L3S 4N8

**Raja V.S. Rajagopal**
Sales Representative
**C : 416-727-8647**
Some condition may apply

# நடக்கும் என்பார் நடக்காது, நடக்காது என்பார் நடந்துவிடும்


- பொ. கனகசபாபதி -

மாயன் நாட்காட்டியின்படி 21-12-2012 கனடிய நேரம் காலை 6:11 உலகம் அழிந்து விடும் என்றார்கள். நான் அயர்ந்து தூங்கி காலை 7:30க்கு நித்திரை விட்டு எழுந்தேன். பிரளயங்கள் (Catastrophies) அண்டம் பூராவும் ஒரே சமயத்தில் ஏற்படும் வாய்ப்பு இல்லை என்பது புவிசரிதவியல் அறிஞர்களுடைய கருத்து. எங்கேயாவது ஏதாயினும் அசம்பாவிதம் நடந்துள்ளதா என அறிய தொலைக் காட்சியை முடுக்கினேன். எந்தவித அறிகுறி யாவது இருந்ததா? ஒன்றுமே இல்லை. காலைக் காப்பியுடன் அன்றைய 'The Toronto Star'இனைப் பார்த்தேன். இன்று காலை உலகம் அழியாது இருந்திருந்தால் இப்போ இந்தப் பத்திரிகையை நீங்கள் வாசித்துக்



கொண்டிருப்பீர்கள் என்றிருந்தது. உலகம் அழியவில்லை என்பது உண்மைதான். ஆனால் இன்றில்லாவிட்டாலும் என்றோ ஒருநாள் உலகம் அழிவது திண்ணம் என்பது விஞ்ஞானிகளின் அசைக்க முடியாத நம்பிக்கை. சூரியனுடைய ஆயுட்காலமான 10,000,000,000 ஆண்டுகளிலே அரைவாசி காலாவதியாகி விட்டது. ஆகவே என்று சூரியன் சிதைவுறுகிறாரோ அன்றே பூமியும், அதன் பரப்பிலே வாழ்கின்ற அத்தனை உயிரினங்களும் அழியப்போவது உண்மை என்கிறார்கள் விஞ்ஞானிகளில் ஒரு சாரார். இப்படியாகத் திடீரென உலகம் அழிவது பற்றியும் அப்பொழுது தெய்வங்களின் இடையீட்டினால் உலக சீவராசிகள் தொடர்ந்தும் உயிர் வாழ்வது பற்றியும் சமய புராணங்கள் எடுத்துச் சொல்லியுள்ளன என்றாலும் உலகப் பரப்பிலே ஒரே சமயத்தில் இத்தகைய பிரளயங்கள் ஏற்படக் கூடிய சாத்தியக் கூறு இல்லை என்பது உயிர் புவியியல் (Geobiologists) அறிஞர்கள் அப்பிப்பிராயம். கிறிஸ்தவ மதம் உயிருற்பத்திக்கு சிறப்பாக்கக் கொள்கையிலேயே (special Creation) நம்பிக்கை வைத்துள்ளது. அதன் படிக்கு இறைவன் உயிரினங்களை அவை உள்ளவாறே படைத்தார். இறைவன் எதிர்பார்ப்பு அவர்கள் நல்லவர்களாக வாழவேண்டும் என்பதே. ஆகவே அவர்கள் தறிகெட்டுக் கெட்டவர்களாக மாறுகின்றபொழுது, இறைவனுக்கு கோபம் வர உயிரினங்கள் முழுவதையுமே அழித்துவிட்டால் என்ன என்ற எண்ணம் எழுகிறது என்பது பைபிளின் உயிருற்பத்தி (ஆதியாகமம்) எனும் பகுதியிலே காணப்படுகிறது (Book of genesis). இதை அறிந்த நோவா என்ற நல்லவர் இறைவனிடம் ஒரு சில கெட்டவர்களுக்காக எல்லா நல்லவர்களையும் அழிப்பது எப்படி நியாயம் ஆகும் என வாதிட இறைவன் மனம் மாறுகிறார். நான் ஒரு பெரு வெள்ளப் பெருக்கினை (பிரளயம்) ஏற்படுத்தி உலக சீவராசிகள் யாவற்றினையும் அழிக்கப் போவது உண்மை, ஆனால் நோவாவிற்கு ஒரு சிறப்புச் சலுகை தரலாம் என்கிறார். நீ ஒரு பெரிய பேழை (படகினை / Noah's Ark) உருவாக்கி அதனுள்ளே தேர்ந்தெடுக்கப்பட்ட சீவராசிகளைப் பேணிப் பாதுகாத்துக்கொள். வெள்ளம் பெருகி ஏனைய உயிரினம் யாவும் இறந்தொழிந்ததும் வெள்ளம் வற்றிவிடும். இதன் பின்னர் அவை யாவற்றினையும் வள்ளத்தில் இருந்து வெளியே விடு. புதிய உலகம் நல்லவர்ளுடன் மீண்டும் ஆரம்பிக்கும் என்றார். இதனால் உயிர்த் தொடர்ச்சி (continuation of Species) ஏற்படுவதைக் காணமுடிகிறது. இது கூர்ப்பியலாளர்களால் பெருமளவிலே எதிர்க்கப்பட்டது என்றாலும் அமெரிக்காவில் இன்றும் சில பாடசாலைச் சபைகள் சிறப்பாக்கக் கொள்கையினையே கற்பிக்கின்றன என்பது ஆச்சரியமே. ஒரு சமயத்தில் உலகம் பூராவும் பிரளயம் ஏற்படுதல் சாத்தியமில்லை என்பதுடன், பல புதிய இனங்கள் எவ்விதம் தோன்றியிருக்க முடியும் என்ற வினாவும் சிறப்பாக்கக் கொள்கையை ஓரங்கட்டச் செய்கிறது. ஆனாலும் பிரளயம் ஒன்று ஏற்பட உயிரினம் அழிந்ததற்கான விளக்கத்தை இக்கதை தரவே செய்கிறது. (இங்கே ஒரு வேடிக்கை உள்ளது. தமிழகத்திலே தோணிபுரம் என்ற திருத்தலம் உள்ளதாம். அங்கேதான் திருஞானசம்பந்தர் ஞானப்பாலுண்டாராம். இந்த ஸ்தலத்தின் இறைவனைத் திருத்தோணியப்பர் என அழைக்கிறார்கள். யுகாந்தகாலத்தில் ஒரு பிரளயம் உண்டாகி அதில் உலகம் யாவையும் மூழ்கிய போது சிவபெருமான் இங்கு ஒரு தோணியில் உயிர்களை ஏற்றி மிதக்கச் செய்து காத்தமையால் இத்தலம் தோணிபுரம் எனப் பெயர் பெற்றது எனகிறது ஐதிகம். என்ன ஒற்றுமை பாருங்கள்) இதனோடொத்த பிரபலமான கதை ஒன்று இந்து புராணத்தில் சொல்லப் படுவதைப் பலர் அறிந்திருப்பீர்கள். இங்கே ஒரு சமயப் புரட்சி நடைபெற்றுள்ளது. இந்திரன் தேவேந்திரன், தேவர்களின் தலைவன். அது மாத்திரமல்லாமல் மழைக்கும் அவனே அதிபதி. அவன் 'பெய்' என்றால் மழை பெய்யும். 'நில்' என்றால் நிற்கும். ஆயர்கள் இந்திரனைத் தெய்வமாகக் கொண்டு அவனை மகிழ்விப்பதற்காக விழாக்கள் எடுப்பார்கள். கண்ணன் இந்திரனுக்கு எதிராக ஒரு புரட்சியைத் தூண்டிவிட்டான். "நீங்கள் ஏன் இந்திரனை வணங்கவேண்டும் அருகே உள்ள மலையின் காரணமாகவே மழை பொழிகிறது. நீங்கள் அப்படி ஒன்றும் இந்திரனை வணங்கத் தேவையில்லை. விரும்பினால் அந்த மலையினையே வணங்குங்கள்" என்றான். இன்று மாத்திரமல்ல என்றுமே எடுப்பார் கைப்பிள்ளைகளாகத்தான் மக்கள் வாழ்ந்தனர். இது சரிபோலத் தோன்றுகிறது என்று எண்ணியவர்கள் இந்திரனை வணங்குவதைக் கைவிட்டனர். வந்ததே இந்திரனுக்குக் கோபம். பழிவாங்கும் உணர்ச்சி மேலோங்க 'பெய்க மழை' என்றான். அடாத மழை கொட்டோ கொட்டென்று கொட்டியது. வெள்ளம் பெருகியது. சகல சீவராசிகளும் தவித்தன. பிறகென்ன கண்ணன் மேல் பழி. விலங்கினத்தினை அழிவிலிருந்து காப்பாற்ற வேண்டிய கடமை அவர் தலையில் வீழ்ந்தது. உடனே கோவர்த்தன மலையினைத் தூக்கிப் பிடித்தார். எல்லா உயிரினங்களும் உயர்த்திய மலையின் கீழ் நின்று தம்மைப் பாதுகாத்துக் கொண்டன (படம் பார்க்கவும்). போதிய விலங்கினம் அழிவிலிருந்து காப்பாற்றப்பட்டது. பிரளயத்தால் பாதிப்பு ஏற்படவில்லை. இந்த இரண்டு புராணக் கதைகளிலும் உண்மை இருக்குமாயின் அவை நடந்தது கடந்த 6,700,000 ஆண்டுகளுக்குள்ளேயே. Cenozoic Era என அழைக்கப்படும் தற்காலம் முலையூட்டிகளின் ஆட்சிக் காலமாகக் கருதப்படுகிறது. இந்த யுகம் 65,000,000 ஆண்டுகளை உள்ளடக்கியது. முதல் மனிதன் தோன்றிய தற்கான அறிகுறி 6,700,000 ஆண்டுகளாகும்.

முதல் உயிரினம் தோன்றிய காலத்தினைப் Paleozoic Era என்பார்கள். அது 3,500,000,000 வருடங்களுக்கு முன்னர். பூமியினது தற்போதைய ஆயுசு 4,500,000,000 ஆகும். இயற்கை அனர்த்தங்களால் ஏற்படுகின்ற அழிவினைப் பேரழிவு (mass extinctions) என விஞ்ஞானிகள் அழைப்பார்கள். பூமிப் பந்து தோன்றிய காலத்திலிருந்து இதுவரை அப்படியாக 20 முறை நடந்திருக்கலாமென்றாலும் அவற்றில் அதிகமானவை வெறுமனே சிறுசிறு பிராந்தியங்களாவே நடந்துள்ளன. உலகில் உள்ள உயிரினங்களில் ஒரே சமயத்தில் 50%த்திற்கு அதிகமானவை அழிந்தால் தான் அதனைப் பிரளயம் என்பார்கள். Jurassic Park என்ற திரைப்படத்தினைப் பார்க்காதோர் மிகக் குறைவாக இருப்பார்கள். மனித இனம் தோன்றுதற்கு முன்னர் நடந்த பிரளயம் 65,000,000 ஆண்டுகட்கு முன்னர் நடந்தது. உலகெங்கணும் காணப்பட்ட டைனசோர்களில் பறக்க முடியாத அத்தனையையும் அழித்துவிட்டதுடன் அக்காலத்தில் உயிர் வாழந்த உயிரினங்களில் 70%த்தினையும் முற்றாகவே அழித்துவிட்டது. அக்காலத்தில் கூர்ப்பிலே மிக உயர்ந்த நிலையில் உள்ள விலங்கினம் ஊர்வன வகையினைச் சேர்ந்த டைனோசோர்களே. முலையூட்டிகளோ, பறவைகளோ கூர்ப்படையாக் காலம். ஆகவே இந்த யுகம் மீசோசோயிக் யுகம் (Mesozoic Era) எனவும் ஊர்வனவின் ஆட்சிக்காலம் (Age of Reptiles) எனவும் அழைக்கப்பட்டது. 10 கீலோமீற்றர் நீளமுள்ள உடுவுருக்கல் (Asteroid) ஒன்று பூமியின் பரப்பிலே விழுந்தமையால் தான் இந்தப் பேரழிவு ஏற்பட்டது என்கிறார்கள் ஆய்வாளர்கள். ஒரு மணித்துளியினுக்கு 1,800 கிலோமீற்றர் வேகத்தில் இந்தக் கல் வீழ்ந்தமையால் அது பூமிப்பரப்பிலே எத்தனை தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும் என்பதை உணர்ந்து கொள்ளமுடியும். அந்தக் கல் பூமிப்பரப்பில் வீழ்ந்த தாக்கத்தினால் வெடித்துச் சிதறியதால் வெளிவந்த புகார் படலம் முற்றாகவே அற்றுப்போக எத்தனை வருடங்கள் எடுத்திருக்கும். அக்காலத்தில் சூரிய ஒளியினைக் காணமுடியாது, தாவர இனங்கள் அழிய, உணவுச் சங்கிலி பாதிக்கப்பட எத்தனை உயிரினங்கள் அழிந்திருக்கும்! மனித இனம் தோன்றியது 6,700,000 வருடகாலத்தில் என்று கருதப்படுகிறது. மனித இனம் தோன்றியதற்குப் பின்னர் ஆங்காங்கே




பேரழிவுகள் 4 பிரதானமாக ஏற்பட்டதாகக் கருதப்பட்டாலும் 74,000 ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட பேரழிவினையே மிகப் பாரியதாக விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். உங்கள் பலருக்கு ரோபா ஏரியைத் தெரிந்திருக்க நியாயமில்லை. இந்தோனேசியாவின் சுமாத்திரா தீவினில் இந்த ஏரி உள்ளது. இன்று உல்லாசப் பிரியர்களுக்கு உற்சாகமூட்டும் நீர்ப்பரப்பாக உள்ள இந்த ஏரி ஒரு காலத்தில் மனித வர்க்கத்தின் சுடுகாடாக மாறியிருந்ததை நம்புவதற்குக் கஷ்டமாகத்தான் இருக்கும்.

இந்தோனேசியாவின் சுமாத்திரா தீவினிலே எரிமலை ஒன்று குமுறி, தீக்குழம்பினை வெளியேற்றியதாம். இவ்விதம் அதனிலிருந்து குழம்பு வெளியேறியதால் அந்த இடம் அப்படியே புதையுண்டுபோக, அங்கே மிகப் பெரிய ஓர் ஏரி தோன்றிதாகச் சொல்லப் படுகிறது. இந்த ஏரியே இக்காலத்தில் சுமாத்திரா தீவினிலே காணப்படுகின்ற 100 கில்லோ மீற்றர் நீளமும் 30 கில்லோமீற்றர் அகலமும், 505 மீற்றர் ஆளமுமான ரோபா ஏரியாகும். அந்த எரிமலை குமுறி உமிழும் போது 2,800 கன கில்லோ மீற்றர் சிதறுண்ட கற்பாறைகள், தாவரங்கள் என அத்தனையுமே பூமியிலிருந்து வளிமண்டலத்தில் எறியப்பட்டதாகக் கூறுகிறார்கள். இன்றைய இந்தியா, பாக்கிஸ்தான் மற்றும் பேர்சியாக் குடா யாவுமே 1.5 மீற்றர் உயரத்திற்குச் சாம்பலால் மூடிக் கிடந்ததாம். அதன் விளைவாக ஏற்பட்ட குளிர் தணிந்து தரை வெப்பம் சீராக வருவதற்கு ஏறக்குறையப் பத்து ஆண்டுகள் எடுத்ததென்றால் உயிரினங்கள் கதி என்னவாகியிருக்கும் என்பதைக் கணிப்பதற்கு உங்களிடமேயே விட்டுவிடுகிறேன். மூச்சு எடுக்கமுடியாமல் இறந்த மனித இனத்தினில் எஞ்சியதில் பெரும் பகுதி ஒன்றில், குளிரின் கொடுமையால் அல்லது பசியின் காரணமாக அழிந்துபோக எஞ்சியது அப்பிராந்தியத்தில் ஒரு சில ஆயிரம் மாத்திரமே. இந்த ஆயிரத்திலிருந்துதான் இன்று தமிழர், சிங்களவர், இஸ்லாமியர், இந்தியர் எனத் தம்பட்டமடிக்கிறோமே அத்தனை பேர்களும் தோன்றினோம். இதனால் தான் மனித இனத்தில் பெரும் அளவிலே உருவவியல் வேறுபாடு அதிகம் இல்லாமைக்கான காரணம். மனித உயிர்ச் சுவடுகளை அவதானித்து மனிதக் கூர்ப்பு இயல் அறிஞர்கள் எதிர் பாரக்கின்ற அளவினுக்கு உருவவியல் வேறுபாடு இன்றைய மனித சமூகத்தில் காணப்படவில்லை என்பது பரம்பரை அலகு கலப்பினுக்கு அதிக மூதாதையர் இல்லாமையே காரணமாக இருக்கலாம். வெறும் ஆயிரங்களிடையே இனக் கலப்பு ஏற்படுகின்ற பொழுது பெரிதாக விகாரமோ, பரம்பரை அலகுக் கலத்தலோ நடைபெற வாய்ப்பு இல்லை அல்லவா!

கடந்த 540,000,000 ஆண்டுகளிலே பூமியின் பரப்பினை மூன்று பிரதானமான பிரளயங்கள் தாக்கியமையால் பூமியினது உயிரியல் பல்வகைமை (biodiversity) பேரழிவிற்கு ஆளானாலும் முற்றாகவே உயிரினம் அழிந்து போய்விடவில்லையாம். Anthomy Barnosky எனும் ஐக்கிய அமெரிக்க தொல்லுயிரியல் அறிஞர் இப்போது வாழ்கின்ற முலையூட்டிகளில் அடுத்த 300 ஆண்டுகளிலே ¾ அழிந்து விடலாம் என்ற கருத்தினைத் தெரிவித்துள்ளார். அதற்கு மனிதனுடைய செயற்பாடுகள் தான் காரணமாக அமையலாம் என்கின்றார். இதைத் தவிர்ப்பதற்கு ஒரேயொரு வழி இன்னொரு கோளினில் வாழிடம் தேடிக் கொள்வது தான் என்கிறார்கள். எங்கே?

சூரியன் சிறிது சிறிதாக குளிரத் தொடங்குமாம். அதன் விளைவாக அது சிறிது சிறிதாகப் பெருத்து ஒரு மிகப் பெரிய 'சிவப்பு இராட்சதன்' (red giant) ஆகிவிடும் என்கிறார்கள். அதனுடைய தற்போதைய விட்டம் 14,000,000 கிலோ மீற்றர் தூரம் ஆனால் இந்தச் சிவப்பு இராட்சதனின் விட்டம் நூறு மடங்கு அதிகமாக இருக்குமாம். இதனல் அது அருகே உள்ள வெள்ளி (Venus) மற்றும் புதன் (mercury) ஆகிய கோள்களையும் விழுங்கி ஏப்பம் விட்டு விடுமாம். சூரியன் 100 மடங்கு விரிந்ததன் காரணமாக பூமியினுக்கு அண்மையாக வந்து விடுகிறது. அதன் பரப்பு குளிர்வடைந்தாலும் கூட அது பூமிக்கு அண்மையாக வந்தமையால் அதன் வெப்பம் பூமியைத் பாதிக்கும். பூமியின் வெப்ப நிலை 100 பாகை செல்சியஸ்சிற்கு அதிகமாக, பூமியின் பரப்பிலுள்ள நீர் கொதித்து ஆவியாக மாறும். பிறகென்ன உயிரினங்கள் கதி? சிந்தியுங்கள். ஏனைய கோள்களும் பாதிக்கப்படவே செய்யும். எனவே எங்கே போனாலும் மனித இனம் அழிவது திண்ணம். எப்போ?

பெரிதாகப் பேசப்பட்டதும், 2012 டிசம்பர் 21 நடைபெறும் என்ற சொல்லப்பட்டதுமான பேரழிவிலிருந்து நாம் தப்பியிருக்கலாம், ஆனால் ஒன்று நிச்சயம். நாம் வசிக்கின்ற இந்தக் கோள் மற்றும் நம் இனத்தின் அழிவு எப்போவும்
நடக்கலாம் என்பது
மாத்திரம் உறுதி.



kanagasabapathy.p@thaiveedu.com

# வருமானவரிச்சேவையில் பலவருடம் அனுபவம் வாய்ந்தவர்களினால் நம்பிக்கையான சேவை

- Personal Tax
- Small Business Tax
- E-File Services
- Arrange RRSP
- Maximum Refund
- Tax Saving Advice

Tax Problems?
Penalties?
Haven't Filed?
We can help you...

**Acficana**
ACCOUNTING - FINANCE - TAX - AUDIT

310A-5200 Finch Ave.E, (Middlefield & Finch)
Toronto. ON M1S 4Z5
**Tel : 416-873-5780 / 416-847-9800**
Email : kethes@acficana.com

Confidential - Reliable - Guaranteed

# Do your Mortgage and WIN A TRIP to Dominican Republic

## Residential & Commercial
## Private Funds for Emergency Mortgages



WIN A TRIP

**1st Mortgage & 2nd Mortgage**
**Mortgage for any Situation**

- **Purchase**
  Buying a new home or Second home (Investment Property)
- **Refinance**
  To pay off High Interest credit cards, Extra cash for special occasions, Home renovation
- **Home equity line of credit** - No appraisal fee and legal fee
- **Mortgage renewal** - Best rate in Town
- **Switch Mortgage** - For good rate with no legal fee
- **Debt Consolidation** - Reduce bill payment by up to 75%
- **Special Occasions** - Power of sale - no credit
- **All Credit Challenges** - Tax arrears - self employment

**Kethes**
**Sivasubramaniyam**
*Mortgage Agent - (Lic # M08006105)*
**Cell : 416.873.5780**



VERICO
MORTGAGE BROKERS NETWORK
VERICO The Mortgage Leaders Inc.
(Lic # 10238)
885 Progress Ave, Suite UPH3, Toronto, ON. M1H 3G3


$134,900
TORONTO
Cross Street: Neilson/Mclevin Bedroom: 1
Washroom: 1 House Type: Condo Apt
Remark: Luxury Condo, 24 Hrs Gatehouse Secuirty, Full Rec Facilities, One Parking And One Locker Included. Laminated Floor, Steps To Ttc, Close To Schools, College, U Of T, Library, Mall, Banks, Minutes To 401 And More To List...
$219,900
MISSISSAUGA
Cross Street: Hillcrest/Hurontario Bedroom: 2+1
Washroom: 2 House Type: Condo Apt.
Remark: New Paint, Newly Renovated Washroom, New Laminate Floor For The Bedroom Location! Stunning Two Bedrooms Condominium. Steps To Cookeville Go Station And Public Transit. Minutes To Square One Shopping Centre, Schools.
$299,000
TORONTO
Cross Street: Midland / Danforth Bedroom: 2
Washroom: 1 House Type: Detached Bungalow
Remark:All Electrical Fixtures, Stove, Fridge, Washer/Dryer, All Window Coverings.
$305,000
MISSISSAUGA
Cross Street: Hwy 10/ Bristol Bedroom: 3
Washroom: 2 House Type: Condo Townhouse 3 Storey
Remark: Demand Location, Walk To Schools, Bus, Shops, Beautiful Kitchen With Granite Counter Tops, New Appliances, Beautiful New Flooring, Walk Out To Large Terrace, Walkout Bsmt To Private Yard, Private Parking With Garage.
$305,000
MISSISSAUGA
Cross Street: Hurontario/Bristol Bedroom:3+1
Washroom: 2 House Type: Condo Townhouse 3-Storey
Remark: Spacious Gorgeous, Well-Kept 3 Br-Home In A Safe, Highly Desirable, Professionally Managed Th Complex. Kids Play Area & Outdoor Pool. All Brick Facade, Cathedral Ceiling, Open Concept, Walkout To Balcony From Lr.
$398,000
MISSISSAUGA
Cross Street: Kennedy/Bristol Bedroom: 3+1 Washroom: 4
House Type: Condo Townhouse 3-storey Remark: Over 1700 Sq Ft Spacious Executive Townhouse. Second Floor Family Room With Gas Fireplace. Second Floor Laundry Room. Master Bedroom, Retreat With 4 Pc Ensuite And Separate Shower. Prof Finished Rec Room With Brand New Designer 4-Piece Bath.
$439,000
TORONTO
Cross Street: Kennedy/Danforth Bedroom: 3+1
Washroom: 2 House Type: Detached Bungalow
Remarks: 3 Bedroom Cliffside Bungalow! Basement Apartment With Separate Entrance And Separte Laundry Facilities! All New Flooring, Furnace, Ac, Doors, Granite Kit Countertop! Open Concept With Lots Of Pot Lights! Cozy Gas Fireplace!
$609,900
MARKHAM
Cross Street: 9th Line / 14th Ave Bedroom: 4
Washroom: 3 House Type: Detached 2-STOREY
Remark: 5 Years Old Home. Through Out Hardwood Floors. Upgrade Kitchen Cabinets. Well Maintain House With Double Garage Door With Interlock Pathway From Front To Back Beautiful Landscaping With Nice Flower Garden.
HOMELIFE
HIGHER STANDARDS
NEELAN THAMBIAH
Sales Representative
TEL: 416-835-6936
KIREW KANAGASABAI
Broker
HomeLife Today Realty Ltd., Brokerage *
*Independently Owned and Operated - Not intended to solicit buyers or sellers currently under contract
Office: 416-298-3200 | Direct: 416-903-4663
I Will Not Be Satisfied.....Until You Are!!
210-31 PROGRESS AVE., TORONTO, ON. M1P 4S6 FAX: 416-298-3440

# தாய் ஆக விரும்பும் பெண்களுக்கு

**- சிவராசாலிங்கம் -**

புதிய கலங்கள் உருவாகவும், புதிய கலங்களை பாதுகாக்கவும் Folic Acid அவசியமானதாகும். குறிப்பாக அடுக்கடுக்காகப் புதிய கலங்கள் உருவாகும் போது இது R.N.A உருவாக்கத்திற்கும் (புதிய கலங்கள் உருவாகும் போது அந்த கலங்களுக்கு DNA இரகசியங்களை பிரதியெடுத்து செல்வது இந்த RNA), அதை விட மிக முக்கியமாக D.N.A உருவாக்கத்திற்கும் Folic Acid தேவைப்படுகின்றது. இதனால் கருப்பையில் முதல் கலம் உருவாகும் போதும், அதை அடுத்து இந்த ஒரு கலம் பின்னர் கருப்பையில் கட கட வென மில்லியன் கணக்கான கலங்களாக பிரிந்து பிரிந்து வளர்ந்து செல்லும் போதும் Folic Acid அவசியமாகின்றது.

கருக்கட்டியது முதல் பதினேழு நாட்களில் இருந்து, முப்பது நாட்களுக்குள் மூளையாக மாறவேண்டிய திசுக்கள், மற்றும் முள்ளம் தண்டாக உருவாக வேண்டிய திசுக்கள் எல்லாம் கருப்பையில் உருவாகிவிடும். இந்த முக்கியமான நிகழ்சி நடைபெரும் போது பெரும்பாலான பெண்கள் தாம் கர்ப்பம் அடைந்து விட்டோம் என்ற உண்மையையே அறிந்திருக்கமாட்டார்கள். அவர்கள் அதை அறியும் போது எதையும் அவர்களால் தடுக்க முடியாது.

இந்த முக்கியமான நிகழ்சி கருப்பையில் நிகழும் போது சிசுவுக்கு Nerual tube defects ஏற்பட வாய்ப்புள்ளது. இது spina bifida (Neural tube defects result in malformations of the spine), anencephaly (skull, and brainல் பாதிப்பு) என்று அழைக்கப்படுகின்றன.

சிசுவுக்கு கால்கள் செயல் இழந்து போய், குடல், சிறுநீரகங்களின் செயல்பாடுகளில் குறைபாடு ஏற்பட்டால் அது spina bifida என்று அழைக்கப்படும். மிக அதிகளவு Nerual tube defect குழந்தைகள் இந்தவகையான குறைபாட்டுடனேயே பிறக்கின்றன. இக் குழந்தைகள் பிறந்ததும் சத்திர சிகிட்சை தேவைப்படலாம். வாழ்நாள் முழுதும் குறைபாட்டுடன் வாழவேண்டிய நிலை இவர்களுக்கு ஏற்படலாம்.



மூளை அரைகுறையாக வளச்சியடைந்தோ, அல்லது முற்றாக வளராமல் போயிருந்தாலோ, அல்லதுபோனால் மண்டையோடு முழமையாக வளர்ச்சியடையாத குறைபாடு சிசுக்களுக்கு நிலைமை ஏற்பட்டால் அதுவே anencephaly என்று அழைக்கப்படுகின்றது. இந்நிலைமை ஏற்பட்டால் கருச்சிதைவு ஏற்படலாம். இதையும் மீறிப் பிறக்கின்ற குழந்தைகள் விரைவில் இறந்துவிடுகின்றார்கள்.

கனடாவில் வருடாந்தம் இருநூற்றி அறுபது குழந்தைகள் Nerual tube defects பாதிப்புடன் பிறக்கின்றன. அமெரிக்காவில் வருடாந்தம் இந்த எண்ணிக்கை மிக அதிகம். 2500 குழந்தைகள் பாதிக்கப்பட்டுப் பிறக்கின்றன. இந்த குறைபாடுடன் பிறக்கின்ற குழந்தைகள் இறந்து போவதற்கும் வாய்ப்புகள் உள்ளன. மீறி தப்பிவாழும் குழந்தைகளும் வாழ்நாள் முழுதும் குறைபாட்டுடன் வாழவேண்டி ஏற்படும்.

Nerual tube defects குறைபாட்டுடன் குழந்தைகள் பிறப்பதை குறைப்பதற்காக அரசாங்கங்களும், சுகாதார மையங்களும், உலக சுகாதார நிறுவனவங்களும் கடும் முயற்சி எடுக்கின்றன. அவை கர்ப்பம் தரிக்க விரும்புகின்ற பெண்களை கர்ப்பம் தரிப்பதற்கு மூன்று மாதகாலம் முன்னதாக இருந்து Folic Acid எடுக்க வேண்டும் என அறிவுறுத்துகின்றன. அதே சமயம் கர்ப்பம் தரித்த பெண்களையும், குழந்தைக்கு தாய்ப்பால் கொடுக்கும் பெண்களும் கட்டாயமாக Folic Acid உண்ணவேண்டும் என்றும் சுகாதார மையங்கள் கடுமையாகப் பிரச்சாரம் செய்கின்றன. அண்மைக்கால ஆய்வுகளின் படி குழந்தைக்கு தந்தையாக விரும்புகின்ற ஆண்களும் Folic Acidஐ உண்ணுவதால் Nerual tube defectsஐ குறைக்க முடியும் என்று தெரியவந்துள்ளது.

கனடாவில் கருத்தரித்த பெண்கள் 0.4 mg Folic Acid எடுக்கும்படி சுகாதாரமையம் தெரிவித்துள்ளது. பொதுவாக ஆண்கள் 19வயதுக்கு மேல் 400 மைக்ரோ கிராம், கருத்தரித்த பெண்கள் 600 மைக்ரோ கிராம், பாலுட்டும் தாய்மார் 500 மைக்ரோ கிராம் Folic Acid எடுக்க வேண்டும் என்று சிபாரிகள் செய்யப்பட்டுள்ளது. அதே சமயம் அளவுக்கு அதிகமாக Folic Acidஐ எடுக்கக் கூடாது என்றும் அறிவுறுத்தப்படுகின்றது. இதற்குக் காரணம் அளவுக்கு அதிகமான Folic Acid விட்டமின் B12ஐ உடம்பில் இருந்து வெளியேற்றிவிடுகின்றது. இதனால் மூளையிலும், நரம்பு மண்டலத்திலும் பாதிப்புகள் ஏற்படலாம். ஒரு நாளைக்கு 1000 மைக்ரோ கிராமுக்கு மேல் Folic Acid எடுக்கவே கூடாது என்று சுகாதார மையம் எச்சரித்துள்ளது.

Folic Acid உருவாக்கத்திற்குக் காரணமான வோலேட் (folate)இன் முக்கியத்துவம் முதன் முதலில் 1931ல் Dr. Wills அவர்களால் கண்டறியப்பட்டது. தாய்மைக் காலத்தில் ஏற்படும் Anemiaவை தடுப்பதற்கு Folaet உதவும் என்று அவர் கண்டறிந்தார். இந்த வோலேட் முதலில் 1930ன் பிற்பகுதியில் brewer's yeast இருப்பதும், பின்னர் 1941ல் கீரையில் (spinach)ல் இருந்து பிரித்தும் எடுக்கப்பட்டது.

Folic Acidஐ விடவும் மேலும் சில Nutrients ஆரோக்கியமான பிரசவத்திற்கு அவசியம். கல்சியம், விட்டமின் D. இவற்றை எல்லாம் மேலும் nutrientsஐ ப்பற்றி பெண்கள் அதிகளவில் அறிந்திருக்கமாட்டார்கள். அது DHA omega-3 (Docosahexaenoic acid) ஆகும்.

கருவில் உருவாகும் சிசுவின் மூளை, கண் மற்றும் நரம்பு மண்டலங்களின் வளர்ச்சிக்கு DHA மிக அவசியமாக உள்ளது. இந்த விடயங்களுக்கு அடித்தளம் இடுபவர் இந்த DHA. கருவை சுமக்கும் பெண்களும், குழந்தைக்கு தாய்ப்பால் கொடுக்கும் பெண்களும் இந்த DHAஐ உள்ளெடுக்க வேண்டும் என்றும் இப்போ சிபாரிசு செய்யப்படுகின்றது

*sivaramalingam@thaiveedu.com*

■ ■ ■


**சக்தி என்றால் காப்புறுதி**



காப்புறுதி துறையில்
'30' வருட முழுநேர
உன்னதமான, நெறியான சேவை
'சகல காப்புறுதி நிறுவன பிரதிநிதி'

- இதுவரை 11,000 இற்கு மேற்பட்ட திருப்திகரமான வாடிக்கையாளர்கள்.
- 200 துரித காப்புறுதி இழப்பீடுகள்.
- ஏறத்தாழ 46 நிரந்தர, பகுதி ஊன இழப்பீடுகள்.
- பாரபட்சமின்றி எந்த நிறுவனத் திட்டமாக இருப்பினும் தெளிவான, துல்லியமான, இலகுவில் கிரகிக்கும் வண்ணம், பொறுமையான விளக்கம்.
- பல்வேறு நிறுவனங்கள் மூலம் சிறப்பு விருதுகள் பெற்ற பெருமை.
- எவ்வித வருத்தங்கள் இருப்பினும் அதற்கேற்ப தகுந்த காப்புறுதி திட்டங்கள் அளிக்கும் திறமை.
- உங்கள் காப்புறுதி மனுப்பத்திரம் ஏதாவது நிறுவனம் மூலம் நிராகரிக்கப் பட்டாலும் தகுந்த காப்புறுதி திட்டம், நிறுவனங்களின் நிபந்தனைக்கு அமைய நிச்சயமாக, உறுதியாகக் கொடுக்கப்படும்.
- உடனே அமுலுக்கு கொண்டுவரும் மருத்துவ ரீதியின்றி ஆயுள்காப்புறுதி.

**சக்திவேல்**

**416.706.3530, 905.763.8912**

Fax: 905 428 9307 Email: george14@sympatico.ca

மன்னிக்கவும்!

வாகனக் காப்புறுதி (Car Insurance), தீ காப்புறுதி (Fire Insurance) செய்வதில்லை!



**மருத்துவ ரீதியின்றி ஆயுள் காப்புறுதி**

- 85 வயதிற்குட்பட்ட எவரும் **$375,000** வரை மனுச்செய்யலாம்.
- சலரோகம், சலரோக தடுப்பூசி, மாரடைப்பு, இரத்த அழுத்தம் (**BLOOD PRESSURE**), கொழுப்பு சத்து கூடியுள்ளவர்கள் (**HIGH CHOLESTEROL**).
- பகுதி ஊனம், நிரந்தர ஊனம் உள்ளோர்.
- மற்ற காப்புறுதி நிறுவனங்களினால் நிராகரிக்கப்பட்டோர்.
- நிறை கூடியுள்ளோர் (**OVER WEIGHT**)
- அதிகூடியதான கை கால் வலி, மூட்டு வலியுள்ளோர்.

உங்கள் வருத்தங்களை பொறுத்து, நிலவரத்தை பொறுத்து தகுந்த காப்புறுதி திட்டத்தை நிச்சயமாக அளிக்க நான் கடமைப்பட்டுள்ளேன்.

ஒருவரும் நிராகரிக்கப்படமாட்டார்கள்.

**சக்திவேல்: 416 706 3530**

# நகைச்சுவை / சிரிப்பு

**- பொன். குலேந்திரன் -**

மகிழ்ச்சியும் சிரிப்பும் கூடிய உணர்வைத் தூண்டுவதை நகைச்சுவை எனலாம். நகைகளை போட்டாலே பெண்களுக்கு தங்களை அறியாது மகிழ்ச்சி ஏற்படும். அதனால் தானோ என்னவோ சிரிப்பினை நகைச்சுவை என்றும் அழைப்பர். நகைச்சுவையை எழுத்தின் மூலமும் பேசுவதிலும் கேலி சித்திரம் வரைவதின் மூலமும் அங்க அசைவுகளின் மூலமும் வெளிக்காட்டலாம். சுவையாக பேசி மக்களை மகிழவைப்பது தனிக் கலை. இக்கலையில் கிருபானந்தவாரியார், கி.வா. ஜகந்நாதன் போன்றோரைக் குறிப்பிடலாம். நகைச்சுவையாக எழுதுவதில் கல்கியை மறக்கமுடியாது. நகைச்சுவை கலந்த கட்டுரைகள் எழுதுவதில் கல்கி புகழ்பெற்றவர். நல்ல விமர்சகர்.



1916ல் பிறந்து 2001ல் மறைந்த சா விசுவநாதன் என்பவர் சாவி என்ற புனைப்பெயரில் எழுதி வந்த பிரபல நகைச்சுவை எழுத்தாளர். ‘வாஷிங்டனில் திருமணம்’ என்ற நகைச்சுவை கலந்த தொடர் கட்டுரை சாவி எழுதியது.

நக்கலாக எழுதுவதில் Tarzie Vittachi என்ற பெயரில் இலங்கையில் பிறந்து ‘Emergency 58’ என்ற நூலை எழுதியவரை இன்றும் எம்மால் மறக்கமுடியாது. வம்புப்பேச்சினால் 1958ம் ஆண்டு தமிழர் - சிங்களவர்களிடையே கலவரம் எற்பட்டதை அழகாக தனது நூலில் எழுதியுள்ளார். அரசியல்வாதிகளை கிண்டலடிப்பதில் சிறந்தவர். ‘Fly by Night’ என்ற புனை பெயரில் (குற்றங்கள் செய்து விட்டு களவாக இரவில் தப்பி ஓடியவர் என்பதாகும்) கேலிச் சித்திரம் வரைவதில் இலங்கையில் புகழ் பெற்றவர். 1925ல் பிறந்த விஜயசோமா என்பவர் டைம்ஸ் (Times) பத்திரிகைக்கு முதன் முதலாக வரையத் தொடங்கியவர்.

சிரிக்காமல் முகத்தை நீட்டி வைத்துக்கொண்டோரைக் கண்டாலே பலருக்குப் பிடிக்காது. ‘சிடுமூஞ்சி’ என்ற பட்டத்தைக் கொடுத்து விவார்கள். சிரிப்பு முகத்துக்கு பிரகாசத்தை கொடுக்கிறது. காலம் சென்ற பிரபல நகைச் சுவைக் கலைஞர் என்.எஸ். கிருஷ்ணனின் புதுமையான ‘சிரிப்பு வருது சிரிப்பு வருது சின்ன மனுஷன் பெரிய மனுஷன் செயலை பார்த்து சிரிப்பு வருது...’ என்ற பாடலை இன்றும் பலரால் மறக்கமுடியாது. கிருஷ்ணனுக்குப் பின்னர் குறிப்பிடக்கூடிய நகைச்சுவை நடிகர்கள் நாகேஷ், தங்கவேலு, சந்திரபாபு ஆகியோர். இவர்களைத் தொடர்ந்து வடிவேலு, விவேக், கஞ்சா கறுப்பு நம் நினைவில் வருகிறார்கள். இவர்களுக்கென தனி கலைத்திறன் உண்டு. பற்கள் முப்பத்திரண்டையும் காட்டிச் சிரித்தால் தான் சிரிப்பென்பதில்லை.

Mr. Bean என்பவரின் நகைச்சுவைக் காட்சிகள் வித்தியாசமானவை. அவரது ஒவ்வோர் அங்க அசைவும் ஆழமான கருத்தையுடையது. குறும்புத்தனம் மிக்கது. அவர் தனது சிறிய காரை ஓட்டிச்செல்லும் விதமே இரசிக்கக்கூடியது. அவரது நடிப்புக்கும் காலம் சென்ற Charlie Chaplin என்ற பிரபல நகைச்சுவை நடிகரின் நடிப்புக்கும் ஒற்றுமையை காணலாம். புன்னகைக்கும் சிரிப்புக்கு வித்தியாசமுண்டு. பெண்களின் புன்னகையில் மயங்கியவர்கள் பலர். அவர்கள் பற்களை காட்டிச் சிரிக்க வேண்டிய அவசியமில்லை. சினிமா நடிகைகளான கே.ஆர். விஜயா. சினேகா நடிப்பின் போது சிரித்து புன்னகை அரசி, புன்னகை இளவரசி என்று பெயர் பெற்றார்கள்.

சிரிப்பில் பலவகையுண்டு குழந்தையின் சிரிப்பு, வில்லனின் சிரிப்பு, கபடச் சிரிப்பு, கதாநாயகனின் அல்லது கதாநாயகியின் சிரிப்பு, அரசியல்வாதியின் சிரிப்பு, காதலியின் சிரிப்பு, நகைச்சுவை நடிகனின் நடிப்பை பார்த்துச் சிரிப்பு, பகிடியை வாசித்துவிட்டு வாய்விட்டுச் சிரிப்பு. இவை ஒவ்வொன்றும் ஒருவகை. அரசியல்வாதி சிரிக்கிறான் என்றால் ஏதோ காரணத்தோடு சிரிக்கிறான் என்பது அர்த்தம். வில்லனின் சிரிப்பென்றவுடன் பி. எஸ். வீரப்பா, நம்பியாரின் சிரிப்புகள் தான் நினைவுக்கு வரும்.

சிரிப்பே கவலையைத் தீர்க்கும் பொருத்தமான மருத்துவம். சிரிப்பைப் பற்றிப் பலவிதமான வண்ணைகள் உண்டு. சிரிப்பு அன்பை எடுத்துக்காட்டும் வரவேற்பு. நோய்களை விரட்டும் இயற்கை மருத்துவம் சிரிப்பு. ‘வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப்போகும்’ என்ற வாக்கியம் பொருத்தமானதொன்றாகும்

தெனாலி, விகடகவி, சிரித்திரன் போன்ற நகைச்சுவை மன்னர்கள் பற்றிய தமிழர் வரலாற்றில் மறக்கமுடியாது, தெனாலிராமன் ஆந்திர மாநிலம் கிருஷ்ணாமாவட்டத்தில் கார்லபதி கிராமத்தில் இராமையா – லஷ்மி தம்பதிகளுக்கு மகனாக ஏழைக் குடும்பத்தில் பிறந்தார். தெனாலியில் வாழ்ந்த இராமலிங்க சுவாமிகள் நினைவாக இராமலிங்கம் எனப் பெயரிடப்பட்டார். இவர் பிறந்த மூன்றாம் நாளே இவர் தந்தை காலமானார். தாய்மாமன் ஆதரவில் வளர்ந்தார். உரிய பருவத்தில் படிக்கச் சென்றாலும் படிப்பு அவருக்கு வரவில்லை. அகட விகட கோமாளித்தனங்களில் அவரது ஆற்றலும் அறிவும் பிரகாசித்தன.

இராமலிங்கத்தின் நகைச்சுவை உணர்வில் கவரப்பட்ட காளிதேவியிடம் வரம் பெற்றதாக வும், தன் நகைச்சுவையினால் பலரைச் சிரிக்க வைத்து விகடகவி என்று வாழ்த்தப்பட்டதாகவும் கதையுண்டு. அரசரின் அன்புக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமாகி அரச சபையில் முக்கிய இடம் பெற்றார். அவரது பேச்சில் கூர்மையிருந்தது. எழுத்திலும் பேச்சிலும் அங்க அசைவிலும் நகைச்சுவை கலந்தவர்களைக் காண்பது அரிது.

சிரித்திரன் என்ற நகைச்சுவை இதழை 1963ம் ஆண்டில் சி. சிவஞானசுந்தரம் கொழும்பில் ஆரம்பித்தார். பின்னர் 1971இலிருந்து யாழ்ப்பாணத்திலிருந்து வெளியிட்டார். இவ்விதழ் அன்னாரின் மறைவு வரை 32 ஆண்டுகள் தொடர்ந்து வெளிவந்தது. கருத்தோவியங்கள், கேலிச்சித்திரங்கள், போன்ற படைப்புகளில் சிரித்திரன் ஈழத் தமிழ் இலக்கியத்தில் சிறந்து திகழ்ந்தது. ஒரு காலத்தில் சிரித்திரனில் வெளிவந்த ‘மகுடி பதில்கள்’ கேள்வி பதில்களுக்கு மகுடமிட்டன. சிரித்திரன் மூலம் பல ஈழத்து எழுத்தாளர்கள் அறிமுகப்படுத்தப்பட்டார்கள். காசி ஆனந்தன், அ.ந கந்தசாமி, செங்கை ஆழியான், அகஸ்தியர், தெளிவத்தை ஜோசப் போன்றோரைக் குறிப்பிடலாம். சிவஞானசுந்தரத்தின் தந்தை திரு வி.க சிற்றம்பலம் இலங்கையின் முதலாவது தமிழ் தபால் அதிபர் (PMG). கட்டடக் கலை கற்பதற்காக மகனை இந்தியாவுக்கு அனுப்பினார், ஆனால் அவரோ ஒரு கேலிச்சித்திர விற்பன்னராக நாடு திரும்பினார். அக்காலத்தில் தினகரனில் வெளிவந்த கேலிச்சித்திர நாயகர்களான சவாரித் தம்பர், சின்னக்குட்டி, மைனர் மச்சான் போன்றோரை மறக்கமுடியுமா? இவர்களை உருவாக்கி, அவர்கள் பேசும் வசனங்களைச் சுவையாக எழுத நல்ல கற்பனைத் திறன் தேவை. சுந்தரின் சொந்தக் கிராமமான கரவெட்டியில் அவர் சந்தித்த உண்மைப் பாத்திரங்கள் இவர்கள்.

சிரித்திரன் வெளிவந்த ஆரம்ப காலத்தில், ஆடு ஒன்றை தீபாவளிக்கு வெட்டும்போது ஆடு சொல்லிச்சாம் ‘எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல், வேறொன்றறியேன் பராபரமே’ என்று.

சிறுவர்கள் வயது வந்தவர்களை விட அதிகளவு சிரிப்பதுண்டு. பிறந்து பேசமுன்பே சிரிக்கக் கூடியவர்கள் குழந்தைகள்.

சிரிப்பு, உடலில் எதிர்ப்பு சக்தியையும் இரத்த ஓட்டத்தையும் வலுப்படுத்துகிறது. பிராணவாயு உள்ளடக்க உதவுகிறது. இதயம், நுரையீரல் போன்றவவற்றைச் செயற்படுத்தும் தன்மை வாய்ந்தது. உணவு சேமிப்பதை விரைவுபடுத்துகிறது. சிந்தனையை உருவாக்கும். 1995ம் ஆண்டு மும்பாயில் ‘சிரிக்கும் யோகா முறை’ வியாதிகளைப் போக்கும் என்பதை மருத்துவர் மதன் கட்டாரியா என்பவர் அறிமுகப்படுத்தினார். சிரிப்பதற்குக் காரணம் தேவையில்லை. சிரிப்பதை ஒரு யோக அப்பியாசமாக இப்போது பல இடங்களில் பாவிக்கிறார்கள். அமெரிக்காவில் மட்டும் 400க்கு மேற்பட்ட சிரிப்புக் கழகங்கள் உண்டு. இதயம், வயிறு ஆகிய இடங்களுக்கு முன்னால் கை தட்டிச் சிரியுங்கள். தலையில் கை வைத்துச் சிரியுங்கள்.

*pon.kulendiran@thaiveedu.com*

■ ■ ■

# இம்மாதத்திற்குரிய முக்கிய குறிப்புக்கள்

**பெப்பிரவரி மாதக் குறிப்புகள்**

- இம்மாதம் 14 ஆம் திகதி வலன்ரைன் நாள் (Valentines day) காதலருக்கு மட்டுமே உரிய தினமல்ல. இந்நாள் உங்கள் வாழ்வில் பங்கு கொள்ளும் அனைவருக்கும் அன்பைத் தெரிவிக்கும் நாளாகும். இதனை வெளிக்காட்டுமுகமாக உங்கள் வீட்டை அலங்கரித்து வலன்ரைன் நாளின் சந்தோஷத்தை உங்கள் வீட்டினுள் கொண்டுவாருங்கள்.
- குடும்ப நாள் இம்மாதம் 18 ஆம் திகதி (Family day Holiday) ஆகும். இதனைக் குடும்பத்துடன் கொண்டாட ஆயத்தமாகுங்கள்.
- வரப்போகும் வருமானவரி காலத்திற்காக ஒரு கோப்பினை (File) ஆரம்பிப்பதுடன் உங்கள் வரி சம்பந்தமான வேலைகளைச் செய்வதற்காக வரி ஆலோசகருடன் ஆலோசிப்பதற்காக ஒரு நேரத்தைக் (Appointment) குறித்துக் கொள்ளுங்கள்.
- உங்கள் வருமான வரியை E-File மூலம் அனுப்புவதாக இருந்தால், அது பெப்ரவரி 11 ஆம் திகதியிலிருந்து ஆரம்பமாகின்றது.
- நீங்கள் RRSPஐ வாங்குவதாக இருந்தால், கடைசிவரை பொறுத்திராமல், கடைசிநாளான (Deadline) இம்மாதம் 28ஆம் திகதிக்குமுன் வாங்குவதன் மூலம் 2012ம் ஆண்டிற்கான வரியினை சேமியுங்கள்.
- உங்கள் வீட்டில் காணப்படும் கம்பளி மற்றும் நிலப்பகுதிகளை பரிசோதியுங்கள். நிபுணத்துவம் பெற்றவர்களைக் கொண்டு கம்பளியைச் சுத்திகரியுங்கள். பருவகாலத்திற்குப் பின் இடம் பெறும் மலிவு விற்பனையில் கம்பளிகளை வாங்கிப் பயன்பெறுங்கள்.
- வசந்தகாலத்திற்கு ஆயத்தம் செய்யுமுகமாக விளையாட்டு உபகரணங்களான துவிச்சக்கரவண்டி, டெனிஸ் மட்டைகள் ஆகியவற்றை நல்ல நிலையில் வைத்திருக்குமுகமாக துப்பரவு செய்யுங்கள்.
- உற்பத்தியாளரால் கூறப்பட்டபடி, யன்னல்களைத் துப்பரவு செய்து அதன் பிணைச்சல்களை ஈரலிப்பாக்குங்கள்.
- சுவர்கள், தளம் (Floor), தளபாடம், நிலம் ஆகியவற்றை Vacuum செய்யுங்கள்.
- உற்பத்தியாளரால் கூறப்பட்டபடி, சலவை இயந்திர குழாய்களில் உள்ள வெடிப்புகள், கசிவுகளைப் பரிசோதியுங்கள். உற்பத்தியாளரால் கூறப்பட்டபடி அவசியமெனின் அவற்றை மீள அமையுங்கள்.
- வீட்டிலுள்ள அலுமாரிகளை சுத்தமாக்குங்கள்.
- உங்கள் வீட்டுக் கூரைகள், பீலிகள் என்பவற்றில் கசிவு காணப்படுகின்றதா என்பதைப் பரிசோதியுங்கள். திருத்தங்கள் இருந்தால் அதற்கான ஒழுங்குகளைச் செய்யுங்கள்.
- வீட்டுக்கூரைகளில் பனியும் உறைபனியும் தொங்கிக் கொண்டிருந்தால் அவற்றை அகற்றுங்கள்.
- வீட்டைச் சுற்றி நடைபாதையோரங்களில் பனிக்கட்டி படர்ந்திருந்தால் அவற்றை அகற்றுங்கள்.
- வீட்டின் வெளிப்புறத்தில் மரங்களையும் புதர்களையும் அளவாக வெட்டி இறந்த மற்றும் நோயுற்ற கொப்புகளை அகற்றுங்கள்.

தொகுப்பு: மகேன் சிங்கராசா

# FREE REAL ESTATE CLASS



**Are you interested in or in the process of becoming a real estate sales representative? Join our orientation session at no cost to you**

Join us on **Saturday, February 16, 10:30 a.m.** at the CENTURY 21 Rouge Realty Board-room to learn about the training required to obtain your real estate license and what you can expect from a career in this exciting industry. Space is limited, so reserve your spot early by calling

**Logan .v 416 410-1620**

Century 21®

ROUGE REALTY INC.
Brokerage*

tel. **416.282.4444**
fax. 416.282.4488
203-1265 Morningside Ave, M1B 3V9.
www.century21.ca/rougerealty

# BUYING OR SELLING HAS NEVER BEEN THIS EASY

Sell your home **FAST** for **TOP DOLLARS** at very **flexible listing commission**
Or simply allow me to find your **DREAM HOUSE** at no COST

TOP 5% in CANADA 2010, 2011

CHECK OUT OUR **NEW LISTINGS BELOW!**

**TORONTO**
York University


$155,000 Bed: 2, Baths: 1, condo apartment

**TORONTO**
Eglinton / Bellamy Rd

$388,500 Bed: 3, Baths: 1 detached Bungalow

**TORONTO**
Morningside / Hwy 401


$489,000 Bed: 4, Baths: 4 finished basement, fully renovated

**TORONTO**
York University


$349,000 Bed: 3, Baths: 3, town house

**BRADFORD**
Summerlynn

$379,900 Bed: 3, Baths: 3, semi-detached house

**BRADFORD**
West Park & 6th Line


$499,000 Bed: 4, Baths: 3 detached house

**BRADFORD**
10th Sideroad / Miller Park Ave

$419,000 Bed: 3, Baths: 3, detached detached home


**BRAMPTON**
Steels / Mavis

$362,000 Bed: 3+1, Baths: 4, 3-storey luxury town house

**BRAMPTON**
Highway 50 / Cottrelle

$419,000 Bed: 3, Baths: 3 2 storey semi-detached

**AJAX**
Pickering Beach Rd / Bayly

$389,900 Bed: 4+2, Baths: 4 2 storey semi-detached house

**VAUGHAN**
E.Jane / N.Rutherford

$424,900 Bed: 3, Baths: 3 town house

**VAUGHAN**
Rutherford /Jane / Major Mack

$599,000 Bed: 4+1, Baths: 4 detached house

## Ganesh Thangarajah
**Real Estate Broker**

**416-994-9046 / 416-298-3200**

FREE HOME EVALUATION

FREE HOME STAGING

FREE PHOTOGRAPHY

HOMELIFE HIGHER STANDARDS



## HomeLife Today Realty Ltd., Brokerage
31 Progress Avenue, Suite 210, Toronto, Ontario. M1P 4S6

*Independently Owned and Operated, Realtor





**Birchmount / Finch**




**$171,000**
Condo Apt, 2 Bedrooms, 1 Washrooms, Shows Excellent, Updated Through-Out 2009

**Danforth / Midland**




**$184,900**
Condo Apt, 2+1 Bedrooms, 2 Washrooms, Huge Open Balcony.N-E-W Broadloom

**Victoria Park / Danforth Ave**




**$184,900**
Condo Townhouse, 3 Bedrooms, 3 Washrooms, Steps To Subway & Park, Freshly Painted And Updated Unit

**Mclevin / Neilson Rd**




**$205,000**
Condo Apartment, 3 Bedrooms, 2 Washrooms, Bright,Super Clean,Spacious 1403 Sq.Feet, Ensuite Washroom

**Mccowan / Steeles**



**$240,000**
Condo Apartment, 2+1 Bedrooms, 3 Washrooms, Spacious And Bright Corner Unit, Split Bedrooms

**Brimly / Finch**



**$359,000**
Condo Townhouse 2-Storey, 3+1 Bedrooms, 3 Washrooms, Back To Trees And Green, Really Like A Semi!

**Brimorton / Markham**



**$379,900**
Detached Bungalow, 3 Bedrooms, 2 Washrooms, Absolutely Gorgeous. Featuring Updated Kitchen With Skylight

**Lawrence / Morningside**



**$449,000**
Detached Backsplit, 3 Bedrooms, 3 Washrooms, Ravine! Ravine! Western Exposure-Sunfilled Home

**Bathurst / St Clair**



**$329,900**
Condo Apartment, 3 Bedrooms, 2 Washrooms, Live The Life You Dream Of In Prestigious Agincourt

**Port Union / Lawrence**



**$499,000**
Detached 2 Storey, 4 Bedrooms, 3 Washrooms, Lovely Updated Greenhouse Kitchen

**Morningside / Finch**



**$599,900**
Detached 2 Storey, 4+3 Bedrooms, 6 Washrooms, 4+3 Bedrooms With Separate Entrance To 3 Separate Apts.With Own Washrooms

**Jane / Eglinton**



**$679,000**
Detached Bungalow-Raised, 2+1 Bedrooms, 2 Washrooms, 50 Foot Lot With High Ceilling In Mature Neighbourhood, Close To All Amenities

## Yathavann Selvarajah

Sales Representative



Never too busy, for any of your Referrals!

**416-992-4474** (24 hrs)

**416-491-4002** (Office)


www.buzzmetoronto.com

RE/MAX

**RE/MAX CROSSROADS REALTY INC.,**

BROKERAGE

Not intended to solicit properties currently listed for sale


YOUR SATISFACTION IS
OUR SUCCESS
Serandib Travel
Your satisfaction is our success
Tel: 416-750-0009 / Fax: 416-750-9880 Canada Toll Free: 1-800-207-0902
7, Eastvale Drive # 207, Markham, Ontario, L3S 4N8, Canada
Ph: 416-628-8590, 519-962-8910, 313-887-0911, 905-472-7500
Montreal: 514-448-1389, Calgary: 403-770-9647, Ottawa: 613-482-6590
Vancouver: 604-625-0495, Mississauga: 905-564-7564
Email: info@serandibtravel.com Web: www.serandibtravel.com
SriLankan
Emirates
ETIHAD
FLY KINGFISHER
QATAR
JET AIRWAYS
GULF AIR
KUWAIT AIRWAYS
IATA
tico.ca

# உணவுத் தட்டுப்பாடு

குமார் புனிதவேல்



விஞ்ஞான அறிவு வளர்ச்சியின் பயனாக உலக சனத்தொகை வளர்ச்சி வேகமாக வளர்ச்சியடைந்து கொண்டே சென்றுள்ளது. 1800 ஆண்டில் ஒரு பில்லியனாக இருந்த உலகச் சனத்தொகை 127 ஆண்டுகளின் பின் 1927ம் ஆண்டில் இரண்டு பில்லியனாக உயர்ந் துள்ளது. ஆனால் அடுத்த ஒரு பில்லியன் சனத்தொகை அதிகரிப்பு 33 ஆண்டுகளில் ஏற்பட்டு 1960இல் 3 பில்லியனாக கூடியுள்ளது. கீழே தரப்பட்டுள்ள அட்டவணைக் கணிப்புகள் உலக சனத்தொகை வளர்ச்சியைத் தெளி வாக காட்டும்.

| வருடம் | சனத்தொகை பில்லியனில் | கால இடைவெளி |
|---|---|---|
| 1800 | 1 | |
| 1927 | 2 | 127 |
| 1960 | 3 | 33 |
| 1974 | 4 | 14 |
| 1987 | 5 | 13 |
| 1999 | 6 | 12 |
| 2012 | 7 | 12 |
| 2025 (மதிப்பீடு) | 8 | 14 |
| 2043 (மதிப்பீடு) | 9 | 18 |
| 2083 (மதிப்பீடு) | 10 | 40 |

சனத்தொகை வளர்ச்சி விகிதத்தில் ஓரளவு வீழ்ச்சி அடைந்துள்ளமை (1999 இற்குப்பின்) கருத்தடை உபயோகிப்பு, சிறு குடும்பக் கலாச்சாரம் என்பதுடன் சீனாவின் கட்டாய குடும்பக் கட்டுப்பாட்டுக் கொள்கையும் கார ணமாக அமைந்துள்ளதெனலாம்.

எது எப்படி இருப்பினும் 2083ம் ஆண்டில் உலகச் சனத்தொகை 10 பில்லியனாக இருக் கும். அவ்வளவு மக்களுக்கும் பூமாதேவி-யால் உணவு தரமுடியுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

இந்த பெரும் பிரச்சினைக்கு முகம் கொடுத்த விஞ்ஞானம், தனது கவனத்தை விளைச்ச லைப் பெருக்குவதிலேயே பெரிதும் காட்டியது. ஆனால் இன்னுமொரு பக்கத்தில் சேதாரம் போவது கூடிக்கொண்டே சென்றுள்ளது. ஆராய்ச்சியாளர் கணிப்புகளின்படி, கனடா போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளில் மூன்றில் ஒரு பங்கு உணவு சேதாரம் போய்விடுகிறது எனக் காணப்பட்டுள்ளது. எனவே உலக உணவுப் பற்றாக்குறையை, கூடிய அபிவி-ருத்தியால் மட்டும் தவிர்த்து விடமுடியாது. அப்படி சாகுபடி செய்த உணவுப் பண்டம் மனிதருக்கு உபயோகப்பட வேண்டும்.

சாகுபடியைப் பெருகச் செய்த விஞ்ஞானிகள், அப்படி சாகுபடி செய்து மிஞ்சிய உணவை நல்ல முறையில் களஞ்சியப்படுத்துவதற்கான தொழில் நுட்ப வளர்ச்சி, மற்றும் நுகர்வோரை அடைவதற்கு வேண்டிய போக்குவரத்து வளர்ச்சி ஆகியவற்றில் போதிய கவனம் செலுத்தத் தவறிவிட்டார்கள்.

உதாரணத்திற்கு: நிரந்தரமாக உணவு பற்றாக்குறை எனக்கூறப்படும் இந்தியாவில் 40 சதவிகிதமான பழங்கள், மரக்கறிகள், தானியங்கள் என்பன சந்தையை அடைவ தில்லை எனக் கணிக்கப்பட்டுள்ளது. இந்தி-யாவில் வீண் விரயமாகும் உணவுத்தானி யங்கள் அவுஸ்திரேலியாவின் மொத்தச் சாகு படியிலும் அதிகமாகும் எனக் கணிக்கப்பட் டுள்ளது. மேலும், இங்கிலாந்தின் மொத்த பழம், மரக்கறித் தேவையிலும் பார்க்க அதிகம் பழம், மரக்கறி ஆகியன வீண்விரயமாகிறது எனும் வேளையில் வேதனையாக இருக்கிறது.

இந்த சேதாரத்தின் பெரும்பகுதி உற்பத்தி செய்யப்படும் இடத்திலிருந்து சந்தைகளை அடைய முடியாது இருப்பதுவே காரணமாகும்.

இந்தக் குறிப்பை நோக்கும் வேளையில் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் பாடிய 'பாரத தேசம்' என்ற பாடல் நினைவுக்கு வருகிறது. அதில் அவர்...

*'கங்கை நதிப்புரத்துக் கோதுமைப்பண்டம்*
*காவிரி வெற்றிலைக்கு மாறுகொள்ளுவோம்'*

எனக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் இப்பாடல் வரி கனவாகவே உள்ளது. காரணம் தகுந்த களஞ்சிய வசதியும், நவீன போக்குவரத்து வசதியும் இல்லாது டெல்லியிலுள்ள (கங்கை நதிப்புரம்) கோதுமை தஞ்சைநகர் (காவிரி நதிப்புரம்) வருவதற்கு 2500 கி.மீட்டர் தூரத்தை 50பாகை வெய்யிலில் வருகையில் பழுதாகி விடும். அதுபோலவே வெற்றிலை வெற்றுப் பையாகவே சென்றடையும். இதனால் தான் விஞ்ஞானம் உணவுச் சாகுபடியைக் கூட்டுவ துடன் களஞ்சியப்படுத்துவதிலும், அதைக் கொண்டு செல்வதிலும் முன்னேற்றம் அடைவ தவசியமாகிறது.

இந்தியாவின் அடுத்த பெரும் சாபமாக அரசி யல் ஊழலும் உணவு விரயத்தில் காரணமா கியுள்ளது. ரொறன்டோ ஸ்டார் பத்திரிகைக்குப் பேட்டிதந்த பஞ்சாப் மாநிலத்து சிறு கிராம நிருபர் ஒருவர் இந்த வேதனையான சமாச் சாரத்தைத் தெரிவித்துள்ளார். அக்கிராமத்தில் அரசாங்க களஞ்சியத்தில் சில ஆண்டுகளாக தானியங்களை உதாசீனமாக வைத்திருந்து பழுதடைய விட்டுள்ளார்கள். அதன் பின் அரசியல்வாதி ஒருவர் அதனை தான் இலவ சமாக பெற்று வடிசாராயம் காய்ச்சுவதற்குப் பயன்படுத்தியுள்ளார்.

வளர்ச்சியடைந்துள்ள கனடா போன்ற நாட்டில் வருடம் ஒன்றிற்கு 1.6 மில்லியன் கிலோ உணவுப்பண்டம் பழுதடைந்து எறியப்படுகிறது எனக் கணித்துள்ளார்கள்.

'ஏறாத மேட்டிற்கு இரண்டு துலா' என்பது போல் ஓரிடத்தில் அறுவடை செய்த அப்பிள் நூறு கிலோமீட்டர் தொலைவில் உள்ள ஒரு மத்திய நிலையத்திற்கு கொண்டு செல்லப் பட்டு பின் அங்கிருந்து சாகுபடி செய்த கிரா மத்திற்கு கொண்டு வருகிறார்கள். இவ்வளவு கணினி வளர்ச்சியடைந்த காலத்தில் இப்படி நடக்கக் காரணம் ஏதுமில்லை. இந்த நெடுந் தூரம் பயணம் செய்து களஞ்சியப்படுத்தி பின் சந்தையை அடையும்வேளையில் குறிப்பிட்ட தினத்திற்கு முன் பாவித்தால் தான் சிறந்தவை என்ற காரணத்தால் ஏறியப்படுகிறது.

மேலும் காலத்துக்குக் காலம் விஷேட மலிவு விலை (Special) என்ற பெயரில் கொடுக்கப் படும் உணவு வகைகளும் தேவைக்கதிக மாகப் பெறப்பட்டு பின் எறியப்படுகின்றன.

இங்கு எனது சொந்த அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ளலாம் என்று நினைக்கிறேன். 1980ம் ஆண்டில் தொழில் வேறு கிடையாது. 'Spice and Curry' என்ற பெயரில் ஒரு மளிகைக் கடை ஆரம்பித்து நடத்திவந்தேன். கடையில் பச்சை மிளகாய் குளிர்சாதனப்பெட்டியில் தொகையாக வைக்கப்பட்டிருக்கும். வாடிக்கை-யாளர்கள் தமக்கு வேண்டியதை எடுத்துச் செல்வர். இப்படியான வாடிக்கையாளர்கள் நல்ல மிளகாயைத் தெரிந்து எடுப்பதனால் கடைசியில் பெட்டியில் கால்பங்கு குப்பை தொட்டியை அடைந்தது. ஆனால் காலப்போக் கில் இதற்கும் ஒரு 'ஆப்பு' வைத்தார்கள் அங்காடி உரிமையாளர்கள். அதாவது பச்சை மிளகாயை நிறுத்து பைகளில் போட்டு வைத்து விற்பனை செய்தார்கள். இதனால், கடை உரிமையாளர் வீணாக எறியாமல் பணம் கொடுத்து வாங்கிச் சென்று வாடிக்கையாளர் கள் எறிந்தார்கள். இதிலும் ஒரு சிறு அசௌ கரியம் உண்டு. தனி ஒருவராய் இருப்பவர் அரை இறத்தல் மிளகாயில் சம்பலா போட முடியும்? ஆனால், அதற்கு இன்று பெரும் அங்காடிகளில் பச்சை மிளகாய் முன்பு போல் பொறுக்கி எடுக்க முடிகிறது.

உங்களுடன் இன்னும் ஒரு அனுபவத்தையும் பகிர்ந்து கொள்ளலாம் என்று எண்ணுகிறேன். பெரும் அங்காடிகளில் உருளைக்கிழங்கு பத்து இறாத்தல் பையில் ஒரு டொலர் தொண்ணூற்று ஒன்பது சதத்திற்கு விற்கும் வேளையில் இன்னுமொரு இடத்தில் அதே அங்காடியில் உருளைக்கிழங்கு இறாத்தல் 59 சதத்திற்கு விற்கப்படும். இறாத்தல் விலையில் 5 இறாத் தல் கிழங்கு வாங்குவதிலும் 10 இறாத்தல் கிழங்குப் பையை $1.99 இற்கு வாங்குவ தால் ஒரு டொலர் மீதம் என்பதுடன் மீதமாக 5 இறாத்தல் கிழங்கும் இருக்கும். இந்த ஐந்து இறாத்தலில் பாவியாததை எறிந்தாலும் வாடிக் கையாளருக்கு இலாபம். இத்தகைய விலை நிர்ணயத்தால் வளர்ச்சியடைந்த நாடுகளில் பெருமளவு உணவு எறியப்படுகிறது.



இங்கு நான் எவ்வண்ணம் நல்ல திட்டமிடு வதால் உணவுப் பொருள் எறியப்படுவதைத் தடுத்துள்ளார்கள் என்பதையும் தருவேன்.

தேயிலை உற்பத்தி செய்யும் வேளை ஏற்படும் துகள்கள் எறியப்பட்டு வந்தது. இதனால் பெரும் எடை தேயிலை எறியப்பட்டது. அத னைத் தவிர்க்கு முகமாக சமயோசிதமாக தேயிலைப் பைகளை (Tea Bags) கண்டு பிடித்துள்ளார்கள். இதனால் தேயிலைத் துகள் கள் சிறுசிறு பைகளாக அடைக்கப்பட்டு விற்கப்படுவதால் தேயிலை வீணாக எறியப் படுவது தவிர்க்கப்பட்டுள்ளது.

அடுத்ததாக மக்டொனால் (McDonald) தங் கள் கிழங்கு பொரியல் (French Fries) மிக நீளமாக செய்துவந்தார்கள். இவை பார்ப்ப தற்கு அழகாய் இருப்பினும் அதன் தயாரிப் பில் பெருமளவு சேதாரம் ஏற்பட்டது. இந்த வீண் இழப்பைத் தவிர்க்குமுகமாக அவர்கள் French Friesஇன் நீளத்தைக் குறைத்துள் ளார்கள். இதனால் உருளைக் கிழங்கு வீணாவது பெரிதும் தவிர்க்கப்பட்டுள்ளது.

முற் காலத்தில் பெரிய குடும்பங்கள் சிறிய வீடுகளில் வசித்து வந்தார்கள். ஆனால் தற்போதோ குடும்பங்கள் சிறுத்துவிட்டன. ஆனால் வீடுகள் பெருத்துவிட்டன. அதுமட்டு மல்ல Fridge இன் அளவும் பெருத்துக் கொண்டே போகிறது. இதன் விளைவு வாரம் ஒருமுறை அங்காடிக்குச் செல்கையில் தேவைக்கு அதிகமாக Fridge இல் உணவுப் பண்டங்களைக் குவிக்கிறார்கள். வீட்டில் தேசிக்காய் இருக்கத்தக்கதாக அங்காடியில் ஒரு டொலர் கொடுத்து ஒன்பது தேசிக்காய் வாங்கி வருபவரின் தலையில்தான் தேசிக் காய் வைக்கவேண்டும். இவர்கள் காலத்துக்கு காலம் தமது பிரிட்ஜ் துப்பரவாக்குவதாக கூறிக்கொண்டு, அடியில் இருக்கும் பழுதா கிய உணவுவகைகளை எறிவார்கள்.

மலிவு என்பதற்காக தேவைக்கதிகமாக வாங்க வேண்டாம். மேலும் உங்கள் வீட்டு பிரிட்ஜ் பெரிதாய் இருப்பதால் நீங்கள் பெரி-யவராகிவிட மாட்டீர்கள்.

வாங்கி வந்த மரக்கறி, பழவகைகள் காற்று புகமுடியாமல் சுற்றப்பட்டிருந்தால் (Air Tight) அதனை வெளியில் எடுத்து வைக்காதீர்கள். காரணம் Air tight seal அவை அழுகாமல் இருப்பதற்காக ஏற்படுத்தப்பட்டது.

மரக்கறி, பழவகைகளை அங்காடிகளில் வாங்கி வீட்டிற்கு கொண்டுவந்தவுடனே கழுவ வேண் டாம். அவற்றை பாவிக்கும்போது மட்டும் கழுவினால் போதுமானது. ஈரப்பதன் அவை அழுகுவதைத் துரிதப்படுத்தும்.

பழங்களின் காம்புகளை ஒடிக்காமல் வைத்தி ருங்கள் இது பழுதடைவதை பிற்போடும். மேலும் இயன்ற அளவு பழங்களை பூரண மாக வைத்திருப்பதால் கூடிய காலம் பழுது படாமல் வைத்திருக்கலாம்.

விரைவாக பழுதுபடும் உணவுவகைகளை உடனேயே உண்டுவிடுங்கள். மேலும் பொரித்து சமைக்கும் மரக்கறிகளை பொரித்துபின் Freezer இல் நெடுங்காலம் பழுதாகாமல் வைத்திருக்கலாம்.

இப்படியாக எல்லோரும் முயற்சி எடுத்தால் உலகில் உணவுப் பஞ்சத்தைத் தவிர்க்கலாம்.

kumar.punithavel@thaiveedu.com

■ ■ ■

www.noolaham.org

noolahamfoundation@gmail.com

நூலகம்

# கோல்டன் குளோப் விருது - 2013



குரு அரவிந்தன்

70வது கோல்டன் குளோப் விருது பற்றிய நிகழ்ச்சி என்.பி.சி தொலைக்காட்சியில் ஜனவரி 13ம் திகதி நேரடியாக ஒளிபரப்பு செய்யப்பட்டது. இந்த நிகழ்ச்சி கலிபோனி-யாவில் உள்ள பேவலிகில்ஸ் ஹோட்டலில் நடைபெற்றது. உலகம் முழுவதும் உள்ள சுமார் 250 கோடி பார்வையாளர்கள், தொலைக் காட்சியில் நேரடியாக ஒளிபரப்பப்பட்ட இந்த நிகழ்ச்சியைப் பார்த்ததாகத் தெரியவருகின்றது.

முதலாவது உத்தியோக பூர்வமான விருது விழா 1945ம் ஆண்டு பேவலிகில்ஸ் ஹோட்டலில் நடைபெற்றது. இந்த விழாவில் ‘கோயிங் மைவே’ என்ற படம் சிறந்த படமாகத் தெரிவு செய்யப்பட்டது. ‘த பெல்ஸ் ஒவ் சென்மேரி’ என்ற படத்தில் நடித்த இங்கிறிட் பேர்க்மன் சிறந்த நடிகையாகவும், ‘பிறசிடன்ட் வில்சன்’ படத்தில் நடித்த அலக்ஸாந்தர் நொக்ஸ் சிறந்த நடிகராகவும் தெரிவு செய்யப்பட்டனர். 1955ம் ஆண்டிலிருந்து சிறந்த தொலைக் காட்சிப் படங்களுக்கும் விருது வழங்கப்படு கின்றது. பதின்னான்கு கோல்டன் குளோப் விருதுகள் திரைப்படத்துறைக்காகவும், பதி-னொரு விருதுகள் தொலைக்காட்சித் துறைக் காகவும் மொத்தம் இருபத்தைந்து விருதுகள் வழங்கப்படுகின்றன.

70வது கோல்டன் குளோப் விருதுக்காக ஆர்கோ என்ற நாடகப் பிரிவிற்கான திரைப் படம் சிறந்த படமாகத் தெரிவு செய்யப் பட்டது. பென் அபிலீக்கின் நெறியாள்கையில் 2012ல் இப்படம் வெளிவந்தது. பணயக் கைதி களான ஆறு அமெரிக்க அதிகாரிகளை ஈரா-னில் இருந்து பாதுகாப்பாக வெளியேற்றிய சம்பவத்தைக் கருவாகக் கொண்ட திரைப்படம். 1981ம் ஆண்டு வெளிவந்த ஜீன் பெலிற்ரரின் த கனடியன் கப்பர் என்ற புதினத்தைத் தழுவி இப்படம் எடுக்கப்பட்டது. இப்படத்தின் சிறந்த நெறியாள்கைக்காகவும் பென் அபிலீக் கோல்டன் குளோப் விருதைத் தட்டிக்கொண்டார். லிங்கன், லைவ் ஒவ் பை என்ற சிறந்த படங்களும் இதற் காகச் சிபார்சு செய்யப்பட்டிருந்தன. ஆனாலும் ஆர்கோ என்ற படமே சிறந்த படமாகத் தெரிவு செய்யப்பட்டது.

சிறந்த நடிகருக்கான கோல்டன் குளோப் விருது லிங்கன் படத்தில் நடித்த டானியல் டேக்குக் கிடைத்திருக்கிறது. டானியல் டே லூவிஸ் ‘லிங்கன்’ படத்தில் நடிப்புக்காக சிறந்த நடிகராகத் தெரிவு செய்யப்பட்டார். இப்படத்தில் ஆபிரகாம் லிங்கனாக 55 வயதான (29-04-1957) இவர் மிகவும் சிறப்பாக நடித்திருந்தார். லண்டன் பிரிதானியாவைச் சேர்ந்த இவர் ஏற்கனவே 1989ம் ஆண்டு மை லெப்ட் பூட் என்ற படத்திற்கும், 2007 ஆண்டு தெய் வில்பி பிளட் என்ற படத்திற்கும் சிறந்த நடிப்பிற்காக கோல்டன் குளோப் விருதைப் பெற்றவர். இந்த இரண்டு படங்களில் சிறப்பாக நடித்த-தற்காக சிறந்த நடிகருக்கான ஆஸ்கார் விருதும் இவருக்குக் கிடைத்திருந்தன.

சிறந்த நடிகைக்கான 70வது கோல்டன் குளோப் விருது ஜெசிகா சஸ்ரெயினுக்குக் கிடைத் திருக்கிறது. சீரோ டாக் தேட்டி படத்தில் இவரது சிறந்த நடிப்புக்காக சிறந்த நடிகையாக தெரிவு செய்யப்பட்டார். 35 வயதான இவர் (24-03-1977) கலிபோனியாவைச் சேர்ந்தவர். சென்ற வருடம் த ஹெல்ப் என்ற படத்தில் துணை நடிகைப்பாத்திரம் ஏற்று நடித்தற்காக ஆஸ்கார் விருதுக்கும் கோல்டன் குளோப் விருதுக்கும் சிபார்சு செய்யப்பட்டிருந்தார். புகழ்பெற்ற ரைம் சஞ்சிகை செல்வாக்குள்ள 100 மனிதரில் ஒருவராக இவரைத் தெரிவு செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இசை அல்லது நகைச்சுவைக்கான படமாக லெஸ் மிசறபிள் என்ற படம் சிறந்த படமா கத் தெரிவானது.

இசை அல்லது நகைச்சுவைக்காக கியூ ஜாக்மென் சிறந்த நடிகராகத் தெரிவு செய்யப் பட்டார்.

இசை அல்லது நகைச்சுவைக்காக ஜெனிபர் ஜோன்சன் சிறந்த நடிகையாகத் தெரிவு செய்யப்பட்டார்.







சிறந்த துணை நடிகராக கிறிஸ்ரோப் வால்ட் தெரிவு செய்யப்பட்டார்.

சிறந்த துணை நடிகையாக அனி ஹத்வே தெரிவு செய்யப்பட்டார்.

சிறந்த இயக்குனராக ஆர்கோ படத்தின் இயக்குனர் பென் அபிலீக் தெரிவு செய்யப் பட்டார்.

சிறந்த திரைக்கதை வசனத்திற்கான விருதை கியூன்ரின் ரறான்ரினோ பெற்றுக் கொண்டார்.

சிறந்த மதிப்பெண்களைப் பெற்ற இசைக் காக மைகேல்டானாவிற்கு லைவ் ஒவ் பை என்ற படத்திற்குக் கிடைத்திருக்கிறது. இந்தப் படத்தில்தான் பம்பே ஜெயஸ்ரீ பாடிய கண்ணே கண்மணியே என்ற தமிழ் தாலாட்டுப் பாடல் இடம்பெற்றிருந்தது. இந்தப் படத்தின் கதை இந்தியாவில் உள்ள பிரஞ்சுக் காலனியாக இருந்த பாண்டிச்சேரியில் நடக்கும் ஒரு சம்-பவத்தைக் கருப்பொருளாகக் கொண்டது. இப்படத்தில் இடையிடையே தமிழ் வார்த்தை கள் இடம்பெறுகின்றன. ஆஸ்கார் விருதுக் காகவும் இப்படம் பரிந்துரைக்கப்பட்டிருக்கிறது. பம்பே ஜெயஸ்ரீயின் பாபடலுக்கு விருது கிடைத்தால் ஆஸ்கார் விருது கிடைத்த முதலாவது தமிழ்ப்பாடல் என்ற பெருமையை இப்பாடல் தட்டிக்கொள்ளும். இந்தப் பாடலுக்கு மைக்கேல் டானா என்ற கனடியர் இசை அமைத்திருக்கின்றார். ஏற்கனவே ஏ.ஆர். ரகுமானுகக்கு 81வது ஆண்டு விழாவில் ஸிலம்டோக் மில்லியனார் என்ற படத்திற்கு சிறந்த இசைக்கான ஆஸ்கார் விருது கிடைத்த போது அவருடன் இணைந்து ஆங்கிலத்தில் பாடிய ஈழத்தமிழ்ப் பாடகியான மயாவிற்கும் அந்த ஆங்கிலப் பாடல் பெருமை சேர்த்தது என்பது சினிமா ரசிகர்களுக்கு ஞாபகம் இருக் கலாம்.

சிறந்த வாழ்நாள் சாதனையாளருக்கான கோல்டன் குளோப் விருது ஜோடி பொஸ்ர-ருக்குக் கிடைத்திருக்கிறது. வாழ்நாள் சாத-னையாளருக்கான கோல்டன் குளோப் சிசில் பி டிமிலி விருதை இம்முறை (2013) லொஸ்-சேஞ்சலில் பிறந்த 50 வயதான (19-11-1962) சிறந்த இயக்குனரும் தயாரிப்பாளருமான ஜோடி பொஸ்ரர் பெற்றிருக்கின்றார். சென்ற வருடமும் சிறந்த நடிகைக்கான கோல்டன் குளோப் விருதுக்கு இவர் சிபார்சு செய்யப் பட்டிருந்தார். இரண்டு ஆண் பிள்ளைகளுக் குத் தாயாரான இவர் 1989, 1992, ஆண்டுக-ளிலும் சிறந்த நடிகைக்கான விருதைப் பெற் றிருந்தது குறிப்பிடத்தக்கது. 1989ல் அக்கியூட்ஸ் என்ற படத்திலும், 1992ல் த சைலன்ஸ் ஒவ்த லாம்ப் என்ற படத்திலும் சிறப்பாக நடித்த-தற்காக சிறந்த நடிகை என்ற கோல்டன் குளோப் விருதைப் பெற்றிருந்தார். இதைவிட இந்த இரண்டு படங்களுக்காக ஆஸ்கார் விருதும் இவர் பெற்றிருந்தார்.


2013 பெப்ரவரி 24ம் திகதி நடக்கவிருக்கும் ஆஸ்கார் திரைப்பட விழாவிற்காக 2012ம் ஆண்டுக்கான படங்கள் தெரிவு செய்யப்பட் டிருக்கின்றன. லிங்கன், லைவ் ஒவ் பை, ஆர்கோ, ஆமர், சீரோ டார்க் தேர்ட்டி, லெஸ்மிசரபிள்ஸ், சில்வ லைனிங் பிளேபுக், டிஜெஅன்கோ அண்செயின், பீஸ்ற் ஆவ்த சதேன் வைல்ட் போன்ற படங்கள் அகடமி விருது என்று சொல்லப்படுகின்ற ஆஸ்கார் விருதுக்காக ஏற்கனவே பரிந்துரைக்கப் பட்டி ருக்கின்றன. இந்த 85வது அகடமி விருது வழங்கும் விழா லொஸ்சேஞ்சலில் உள்ள ஹொலிவூட்டில் இருக்கும் டொல்பி கலைய-ரங்கில் நடைபெற இருக்கின்றது. ஜேம்ஸ்-பொன்ட் தொடர் படங்களின் ஐம்பதாவது நினைவு பாராட்டு நிகழ்ச்சியாகவும் இந்த விழா அமையலாம் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

இந்த விழாவிற்காக 2012ம் ஆண்டு சிறந்த வெளிநாட்டு, வேற்றுமொழிப் படங்களாக ஆமர் (ஆஸ்திரியா), கொன் - ரிக்கி (நோர்வே), நோ (சிலி), ஏ றோயல் அபெயர் (டென்மார்க்), வாவிச் (கனடா) போன்ற படங்கள் அகடமி ஆஸ்கார் விருதுக்காகப் பரிந்துரைக்கப்பட்டி ருக்கின்றன. சிறந்த இயக்குநர்களாக ஆங்லீ, பென் சிற்லின், டெவிட் ஓ ரஸல், ஸ்ரீவன் ஸ்பைபேர்க், மைக்கேல் ஹங்கி போன்றவர் கள் பரிந்துரைக்கப்பட்டிருக்கிறார்கள். கடைசிச் சுற்றுக்கான அங்கத்தவர்களின் வாக்களிப்பு பெப்ரவரி மாதம் 8ம்திகதி வெள்ளிக்கிழமை காலையில் ஆரம்பித்து 19ம் திகதி வரை நடைபெற இருக்கின்றது. எனவே 24ம் திகதி மீண்டும் ஒரு முறை திரைப்பட விழாவில் திரைப்படத்துறையைச் சேர்ந்த பலர் பல்வேறு துறைகளில் படைத்த சாதனைக்காகத் தெரிவு செய்யப்பட இருக்கின்றார்கள். அவர்களுடைய எதிர்காலத்தையே மாற்றக்கூடிய ஒரு நிகழ் வாக இந்த அகடமி விருது விழா அமையும் என எதிர்பார்க்கின்றோம்.

*kuruaravindan@thaiveedu.com*

■ ■ ■

கனடிய தமிழ் வழக்கறிஞர்



The Law Office of
**Raphael Maharaja**
**Barrister & Solicitor**

Tel: 416-847-7077
416-847-7093 (Injury Claims)
Fax: 416-847-7088

GTA SQUARE
5215 Finch Ave. East, Unit 219
Toronto, Ontario, M1S 0C2 (Middlefield & Finch)

www.maharajalaw.com



சொந்தமான ஒரு வீடு
உங்கள் வாழ்க்கையின்
மிகப்பெரியதோர் முதலீடு
வீடு வாங்க விற்க
ஈசன் குலசேகரம்
Sales Representative
416 835 1700
info@esanhomes.com
● வீடுகள் ● தொடர்மாடி வீடுகள்
● வியாபார நிலையங்கள்
● காணி முதலீடுகள்
● வாங்குதல் - விற்றல் மற்றும்
● வாடகைக்கு கொடுப்பதற்கும்
● வாடகைக்கு பெறுவதற்கும்
அனைத்துக்குமான
ஆலோசனைகளுக்கும்
நம்பிக்கையான சேவைகளுக்கும்
எம்மை நாடுங்கள்..
விக்கி வேலாயுதன்
Sales Representative
416 457 7162
vvelauthan@yahoo.com
RE/MAX
RE/MAX
RE/MAX Vision Realty Inc., Brokerage
Office: (416) 321-2228
Fax: (416) 321-0002
www.esanhomes.com
2210 Markham Road # 1 , Toronto, ON M1B5V6

# Life 100 Insurance & Investments Inc. 2012 Events



Best wishes for a happy new year filled with health, happiness, and spectacular success

Life 100
INSURANCE & INVESTMENTS INC.

Best wishes for a happy Thai Pongal and our sincere thanks for your loyalty and goodwill throughout the year





**Sritharan Thurairajah** CLU, CHS
Managing Director

Direct: **416.918.9771**
Business: **416.321.2500**

MDRT Member of Million Dollar Round Table

10 Milner Business Court, Suite 208,
Scarborough, ON M1B 3C6
Web: www.life100.ca, E-mail: info@life100.ca

# பேராசிரியர் சுவாமி விபுலானந்த அடிகளார்



முருகேசு பாக்கியநாதன்

*சென்ற மாதத் தொடர்...*

## இயற்றமிழ்:

அடிகளார் வெளியிட்ட நூல்கள் யாவும் இயற்றமிழ் வகையுள் அடங்கும். ஆனால் அந் நூல்களின் ஒரு பகுதி நூல்கள் தரும் உள்ளடக்கம் இசை சார்ந்ததாகவும், நாடகம் சார்ந்ததாகவும் அமைந்திருப்பது அடிகளாரது சிறப்பியல்பினையே காணமுடிகிறது. அடிக-ளாரின் இயற்றமிழ் பணிகளை பின்வருமாறு வகுக்கலாம்.

தோத்திரப் பாக்கள், மதங்கசூளாமணி, மதம் சார் நூல்கள், கலைச்சொல் அகராதி நூல், யாழ் நூல், மொழிபெயர்க்கப்பட்டவை, ஆசி-ரியராகப் பணிசெய்த இதழ்கள, வேறு நூல்களுக்குப் பதிப்புரை வழங்கி வெளியிட வைத்தவை, ஏனைய இதழ்களில் எழுதிய கட்டுரைகள் என்ற வகைகளில் அடக்கலாம்.

**தோத்திரப்பாக்கள்:** கணேச தோத்திர பஞ்சகம், கதிரையம்பதி மாணிக்கப் பிள்ளை யாரிரட்டை மணிமாலை, சுப்பிரமணிய சுவாமி-யிரட்டை மணிமாலை, கோதண்ட நியாய புரிக்கமரவேணவா மணிமாலை ஆகிய தனது இட்ட தெய்வங்களை நினைத்துப் பாடிப்பர-விய பிரபந்த வகைகளைச் சேர்ந்த தோத்திரப் பாக்களாகும்.

**மதங்கசூளாமணி:** இந்நூலானது மதுரைத் தமிழ்ச் சங்க ஏடான 'செந்தமிழ்' இல் 1924, 1925ஆம் ஆண்டுகளில் தொடர்ச்சியாக எழுதப்பட்டு வந்த கட்டுரைகளின் தொகுப்பாகும் இது 1926ஆம் ஆண்டு ஜுன் மாதம் மதுரைத் தமிழ்ச் சங்கத்தால் வெளியிடப் பட்டது.

இந்து மதம்சார் நூல்கள் என்ற அடிப்ப-டையில் இரண்டு நூல்களை வெளியிட்டார்.


**நடராச வடிவம் அல்லது தில்லைத் திருநடனம்:** இது திருவருள் வடிவாகிய இறைவனின் ஐந்தொழில்களையும் சுருக்க மாக விளக்கும் நூலாகும்

**உமாமகேஸ்வரம்:** இறைவன் மாதொரு பாகனாய் அமைந்துள்ள நுட்பத்தினை விளக்கும் நூலாகும்.

**கலைச்சொல் அகராதி:** சென்னைப் பல் கலைக் கழகத்தின் கலைச் சொல்லாக்கற் குழுவில் ஒரு அங்கத்தவராக இருந்து கட-மையாற்றி இரசாயனம் (வேதியல்) சார்ந்த தமிழ்க் கலைச் சொற்களை ஆக்கும் பொறுப்பினை அடிகளாரே வகுத்தார். அவ்வாறாக அவரால் உருவாக்கப்பட்ட வேதியல் கலைச் சொற்களின் (Glossary) தொகுப்பினை 1938ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழக வெளியீடாக சுவாமிகளால் வெளியிடப்பட்டதாகும். இதன் பின்பே இரசாயன பாடத்தில் தமிழ்ச் சொற்கள் பாவிக்கப்பட்டன. இதுவே தமிழில் முதல்வந்த கலைச்சொல்லாக்கலாகும்.

**யாழ்நூல்:** இந்நூலானது 14 வருட நீண்ட ஆராச்சியில் பயனாக இசை சார்ந்த ஒரு நுண் ஆய்வு நூலாக 1947ல் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தால் வெளியிடப்பட்டது. இது ஒரு இசை ஆய்வு நூலாகும் அத்தோடு அவர் தான் கற்ற பௌதிகம், இரசாயனம் ஆகிவற்றின் அறிவோடு நுணுகி ஆய்ந்த நூலாகும்.

(யாழ்நூல் பற்றிய செய்தியை அடிகளாரர் கட்டுரையில் எழுதும் போது எனது கையில் யாழ்நூல் இருக்கவில்லை. அப்போது நூலகம் இணையத்தளத்தில் (www.noolaham.org) தேடியபோது அதனைக் கண்டு மகிழ்ச்சியுற் றேன். அந்நூல் கட்டாயமாக எனது நூலகத்தில் இருக்க வேண்டும் என்ற காரணத்தினால் 500 பக்கத்திற்கு மேற்பட்ட அதனைத் தரவி றக்கம் செய்து அச்சுப்பிரதி எடுத்துப் பார்த்த போது அதிசயம் ஒன்றைக் கண்டேன். அந்த நூல் கனடாவில் 'மறுமொழி ஊடக வலையம்' என்ற அமைப்பினால் திரு த.சிவதாசன் அவர்கள் தனது சொந்தச் செலவில் வெயிட்டு, தமிழுக்கும் பெருமை சேர்த்துள்ளதைக் கண்டேன். மகிழ்ச்சியுற்றேன்.)



**மொழிபெயர்க்கப்பட்ட நூல்கள்:** சுவாமி விவேகானந்தர் அவர்கள் ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்ட நூல்களான கருமயோகம், ஞான யோகம், நம்மவர் நாட்டு ஞான வாழ்க்கை, விவேகானந்த ஞானதீபம், சுவாமி விவேகா-னந்தர் சம்பாஷனைகள் ஆகிய மொழிபெ-யர்ப்பு நூல்களை வெளியிட்டார்.

**ஆங்கில வாணி:** ஆங்கில வாணி எனும் கட்டுரை

**சேக்ஸ்பியரின் நாடகம்:** மதங்கசூளா-மணியில் இடம்பெற்ற சேக்ஸ்பியரின் நாடகங்களில் 12ஐ மொழிபெயர்த்து தமிழ் உரை நடையுடன் வெளியிடப்பட்டது.

**மொழிபெயர்ப்பு:** (தமிழில் இருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டமை) சங்ககாலச் செய்யுட்கள், பல்லவர்கால பக்திப் பாடல்கள், மகாகவி பாரதி பாடல்கள், நவ-நீத கிருஷ்ண பாரதி பாடல்கள் ஆகியற்றை வேதாந்த கேசரி, பிரபுத்தபாரதம் ஆகிய சஞ்சிகைகளில் வெளியிட்டார்.

**ஆசிரியராக:** ஆசிரியராகப் பணியேற்று நடாத்திய இதழிகள்:
இராமகிருஷ்ண விஜயம் (தமிழ்)
வேதாந்த கேசரி (ஆங்கிலம்)
விவேகானந்தன் - கொழும்பு
பிரபுத்த பாரதம் (ஆங்கிலம்) இமயமலை, மாயாவதி ஆசிரமம்

பல்வேறு பத்திரிகைகளில் பல கட்டுரைகளை ஆங்கிலத்திலும் தமிழிலுமாக வெளியிட்டு வந்தார்.

இவ்வாறாக இயற்றமிழில் பல்வேறு தளங் களில் நின்று பணியாற்றினார்.

## இசைத்தமிழ்:

இசைத்தமிழ் என்று நோக்கும் போது இது வரை யாருமே செய்திராத ஒரு மாபெரும் ஆராய்ச்சி நூலாகிய 'யாழ் நூல்' தமிழுல கிற்கு தந்த பெருமையைக் கொண்டவர் அடிகளாரே. இந்த நூலானது அடிகளாரின் ஆய்வுத்திறனையும் அதில் தான் கற்ற பௌதிகம், இரசாயனம் ஆகிய விஞ்ஞான அறிவுகொண்டு தனது ஆய்வியலை தொல் தமிழிசையில் வெளிப்படுத்தியதன் காரண-மாகவே வேறு எந்த அறிஞர்களாலும் இந்தள-விற்கான ஒரு ஆய்வு நூலை இத்துறையில் இதுவரை வெளியிட முடியவில்லை. தமிழிசை என்பதனை இன்று எமக்குக் கிடைக்கக் கூடிய தொன்நூல்களாகிய தொல்காப்பியம், சங்கநூல்களாகிய எட்டுத்தொகை, பத்துப் பாட்டு நூல்கள், சங்ககாலத்தை அடுத்துத் தோன்றிய ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரம் ஆகியன மூலம் பல்வேறு வகையான ஆதாரங்களைப் பெற்றே யாழ் நூலைப் படைத்தார். சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகளின் முத்தமிழ் திறத்தையும் சிலப்பதிகாரத்தில் வடித்துக்காட்டியுள்ளார். இதில் உள்ள முத்தமிழ்களில் இசைத்தமிழை மட்டும் தெரிவுசெய்து அடிகளார் தனது ஆய்வினைத் தொடங்கினார்.

சிலப்பதிகாரத்திற்கு உரையெழுதிய அடியார்க்கு நல்லார் வாழ்ந்த காலத்திலேயே பழமையான இசை, நாடகத் தமிழ் நூல்கள் வழக்கிறந்து போயிருந்ததாக அவ்வுரைப் பாயிரத்தில் குறிப்பிடுகின்றமை ஈண்டு நோக்கத்தக்கது. இதன் மூலம் பல இசை, நாடக நூல்கள் அழிந்து போனதனை அறிய முடிகிறது. அவ்வாறான நூல்களாக இந்திர களீயம், தூத்து நூல், பெருநாரை, பெருங்குருகு, இசை நுணுக்கம், பஞ்சபரதீயம், முறுவல், சயந்தம், செயிற்றியம் குணநூல் ஆகியன வற்றைக் குறிப்பிடலாம். இந்நூல்கள் இன்று கிடைக்கப்பெறாத பொக்கஷங்கள் ஆகிவிட் டமை நாம் செய்த துர்ப்பாக்கியமாகும். இவைகள் கிடைத்திருந்தால் பரதம், கர்நாடக இராகங்களின் மூலவேர் தமிழே என்பதனை இலகுவில் நிறுவியிருக்க முடியும். எனினும் யாழ்நூல் இந்தக் குறையினை ஓரளவு நிவர்த்தி செய்துள்ளதென்றே கூறவேண்டும்.

சிலப்பதிகாரத்தினைப் படிப்போர் இசைப் பகுதிகளைக் கடந்தே படிப்பார்கள். காரணம் அதில் ஆழ்ந்த அறிவு இல்லாதுவிடின் அதனை இரசித்துப் படிப்பது சற்றுக் கடினமாகும். பல்கலைக் கழகங்களில் சிலப்பதிகாரத்தினைப் பயிற்றுவிக்கும் போதுகூட இசைப்பகுதியாகி அரங்கேற்று காதையினைத் தவிர்த்தே பாடத் திட்டத்தினை வகுத்துக் கொடுக்கின்றனர். இந்த நிலையினை நோக்கிய அடிகளார், அது பற்றிய விளக்கத்தினைத் தேடியபோதே அதில் உள்ள இசை நுணுக்கங்களை அறிந்து கொண்டார். இதனை ஆழ்ந்து ஆராய்ந்தறிய 14 ஆண்டுகளைச் செலவழித்தார் என்றால் அதில் எவ்வளவு தூரம் ஈடுபட்டார் என்று அறிய முடியும்.

பண்டைய தமிழகத்தில் இசைத்தமிழ் கரு-விகள் வேட்டைச் சமூகத்தில் இருந்து முதலில் தோன்றியிருந்தாலும் உற்பத்திச் சமூகமே இசையின் வளர்ச்சிக்கு வித்திட்டதெனலாம். இசையைத் தோற்றுவிக்கும் கருவிகளாக தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, மிடற்றுக்கருவி என வகைப்படுத்தினர். முதலில் தோன்றிய இசைக்கருவி வேட்டையாடிய மிருகங்களின் தோலினை உரித்து அதனைப் பதப்படுத்தி, மிருகங்களை விரட்டும்படியாக ஒலிகளை எழுப்ப அதனைப் பயன்படுத்தினர். அதன் பின்பே அதில் ஒருவித தாள ஒலிகள் பிறப்பதனால் பல்வேறு வகையான தோற் கருவிகள் பிறந்தன. வேடுவர்கள் அம்புகளை இழுத்து விடும்போது அதில் கட்டியிருந்த நாணில் இருந்து ஒருவகையான ஒலி பிறப் பதனை அறிந்து கொண்டனர். இதன்மூலம் வெவ்வேறு அளவுகளான அம்புகளிலிருந்து வேறு வேறு வகையான ஒலிகள் பிறப்பதனை அறிந்தனர். அவ்வாறாக வேட்டையாடிய மிருகங்களில் பல்வேறு அளவினதான நரம்பு களை எடுத்து தாம் வேட்டையாடப் பாவிக்கும் வில்லின் வளைவுகளில் நாணாகக் கட்டி அதில் இருந்து எழும்பிய ஒலியில் இருந்தே தமிழனின் முதல் நரம்புக்கருவியான 'வில் யாழ்' பிறந்தது. இதன் பிறப்புப்பற்றி விபுலா-னந்தர் யாழ் நூலில் குறிப்பிடுகின்றார். பதிற்றுப்பத்தில் வில்யாழ் முல்லை நிலத்தில் தோன்றியது என்று குறிப்பிடப்படுகின்றது. வயலும் வயல்சார்ந்த நிலமாகிய முல்லை நிலத்தில் பாரியளவினதான வேட்டை நடவ-டிக்கைகள் இடம் பெறுவதனைவிட மலையும் மலை சார்ந்த நிலமாகிய குறிஞ்சி நிலத்தி லேயே பாரியளவு வேட்டைகள் நடைபெறு கின்றன. இங்கு வாழுவோரும் வேட்டையாடும் இனத்தவரோயாகும். கூடுதலான இசைக்கருவி களும் இங்கேயே தோன்றின எனலாம்.

விபுலானந்த அடிகள் தனது ஆய்வுக்குரிய ஆதாரங்களை எவ்வாறு பெற்றார் என்பதனை பின்வருமாறு நோக்கலாம்.


## தொல்காப்பியச் சான்று:

தமிழிசை என்பதனை தமிழ்மொழிக்கு இலக் கணம் வகுத்த தொல்காப்பியரே அதனையும் சுட்டிச் சென்றுள்ளார். இது பற்றிய ஒரு விரி வான விளக்கத்தினைக் கொடுக்காது விடினும் அதுவே பின்வந்த நூல்களுக்கு வழிகாட்டி யாக அமைந்தது எனக் கொள்ளலாம். எழுத்ததிகாரத்தில் குறிப்பிட்ட மாத்திரை அள வில் ஒலித்தலை இயற்றமிழுக்கும் இசைத் தமிழுக்கும் பொதுவானதாகும் என்கிறார் அடிகளார். தொல்காபியர் யாழ் பற்றிக் குறிப் பிடும்போது 'நரம்பின் மறை' என்று குறிப்பிடு வது ஈண்டு குறிப்பிடத்தக்கது

இசைநூல் முறையில் எழுத்தொலிகள் எவ் வாறு அமையவேண்டும் என தொல்காப்பியர் எழுத்ததிகார நூன்மரபில் பின்வருமாறு கூறு கின்றார்.

'அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீட்டலும்'

தொடர்தல் 68ம் பக்கம்



# பேராசிரியர் சுவாமி...

67ம் பக்கத் தொடர்ச்சி...

*- தொல் - எழுத் - நூன்மரபு - 33*

தமக்குத்தமக்கென குறிப்பிட அளவினைக் கடந்து ஒலித்தலும், ஒற்றெழுத்துக்கள் தம் ஒலி முற்கூறிய அளவினைக் காட்டிலும் நீட்டலும், விளியின்கண் அன்றி இசைபொருந்த நரம்பினையுடைய யாழிசை நூற்கண்ணும் உளவாம் என்று இசைநூலர் கூறுவர் என என்மனார் புலவர் என்று உரை கூறுவர்.

'அசையும் சீரும் இசையொடு சேர்த்தி'

*- தொல் - பொருள் - செய்யுள் - 319*

அசையையும் சீரையும் ஓசையொடு சேர்த்துப் பாகுபாடு உணர்த்தல் வல்லார்களுடைய நெறிமுறையாகும். அதாவது, பொருளொடு சொல்லை அறுத்தவிடத்துத் தளையும் சீரும் சிதைந்தால், அவ்வழி ஓசையை நோக்கி அதன்வழி சேர்த்துக்க என்பதாம்.

'இசைநிலை நிறைய நிற்குவ வாயின்'

*- தொல் - பொருள் - செய்யுள் - 335*

இசை நிற்கின்ற நிலை நிரம்பாது நிற்குமாயின் அசையும் சீராகும் தன்மைபோல வரையார் ஆசிரியர் என்றவாறாகும்.

தொல்காப்பியர் ஒவ்வொரு பா வகைகளுக்கும் தனித்தனியான ஓசைகளை அமைத்துக் காட்டுகிறார். அவற்றினை நோக்கும் போது ஆசிரியப்பாவிற்கு உரிய ஓசையை 'அகவலோசை' (பொரு–செய்-386) என்றும், வெண்பாவிற்குரிய ஓசை 'செப்பலோசை' (பொரு – செய் - 387) என்றும், கலிப்பாவிற்கு உரிய ஓசை 'துள்ளலோசை' (பொரு – செய் - 388) என்றும், வஞ்சிப்பாவிற்கு உரிய ஓசை 'தூங்கலோசை' (பொரு – செய் - 389) என்றும் பாடல்களில் அமைத்துக் காட்டியுள்ளார்.

### சங்கச் சான்றுகள்:

இத்தேடலுக்கு உறுதுணையாக முதல், இடை, கடை என்ற முச்சங்கங்கத்துச் சான்றோர்களின் இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ் சார்ந்த படைப்புக்கள் புதியதொரு சிந்தனையூற்றுக்கு வடிகாலமைத்தது எனலாம். இயலோடும் இசையேயோடும் நாடகத்தோடும் இற்றைக்கு 2,500 வருடங்களுக்கு முன்பு வாழ்ந்ததே தமிழ் சமூகம் என்பதனை எட்டுத் தொகை, பத்துப்பாட்டு, காப்பியங்கள் நூல் வழி அறியக்கிடக்கின்றது. சங்ககால வாழ்வியல் அகம், புறம் சார்ந்தும் அறம், பொருள், இன்பம், வீடு நோக்கியதாகவும் இசைபட வாழ்ந்தார்களென்றும் அறியக்கிடக்கின்றது.

இடைச்சங்கத்தில் இசையும் அதனோடிசைந்த இசைக் கருவிகள், நாட்டியம், அதில் பிரயோகிக்கப்படும் பாவங்கள் மற்றும் அமைப்புப் பிரயோகங்களையும் அதன் நுணுக்கங்களையும் விளக்கும் நூல்கள் பல இருந்தன. அவ்வாறானவற்றில் இந்திர களியம், தூத்து நூல், பெருநாரை, பெருங்குருகு, இசை நுணுக்கம், பஞ்சபரதீயம், முறுவல், சயந்தம், செயிற்றியம் குணநூல் போன்றன குறிப்பிடத்தக்கன. ஆனால் இவை கடல்கோளினாலும் காலவெள்ளத்தினாலும் இன்று எமக்குக் கிடைக்காமல் அழிந்துபோயின. இந்நூல்களே இசை, இசைக்கருவிகள், நாட்டியம் போன்ற விபரங்களை வழங்கியிருந்தனவென்று இறையனாரகப் பொருள் மூலம் அறியக்கிடக்கின்றது.

சங்ககால மக்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, கைக்கிளை, பெருந்திணை என்ற ஒழுக்கங்களை வகுத்து வாழ்ந்தார்கள். இது சங்ககாலத்தின் முன்பு வாழ்ந்த மக்களின் வாழ்க்கையின் நீட்சி என்பதனை தொல்காப்பியர் வகுத்துக்காட்டுகின்றார். தொல்காப்பியர் காட்டும் எண்வகை மெய்ப்பாடுகளும் அக்காலத்தே இருந்த நாடகமும் நாட்டியமும் ஒருங்கு சேர இருந்ததனைச் சான்றாகக் காட்டலாம். நாட்டியத்திற்கும் நாடகத்திற்கும் அடிப்படை இசையும் இசைக் கருவிகளையும் நிலத்தின் தன்மையின் அடிப்படையில் வகுக்கப்பட்ட அந்தந்த நிலத்திற்குரிய கருப்பொருட்களைத் தொல்காப்பியர் வகுத்துக் காட்டியுள்ளார். அத்தோடு அவைகளுக்குரிய கருப்பொருளில் பறை, யாழ், பண் ஆகியவற்றினையும் அழகுறக் குறிப்பிடுகின்றார்,

'தெய்வம் உணவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு
அவ்வகை பிறவும் கருவென மொழிப'

*- தொல் - பொருள் - அகத்திணை 20.*

கருப்பொருள் என்பது தெய்வம், உணவு, மரம், பறவை, பறை என்னும் முழவுக்கருவி, யாழ், அத்துடன் தொடர்புடைய பண் (இசை / இராகம்) எனபதான பிறவும் கருவென்று கூறுவர். இதிலிருந்து தொல்காப்பியர் காலமான கி.மு 5–7ஆம் நூற்றாண்டிற்கு முன்பே தமிழர்தம் வாழ்வில் பறையும், யாழும், பண்ணும் பின்னிப் பிணைந்துள்ளது என்பதனை அறிந்து கொள்ள முடியும். (இடவசதியின்மை கருதி கீழே தொய்வம், உணவு, மரம் போன்றவை குறிப்பிப்பிடப்படவில்லை.)

சங்க காலத்தே பாணர், யாணர், விறலியர், கூத்தர், பாடினியர் ஆகிய இசை விற்பன்னர்கள் வாழ்ந்தார்கள். அவர்கள் பற்றி பல சங்க நூல்களில் குறிப்புக்கள் உள்ளன. பாணர் என்போர் யாழ் இசையை இசைக்கத் தெரிந்தவர்கள் என்றும், விறலியர் என்போர் பெண் இசைக் கலைஞர்கள் என்றும் கூத்தர் என்போர் நாடகமாடிகள் என்பதாகவும் கொள்ளப்பட்டது. பின்வரும் பாடலினால் பரிபாடலில் நல்வழியார் என்னும் புலவர் அக்காலத்தே நிகழ்ந்த ஆடலையும் பாடலையும் அவர்கள் பாவித்த இசைக்கருவிகளோடு பாடுவதனைக் கீழே காண்க.

*ஒருதிறம் பாணர் யாழின் றீங்குரலெழ*
*ஒருதிறம் யாணர் வண்டின் இமிரிசையெழ*
*ஒருதிறம் கண்ணார் குழலின் கரைபுழ*
*ஒருதிறம் பண்ணார் தும்பி பரந்திசையூத*
*ஒருதிறம் மண்ணார் முழவி னிசையெழ*
*ஒருதிறம் அண்ணல் நெடுவரை யருவிநீர் ததும்ப*
*ஒருதிறம் ஆடனல் விறலியர் ஒல்குபுநுடங்க*
*ஒருதிறம் வாடை யுளர்வயிற் பூங்கொடி நுடங்க*
*ஒருதிறம் பாடினிமுரலும் பாவையங்குரலின்*
*நீடுகிளர் கிழமை நிறைகுறை தோன்ற*
*ஒருதிறம் ஆசீர் மஞ்சை யரிகுரல் தோன்ற*
*மாறுமா றுற்றன்போன் மாறெதிர் கோடன்*
*மாறாட்டான் குன்ற முடைத்து*

என்வாறாகப் பாடியுள்ளதனால் அக்காலத்தே இருந்த கலைஞர்கள், வாத்தியக் கருவிகள், இசைகள், நாடக ஒழுங்குகள் போன்றன வற்றை அறிந்தவர்கள் என்பதனை அறிய முடியும்.

'பதிற்றுப்பத்து' என்ற எட்டுத்தொகை நூலில் சங்கப் புலவர் பரணர், சேரன் செங்குட்டுவனின் போர்மறச் சிறப்பு, கொடைச்சிறப்புப் பற்றிப்பாடிய செய்யுளில் இசை பற்றியும் இசைக்கருவிகள் பற்றியும் குறிப்பிடுவதனைக் கீழே காண்க.

'புணர்புரி நரம்பின் தீந்தொடை பழுனிய' என்று தொடங்கும் பதிற்றுப்பத்து, ஐந்தாம் பத்து பாடல் 41இல் பின்வருமாறு கூறப்பட்டுள்ளதனை நோக்குக.

இசையினைப் புணர்வதற்குரிய முறுக்கமைந்த நரம்பினைக் கொண்ட, இன்னிசையைச் செய்யும் நல்ல யாழ்களை ஏவலிழையர் சுமந்தபடி இருந்தனர். பண்ணுதல் அமைந்த முழவும், ஒருகண் மாக்கிணையும் (ஒரு பக்கம் மட்டும் தோலால் செய்த பறை), பிறவான இசைக் கருவிகளும் மூங்கிற் கணுவை இடையிட்டு அறுத்துச் செய்த பெருவங்கியம் என்னும் புல்லாங்குழல் கருவியொடு ஒருங்கு சேர்த்துக் காவடித் தண்டு போல் உள்ள தடியில் ஒரு பக்கத்தேயும் மறுபக்கத்தே ஆடல் துறைக்கு வேண்டிய கருவிகள் எல்லாம் கட்டி மூடையைச் சுமந்து இசைத்துறை வல்ல கலப்பையர் (பாணர்) இளைஞர்கள் தாம் செல்லும் வழியில் தமக்கேதும் தீங்கு நேராமல் இருக்க கடவுளையும் வேண்டிப் பரவினர் என்பதாம். இந்த ஒரு பாடலிலேயே பலவகைப்பட்ட யாழ், அதன் நரம்பு, பல்வகையான பறைகள், மூங்கிலால் செய்யப்பட்ட ஊது குழல்கள், பலவித நாட்டியக் கருவிகள் யாவும் கையில் எடுத்துச் செல்ல முடியாமல் காவடித் தண்டில் சுமந்து சென்றது பாணர், விறலியர், கூத்தர் ஆகியோரில் பலர் சென்றதனைக் குறிப்பிடுகின்றது. இவ்வாறான தகவல்களை அறியும் ஒரு ஆய்வு வேட்கை கொண்ட ஒரு ஆய்வாளனாகிய அடிகளாரல் யாழ் பற்றியும் தமிழனின் இசைபற்றியும் தேடியறிய உந்தப் பெற்றது இயற்கையானதே.

**அன்பின் ஐந்திணைக்குரிய சில கருப்பொருட்களாகிய பறை, யாழ், பண்**

| | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|
| பறை | தொண்டகப் பறை | ஏறங்கோட் பறை | நெல்லரி கிணை, மணமுழவு | மீன்கோட்பறை, நாவாய்ப்பறை | சூறைகோட்பறை, நிரைகோட்பறை |
| யாழ் | குறிஞ்சி யாழ் | முல்லை யாழ் | மருத யாழ் | விளரியாழ் | பாலை யாழ் |
| பண் | குறிஞ்சிப் பண் | சாதாரி | மருதப் பண் | செவ்வழிப்பண் | பஞ்சுரம் |

பத்துப்பாட்டு நூலாகிய 'பெரும்பாணாற்றுப்படை' வாயிலாக இசை, இசைக் கருவிகள் பற்றிய பல செய்திகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. பாணர்கள் எனப்படுவோர் இசைக் கலைஞர்களாவர். இது பாணர்கள் பற்றிக்கூறும் ஒரு நூல் என்ற காரணத்தினால் பாணர்கள் பற்றியும், இசைக் கருவிகள் பற்றியும், இசை நுணுக்கங்கள் பற்றியும் பல தகவல்கள் காணப்படுகின்றன. 'வில் யாழிசைக்கும் விரலெறி குறிஞ்சி' எனப் பெரும்பாணாற்றுப் படையில் குறிப்பிடுவதன் மூலம் 'வில்யாழ்' என்ற ஒரு வகை யாழ் இருந்ததற்கான ஆதாரம் அங்கு கிடைக்கின்றது. குறிஞ்சி என்பது மலையும் மலை சார்ந்த பிரதேசமுமாகும் இங்கு வேட்டையாடுதலே அவர்களது பிரதான தொழில் என்பதனை மேலே பார்த்தீர்கள்.

பெரும்பாணாற்றுப்படையில் தோற்கருவிகள், துளைக்கருவிகள், நரம்புக் கருவிகள், மிடற்றுக்கருவிகள் என்ற நான்கு வகை குறிப்பிடப் படுகின்றது. மிடற்றுக்கருவி என்பது தொண்டையினால் இசைத்தலைச் செய்வதாகும். வில்யாழ் முல்லை நிலத்திலேயே தோன்றியது என்று பதிற்றுப்பத்துத் தகவல்கள் கூறினும். பெரும்பாணாற்றுப்படையின் அடிப்படையில் அது குறிஞ்சியில் பிறந்ததென்பதே சாலச் சரியாகும். இவ்வாறாக சங்க இலக்கியங்களான புறநானூறு, கலித்தொகை, பரிபாடல், ஆற்றுப்படை நூல்கள், திருக்குறள், சில்பதிகாரம், சீவகசிந்தாமணி போன்றவற்றிலும் பின்பு வந்த பக்தி இலக்கியங்களில் இருந்தும் அறிய முடிகிறது. யாழின் வகைகளை பேரியாழ், சீறியாழ், மகரயாழ், சகோடயாழ் என்று அறிய முடிகின்றதேயன்றி அதன் வடிவினை, உருவ அமைப்பினைக் கண்ட பெருமை விபுலாநந்த அடிகளையே சாரும். சில சான் றுகள் அதன் உருபற்றி செய்யுள் ரீதியாக விபரித்திருந்ததுவே தவிர அதன் உருவ அமைப்புப்பற்றிய படங்களோ அன்றி வேறு உருவங்களோ வேறு எங்கும் குறிப்பிடாத நிலையில் அடிகளாரின் தேடல் மிகவும் சவால் மிகுந்ததாகவேயிருந்தது.

பெரும்பாணாற்றுப்படையில் (6 - 13 அடிகள்) யாழின் உருவ அமைப்பு 'பூவை இரண்டாகப் பிளந்து போன்ற உட்பாகம்' என்ற பாடலில் ஒரு யாழின் அமைப்புப்பற்றி விபரிக்கப்பட்டுள்ளன. அதன் உருவ அமைப்பு, அதன் தண்டு, வார்கட்டு, நரம்புகள் போன்றவற்றின் உருவ அமைப்புக்களின் விபரத்தினை அறியாலம். இந்த யாழின் தோற்றத்தை ஆய்வு செய்த அடிகள் அதில் கூறப்பட்ட உருவ அமைப்பினை மனதில் எடுத்து அதற்கு உருகொருத்திருப்பார் என உணரமுடிகிறது.

மேலுமொரு யாழுக்கான விபரத்தினை 'சிறுபாணாற்றுப்படை' (221 – 229) கூறும்போது 'பைங்க ணூகம் பாம்புபிடித் தன்ன அதங்கோட்டுச் செறிந்த அவிழ்ந்து வீங்கு திவவின்' என்ற செய்யுளின் மூலம் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதனை நோக்குக.

சங்க காலத்தே இருந்த யாழ்கள் வில்யாழ், பேரியாழ், சீறியாழ் என மூன்று யாழ்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. காப்பியக்காலத்தே கூறப்பட்ட யாழ்களாக மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டுயாழ் என்று வழங்கியதாகவும். கி.பி 9ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கல்லாடர் பின்வரும் யாழ்களையும் தமது நூலில் நாரத யாழ், தும்புயாழ், கீசகயாழ், மருத்துவயாழ், தேவயாழ் என்றவாறாகக் குறிப்பிடுகின்றார். யாழை மீட்டுபவர்கள் யாழ்ப்பாணர், இசைப் பாணர், மண்டைப்பாணர் என மூன்று வகையினராக வகைப்படுத்தப்பட்டிருந்தனர். சுவாமி விபுலானந்த அடிகள் கண்ட யாழ்களாக பின்வருவற்றினை அறிய முடியும் வில்யாழ், பேரியாழ், மகரயாழ், சீறியாழ், சகோடயாழ், கோடிப்பாலை, செம்பாலை, அரும்பாலை, மேற்செம்பாலை, செவ்வழிப்பாலை, விளரிப் பாலை, படுமலைப்பாலை ஆகிய யாழ்களாகும்.

'குழல் இனிது யாழ் இனிது என்பர்தம்
மழலைச் சொல் கேளாதவர்'

என்றவாறாக கி.பி 2ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட திருக்குறளில் குறிப்பிடுவதும், 'ஏழிசை யாழ், வீணை முரலக் கண்டேன்' என்றும் 'பண்ணோடியா வீணை பயின்றாய் போற்றி' என்றவாறாக மாணிக்க வாசகர் குறிப்பிடுவதையும் காண்டு யாழானது தமிழர் வாழ்க்கையில் எவ்வளவு முக்கியத்துவம் பெற்றிருந்தது என்பதனை அறிய முடிகிறது.

தொடரும்...

**உசாத்துணை:**

- தொல்காப்பியம் எழுத்ததிகாரம் - இளம்பூரணர் - பேராசிரியர் மு.சண்முகம்பிள்ளை
- தொல்காபியம் பொருளதிகாரம் - இளம்பூரணர் – பேரா மு.சண்முகம்பிள்ளை
- பதிற்றுப்பத்து – புலியூர்கேசிகன் உரை
- பெரும்பாணாற்றுப்படை – புலியூர்க்கேசிகன் உரை
- சிலப்பதிகாரம் - முனைவர்.ச.வே.சுப்பிரமணியம்
- யாழ்நூல் - விபுலானந்த அடிகள்
- தொல்காப்பியம் எழுத்ததிகாரம் - இளம்பூரணர் - பேராசிரியர் மு.சண்முகம்பிள்ளை
- தொல்காபியம் பொருளதிகாரம் - இளம்பூரணர் – பேரா மு.சண்முகம்பிள்ளை
- பதிற்றுப்பத்து – புலியூர்கேசிகன் உரை
- பெரும்பாணாற்றுப்படை – புலியூர்க்கேசிகன் உரை
- சிலப்பதிகாரம் - முனைவர்.ச.வே.சுப்பிரமணியம்
- விபுலாநந்தம் - பேராசிரியர் இளையதம்பி பாலசுந்தரம்
- விபுலம் - நினைவு விழாச் சிறப்பு மலர் 2003
- வித்தகன் - 10வது ஆண்டுச் சிறப்பிதழ் - 2012
- சைவத் தமிழ்ப் பேராசான் விபுலாநந்தர் – குன்றக்குடி பெரியபெருமாள்

*packiyanathan.m@thaiveedu.com*

■ ■ ■

### பிரியாவிடை:

- 1958 லிருந்து கனடாவில் புழக்கத்தில் இருந்த ஒன்று அருகிப்போய் மறையப்போகிறது.
- 1959 லிருந்து 1907 வரை இது இங்கிலாந்திலேதான் தயாரிக்கப்பட்டது.
- 1908 லிருந்து 2012 வரையில் இது கனடாவில் தயாரிக்கப்பட்டது.
- 1908 லிருந்து 2012 வரையில் கனடாவில் தயாரான இவற்றின் எண்ணிக்கை 35 பில்லியன்.
- 2012ம் ஆண்டில் ஒன்றின் உற்பத்திச் செலவு 1.6 சதம்.
- இதுவரையிலும் கனடாவில் புழக்கத்திலிருக்கும் இவற்றின் மொத்த நிறை 31000 மெட்ரிக் தொன்.

**பலருக்கும் புரிந்திருக்கும். கனடிய ஒரு சதம்தான் அது (Penny).**

- பெப்ரவரி 04க்குப் பிற்பாடு வங்கிகளியிருந்து ஒரு சதம் வெளியேவராது. போனது போனதுதான்.
- ஆனால் ஒரு சதம் செய்துபடியற்றதாவதற்கும் காலவரையறை இல்லை. ஏற்றுக்கொள்ளுவதும் மறுப்பதும் வணிக நிறுவனங்களின் முடிவு. வங்கிகள் தொடர்ந்து ஏற்றுக்கொள்ளும்.
- கொள்வனவுகளுக்குப் பணம் செலுத்தும் போது கிட்டிய 5 சதத்தில் செலுத்துவீர்கள். உ-ம். $1.02 ➤ $1.00, $2.63 ➤ $2.65)
- வங்கி அட்டைகள் மூலம் கொள்வனவுக்கான தொகையை மட்டுமே செலுத்துவீர்கள். (உ-ம் $24.32 ➤ $24.32)
- இனி பணமாகக் செலுத்தினால் ஆகக்கூடியது 2 சதம் இலாபம் அல்லது நட்டம்.

கடைசியில் இந்த அரசாங்கம் ஒரு சதத்துக்கு வழியில்லாத நிலைக்கு மக்களைக் கொண்டுவந்துவிட்டது பார்த்தீர்களா?

குட்டான்

# துயர் பகிர்வோம்



## திரு செல்வகுமார் இளையதம்பி

சாவகச்சேரி மடத்தடியைப் பிறப்பிடமாகவும், கனடா ஸ்காபரோவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வகுமார் இளையதம்பி அவர்கள் 09-01-2013 அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை இளையதம்பி, தங்கமுத்து இளையதம்பி இணையரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராஜேந்திரா இராஜரட்ணம், இந்திராணி அனற் பிறிம்றோஸ் இராஜரட்ணம் இணையரின் அன்பு மருமகனும், காமல் இந்திரரஞ்சனி (சூட்டி) அவர்களின் பாசமுள்ள ஆருயிர்க் கணவரும், அனித்திரா, மயூரா, சபீரா, அமீரா, அபிரா ஆகியோரின் பாசமிகு தந்தையும், வெற்றிவேலு (கனடா), தர்மலிங்கம் (இலங்கை), வடிவேலு (லண்டன்), மயில்வாகனம் (இலங்கை), சிவக்குமார் (லண்டன்), ராஜ்குமார் (கனடா), கனகாம்பிகை (கனடா), நீலாம்பிகை (கனடா), லக்ஷ்மி (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், இந்திரராஜ் கிறிஸ்தோபர் இராஜரட்ணம் (லண்டன்), கிறிஸ்ரபல் இந்திரராஜினி (கனடா), கிரிஸ்ரின் இந்திரராஜமணி (கனடா) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி வணக்க நிகழ்வு ஜனவரி 14, 2013 அன்று Stouffville இல் நடைபெற்றது

| | | |
|---|---|---|
| | கனடா | 14168163809 |
| ராஜ் | கனடா | 14168272117 |
| கனகாம்பிகை | கனடா | 14165347693 |
| நீலா(மொன்றியல்) | கனடா | 15147284320 |
| | | 15142616894 |
| சிவக்குமார | பிரித்தானியா | 442085745724 |



## திரு கதிர்காமர் செல்லத்துரை

சரவணையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட கதிர்காமர் செல்லத்துரை (CTB Driving Instructor) அவர்கள் 11-01-2013 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கதிர்காமர் பொன்னுரங்கம் இணையரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு வள்ளியம்மை இணையரின் அன்பு மருமகனும், விசாலாட்சி அவர்களின் ஆருயிர்க் கணவரும், வேதாந்தசெல்வி (இலங்கை), சுயராசசெல்வி (இலங்கை), தயானந்தசோதி (சோதி), ஜெயானந்தசோதி (சோதி - JJ Printers), சிவானந்தசோதி (சிவா - சுவிஸ்), காலஞ்சென்ற பவானந்தசோதி, மற்றும் தவச்செல்வி(பேவி - சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கனகரெத்தினம், அமிர்தசிவம் (ஈசன்), ஷர்மிளா, தேவமலர் (செல்வி), நந்தினி, கருணாகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், பராசத்தி, காலஞ் சென்ற சிவசம்பு ஆகியோரின் அன்பு மைத்துனரும், வாணி - ராசன் (அவுஸ்திரேலியா), சுதன் - கவிதா (அவுஸ்திரேலியா), கரன் - தாளினி (அவுஸ்திரேலியா), அமுதா - ஜெயராஜா (கனடா), ராதிகா - மதன் (அவுஸ்திரேலியா), பிரியா, புவனா, பாலேஸ்(அவுஸ்திரேலியா), பிரதீப், டினேஸ், ஜெகேஸ், ஜெனிற்றன், லக்ஷா, லபிஷா, லகீஷ், சங்கீத், பிரகீத், சுபிர்ணா ஆகியோரின் அன்புப் பேரனும், வேனுயன், பானுயன், சயித், தவிஷ், சிந்தியா, விக்ஷன், தனுஷா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதி வணக்க நிகழ்வு ஜனவரி 16, 2013 அன்று ரொறன்ரோவில் நடைபெற்றது.

| | | | |
|---|---|---|---|
| சோதி | கனடா | 14162989322 | 16474098966 |
| தயா | கனடா | 19052949064 | 14167218475 |
| சிவா | சுவிஸ் | 41796249004 | |
| கருணா செல்வி | சுவிஸ் | 41432669154 | |
| ராஜா | கனடா | 6478334998 | |
| கனகரெத்தினம் | இலங்கை | 94213008699 | |
| அமிர்தசிவம் | இலங்கை | 94770318996 | |



## திரு. ஐயம்பிள்ளை வேலாயுதர்

கைதடி வடக்கு குருநாதர் கோவிலடியை பிறப்பிடமாகவும், கோப்பாய் தெற்கு பழைய வீதியை வசிப்பிடமாகவும், பதுளை ஒப்டனில் நீண்டகாலம் தலைமை ஆசிரியராகவும், இருபாலை C.C தமிழ் கலவன் பாடசாலையில் அதிபராகவும் கடமையாற்றி ஒய்வு பெற்ற திரு ஐயம்பிள்ளை வேலாயுதர் கோப்பாயில் 29.01.2013 அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயம்பிள்ளை, சின்னாச்சிப்பிள்ளை இணையரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சோமசுந்தரம் தங்கமுத்து இணையரின் அன்பு மருமகனும். காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, செல்லம்மா, சின்னம்மா, ஆறுமுகம் லட்சுமிப்பிள்ளை ஆகியோரின் அன்புச்சகோதரனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், வேல்றைதன் (சகாப்தன்) கனடா, வேல்றஞ்சன் (பிரான்ஸ்) வேல்நிதி (இலங்கை பிரதம கணக்காளர், சுகாதாரத் திணைக்களம், வடமாகாணம்) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும். றஜிதா, சாந்தி, புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும், சகா, கவினா, வினோத், விஜித், வேந்தன், தவீசன், ஓவியா ஆகியோரின் அன்புப் பேரனாரும், சோதீஸ்வரன் (ஜேர்மனி) அவர்களின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி வணக்க நிகழ்வு ஜனவரி 29, 2013 அன்று கோப்பாயில் நடைபெற்றது.

| | | |
|---|---|---|
| வேல்றைதன் (சகாப்தன்) | கனடா | 9057899222 |
| வேல்றஞ்சன் | பிரான்ஸ் | 33148920453 |
| வேல்நிதி | இலங்கை | 94212230433 |


**FIRST AID AND CPR COURSES**

Emergency, Standard, Re-cert
All levels of CPR

(Certificate provided)
In English and Tamil

Provider

**Dr. Kandiah Senthilnathan ( SLMC)**
Acupuncturist (MACF)

Finch/Warden Medical Clinic
3430 Finch Ave East

**647-801-9252**

**Computer Typing**

Tamil & English Typing ($2 A4 page)
Translation Eng to Tamil ($4 A4 Page)
Website Maintenance or Uploading

asamdaniel@gmail.com
India: 91-81447 88248

**Morningside/Passmore**

வீடு வாடகைக்கு
4 Bed Room, 3 வோஷ்ரூம்
1700.00க்கு உடனடிவாடகைக்கு
Jey: 416-816-9011

**Bellamy/Lawrence**

Basement வாடகைக்கு
2 Bed Room Basement's (தனி வழி)
Jey: 416-816-9011

**SP Electronics**

TV, VCR, DVD, Players-Telephone-Computers
அனைத்துத் தமிழ் வானொலிகளுக்கும், திருத்த வேலைகளுக்கும்

**416 264 6400**
2641 Eglinton Avenue East ( Brimley & Eglinton)

**TUTORING**

Grades: 1-8: English, Math, Science & Social studies
Grade 9&10: English & Math ஆகிய வகுப்புகள்
நடாத்தப்படுவதுடன் EQAO, Literacy test களிற்கும் தயார்படுத்தப்படும்.

இடம்: Kennedy & Ellesmere அருகாமையில்

அஞ்ஜலீன் திசைராஜா B.A (Hons), M.Sc, Ph.D (Certified teacher)

**647 291 1357**

# கடந்த மாதத்தில்... நினைவில் நிற்கும் நிகழ்வுகள் சில...




ஜனவரி 27 - மார்க்கம் நகரசபையின் பொங்கல் விழா - *படம்: கங்கா*






ஜனவரி 22 - நாடாளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபைஈசனின் அலுவலகப் பொங்கல் விழா




ஜனவரி 20 - பிறம்ரன் தமிழ் அமைப்பின் பொங்கல் விழா - *படம்: கங்கா*




ஜனவரி 26 - டுறம் தமிழ்க் கல்வி, கலாச்சார, அறிவியல் சங்கத்தின் பொங்கல் விழா - *படம்: வேலா*

உங்கள் விழாக்களின் படங்களும் இங்கு இடம்பெறவேண்டுமாயின், விழா பற்றிய விபரங்கள், புகைப்படம் எடுத்தவரின் பெயர் மற்றும் உங்கள் தொடர்பிலக்கங்களுடன் **events@thaiveedu.com** என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.



ஜனவரி 8 - தமிழ் மரபுத் திங்கள் தொடக்க நிகழ்வு



ஜனவரி 20, 21 - டுறம் தமிழ் ஒன்றியத்தின் பொங்கல் விழாவும் **DDSB** தமிழ் மரபுத் திங்கள் பிரகடனமும் - *படம்: செந்தில் கிருஷ்ணமூர்த்தி*



ஜனவரி 12 - பருத்தித்துறை மக்கள் ஒன்றியத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டமும் கலை நிகழ்வும்



டிசம்பர் 22 - ஸ்காபரோ **Church of Nativity** மண்டபத்தில் ஒன்ராறியோ முதுதமிழர் மன்றத்தின் நத்தார் விழா



ஜனவரி 27 - தமிழ் மரபுத் திங்கள் நிறைவு நாள் நிகழ்வு - *படம்: கங்கா*

# பாசத்தின் எல்லை

பூர்வீகன்



*கடையில் இருந்து படியளக்கும் விடபயாபாரி*
*கம்பு கொண்டு தலையை வெட்டி வம்பு செய்கிறான்*
*கூப்பன் வந்து செய்கொடுமை கொஞ்சமல்லவே*
*வாய்ப்பன் போச்சுவடையும் போச்சு தோசை போச்சுதே*

மேற்படி பாடல் எங்கள் ஊர் நாட்டுக் கூத்தில் கோமாளியாக நடித்த ஒருவரின் பாடலாக அமைந்தது. இரண்டாவது உலக மகா யுத்தம் ஏற்பட்ட போது உலகு எங்கும் உணவுப் பஞ்சம் ஏற்பட்டது. அதனால் கிடைக்கும் பொருட்களைப் பங்கீட்டு முறையில் மக்களுக்கு வழங்குவதற்கு ஏற்படுத்தப்பட்ட முறை தான் கூப்பன் என்ற அடையாளம். பஞ்ச காலத்தில் அரைப்பட்டினியால் நலிந்த ஒரு பாமரனின் வாய்மொழியாகத்தான் மேற்படி கவிதை பிறந்தது போலும். கடைகளில் தானியங்களை வழங்கும் போது, கொத்தில் முழுதாக இல்லாது மட்டம் தட்டித்தான் கொடுப்பார்கள். அந்த நேரத்தில் யப்பானும் சீனாவும் எங்கள் நாட்டின் உணவுப் பஞ்சத்தைப் போக்க உதவினார்கள். கண்ணாடிப் பச்சை என்ற ஒருவகை வெள்ளைப்பச்சை அரிசியைத் தந்து உதவினார்கள். இந்த அரிசியின் நிறமும் ருசியும் நம் சிறுவர் மத்தியில் நல்ல வரவேற்பு இருந்தது. எங்கள் ஊர் போன்று வயல்வளம் உள்ள ஊர் மக்களுக்கு இந்த அரிசி மேலாதிகமானது தான். கிராமப்புற வயல்களில் விளைந்த சிவந்த அரிசி மக்களுக்கு நிறைந்த உணவாய் அன்று இருந்தது.

அப்படியான வளமானதுதான் அந்தக் கிராமம், ஆண்களும் பெண்களுமாய்ப் பிள்ளைகள் நிறைந்த குடும்பம் அது. அதில் ஒரு பெண் அயல் கிராமத்தில் உள்ள சீரணி என்ற குறிச்சியில் வாழ்க்கைப்பட்டாள். பெண்ணும் ஆணுமாய் இரு குழந்தைகளுடன் வாழ்க்கை நடத்தினாள். இந்தப் பெண் செல்லம்மாள் புகுந்த வீடு சுமாரான வாழ்கை தான். கணவர் பயணவண்டில் என்று சொல்லப்படும் பெரிய கூடாரத்துடன் பெரிய வெள்ளை எருதுகள் பூட்டிய வண்டில் வைத்து பிழைப்பு நடத்தினார். இடையிடையே வன்னிப் பயணமும் செய்து பயன் பெற்றார்கள். சில இடைவெளிக் காலாங்களில் செல்லம்மாளின் பிறந்த வீட்டில் இருந்து தானியங்களாயும், காய்கறி வகையாகவும் கிடைக்கப் பெற்று நலிவில்லாது வாழ்ந்தார்கள். இந்தப் பிறந்த வீட்டுப் பொருட்களை அவ்வப்போது செல்லம்மாளின் அன்புக்கும் பாசத்திற்குமான சின்னத்தம்பி கொண்டு வந்து சேர்ப்பான் இரண்டு வராத்திற்கு ஒருமுறையோ மாதத்தில் ஒரு முறையோ அக்கா வீட்டிற்கு வருவான். செல்லம்மாளின் இரு குழந்தைகளின் பாசமும், சின்னத்தம்பியைக் கவர்ந்திருக்கும் காந்தமாயிற்று. வார இறுதி நாட்களில் சின்னத்தம்பி மாமாவை எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள் செல்லம்மாளின் குழந்தைகள்.

முதல் வாரம் அக்கா வீட்டிற்குப் போன போது 'கண்ணாடிப் பச்சை அரிசி கொண்டு வரும்படி அக்கா கூறியது ஞாபகம் வந்தது, சின்னத் தம்பிக்கு. அன்று வெள்ளிக்கிழமை காலையில் பள்ளி செல்லுமுன் சின்னத்தம்பி தாயாரிடம் 'ஆச்சி இன்று மாலையில் நான் அக்கா வீட்டை போகும் போது அவ கேட்ட கண்ணாடிப்பச்சை அரிசியை ஆயத்தமாய் வைத்திரணை' என்று கூறிப்போனான். மாலையில் பாடசாலையில் இருந்து வந்ததும் உடை மாற்றிக் கொண்டு, தாயார் பனைஒலை மூடல் பெட்டியில் அரிசியை வைத்துப் பக்குவமாய் வாழை நாரினால்க் கட்டி வைத்த பாசலுடன் பயணமாகத் தயார் ஆனான். மறந்து போகாமல், மருமக்களுக் கென்று வாங்கி வைத்திருந்த சொக்கிறேற்றைச் சட்டைப்பையில் பத்திரமாய் வைத்துக் கொண்டான். கார்காலம் ஆரம்பமான முன் மாரிக்கார்த்திகை மாதம் அது. மாலை வேளைகளில் வடக்கே மழை முகில் கருக்கட்டித்தெரியும். அன்றும் அதே மழைக்கோலம் தான். ஆனாலும் தான் தெற்கு நோக்கிப் பயணிப்பதால் வடக்கில் தெரியும் மழை முகில் பற்றிக் கவலைபடாது புறப்பட்டான். தன் ஊர் எல்லையான மாகியம்பதியைப் பெரும் தெரு மூலம் கடந்து அடுத்து வரும் இரட்டையப் புலவயிரவர் கோவிலின் முன்னால் ஒழுங்கையில் விரைந்து நடந்தான். இடையிடையே உள்ள ஊர் வெளிகளிலும் பனம்தோப்புக்களிலும் இவனைப் போன்ற சிறுவர்கள் கிளித்தட்டு, வார் ஓட்டம், கெந்திப் பிடித்தல், கிட்டி அடித்தல், இலுப்பைக்கொட்டை அடித்தல் போன்ற விளையாட்டுக்களில் ஈடுபட்டிருப்பதையும் கண்டான். தானும் சேர்ந்து விளையாடச் சிறுவனின் மனம் நாட்டம் கொண்டாலும், இருட்டுக்கு முன் அக்கா வீட்டிற்குப் போக வேண்டும் என்ற நினைப்பும், மழைக் கால எச்சரிக்கையும் இவனின் ஆசைகளுக்குத் தடை இட்டுப் பணத்தைத் தொடரவைத்தது. சுமார் மாலை ஆறுமணியளவில் சண்டிலிப்பாய் தெற்கில் உள்ள ராஜாக்கல்லூரிக்கு அண்மையில் உள்ள காளி கோவில் ஒழுங்கையின் முகப்பில் பெருந்தெருவில் ஏறினான். பின் சிறித்தூரம் நடந்து கல்லூரிக்கு முன் ஒழுங்கையில் கால்பதிக்கும் வேளையில் சிறு மழைத்துளிகள் இவன் மேல்பட்டது. இவன் செல்லும் ஒழுங்கை கோடை காலத்தில் மக்கள் பாதையாகவும், மாரிகாலத்தில் வெள்ள வாய்க்காலாகவும் பயன்படும். இந்த ஒழுங்கை என்ற வெள்ள வாய்க்கால், தெற்கில் சங்கானை / யாழ் தெருவில் சீரணிக்கண்மையில் எட்டாங்கட்டையில் வெள்ளம் பாயும். பெரிய மதகுடன் சேர்கிறது. சிறுவன் அவ்விடம் சேரும் போது சிறிய மழையாய் மாறிவிட்டது. சங்கானை கிழக்கு சண்டிலிப் பாய்தெற்கு என்ற இடங்களில் சேரும் மழை வெள்ளம் ஒன்றாகச் சேர்ந்து மேற்படி மதகுவழியாகச் சீரணி நாகம்மாள் ஆலய மேற்குப் புறவயல் வெளி ஊடாகப்பாயும். இந்த மாரி வெள்ளத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் நம்முன்னோர்கள் இந்த மதகு வாய்க்கால் வழியில் ஒரு குட்டையைப் போன்ற பள்ளத்தை அமைத்தனர். இதனால் வெள்ளம் பெருகும் போது வழியில் உள்ள வயல்களுக்கு ஊறுவிளையாது தடுத்தனர். இந்தச் சிறிய பள்ளத்தில் சேர்ந்த வண்டல் மண்திடலில். இயற்கையின் நியதிப்படி ஒருபனையும் இருதென்னை மரங்களும் வளர்ந்திருந்தன. பனையில் சில கொடிகளும், பனங்கற்றாளையும் பற்றி வளர்ந்திருந்தன. ஆனால் பனையின் பரோபகாரம் தென்னையில் காணமுடியாது தானே! அந்த வகையில் பனையின் கங்குமட்டைக்குள் பட்சியாலங்களில் எச்சத்தோடு வந்த இடம் தேடிக் கொண்டது. ஒரு ஆலம்விதை விதை. சிறிய காலத்தில் சிறிய ஆலங்கன்றாகப் பனையின் ஆதரவுடன் வளர்ந்தது. இப்போ சிறிய ஆலமரமாய், வேரும் விழுதுகளும் பெருகித்தனக்கும் ஆதரவு தந்த பனைக்கும் ஆதாரமாய் வளர்ந்துள்ளது. இப்படியான நீர்வழிந்தோடும் இடங்களில் இந்துக்கள் தங்கள் காவல் தெய்வங்களான வைரவர், ஐயனார், வீரபத்திரர் சிலைகளை வைத்து வணங்குவதைக் காண்கிறோம்.

அந்த வகையில் இங்கேயும் இந்த ஆலமர அடியில் ஒரு ஐயனார் சிலையை வைத்து வணங்கினார்கள் அந்த இடத்து அயலவர்கள் மாரிவெள்ளம் பெருகும் போது ஐயனார் சிலை மூழ்கினாலும் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்படாது இருப்பதும் ஒரு இறைசக்தி என்று நம்பினார்கள் இப்படியாக மாரி வெள்ளம் வாய்க்கால் வழி ஓடிச் சீரணி வயல்களைக் கழுவி நாகம்மாள் ஆலயமுன்றலைத் தாண்டிச் சண்டிலிப்பாய் மானிப்பாய்தெருவில் கட்டுடை என்ற இடத்து ஆறுகண் மதவு மூலம் வழுக்கை ஆற்றோடு சங்கமிக்கிறது.

வெள்ளை வாய்க்காலோடு இணைந்த மதவை அண்மித்த சிறுவன், மதகுவழியே கூடிய வெள்ளம்பாய் வதைக்கண்டான்! முதலில் சிறிய மழையாய் தூறியது பெருமழையாய் மாறிவிட்ட நிலையில் சிறிது சிறிதாய் இருளும் கவியத் தொடங்கியது. இப்போ சிறுவன் சுறுசுறுப்பாய்ச் செயற்பட்டான். இளங்கன்று பயம் அறியாதுதானே! முழங்கால் வரை தானே வெள்ளம் ஓடுகிறது என்று எண்ணியவன், தன் வேட்டியையும் சேட்டையும் கழற்றித் தலையில் தலைப்பாகையாகக் கட்டினான். அரிச் பெட்டியைக் இறுக்கமாகப் பிடித்துக் கொண்டான். மாம்பழத்திற்குப் போட்டி போட்டி பொட்ட பழநி ஆண்டவர் கோலத்தில் வாய்



காலின் எதிர்க் கரைக்குப் போவதற்கு இறங்கினான். ஆனால் விதிவிளையாடலோ என்று எண்ணும்படி திபுதிபு என்று மண்ணும் மக்கியும் கலந்த பெருவெள்ளம் அந்த வாய்க்காலை மேவிப் பாய்ந்தது. சிறுவனின் இடுப்பு, தோள், தலை என்று வெள்ளம் மூழ்கிப்பாய்ந்தது. எதிர்பாராத இந்தத் தாக்கத்தினால் ஈடுகொடுக்க முடியாமல் தடுமாறினான். எத்தனை முயன்றும் வாய்க்காலின் மறுகரைக்குப் போக முடிவில்லை. மாறாக வெள்ளத்தினால் இழுபட்டுப் போய் அந்த ஆறிடுமேடுத்திடலில் நின்ற ஆலமர வேரைப் பற்றி ஒதுங்கிக் கிடந்தான். கைக்குள் பிடித்திருந்த அரிசிப் பொட்டலமும் அவனுடன் தான் இருந்தது. நொந்து பயந்த நிலையில் எந்தக் கடவுளை வேண்டினானோ யார் அறிவார். காலம் யாருக்கும் காத்திருக்காதுதானே! இருள்கல்வி இரவானது. நீரில் மணிக்கணக்கில் கிடந்தபடியால் உடல் விறைந்து உணர்வு இழந்தான்.

காலம் என்ற கலைஞன் மறுநாள் காலை என்ற திரையை விலக்கியது அதிகாலையில் சில போக்குவரத்து ஊழியர்களும் மற்றும் சிலரும் எட்டாங்கட்டை பஸ்தரிப்பை நோக்கி இந்த வாய்க்கால் வரம்பில் நடந்து வந்தார்கள். வந்தவர்களில் கண்ணில் சிறுவனின் சடலம் தெரிந்தது வியப்புடன் விரைந்து வந்தனர். வாழை நாரினால் கட்டப்பட்ட பெட்டியும் பக்கத்தில் இருந்தது அக்காவிடம் கொடுக்க வேண்டிய அரிசியும் மருமக்களுக்குக் கொடுக்கும் சொக்கிளேற்றும் கரைந்து சாயமாய்ச் சட்டையில் தெரிந்தது. இவனின் அன்புப் பாசுகள் இவன் இறப்பிலும் இறுக்கமாய் இருந்தது சிறுவனின் எல்லையற்ற பாசமா?

சிறுவனின் சடலத்தை வாய்க்கால் வரப்பில் வைத்தார்கள். காலையில் வழிப்போக்கர்கள் மூலம் செய்தி என்ற பறவை நாலாபக்கமும் பறந்து சென்றது. வாய்க்கால் வரப்பில் கிடத்திய சிறுவனின் இறப்புச் செய்தி கேட்டு அயலவர் கூடினர். அங்கே செல்லம்மாள் தன் தம்பியின் வரவை எதிர்பார்த்து காத்திருந்து தூக்கமில்லாத இரவைக் கழித்தாள். சிறுவர்கள் மாமாவைக் கானாது தூங்கிப்போனார்கள். தன் கணவரின் வன்னிப் பயணம் பற்றியும் தம்பியின் வரவு தடைபட்டது பற்றியும் நினைந்த தூக்கத்தில் சில துக்கமான கனவுகளுடன் காலைவிடிந்தது செல்லம்மாளுக்கு வாய்க்கால் வரப்பில் சிறுவனின் சடலம் என்ற செய்தி பேரிடியாய் வந்தது. ஒருவேளை தன் தம்பி தானோ... மறுகிறாள். அது தம்பியின் சடலமாக இருக்கக் கூடாது என்று உலகில் எல்லாத் தெய்வாங்களிடமும் கரம் கூப்பி வேண்டினாள் பின் தன் மூன்று வயதுப் பெண் குழந்தையைத் துக்கிக்கொண்டு, ஐந்து வயது மகன் பின்னால் ஓடிவர அந்த வெள்ள வாய்க்கால் வரப்பை அடைந்தாள். தூரத்தே வரும்போதே வெள்ளை வேட்டியுடனும் பக்கத்தில் மூடியுடன் இருந்த அரிசிப்பெட்டியும் பார்த்து தன் உடன் பிறப்பு என்று கண்டு கொண்டாள். சிவந்த கண்களுடனும் கலைந்த கூந்தலுமாய், நீதி கேட்டு நின்ற கண்ணகியாய்த் தான் செல்லம்மாள் காட்சியானாள். அப்போது செல்லம்மாளின் கண்களில் தெறித்த பாசவெறி தம்பியின் உயிர்குடித்த கூற்றுவனைச் சுட்டெரிக்கத் தேடி நின்றது. தம்பியின் உடல் அருகில் வந்த செல்லம்மாள் இடுப்பில் இருந்த குழந்தையை இறக்கிவிட்டு, தன் பிள்ளைகளையும் மறந்த சோக நிலையில், தம்பியின் கால்களைப் பற்றிக்கொண்டு "தம்பி, தம்பி" என்று அலறிய அலறல் அந்த வயல் வெளியையும் சுற்றுவட்டாரத்தையும் அதிரவைத்தது. 'தம்பி' என்ற பாச வார்த்தையுடன் அந்த அக்காளின் உயிர் மூச்சு நின்றுவிட்டது. கோயில் கோபுரத்தில் பதித்த சிலைகளாய் செல்லம்மாளின் இரு குழந்தைகளும் தாய்மாமன் காலடியில் அசைவற்று நின்றார்கள். இப்பரிதாபக் காட்சியைக் கண்டவர்களின் கண்ணீர் வெள்ளம் வாய்க்கால் வெள்ளத்தோடு சங்கமமாயிற்று. ஆண்டவனும் தன் பங்கிற்கு மழையாய் அழுதான்.

இத்துன்ப நிகழ்வு நடந்த பல நாட்களின் பின் அந்த வயல் வெளிகளிலும், பனந்தோப்புக்களிலும் பல புதிய பட்சிகள் காணப்பட்டன. இது மாரி காலத்தில் காணப்படும் பட்சிகள் என்றாலும், இப்பட்சிக் கூட்டத்தில் இரு வித்தியாசமான பறவைகள் காணப்பட்டன. ஒரு பறவை தன் நீண்ட வாலுடன் வயல் வெளிப் பக்கமிருந்த தம்பி தம்பி என்ற ஓசை போல் கத்தும். அதற்குப் பதில்போல மற்றப்பறவை தன் குறுகிய வாலுடன் அக்கோய்ய் என்று கத்தும். பின், இப்படி மாறிமாறிக் கத்திக் கொண்டு மறைந்து விடுங்கள். இது பற்றிய செய்தி அந்த அயல் வட்டார மக்கள் மத்தியில் ஒரு ஐதீகக் கதை யாப்பரவி வந்தது. நீரில் மூழ்கி இறந்த செல்லம்மாளின் தம்பியின் ஆன்மாவும் பாசத்தின் எல்லையில் உயிர் பிரிந்த செல்லம்மாளின் ஆன்மாவும் பறவை உருவில் வந்து தங்களிடம் எஞ்சியிருந்த பாசத்தை இப்படிக் கூவியழைத்துத் திருப்திப்படுகிறார்களோ என்று அந்த அயல் மக்கள் கருதினார்களாம்.

சகோதர பாசத்தினால் சின்னத் தம்பியும் செல்லம்மாளும் உயிர் பிரிந்தார். எத்தனை காலத்தின் பின்னால் இன்றும் கூட எத்தனை சின்னத் தம்பிகள் அக்கா மாருக்காகவும் எத்தனை செல்லம்மாக்கள் தங்கள் சின்னத் தம்பிகளுக்காயும் உயிர் தியாகம் செய்யும் ஆயிரமாயிரம் காட்சிகளை நிதர்சனமாகக் கண்டோம், காண்கிறோம். உடன் பிறப்பு, இன உணர்வு, ஊர்ப்பாசம், மொழிப்பற்று என்பன எல்லாம் உயிர்களையும் விஞ்சிய சக்திகள் தானோ.

*poorveekan@thaiveedu.com*

■ ■ ■

# வாகன விபத்தில் காயமடைந்துவிட்டீர்களா?



அனுபவசாலிகளின் ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்!

## FIREMAN STEINMETZ
PERSONAL INJURY LAWYERS

CERTIFIED AS A SPECIALIST IN CIVIL LITIGATION

SPECIALIZING IN SERIOUS PERSONAL TRAUMATIC INJURIES AS RESULT OF A

## MOTOR VEHICLE ACCIDENT

FRACTURES - SPINAL CORD INJURY - BRAIN OR HEAD INJURY
SCARRING OR DISFIGUREMENT - INTERNAL INJURIES OR DEATH



**Jack J. Fireman Q.C. LLM.**
Jack J. Fireman Q.C. has been voted to the "Most Frequently Recommended Lawyer"catergory in L'Expert since 1997 as voted by the his peers from Ontario



**Harry F. Steinmetz**
Mr. Steinmetz is a member of the Advocates Society, the Canadian Bar Association, the Metropolitan Toronto Lawyers Association and the Medico-Legal society.

## உங்களுக்குத் தெரியுமா?

- நடந்த விபத்து உங்கள் தவறில்லாவிடின் உங்களால் பணமாக வலி, வருத்தம், வாழ்வில் இழந்த மகிழ்ச்சி ஆகியவற்றுக்காக பணமாக **$330,000.00** வரையும், சம்பள இழப்பீடுகள் அத்துடன் **$86,000.00** வரை இழப்பாகவும் மற்றும் பல்வகையான இழப்புகளுக்கு நஷ்டஈடுகள் பெறமுடியும்.
- நடந்த விபத்து உங்கள் தவறாக இருப்பின் உங்களால் **$86,000.00** வரையும் வருமான இழப்பீடாக வாரத்திற்கு **$400** வரையும் இன்னும் பலவகை இழப்பீடுகளையும் பெறமுடியும்.

**If the impairment catastrophic your claim can be:**
- Medical and Rehabilitation expenses up to **$1,000,000.00**
- Personal care expanses up to **$1,000,000.00**

***OVER 50 YEARS COMBINED EXPERIENCE***
**even if you are:**
unemployed - employed - passenger - pedestrian
cyclist - traveling in public transit - student - housewife

You may be eligible for benefits to THOUSANDS of dollars

*if you have optional insurance you can calm up to **$1,000.00** IRB'S-per week
வரை இழப்பதற்கு அனுமதியாதீர்கள்!

**இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்**

# தீபன்

**24 Hours Direct Line**
**(416) 505 - 9804**
**(416) 624 - 4751**

Thiparanjan Sivarajalingam
Accident Benefit Specialist
Licensed Paralegal
(Member of The Law Society of upper Canada)
**www.thipaninjuryclaim.com**
**thiparanjan@gmail.com**

அனுபவம் இல்லாதவர்களின் ஆலோசனையின் கீழ் விழுந்திடாதீர்கள்

TORONTO | SCARBOROUGH | MISSISSAUGA



# JRS College
of Business and Health Care Inc.
"Committed to Provide Quality Training"

## Second Career

**Second Career Provides up to $28,000 for**
- Tuition
- Books
- Other instruction costs
- Transportation
- A basic living allowance

(Additional support may be available to accommodate the needs of people with disabilities, dependent care, cost of living away from home and academic upgrading)

Source:-www.mtcu.gov.on.ca/eng/secondcareer

# PSW

Morning
&
Evening

Classes will starts Soon.

### OTHER DIPLOMA PROGRAMS

| | |
|---|---|
| Accounting & Payroll Administration | (45 Weeks) |
| Health Office Administrator | (40 Weeks) |
| Computerized Accounting | (24 Weeks) |
| Office Assistant | (16 Weeks) |

(Approved as a Vocational Program under the Private Career Colleges Act 2005.)

## Certificate Courses

**Cashier Training**
Starts on March 9, 2013 @ 9.00 am (Saturday)

**Food Handler Training**
March 17, 2013 @ 10.00 am (Sunday)

**Free Computer Basic Class**
Starts on March 24, 2013 @ 10.00am (Sunday)

**Food Service Worker**
Starts on April 21, 2013 @ 9.00am (Sunday)

(These Programs does not require approval under the Private Career Colleges Act 2005).

## Contact Info

**(Midland & Finch)**
**330-4168 Finch Ave East**
**Scarborough, ON M1S 5H6**
**416-292-2455**

(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005.)

- சுல்பிகா இஸ்மாயில் -

போராளியுருவாக்கம் - IX

# கலாசாரப் போராளி

கலாசாரப் போராளிகள், சமூக மேம்பாட்டினை அடைவதற்காக தமது அறிவையும், அனுபவத்தையும் பயன்படுத்தி, உழைக்கின்ற கலாச்சார மானிடவியலாளர்களாகும். குறிப்பாக இக்கலாச்சார செயற்பாட்டு வாதிகள், சமூகப் பிரச்சினைகளின் பின்னணியிலுள்ள கலாச்சாரக் காரணங்களையும் அக்கறைகளையும் அறிந்து செயற்படுபவர்களாகும். கலாச்சார செயற்பாட்டியக்கமானது பல்வேறு நோக்கங்களின் அல்லது அணுகு முறைகளின் அடிப்படையில் வகைப்படுத்தப் படுகின்றது. கலாச்சாரப் போராளிகளும் தங்களது அடையாளங்களை இந்த நோக்கங்களின் அடிப்படைகளிலிருந்தே நோக்குகின்றனர்.

- அடக்குமுறை சார்ந்த சமூக, பொருளாதார, அரசியல், கலாசார அம்சங்களை இனங்கண்டு அவற்றினை கலை, கலாச்சார அம்சங்களுக்கூடாக வெளிப்படுத்துதல் அல்லது எடுத்துச் சொல்லுதல்.
- கலாசார விடயங்களிலுள்ள அநீதிகளையும் அடக்குமுறை அம்சங்களையும் நீக்குவதற்கும் சமூக நிதியுடன் கூடிய மாற்றுக் கலாசார அம்சங்களை உருவாக்கவும் நிலைப்படுத்தவும் வாதிடல்.
- ஏற்கனவே உள்ள விளிம்புநிலைக் கலாசார அம்சங்களுக்கு உயிர்ப்பூட்டி வெளிக் கொண்டு வருதலும், விழிப்புணர்வையும் எற்றுக்கொள்ளுகையையும் ஏற்படுத்துவதற்காக பாடுபடுதலும்.
- ஏற்கனவே உள்ள சாதகமான சமூக நீதியுடன் கூடிய பெறுமதிமிக்க கலாசார அம்சங்களைப் பாதுகாப்பதற்கும் வலுவூட்டுவதற்கும் பாடுபடுதல்.

அநேக கலாசார போராளிகள் அறிந்தோ அறியாமலோ அல்லது பிரக்ஞையுடனோ அன்றியோ தமது செயற்பாட்டியக்கங்களில் செயற்பட்டிருக்கின்றனர், செயற்படுகின்றனர்.

"எனது தளம் கலை, ஒரு கலைஞனாகவே நான் பெரிதும் என்னைக் கருதுகின்றேன். எனது புலமைத் தொழில் எனது பிழைப்புக்கான, ஒரு போதும் தீவிரமான கருத்துக்களை முன் வைப்பதற்கான தளமல்ல. இந்நிலையில் சமூக மேம்பாட்டுக்காக வாதிடுவதற்கு என் கையிலுள்ளது எனது தெரிவான சமகால நடனக்கலைத் துறைதான். பல வேளைகளில் என்னை நான் முழுமையாக கலாச்சாரப் போராளியாக அல்லது செயல்வாதியாகக் காண்பதில் என்றும் புலமையாளனுக்கும் ஒரு கலைஞனுக்கும் அப்பால் நான் செயற்பட்டிருக்கின்றேன், செயற்படவும் விரும்புகின்றேன் என்பதையும் உணர்கின்றேன்"

என்கிறார் சமூக மேம்பாட்டுக்காக கலையைப் பயன்படுத்துகின்ற ஒரு போராளி.

1980 களின் நடுப்பகுதியில் கனடாவுக்குக் குடிபெயர்ந்து உயர்தரப் பாடசாலைக் கல்விக்குப்பின் பல்கலைக்கழகத்தில் சமகால நடனத்துறையைப் பயின்றவர் அவர். இக் கலைத் துறையினூடாகத் தான் பெற்றுக் கொண்ட செயல்வாதிக்குரிய அல்லது ஒரு போராளிக்குரிய பண்புகள் குறித்துப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார் அவர்.

"இத்துறை ஒரு வகையில் சம்பிரதாயமான நடன உட்பிரிவுகளுக்கு அப்பால் செய்கின்ற, அவற்றிலிருந்து வேறுபடுகின்ற, அவற்றை மாற்றியமைக்கின்ற ஒரு பண்பினைக் கொண்டிருக்கின்றது. மேலும், இது சம்பிரதாயங்களை உடைக்கின்ற ஒரு முயற்சியாகவும் இருக்கின்றது. இந்நிலைமையில் நடனக்கலைகளில் என்ன இருக்கின்றது? எவை இல்லாதிருக்கின்றது? எவற்றை மாற்றியமைக்க வேண்டும்? ஏன் மாற்றியமைக்க வேண்டும்? யாருக்காக மாற்றியமைக்க வேண்டும்? எனப் பலவாறான கேள்வி எழுப்புவதற்கு எனக்கு அது கற்றுத் தந்திருக்கின்றது. அது கற்கின்ற ஒரு முறைமையையும் செயற்படுத்துகின்ற ஒரு முறைமையையும் கூட எனக்குள் வளர்த்திருக்கின்றது. இந்த எதனையும் கேள்விக் குட்படுத்துகின்ற ஆர்வம் எனது செயற்பாட்டியக்கத்திற்கான உளத்தூண்டலாக அடிப்படையாக உள்ளது என நினைக்கின்றேன்."

தனது செயற்பாட்டு உருவாக்கம் பற்றிக் குறிப்பிடும் போது, சில சமூகத்தாபனங்களினதும் அவை சார்ந்த தனிமனித, குழுக்களினதும் வழிகாட்டல் பற்றியும் சமூகத்திலுள்ள அடக்குமுறைகளின் அடித்தளங்கள் பற்றி அவர்களது அறிவூட்டல்கள் பற்றியும் அவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"எனக்குக்கிடைத்த பலவகையான தொடர்புகளில் மிக முக்கியமானவை, எனக்கு உளமூட்டிய இரு சமூக அமைப்புகளாகும். அங்கு பல்வேறு சமூகங்களைச் சேர்ந்தவர்கள் இருந்தனர். அவர்களில் அநேகமானோர், பல்வேறு விளிம்புநிலைக் குழுக்களுடன் தொடர்பாக பணியாற்றுகின்ற பெண்களாவர். பல்வேறு சமூக அடக்குமுறைகளையும் பிரச்சினைகளையும் அதிகார அரசியலுடன் தொடர்புபடுத்தி விளங்கிக் கொள்ளவும் மாற்று வழிமுறைகளுக்கூடாக அப்பிரச்சினைகளைக் கையாள்வதற்கான உத்திகளையும் உளவலிமைகளையும் வளர்த்துக் கொள்ளவும் அவர்கள் எனக்குதவினர். இவ்வகையில் கலாச்சாரத்தையும், கலையையும் அரசியலோடு தொடர்பு படுத்தி விளங்கவும் படைக்கவும் கற்றுக் கொண்டேன்".

மேலும், முதன்முதலில் தனது கலாசாரப் போராட்டத்திற்கான வெளி கட்டமைக்கப்பட்டது பற்றிப் பின்வருமாறு குறிப்படுகின்றார் அவர்.

"அக்காலகட்டத்தில் பெருவாரியான இளைஞர்கள் இலங்கையிலிருந்து வந்து கனடாவிற்குள் குடியேறி இருந்தனர். அவர்களில் பலர் முன்னையை போராளிகளாவர். அவர்கள் ஆயுதப் போராட்டங்களில் பல்வேறு குழுக்களில் இணைந்து செயற்பட்டவர்கள். அவர்களுக்குள் கோட்பாட்டு ரீதியாக இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான தெளிவான விளக்கமும், பல்வேறு அணுகு முறைகள் குறித்த ஒருமித்த கருத்தும் இருந்தது. நேர்மையாக, மாற்றுக் கருத்துக்கான தளம் ஒன்றின் தேவை குறித்து அவர்கள் இணைக்கப்பாட்டினையும் கொண்டிருந்தனர். இத்தளத்தினை உருவாக்குவதற்கு கடின உழைப்பினையும் அவர்கள் செய்தனர். இக்கால கட்டத்தில் அவர்களில் பெரும்பான்மையானோர் மூன்று விதமான தொழில்களைச் செய்தனர். தலைக்கொரு தொழில், வீட்டுக்கொரு தொழில், கருத்துக்கொரு தொழில் என்று. இதன் மூலம் ஒரு மாற்றுக் கருத்துக்கான தளம் பலரது கடின உழைப்பால் உருவாகி இருந்தது. இங்கு உருவாக்கப்பட்டிருந்த தமிழ் நூலகம் தமிழ் சமூகத்தின் ஒரு குழுவினாலேயே எரிக்கப்பட்டமை எல்லோருடைய மனதையும் பாதித்தது. இந்நிகழ்வானது எல்லா அடக்குமுறையாளர்களும் செய்கின்ற ஒரு பொது யுத்தியையே பிரதிபலித்தது. அதாவது மாற்றுக் கருத்துக்களை இல்லா தொழிப்பதன் மூலம் அதிகார சக்தியைப் பலப்படுத்துகின்றதாகவே அது அமைந்தது. இது இளைஞனாக இருந்த எனக்கும் மிக மிக வருத்தத்திற்குரிய விடயமாக இருந்தது. எனக்கு அவர்கள் மீது கோபம் என்பதை விட, எமது சமூகத்தினைப் பற்றிய துக்கமே அங்கு மேலோங்கி இருந்ததாக உணர்கின்றேன். இச்செயற்பாடு தாய்நாட்டில் இடம் பெற்ற அடக்குமுறைக்குச் சற்றும் குறைந்ததல்ல. மாற்றுத்தள அமைப்பின் ஸ்தாபகர்களின் அர்ப்பணமும் நெஞ்சுரமும் கருத் தொருமிப்பும் எனக்கு மேலும் உரமூட்டின. இப்போது தான் தமிழ்ச் சமூகம் சார்ந்து எனது போராட்ட முயற்சி அல்லது செயற் பாட்டு முயற்சி ஆரம்பமாகியது.

எனது கலைக்கூடாகவே இதனைச் செய்தேன். உலகில் நிகழ்த்தப்பட்ட பல புத்தக எரிப்புக்கள் தொடர்பான வரலாற்று ஆவணங்களைப் பதிவு செய்யும் போஸ்டர் ஒன்றினைத் தயார் செய்தேன். இதன் மூலம், சமூகம் ஒன்றை அல்லது குழு ஒன்றை அடக்குவதற்கான ஆயுதமாக அவர்களது அறிவுத் தொகுதியையும் அது சார்ந்த அவர்களது கலாச்சார முதலீட்டையும் அழித்தல் அரங்கேற்றப்படுகின்றது என்ற விடயத்தினை வெளிப்படுத்த முயன்றேன். மற்றொரு செயற்பாட்டில் சமூக விடயங்களிலுள்ள அடக்குமுறைகள், பிரச்சினைகள் அதன் ஆணிவேர்கள் போன்றவற்றை வெளிப்படுத்த எனது சமகால நடன நுட்பங்களைப் பயன்படுத்தினேன். இவ்வாறே கலை, கலாசாரம், சமூக அரசியல் போன்றவற்றை இணைக்கும் செயற்பாட்டுப் போராட்டம் எனக்குள் ஆரம்பித்தது".

இக்கலாசாரப் போராளியினது அறிவூட்டல், உள உரமூட்டல் செயற்பாடுகள் சமூக அமைப்புக்களில் அறிவார்ந்த பயிற்சியுடனும் உணர்வு சார்ந்த ஆதரவுடன் இடம் பெற்றிருக்கின்றது. ஒரு போராளி முழுமையாக சமூக நிலைகளைப் புரிந்து கொண்டு, பல தளங்களில் இயங்கும் அதிகார-அடக்குமுறை விடயங்களுக்குப் பல தளங்களில் இருந்து போராட வேண்டும். அதற்காக எல்லா வகையான விழிப்புணர்வையும் திறனையும் உளஉரத்தையும் கற்றுக்கொள்ளவேண்டும் எனவும் அவர் குறிப்பிடுகிறார். தனது உளஉரமூட்டல் பற்றி குறிப்பிடும் போது பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"எடுத்துச்சொல்லவேண்டும் என்ற ஆவல் எனக்குள் எப்போதும் இருந்து வந்திருக்கின்றது. அநீதிகளை, மாற்றுக் கருத்துக்களை, சமூகப் பன்முகத்தன்மைகளை, சமத்துவ நிலைமைகளை வெளிப்படையாக எனது சமகால நடனத்தினூடாக வெளிப் படுத்த விளைந்திருக்கின்றேன். என்னைப் பொறுத்தவரை எனக்கு மற்றவர்களிடம் இழப்பதற்கு எதுவுமில்லை. எனது கௌரவம், மானம், தன்னம்பிக்கை எல்லாமே என்னிடமே இருக்கின்றன. அவை யாரிடமும் இழக்கப்படுவதில்லை. இவ்வகையான வலுவூட்டலைப் பெரும்பாலும் கறுப்பின ஒரு பாலினப் பெண்களிடமிருந்து கற்றுக்கொண்டேன். அவர்களின் மிகைவாசிப்பு, பட்டறிவுகளுக்கூடாகக் கற்று என்னை வலுவூட்டியிருக்கின்றேன். இதனால் கருத்து வெளிப் படுத்துகின்ற தைரியமும் பயமின்மையும் என்னுள் இருக்கின்றது".


முற்போக்கு சிந்தனையுடன் சமூக மேம்பாட்டுக்கான அல்லது இனக்குழும விடுதலைக்கான அர்ப்பணத்துடனும், நேர்மையுடன் செயற்படுகின்ற போராளிகள் சமூகத்தில் மிகக் குறைந்த எண்ணிக்கையினரேயாகும். பொது நீரோட்டத்திற்கு அப்பால் மாற்றுக் கருத்துக்களை முன்வைத்து வாதிடுபவர்களும் அவர்களே. எனினும் தற்காலத்தில் பன்முகத்தன்மையை கொள்கையளவில் அங்கீகரிக்கின்ற போதும், ஒன்றிணையும்போது முரண்படுகின்ற நிலைமை அல்லது குழப்பத்தில் முடிகின்ற நிலைமை தொடர்ச்சியாக நிகழ்கின்றது. இது பற்றிக் குறிப்பிடும்போது பின்வருமாறு குறிப்பிடுகிறார் இக்கலாசாரப் போராளி.

கொள்கை ரீதியான முரண்பாடுகள் வெவ்வேறு விடயங்கள் தொடர்பான இருப்பது ஒரு பரந்த சமூகத்தின் இயல்பான விடயமாகும். இதனால் பல்வேறு விடயங்கள், பிரச்சினைகள் குறித்து வேலை செய்வதற்கான நேர்மையுடன் கூடிய ஆயத்த நிலை (உள, உடல், அறிவு, ரீதியான) ஒவ்வொருவருக்கும் இருக்கவேண்டும் என நான் நினைக்கின்றேன். அதுவே அடிமட்ட சமூக மேம்பாட்டுக்காக வேலை செய்யும் எல்லோருக்கும் ஒரு பாரிய பொதுத்தளமாக அமையவேண்டும். உண்மையில் இடதுசாரி முற்போக்குச் சிந்தனையுடையவர்களுக்குள்ளும், வலதுசாரி அடக்குமுறை அமைப்புக்கள், முறைகளுக்குரிய போக்குகள் உள்ளன. இது வேறுபட்ட விடயங்களில் இருக்கும். அதாவது எல்லோரும் எல்லா விடயங்களிலும் முற்போக்காக சிந்தனை இல்லை அல்லது சில விடயங்களைப் பற்றிய விழிப்புணர்ச்சி இல்லாதிருக்கும். மேலும் அவர்கள் தங்களைக் கேள்வி கேட்கத் தயாராகவும் இல்லை. வெளியேயுள்ள அதே அடக்குமுறைமைகள் உள்ளேயும் செயற்படுகின்றன. அத்துடன் முழுமையான சமூக நிலைமை பற்றிப் பெரும்பாலும் மறந்தும் விடுகின்றோம்.'

இவ்வாறான முரண்பாட்டு நிலையைக் கையாள என்ன செய்யலாம் என்பது பற்றியும் சில கருத்துக்களைப் பின்வருமாறு முன்வைக்கின்றார் அவர்.

"போராட்டச் செயற்பாடுகளை, விழிப்புணர்வூட்டல்களை, தனிப்பட்ட வகையிலும் குழுக்களுக்குள்ளும், குழுக்களுக்கிடையேயும் செய்யவேண்டும். அதற்கான தயார் நிலையில் இல்லாததனால் தான் மாற்றுக் கருத்துக் குழுக்களுக்குள்ளும் உள் முரண்பாடுகள் உருவாகின்றன. ஒழுங்குபடுத்தப்பட்ட வகையில் எவ்வாறாயினும் மேற்குறித்த செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டே ஆகவேண்டும்".

(தொடரும்)



zulfika.ismail@thaiveedu.com

உங்கள் அனைத்து நிகழ்வுகளையும் பார்ப்பதற்கும் பதிவதற்கும்

www.inayam.net

# AJITH SABARATNAM

## Ranked No: 1 by Sun Life in Ontario Region

Ajith was awarded recently, ranked No 1 position in sales by Sun Life Financial in Ontario Region. Ajith received the awards in the presence of Sun Life President Mr Kevin Doughty, Regional Vice President Mr Matt Fishman and Mississauga Branch Manager Mr Bhupendra Kuntawala. Its also a remarkable achievement by Ajith for being 10 times in the last 11 years as No 1 in Ontario Region. Ajith Sabaratnam has been in the financial services industry since 1987, and a financial advisor with Sun Life Financial since 2001, where he has helped clients successfully prepare financially for their future. Since joining the company, he was ranked in the top two producers nationally in 2004, has been the number one producer in the region and recognized amongst the top 10 advisors in Canada for the last 11 years. His contribution as an Elite advisor to his community has been very impactful and earned him reputable respect amongst his people. He has been a member of the Canadian Tamils' Chamber of commerce for the last 10 years and currently serving the board as Vice President – Community Relations.



Ajith Sabaratnam with Sun Life Regional Vice President Mr Matt Fishman



Ajith Sabaratnam with Sun Life President Mr Kevin Doughty on right and Regional Vice President Mr Matt Fishman on left



Ajith Sabaratnam with Sun Life Mississauga Branch Manager Mr Bhupendra Kuntawala on left and Regional Vice President Mr Matt Fishman on right





2012
Top Producer
Chairman's club
Award Night
Thanks to my Clients, Family, Friends, & Wellwishers for the support & trust.
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife/Future
REALTY INC., BROKERAGE*
TEL: 905.201.9977
FAX: 905.201.9229
205-7 Eastvale Drive
Markham Road, Ontario L3S 4N8
Ruby Thambiah
SALES REPRESENTATIVE
416.999.5337
rubysri@hotmail.com
www.buyandsellwithruby.com
Top Producer: 2009, 2010, 2011 *
Top 5% in Canada: 2009, 2010, 2011 **

## - பின்லாந்தின் பசுமை நினைவுகள் - 18

# பல்கலைக்கழகத்தில் தமிழ் வகுப்புகள்

- உதயணன் -

ஹெல்சிங்கி பல்கலைக்கழகத்தில் சில வருடங்களாகப் பட்டதாரி மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்து வந்த இலங்கைத் தமிழரை நான் ஏற்கனவே பலதடவைகள் சந்தித்து இருக்கிறேன். இவருடைய சொந்தப் பெயரைக் குறிப்பிடாமல் இதன்மேல் இவரை ‘சதாசிவம்’ என்ற மாற்றுப் பெயரில் அழைப்போம். நான் பின்லாந்துக்கு வந்தபோது அங்கிருந்த நான்கு தமிழர்களில் சதாசிவமும் ஒருவர். இவர் இலங்கையில் மலைநாட்டைச் சேர்ந்தவர். சென்னைத் தமிழில் பேசுவார். பேராதனை பல்கலைக்கழகத்தில் மின் பொறியியல் படித்ததாகச் சொன்னார். ஒரு பெண் விவகாரத்தால் இவர் இலங்கையில் இருந்தால் உயிராபத்து ஏற்படலாம் என்ற நிலைமை ஏற்பட்டதாம். அதனால் அந்தப் பெண்ணுடன் நாட்டைவிட்டு வெளியேறத் தீர்மானித்தார். அந்தப் பெண்ணும் பாவம், இவருடைய அன்பை மெச்சிப் பாராட்டித் தனது கணவனையும் இரண்டு பிள்ளைகளையும் விட்டு விட்டு இவருடன் இலங்கையை விட்டு வெளியேறத் தயாரானார். அந்த நாட்களில் வேலை தேடி மத்திய கிழக்கு நாடுகளுக்கும் மேலை நாடுகளில் ஈரானுக்கும் இலங்கையர் அதிகமாகச் சென்று கொண்டிருந்தனர். அப்பொழுது இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு தொழில் தேடிச் செல்வது, இந்த நாட்களைப் போல அவ்வளவு கஷ்டமில்லை என்று நினைக்கிறேன். காசு இருந்தால் போகலாம் என்ற நிலைமை போலும். முப்பது வருடங்களுக்கு முன்னர் என்னைப் பின்லாந்துக்கு அனுப்பிய ஓய்வுபெற்ற தமிழ் ஆசிரியர் என்னிடம் முப்பதினாயிரம் இலங்கை ரூபா மட்டும்தான் வாங்கினார். அவர் கொஞ்சம் அதிகமாகக் கேட்டிருக்கலாம். அவருடைய நல்ல மனம் கேட்க விடவில்லை. நானாவது ‘இந்தப் பணம் போதுமா? இன்னும் கொஞ்சம் வேணுமா?’ என்று கேட்டுக் கொடுத்திருக்கலாம். நானும் கொடுக்கவில்லை. ஏனென்றால் அப்பொழுது எனது கையிலும் காசு இருக்கவில்லை. நான் பின்லாந்தை அடைந்த பின்னர், அவருடைய நிலைமையை அறிந்து, இலங்கையிலிருந்து செலவுக்கென்று கொண்டு போன அமெரிக்க டொலர்களை அவருக்கே திருப்பி அனுப்பியிருந்தேன். ஆனால் அவர் சிலரிடம் ஏமாந்து போனதால் தான் கட்டிக் கொண்டிருந்த வீட்டை அரைகுறையில் விற்று விட்டுக் காணாமல் போய்விட்டார். அவரை முதன்முறையாகச் சந்தித்தபோதே நினைத்தேன், ‘இந்த நல்ல மனுஷனுக்கு ஏன் இந்த வில்லங்கமான வேலை’ என்று. ‘அரசியலில் இறங்கினால் அடிக்கக்கூடியதை அடித்துவிட்டு ஒதுங்கிவிட வேண்டும். அதைவிடுத்து அரிச்சந்திர புராணத்திற்கு உரை எழுதப் போகிறேன் பேர்வழி என்று புறப்பட்டால் அந்த அசல் அரிச்சந்திரனைப் போல எங்காவது ஒரு சுடலைக்கு ‘வாச்மன்’ ஆகத்தான் போக வேண்டிவரும்’ என்பது ஒரு புதுமொழி. இது கூட என்னை வெளி நாட்டுக்கு அனுப்பிய அந்த வாத்தியாருக்குத் தெரியாமல் போய் விட்டதே!

சரி, எங்கள் சதாசிவத்தின் கதைக்கு வருவோம். அவருடைய வெளிநாட்டு வாழ்க்கையும் ஈரானில் ஆரம்பமாகியது. அங்கே எத்தனை வருடங்கள் இருந்தார், என்னென்ன வேலைகள் செய்தார் என்ற விபரங்கள் எதுவும் தெரியாது. ஈரான் மன்னர் ஷா என்பவருக்கு எதிராகப் புரட்சி ஏற்பட்ட காலத்தில் ஈரானை விட்டு வெளியேறிய பல இலங்கையர் இலங்கைக்கே திரும்பி விட்டனர். ஆனால் இவர் இலங்கைக்குத் திரும்பினால் இவருடைய மனைவியின் முந்திய கணவனின் உறவினர்களினால் ஏதாவது பிரச்சினை வரலாம். எங்கே போவது என்று தெரியாத ஒரு நெருக்கடியில் குடும்பத்துடன் ரஷ்யாவுக்கு வந்து சேர்ந்தார். அங்கிருந்து பக்கத்து நாடான பின்லாந்து எல்லைவரை பல தடவைகள் வந்து வந்து திருப்பி அனுப்பப்பட்டுக் கடைசியாக நாட்டுக்குள் நுழைய அனுமதி கிடைத்தது. ஆனால் பொருளாதார உதவிகள் எதுவும் எங்கிருந்தும் கிடைக்கவில்லை. நாங்கள் பின்லாந்துக்கு வந்தபோது பின்லாந்து அரசு எங்களுக்குச் செய்து தந்த வசதிகளையும் சலுகைகளையும் பார்த்த அவர், அப்பொழுது தாங்கள் சின்னக் குழந்தைகளுக்குப் பால் வாங்குவதற்கே மிகவும் கஷ்டப்பட்டதாக ஒரு முறை கூறி வருந்தினார். இவரைப் போலவே ரஷ்யா வழியாக வந்த இன்னொரு தமிழரும் இருந்தார். யாழ்ப்பாணம் சுண்டிக்குளியில் ஒரு வசதியான கிறீஸ்தவ குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர் பின்லாந்தில் கட்டட வேலைப் பகுதியில் செங்கல் போன்ற சீமெந்துக் கற்களை கூலிக்குச் சுமந்ததாகச் சொன்னார். அவர் தனியாள். பின்னர் சிரமப்பட்டுப் பொறியியல் பட்டப் படிப்பை முடித்துவிட்டு ஒரு நல்ல பதவியில் அமர்ந்து, பின்லாந்துப் பெண்ணை மணந்து சொந்தமாக வீடுவாசல்களை வாங்கி வசதியாக வாழ்கிறார். அந்த நேரத்து நிலைமை அப்படி. அங்கு சென்ற வெளிநாட்டவர்களைப் பொறுத்த வரையில், அப்போது நடந்தது கற்காலம். பின்னால் வந்தது பொற்காலம். இப்போது நிகழ்வது கலிகாலம்.


பின்லாந்தின் தேசிய அருங்காட்சியகம் - National Museum of Finland

அப்போதைய சூழ்நிலையில் சதாசிவம் ஓடியோடிப் பல தொழில்களைப் பார்க்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அவர் பல தொழில்களைக் கைவசம் வைத்துக் கொண்டு எதையும் சரிவரச் செய்ய முடியாமல் திண்டாடிக் கொண்டிருந்தார். சொந்தமாக ஓர் உணவகத்தைத் தொடங்கினார். அது ஒரு பகுதி நேரத் தொழில். நினைத்த நேரம் திறப்பார். நினைத்த நேரம் மூடிவிடுவார். வாடிக்கையாளர் வரும் நேரம் மூடியிருக்கும். வராத நேரம் திறந்திருக்கும். ஈரானில் கற்ற கால் மிதி, கயிற்றுப்பாய், கம்பளம் பின்னுவதுபற்றிய கைப்பணிக் கல்விக்கு வேறோர் இடத்தில் பயிற்சியாளராக வேலை பார்த்தார். இடையில் ஓட்டமும் நடையுமாக விரைந்து வந்து பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழியை அவசரமவசரமாகக் கற்பிப்பார். சில சமயம் தமிழ் வகுப்புக்கு வராமலேயே விட்டுவிடுவார். பல மரங்களைப் பார்த்தவன் ஒரு மரத்தையும் வெட்டமாட்டான் என்று ஊரிலே எங்கள் வீட்டுக்கு முன் வீட்டில் இருந்த முதல் வாத்தியார் முத்துத்தம்பி அடிக்கடி சொல்வார்.

எனக்கு ஹெல்சிங்கி பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் வாய்ப்புக் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பே இல்லாத ஒரு காலத்தில், அதாவது நான் பின்லாந்துக்கு வந்த ஆரம்ப நாட்களிலேயே நான் சதாசிவத்தைச் சந்தித்து இருக்கிறேன். என் நண்பர் லொயிட் சுவான்ஸ் இவரை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். தான் ஹெல்சிங்கி பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழியைக் கற்பிப்பதாகச் சொன்னார். எங்களை அவர் தனது வீட்டுக்கு அழைத்துப் பின்லாந்து உணவுகளைத் தந்து மகிழ்வித்தார். நாங்களும் அவரையும் அவருடைய குடும்பத்தையும் எங்கள் வீட்டுக்கு ஒரு நாள் இரவு உணவுக்கு அழைத்திருந்தோம். எங்கள் வீட்டில் தயாரிக்கப்பட்ட இடியப்பம்தான் அன்றைய பிரதான உணவு. அவருடைய இரண்டு மகன்மாரும் அன்றுதான் இடியப்பத்தைப் பார்த்திருந்தார்கள். ஆங்கிலம் பின்னிஷ் மொழிகளை மட்டுமே பேசத் தெரிந்திருந்த அந்தச் சிறுவர்கள் இடியப்பத்தைக் கையில் தூக்கிப் பிடித்து, ‘இது என்ன அப்பா?’ என்று அதிசயமாகக் கேட்டார்கள். அவர் ‘This is thunderhopper’ என்றார். ஒரு thunder எனது இதயத்தில் இறங்கியது போலவும் hopper மட்டும் மேசையில் இருப்பதுபோலவும் உணர்ந்தேன்.

கோடை விடுமுறைக்குப் பின்னர், பல்கலைக் கழகத்தில் வகுப்புகள் ஆரம்பித்துச் சில வாரங்கள் கழிந்துவிட்டன. ஒரு நாள் அஸ்கோ பார்பொலா எனது அறைக்கு வந்தார். ‘வகுப்புகள் ஆரம்பித்துச் சில வாரங்கள் ஆகிவிட்டன. தமிழ் மொழி கற்பிக்கும் சதாசிவம் இன்னமும் வரவில்லை. மாணவர்கள் வந்து வகுப்பறையில் உட்கார்ந்திருந்து பார்த்துவிட்டு என்னிடம் வந்து முறையிடுகிறார்கள். அவர்கள் சிறுவர்கள் அல்ல, வளர்ந்த பட்டதாரி மாணவர்கள். ஒவ்வொரு மணித்துளியையும் சிந்தாமல் சிதறாமல் பயன்படுத்த வேண்டும் என்ற ஆர்வம் உள்ளவர்கள். சில மாணவர்கள் பொழுது வீணாகப் போகிறதே என்ற விரக்தியில் தமிழ் மொழியை அடுத்த வருடம் கற்கலாம் என்று முடிவு செய்து தமது பாடத் திட்டத்தை மாற்றிக் கொண்டு வேறு பாடங்களுக்குச் சென்றுவிட்டார்கள். சதாசிவத்தைத் தொலைபேசியில் தொடர்பு கொள்ள முயற்சித்தேன். அவருடைய வீட்டில் யாருமே இல்லை. உங்களால் அந்தத் தமிழ் மொழி கற்பித்தலையும் செய்ய முடியுமா?’ என்று கேட்டார்.

நான் சொன்னேன், ‘அவரை எனக்கும் தெரியும். அவருக்கும் என்னென்ன பிரச்சினைகளோ? அவரும் ஒரு தமிழர். ஒரு சில வாரங்கள் அவர் வரவில்லை என்றவுடன் நான் போய் அவருடைய நாற்காலியில் உட்காருவது எனக்குச் சரியாகப்படவில்லை. இன்னும் கொஞ்சம் பொறுத்துப் பார்க்கலாம்.’

மேலும் இரண்டு மூன்று வாரங்கள் கழிந்தன. மீண்டும் அஸ்கோ பார்பொலா வந்தார். ‘சதாசிவம் வருவார் போலத் தெரியவில்லை. இன்றிலிருந்து நீங்கள் தமிழ் கற்பித்தலையும் செய்கிறீர்கள். என்னுடன் வாருங்கள். நேர அட்டவணை, பாடத் திட்டம் போன்றவற்றைப் பற்றிப் பேசுவோம்,’ என்றார்.

‘இன்னும் கொஞ்ச நாட்கள் பொறுத்துப் பார்க்கலாமே,’ என்றேன்.

‘சிவா,’ என்றார் அஸ்கோ பார்பொலா. ‘எனக்குத் தமிழ் மொழியில் இருக்கும் பற்றுதலினால், சில வருடங்களுக்கு முன்னர் தலைமை அலுவலகத்துடன் எவ்வளவோ போராடித்தான் தமிழ் மொழி கற்பிப்பதற்கு வருட மானியத்தைப் பெறத் தொடங்கினோம். இந்த வருடம் அந்த மானியத்தை நாம் பயன்படுத்தாது விட்டால், அடுத்த வருடத்திலிருந்து அதனை முற்றாக நிறுத்தி விடுவார்கள். தமிழ் மொழி கற்பித்தலும் அடியோடு நின்றுவிடும். அதனால் இன்றே நீங்கள் தமிழ் மொழியைக் கற்பிக்கத் தொடங்குகிறீர்கள். ஆய்வு உதவியாளர் என்பது உங்களுடைய முழு நேர வேலை. தமிழ் கற்பித்தல் உங்களுக்கு மேலதிகமான ஒரு பகுதி நேர வேலை. மாணவருடன் கலந்து ஆலோசித்து அதற்கேற்ப ஒரு புதிய நேர அட்டவணையைத் தயார் செய்யுங்கள். பின்னர் சதாசிவம் வந்து ஏதாவது கஷ்டத்தினால் அல்லது நோயினால் வர முடியாது இருந்தது என்று சொன்னால், அவருக்கு அந்த இடத்தைத் திரும்பக் கொடுக்கலாம். அதைப் பற்றிப் பின்னர் யோசிப்போம். உடனடியாக வகுப்பைத் தொடங்கப்பாருங்கள். சில வருடங்களாகத் தமிழ் கற்பித்தலுக்கு நாம் பெற்று வரும் மானியத்தை வீணாக இழக்க முடியாது.’

அதன் பின்னர் சதாசிவம் வரவேயில்லை. அவருடைய நியாயம் வேறாக இருந்தது.

தொடர்தல் 78ம் பக்கம்



# பல்கலைக்கழக...

77ம் பக்கத் தொடர்ச்சி...

பல்கலைக்கழகத்தில் ஒரு தமிழரை மாதச் சம்பள அடிப்படையில் முழுநேர வேலைக்கு நியமிக்கும் வாய்ப்பு வந்தபோது, ஏற்கனவே சில வருடங்களாகப் பகுதி நேர வேலை பார்த்துக் கொண்டிருந்த தனக்கு அந்த முழு நேர வேலையைத் தந்துவிட்டு, புதிதாக வந்த எனக்குத் தனது பகுதி நேர வேலையைத் தந்திருக்கலாம் என்பது அவருடைய கட்சி. ஆனால் உண்மை என்னவென்றால் பல்கலைக்கழகம் எனக்குத் தந்த சம்பளப் பணத்தை விசேட மானியமாகத் தொழில் அமைச்சு பல்கலைக்கழகத்துக்கு வழங்கி வந்தது. இந்த ஏற்பாட்டைச் செய்தவர் புலம்பெயர் புனர்வாழ்வு மையத்தில் இருந்த தொழில் அமைச்சின் அதிகாரி. இந்தப் பதவியை நான் ஏற்காது விட்டால் அந்த மானியத்தைத் தொழில் அமைச்சு மீளப் பெறுமே தவிர, புலம்பெயர் மையம் பரிந்துரை செய்யாத வேறு எவருக்கும் அதனைச் சம்பளமாக வழங்கச் சம்மதிக்காது. புலம்பெயர் மையத்துக்கும் சதாசிவத்துக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. இரண்டு மூன்று வருடங்களுக்குப் பின்னர், ஒரு வருடம் முழுவதும் அதாவது பன்னிரண்டு மாதங்களுக்கு எனது சம்பளத்துக்கான மானியத்தை வழங்கத் தொழில் அமைச்சுக்கு முடியாமல் போய்விட்டது. அந்தப் பன்னிரண்டு மாதங்களுக்கும் அதே சம்பளத் தொகையை பின்லாந்து இலக்கிய மன்றம் எனக்குப் புலமைப் பரிசிலாக வழங்கியது. அந்த ஒழுங்கையும் தொழில் அமைச்சும் புலம்பெயர் புனர்வாழ்வு மையமும் இணைந்து செய்துதந்தன. இந்த விபரங்கள் அஸ்கோ பார்பொலாவுக்கும் எனக்கும் மட்டும் தான் தெரியும். சதாசிவத்தின் மனக் குறைக்கான காரணம் எங்களுக்குத் தாமதமாகத் தான் தெரிய வந்தது. மேற்படி விபரங்களை அவருக்குச் சொன்ன போது அவர் அதனை ஏற்கவில்லை. அதுவுமல்லாமல், பல வருடங்களாகத் தான் பகுதி நேர வேலையில் இருக்கும்போது புதிதாக வந்த எனக்கு முழு நேர வேலை வழங்கியது அவரைப் பொறுத்த வரையில் அது ஒரு கவுரவப் பிரச்சினையாகவும் போய்விட்டது. அதற்குப் பிறகு அவர் எங்களைச் சந்திப்பதைத் தவிர்த்துக் கொண்டிருந்தார். அவர் குருக்களோடு கோபம் என்று தெருவிலே நின்று தோப்புக்கரணம் போட்டார். கோயிலுக்குள் வரமாட்டேன் என்று, தெருவிலேயே நின்று தேவாரம் படித்தார். எங்களால் எதையுமே செய்ய முடியவில்லை.

இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர் சதாசிவம் அமெரிக்காவுக்குப் போய் அங்கே சில காலம் தங்கியிருந்தார் என்று கேள்வி. திரும்பிய பின்னர் எனக்குக் கிடைத்த பதவியை அவர் பெற வாய்ப்பில்லை என்பதை உணர்ந்து கொண்டார். தற்செயலாக எங்காவது சந்திக்க நேர்ந்தால் ஒரு சிரிப்பில் அறிமுகமாகி அதே சிரிப்பு முடியும் முன்னர் விடைபெற்றுக் கொள்வோம்.

பட்டதாரி மாணவர்களுக்குத் தமிழ் மொழியைக் கற்பிக்க ஆயத்தமானேன். அப்பொழுது ஹெல்சிங்கி பல்கலைகழகத்தில் இந்தியவியல் கற்கும் மாணவர்கள் இரண்டு இந்திய மொழிகளைக் கற்றுத் தேற வேண்டும் என்பது கட்டாயமாக இருந்தது. முன்னொரு காலத்தில் தமிழ் மொழியைக் கற்ற பின்லாந்தியப் பேராசிரியர்களே தமிழ் மொழியையும் கற்பித்து வந்தார்கள். அப்பொழுது உச்சரிப்புப் போன்ற சில சங்கடங்கள் இருந்ததாக அறிந்தேன். எந்த மொழியாக இருந்தாலும், அந்த மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் கற்பிப்பதையே அஸ்கோ பார்பொலாவும் மாணவர்களும் விரும்பினார்கள். சதாசிவத்திற்குத் தமிழ் கற்பிக்கும் வாய்ப்புக் கிடைக்க வழி வகுத்த காரணங்களில் இதுவும் ஒன்று.

சில தமிழ்நாட்டு அறிஞர்களின் கட்டுரைகள் அடங்கிய லண்டனில் பிரசுரமான ஒரு பழைய நூலைப் பல வருடங்களாக உயர்தரத்துக்குப் பாடநூலாகப் பயன்படுத்தி வந்தார்கள். இந்தத் தொகுப்பில் இருந்த கட்டுரைகள் மிகவும் பழையன. சில கட்டுரைகளில் பண்டிதத் தமிழில் எழுதப்பட்ட பழைய கரடுமுரடான வார்த்தைப் பிரயோகங்களும் காணப்பட்டன. இதனை நான் அஸ்கோ பார்பொலாவுக்குக் கூறியபோது, 'இதனை நானும் அறிவேன். பொருத்தமான வேறு பாட நூல் எதுவும் கிடைக்கவில்லை. இந்த வருடம் எல்லாம் குழம்பிப்போய்விட்டது ஏற்கனவே இரண்டு மாதங்கள் கற்பித்தல் நடக்கவில்லை. மாற்று ஒழுங்குகள் செய்ய நேரம் இல்லை. மொழியைக் கற்பதுதான் முக்கியம். உங்களுடைய சிறுகதைகள் நாவல்கள் ஏதாவது கைவசம் இருந்தால் அவற்றில் எதையாவது பாட நூலாகப் பயன்படுத்துங்கள். அடுத்த வருடம் எல்லாம் சீராகிவிடும்,' என்று அவர் சொன்னார். எனது சிறுகதைகள் எதுவும் கைவசம் இருக்கவில்லை. அதனால் வீரகேசரிப் பிரசுரமான எனது 'பொன்னான மலரல்லவோ' என்ற நாவல் அவ்வருடம் (1986இல்) தமிழ் உயர்தர வகுப்பின் பாட நூலாயிற்று. அதுவரை பாட நூலாக இருந்த கட்டுரைத் தொகுப்பிலிருந்து சில கட்டுரைகள், புதிதாக வெளிவந்த நூல்களில் இருந்து சில கட்டுரைகள், சிறுகதைகள், தெரிவு செய்யப்பட்ட 40 - 50 திருக்குறள்கள், பாரதியார், பாரதிதாசன், தேசிக விநாயகம்பிள்ளை போன்ற கவிஞர்களின் கவிதைகள் ஆகியவற்றைத் தேர்ந்தெடுத்து அடுத்த வருடம் கற்பிப்பது என்று தீர்மானித்தோம். இந்த வரிசையில் புதுமைப் பித்தன், லா.சா.ரா, ஜெயகாந்தன் ஆகியோரின் சிறுகதைகளையும் தமிழ் உயர்தர வகுப்பில் கற்பித்ததாக ஞாபகம். 2000ஆம் ஆண்டில் 'பாரதி' திரைப்படம் வெளிவந்தது. 2001ஆம் ஆண்டின் சிறந்த திரைப்படத்திற்கான தேசிய விருதை இப்படம் பெற்றது. இப்படத்தில் இடம்பெற்ற முக்கிய காட்சிகளை உள்ளடக்கி, பாரதியாரின் வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கமாக எழுதி, அதன் பிரதிகளை எடுத்து அந்த வருட உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு கொடுத்து, இரண்டு மூன்று வகுப்புகளில் தொடர்ச்சியாகக் கற்பித்தேன். மாணவர்கள் மிகுந்த அக்கறை காட்டிக் கற்றதோடு பாரதியாரின் பாடல்கள் பற்றியும் ஆர்வமாகக் கேட்டார்கள். ஒருநாள் அந்த மாணவர்கள் அனைவரையும் ஒரு தேனீர் விருந்துக்கு எனது வீட்டுக்கு அழைத்திருந்தேன். சந்தோஷமாகவும் உற்சாகமாகவும் வந்து என் மனைவி மக்களுக்கு அறிமுகம் ஆனார்கள். அப்பொழுது அவர்களுக்கு 'பாரதி' படத்தின் வீடியோ கசட்டைப் போட்டுக் காண்பித்தேன். பாரதி யாரை பற்றி ஏற்கனவே வகுப்பில் படித்திருந்த அவர்கள் படத்தைப் பார்க்க ஆர்வமானார்கள். படத்தில் இருந்த ஈடுபாட்டினால், நாற்காலிகளில் அமர்ந்திருந்த சிலர் தொப் தொப்பென்று தரையில் இறங்கிச் சப்பணம் போட்டு அமர்ந்து தம்மை மறந்து படத்தைத் தொடர்ந்து பார்த்து ரசித்தார்கள். அந்த நாட்களில் 'பாரதி' திரைப்படம் பற்றிய ஒரு தரமான விமர்சனம் ஆனந்த விகடன் வார இதழில் வெளியாகியிருந்தது. அதன் பிரதிகளை எடுத்து அடுத்த தமிழ் உயர்தர வகுப்பில் வழங்கி அது பற்றி விவாதித்தோம். பட்டதாரி மாணவ மாணவிகள் என்றால் அநேகமாக இருபது வயதுக்கு மேற்பட்டவர்களாக இருப்பார்கள். ஆனால் இந்தப் பின்லாந்திய மாணவர்கள் மதிப்பு மரியாதை தெரிந்த குருபக்தி உள்ள வெள்ளை மனம் படைத்த பச்சைக் குழந்தைகளாக இருந்தார்கள். தமிழ்மொழியில் ஓர் அட்சரம்கூடத் தெரியாதுஇருந்த இந்தப் பெரிய குழந்தைகளுக்குத் தொடர்ச்சியாகப் பத்தொன்பது வருடங்கள் ஆனா, ஆவன்னாவில் இருந்து திருக்குறள் வரைக்கும் கற்பித்ததால் நான் பெற்ற இனிய அனுபவம் உலகத்தில் எந்தத் தமிழ் ஆசானுக்கும் கிடைத்திருக்க வாய்ப்பு வந்திருக்காது என்று நினைத்துக் கொண்டிருக்கின்ற 'பக்கா' சுயநலவாதி நான்!

(தொடரும்)



uthayanan@thaiveedu.com

தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.

E-mail: info@thaiveedu.com

Fax: 416-849-0594

Tel: 416-646-3422

N.K.S
Drapery & Blinds Fabric LTD

திறமையான சேவையால் பல விருதுகளை பெற்ற நிறுவனம்

உங்கள் வீட்டுக்குனுத் தேவையான சகலவித யன்னல் திரை வகைகளையும், கேட்டின் துணி வகைகளையும் மிகவும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ள அழையுங்கள்.



கேதா நடராஜா
416.321.6420

Ketha Nadarajah
(President)
Tel: 416.321.6420
Fax: 416.321.2217
www.nksdrapery.ca

Drapery & Blinds Fabric Ltd., 210 Silver Star Blvd., Unit #825, Scarborough, ON M1V 5J9

இந்திய மருத்துவம்

உடலும் - மனமும்

- மருத்துவ ஆலோசனைகள்
- மூலிகைகள்
- மருத்துவம் கற்றுக் கொள்ள
- மருத்துவ தொழில் ஆலோசனை பெற

நேரில் சந்திக்கவும்:

இராஜசேகர் ஆத்தியப்பன்
416-995-0416
ayurvetha@gmail.com
www.ayurexpress.net


அறிமுகப் படுத்துகிறோம்
Amazon Organic Shampoo
• இந்த ஷம்பூவிலுள்ள இயற்கை மூலிகைகள் பட்டுபோன்ற மிருதுவான கூந்தலைத் தருகின்றன.
• கூந்தலையும் தலையையும் சுத்தம் செய்கிறது.
• முடியுதிர்வைக் குறைக்கிறது.
மூவாயிரமாண்டுகளுக்கு மேலான ஆயுர்வேத பாரம்பரியத்தில் நவீன முறையில் தயாரிக்கப்பட்ட ஆயுர்வேத மூலிகை ஊட்டச்சத்து ஔடதம்
• 200 ற்கும் மேற்பட்ட மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்பட்டது.
• உடலின் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது.
• உடலின் நச்சுத்தன்மையை நீக்கி புத்துணர்வை ஊட்டுகிறது.
• அமெரிக்க FDA (Food and Drug Administration)இனால் அங்கீகரிக்கப்பட்டது.
ஊளைச் சதை பெருகுவதை தடுக்கிறது! வாத வலியை நீக்குகிறது! உடலுக்கு புதுத்தென்பைக் கொடுக்கிறது!
க்லூட்டியலா பானமானது மிகுதியான உடல் கொழுப்பை குறைக்கக் கூடியதும், குறிப்பாக உடலின் இடுப்பு, தொடை, தோற்பட்டை, கைகள் போன்ற பகுதிகளில் ஏற்படக்கூடிய ஊளைச் சதை பெருகுவதை தடுக்கவும், கொழுப்பினால் விளையக் கூடிய கெடுதியினை கட்டுப்படுத்தவும், உடல் வலியை நீக்கவும், அத்துடன் வாதத்தினால் ஏற்படக்கூடிய வலியினை குறைக்கவும் உதவுகிறது. க்லூட்டியா உடலுக்கு புதுத்தெம்பைக் கொடுப்பதோடு நீண்ட சுகமான வாழ்விற்கும் வழிவகுக்கிறது.
பேரழிவினைக் கொண்டுவரும் நீரிழிவு நோயினை இரண்டே இரண்டு மாதங்களில் முற்று முழுதாக கட்டுப்படுத்த முடியும்!
டயபீனா தினமும் அருந்தக்கூடிய மூலிகை ஆரோக்கிய பானம். இது உடலில் மிகுதியான குழுக்கோசினை குறைக்கக்கூடியதும், இரத்தத்திலுள்ள அதிகளவு குழுக்கோசினால் ஏற்படக்கூடிய நோய்களை ஒழுங்கு முறையாக தடுக்கவும் உதவுகிறது. விறைப்புத்தன்மை, பாதங்களில் சுளுக்கு, அலட்சியத் தன்மை மற்றும் மீண்டும் மீண்டும் வியாதிகளை படிப்படியாக நீக்கிவிடக் கூடியது. டயபீனா கண்டிப்பாக நீரிழிவு நோயினால் வருந்துபவர்கள் மட்டுமே பாவிக்கவேண்டியது.
The Ervamatin Hair Lotion
உங்கள் முடியுதிர்வை தடுக்கவும் மீண்டும் தலைமுடி வளரவும் எவமார்டின் மூலிகை ஔடதம்!
உலகெங்கிலும் பல்லாயிரக்கணக்கானவரின் பாராட்டுதலைப் பெற்ற மூலிகைத் தயாரிப்பு இது.
Amazon Health Care
இப்போது இங்கிலாந்து மற்றும் ஐரோப்பா நாடுகளிலும் எமது தயாரிப்புகளை பெற்றுக்கொள்ளலாம்.
www.amazonhealthcare.co.uk
SABONA & Gift
2602 Eglinton Ave,. East. (@Midland)
Tel: 416.264.8787
www.amazonhealthcare.ca



Siva Kandiah
President / CEO

# Annual Award Ceremony 2012



Assumption Life MGA Award



Thana Manickavasagar
Top Gun - Industrial Alliance



Vimal Arulanandam
Top Gun - 1st Runner up - Industrial Alliance



Ritu Betti
Top Gun - 2nd Runner up - Industrial Alliance



Thana Manickavasagar
Top Gun - Assumption Life



Paul Ram
Top Gun - 1st Runner up - Assumption Life



Vimal Arulanandam
Top Gun - 2nd Runner up - Assumption Life



Kirupa Thanabalasingam
Royal Brokers - Rokie of the Year



Syed Hussian
RBC Top Producer



Kajan Thevarajah
Royal Brokers - President Month Winner



Varna Kana
Top Gun - RESP - Heritage



Tharmini Thevakumar
Top Gun - 1st Runner up - RESP - Heritage



Tharshi Kajan
Top Gun - 2nd Runner up - RESP - Heritage



Royal Brokers Awards Recipients




# மார்க்கம் நகரசபை உறுப்பினர் லோகன் கணபதி, மார்க்கம் நகரசபை, மார்க்கம் வணிகப் பிரதிநிதிகள் தூதுக்குழுவின் சென்னைப் பயணம்

இந்திய - கனடிய வணிக சம்மேளனத்தின் (Indo - Canada Chamber of Commerce - ICCC) அனுசரணையுடன் மார்க்கம் நகரசபைப் பிரதிநிதிகள் குழு ஜனவரி 02 அன்று இந்தியப் பயணம் - 2013 (India Mission 2013) என்ற 6 இந்திய நகரங்களுக்கான பயணத்தைத் தொடங்கியது. கனடிய குடிவரவு, பல்கலாச்சார அமைச்சர் ஜோன் கெனி அவர்கள், மார்க்கம் நகர முதல்வர் ஃபிராங்க் ஸ்கார்பிற்றி அவர்கள், யோர்க் பிராந்தியசபை உறுப்பினர் ஜோ லீ அவர்கள், மார்க்கம் நகரசபை உறுப்பினர் லோகன் கணபதி அவர்கள் ஆகிய பிரமுகர்கள் உள்ளிட்ட 120 பேர் கொண்ட இக்குழுவே ICCC இதுவரையில் ஒருங்கிணைத்த இந்தியப் பயணக்குழுக்களில் பாரியதாகும். கடந்த பத்தாண்டுகளில் மார்க்கத்திலிருந்து இந்தியப் பயணம் நிகழ்வது இது ஆறாவது தடவை. அதேவேளை சென்னைக்கு இது முதலாவது பயணம்.



மார்க்கம் நகர முதல்வர் ஃபிராங்க் ஸ்கார்பிற்றி சென்னை நகர முதல்வர் சைதை துரைசாமியைச் சந்திக்கிறார்



மார்க்கம் நகரசபை உறுப்பினர் லோகன் கணபதி சென்னை நகர முதல்வர் சைதை துரைசாமியைச் சந்திக்கிறார்

முதலில் சென்னை செல்லும் திட்டம் இல்லாவிடினும் நகரசபை உறுப்பினர் லோகன் கணபதி, தென்னிந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில் பல்வேறு வணிக வாய்ப்புகள் உள்ளதைச் சுட்டிக்காட்டி, வெற்றிகரமாக சென்னையையும் பயணத் திட்டத்தில் சேர்த்திருந்தார்.

இதுபற்றிக் கேட்டபோது, “நகரங்களுக்கிடையிலான அல்லது வணிக நிறுவனங்களுக்கிடையிலான இருதரப்பு உறவைக் கட்டியெழுப்புவதற்கு தமிழ்நாடு நிறைந்த வாய்ப்புகளைக் கொண்ட மாநிலமாக உள்ளது. ஆரோக்கியமான ஓர் உறவின் மூலம் வெற்றிகரமான வணிக உறவுகளைக் கட்டியெழுப்பமுடியும். ரொறன்ரோ பெரும்பாகத்தில் வாழும் 300,000 தமிழரோடு கலாச்சாரத் தொடர்புகளைக் கொண்டுள்ள தமிழ்நாடு, உறவுகளை வளர்த்துக் கொள்ள மிகப் பொருத்தமான தேர்வாகின்றது. அத்தோடு, ஏற்கனவே தகவற்றொழினுட்பம் சிறந்து விளங்குகின்ற, திரைப்படத்துறை வளர்ந்து வருகின்ற, மருத்துவச் சுற்றுலா பெருகிக் கொண்டிருக்கின்ற தமிழ்நாட்டோடு பல மில்லியன் டொலர் வணிகத்தை ரொறன்ரோ பெரும்பாகத்துத் தமிழ் வணிக நிறுவனங்கள் நடத்திக் கொண்டிருக்கின்றன” என்றார் நகரசபை உறுப்பினர் லோகன் கணபதி.

கனடாவின் தொழினுட்பத் தலைநகரமாக மார்க்கம் நகரமே உள்ளது. மேலும் சமப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தைக் கொண்ட, கழிவுப் பொருட்களை மீள்பயன்பாடு, மீள்சுழற்சிக்குட்படுத்துவதில் அதிகூடிய விகிதத்தைக் கொண்ட, சுற்றுச்சூழல், சமூக, பொருளாதார நிலைத்தலுக்கான மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தக்கூடிய கொள்கைகளை வகுத்து நடைமுறைப்படுத்துகின்ற கலாச்சாரம், பொழுதுபோக்குகள், பூங்காக்கள், நூலகங்கள் போன்ற விடயங்களில் சமூகத்தின் தேவையை அடையாளம் காண்கின்ற திட்டங்களை நடைமுறைப்படுத்துவதோடு, குறிப்பிட்ட கால எல்லைக்குள் தேவைகளை நிறைவேற்றுகின்ற கனடாவின் முன்னணி மாநகர சபைகளுள் ஒன்றாகவும் மார்க்கம் திகழ்கின்றது.

அமெரிக்காவில் வங்கிகள் பொருளாதாரச் சிக்கல்களிலிருந்து மீள எழுவதற்கு அமெரிக்க அரசு நிதி உதவி செய்தது. ஆனால், மிக மோசமான பொருளாதாரப் பின்னடைவுகளிலும்கூட வெற்றிகரமான வங்கித்துறையைக் கொண்ட நாடாக கனடா இருக்கின்றது.

எனவே, இந்தியாவுக்கான இந்தப் பயணம் இருதரப்பும் பொருளாதார ஒத்துழைப்புப் பெருகவும் எதிர்கால அறிவுப் பரிமாற்றத்திற்கும் உறுதியான அடித்தளமிட்டுள்ளது மார்கம் தூதுக்குழு.

வடஅமெரிக்காவிலேயே முதன்முதலில் தமிழ் மரபுத்திங்கள், தைப்பொங்கல் பிரகடனத்தை வெளியிட்ட மார்க்கம் நகரின் தூதுக்குழுவினர் சென்னை நகர முதல்வர் சைதை துரைசாமி அவர்களையும் வட சென்னைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் T.K.S.இளங்கோவன் அவர்களையும் தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினரும் நடிகர் சங்கத் தலைவருமான சரத்குமார் அவர்களையும் சந்தித்தது.

சென்னையும் மார்க்கமும் அன்பளிப்புகளைப் பரிமாறிக் கொண்டன. சென்னை நகர முதல்வர் சைதை துரைசாமி அவர்களுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் இளங்கோவன் அவர்களுக்கும் தமிழ் மரபுத் திங்கள் பிரகடனத்தினை மார்க்கம் நகர முதல்வர் வழங்கினார்.

தூதுக் குழுவினர் அப்பொலோ மருத்துவ மனைக்கும் சென்னை இந்தியத் தொழினுட்பக் கல்லூரிக்கும்(IIT-Madras) SRM பல்கலைக்கழகத்துக்கும் சென்று பார்வையிட்டனர். புகழ்பெற்ற தொலைக்காட்சிகள் உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட ஊடகங்களும் கலந்துகொண்ட, பெரும் வரவேற்புப்பெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றும் சென்னையில் நிகழ்ந்தது.

முன்னதாக, குஜராத் காந்திநகரில் Vibrant Gujrat 2013 மாநாட்டிலும் தூதுக்குழுவினர் பங்குபற்றியிருந்தனர்.

■ ■ ■

## மார்க்கம் நகரசபை கொண்டாடிய பொங்கல் விழா





மார்க்கம் நகரசபை உறுப்பினர்
**லோகன் கணபதி**
அவர்களைத் தொடர்புகொள்ள

101 Town Centre Boulevard
Markham, Ontario
L3R 9W3
Tel: **905 479 7748**
Fax: **905 479 7763**
Email: LKanapathi@markham.ca
Website: www.logankanapathi.com

MARKHAM

# Holiday Cocktail for the benefit of The Scarborough Hospital Foundation (TSHF)

During the recent festive season, amidst various hectic year-end activities and busy schedules of everyone, Stan Muthulingam came up with a noble idea. He sent invitations to his friends, business colleagues and political leaders for a Holiday Cocktail event for the benefit of The Scarborough Hospital Foundation (TSHF).

Stan Muthulingam is the Co-Chairman and Chief Executive for the CableShoppe, a leading company in broadband technology. Recently Stan was appointed as a member of TSHF Board and Co-Chair for the committee after the fundraising efforts undertaken along with Varasithi Vinayagar Temple benefitting to reach the goal of $5million for the MRI at Birchmount Campus of TSH.

The support from invitees to Stan's initiatives was widespread and few other members of the fundraising committee - Soo Wong, MPP, Scarborough-Agincourt, Dr. Pon Sivaji, Ganesan Sugumar and Kula Sellathurai also attended the event.

Former Deputy Premier George Smitherman, Toronto Centre MPP, Glen Murray, Scarborough-Agincourt MPP and Soo Wong spoke at the event, commending Stan and contributions by the Tamil Community.

Michael Mazza, President & CEO of TSHF thanked Stan and the community for the great initiatives undertaken to support the fundraising efforts for TSH. Anne Marie Males, Vice-President of Patients Experience for TSH also spoke about her involvement and the need to support TSH.

Ted Ross, Media Spokesperson who introduced the speakers, played the role as the MC for the evening's event.


Stan commented that he was so happy to be engaged in carrying out various fundraising efforts for the benefit of healthcare and requested other companies to come forward to partner with him and assured that he will do the best during his term as board member with TSHF.

Guests were handed pledge sheets and all the guests that attended the holiday event donated generously.

After the conclusion of the main compassionate event of fundraising activities, the guests were treated with cocktail and an opulent dinner.

Some of the photos taken at the event can be seen here.


Mike Ahilan, Ken Kirupa, Sritharan Thurairajah, Jeyakumar Sinnadurai, Santha Panchalingam & Thiru Mahesan


Former Deputy Premier George Smitherman


Stan Muthulingam, Co-Chairman and Chief Executive, the CableShoppe


Ted Ross, Media Spokesperson, Emcee for the event



Toronto Centre MPP, Glen Murray


Scarborough-Agincourt MPP and Soo Wong


Anne Marie Males, Vice-President, Patients Experience, TSH



Michael Mazza, President & CEO, TSHF


$134,900.00




**Neilson / Mclevin**
Condo Apartment, 4 Bedrooms, 1 Washroom, Luxury Condo, 24 Hrs Gatehouse Secuirty, Full Rec Facilities, One Parking And One Locker Included.

$219,900.00




**Hillcrest / Hurontario**
Condo Apartment, 2+1 Bedrooms, 2 Washroom, New Paint, Newly Renovated Washroom, New Laminate Floor For The Bedroom Location

$344,900.00




**Markham / Toronto**
Condo Townhouse, 2+1 Bedrooms, 3 Washroom, In A Highly Desirable Location. In Upper Level, Brand New, Den Can Be Used As A 3rd Bedroom

$299,000.00




**Midland / Danforth**
Detached Bungalow, 2 Bedrooms, 1 Washroom

$549,900.00




**Rosebank / Strouds**
Detached 2-Storey, 5+2 Bedrooms, 4 Washroom, Very Spaces, Bright Basement Apartment With Separate Entrance, Back Country Porch

$609,900.00




**9th Line / 14th Ave**
Detached 2-Storey, 4 Bedrooms, 3 Washroom, Through Out Hardwood Floors, Upgrade Kitchen Cabinets, Well Maintain House With Double Garage Door

$699,000.00




**Dufferin / Rutherford**
Detached 2-Storey, 4 Bedrooms, 4 Washroom, tunning 2432Sq.Ft. W/Dramatic Entrance:Dbl Drs W/Custom Glass Inserts

$779,900.00



**9th Line / 14th Ave**
Detached 2-Storey, 4+1 Bedrooms, 4 Washroom, 4 Years Old Home Located In Box Grove Area, With Over 100K In Upgrades. Over 3000 Sq Ft

$824,900.00



**9th Line / 14th Ave**
Detached 2-Storey, 5 Bedrooms, 4 Washroom, 2 And 1/2 Yr Old, Excellent Double Door And Double Car Garage Corner Lot Approx 3500Sq

**HomeLife Today Realty Ltd.,** Brokerage**
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6,
Bus: **416-298-3200**, Fax: 416-298-3440
E-mail: kuna.homelife@gmail.com
**Independently Owned and Operated.

HOMELIFE HIGHER STANDARDS

**Kunasegar Nagalingam**
Sales Representative
Direct: **416-402-4545**

**Sujatha Kunasegar**
Sales Representative
Direct: **647-401-9644**





We do not intent to solicit currently listed properties.

# உருத்திரபுரம் குடியேற்றத் திட்டமும் அதன் வளர்ச்சியும்



கா.நாகலிங்கம்

நாற்திசையும் கடலாற் சூழப்பட்ட இலங்கைத் தீவில் ஈழம் என அழைக்கப்படும் தமிழரின் பாரம்பரிய தாயகத்தின் வடபால், யாழ்ப்பாண மாவட்டத்திற்குத் தெற்கிலும் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு மேற்கிலும் வவுனியா மாவட்டம் மன்னார் மாவட்டத்திற்கு வடக்கிலும் இந்துமாக் கடலுக்குக் கிழக்கிலும் அமைந்த மாவட்டமே கிளிநொச்சி மாவட்டமாகும்.

இரணை மடுக்குளம் கட்டுவதற்கு முன் கிளிநொச்சி நகரம் குடிப்பரம்பல் அதிகமற்ற கிராமமாகவே இருந்தது. அப்பொழுது இப்பகுதி வன்னியென்றும் கரைச்சி என்றுமே அழைக்கப்பட்டது. ஊற்றுப்புலம் உருத்திர புரம் போன்ற கிராமங்கள் இராச தானிகளாக இருந்த தற்கான சான்றுகள் காணப்பட்டாலும் ஒல்லாந்தர் போத்துக்கீசர் ஆங்கிலேயர் போன்ற மேல் நாட்டவர்கள் இலங்கை வந்த கி.பி. 1505ஆம் ஆண்டுக்குப்பின் இவர்களின் படை யெடுப்பாலும் மலேரியாக் காய்ச்சலாலும் மக்கள் செறிவற்றே காணப்பட்டனர்.

மேல் நாட்டார் வருகைக்குப் பின் யாழ் குடா நாட்டில் இருந்த மக்களிற் சிலர் விவசாயம் செய்யும் நோக்கத்துடன் கொழும்புத்துறைத் துறைமுகத்தினூடாகப் பூநகரிப் பிரதேசத்துக்கும் வடமராட்சிப் பகுதி மக்கள் தட்டுவன் கொட்டி கண்டாவளைத் துறைமுகங்களினூடாக முரசுமோட்டை கண்டாவளை புளியம் பொக்குணை போன்ற கிராமங்களுக்கும் தென்மராட்சிப் பகுதியில் உள்ளோர் கச்சாயத் துறைமுகத்தினூடாகக் குஞ்சுப்பரந்தன் பரந்தன் கிளிநொச்சி போன்ற கிராமங்களிலும் குடியேறினர். இவ்வாறு குடியேறியோர் ஆனையிறவுக் கடலோரமாகக் குடியிருந்த காரணத்தினாலேயே இப்பகுதிக்குக் கரைச்சி என்ற பெயர்வரக் காரணமாய் இருந்திருக்கலாம். இங்கு வாழ்ந்த மக்களிற் சிலர் விவசாயம் செய்ததுடன் சிலர் மீன் பிடித் தொழிலும் செய்து பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்து வந்தனர்.

இப்பகுதியில் வாழ்ந்த மக்களின் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காக யாழ்ப்பாணம் சைவ வித்தியா அபிவிருத்திச் சங்கம் தட்டுவன் கொட்டி, முரசுமோட்டை, புளியம் பொக்கனை ஆகிய கிராமங்களிலே மூன்று சைவப் பாடசாலைகளையும், அரசினரால் கண்டாவளை, குஞ்சுப் பரந்தன் ஆகிய இடங்களில் இரு அரசினர் பாடசாலைகளையும் கட்டி உதவினர். இரணைமடுக் குளம் கட்டி முடிக்கப்பட்ட பின் பரவிப்பாஞ்சான் கிளிநொச்சி மக்களுக்காக 1929ல் ஒரு ஆரம்பப் பாடசாலையும் ஆனையிறவில் உப்பளம் ஆரம்பித்தபின் ஒரு பாடசாலையையும் அரசினர் கட்டி உதவினர். இதன் மூலம் கரைச்சிப் பகுதியில் மக்கள் வாழ்ந்த பகுதியை அறிந்து கொள்ள முடியும்.

கனகராயன் ஆற்று நீரும் ஏனைய சிற்றாறுகளின் நீரும் சேர்ந்து இரணைமடுக் குளம் ஊடாகப் பரவிப் பாய்ந்து ஆனையிறவுக் கடலேரியில் வீணே விழுவதைக் கண்ட அப்போதைய அரச அதிபர் சேர். வில்லியம் துவைனம் அவர்கள் இரணைமடுக் குளத்தினைக் கட்டுவது சம்பந்தமாக ஓர் ஆய்வறிக்கையினைப் பிரித்தானிய அரசுக்கு அனுப்பி வைத்தார். இதன் அடிப்படையில் நீர்ப்பாசனப் பொறியியலாளரான பார்க்கர் அவர்கள் 1,105,000 ரூபாவிற் கட்டி முடிக்கலாமெனத் தீர்மானித்தார். 1900ஆம் ஆண்டு இக்குளத்தினைக் கட்டி முடிக்கும் பொறுப்பினை ஏற்ற பொறியியலாளர் திரு டபிள்யூ. பிறவுண் அவர்கள் மாட்டுவண்டியிற் கிளிநொச்சி சென்றார். அப்போமுது கரைச்சிப் பிரதேசம் சிறிய அளவு சனத்தொகையைக் கொண்டிருந்தது. அதிஷ்ட வசமாக வழியிலே வெற்றிவேலு என்னும் இளைஞனைச் சந்தித்தார். இவனின் சுறுசுறுப்பும் பேசும் ஆற்றலும் இவரைக் கவர்ந்துவிட்டது குளத்தைக் கட்டுவதற்கான வேலையாட்களை இவர் மூலம் பெற்றுக் கொண்டார். அத்துடன் குளக்கட்டுக்கு உதவியாளராகவும் இருந்தார். இவரே பிற்காலத்திற் கிளிநொச்சிப் பகுதிப் பொலிஸ் விதானையாராகவும் இருந்ததுடன் முகாந்திரம் என்ற பட்டமும் பெற்றுச் சிறப்புடன் வாழ்ந்தார்.



திரு. பிறவுண் அவர்களாற் கட்டப்பட்ட குளக் கட்டு வேலை பின்னர் J.S. கெனடி என்னும் பொறியியலாளரினால் 1920ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது. இக்குளத்தின் மூலம் அதன் அருகே மானாவாரியாகக் கமம் செய்தவர்களுக்கே முதலில் நீர் வழங்கப்பட்டது. இதைத் தொடர்ந்து 1939ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப் பட்ட இக்குளத்தின் முதலாவது குடியேற்றத் திட்டம் தற்போது கணேசபுரம் என அழைக் கப்படும் பழைய கொல்னியில் ஆரம்பிக்கப் பட்டது. இதில் நூற்றெட்டு வீடுகள் கொடுக்கத் தீர்மானித்தாலும் ஆரம்பத்தில் முப்பத்தைந்து வீடுகளே கட்டப்பட்டன. அப்பொழுது இரண் டாவது உலக மகாயுத்தமும் ஆரம்பித்தத னால் அரிசித்தட்டுப்பாடும் ஏற்பட்டது. இக் காரணத்தினால் விவசாயிகளுக்கு நல்ல வரு மானமும் கிடைத்தது. எனினும் மலேரியாக் காய்ச்சலின் காரணமாகக் குடியேற்றம் மந்த மாகவே நடை பெற்றது. இக்குடியேற்றத் திட்டத்தில் ஒரு குடும்பத்துக்கு ஐந்து ஏக்கர் வயல் நிலமும் இரண்டு ஏக்கர் வீடு, கிணறுடன் கூடிய மேட்டு நிலமும் வழங்கப்பட்டது. அத்துடன் வாழ்வாதாரத்துக்குத் தேவையான சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்ட போதும் குடியேற்றம் வெற்றியளிக்க வில்லை.

இக் குடியேற்றத்திட்டம் கண்டிவீதியில் மேற்குப் புறத்திற் புகையிரதப்பாதையின் அருகே அமைக்கப்பட்டதாற் கிளிநொச்சி நகரை விஸ்தரிக்க முடியாத நிலை ஏற்பட்டது. இதை அவதானித்த அரசு அடுத்து ஏற்படுத்தும் குடியேற்றத் திட்டங்களைக் கண்டிவீதியில் இருந்து கீழக்குத்திசையிலும் மேற்குக் திசையிலும் இரண்டு மைல் தூரத்துக்கப்பால் அமைக்கத் தீர்மானித்தது.

இதன் பின் இரண்டாவது குடியேற்றத் திட்டமான உருத்திரபுரம் பத்தாம் வாய்காற் குடியேற்றத்திட்டத்தைக் கண்டி வீதியின் மேற்குத் திசையிலே ரெயிலர் வீதியின் நான்காம் ஐந்தாம் மைல் தூரத்துக்கிடையில் அமைத்துப் பரந்தன் புதுக்குடியிருப்புத் திட்டமென அழைத்தனர். இக்குடியேற்றத்திட்டத்தில் இருநூற்றுப்பத்து வீடுகள் ஒருமைல் நீளமும் முக்கால் மைல் அகலமும் கொண்ட நீள் சதுர வடிவில் அமைக்கப்பட்டது. வீடுகளைக் கட்டும்போது ரெயிலர் வீதியின் வடக்குப் பக்கமாகக் கனேசபுரத்திற் கட்டப்பட்ட வீடுகளின் அமைப்பிற் கட்ட ஆரம்பித்தனர். 1946ஆம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ளைப் பெருக்கினால் அங்கு கட்டப்பட்ட பல வீடுகளில் நீர் உட் புகுந்தது. இதனால் அப்பகுதியில் வீடுகளைக் கட்டாது ரெயிலர் வீதியின் தெற்குப் பக்கமாக வீடுகளைக் கட்ட ஆரம்பித்தனர். அத்துடன் வீடுகளின் அமைப்பை மாற்றிச் செலவையும் குறைத்துக் கொண்டனர்.

இங்கு குடியேற்றப்பட்ட குடும்பங்கள் அனைத் தும் அதிக அங்கத்துவம் உள்ள குடும்பங் களாகத் தெரிவு செய்யப்பட்டது. யாழ் மாவட் டத்தில் உள்ள அனைத்துக் காரியாதிகாரி பிரிவுகளிலிருந்தும் குடியேற்றவாதிகள் தெரிவு செய்யப்பட்டனர். இப்படித் தெரிவு செய்யப் பட்டதனால் இவர்கள் ஒரு வகையில் ஒரு வரை ஒருவர் தெரிந்தவராய் இருந்தனர். இதன் காரணமாக ஒரு காரியாதிகாரி பிரிவில் இருந்து வந்தவர்கள் பக்கத்துப் பக்கத்து வீடுகளிற் குடியமர்த்தப்பட்டனர். எனவே அவர்கள் அனைவரும் ஒற்றுமையாக வாழும் நிலை ஏற்பட்டது. இக்குடியேற்றத்திட்டம் சாவகச்சேரித் தொகுதிக்குள் இருந்த காரணத்தினால் அத்தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினரின் சிபார்சின்படி பழைய கொலனி வீடுகள் போன்று கட்டப் பட்டவை தென்மராட்சிக்காரியாதிகாரி பிரிவில் இருந்தோருக்கே வழங்கப்பட்டன. அவர்களுக் கான வயல் நிலமும் வீடுகளுக்கு அருகருகேயே அமைந்திருந்தன.

ரெயிலர் வீதியின் தென்பக்கத்திற் கட்டப்பட்ட வீடுகள் ஒன்று முதல் நூற்று அறுபத்தாறு வரை இலக்கமிடப்பட்டு முதலில் யாழ்பாணக் காரியாதிகாரி பிரிவில் இருந்து வந்தோர்க்கும் தொடர்ந்து அளவெட்டி, நீர்வேலி, கோப்பாயில் இருந்து வந்தோர் போன்றவர்களும் ஏனையோருக்கும் வழங்கப்பட்டது. யாழ் குடாநாட்டில் உள்ள முக்கிய கிராமங்கள் அனைத்தும் உருத்திரபுரத்திலும் காணப்பட்டன. வீதிகளின் பெயர்களும் ஊரின் பெயராலேயே அழைக்கப்பட்டன. உதாரணமாகச் சாவகச்சேரிக் குறுக்கு, யாழ்பாணக் குறுக்கு, அளவெட்டிக் குறுக்கு, கோப்பாய்க் குறுக்கு என எல்லா ஊரின் பெயரிலும் வீதிகள் இருந்தன. இதன்பின் ஆரம்பிக்கப்பட்ட குடியேற்றத்திட்டங்களில் இப்படியான நடைமுறை பின்பற்றப் படவில்லை. இது மாத்திரமன்றித் தாழ்த்தப்பட்டவர் என்று கடைசி வீதியின் அரைப் பகுதியிற் தனியாகக் குடியேற்றப்பட்டனர். சலவைத் தொழிலாளர்கள், முடி திருத்துவோர், மேளம் அடிப்போர் அனைவரும் தனியான ஒரு பகுதியிற் குடியமர்த்தப்பட்டனர். சிறுபான்மைத்தமிழர் அமைப்பின் தலையீட்டால் இதன்பின் ஆக்கப்பட்ட குடியேற்றத் திட்டங்களில் இப்படியான நடைமுறை பின்பற்றப்படவில்லை.

பெரும்பாலும் இப்பிரதேசம் சமதரையாகவும் வண்டல்மண் செறிந்த மணற்தன்மை வாய்ந்த நிலமாகவும் காணப்படுகின்றது. முதலாவது குடியேற்றத் திட்டமான பழைய கொலனியிற் கொடுக்கப்பட்ட இரண்டேக்கர் மேட்டுக் காணியின் பின்புறமுள்ள ஒரு ஏக்கர் நிலத்திற் தென்னை மரமும் மிகுதியாய் உள்ள நிலத்தில் மா, பலா போன்ற பழமரங்களும் கமுகு, வாழை போன்றனவும் நட்ட காரணத்தால், பணப்பயிரோ சிறுதானியமோ மாக்கறித் தோட்டமோ செய்ய முடியாது கஷ்டப்பட்டனர். இதை அவதானித்த அரசு உருத்திரபுரம் குடியேற்றத் திட்டத்தில் மூன்று ஏக்கர் மேட்டு நிலமும் நான்கு ஏக்கர் வயல் நிலமும் கொடுத்தனர். வீட்டுடன் கூடிய மூன்று ஏக்கர் மேட்டு நிலத்திற் பின்புறத்தில் ஒரு ஏக்கரிற் தென்னை நடவென ஒவ்வொரு குடியேற்ற வாசிக்கும் ஐம்பத்து நான்கு தென்னம்பிள்ளை கொடுக்கப்பட்டது. வீட்டோடு சேர்ந்த முன் புறமுள்ள ஒரு ஏக்கரில் நடுவதற்காக வாழை,




தொடர்தல் 85ம் பக்கம்

எழுதித் தீரா பக்கங்கள் 02

செல்வம் அருளானந்தம்

# கசெற் குழப்பிய கலியாணம்



“இந்தாள் தான்”, “இவர்தான் ஆள்” இரண்டு பெண்கள் வேலியால் எட்டிப் பார்த்துக் குசுகுசுத்தார்கள்.

இது இரண்டாவது தடவை. இதற்கு முன் தலையாட்டி ராசா வீட்டு யன்னலுக்காலும் இரண்டு மூன்று குமரிகள் எட்டி எட்டி என்னை உற்றுப் பார்த்தார்கள்.

அயோத்தி மாநகர வீதியால் நடந்து போகின்ற இராமனின் அழகைப் பார்ப்பதற்காய் யன்னல்லால் எட்டிஎட்டி பார்க்கும் பெண்களின் முக அழகை ‘சாளரத்தினும் பூத்தன தாமரை மலர்கள்’ என்று பாடிய கம்பன் நினைவுக்கு வந்தான். இராமனின் கறுப்பைத் தவிர என்னில் என்ன இருக்கு? அதைவிடக் காதலும் காமமும் வரும் காலம் அல்ல அது.

ஊரே மனநோயாளிகளின் விடுதி போல் இருந்தது. இங்காலை இரண்டு பேரும் அங்காலை இரண்டு பேரும் காரணத்துடனும் காரணம் இல்லாமலும் கொல்லப்பட்டுக்கொண்டிருந்தார்கள். சாப்பிடுவதற்கும் பொய் சொல்வதற்குமே மக்கள் வாய் திறக்கிறார்கள். குரங்கில் இருந்து மனிதன் பிறந்தானா? அல்லது குரங்கில் இருந்து துரத்தப்பட்டானா? என்று யோசித்த வண்ணம் நடந்து கொண்டிருந்தேன்.

1989ம் ஆண்டின் பிற்பகுதி. எட்டு, ஒன்பது ஆண்டுகளுக்குப் பின் வெளிநாட்டிலிருந்து ஊருக்கு வந்திருக்கிறேன். வந்த முதல் நாளே அம்மா மறிக்க மறிக்க சந்தையடியைப் பார்ப்பதற்குச் செல்லும்போதுதான் இந்த உற்றுப் பார்ப்புக்கள்.

ஊர் தலைகீழாய் மாறியிருந்தது. பல புது முகங்கள்.

ஏன் என்னைப் பாக்கினம்? ஏதோ நடந்திருக்க வேணும். நான் எல்லாச் சண்டைகளுக்கும் முதலே வெளிக்கிட்டவன். எனக்கு எதுவுமே தெரியாது. யாரும் கேட்டால் சொல்லலாம். கதைக்கினம் இல்லை.

பயம் காலை விரைவுபடுத்தியது.

சந்தையால் திரும்பி வந்த கமலா அக்கா தான் விடயத்தைத் தெளிவுபடுத்தினா. “எப்பவடா வந்தனீ. ஊரிலை நீ பெரிய பேமஸ். நீ அனுப்பின வீடியோவை இரண்டு தரமல்லோ ரெலிக்காஸ்ட் பண்ணினவை”.

“அட சிக்” என்றது மனது.

இந்த ரெலிக்காஸ்ட் முந்தியும் இல்லை இப்பவும் இல்லை. இடையில் கொஞ்சக் காலம் ஊரில் பிரபல்யம் பெற்றுவிளங்கியது.

இந்த ரெலிக்காஸ்ட்டால் ஒரு கலியாணமே குழம்பிப் போனது.

என்னுடைய கலியாணத்தை ஒரு பிரெஞ்சு சுவாமியார் பாரிசிலுள்ள சிறிய ஆலயமொன்றில் ஒழுங்கு செய்துதந்தார். கலியாணம் முடிந்ததும் அதையடுத்துள்ள ஒரு சிறிய மண்டபத்தில் வரவேற்பு.

நண்பர்கள் சிலர் சிற்றுண்டிகள் செய்து கொண்டுவந்தார்கள். ஒரு பாண்டிச்சேரி நண்பர் மதிய உணவு தயார் செய்து கொண்டுவருவதாக ஒப்பந்தம். பாரிஸ் முழுவதும் தேடி ஒரு வீடியோக்காரரைக் கண்டுபிடித்தோம். அவர் தன்னை மத்தியானம் மூன்று மணிக்கு விட்டுவிடவேணும் என்று உறுதியாக நின்றார்.

பன்னிரண்டு மணிக்கே கோவில் சடங்குகள் முடிவடைந்து விட்டன. ஒரு மணிக்கு முன்பே எல்லோரும் மண்டபத்திற்கு வந்துவிட்டார்கள். ‘கட்டடக்காட்டுக் கவிஞன்’, ‘புலம் பெயர் முதல் கவிஞன்’, ‘நல்ல கிறிஸ்தவன்’... இப்படி எல்லாப் பொய்களையும் சொல்லி இரண்டு மூன்றுபேர் உரையாற்றி முடித்தார்கள். அடுத்ததாக பான விருந்து. நண்பர்கள் வாய் நனைக்கத் தொடங்கினார்கள். ஆட்டமும் பாட்டும் தொடங்கியது. மலர்விழி அக்காவும் வினோதினியும் தோழர்களுடன் சற்றுத் தள்ளி நின்று ஆடிக்கொண்டிருந்தார்கள். போத்தல்கள் முடிய முடிய வேண்டிக் கொண்டிருந்தார்கள். சாப்பாடோ மூன்று மணிதாண்டியும் வரவில்லை (அது தனிக்கதை).

வீடியோக்காரர் தமிழர்கள் நடனமாடியதை வாழ்க்கையிலேயே காணாதவர்போல் படு உற்சாகமாகப் படம் எடுத்துக்கொண்டேயிருந்தார். மூன்று மணிக்குப் போறதென்ற விடயத்தை மறந்தே விட்டார். ‘எப்படி எப்படி ஆடினால் வீடியோவில் அழகாக வரும்’ எனப் பயிற்சி கொடுத்து ‘கவர்’ பண்ணிக் கொண்டிருந்தார்.

குகனுக்கு இப்போ நல்ல கணக்கு.

திடீரென்று அதி உற்சாகமடைந்த குகன் மலர்விழியை அக்காவை தன்னுடன் ஆடவரும் படி அழைத்தான். மலர்விழி அக்கா மிக முக்கியமான ஆளுமை. முற்போக்கான பெண். ஓர் இயக்கத்திற்கே தலைமை தாங்கக்கூடிய துணிவுள்ளவ.

அவ குகனின் தோளைப்பிடித்து ஆடினா. குகன் எம்.ஜி.ஆர் பிரியன். “போடடா எம்.ஜி.ஆர் பாட்டு” என உத்தரவிட்டான். ‘ஒருவர் மீது ஒருவர் சாய்ந்து...’ பாட்டுப்படிக்கத் தொடங்க, வீடியோக்காரர் ஒரு நடன இயக்குநராகவே மாறிப்போனார். மலர்விழி அக்காவும் குகனும் எப்படியெல்லாம் நெருக்கமாக நின்று ஆட வேண்டும் என்றும், எந்த எந்த ஸ்ரெப்புகள் வைக்கவேண்டும் என்றும் பயிற்சி கொடுத்து ஒரு திரைப்படப் பாடல் காட்சியையே உருவாக்கிக்கொண்டிருந்தார் வீடியோக்காரர். எல்லோரும் இவர்களையே பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

விசயம் கொஞ்சம் ஓவராய்ப் போவதுபோல் எனக்குப் பட்டது. நான் தான் கொஞ்சம் நிதானமாய் இருந்தேன். மாப்பிள்ளையில்லோ?

‘சரி காணும் நிப்பாட்டுங்கோ’ எனச் சொல்லலாம் என்று எழுந்தபோது ‘பெம்பிளையை விட்டுட்டு மாப்பிள்ளை அசையப்படாது’ என வீடியோக்காரரால் எச்சரிக்கப்பட்டேன். நல்ல வேளையாகச் சாப்பாடு வந்து சேர்ந்தது. எல்லாம் சந்தோசமாய் முடிவடைந்தது.

‘கசெற்றை கரைச்சல்படுத்தி வேண்டு. வருசக் கணக்காய் இழுத்தடிப்பாங்கள்’ என்ற நண்பர்கள் எச்சரிக்கையால் அடுத்த வாரமே வீடியோக்காரர் வீட்டுக்குப் போனேன். அவர், ‘இன்னும் எடிட் பண்ணி முடியவில்லை’ என்ற போதும் வில்லங்கமாய் வேண்டி உடனேயே அம்மாவுக்கு அனுப்பிவிட்டேன். அத்துடன் என் பணி முடிவடைந்தது.

ஆசீர்வாதம் மாமாதான் அம்மாவுக்கு ‘அட்வைஸ்’ பண்ணினவராம். “ஒவ்வொருத்தருக்கும் கொடுத்தால் கசெற் பழுதாகிவிடும். ஊரிலை ரெலிக்காஸ்ட் செய்பவர்களிடம் கசெற்றைக் கொடுத்து, ஒளிபரப்பாகும் நேரத்தை சொந்தக்காரருக்குச் சொன்னால் எல்லோரும் பார்ப்பார்கள்” என்று. மாதகல், சாந்தை, சில்லாலை, பண்டத்தரிப்பு, அரசடி, கலட்டி என்று அனைத்து ஊர் மக்களும் சாதி, மதம் கடந்து பார்த்து ‘வன்ஸ்மோர்’ கேட்டு இரண்டாம் தடவையும் அந்தப் படம் ஓடியது. அம்மா பார்த்து சந்தோசப்பட்டு கடிதம் எழுதி, எனக்குக் கிடைத்த இரண்டாம் நாள் விடியப்புறம் குகன் வந்து றூம் வாசலில் நின்றான்.

“வீடியோ கசெற் வீட்டை அனுப்பிப்போட்டியோ?” என கோபமாய்க் கேட்டான். “கலியாணத்தை வீடியோ எடுத்ததே வீட்டுக்கு அனுப்பத்தானே” என்றேன்.

“அனுப்பினா உன்ரை வீட்டைதானே பாக்கச் சொல்லவேணும். அது எப்பிடிக் கலட்டியிலை பாத்தவை. உனக்குத் தெரியும் தானே எனக்கு கலட்டியிலை கலியாணம் பேசியிருக்கெண்டு. இப்ப வேண்டாம் எண்டிட்டினமாம்”.

“உன்ரை கலியாணத்தாலை என்ரை கலியாணம் குழம்பிப்போச்சு

...

சந்தோசமாய் இரு” என்று சொல்லிப்போட்டுப் போனான்.

சில்லாலையில ரெலிக்காஸ்ட் பண்ணினா கலட்டியில தெரியும் எண்ட விசயம் பாரிசில இருக்கிற எனக்கு எப்பிடித் தெரியும்?



selvam.a@thaiveedu.com




# உருத்திரபுரம் குடி...

83ம் பக்கத் தொடர்ச்சி...

பலா, மாமரங்கள் சில கொடுக்கப்பட்டதுடன் மிகுதியைக் குடியேற்ற வாசிகளே வாங்கி நடும்படியும் கூறப்பட்டது. அத்துடன் இடையிலே இருந்த ஒரு ஏக்கர் நிலத்திற் பணப் பயிரும் சிறுதானியமும் விளைவிக்கும்படி கூறப்பட்டது. அத்துடன் பயிர்களைப் பார்வையிட்டு ஆலோசனை வழங்கவும் விவசாயப் போதனாசிரியர் ஒருவரும் நியமிக்கப்பட்டார். முன்வேலியின் ஒருபுற மூலையில் மாட்டுப் பட்டியும் அமைத்தனர். வாசலுக்கருகில் மாட்டு வண்டி விடவும் கொட்டில் அமைத்தனர்.

தோட்டப் பயிர் செய்ய மண்வெட்டி, கோடரி, அலவாங்கு, கத்தி போன்றனவும் இலவசமாக அரசு கொடுத்துதவியது. அத்துடன் வயல் உழுவதற்கு ஒரு சோடி எருமைமாடும் ஒரு இரும்புக் கலப்பையும் கொடுக்கப்பட்டது.

மேட்டுக் காணியிலும் வயற்காணியிலும் வெட்டப்பட்ட பெரிய மரங்களின் அடிக்கட்டைகளும் புற்றுப் பிட்டிகளும் மண்மேடுகளும் மழை காலத்தில் வெள்ள மோடிய வாய்க்கால்களும் காணப்பட்டன. கட்டைகளைப் பிடுங்கி எரிக்கவும் காணிகளை மட்டப்படுத்தவும் என அரசு ஒவ்வொரு குடியேற்றவாசிக்கும் சிறு தொகைப் பணத்தை இலவசமாகக் கொடுத்தது. இவை அனைத்தும் ஒழுங்காகச் செய்து முடிக்கப் படுகின்றதா என்பதைப் பார்வையிட்டுப் பணம் கொடுக்கும்படி சிபார்சு செய்யவும் ஆலோசனை கூறவும் என நில அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவரும் நியமிக்கப்பட்டிருந்தார். குடியேற்றம் செய்யப்பட்ட முதல் ஆறுமாதங்களுக்கும் உணவுக் கான பொருட்களும் கொடுக்கப்பட்டன.

குடியேற்றப்பட்ட முதல் வருடம் சிறுபோக நெற் செய்கைக்கு ஒரு விவசாயிக்கு அரை ஏக்கர் நிலம் சிபார்சு செய்ததுடன் நீர் பாயக் கூடிய ஒருவரது வயலில் எட்டுப் பேர் சேர்ந்து கூட்டாகக் கமம் செய்ய வேண்டும் எனக் கூறப்பட்டது. அத்துடன் விதைப்பதற்குத் தேவையான நெல்லும் கொடுத்தனர். எட்டுப் பேரிடமும் அரசு கொடுத்த மாடும் கலப்பையும் இருந்த போதும் இரும்புக் கலப்பை உழவு தெரியாதவர்கள் வேறு வேலைகள் செய்தனர். இதன் மூலம் எல்லோரும் கூட்டாகச் சேர்ந்து ஒற்றுமையாகச் செய்யும் பழக்கம் உண்டானது. உழுதல் விதைத்தல், நெல் வெட்டுதல், சூடடித்தல், வரம்பு கட்டுதல், நீர் பாய்ச்சல் போன்ற வேலைகள் அனைத்தும் கூலி கொடுக்காமலே செய்தபடியால் நட்டம் ஏற்பட வாய்பிருக்கவில்லை.

ஆரம்பத்தில் நான்கு வீடுகளுக்கு ஒரு கிணறு வீதம் ஒரு குடியேற்றவாசியின் காணியிற் கட்டி அதிற் பக்கத்தில் உள்ள நான்கு குடியேற்ற வாசிகளும் உபயோகிக்கும் படி கூறப்பட்டது. காலக் கிரமத்தில் ஒவ்வொரு வீட்டுக்கும் ஒவ்வொரு கிணறு கட்ட மானியம் கொடுக்கப்பட்டது.

பாடசாலைக் கட்டிடத்தை மையமாக வைத்து மேற்குப் பக்கமாக உள்ள வீடுகளுக்கு ஒன்று முதல், தொண்ணூற்றொன்பது இலக்கங்களும் கிழக்குப் பக்கமாக நூறாம் இலக்கம் முதல் நூற்று அறுபத்தாறு இலக்கங்களும், வீதியின் வடமேற்குப் பக்கத்தில் அமைத்த வீடுகளுக்கு நூற்று அறுபத்தேழாம் இலக்கத்தில் இருந்து இருநூற்றுப்பத்தாம் இலக்கங்களும் கொடுக்கப்பட்டன. இதனால் வீட்டு இலக்கத்தையும் வீட்டில் உள்ளோரையும் புதிதாக வருவோர் இலகுவாகக் காண முடிந்தது.

சந்தை தபாலகம் என்பன போன்ற பொது நிலையங்கள் அமைப்பதற்காகப் பாடசாலையின் வடக்குப்புறமாகவும் தென்திசையிலும் தொண்ணூறு ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது. பாடசாலைக்குப் பதினெட்டு ஏக்கர் நிலமும் கொடுக்கப்பட்டது. பிரதான வீதியின் வடக்குப் பக்கமாகக் குடியேற்ற வாசிகளின் ஆடு, மாடு மேய்ப்பதற்காக மேச்சற் தரவையும் ஒதுக்கப்பட்டது. இந்த நிலம் எள்ளுக்காடு என்றே அழைக்கப்பட்டது. உருத்திரபுரத்தின் நான்கு திசைகளும் காடுகளாக இருந்ததனால் மேய்ச்சற் தரவையும் ஒரு பகுதி பற்றைக் காடாகவும் பின்பகுதி இடையிடையே பெரிய மரங்கள் இருந்த காடாகவும் காணப்பட்டது.

உருத்திரபும் விரைவாக வளர்ச்சியடைந்ததைக் கண்ட அரசாங்கம் உருத்திரபுரத்தின் கிழக்குப் புறமாக உள்ள காட்டினை வெட்டி நூற்றொன்பது வீடுகளைக் கொண்ட ஒரு குடியேற்றத் திட்டத்தை உருவாக்கத் திட்டமிட்டது. இது இரணை மடுக்குளத்தின் மூன்றாவது குடியேற்றத் திட்டமாகும். இதனை முதலில் எட்டாம் வாய்க்காற் குடியேற்றத் திட்மெனவும் பின்னர் மாதா புரம் குடியேற்றத் திட்டமென வும் பின்னர் உருத்திரபுரம் குடியேற்றத் திட்டமெனவும் அழைக்கலாயினர்.

இதனால் முன்னர் உருத்திபுரத்திற் பொது நிலையங்களுக்கென ஒதுக்கி இருந்த இடத்தை மாற்றி உருத்திரபுரக் குடியேற்றத் திட்டத்துக்கும் எட்டாம் வாய்க்காற் குடியேற்றத் திட்டத்துக்கும் இடையிலே உள்ள தொண்ணூறு ஏக்கர் நிலத்தினையும் பொது நிலையக் காணி என மாற்றிச் சந்தை, விளையாட்டிடம் என்பவற்றுக்கான காணியை ஒதுக்கி மீதியில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், வைத்திய சாலை, மகப்பேற்று நிலையம் மற்றும் வைத்திய அதிகாரி, மகப்பேற்றுத்தாதி, மருந்து கலவையாளர் ஆகியோர் தங்குவதற்கான விடுதிகளும் உப தபாலகம், மாட்டுப் பண்ணை, சிகரற் புகையிலை பதனிடும் போறணை என்பனவும் கட்டிக் கொடுக்கப்பட்டன. மிகுதிக் காணிகள் ஒருவரும் பாவிக்காமலே கிடந்தன. இதன் முன்புறத்திற் பத்திமா ஆலயமும் கிறிஸ்தவ கன்னியாஸ்திரிகள் விடுதியும் ஆதரவற்ற மாணவிகள் இல்லமும் அமைக்கப்பட்டது.

எட்டாம் வாய்க்காற் குடியேற்றத்திட்டத்தில் நூற்றென்பது வீடுகள் கட்டத் தீர்மானித்த போது எண்பத்தெண்பது வீடுகளே அங்கு கட்டக்கூடியதாய் இருந்தது. மிகுதி இருபது வீடுகளும் உருத்திரபுரத்திற் பொதுசேவைக் கென ஒதுக்கப்பட்டிருந்த நிலத்தில் எட்டாம் வாய்க்காற் குடியேற்றத்திட்டத்தின் தொடர்ச்சியான 89ஆம் வீடு முதல் நூற்றெட்டாம் இலக்க வீடு வரை கட்டிக்கொடுக்கப்பட்டது. இவ்வீடுகள் சிவிக் சென்றர் வீடுகள் என்றே அழைக்கப்படுகின்றன.

ஐம்பத்தெட்டாம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரம் காரணமாகக் கிளிநொச்சி துரித வளர்ச்சிகண்டது. வடமாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் வசித்த தமிழர்கள் கிளிநொச்சியை நோக்கி வரத்தொடங்கினர். இதன் காரணமாகத் தருமபுரத்திலும் தும்புருவில்லிலும் அரசாங்கம் குடியேற்றத் திட்டங்களை ஆரம்பித்தது. ஏனையோர் அரசாங்கக் காணிகளை அடாத்தாக வெட்டி இரண்டு ஏக்கர் ஒரு ஏக்கர் என்ற அளவிற் துப்பரவு செய்து வீடுகளைக் கட்ட ஆரம்பித்தனர். இதனால் அப்பகுதியில் உள்ள பாதைகள் நேராக இல்லாமலும் பிரயாணத்துக்கு வசதியற்றும் காணப்பட்டது. இப்படி ஏற்பட்ட கிராமங்கள் பல. அவற்றிற் சில... கட்டைகாடு, திருமுறிகண்டி, ஐயனார்புரம், ஜெயபுரம், குமரபுரம், திருநகர், வெட்டுக்காடு, பூநகர் என்பன வாகும். இக்கிராமங்கள் பின்னர், சொந்தக் காணியில்லாது நிரந்தரமாகக் குடியிருக்கின்றனர் என்ற காரணத்தினால் அரசாங்கம் காணிகளை அளந்து, பாதைகளை ஓரளவு நேராக்கி, அவர்களுக்கு வதிவிட அனுமதிப் பத்திரம் கொடுத்தது.

இதன் காரணமாக உருத்திரபுரத்திலும் அதன் பக்கங்களிலுள்ள காடுகளிலும் பலர் குடியேறத் தொடங்கினர் விரிவாக்கத்திட்டமென்ற பெயரில் உருத்திரபுரத்தின் மேற்குப்புறத்திற் சிவநகர் என்ற கிராமம் உருவாக்கப்பட்டது. அத்துடன் முதலாம் திட்டம், இரண்டாம் திட்டமெனக் குடியேற்றப்பட்டனர். எட்டாம் பத்தாம் வாய்க்காற் குடியேற்றத் திட்டத்துக்குப் பொது நிலையங்களுக்கு என ஒதுக்கப்பட்ட காணியிற் கட்டிடங்கள் கட்டப்படாது இருந்த நிலங்களை அக்காலப் பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயரைப் பாவித்து அவர்களின் உதவியுடன் எட்டாம் பத்தாம் வாய்க்காற் குடியேற்றவாசிகளின் பிள்ளைகள் இரத்தினம் பண்ணை, ஆனந்தம் பண்ணை என்று பெயரிட்டு அதிற் குடியேறினர்.

விவசாயக் கழகங்கள் பல ஆக்கப்பட்டுப் புது முறிப்பிலும் ஒரு பகுதியிற் குடியேறினர். மேய்ச்சற் தரவையாக விடப்பட்ட எள்ளுக் காட்டிலும் குடியேறி அதற்குச் சக்திபுரம் எனப் பெயரிட்டுள்ளனர்.

*தொடரும்...*

*nagalingam.k@thaiveedu.com*

■ ■ ■




# CONSUMER PROPOSAL IS 85% CHEAPER THAN BANKRUPTCY

**(ViSA, MasterCard, AMEX, Personal Loans, Line of Credit, Income Tax, HST, GST Owing, Car or House Repossessed, Student Loan Outstanding for 7 years )**

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
**We will stop all interest on your debts immediately**

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள்,சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்
**We will stop collection calls, court action & wage garnishments immediately**

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
**We will protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC, Life Insurance, Stocks, Bonds & Shares)**

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப் பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
**We will make one monthly payment to all your creditors**

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
**No need to file for Bankruptcy**

**WE WORK EXCLUSIVELY FOR YOU, AND SAVE YOU THOUSANDS OF DOLLARS**

பலவருடகால அனுபவமுள்ள

## Suren Sornalingam BBA

Post Graduate Diploma in Business Management
Federal Government Registered & Certified (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation



## CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON.
M1P 4X4

Tel: 416-264-1272
Fax: 416-332-0914
Web: www.creditrecoverycanada.com

# மாறுதல்கள்

17

தெளிவத்தை ஜோசப்

இரண்டாவது தடவையாகவும் சங்கக் கடையை எட்டிப்பார்த்து ஏமாந்து மோட்டார் சைக்கிளை ஸ்டார்ட் செய்த இராமர் ஒரு வட்டமடித்து பைக்கை திருப்பினான்.

சின்ன சியாத்துவின் மகள் சுவர்ணா 'ராமரய்யே கோமத…' என்றவாறு ஆற்றிலிருந்து படியேறி வந்தாள்.

'படபடன்னு மோட்டர் பைக் சத்தம் கேட்டதும் நாங்கொட யாரோ எவரோன்னு நெனச்சது... அதான் றோட்டுக்கேறாம கீழயே நின்னேன்... பைக் போயிறட்டுமுன்னு. சாடையா எட்டிப் பாத்தா...''

'எட்டிப் பாத்தா...' என்றான் ராமர்.

'சீதையோட ராமர்' என்று சிரித்தாள் அவள்.

'மே... நவத்தகன்னவா...' என்று கோபம் காட்டிய ராமர் அவளை வைத்த கண் வாங்காமல் பார்த்தான்.

குளித்து முடித்த ஈரத்துடன் சட்டை மாற்றி பாதி ஈரமும் பாதி ஈரமில்லாததுமான உடைகளுடன் ஒரு அடக்கமான அழகுடன் நின்றாள் அவள்.

ராமரின் பார்வை தன் ஈர மார்பைக் குடைவதை மிகச்சுலபமாக உணர்ந்து கொண்டவள் தலையைச் சொடுக்கி ஈரக்கூந்தலை மார்பின் மீது விசிரிக் கொண்டாள். சொடுக்கிய வேகத்தில் எகிறி முன் விழுந்த கூந்தலில் இருந்து தெறித்த நீர்த்திவலைகள் ராமரின் முகத்தில் பனித்துளிகளாய் விழுந்தன.

பார்வையை மாற்றிய ராமர் மொக்கத மே வெலாவெ தனியம…' என்றான்.

'தனியம?' என்று சிரித்தவள் 'தனியா இல்லே ஒரு கண்டாயத்துடன் தாத்தாத்தெக்க…' என்றாள்.

தூருடன் பிடுங்கி, ஓடும் நீரில் அலசிய ஒரு மரவள்ளிச் செடியின் பாதி வெட்டிய அடிக் கட்டையைக் கையில் பிடித்தபடி சின்னச் சியாத்து றோட்டுக்கேறினான். கையில் பிடித்திருந்த மரவள்ளியின் அடிக்கட்டையில் முற்றிப் பருத்த நாலைந்து கிழங்குகள் நீட்டிக் கொண்டிருந்தன.

சீயாத்து பாதைக்கேறியதும் பின்னாலேயே நாலைந்து குஞ்சுகுருமான்கள் குளித்துக் காயாத உடம்புடன் பாதைக்கேறின.

இவைகள்தான் அவள் சொன்ன கண்டாயமோ என்று எண்ணிக் கொண்டான்.

'ஆங் ராமர் தம்பி... கோமத புத்தா சனிப்ப ஏம அப்பா சொகமா... புத்தா இப்ப வத்தையில இல்லையாமே... டவுன்ல வேலையின்னு மக சொல்லுச்சி' என்றார் சீயாத்து.

தேயிலைத் தோட்டங்களை அண்மித்த சிங்களக்கிராமங்களை தோட்டத்து மக்கள் 'நாடு' என்றே குறிப்பது வழக்கம். உழைத்த களைப்புக்கு நிவாரணியாகக் கள்ளருந்த மாலை வேளைகளில் தோட்டத்து ஆண்கள் நாட்டுக்குப் போவதை வழக்கமாகக் கொண்டுள்ளவர்கள்.

நாட்டிலிருக்கும் ஒரு சிலர் தோட்டத்துக்கு வந்து மலைவேலை கேட்டு செய்வதுமுண்டு. தேவைக்கருதி செய்தி அனுப்பி நாட்டாள்களைக் கூப்பிட்டு தோட்டம் வேலை கொடுப்பதுமுண்டு.

தோட்டத்தில் பதிவு செய்யப்பட்ட தமிழ்த் தொழிலாளர்களுக்குப் போலல்லாமல் இந்த நாட்டாள்களுக்கு கிழமை சம்பளம் அல்லது நாள் சம்பளம் கொடுத்து முடித்துக் கொள்வார் துரை.

'நாட்டாள்கள்' என்று இவர்களை அந்த நாட்களிலிருந்தே இந்த மக்கள் அடைமொழியிட்டு அழைத்தாலும் அதன் உண்மைத் தன்மை இப்போது தான் தெரிகிறது. அவர்கள் தானே இந்த நாட்டின் மக்கள் என்று அடையாளம் காணப்படுகின்றவர்கள்! தோட்டத்து மக்கள் சத்தியக்கடதாசி மக்கள் தானே! வேண்டுமானால் வைத்துக் கொள்ளலாம் வேண்டாமென்றால் அடித்துத் துரத்தலாம்.

இந்த சின்ன சியாத்து தற்காலிகத் தொழிலாளி அல்ல. தோட்டத்தில் பெயர்பதிந்து லயத்தில் காம்பிரா பெற்று வசிக்கும் ஒரு நிரந்தரத் தொழிலாளி.

சியாத்தும் புஞ்சிமெனிக்காவும் பிள்ளைகளும் சின்னானின் லயத்தில் சின்னானின் வீட்டிற்கும் பக்கத்து வீட்டில்தான் இருந்தனர்.

தோட்டத்து மக்களிடையே கந்தசாமி – மீனாட்சி பெயர் போன்றதுதான் நாட்டாள்களின் சியாத்து – புஞ்சிமெனிக்கே பெயர்கள்.

பிள்ளைகளுக்கு அப்படியான பெயர்களை அவர்கள் இப்போது வைத்து கொள்வதில்லை. இவர்களும் வைத்துக் கொள்வதில்லை.

சியாத்துவின் மூத்த மகளின் பெயர் ஸ்வர்ணா.

சினிமாக்கள் மக்களாட்சி செய்யும் நாட்களல்லவா! அதுதான் ஸ்வர்ணா என்ற பெயர்.

சின்ன வயதிலிருந்தே இராமருடன் லயத்து மண்ணில் விளையாடித் திரிந்தவள் அவள். விறகு பொறுக்கியவள்.

தோட்டத்துப் பள்ளிக்கூடத்தில் ராமருடன் அமர்ந்து கொஞ்ச நாட்கள் தமிழ் படித்தவள். தோட்டத்துப் பள்ளிக்கூடத்துக்குப் படிக்கவரும் பிள்ளைகளுக்கு பகல் சாப்பாடு போடுகின்றார்கள். பள்ளிக் கூடத்துக்குப் பின்னால் உள்ள மாமரத்தினடியில் தகரக்கூரையும் தகரக்கதவுமாக இருக்கும் கொட்டில்தான் சோறாக்கும் இடம்.

ஒரு ஐம்பது அறுபது பிள்ளைகளுக்கான சாதத்துக்கான அரிசியை அவித்தெடுத்து இறக்கி ஆறவைப்பது என்பது அவ்வளவு சுலபமான காரியமில்லை. பட்டாளத்துக் கூட்டத்துக்குப் புட்டவிப்பது போலத்தான்! அதற்கான அண்டாவில் அளவாக நீர் நிறைத்து அடுப்பிலேற்றி கைவாளியில் கழுவி வைத்-திருக்கும் அரிசியைக் கொட்டி, நீட்டக் கைப்பிடி அகப்பையால் கிண்டி விட்டபடி கொழுந்து விட்டெரியும் விறகுகளை உள்ளே தள்ளி விட்டபடி வெறும் மேலில் வழிந்தொழுகும் வியர்வையைத் துடைத்துக் கொண்டிருப்பவர் தான் சோத்துக்காரர் சுப்பையாக் கிழவர்.

பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கு பகல் சோறாக்கிப் போட்டுப்போட்டே சோத்துக்காரர் ஆனவர் சுப்பையா. பள்ளிக்கூடத்துக்கு வருகின்ற பிள்ளைகள் புத்தகமும் கையுமாக இல்லாமல் கோப்பையும் கையுமாக கும்பாவும் கையுமாகவே வருவது வழக்கம்.


பிள்ளைகளுக்கான – வகுப்புவாரியான – பாலர் கீழ்ப்பிரிவு மேற்பிரிவிலிருந்து ஐந்தாவது வகுப்புவரைக்குமான பாடப்புத்தகங்கள் வாத்தியாரய்யாவிடமே இருக்கும்.

பாடசாலை தொடங்கும் போது கொடுத்து பாடசாலை விடும்போது வாங்கி அடுக்கி அலுமாரியில் வைத்துப் பூட்டிக் கொள்வார் வாத்தியார். தோட்டம் வாங்கிக் கொடுக்கும் புத்தகங்கள் அவை. தோட்டம் காசு கொடுத்து புத்தகம் வாங்கிக் கொடுப்பது இப்படிப் பூட்டி வைத்துக் கொள்வதற்கு அல்ல. ஆனாலும் வாத்தியார் பூட்டிப் பூட்டித்தான் வைத்துக் கொள்வார்.

வருசக்கடைசியில் சோதனை முடிந்த கையுடன் புதுவருடத்துக்கான புக்லிஸ்டை ஆபீசுக்கனுப்ப வேண்டும். ஆபீசுக்கனுப்பும் புக்லிஸ்டின் ஒரு கொப்பியை டவுனில் இருக்கும் புத்தகக் கடைக்கும் நேரில் சென்று கொடுத்து வைப்பார் மாஸ்டர்.

மாஸ்டரிடமிருந்து வாங்கிய புக்லிஸ்டை தோட்டத்து ஆபீசில் இருந்து 'ஓடர் வரும் வரை' பத்திரமாக வைத்திருக்கும் முதலாளி ஓடர் வந்ததும் மாஸ்டரிடம் கூறுவார். 'ஓடர் வந்துறிச்சி' என்று.

தோட்டத்திலிருந்து வாராவாரம் டவுனுக்கு வரும் மாஸ்டரும் புத்தகக் கடைக்கும் ஒரு விசிட் அடித்து 'வந்ததா' என்று கேட்டுக் கொள்வார்.



'வந்துறிச்சி' என்று முதலாளி கூறியதும் இன்னொரு லிஸ்டை நீட்டுவார் மாஸ்டர். அழுக்குப் படாமல் முன்அட்டை நசுங்காமல் புத்தகக் கடை அலுமாரியில் இருப்பது போலவே அழகாக அவருடைய அல்மாரியில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் புத்தகங்களின் லிஸ்ட் அது. அதைக் கழித்துக் கொண்டு மீதியைத் தான் பெட்டியில் அடுக்கிப் பார்சலாகக் காட்டுவார் கடைக்காரர்.

தோட்டத்து லொறி பதுளைக்குப் போகும் ஒருநாளில் புத்தகக்கடையிடமும் நின்று புத்

தொடர்தல் 88ம் பக்கம்

# மாறுதல்கள்...

87ம் பக்கத் தொடர்ச்சி...

தகப்பெட்டிகளையும் ஏற்றிக் கொண்டு வரும். பில்லை பெற்றுக் கொள்ளும் ஆபீஸ் பெரிய வர் பெட்டிகளை மாஸ்டரிடம் ஒப்படைத்து விட்டு வரும்படி லொறி டிரைவரிடம் கூறும் போது பில்லையும் கொடுத்தனுப்புவார். மாஸ்டரிடம் கையொழுத்திட்டு வாங்கி வரும்படி.

'கடையின் பில்படி உள்ளே புத்தகங்கள் இருக்கின்றனவா' என்று ஆபீசில் செக் பண்ண மாட்டார்களா? செக் பண்ண வேண்டும். செக்கில் கைகெழுத்திடும்போது துரையே கேட்பார்...' எவ்ரி திங் ஓகே யூ செக்ட்...' என்று.

'ஓகே சர்' என்பார் பெரிய கிளார்க். பிறகு செக்கை வாங்கிக்கொண்டு வெளியே வரும் போது 'மனுசனுக்கிருக்குற ஆயிரத்தெட்டு வேலையில இது ஒரு மகா வேலை...' என்று முனகிக் கொள்வார்.

ஆங்கிலத்தில் அழகாகச் சொல்வார்கள் 'பிட்வின் த கப் அன்ட் த லிப்' (Between the cup and the lip) என்று.

கப்புக்கும் லிப்புக்கும் இடையிலான அந்த சின்ன இடைவெளியில்கூட ஏதேதோ நடந்து விடலாம்தான்.

தோட்டத்து செக் பேங்கில் மாறியபின் மாஸ்டரய்யா பெயரில் ஒரு என்விலப் இருக்கும் குறைத்தனுப்பிய லிஸ்டின்படி உள்ளே காசுடன்.

பள்ளிக்கூடத்துக்கு வரும் ஒரு ஐம்பது அறுபது பிள்ளைகளில் இடுப்பில் ஏந்திக் கொண்டு வருவது ஒரு பத்தாவது இருக்கும்.

ஒரு ஆசிரியருக்குரிய மாணவர் தொகை அரசாங்கப் பள்ளிக்கூடம் என்றால் 24 தனியார் பள்ளிக்கூடமென்றால் 26. ஆனால் தோட்டப்பாடசாலை என்றால் 74 என்பது கல்வி அலுவலகத்தில் அட்டவணை காட்டும் அறிக்கை.

ஏனைய பள்ளிக்கூடங்களைவிட தோட்டப் பள்ளியிலேயே ஏறக்குறைய நூறு மாணவர் களுக்கு ஒரே ஆசிரியர் முதலாம் வகுப்பு தொடக்கம் 5ஆம் வகுப்பு வரை படிப்பிக் கின்ற மோசமான சூழ்நிலை இருக்கின்றது.

சோற்றைக் கிண்டிப்பார்த்த சுப்பையா கங் காணியைக் கூப்பிடுகின்றார். அண்டாவை அடுப்பை விட்டு இறக்கி வைக்க கரித்துணி யால் இரண்டு பக்கத்து கொக்கி வளையத்தை இருவருமாகப் பிடித்து மெதுவாகத் 'தம்கட்டி' இறக்கி வைக்க வேண்டும்.

கங்காணி என்றால் தேயிலை மலைக் கங்காணி அல்ல பள்ளிக்கூடத்துக்குப் பிள்ளைகள் திரட்டிவரும் கங்காணி. அண்டாவை இறக்கி வைத்தபிறகு கங்காணியார் மலையில் புல் வெட்டும் பெயன்களிடம் போய் விடுவார். அப்புறம் அடுத்த நாள் காலை பெரட்டில் ஆஜராகிவிட்டு லயம் லயமாக இறங்கி விடுவார். பிள்ளை பிடிக்க!

பிள்ளைகளுக்குப் போடும் சோற்றுக்குக் கறி பருப்பு ரசம் தான்! மைசூர் பருப்பும் பசளிக் கீரையும் ஒன்றாக வெந்து உரித்துப் போட்ட நாலைந்து வெள்ளைப்பூண்டுப் பற்களுடன் ஒரு வித்தியாசமான ரசமாக மாறி இருக்கும்.

எந்த நாளும் ஊற்றிச் சாப்பிட பருப்பும் பசளிக்கீரையும் தானா என்றாலும் பிள்ளைகளின் வயிற்றுப்பசிக்கு அதாவது கிடைக்கிறதே..!

பசளிக்கீரை ஒடித்துவர சோத்துக்காரர் சுப்பையா நியமிப்பது சின்னான் மகன் ராமரையும் சின்ன சியாத்துவின் மகள் ஸ்வர்ணாவையும் தான். அவர்கள் கொஞ்சம் துடிப்பாக இருப்பதால்.

லயத்து வேலியோரம், தண்ணீர்க்கான் ஓரம் என்று வளர்ந்து மண்டிக்கிடப்பது இந்தப் பசளிக்கீரை. விரல் போல் நீண்ட நீண்ட இலைகளும் தளதளவென்ற தண்டுகளுடனும் வளர்ந்து கிடக்கும் கீரை இந்தப் பசளி.

தோட்டத்து மக்கள் மரவள்ளிக் கீரையை உரலில் இட்டு இடித்து, சுண்டைக்காய்களைத் தட்டப்போட்டு கீரைச்சுண்டல் செய்து சோற்றுடன் சாப்பிடுவார்கள். ஆனால் பசளிக் கீரையைத் தீண்டமாட்டார்கள். அந்தத் தீண் டப்பாடாத பசளிக் கீரைதான் பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கு பருப்புக்கறியாகின்றது.

சின்னக் கணக்கப்பிள்ளை அய்யாவின் வேலி ஓரத்தில் ஒரு சின்னக் கான் ஓடுகிறது. வேலிக்கும் கானுக்கும் இடையே உள்ள வாலோடியான இடத்தின் ஈர மண்ணில் பசளிக்கீரை செழித்து நிற்கிறது. அய்யாவின் சமையலறையின் ஓரத்தில் இருந்து கீழே



***'பயப்படாமல் இரு' என்று மெதுவாகக் கூறியபடி அவளது தலையைத் தடவிவிட்டான். பயந்து போயிருந்த அவள் சட்டென்று அவனைக் கட்டிப்பிடித்துக் கொண்டாள்.***

கான் வரை சின்னவரின் காய்கறித் தோட்டம் இருக்கிறது. மேலே அய்யா வீட்டிலிருந்து கீழே பார்த்தால் பள்ளத்தில் பசளிக் கீரை ஒடித்துக் கொண்டிருக்கும் சுவர்ணா அய்யா வின் தோட்டத்தினுள்ளே ஏதோ காய்கறி களவாடுவதுபோல்தான் தெரியும். ஒடித்த கீரைகளை இடது கையில் பிடித்தபடி வலது கையால் எட்டி எட்டி கீரைகளை ஒடித்து கொண்டிருந்தாள் சுவர்ணா. வேலியின் மறு முனையில் ராமர் கீரையை ஆய்ந்து கொண் டிருந்தான். எதேச்சையாக மேலே பார்த்த சுவர்ணாவுக்குக் குலை நடுங்கியது. நெஞ் சுக்கு நேராக மேலே அய்யாவின் வீட்டோ ராமாக உறுமிக் கொண்டு நிற்கிறது அய்யா வின் கறுப்பு நாய். அது கடிநாள் என்பது தோட்டமறிந்த ஒன்று. அதற்கு பயந்து கொண்டே அய்யாவின் வேலி தாண்டி யாரும் உள்ளே நுழைவதில்லை.

சற்றும் எதிர்பாராத விதத்தில் மேலே இருந்து கோரமாக உறுமியபடி சரியாக சுவர்ணா வின் முகம் நோக்கி பாய்வதுபோல் நின்றது அந்த நாய்.

வீறிட்டு அலறியபடி வேலியோரத் தேயிலை களுக்குள் பதுங்கிக் கொண்டாள் சுவர்ணா. அவள் கத்திய சத்தம் கேட்டுத் திரும்பிய இராமர் அவள் நின்றிருந்த இடம் நோக்கி ஓடி வந்தான்.

மேலிருந்து பாய்ந்து வந்த நாய் தான் முத லில் கண்ட பெண்ணைக் காணாது அந்த இடத்தில் ஒரு பையனைக் கண்டதும் மேலும் ஆக்ரோஷத்துடன் பாயந்து வந்தது.

ஓடிவந்த இராமர் தன்னை சுதாகரித்து நின்று நிமிர்கையில் கோரமான தனது பற்களை வெளிக்காட்டி உறுமியபடி மிக அருகில் நின்றது அது. விரிந்து விரிந்து மடியும் அதன் அகன்ற வாயும், மறைந்து நீளும் கோரைப் பற்களும் கோபத்தால் உருண்டு விழிக்கும் கண்களும், விடைத்து நிமிரும் காதுகளும் அவனைப் பயமுறுத்தின.

அது நிற்கின்ற மேட்டிலிருந்து சீறியபடிப் பாய்ந்தால் வேலிக்கு மேலாக அவனது முகத்துக்கு நேரே தான் பாயும்.

அப்படி வேலிக்கு மேலாகப் பாயாமல் அவனை நோக்கி இறங்கி ஓடி வந்தால் வேலிக்குள் நின்று குரைக்கலாமே தவிர அவன் மேல் பாய்ந்து கடிக்க முடியாது. தன்னுடைய உடலும் முகமும் அதற்குத் தெரியா வண் ணம் வேலிக்கு வெளியே வேலியுடன் பதுங் கிக் கொண்டான் அவன்.

அவனுடைய உருவம் கண்ணிலிருந்து மறைந்ததும் மேலும் கோபம் கொண்ட நாய் அவனை நோக்கிப் பாய்வதை விட்டு இறங்கி ஓடிவந்து வேலியிடம் நின்றது.

வேலிக்கு உள்ளே நாய் வேலிக்கு வெளியே இவர்கள். உயரமானதும் இடைவெளி இல் லாமலும் இறுக்கமாகவும் அடைக்கப்பட்ட வேலி என்பதால் நாய்க்கு வெளியே வர முடியவில்லை.

வேலியுடன் ஓடி ஓடி குறைப்பதும், வேலிக்கு மேலாகப் பாய்ந்து பார்த்து விழுவதும், மேலே ஓடி மேட்டில் நின்று வேலிக்கு வெளியே அவர்களைத் தேடுவதுமாக கோபத்துடன் அலைக்கழிந்தது அந்தக் கடிநாய்.

இராமரின் கையில் இப்போது ஒரு கம்பு இருந்தது. வேலியில் எங்காவது ஒரு இடம் தேடி நுழைந்து வெளியே நாய் வந்து விட் டால் அதைச் சமாளிக்க இதுபோதும் என்ற நினைவு அவனின் அச்சத்தைக் குறைத்தது.

கையிலிருந்த கம்பைப் பார்த்தான். அது ஒரு நீளமான மண்வெட்டிக்கணை. கைப்பிடிக்கும் பகுதி சிறுத்தும் மற்றப் பகுதி பெருத்தும் இருந்தது. அதைக்கையில் பிடித்துக் கொண் டதும் அவனுக்கு தைர்யம் வந்து விட்டது.

வெளியே வந்தால் பட்டென்று அதன் தலை யில் ஓங்கி அடிக்கும் துணிவுடன் இருந்தான்.

மெதுவாகக் குனிந்து சுவர்ணாவைத் தேடி னான். தேயிலைக்கடியில் கானுக்குள் பதுங் கிக் கிடந்தாள் அவள். பயத்தால் உடல் படபடத்து நடுங்கிக் கொண்டிருந்தது.

நாயின் சத்தத்தை இப்போது காணவில்லை. மெதுவாக நகர்ந்து அவளிடம் வந்தான். அவளுடைய முகமும் கண்களும் மிகவும் கலவரமடைந்திருந்தன.

'பயப்படாமல் இரு' என்று மெதுவாகக் கூறி யபடி அவளது தலையைத் தடவி விட்டான். பயந்து போயிருந்த அவள் சட்டென்று அவ னைக் கட்டிப்பிடித்துக் கொண்டாள்.

'பயப்படாதே...' பயப்படாதே' என்று அவளை மெதுவாக விலக்கியபடி மெதுவாகக் கூறி னான் 'இப்படியே நகர்ந்து நகர்ந்து கீழே றோட்டுக்கு போயிறுவோம்' என்று.

கீழே பாதைக்கு இறங்கிவிட்டால் அடுத்த முடக்கில் இருக்கிறது பள்ளிக்கூடம்.

தேயிலைக்கடியில் ஊர்ந்து ஊர்ந்து கீழே பாதைக்கு வரும் வரை அவள் அவனை இருக்கிப் பிடித்துக் கொண்டிருந்தாள். பாதைக் கிறங்கியபின் மெதுவாக தலையை உயர்த்தி மேலே பார்த்தாள். இராமருக்கும் காட்டினாள்.

தோட்டத்துக்குள் திருடவந்தவர்களை விரட்டி விட்ட எக்களிப்புடன் அதே இடத்தில் நாக்கை தொங்கப் போட்டபடி உட்கார்ந்து தோட்டத் தையே பார்த்துக் கொண்டிருந்தது அது.

பள்ளிக்கூடப்பிள்ளைகள் வரிசையாக உட் கார்ந்திருந்தனர். ஒவ்வொன்றுக்கு முன்னாலும் விதவிதமான தகரக்கோப்பைகள், ஈயத்தட்டு கள், கும்பாக்கள் என்று வரிசை கோர்த்தி ருக்கின்றன.

இறக்கி வைத்த அண்டாச் சோற்றிலிருந்து அமுக்கி நிறைக்கப்பட்ட ஒரு வெள்ளிக்கும்பா சோறு மூடி போட்டுக் கொண்டு அரைச் சுவற்றில் வீற்றிருக்கிறது. அது மாஸ்டரய்யா வீட்டுக்கு. வாளிச் சோறும் அகப்பையுமாக உள்ளே வந்த சுப்பையா ஒவ்வொரு தட்டிலும் சோறிட்டபடி நகர்கின்றார். ஒரு சிறுமியின் முன் இரண்டு தட்டுக்கள் இருக்கின்றன. சிறுமியின் மடியில் ஒரு சின்னது இருக்கிறது.

ஒரு தட்டில் சோற்றைப் போட்டவர் நிமிர்ந்து அந்தச் சிறுமியைப் பார்க்கின்றார். மடியில் இருக்கும் அந்த சிசுவைப் பார்க்கின்றார். 'புள்ளைக்கு ஒங்காயாவைப் பால் குடுக்கச் சொல்லு' என்றபடி தட்டில் ஒன்றும் போடா மல் அடுத்த தட்டுக்கும் போடுகின்றார்.

கையில் பிரம்புடன் பிள்ளைகளுக்கு நடுவே சுற்றி வரும் மாஸ்டர். 'எல்லோரும் கை கட்' என்கின்றார். பிள்ளைகள் கைகளை மார்புடன் கட்டிக் கொள்கின்றனர். மடியிலிருக்கும் சிசுக்களும் மார்பில் கைகட்டிக் கொள்ளுகின்றன.

'கறி ஊத்துறதுக்குள்ள ஒரு பயலும் வெறுஞ் சோத்தை வாயில போடக்கூடாது' கைகட் என்கின்றார். கப்சிப் பென்றிருக்கின்றனர் பிள்ளைகள்

'ஏய் சனியனே இந்த கோப்பையைக் கொண் டாறாதேன்னு சொன்னேன்லியா... ஊத்துற கறியெல்லாம் தரையில ஓடிறுது... வெறுஞ் சோறையா திம்பே...' என்று கத்துகின்றார் சுப்பையா.

'வேற பிளேட் இல்லே...'

'அப்ப சும்மாகெட என்றபடி அடுத்த கோப் பைக்குப் போடுகின்றார்.

'இதுல ரெண்டு பேருக்கும் போடுங்க... சேந்து சாப்பிட்டுக்கிறோம் என்கின்றான் அடுத்தவன்.

சிரித்துக் கொண்டார் சோத்துக்காரர். அது ஒழுகுதுறா...' என்றவாறு இரண்டு அகப்பை போடுகின்றார்.

எல்லாருக்கும் போட்டு முடிந்து திரும்புகை யில் போட மறுத்த அந்தச் சின்னதின் கோப்பையிலும் சோற்றை அள்ளிப் போட்டு 'ஒங்காயாவைச் சாப்பிடச் சொல்லு. இதுக்கு பாலைக் குடுக்கச் சொல்லு' என்றபடி நடந்து விட்டார்.

பசளிக்கீரைப் பருப்புகறியை வாளியில் ஊற்றி அகப்பையால் கிண்டியபடி மீண்டும் உள்ளே வந்தார். ஒவ்வொரு பிளேட்டாகக் கறி ஊற்றினார்.

கறி ஊற்றி முடித்த பிறகும் பிள்ளைகளைச் சாப்பிட விடவில்லை மாஸ்டர்.

சோற்றிடம் கை போனபோது மறுபடியும் 'கை' என்றார். 'கை கட்' என்றார்.

பசிக்கு சோறு 'எந்தநாளும் கிடைக்க வேண் டும் என்று எல்லோரும் கண்ணை மூடி சாமியைக் கும்பிடுங்கோ' என்றார்.

எல்லாப் பிள்ளைகளும் கண்களை இறுக மூடிக் கொண்டனர். மூடிய கண்களுக்குள் சாமி யைவிடவும் சாதமும் பிளேட்டுமே தெரிந்தன.

'கை அவிர்' என்றார். எப்போது கேட்கும் என்றிருந்த பிள்ளைகள் சட்டென்று கைகளை அவிழ்த்து சாதத்தில் கை வைத்தன.

டப்பப் பென்று கைப் பிரம்பை மேசையில் தட்டி 'கை கட்' என்றார்.


ட்றில்மாஸ்டர் 'அட்டேன்ஷன் லெப்ட் றைட் லெப்ட் றைட்' என்று கத்துவது போலிருந்தது அவருடைய 'கை கட்' 'கை அவிர்' ஆக்ஞைகள்.

'சாமி கும்பிட்டீர்களா என்றார். எல்லோரும் ஒருமித்து கோரசாக 'ஆமாம் சேர்' என்கின் றனர். இப்போது 'கை அவிர்' என்றவர் மேசையிடம் சென்று அமர்ந்து கொண்டார். பிள்ளைகள் சாப்பிடத் தொடங்கின.

இப்படி ராமருடன் ஒன்றாக ஓடி ஆடித் திரிந்த இந்த பிள்ளை சுவர்ணாதான் இப்போது இப் படி வளர்ந்து அவனை வைத்த கண் மீட்காமல் பார்க்கச் செய்கின்றாள்.

பிரமித்துப்போய்
நிற்கின்றான் அவன்.

*(தொடரும்)*



theliwathai.joseph@thaiveedu.com

# இலகுவாக மோட்கேஜ்

கடினமான இலக்குகளையும் நாம் இலகுவாக்குவோம்

# Mortgages

- First Time Buyers
- Refinancing
- Renewal
- Self Employed
- Pre-Approval
- Bankruptcies
- Bad Credit
- Debt Consultant
- Non-verifiable Income
- New immigrant



### *We Will*

- Simplify the entire process of mortgage financing
- Save you money and time
- Get you the most competitive rates
- Offer you the widest selection of mortgage options including variable rate, fixed rate, capped variable rate, step, secured lines etc. for all situations including self-employed, no down payment ….
- Counsel you on credit and mortgage qualifications
- Provide maximum flexibility in financing choices
- Assist you every step of the way

***Best Rates***

We can get you a mortgage in most situations regardless of your circumstances. Where traditional financial institutions have given the answer "No", We routinely says "**Yes**" and get you a product that suits your needs at an extremely competitive rate.

**VERICO TMP**

## Siva Ratnasingam

*Lic: M08002133*
*Brokerage # 11156*

SENIOR MORTGAGE CONSULTANT

***2005,2006,2007,2008 Diamond Award Winner***

**416.520.1214**



# ஒமெல்லாஸை விட்டு விலகிச் செல்பவர்கள்

- ஊர்சுலா கே லெகுவின் -

தமிழில்: என்.கே. மகாலிங்கம்



**ஊர்சுலா கே லெகுவின்:**
ஊர்சுலா கே லெகுவின் 1929 இல் கலி∴போர்ணியாவில் பிறந்தவர். அவருடைய தந்தை ஓர் மானிடவியலாளர். ஊர்சுலா நாவல்கள், சிறுகதைகள், குழந்தை இலக்கியம், கவிதை, கட்டுரைகள் எழுதினார். மிகுபுனைவு-களையும் விஞ்ஞானக் கதைகளயும் எழுதினார். அவர் பல எழுத்தாளர்களில் செல்வாக்குச் செலுத்தியவர். உதாரணமாக, சல்மான் ருஷ்டி, டேவிட் மிச்சல். எதிர்கால நம்பிக்கை உள்ளவர். பல விருதுகளும் பரிசுகளும் அவரை வந்தடைந்தன. அவரின் நாவல்கள் The Left Hand of Darkness, The Dispossessed, The Lathe of Heaven முதலியவை. Tales from Earthsea, Legend of Earthsea, Lathe of Heaven சினிமாப் படங்களாக எடுக்கப்பட்ட அவரின் மிகுபுனைவு நாவல்கள். நவீன உலக மனிதர்களின் அறம்சார் தடுமாற்றத்தை அழகாக எடுத்துரைத்த புகழ் பெற்ற கதை இது. அவருடைய கதைகளில் பல இலக்கியத்தில் தொன்மங்கள் என்று பாராட்டப் பெறுபவை)

வானம்பாடிகளைப் பறக்கச் செய்யும் மணிகளின் ஆரவாரத்துடன் கோடை கால விழா ஒமெல்லாஸ் நகரத்திற்கு வந்தது. அந்த நகரம், பிரகாசமான உயர்ந்த கோபுரங்களுடன் கடற்கரையில் அமைந்திருந்தது. துறைமுகத்தில் நின்ற படகுகளிலிருந்து மணியோசை ஒலித்தது. கொடிகள் சுடர்ந்து ஒளி வீசின. சிவப்பு கூரை ஓடுகள் போட்ட, சாயம் பூசிய சுவர்கள் உள்ள வீடுகள் ஊடாகவும், பாசி படர்ந்த பழைய தோட்டங்கள் ஊடாகவும், நிரையாக நின்ற மரங்களின் கீழாகவும், பெரும் பூந்தோட்டங்கள், பொதுக் கட்டிடங்கள் ஆகியவற்றைக் கடந்தும் ஊர்வலம் சென்றது.

சிலர் ஒழுங்கான உடையணிந்திருந்தனர். முதியவர்கள், மென்மையான ஊதா நிறத்திலும் சாம்பல் நிறத்திலும் நீண்ட, விறைப்பான உடுப்புக்கள் அணிந்திருந்தார்கள். மேலாண்மை தொழிலாளர்கள் முகத்தைக் கடுமையாக வைத்திருந்தனர். அமைதியான, களிப்புமிக்க பெண்கள் குழந்தைகளை சுமந்து கொண்டு பேசிக் கொண்டே நடந்து கொண்டிருந்தார்கள். அடுத்த வீதிகளில் தாள வாத்திய இசை வேகம் எடுத்திருந்தது. சேமக்கல மணியும் கஞ்சிராவும் ஒலித்தன. மக்கள் நடனமாடிக் கொண்டு சென்றனர். ஊர்வலம் ஒரு நடனமாகவே இருந்தது. குழந்தைகள் உள்ளே நுழைந்தும் வெளியேறிச் சென்றுகொண்டும் இருந்தனர். அவர்களுடைய உரத்த ஒலிகள் வானம்பாடிகளுடன் குறுக்காகப் பறந்து உயர்ந்து செல்வது போல, தாள வாத்திய இசைக்கும் பாடல்களுக்கும் மேலாக உயர்ந்து கேட்டன.



எல்லா ஊர்வலங்களும் நகரத்தின் வட பகுதிக்கு வளைந்து சென்று, பசும் திடல் என்றழைக்கப்படும் பெரும் நீர்ப் புல்வெளியில் முடிவடைந்தது. அங்கே சிறுவர்களும் சிறுமிகளும் பிரகாசமான வெளியில், வெறும் சட்டைகளில், சேற்றுக் கால்களுடனும், நீண்ட, சுறுசுறுப்பான கைகளுடனும், இடக்குப் பண்ணும் குதிரைகளை பந்தயத்திற்கு முன்பு உடற்பயிற்சி கொடுத்துக் கொண்டிருந்தார்கள். குதிரைகள், உலோக வாய்த் துண்டில்லாத கடிவாளத்தைத் தவிர வேறொன்றையும் அணிந்திருக்கவில்லை. அவற்றின் பிடரி மயிர்கள், வெள்ளி, தங்க, பச்சை நிற துகில் துண்டுகளால் பின்னப்பட்டு இருந்தன. அவற்றின் மூக்குத் துவாரங்கள் சீறிக் கொண்டிருந்தன. ஒன்றுக்கொன்று துள்ளிக் குதித்துக் கொண்டும் வீராப்புக் காட்டிக்கொண்டும் நின்றன. அவை மிகப் பெரியளவில் கிளர்ச்சியுற்றிருந்தன. குதிரைகள் மட்டுந்தான் எங்களுடைய விழாக்களைத் தங்களுடைய விழாக்களாக ஆக்கிக் கொண்டவை. வடக்குக்கும் மேற்குக்கும் மிகத் தூரத்தில், ஒமெல்லாஸை மலைகள் அரைவாசித் தூரம்வரை தமக்குள் விழுங்கி விட்டிருந்தன. காலையில் வளி மண்டலம் மிகத் துலக்கமாக இருந்ததால், பதினெட்டு மலையுச்சிகளிலும் இன்னும் மூடியிருந்த உறை பனி வெள்ளைத் தங்கமென, மைல் கணக்காகத் தெரிந்த கதிரவன் ஒளியில், ஆகாயத்தின் கரு நீல மேகத்தின் கீழ்த் தகதகத்தது. குதிரைப் பந்தயத் திடலைக் குறிக்கும் கொடிகள், அடிக்கடி படபடத்து பறப்பதற்குத் தேவையான அளவு காற்று வீசியது. அகன்ற பசுமையான பசும் புல்வெளியின் மௌனத்தில், வாத்திய இசை நகர வீதிகள் முழுவதும் வளைந்து வளைந்து, தூரத்திலும், அண்மையிலும், நெருங்கிக் கொண்டு வருவது கேட்கும். உற்சாகமான, மென்மையான, இனிமை நிறைந்த காற்று, இடைக்கிடை விதிர்த்து, திரும்பவும் ஒடுங்கி, பெரும் குதூகலத்துடன் ஒலிப்பதற்கு மணிகளைக் குலுங்கச் செய்யும்.

குதூகலம்! யாரால் அதை அப்படிச் சொல்ல முடியும்? ஒமெல்லாஸின் குடி மக்களை எப்படி அப்படி விபரிக்க முடியும்?

மகிழ்ச்சியாக இருந்த போதிலும், அவர்கள் எளிமையான மக்கள் அல்லர். உற்சாகமானவர்கள் போன்ற வார்த்தைகளை இனிமேல் எங்களால் சொல்ல முடியாது. எல்லா புன்முறுவல்களும் மறைந்து விட்டன. அப்படியான விபரங்களைக் கொடுப்பது சில கருதுகோள்களைக் கோரி நிற்கும். அப்படியான விபரங்களைக் கொடுத்தால், அடுத்து வரும் கருதுகோள் என்ன? அங்கே ஓர் அரசன் ஆடம்பரமான குதிரையில் அமர்ந்து, மந்திரி, பிரதானிகள் சூழ்ந்து வரப் பவனி வருவான். அல்லது தோள்வலிமையுள்ள அடிமைகள் தங்கப் பல்லக்கில் அவனைக் காவி வருவார்கள். ஆனால் அப்படியான ஓர் அரசன் அங்கில்லை. அவர்கள் வாட்களை உபயோகிக்கவில்லை. அவர்களிடம் அடிமைகளும் இல்லை. அவர்கள் காட்டுமிராண்டிகளும் அல்லர். அந்தச் சமூகத்தின் சட்டங்களோ விதிகளோ எனக்குத் தெரியாது. ஆனால் அப்படி இருந்தாலும் அவை மிக மிகக் குறைவே. அவர்கள் முடியாட்சியையும் அடிமை முறையையும் ஒழித்து விட்டது போலவே பங்குச் சந்தை, விளம்பரங்கள், இரகசியப் பொலிஸ், குண்டுகள் ஆகியவற்றையும் இல்லாதொழித்து விட்டார்கள். இருந்தும், அவர்கள் எளிய மனிதர்கள் அல்லர். இனிய இடையர்களோ, மேன்மையான காட்டுமிராண்டிகளோ, சுவையற்ற கற்பனாவதிகளோ அல்லர். அவர்கள் எங்களிலும் பார்க்கச் சிக்கலானவர்களும் அல்லர்.

பிரச்சினை என்ன? எங்களிடம் ஒரு கெட்ட பழக்கம் இருக்கிறது. அதாவது, மகிழ்ச்சி என்பது முட்டாள்த்தனமானது என்று. அந்த முட்டாள்த்தனத்தைக் கல்விக் கோட்பாட்டாளர்களும், போலிவாதம் செய்பவர்களும் மேலும் தூண்டியும் விடுவார்கள். அதாவது அவர்களின் வாதம் என்ன? உண்மையில் துன்பம் தான் அறிவானது என்றும் தீமை தான் சுவாரசியமானது என்பதும். இதுவே கலைஞனின் தேசத் துரோகம். அதாவது, தீமையின் அற்பத்தை ஏற்க மறுப்பதும், துன்பத்தின் பயங்கரமான சலிப்புத்தன்மையை ஏற்காததும். அவற்றை உங்களால் தோற்கடிக்க முடியாவிட்டால், அவற்றுடன் சேர்ந்து கொள்ளுங்கள். அது உங்களைக் காயப்படுத்தினால், திரும்பவும் செய்யுங்கள். ஆனால் நம்பிக்கையீனத்தை புகழ்வது, சந்தோசத்தைக் கண்டிப்பதற்குச் சமன். வன்முறையைக் கைக்கொள்வது, மற்றவற்றை எல்லாம் விட்டு விடுவதற்குச் சமன். மற்றவற்றை எல்லாம் நாங்கள் ஏறக்குறைய விட்டு விட்டோம். நாங்கள் எங்களை மகிழ்ச்சியான மனிதர்கள் என்று விபரிப்பதை விட்டு விட்டோம். எந்த மகிழ்ச்சியையும் கொண்டாடுவதில்லை. ஒமெல்லாஸ் மக்களைப் பற்றி உங்களுக்கு நான் எப்படிச் சொல்வது? அந்தக் குழந்தைகள் மட்டமான அறிவுள்ளவர்களோ மகிழ்ச்சியானவர்களோ அல்ல. ஆனால் அவர்களின் குழந்தைகள் உண்மையில் மகிழ்ச்சியானவர்கள். அவர்கள் பக்குவமானவர்கள், நுண்ணறிவுள்ளவர்கள், முற்றார்வமுள்ள வயது வந்தவர்கள். அவர்களுடைய வாழ்வு மகிழ்ச்சியற்ற இழிவானதல்ல. ஓ, அற்புதமானது! அதை என்னால் இன்னும் நன்றாக விபரிக்க இயலுமாக இருந்தால்...? என்னால் உங்களை நம்ப வைக்க முடியுமானால்..? எங்கோ, எப்போதோ, முன்னொரு காலத்தில் நடந்த தேவதைக் கதைகளில் வரும் நகரம் போன்றே என் வார்த்தைகளில் அது தோற்றம் தருகிறது. சிலவேளை அப்படிப்பட்டது உங்கள் தற்பு-

*தொடர்தல் 92ம் பக்கம்*

NOOLAHAM FOUNDATION

தமிழ் ஆவண மாநாடு 2013

www.noolahamfoundation.org

# தமிழ் ஆவண மாநாடு 2013

## ஆய்வுக்கட்டுரைகளுக்கான அழைப்பு

எமது நூலக நிறுவனம், 2013ல் ஆண்டில் தனது எட்டாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தனது ஆண்டு விழாவுடன் கூடியதாக " தமிழ் ஆவண மாநாடு 2013" ஐயும் நடாத்தவிருக்கின்றது. "ஈழத்துத் தமிழ்ச் சூழலில் ஆவணப்படுத்தலும் பேணிப் பாதுகாத்தலும்" எனும் தொனிப்பொருளில் நடைபெறவுள்ள இம் மாநாடு எதிர்வரும் 2013 ஏப்ரல் மாதம் 27 மற்றும் 28ம் திகதிகளில் நடைபெறும். தங்களது துறைசார்ந்த ஆய்வுக் கட்டுரையை இம்மாநாட்டுக்காகச் சமர்ப்பிப்பதன் மூலம் மாநாட்டினைச் சிறப்பிக்குமாறு தங்களைக் கோருகின்றோம். கீழ்வரும் விடயப்பரப்புகளுக்கு அமைவான ஆய்வுக்கட்டுரைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

**ஆய்வுக் கட்டுரைக்கான விடயப்பரப்புகள்**

1. வரலாறு, தொல்லியல் ஆவணங்களும் மரபறிவுப் பதிவுகளும்
2. ஒலி ,ஒளி, புகைப்பட ஆவணங்கள்
3. தனிமனித ஆளுமைகள், நிறுவனங்கள்
4. சமூகத்தை ஆவணப்படுத்தல்
5. மொழி இலக்கியப் பதிவுகள்
6. அறிவுப் பகிர்வும் கல்வியும்
7. ஆவணப்படுத்தலில் தொழில்நுட்பப் பயன்பாடுகள்
8. எண்ணிம நூலகங்கள் (Digital Libraries), இணையத்தளங்கள், தரவுத்தளங்கள்
9. நூல் விபரப்பட்டியலும், நூலகவியலும்
10. கலை பண்பாடு நினைவுகளும் ஆவணப்படுத்தலும்

400 சொற்களுக்கு மேற்படாத வண்ணம் அமையப்பெற்ற, ஆய்வுக் கட்டுரைகளுக்கான முன்வரைவுகளை 15.01.2013 க்கு முன்னதாக எதிர்பார்க்கின்றோம். இவை தமிழ் ஒருங்குறி (Unicode) எழுத்துருக்களில் தட்டச்சிடப்பட்டு மின்னஞ்சலில் (noolahamfoundation@gmail.com) அனுப்பப்படுவது விரும்பத்தக்கது. அதேவேளை தபால் மூலமாகவும் அனுப்பலாம். தெரிவு செய்யப்பட்ட முன்வரைவுகளுக்கான ஆய்வுக் கட்டுரைகள் தமது இறுதி வடிவத்துடன் 01-03-2013 அன்று அல்லது அதற்கு முன்னர் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். ஆய்வுக் கட்டுரைகளின் இறுதிவடிவம் 5000 சொற்களுக்கு மேற்படாததாக இருத்தல் வேண்டும்.

மாநாட்டு அமர்வுகளில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் அனைத்துக் கட்டுரைகளும் நூலக நிறுவனம் தனது ஆண்டு விழாவில் வெளியிடவுள்ள ஆய்விதழில் இடம்பெறும். கட்டுரையாளர்கள் மற்றும் பதிவு செய்து பங்குபெறுவோர் அனைவருக்கும் மாநாடு நடைபெறும் நாட்களில் மாநாட்டு சிறப்புமலர் வெளியீடுகள், கோப்புக்கள் போன்றவை வழங்கப்படும். மாநாடு தொடர்பான அனைத்து விபரங்களையும் நூலக நிறுவனத்தின் இணையத்தளத்தில் (www.noolahamfoundation.org) இருந்து பெற்றுக்கொள்ளலாம். முழுப்பெயர், மின்னஞ்சல், வதிவிடமுகவரி ஆகிய விபரங்களுடன் ஆய்வுக்கட்டுரைகளுக்கான முன்வரைவுகள், கட்டுரைகள் ஆகியவற்றை அனுப்புதலுக்கும் பிறதொடர்புகளுக்கும் கீழுள்ள முகவரியை உபயோகிக்கலாம்

உங்களின் மேலான ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றோம்.

நன்றி

**நூலக நிறுவனம்,**
**இல.07, 57வது ஒழுங்கை,**
**கொழும்பு - 06.**
**0112 363 261**



## சன்சோனிக் நிறுவனத்தின் நத்தார், புதுவருட சிறப்புச் சலுகைகள்

# ENJOY FREE ONE YEAR HOME PHONE

Home Internet
$29.95 per month*
(Unlimited High Speed Internet)

sun sonic
Connecting you to yours

Sun Sonic Inc.
416-907-7777
info@sunsonic.ca
www.sunsonic.ca

*Free homephone is only available for charges paid upfront 1 year for internet. This promo is for limited time only and subject to change without prior notice and the promotion may be available for the 1st year only. Device and installation charges may apply.

# ஒமெல்லாஸை...

**90ம் பக்கத் தொடர்ச்சி...**

னைவின் தந்திரங்கள் என்று கற்பனை செய்வதுதான் சிறந்ததாக இருக்கும். அது அந்த நேரத்திற்குத் தகுந்த மாதிரி தன்னை மாற்றிக் கொள்ளலாம் என்று கருத முடியுமானால் நல்லது. ஏனென்றால் உங்கள் எல்லாரையும் என்னால் திருப்திப்படுத்த முடியாது. உதாரணமாக, தொழில் நுட்பம். அந்த வீதிகளில் கார் ஓட முடியாது. அல்லது அவற்றுக்கு மேலே ஹெலிகொப்ரர்கள் பறக்க முடியாது. ஒமெல்லாஸில் வாழ்ந்த மக்கள் மகிழ்ச்சியாகவே வாழ்ந்தார்கள் என்பது தான் இதன் பொருள். மகிழ்ச்சி என்பது மூன்று விஷயத்தைப் பொறுத்தது. முதலாவது, தேவையைப் பொறுத்தது. இரண்டாவது, எது தேவையற்றது அல்லது அழிவை ஏற்படுத்தாது என்பதைப் பொறுத்தது. மூன்றாவது, அழிவை ஏற்படுத்துவது எது என்பதைப் பொறுத்தது. இரண்டாவதைப் பொறுத்தவரை, அதில் வசதி, சொகுசு, பேருவகை முதலியவை அடங்கும். அவற்றில் மையக் கணப்படுப்பு, சுரங்க ரயில், சலவை இயந்திரம் போன்ற இங்கே இன்னும் வராத அற்புதமான கண்டுபிடிப்புக்கள் அடங்கும். அத்துடன், மிதக்கும் மின்சார மூலங்கள், எரிபொருளற்ற மின்சார வலு, சாதாரண சளி போன்றவற்றுக்கு மருந்து கண்டு பிடிக்காதது கூட அதில் அடங்கும். அல்லது மேற்சொன்னவற்றில் எதுவுமே அற்றதாகக் கூட இருக்கலாம். அதைப் பற்றிப் பரவாயில்லை. உங்கள் விருப்பம் போலவே, கடற்புற நகரங்களுக்கு மேற்புறமும் கீழ்ப்புறமும் இருந்து வேகமான சின்னஞ் சிறிய புகைவண்டிகளிலும், இரண்டு தட்டு ஊர்திகளிலும் விழாக் காலத்திற்கு முன்னுள்ள சில நாட்களில் ஒமெல்லாஸுக்கு மக்கள் வருகிறார்கள் என்றே நான் எண்ண விரும்புகிறேன். ஒமெல்லாஸிலிருந்த புகையிரத நிலையம் நகரத்திலிருந்த கட்டிடங்களிலேயே உண்மையில் மிக மிக அழகானது. ஆனால் விவசாயிகள் சந்தையிலும் பார்க்க எளியது. ரயில்கள் கூட, ஒமெல்லாஸைப் பொறுத்தவரை நல்லது என்றே உங்களில் சிலர் நினைக்கலாம். புன் சிரிப்புக்கள், மணிகள், அணிவகுப்புக்கள், குதிரைகள், ம் ம் எல்லாமும் தான்.

அப்படியென்றால், அத்துடன் தயவுசெய்து காமக் களியாட்டத்தையும் சேர்த்துக் கொள்ளுங்கள். காமக் களியாட்டமும் அதற்கு உதவும் என்றால் அதை அதில் சேர்த்துக் கொள்வதற்கும் தயங்க வேண்டாம். அழகான நிர்வாணக் குருமார்களும் குருத்தினிகளும் ஏற்கெனவே அரைவாசி பேரின்பத்தில் திளைத்து மெய் மறந்த நிலையில் இருப்பவர்கள், எவருடனும், - குருதியின் ஆழமான இறைத் தன்மையுடன் கலப்பதற்கு அவாவிக் கொண்டிருந்த, (அதுவே என்னுடைய முதல் எண்ணமாக இருந்தது என்பதும் உண்மை) - எந்த ஆணாகவோ பெண்ணாகவோ, அல்லது காதலனாகவே அந்நியனாகவோ இருக்கலாம், அவர்கள் எவருடனும் புணர்வதற்குத் தயாராக இருக்கும் கோயில்கள் எங்களுக்கு வேண்டாம். உண்மையில் ஒமெல்லாஸில் எந்தக் கோயிலுமே இருப்பது கூடாது. குறைந்தது, அப்படி இருந்தாலும், மனிதர்கள் உள்ள கோயில்கள் இருக்கக் கூடாது. சமயம் இருக்கலாம். ஆனால், மத குருமார் வேண்டாம். நிச்சயமாக அழகான நிர்வாணிகள் எங்கும் சும்மா சுற்றித் திரியலாம். தங்கள் தெய்வீக இனிப்புணவையோ, சதையின் பேரின்ப பரவசத்தையோ தேவைப்படுபவர்களுக்குக் கொடுக்கலாம். அவர்களும் ஊர்வலத்தில் கலந்து கொள்ளட்டும். புணர்ச்சிக்கு மேலாகக் கஞ்சிரா இசைக்கட்டும். பேராவாவின் குருதிக் களரியை சேமக்கல மணி ஓசை அறைந்து தெரிவிக்கட்டும். (இதுவும் முக்கியமான விஷயம்தான்). போகச் சடங்குகளிலிருந்து கிடைக்கும் சந்ததிகளில் எல்லாரும் பிரியப்படட்டும், அவற்றை அனைவரும் பேணிப் பாதுகாக்கட்டும்.

எனக்கொன்று மட்டும் தெரியும் ஒமெல்லாஸில் எவருமே குற்றவாளிகளல்ல. அதைவிட வேறென்ன அங்கிருக்க வேண்டும்? போதைப் பொருட்கள் அங்கில்லை என்று முதலில் நினைத்தேன். அது தூய்மையானவர்களின் எண்ணம். போதைப்பொருளை விரும்புபவர்கள், போதையும் மதுவும் கலந்த கலவையில் காணும் மென்மையான நீடித்த இனிமையான நகரம் சென்று கொண்டிருக்கும் போக்குக்கு நறுமணம் சேர்க்கலாம். அந்தப் போதைக் கலவை ஆரம்பத்தில் மனதிற்கும் உடல் உறுப்புக்களுக்கும் பெரும் ஆறுதலையும் பிரகாசத்தையும் அளிக்கலாம். சில மணி நேரத்திற்குப் பிறகு கனவு நிலைப்பட்ட பெரும் சோர்வும், ஆச்சரியமான காட்சிகளும் தெரியலாம். அதில் பிரபஞ்சம் சம்பந்தமான புதிர் நிறைந்ததும் உள்ளார்ந்ததுமான இரகசியங்களும் தெரியலாம். அத்துடன், நம்ப முடியாதளவு பால் இன்பத்தையும் தூண்டலாம். அது பழக்கப்பட்டு விடாது. இன்னும் அடக்கமான ருசிக்கு பியர் குடிக்கலாம் என்று நினைக்கிறேன். மகிழ்ச்சியான விஷயங்கள் இன்னும் என்ன அந்த நகரத்தில் உள்ளன? வெற்றி பற்றிய எண்ணம். நிச்சயமாக அதுவொரு வீரத்தைப் பற்றிய கொண்டாட்டமே. ஆனால் நாம் குருமாரை இல்லாமல் செய்தது போல, போர் வீரர்களையும் இல்லாமல் ஆக்குவோம். வெற்றிகரமாக கொலை செய்தபின் கிடைக்கும் மகிழ்ச்சி உண்மையான மகிழ்ச்சியல்ல. அது சரியல்ல. அது அச்சமூட்டுவது. அது அற்பமானது. எல்லையற்ற, தாராள மன நிறைவு, மகத்தான வெற்றி ஆகியவை வெளியேயுள்ள எதிரிகளை வென்றதால் ஏற்பட்டதொன்றல்ல. மாறாக,



எல்லா மனிதர்களிலும் உள்ள, எங்கும் நிறைந்த ஆன்மாவின் மிகத் தூய்மையான, மிக நியாயமான ஒன்றுடனான புனித ஐக்கியமும், உலகின் கோடைகால மகிமையுமே அது. அதுவே ஒமெல்லாஸிலுள்ள மக்களின் இதயங்களை பெருமிதம் கொள்ளச் செய்கின்றது. அவர்கள் கொண்டாடும் வெற்றி, வாழ்வைக் கொண்டாடுகிறது. அவர்களுக்குப் போதைப் பொருளை எடுக்க வேண்டிய அவசியமிருக்கவில்லை என்றே நான் நினைக்கிறேன்.

அநேகமான எல்லா ஊர்வலங்களும் பசுமையான வெளியை இப்பொழுது அடைந்து விட்டன. உணவுகளின் அற்புதமான மணம் சிவப்பு, நீல நிறச் சமையல் கூடாரங்களிலிருந்து வெளி வருகின்றன. சிறு குழந்தைகளின் முகங்கள் விரும்பத்தக்க மாதிரி பிசுபிசுப்பானதாக இருந்தன. ஆண் ஒருத்தனின் மிருதுவான நரைத்த தாடிகளில் சிறந்த பலகாரத்தின் மாத் துளிகள் சில ஒட்டிக் கொண்டிருந்தன. வாலிபர்களும் யுவதிகளும் தங்கள் குதிரைகளில் ஏறி மைதான வெளியில் உள்ள ஆரம்ப வரிசையில் கூடிக் கொண்டிருந்தார்கள். உயரம் குறைந்த, மொத்தமான, முதியவள் ஒருத்தி புன் சிரிப்புடன் கூடையிலிருந்து பூக்களை எடுத்துக் கொடுத்துக் கொண்டிருந்தாள். அவள் கொடுத்த பூக்களை, உயரமான வாலிபர்கள் ஒளிரும் தலைமுடியில் அணிந்து கொண்டிருந்தார்கள். ஒன்பதோ பத்தோ வயதுள்ள ஒரு சிறுவன் கூட்டத்தின் விளிம்பில் தனியாக இருந்து, மரத்தினால் செய்யப்பட்ட புல்லாங்குழல் வாசித்துக் கொண்டிருந்தான்.

மக்கள் அவன் வாசிப்பதைக் கவனிப்பதற்கு நின்று கொண்டிருந்தார்கள். முறுவலித்தார்கள். ஆனால் அவனுடன் பேசவில்லை. காரணம், அவன் வாசிப்பதை நிறுத்தவில்லை. அவர்கள் நிற்பதை அவன் பார்க்கவும் இல்லை. அவனுடைய கறுத்தக் கண்கள் இனிமையான இசையின் மந்திரத்தில் மெய் மறந்திருந்தன.

அவன் வாசிப்பதை நிறுத்திவிட்டு, புல்லாங்குழல் வைத்திருந்த கைகளை மெதுவாகக் கீழே இறக்கினான்.

அந்தச் சிறிய தனிப்பட்ட மௌனம் ஒரு சமிக்ஞை போன்று, ற்றம்பற் ஊதுகுழல் உடனடியாக ஓட்ட ஆரம்ப வரிசைக்கு சமீபத்திலிருந்த அரங்கிலிருந்து ஒலிக்க ஆரம்பித்தது. கம்பீரமான, ஆனால் துக்கமான, துளைக்கும் ஒலி அது. குதிரைகள் தம் ஒல்லியான கால்களை பின்னால் உதைத்தன. அதற்குப் பதிலளிப்பது போலச் சில குதிரைகள் கனைத்தன. குடிமயக்கமற்ற முகமுள்ள, இளம் ஓட்டுநர்கள் தம் குதிரைகளின் கழுத்தைத் தடவி, சாந்தப்படுத்தி, ‘அமைதி, அமைதி, என் அழகியே, என் நம்பிக்கையே...’ என்று முணுமுணுத்தனர். ஓட்டம் ஆரம்பிக்கும் வரிசையில் நிற்க ஒவ்வொருவராக வெளிக்கிட்டார்கள். குதிரைப் பந்தயத் திடலில் மக்கள் கூட்டம் காற்றில் ஆடும் புல்லாகவும், மலராகவும் அலை மோதினார்கள். கோடை விழா ஆரம்பமாகிவிட்டது.

உங்களால் நம்ப முடிகிறதா? விழாவை, நகரை, மகிழ்ச்சியை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா? இல்லையா? அப்படியானால் இன்னொன்றையும் விபரிக்க என்னை அனுமதியுங்கள்.

ஒமெல்லாஸின் அழகான கட்டிடம் ஒன்றின் நிலவறை ஒன்றில் அல்லது சிலவேளை விசாலமான தனியார் வீடொன்றின் நிலவறையில் ஜன்னல் இல்லாத ஓர் அறை இருந்தது. அதில் பூட்டப்பட்ட ஒரு கதவிருந்தது. பலகைகள் இரண்டின் நீக்கல் ஒன்றினூடாக வந்த சிறிய தூசு ஒளி அதன் உள் நுழைந்திருந்தது. அந்த ஒளி கூட, நிலவறையின் ஜன்னலில் எங்கோ கட்டியிருந்த சிலந்தி வலையிலிருந்து வந்ததே. அந்தச் சிறிய அறையின் ஒரு மூலையில், விறைப்பான, உறைந்து போன, துர்மணம் வரும் இரண்டொரு துடைப்பங்கள், கறள் பிடித்த ஒரு வாளியுள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. நிலம் ஊத்தையாக இருந்தது. வழக்கமா நிலவறை ஊத்தையாக இருப்பது போல. கை வைத்தால் கொஞ்சம் ஈரமாகவும் இருந்தது.

அந்த அறை மூன்றடி நீளமும், இரண்டடி அகலமும் கொண்டது. விளக்குமாறுகள் அல்லது பாவிக்காத கருவிகள் வைக்கும் மறைவிடம் அது. அறையில் ஒரு குழந்தை குந்தியிருந்தது. அதுவொரு ஆண் குழந்தையாகவோ அல்லது பெண் குழந்தையாகவோ கூட இருக்கலாம். அதற்கு ஆறு வயதிருக்கலாம். ஆனால் உண்மையில் அதற்கு ஏறக் குறைய பத்து வயது. மனம் பலவீனமான குழந்தை. அது பிறக்கும்போதே மனக் குறை நலத்துடன் பிறந்திருக்கலாம். அல்லது பயத்தால், போஷாக்கின்மையால், கவனிப்பின்மையால் அறிவு குறைந்ததாகி இருக்கலாம். அது தன் மூக்கைத் தோண்டிக் கொண்டிருந்தது. வாளியிலிருந்தும் இரண்டு துடைப்பான்களிலிருந்தும் தூரத்தில், ஒரு மூலையில், குனிந்து கொண்டு, இடைக்கிடை தன் கால் விரல்களை அல்லது பிறப்புறுப்புக்களை கையால் சொறிந்து கொண்டிருந்தது. துடைப்பான்களுக்கு அது பயம். அவை பயங்கரமானவை என்று அது நினைத்தது. தன் கண்களை மூடியிருந்தது. இருந்தும், அவை அவ்விடத்தில் நிற்கின்றன என்று அதற்குத் தெரியும். கதவு எப்பொழுதும் பூட்டியிருந்தது. ஒருவரும் ஒரு போதும் அங்கே வருவதில்லை. ஆனால் சில வேளை கதவு பயங்கரமாக ஆடித் திறக்கும். அப்பொழுது ஒருவனோ பலரோ அங்கு வருவார்கள். அவர்கள் வரும் நேரமோ, எவ்வளவு நேரத்திற்கு ஒருக்கால் வருகிறார்கள் என்பதோ அக்குழந்தைக்குப் புரியாது. வந்தவர்களில் ஒருவன் அக்குழந்தை எழுந்து நிற்க வைப்பதற்காக அதை உதைப்பான், மற்றவர்கள் அக்குழந்தைக்கு அருகில் வரவே மாட்டார்கள். ஆனால் அதைப் பயத்துடனும், வெறுப்புடனும் உற்றுப் பார்ப்பார்கள். உணவுத் தட்டும் தண்ணீர் குடுவையும் அவசர அவசரமாக நிரப்பப்படும், கதவு சாத்தப்படும். கண்கள் மறைந்துவிடும். கதவடியில் நின்றவர்கள் எதுவுமே பேச மாட்டார்கள். அக்குழந்தை, அந்தக் கருவி அறையில் தான் என்றுமே வாழ்ந்தது என்றும் இல்லை. அதனால் சூரிய ஒளியும் தன் தாயின் குரலும் அதற்கு நினைவிருக்கின்றன. அத்துடன் அது சிலவேளை பேசிக் கொள்ளவும் செய்யும். ‘நான் ஒழுங்காக நடப்பேன். என்னை வெளியே போக விடுங்கள். நான் ஒழுங்காக நடப்பேன்’ என்று சொல்லும்.

*தொடர்தல் 93ம் பக்கம்*

# GLORIOUS

GRAPHICS PRINT VIDEO PHOTO WEB

gloriousprinters.com **905.471.2500**

8.5" x 11" LAYOUT

## We Print

- Wedding Cards
- Invitations & Postcards
- Letterhead & Invoices
- Stamps & Emboss Seals
- Calendar Magnets
- Brochures & Flyers
- Menus / Display Board
- Banners / Vinyl
- Real Estate Sign Boards

**Our goal is to help our clients to save more, and get more result.**

11" x 8.5" LAYOUT

## WEBSITE DESIGN

Quality web design services for small & medium sized businesses, and start-ups.

You Tube

**Starting from $249**

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்

**905.471.2500**

gloriouss.ca
printglorious@gmail.com
info@gloriousprinters.com
9889 Highway 48 Unit 9,
Markham ON, L6E 0B7

**Graphic Design Services**

Custom Logo Design
Print Art Design

8.5" x 5.5" LAYOUT

GLORIOUS VIDEO productions

CONCEPT SHOOT EDIT

**Videography**

- Cinematic Wedding
- Post-Production
- Live Event Stream
- Ad Film / Corporate Video

**Photography**

- Digital Photography
- Digital Album
- All Framing
- Guest Book

5.5" x 8.5" LAYOUT

**One (1) design & concept in four (4) different layout (size)**

**PROMO ENDS FEBRUARY 28, 2013**

BUY MORE $99 SAVE MORE

SOME CONDTIONS APPLY.

# ஒமெல்லாஸை...

92ம் பக்கத் தொடர்ச்சி...

அவர்கள் அதற்கு பதிலே சொல்ல மாட்டார்கள். இரவில் அக்குழந்தை உதவி கேட்டு கூக்குரல் இட்டுக் கன நேரம் அழும். ஆனால் இப்பொழுது அது 'ஏ, ஹா, ஏ ஹா' என்று மட்டுமே மூக்கால் அழுகின்றது. இப்பொழுது பேசுவது குறைந்து கொண்டு வந்து விட்டது. அந்தக் குழந்தையின் உடல் மிக மிக மெலிந்து போய் விட்டது. அதன் கால்களில் கெண்டைக் கால்களே இல்லை. அதன் வயிறு ஊதி இருந்தது. அது ஒரு நாளைக்கு அரைக் கோப்பை கோதுமை உணவிலும், கொஞ்சக் கொழுப்பிலும் காலத்தைத் தள்ளியது. ஆடைகள் எதுவும் அணியவும் இல்லை. எந்த நேரமும் தன்னுடைய கழிவுகளிலேயே குந்தி இருந்தபடியால் அதன் குண்டிகளும் தொடைகளும் சீழ் ஒழுகும் புண் கட்டிகளாகவே இருந்தன.

ஒமெல்லாஸிலுள்ள மக்கள் மக்கள் எல்லோருக்கும் அது அங்கிருப்பது தெரியும். சிலர் அதைப் பார்ப்பதற்கு வந்தும் இருந்தார்கள். சிலருக்கு அக் குழந்தை அங்கிருக்கிறது என்பது தெரிந்தது மட்டும் போதுமானதாக இருந்தது. அது அங்கிருக்க வேண்டும் என்பது மட்டும் எல்லோருக்கும் தெரியும். ஏன் அது என்பது சிலருக்குப் புரியும். சிலருக்குப் புரியாது. ஆனால் அவர்கள் எல்லோருடைய மகிழ்ச்சி, நகரத்தின் அழகு, அவர்களின் நட்புகளிலுள்ள நெகிழ்ச்சி, குழந்தைகளின் உடல் நலம், அறிஞர்களின் அறிவு, தயாரிப்பாளர்களின் செயற் திறன்கள், அபரிமிதமான அறுவடை, நலமான காலநிலை போன்ற முழுவதும் இந்தக் குழந்தையின் அருவருப்பான அவலத்தில் தான் தங்கியிருக்கிறது என்பது அவர்களுக்குத் தெரியும்.

பொதுவாக எட்டுக்கும் பத்துக்கும் உட்பட்ட வயதுடைய குழந்தைகளுக்கு, அவர்களுக்குப் புரிந்தால், அதை விளங்கப் படுத்துவார்கள். அந்தக் குழந்தையைப் பார்க்க வருபவர்கள் அநேகமாக இளையோர்களே. சிலவேளை வயது வந்தவர்களும் வருவார்கள். அல்லது அவர்களே திரும்பவும் அக்குழந்தையைப் பார்க்க வருவார்கள். எத்தனை தான் அதை நன்றாக விளங்கப் படுத்தியிருந்தாலும் அவர்கள் ஒவ்வொரு முறை வந்து பார்க்கும்போதும், அந்த இளம் பார்வையாளர்களுக்கு அந்தக் காட்சி அதிர்ச்சியையும், அருவருப்பையும் உண்டாக்கும். தாங்கள் உயர்ந்தவர்கள் என்ற எண்ணத்தால் அவர்களுக்கு அது வெறுப்பை ஏற்படுத்தும். எல்லாம் விளங்கப்படுத்திய பிறகும் அவர்கள் ஆத்திரப்படுவார்கள், சீற்றம் கொள்வார்கள், வலுவற்றவர்களாகத் தங்களை உணர்வாளர்கள். அந்தக் குழந்தைக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று விரும்புவார்கள். ஆனால் அவர்களால் ஒன்றுமே செய்ய இயலாது. அந்தக் குழந்தையை இழிவான அவ்விடத்திலிருந்து வெளிச்சத்திற்குள் கொண்டு வந்து, துடைத்து, சுத்தம் செய்து, உணவூட்டி, அதற்கு வசதி செய்து கொடுப்பது உண்மையில் நல்லதொரு செயலே. ஆனால் அப்படிச் செய்தால், அந்த நாள், அந்தக் கணமே ஒமெல்லாஸின் சகல செழிப்பும், அழகும், மகிழ்ச்சியும் வாடி வதங்கி, அழிந்து விடும். அவையே அதன் நிபந்தனைகள். அந்தச் சிறிய ஒற்றை மேம்பாடே, ஒமெல்லாஸ் மக்கள் ஒவ்வொருவரின் வாழ்வின் வளத்தையும் சிறப்பையும் இல்லாமல் ஆக்கி விடும். ஆயிரக் கணக்கான மக்களின் மகிழ்ச்சியும், ஒருவனின் மகிழ்ச்சிக்கு வாய்ப்பளிப்பதற்காக வீசப் பட்டு விடும். அதுவே அந்தச் சுவர்களின் உள்ளே அக்குற்றவுணர்வை விட்டுவிடுவதற்கான உண்மைக் காரணம்.

நிபந்தனைகள் மிகக் கறாரானவை, அறுதியானவை. அதில் அன்பான வார்த்தை ஒன்றைக்கூட, அந்தக் குழந்தையுடன் பேச இடமில்லை.

அங்கே சென்று அந்தக் குழந்தையைப் பார்த்து, அந்தப் பயங்கரமான முரண் உண்மையையும் அறிந்த இளையோர் அடிக்கடி கண்ணீருடன் அல்லது கண்ணீரற்ற பெரும் கோபத்தில் வீடு திரும்பினார்கள். அவர்கள் இதைப்பற்றி கிழமைக் கணக்காக, ஆண்டுக் கணக்காக ஆழ்ந்து சிந்திப்பார்கள். ஆனால் காலம் போகப்போக, குழந்தையை விடுவித்தால், அந்தக் குழந்தை தன் விடுதலையை அனுபவிக்காது, வெது வெதுப்பும் உணவிலிருந்து கிடைக்கும் தெளிவில்லாததோரு சிறிய இன்பமும் அதற்குக் கிடைக்கும். இப்பொழுது இருப்பதை விட கொஞ்சம் அதிகம் கிடைக்கும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. ஆனால் அது அவ்வளவுதான் என்று அவர்களும் நினைக்க தொடங்கினார்கள். அவை அதற்கு உண்மையான மகிழ்ச்சியை அளிக்கும் என்று நினைப்பதுகூட மிக இழிவானது, மனப் பலவீனதுமானது. பயத்திலிருந்து விடுதலை பெறுவதைப் பற்றி நினைக்கவே நீண்ட காலம் பயந்தார்கள். மனிதாபிமான சிகிச்சைக்கு அதன் பழக்கங்கள் பெரிதாக இடம் கொடுக்கா. அவை அத்தனை பண்படாதவை. உண்மையில், அதனைப் பாதுகாப்பதற்கு நீண்ட காலம் இருந்த சுவர்கள் இல்லாமல் இருப்பதோ, கண்களைப் பாதுகாக்க இருட்டின்றி இருப்பதோ, குந்தி இருப்பதற்கு கழிவுகள் இல்லாமல் இருப்பதோ அதற்குத் துயரம் நிறைந்ததாக இருக்கும். யதார்த்தத்தின் பயங்கரமான உண்மையை அவர்கள் உணர்ந்து கொண்டு அதை ஏற்றுக்கொண்டபோது, கசப்பான அநீதியைக் கண்டு அவர்கள் உதித்த கண்ணீர் காய்ந்து போனது. இருந்தும், அவர்களின் கண்ணீர், கோபம், பெருந்தன்மை, இயலாமையை ஏற்றுக் கொண்டமை போன்றவை அவர்கள் வாழ்வின் மகத்துவத்தின் உண்மையான ஊற்றுக்கால்கள். அவர்களின் மகிழ்ச்சி சாரமற்ற, பொறுப்பற்ற மகிழ்ச்சியல்ல. அந்தக் குழந்தையைப் போல, தாங்களும் சுதந்திரமானவர்களல்ல என்பது அவர்களுக்கும் தெரியும். அவர்களுக்குக் கருணை பற்றியும் தெரியும். குழந்தையின் இருப்புத்தான், அது இருக்கிறது என்ற அறிவுதான், அங்கிருக்கும் கட்டிடக் கலையின் உயர் பண்பு, இசையின் ஆழமான தொடுகை, விஞ்ஞானத்தின் ஆழம் எல்லாவற்றையும் சாத்தியமாக்குகிறது என்பது அவர்களுக்குத் தெரியும். அந்தக் குழந்தை தான், மற்றக் குழந்தைகளின் மேல் அவர்கள் அன்பாக இருக்கக் காரணமும். அந்த மகிழ்ச்சியற்ற அந்தக் குழந்தை, இருட்டில் முனகிக் கொண்டிருக்காவிட்டால், புல்லாங்குழல் வாசிக்கும் மற்றக் குழந்தை மகிழ்ச்சியாக இசைக்க முடியாது. குதிரை ஓட்டப் போட்டிக்கு இளம் ஓட்டுநர்கள், கோடை கால முதல் நாள் சூரிய ஒளியில் தங்கள் அழகான குதிரைகளில் வரிசையில் நிற்க முடியாது.

இப்பொழுது அவர்கள் சொல்வதை நீங்கள் நம்புகிறீர்களா? அவர்கள் இப்பொழுது கூடுதலாக நம்பகமாகத் தெரியவில்லையா? ஆனால் இன்னும் ஒன்று சொல்ல இருக்கிறது. அது இன்னும் நம்ப முடியாதது.


சிலவேளைகளில் வளர் இளம் பருவ சிறுமியோ சிறுவனோ அந்தக் குழந்தையைப் பார்க்கச் சென்றால், அழுவதற்கோ, கடுங் கோபம் கொள்வதற்கோ வீட்டுக்குத் திரும்பிச் செல்வதில்லை. உண்மையில் வீட்டுக்கே திரும்புவதில்லை. சிலவேளை வயது சென்ற ஓர் ஆணோ பெண்ணோ இரண்டொரு நாள் மௌனமாக இருந்து விட்டு, வீட்டை விட்டே வெளியேறிச் சென்றுவிடுவர். இவர்கள் வீதிகளுக்குச் சென்று மேலும் கீழும் தனியாக நடப்பார்கள். நடந்தே ஒமெல்லாஸ் நகரத்தை விட்டு அழகான வெளி வாசலால் வெளியேறி விடுவார்கள். ஒவ்வொருவரும் தனியாகவே செல்வார்கள். அவர்கள் சிறுவனாகவோ சிறுமியாகவோ ஆணாகவோ பெண்ணாகவே இருக்கலாம்.

இரவு வரும். பயணிகள் கிராமங்களின் வீதிகள் ஊடாகவும், மஞ்சள் ஒளியுள்ள ஜன்னல் உள்ள வீடுகள் இடையேயும் சென்று வெளியேறி வயல் வெளி இருட்டுக்குள் செல்வார்கள். ஒவ்வொருவரும் தனியாக மேற்கிலும் வடக்கிலும் மலைகளை நோக்கிச் செல்வார்கள். போய்க்கொண்டே இருப்பார்கள். ஒமெல்லாஸை விட்டுப் போய் விடுவார்கள். இருட்டுக்குள் போய் விடுவார்கள். அவர்கள் திரும்பி வருவதே இல்லை. அப்படிப் போகும் இடங்கள் அவர்கள் விட்டுச் சென்ற மகிழ்ச்சியின் நகரமாகிய ஒமெல்லாஸை விட, எங்கள் பலரின் கற்பனையில் குறைவானதாக இருக்கலாம். அதை என்னால் விபரிக்கவே முடியாது. அப்படியான ஓர் இடம் இல்லாமலே கூட இருக்கலாம். ஆனால் ஒமெல்லாஸை விட்டுப் போகும் அவர்களுக்கு தாங்கள் எங்கே போகிறோம் என்பது தெரியும் போலும்.



mahalingam.k@thaiveedu.com

TBC Toronto Business College
கனடாவில் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்



DIPLOMA PROGRAMS

Accounting & Payroll Admin.
Duration: 35 Weeks (Co-op Available)
Job Opportunities: Accounting & Payroll Clerk, Payroll Clerk
Payroll & Benefit Clerk, Pay Clerk

Business Administration
Duration: 26 Weeks
Job Opportunities: Office Administrator, Administrative Officer,
Office Manager, Planning Officer, Office Services Co-ordinator

Computerized Accounting
Duration: 26 Weeks
Job Opportunities: Accounts Clerk, Accounts Payable
Accounts Receivable, Accounts Assistant, Book Keeper

Medical Office Admin.(MOA)
Duration: 32 Weeks
Job Opportunities: Medical Secretary, Medical Office Assistant
Health Office Administrator, Hospital Ward Clerk

Personal Support Worker(PSW)
Duration: 26 Weeks (NACC Diploma Certificate)
Job Opportunities: Personal Support Worker, Patient Care Aid
Hospital Attendant, Long Tern Care Aid

Bank Teller Course
Starts Feb. 6, 2013

Personal Support Worker (PSW)
Starts Mar. 4, 2013

SECOND CAREER
யார் தகுதி உடையவர்கள் ?
★ EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
★ 2005ம் ஆண்டுக்குப்பின் EI பெற்றவர்கள்
★ 5 வருடங்களுக்குள் Maternity / Parental Benefits பெற்றவர்கள்
அரசாங்க நிதி உதவியில் கற்கலாம்
Tuition Fees, Books, Living Expenses
Day care & Transportation up to $28000
அனைத்தும் இலவசம்
Second Career மறுக்கப்பட்டவர்கள்,
New Immigrants are also Welcome

Certificate Courses
Windows, Word, Excel, PPT, Access
Quick books, Simply Accounting, Accpac
Food Handler Certification
First Aid & CPR
Canadian Securities Course
Online Stock Trading & More

OACC PROUD MEMBER

☎ 416-291-5155 ☎
4465 Sheppard Ave. East #208
[ Sheppard & Brimley ] Scarborough
www.tbcollege.com info@thcollege.com
Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)

### றொறன்ரோ மாநகரில்

# பேராசிரியர் சேவியர் எஸ். தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழாவும் ஆராய்ச்சி மகாநாடும்



பாரதியார் கண்ட கனவாகிய “தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்” என்பதனைச் செயற்படுத்திய செயல் வீரனும், உலகெல்லாம் தமிழ்த் தூதனாய் சென்று தமிழை ஏனைய வேற்று மொழி நாடுகளில் எமது செந்தமிழின் மாட்சிமையைப் பாரெங்கும் அறியச் செய்தவர் பேராசிரியர் தனிநாயகம் அடிகள் ஆவார். உலகத் தமிராய்ச்சி மகாநாடு என்னும் சிந்தனை அடிகளாரது மனதிலேயே முதன் முதல் தோன்றியது. அத்தகைய கருத்தினை முதலில் 1964ஆம் ஆண்டு புதுடில்லியில் நடைபெறற கீழ்த்திசை மகாநாட்டில் கலந்து கொண்ட தமிழறிஞர்கள் மற்றும் தமிழ் ஆர்வலர்களிடையே வெளியிட்டு பலவேறு அறிஞர்களின் உதவியோடு “உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தினை” நிறுவி அவர் உயிரோடு இருக்கும் வரை நான்கு மகாநாடுகளை நாடாத்தியவர். இதன் முதல் மகாநாடு கோலாலம்பூரிலும், இரண்டாவது மகாநாடு சென்னையிலும், மூன்றாவது மகாநாடு பிரான்ஸ் தலைநகர் பரிசிலும், நான்காவது மகாநாடு யாழ்ப்பாணத்திலும் நடாத்திப் பெருமை கொண்டவர். இம்மகாநாடுகளில் பலவேறு நாடுகளில் இருந்து பலவேறு மொழி பேசும் பல்வேறு அறிஞர்கள் பங்குபற்றி தமிழாய்ந்தார்கள்.

பேராசிரியர் அவர்கள் 1980 செப்ரம்பர் 1ஆம் திகதியன்று இறைபதம் எய்தினார். அதன் பின்பும் இயங்கிய உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் தொடர்ந்து மேலும் நான்கு தமிழ் ஆராய்ச்சி மகாநாடுகளை நடத்தியது. 5வது மகாநாடு மதுரை யிலும், 6வது மகாநாடு கோலாலம்பூரிலும், 7வது மகாநாடு மொறிசியஸ் நாட்டிலும் 8வது மகாநாடு தஞ்சாவூரிலும் 1995இல் நடைபெற்றன. இதன் பின் பொறுப்பில் இருந்தவர்கள் தொடர்ந்து தமிழ் ஆராய்ச்சி மகாநாடுகளை நடத்தாது விட்டமை வருந்தத்தக்கதாகும். இந்த வருடம் முழுவதும் உலகின் பல நாடுகளில் அடிகாளாரின் பிறந்த நாளை அடியொற்றி தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு கொண்டாடவதற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இந்நூறாண்டுக் கொண்டாட்டத்துடன், உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்திற்கு புத்துயிருட்டி அதனை இயங்கச் செய்வது உலகளாவிய தமிழறிஞர்களதும் தமிழ்நாட்டினதும் தலையாய கடமையாகும். இதற்குப் புலம்பெயர் தமிழறிஞர்களின் பங்களிப்பும் நிச்சியமாக இருக்கும் என நம்பலாம். ஏற்கனவே நடைபெற்ற மகாநாடுகளின் தாக்கமும் தமிழைச் செம்மொழியாக்கவும் உதவியதென்பதையும் ஈண்டுக் குறிப்பிடுதல் பொருத்தமாகும்.

இந்த ஆண்டில் உலகெங்கும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் “தனிநாயக அடிகளாரின் நூற்றாண்டு விழாவை கனடா விலும் செப்ரம்பர் மாதம் 2013 இல் நடத்துவதற்குரிய ஒழுங்குகள் நடைபெற்று வருகின்றன. இதில் தமிழாய்வு மகாநாடு, பேச்சுப்போட்டிகள், கலை பண்பாட்டு நிகழ்வுகள், அடிகளார் வெளியிட்ட ‘தமிழ் கலாசாரம்’ இதழ்களில் இடம்பெற்ற அடிகளாரின் ஆய்வுக் கட்டுரைகளை மறுபதிப்புச் செய்தல், மகாநாட்டு நினைவு மலர் வெளியிடுதல் முதலான நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன என்பதைத் தமிழ் ஆர்வலர்களுக்கம் தமிழ்ப் பற்றாளர்களுக்கும் தாழ்மையுடன் அறியத்தருகின்றோம்.

இந்நிகழ்வினைச் சிறப்புற நடத்துவதற்கு நிதியுதவி, தொண்டுப்பணி போன்றவற்றினை வழங்கி இத் தமிழ்ப் பேரறிஞரின் நூற்றாண்டு நிகழ்வுகளில் எல்லோரும் பங்கெடுத்து எமதுயிரான தமிழை உலகெங்கும் பரவவைத்த அடிகளாருக்கு நன்றி செலுத்து முகமாக எமது பங்களிப்பினைச் செலுத்துவோமாக.

விபரங்கள் அறிய மின்னஞ்சல்: sthaninayakam100@live.com - தொலைபேசி 647 856 6326
பேராசிரியர் சேவியர் . எஸ். தனிநாயகம் அடிகளார் நூற்றாண்டு விழா இணைப்புக் குழு சார்பில்
முருகேசு பாக்கியநாதன்





# நதி 13

தேவகாந்தன்

உறைவுக் காலம் தொடர்கிறது

எட்டு ஆண்டுகளுக்கு முன்னால், ஒரு நத்தார் விடுமுறைக் காலத்தில் ஏற்பட்ட மனைவியின் மீதான கோபத்தில் அவளை அடித்து அதனால் ஒருநாள் இரவு முழுவதும் காவல்நிலையத்தில் அடைத்து வைத்து விசாரிக்கப்பட்ட சிவப்பிரகாசம், மறுநாள் அந்த வீட்டுக்கு மறுபடி செல்லக்கூடாதென்ற கண்டிப்புடன் விடுவிக்கப்பட்டதோடு, காவல் அதிகாரிகளே அவருடன் கூடவந்து அவரது துணிமணிகளை எடுக்கும்வரை உடனிருந்து, ஒரு சூட்கேஸுடன் அவர் வெளியே வர காவல்நிலையத்தில் சொல்லிய எச்சரிக்கையை மறுபடி நினைவுறுத்திவிட்டு அகல, அந்த இருட்டிய வேளையில் தன்னந்தனியனாய் அந்த வீதியிலேயே நின்றுகொண்டிருந்த நிலைமையை, அவ்வழி கடந்து செல்லும் ஒவ்வொரு வேளையிலும் அவர் நினைத்துக் கொள்வார்.

அது மெய்யாகவே சொல்லமுடியாத அவலமும் அவமானமும் நிர்க்கதியுமான நிலைமைதான். பாரமான அந்த சூட்கேஸுடன் பஸ் எடுத்து மக்கோவன் பிஞ்ச் சந்திப்பு கடைத்தொகுதிக்கு வந்து மகாலிங்கத்துக்கு தொலைபேசி யெடுத்தபோது அவன் வீட்டிலிருக்கவில்லை. வந்தவுடன் தான் அவனுக்காக கடைத்தொகுதியில் காத்திருப்பதைச் சொல்லும்படி அவனது மனைவியிடம் அழுத்தமாகச் சொல்லிவிட்டு போனை வைத்தபோதும் அவலத்தின் அளவில் ஒரு குண்டுமணியளவு குறையாமலே இருந்தார்.

அது முன்னிரவுக் காலம். இருண்டிருந்தாலும் கடைத்தொகுதி திறந்திருந்தது. அனேகமாக எட்டு மணிக்கு அதை அடைப்பார்கள். அதற்குள் மகாலிங்கம் வரவேண்டுமே என்ற பதைபதைப்போடு காத்திருக்கையில் அவருக்கு அழுகைவரப் பார்த்தது. சில தமிழ்க் குடும்பங்கள் கொண்டாட்ட காலக் குதூகலத்துடன் அவரைக் கடந்து போன ஒவ்வொரு வேளையிலும் தான் அந்தக் குறிப்பிட்ட காலத்தில் மட்டுமில்லை, எந்தக் காலத்திலுமே வாழ்ந்த தில்லைப் போன்ற வெறுமைவந்து விழுந்து கொண்டிருந்தது. இலங்கையில் இருந்தபோதும் அவர் ஓர் அரசாங்க உத்தியோகத்தனாய் நிறைந்த சம்பளம் பெற்றுக்கொண்டிருந்தவர் தான். கனடாவிலும் வந்து சிறிது காலத்துக் குள்ளேயே அவருக்கு ஓர் அமெரிக்க நிறுவனத்தில் நிறைவான சம்பளத்தோடுதான் வேலை கிடைத்தது. புத்தகங்களுக்காகத் தவிர வேறு வெளிச் செலவுகள் இல்லாமல் பணத்தை எவ்வளவு பவுத்திரமாகச் சேர்த்து மனைவியையும் பிள்ளைகளையும் சீக்கிரமாக அங்கே வரவைத்தார்.

அதையே ஒரு முழுவாழ்வாக எண்ணிக்கொண்டிருந்ததனால்தானே, அப்படியெல்லாம் அவரால் இயங்க முடிந்திருந்தது இலங்கையிலும் கனடாவிலும். அப்போது தெரிந்தது, அது முழுவாழ்வாக இல்லாதது மட்டுமில்லை, வாழ்வாகவும் இருக்கவில்லையென்பது.

அங்கே எல்லாம் தெரிந்திருக்கவேண்டி இருந்தது. ஆழமாகத் தெரிந்திருக்காவிட்டாலும், அகலமாக விஷயஞானம் இருக்கவேண்டியது வாழ்தலின் ஓர் அம்சம் அங்கே. அவர் உழைப்பு உழைப்பு என்று ஓடிக்கொண்டிருந்தாரே தவிர, வாழ்க்கை வாழ்க்கையென்று என்றும் அனுபவிக்க முனைந்ததில்லை. ஊரிலே அவர் தாயார் சொல்வாள், மூக்கைப் பிடித்தால் வாயைத் திறந்து சுவாசிக்கத் தெரிந்திருக்க வேண்டுமென்று. அது மெய்தான். ஆனால் அப்படியெல்லாம் வேறு வழிகளில் எப்போதும் சிந்திக் முனைந்ததில்லை. அப்போதைய கையறுநிலையில், அந்த ஞானமற்ற அவதியை அவர் அனுபவத்தில் உணர்ந்தார். மகாலிங்கமும் இல்லாவிட்டால் அறிந்த தெரிந்த மனிதரென்றுகூட அவருக்கு யாருமில்லாதிருந்தது.

கடைத்தொகுதி அடைக்கும் நேரத்துக்கும் மகாலிங்கம் வரத் தாமதமானல் அவரால் என்ன செய்துவிட முடியும்?

ஆனால் மகாலிங்கம் அவரை அதற்குமேல் நினைவவலத்தில் அழுந்த விடவில்லை.

மகாலிங்கம் வந்ததும், விபரமெல்லாம் சொன்னார். இரக்கத்தோடிருந்து எல்லாவற்றையும் பொறுமையாகக் கேட்டவன், அப்போது உடனடியாக வீடு அல்லது அறை எதுவும் தேட முடியாதெனவும், அதுவரை தன்னோடேயே தங்கலாமென்றும் கூறி தனது வீட்டுக்கு அழைத்துச் சென்றான். வேறுவழியில்லாததால் மனக் கிலேசத்தோடன்றி, நிம்மதியாகவே கூடிச் சென்றார். தன் சொந்த வீட்டைவிடவே அவனது வீட்டில் அவருக்கு வரவேற்பிருப்பதை அவர் அறிந்தே இருந்தார். அவனது மனைவி தன் சொந்த அண்ணனைப்போலவே உறவு பாராட்டினாள். அன்று தொலைபேசி எடுத்தபோதுகூட அவரது குரலிலிருந்த பதற்றத்தைக் கவனித்துவிட்டு, ‘ஏதாவது பிரச்சினையே அண்ணை, எங்கை நிக்கிறியள் இப்ப, அவர் வர நேரஞ்செண்டால் நேர இஞ்சையே வாருங்கோவன்’ என்று ஆதரவு காட்டினாள்.

மகாலிங்கம் வீட்டிலே அவருக்கு இரண்டு நாட்கள் தங்க நேர்ந்தது. கொண்டோமினியம் ஒன்றில் சிறிய வீடொன்று கிடைத்து மூன்றாம் நாள் அங்கே சென்றபோது மகாலிங்கம் குடும்பமாகவே வந்து பால் காய்ச்சி எல்லா நடைமுறைகளையும் செய்துவைத்தான். புது வருஷத்தன்று சமைக்கவோ கடையிலோ எடுக்கவேண்டாமென்று மகாலிங்கத்தின் மனைவி அங்கே சாப்பாட்டுக்கு வரச்சொல்லிவிட்டாள். அவ்வாறான அன்புகளெல்லாம் ஓர் ஆசீர்வாதத்தில்தான் தனக்கு மிக மலிவாகக் கிடைப்பதாக அவர் மனம் உருகிய காலம் அது.

இரண்டாம் திகதி அவர் வழக்கம்போல் வேலைக்குச் சென்றார். மாலையில் திரும்பி வந்து ஜன்னலோரம் நின்றபோதுதான் நீளக் கிடந்த கூடலின் உள்ளே நெளிந்துநெளிந்து ஓடிக்கொண்டிருந்த நதியை உணர்ந்தார் அவர்.

நல்ல சில மனிதர்கள் மட்டுமில்லை, அந்த நதிகூட தன்னோடு ஒரு வாரப்பாட்டோடு தொடர்ந்து வந்துகொண்டிருப்பதாய் அவர் அந்தக் கணத்தில்தான் நம்பியது.

அந்த நம்பிக்கை அந்தக் கணத்திலும் அவரிடத்தில் நிறைந்தது. ஒரு வார காலமாக தன் மகனைச் சந்தித்த மகிழ்ச்சியை அவர் அனுபவித்துக்கொண்டிருந்தார். மகள்களையும் பார்க்கிற ஆவல் தலையெடுத்தது. அவர்களை அவ்வப்போதேனும் அவர் கண்டிருக்கிறார் அவர் தானே பூண்ட வனவாசத்தின் முன்னால். இப்போது இன்னும் வளர்ந்திருப்பார்கள். தனது தாயாரை, பாட்டியாரை நினைவுறுத்துமளவுக்கு ஆஜானுபாகுவாக உருக்கொண்டிருப்பார்கள். காண மனம் தவித்தது. மகனோடு ஏற்பட்டுள்ள தொடர்பு இனி அவர்களையும் சந்திக்கும் வாய்ப்பினைத் தரலாமென்ற இனிய நினைவோடு காத்திருந்தார். அவர் எண்ணாத ஒரு கோணம் இருந்தது. உருவரீதியில் தனது பரவணியைக் கொண்டிருந்த அவர்கள், உணர்வுரீதியாக தமது தாயார் மங்களத்தின் மனநிலையைக் கொண்டிருக்கவும் முடியுமென்பதை ஏனோ அவர் எண்ண மறந்தார். பெரும்பாலான காலத்திலும் மனைவியைப் போலவே அவர் பிள்ளைகளையும் பிரிந்துதான் இருந்தார். அவர்களது மனநிலையை அவ்வளவு துல்லியமாக அறிய விடுமுறையில் வீட்டுக்கு வந்து இரண்டு மூன்று நாட்கள் தங்கிநிற்கும் அந்தக் குறுகிய காலத்தில் தன்னால் அறிந்திருப்பது சாத்தியமில்லையென அவர் எண்ணவேயில்லை.

மங்களம் எப்படி இருப்பாள் என்ற எண்ணம் கூட ஒருமுறை எழுந்தது. ‘எப்பிடியாச்சும் இருந்து துலையட்டும்’ என்று அந்த நினைவைக் கலைத்தார். ஆனால் அதுவோ மறுபடி மறுபடி எழுந்து சந்நதம் ஆடியபடியே இருந்தது. தன் வனவாசம் அவரை ஓரவேனும் உணர்வில் சாந்த நிலையைக் கொடுத்திருந்தது. இன்னொரு பெண்ணுடனான அந்த உறவு அவரை அவளின் உள்ளரங்கத்தோடு சில

தொடர்தல் 97ம் பக்கம்

வேளை கணிப்பிலீடுபட வைத்தது.

அவர் தனது அந்த நத்தார் விடுமுறைக்கால நிர்க்கதியான நிலைமையை இலேசுவில் மறந்துவிடவே முடியவில்லை. அவளது உதா சீனம், உதறல் யாவும் ஒரு தலைமயிரை விரித்துவைத்துக்கொண்டு கண்ணில் உக்கிரம் தெறிக்க வெறியாடிய ஒரு விரதையாக மனக் கண்ணில் நிறுத்திக்கொண்டிருந்தது.

இனி தனது உழைப்பெல்லாம் யாருக்காக என்ற எண்ணம் கொஞ்சம் சுகவாசியாக அவரை வாழவைத்தது. சுகவாசம் வளர, சகவாசம் மாறியது. நிறையப் பேர் அறிமுக மானார்கள். வாழ்க்கையின் அர்த்தத்தை அவர் சரியாகவோ தவறாகவோ அடைந்தது, அந்த புதிய சகவாசங்களின் மூலம்தான்.

இலங்கையில் தமிழர் மேல் கட்டவிழ்ந்த காடைத்தனம் ஏவிவிடப்பட்டுக்கொண்டிருந்த நேரத்தில் தினசரி பகலில் கடைத்தொகுதிக் கூடத்திலோ அல்லது மாலையில் ரிம் கோர்டன் காப்பிக்கடையிலோ கூடி ஊர் விண்ணாணங் களைக் கதைத்துக்கொண்டிருந்த சில பெரிசு களின் வாழ்க்கைபற்றிய உளறல் ஞானமாக சிவப்பிரகாசத்தில் படிந்துகொண்டது. இலங்கை மீனும், இறாலும், முருங்கைக்காயும். ஓடியல் கூழும் பற்றிய அவர்களது வியாக்கியானங்கள் உடலாரோக்கியம் மட்டும் சார்ந்ததாய் இருக்கவில்லை. உடல் விழைச்சுகளின் தேவைக்காகவும்தானென்பது அவருக்கு முன்பு தெரியாததல்ல. ஆனாலும் உடல்விழைச்சு எண்ணத்தை அதிகமாக அவரில் அப்பேச்சுக்கள் கிளர்த்தின.

சுகவாச வாழ்வில் ஒரு போதாமை இருப்பதை அவர் எப்போதும்போல் அப்போதும் உணர்ந் தார். எப்போதும்போல் அப்போது அடங்கியி ருக்க அவரது உள்ளம் மறுத்துக் கலகம் செய்தது. அப்போதெல்லாம் அடங்கியிருந்தா லும் தணிக்க மனைவி இருக்கிறாள் என்ற எண்ணம் அடங்கியிருத்தலை அர்த்தமுள்ள தாக்கியது. ஆனால் இப்போது அடங்கியிருத் தல் ஏனென்ற கேள்வி அவர் முன் விசுவரூபமெடுத்து நின்றது.

அவர் இரவுகளை நரகமாகக் கழித்துக்கொண்டிருந்தார். அப்போதெல்லாம் தேய்வு நோய் எனப்படும் பாலின தொடர்பால் ஏற்படும் நோய்பற்றிய பேச்சும் அதுகுறித்த விளம்பரங் களும் அதிகமாக இருந்த காலம். ஆதலால் பாலினத் தொழிலாளர்களை நாடும் எண்ணம் தோன்றினாலும் தன்னை அவர் அடக்கிக் கொண்டார்.

மாதம் ஐயாயிரம் கனடிய டாலர்கள்வரை மாதச் சம்பளமாகப் பெற்றுக்கொண்டு அவ் வாறான ஒரு தனித்த வாழ்வு அவசியமா என நள்ளிரவுகள் தாண்டியும் நித்திரை வராமல் நதி பார்த்து நின்று அதனையே கேட்பார்.

நதி அவரின் தவனம் அறிந்திருந்தது. அவரது போல் அது கோடி கதைகளை அறியும். பிரபஞ்சத்தின் அடிநாதமே காமம்தான் என்பதுவே அதன் அழிக்கமுடியாத நம்பிக்கை. இனக் குழுக்களும் இனங்களும் நாடுகளும் கூட மாறியும் அழிந்தும்தான் போயின. ஆனாலும் வாழ்வுமட்டும் மாறாமலேதான் இருக்கிறது. அதன் ஆதார நாதத்துடன் அது நித்தியவரம் பெற்றிருக்கிறது.

அவரது சஞ்சலம் சபலம் எல்லாவற்றையும் ஆற்றக்கூடிய விதமாக எதிர்பாராதபடி ஒரு தமிழ்ப் பத்திரிகை அவரது கையில் கிடைத் தது. மணமக்கள் தேவை என்ற அதன் ஒரு பக்கத்தில் மணமகன் தேவையென்ற ஒரு விளம்பரம் அவரை செய்யாத வேலையெல்லாம் செய்யவைத்தும் ஆடாத ஆட்டமெல்லாம் ஆடவைத்தும் ஒரு இரண்டு வருட காலத்தை ஆரண்யவாசமாக ஆக்கிவைத்துவிட்டது.

ஒரு சனிக்கிழமை மாலை பத்திரிகை விளம் பரத்தில் கண்டிருந்த தொலைபேசி எண்ணைச் சுழற்றினார்.


அது கிலோ மீற்றர்கள் கடந்து மொன்றியல் நகரத்தைநோக்கிப் பறந்துகொண்டிருந்தது.

*(உறைவு தொடரும்)*



devakanthan@thaiveedu.com

# நாஞ்சில் நாடனுக்கு இயல் விருது



கனடா தமிழ் இலக்கியத் தோட்டம் வழங்கும் 2012-ம் ஆண்டுக்கான இயல் விருது, மூத்த தலைமுறை எழுத்தாளர்களில் ஒருவரும், நாஞ்சில் நாட்டு வட்டார மொழியைத் தமிழ் இலக்கிய வாசகர்களிடையே பிரபலப்படுத்தியவருமான நாஞ்சில் நாடனுக்கு வழங்கப் படுகிறது. இந்த வாழ்நாள் சாதனையாளர் விருது, கேடயமும் 2,500 கனடிய டாலர்கள் மதிப்பும் கொண்டது. சுந்தர ராமசாமி, கே.கணேஷ், வெங்கட் சாமிநாதன், பத்மநாப ஐயர், ஜோர்ஜ் எல் ஹார்ட், தாசீசியஸ், லட்சுமி ஹோம்ஸ்ரோம், அம்பை, ஐராவதம் மகாதேவன், கோவை ஞானி, எஸ்.பொன்னுத்துரை, எஸ்.ராமகிருஷ்ணன் ஆகியோரைத் தொடர்ந்து, இவ்வருடம் நாஞ்சில் நாடன் அவர்களுக்கு இவ்விருது வழங்கப்படுகிறது.

ஜி.சுப்பிரமணியம் என்ற இயற்பெயர் கொண்ட நாஞ்சில் நாடன், பம்பாய் தமிழ் சங்கம் வெளியிட்டு வந்த 'ஏடு' இதழில் தன் இலக்கியப்பணியைத் தொடங்கினார். 1975-ம் ஆண்டு வெளிவந்த 'விரதம்' சிறுகதையில் தொடங்கி, முப்பத்தைந்து ஆண்டுகளாகத் தொடர்ந்து எழுதிவருகிறார். இருபத்தைந்து வயதிலேயே வேலை நிமித்தமாக சொந்த ஊரை விட்டுச் சென்றிருந்தாலும் இவரது படைப்புகளில் நாஞ்சில் நாட்டு மக்களும், மொழியுமே பிரதானமாக வெளிப்படுகின்றன. இவர் சங்க இலக்கியங்களிலும் கம்பராமாயணத்திலும் நல்ல பயிற்சியும் ஈடுபாடும் கொண்டவர். இதுவரை 6 நாவல்கள், 9 சிறுகதைத் தொகுப்புகள், 6 கட்டுரைத் தொகுப்புகள், 2 கவிதைத் தொகுப்புகள் என வெளியிட்டுள்ளார்.

சிறுகதைகளுக்கான இலக்கியச் சிந்தனை விருது (1975, 1977, 1979), தமிழக அரசின் சிறந்த நாவலுக்கான விருது (1993), கண்ணதாசன் விருது (2009), கலைமாமணி விருது (2009) எனப் பல்வேறு விருதுகளைப் பெற்ற இவர், 'சூடிய பூ சூடற்க' சிறுகதைத் தொகுப் புக்காக 2010-ம் ஆண்டுக்கான சாகித்ய அகாடமி விருதையும் பெற்றுள்ளார். இவரது நாவல்களும், சிறுகதைகளும் தமிழ்நாடு, கேரளா மற்றும் டெல்லியிலுள்ள பல்கலைக் கழகங்களில் பாடமாக வைக்கப்பட்டுள்ளன. இதுவரை 14 பேர் இவரது படைப்புகளை முன்வைத்து முனைவர் பட்ட ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர். இவரது 'தலைகீழ் விகிதங்கள்', 'எட்டுத் திக்கும் மதயானை' நாவல்கள் திரைப்படங்களாக்கப்பட்டுள்ளன. தவிர, இயக்குநர் பாலாவின் 'பரதேசி' திரைப்படத்திற்கு வசனமும் எழுதியுள்ளார்.

'அங்கீகாரம் மூலம் எழுத்தாளன் உருவாவதில்லை. ஆனால் எழுத்தாளன் திரும்ப எதிர்பார்க்கக்கூடிய ஒன்றே ஒன்று அங்கீகாரம் மட்டுமே' என்று சொல்லும் நாஞ்சில் நாடன் அவர்களுக்கு, 2012ம் வருடத்து இயல் விருது எதிர்வரும் ஜூன் மாதம் ரொறொன்ரோவில் வழங்கப்படும்.



# ஆகச் சிறந்த பிழை

- அ. முத்துலிங்கம் -

என்னுடைய பிரச்சினைகளுக்கெல்லாம் தொடக்கம் ஒரு பழமொழிதான். என்னுடைய ஐயாதான் இந்தப் பழமொழியை கண்டு பிடித்திருக்கவேண்டும். 'நாங்கள் காலையில் எழுவதை சூரியன் பார்க்கக் கூடாது. சூரியன் எழுவதை நாங்கள் பார்க்கவேண்டும்.' ஆகவே அதிகாலையிலேயே உருட்டி உருட்டி நாங்கள் எழுப்பிவிடப்படுவோம். சாதாரண நாளிலேயே இப்படி என்றால் பொங்கல் நாள் பற்றி நினைத்தும் பார்க்க முடியாது. சூரியன் பூமியின் மற்றப் பக்கத்தில் நிற்கும் போதே நாங்கள் எழும்பியாகவேண்டும். புதுப் பானை, புது அடுப்பு, புதுநெல் என எல்லாமே முறைப்படி செய்யப்படும். சூரியன் உதயமாகும் போது கிழக்கு பக்கமாக பால் பொங்கி வழிந்து பொங்கல் தயாராகும். இப்படி சிறு வயதில் ஆரம்பித்த பொங்கல் என்னுடன் பல நாடுகளுக்கும் பயணித்தது.


ஆப்பிரிக்கா என்னை பெரிய அளவுக்கு அலுப்பூட்டவில்லை. அங்கே வாழ்ந்த அத்தனை வருடங்களும் பொங்கல் கொண்டாடினோம். அதிகாலையில் வீட்டின் வெளியே மூன்று கல்வைத்து புதுப்பானையில் கிழக்கு பக்கமாக பால் பொங்கி வழிய பொங்கல் செய்தோம். ஆப்பிரிக்க சிறுவர் சிறுமியர் பள்ளிக்கு ஊத்தை கலர் சீருடை அணிந்து செல்லும் போது வழியில் தங்கள் வேலையை மறந்து எங்களை சூழ்ந்துகொள்வார்கள். இவர்களுக்காகவே நிறைய சர்க்கரைபோட்டு சமைத்த பொங்கலை கையிலே வாங்கி சுவைத்தபடி மறுகையில் புத்தகப்பையை சுழற்றிக்கொண்டு இருபது நிமிடம் லேட்டாக புறப்படுவார்கள். கூரான தோள்மூட்டுச் சிறுமி இரண்டு கைகளிலும் பொங்கல் வாங்கிக்கொண்டு வீட்டுக்கு ஓடுவாள். பொங்கல் முக்கியமா, பாடம் முக்கியமா என்பதில் அவளுக்கு ஒருவித சந்தேகமும் கிடையாது.

இந்த பத்து வருட காலமும் தவறாமல் ஒரு கிழவரும் வந்தார். பிளாஸ்டிக் போத்தலை நீளவாக்கில் பாதியாக வெட்டி தயாரித்த செருப்பை அணிந்திருப்பார். ஆப்ரஹாம் லிங்கன் அணிவது போன்ற உயரமான தொப்பி. துக்கம் அனுட்டிப்பவர்போல கால் வரைக்கும் நீண்ட சாம்பல் நிற அங்கி. கல் உருளுவது போல நிறுத்தாமல் பேசுவார். என்னுடைய ஒரு வார்த்தைக்கு அவரிடமிருந்து பத்து வார்த்தைகள் விழும். பொங்கலை சுடச்சுட வாங்கி அப்படியே வாயில் திணிப்பார். நீச்சல் துள்ளு பலகையில் துள்ளுவதுபோல நாலு தரம் துள்ளுவார். பின்பு மறைந்துவிடுவார். அடுத்த பொங்கலுக்குத்தான் மறுபடியும் அவரைக் காணமுடியும்.

பாகிஸ்தானில் பொங்கல் கொண்டாடியது வேறு அனுபவம். அங்கே பச்சை அரிசி, சர்க்கரை கல்கண்டு, பயறு எல்லாம் தாராளமாகக் கிடைக்கும். கரும்பு அந்த நாட்டில் நிறைய விளைந்தது, எங்கே வாங்குவது என்பதுதான் தெரியாது. சந்தையில் போய் நின்று 'அப்துல்லா' என்று கத்தினால் போதும் நாலு பேர் ஓடிவருவார்கள். அவர்களிடம் சொன்னால் கரும்பு வீட்டுக்கு வந்துவிடும். ஆனால் பொங்கலை வெளிவாசலில் கொண்டாட முடியாது. கோலம்போட முடியாது. ஆகவே மொட்டைமாடி ஒன்றுதான் உங்கள் தேர்வு. அங்கே நேரே வரும் சூரியன் உங்களுக்கு மட்டும்தான். ஒரேயொரு சங்கடம் தான். துப்பாக்கி குண்டுகள் வழிதவறி மாடியில் வந்து விழுந்து ஒன்றிரண்டு பேர் இறக்கலாம். இதையெல்லாம் பார்த்தால் வருடத்துக்கு ஒருமுறை வரும் இனிப்பு பொங்கல் கிடைக்குமா?

சூடானில் பொங்கல் இன்னும் சுவாரஸ்யமாக இருக்கும். பால் எங்கேயும் கிடைக்கும் ஆனால் நைல் நதி நீர் கிடைக்குமா? சூடானில் வெள்ளை நதியும் நீல நதியும் சந்தித்த பின்னர் முழு நைல் நதியாக உருவாகி எகிப்துக்கு பயணம் செய்யும். சீசர் மயங்கிய பேரழகி கிளியோபட்ரா குளித்திருக்கக்கூடிய நைல் நீரில், உலகத்தின் அதிசயமான மிகப் பெரிய கீஸா பிரமிட்டை கட்டி எழுப்பிய சியோப்ஸ் மன்னர் கால் நனைத்திருக்கக் கூடிய அந்த நீரில் பொங்கியிருக்கிறோம்.

நைரோபியில் எழுத்தாளர் ஐஸக் டெனிஸன் வர்ணித்த ங்கொங் மலைக்கு முன்னாலும், ஒட்டகம் உலவும் சோமாலியாவின் பாலை நிலத்திலும் கூட பொங்கியிருக்கிறோம். சோமாலியாவில் மாட்டுப் பாலுக்குப் பதிலாக ஒட்டகப் பாலை சேர்க்கலாம் என்று மனைவியிடம் கெஞ்சியும் அது வாய்க்காதது பெரும் நட்டம் என்று இப்போது தோன்றுகிறது.



நான் பல வருடங்களுக்கு முன்னர் கனடா வந்து இறங்கியபோது எல்லாமே இங்கே வித்தியாசமாக இருக்கும் என எதிர்பார்த்தாலும் பொங்கல் பண்டிகை மாறக்கூடும் என நினைக்கவில்லை. கனடா பத்து மாகாணங்களும் 3 பிரதேசங்களும் கொண்டது. ஒரு மாகாணத்திலும் மூன்று பிரதேசங்களிலும் வாழும் மக்களின் சனத்தொகை 250,000. கனடாவில் வசிக்கும் தமிழர்களின் எண்ணிக்கை 300,000. அதாவது, தமிழர்களின் பலம் கனடாவில் ஒரு மாகாணத்துக்கும் மூன்று பிரதேசங்களுக்கும் சமமானது. தமிழ் ஈழம் கிடைக்கும்போது கிடைக்கட்டும். அது வரைக்கும் இதுதான் என் நாடு. தமிழர்கள் சுதந்திரமாக உலவவும், மூச்சுவிடவும், இறக்கவும், இறந்தபின் அவர்கள் சமாதிகள் அழிக்கப்படாமல் பாதுகாக்கவும் உத்தரவாதமான நாடு.

நான் வாழ்வது கனடாவின் ஒன்ராறியோ மாகாணத்தில் மார்க்கம் என்ற நகரில். எங்கள் நகரசபையில் முதலாவது தமிழ் அங்கத்தவர் திரு. லோகன் கணபதி. இவர் முயற்சியால் இனி வரும் எல்லா வருடங்களிலும் ஜனவரி 14ம் தேதி தமிழர் பாரம்பரிய நாள் / புது வருடம் / தைப்பொங்கல் என நகரசபையால் பிரகடனப் படுத்தப்பட்டிருக்கிறது. பாராளுமன்ற உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்டவர் செல்வி ராதிகா சிற்சபைஈசன். இவர்கள் இருவரும் கனடா தமிழர்கள் சார்பில் முதன்முதலாக தமிழர் பாரம்பரிய நாளை / பொங்கலை / புது வருடத்தை 14 ஜனவரி 2012 அன்று ஆரம்பித்து வைத்தார்கள். இது இனிமேல் வருடா வருடம் தொடரும்.

ஆனால் நான் வந்து இறங்கிய வருடம் பொங்கலை கொண்டாடுவது அத்தனை சுலபமானதாக இருக்கவில்லை. பொங்கலுக்கு மனைவி பட்டியல் போட்டு தந்தால் அதை நான் எப்படியும் வாங்கிவரவேண்டும். ஒவ்வொரு சாமானும் ஒவ்வொரு திசையில் கிடைக்கும். பச்சையரிசி, பால், சர்க்கரை, பயறு, கரும்பு, முந்திரிப்பருப்பு, வாழை இலை என்று நீண்ட பட்டியல். வாழை இலைக்கு மாத்திரம் 15 மைல் தூரம் போகவேண்டி வந்தது. எப்படி எப்படியெல்லாம் போகக்கூடாது என்று நினைப்பேனோ அப்படி அப்படியெல்லாம் பிய்த்துக்கொண்டு காரை ஓட்டினால் தான் சமாளிக்கலாம். இருபது வருடம் வயதான சமையல் குறிப்பை பிரித்து வைத்து, படித்து சமையல் நடந்தது. முகத்தல், நிறுத்தல், பெய்தல், எண்ணல் என்ற நாலு வகை அளவுகளையும் அதிநுட்பமாக பயன்படுத்திய தயாரிப்பு. புதுப்பானை விளிம்பில் பால் மெள்ள அசைந்தது. மனைவி பானையை பார்த்து ஒரு சிரிப்பு சிரித்தார்.

பிறகு அடுப்பில் சமைக்கும்போது ஆசுவாசமாக முடிவுகள் எடுக்கலாம். ஆனால் 'கனடியன் டயரில்' வாங்கிய சிறிய சமையல் எரிவாயு அடுப்பு வேகமாக வேலை செய்தது. எதிர்பாராத சமயத்தில் பால் பொங்கியது. கிழக்குப் பக்கமாக வழிந்தால்தான் சுபிட்சம். நிறையப் பணம் சேரும். நாலு புது வங்கிக் கணக்குகள் திறக்கலாம். நான் வங்கிபற்றி சிந்தித்துக் கொண்டிருந்தபோது என் மனைவி 'எங்கே கிழக்கு? எங்கே கிழக்கு?' என்று கத்தினார். நான் அமைதியாக 'சூரியன் உதிக்கும் பக்கம் கிழக்கு' என்று கூறினேன். இப்பொழுது 'எங்கே சூரியன்? எங்கே சூரியன்?' என்று கூக்குரல் எழுப்பினார். கனடா போன்ற ஒரு தேசத்தில் கேட்கவேண்டிய ஒரு கேள்வியா? இங்கே சூரியன் எப்பொழுது வேண்டுமென்றாலும் வரும். எப்பொழுது வேண்டுமென்றாலும் போகும். சில சமயம் நீண்ட நாட்கள் விடுப்பு எடுத்து மறைந்து விடுவதும் உண்டு. வரும் போது கண்டு கொள்வதுதான்.

மனைவி அப்படி கத்தியபோது வெளியே இருண்டு பனி பொழிந்தவாறு இருந்தது. மழை பெய்வதுபோல, காற்று அடிப்பதுபோல பனி பொழியும்போது சத்தம் கிடையாது. ஒரே அமைதி. ஒருபனித்துகள் போல இன்னொன்று இல்லை. ஆகாயத்திலிருந்து எல்லோருக்கும் மேல் வித்தியாசமில்லாமல் விழுந்தது. பனித்தரை இரண்டு அங்குலம், மூன்று அங்குலம் என வளர்ந்து பூமியை மேடு பள்ளம் இல்லாமல் மூடி சமதரை ஆக்கியது. நாடு இருப்பவர்கள், நாடு இல்லாதவர்கள், குடியுரிமை கிடைத்தவர்கள், கிடைக்காதவர்கள், செல்வந்தர்கள், ஏழைகள், படித்தவர்கள், படிக்காதவர்கள் எல்லோர் மேலும் சமமாக விழுந்தது. வெளியே பார்த்தபோது கனடா மறைந்து விட்டது. ஒரே வெள்ளைப் பாலைவனம்.

மதியம் நெருங்கியபோது பொங்கல் உண்பதற்கு தயாரானது. முந்திரிப்பருப்பு, ஏலக்காய், கிரான்பெர்ரி வற்றல் சேர்த்த பொங்கல் நல்ல வாசனையை பரப்பியது. அகப்பை பொங்கலோடு ஒட்டிக்கொண்டு விட்ட படியினால் அதை லேசாகக் கிளப்ப முடியவில்லை. மனைவி அகப்பையை பார்த்தார். பின்னர் என்னைப் பார்த்தார். பிறகு பானையை பார்த்தார். 'பெரிய புத்தகம் எல்லாம் எழுதிய உங்களுக்கு கிழக்குப் பக்கம் எங்கே என்று தெரியாதா?' அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? நான் குற்றம் செய்த வீட்டு நாய்போல குனிந்து தரையை பார்த்து அமர்ந்திருந்தேன். அப்போதெல்லாம் ஐபோன் கிடையாது திசை பார்ப்பதற்கு. 15 மைல் தூரம் பயணம் செய்து வாங்கிவந்த தலை வாழையிலை சும்மா கிடந்தது. நான் அதில் பொங்கல் விழும் சத்தத்திற்காக காத்திருந்தேன். யாரோ ஈரத் துணியில் சூடான ஸ்திரிப்பெட்டியை அழுத்தியதுபோல 'உஸ்ஸ்' என்ற பெரும் சத்தம் எழுந்தது. நிமிர்ந்து பார்த்தேன். அது மனைவியின் பெருமூச்சு. ஒருவாறு பலத்தை பிரயோகித்து பொங்கலை கிளப்பி தோள்மூட்டுகள் குலுங்க பரிமாறினார். பொங்கலை சுற்றி இலை கறுப்பாகி வந்தது. இருவரும் ஒருவர் முன் ஒருவர் உட்கார்ந்து கொண்டோம். நடுவில் பொங்கல் பானை. சிலந்தி வலையை தொடுவதுபோல மெதுவாக ஓரத்தில் தொட்டு உண்ண ஆரம்பித்தேன்.

அன்றைய நாள் முடியுமட்டும் கிழக்கு பக்கம் வரவே இல்லை. வராது. நாங்கள் பொங்கியது மேற்குப் பக்கம் என்பதை சில மாதங்கள் சென்று கண்டுபிடித்தோம்.




muththulingam.a@thaiveedu.com

www.noolaham.org
noolahamfoundation@gmail.com
நூலகம்

# Save more than 50%
## on heating and cooling bills

Houses built before 1980 have an average R value of R-20 or below instead of R-50





# ROOM OVER THE GARAGE

உங்கள் garageற்கு மேல் உள்ள வீட்டின் பகுதி தற்போது அதிக வெப்பமாகவோ
அல்லது பனிக்காலத்தில் அதிக குளிராகவோ இருக்கின்றனவா? அதற்கான விடையைப்பெற

**An intelligent choice of insulation for higher performance & air sealing**

**Insulation is all about how you install them. Get it done right the first time. Get it done by the certified professional**






PRABHA SINNA
Government certified Energy Advisor

## Insulation removal
## Attic Insulation
# Spray foam

For uncompormised service
இன்றே அழையுங்கள்

# 416-556-6115

தாய் வீடு
THAIVEEDU HOME & LIVING

தாய்வீடு பத்திரிகையின்
ஏற்பாட்டில்



இந்தியாவின் முன்னணி ஓவியரும் தேசிய விருது பெற்றவருமான

# ஓவியர் ஜீவா

நடத்தும் ஓவியப் பயிலரங்குகளும் உரையாடல்களும்

பெப்பிரவரி 5ம் திகதி Cedarwood PS பாடசாலையில்
மாணவர்களுக்கான **ஓவியப் பயிலரங்கு**

பெப்பிரவரி 9ம் திகதி ரொறன்ரோ கல்விச்சபையினதும்
ஒன்ராறியோ தமிழ் ஆசிரியர் சங்கத்தினதும் அனுசரணையில்
Dr. Marion Hilliard SPS பாடசாலையில்
"வரைதல் வழியே தமிழ்மொழி கற்றலும் பண்பாட்டைப் புரிதலும்"
**தமிழ் மாணவர்களுக்கான ஓவியப் பயிலரங்கு**

பெப்பிரவரி 9ம் திகதி ரொறன்ரோ கல்விச்சபையினதும்
ஒன்றரியோ தமிழ் ஆசிரியர் சங்கத்தினதும் அனுசரணையில்
Silver Springs PS பாடசாலையில்
"ஓவியம் வழியே தமிழ்மொழி, பண்பாடு கற்பித்தலும் புரிதலும்"
**தமிழ் ஆசிரியர்களுக்கான ஓவியப் பயிலரங்கு**

பெப்பிரவரி 5ம் திகதி Parkland PS பாடசாலையில்
**மாணவர்களுக்கான ஓவியப்பயிலரங்கு**

15 ம் திகதி ஒன்ராறியோ முதுதமிழர் மன்றத்தின் அனுசரணையில்
**ஓவியம் பற்றிய உரையாடல்**

15ம் திகதி கனடியத் தமிழ் இளையோர் முன்னேற்ற நிலையத்தின் (CANTYD)
அனுசரணையில் **ஓவியப் பயிலரங்கு**

17ம் திகதி தாய்வீடு எழுத்தாளர் சந்திப்பில் உரை

18ம் திகதி காலம் இலக்கிய இதழின் அனுசரணையில்
**தூரிகைத் தீட்டல்கள்**
சிறப்புரை

- digi Media -

Serandib Travel
Your satisfaction is our success
7 Eastvale Dr, Suite 207, Markham 416.750.0009

Sritharan Thurairajah CLU, CHS
Managing Director
Direct: 416.918.9771
Life100 INSURANCE & FINANCIAL SERVICES INC.



SELVA VETTYVEL
Broker of Record
Cell: 416.568.4301, Bus: 905.201.9977
HomeLife Future Realty Inc. Brokerage



Suren Nathan AMP
Mortgage Broker
License# M08004479
Dir. 416-436-1111
BonaFide Mortgage Solutions Inc.



Kunasegar Nagalingam
Sales Representative
Direct: 416-402-4545
HomeLife Today Realty Ltd., Brokerage**



Chandran Rasalingam CHS
Managing Director
iNFORCE LIFe Financial Services Inc.
Bus: 416 321 6000/ Direct: 416 909 0400



RAMAN APPLIANCES
Raman Chelliah
President
647-893-4414
C105-6055 Steeles Ave. East, Scarborough, ON M1X0A7



SRI
CREDIT SOLUTION CENTRE
80 Corporate Drive, Suite 309,
Scarborough, ON M1H 3G5
Tel: 416.439.0224



www.thaiveedu.com

Foundation of your financial freedom!



# LIVE LIFE FULLY COVERED

**COVERAGE FOR YOUR MOST PRECIOUS ASSET.**

**YOU & YOUR FAMILY**

## கவலை அற்ற நிம்மதியான வாழ்க்கை வாழ்ந்திட...

சிறந்த ஆலோசனைகளுக்கும் உங்களுக்கு ஏற்ற காப்புறுதியை
செய்வதற்கும் எங்கள் முகவர்களில் ஒருவரை அழையுங்கள்.

- Life Insurance
- Non-Medical Insurance
- Travel Insurance
- Critical Illness Insurance
- Disability Insurance
- Mortgage Insurance
- RESP - Education Saving Plan
- Dental & Drug Insurance
- RRSP's & Investments
- Final Expense Products (Through Funeral Homes)

**Mega Financial Group**

416 666 1120 • 416 293 5559
PH28-4168 Finch Ave. E. Scarborough, ON

**Now Hiring**
FULLTIME / PART TIME AGENTS

**FASTEST GROWING INSURANCE AGENCY**
*Well Established Name / Multicultural Agents / Great Support*

*Call Raj Nadarajah for more info*
*416 666 1120*

Assumption Life · Industrial Alliance · UL Mutual · Desjardins · Equitable Life of Canada · RBC Insurance · Canada Life · Manulife Financial · Sun Life Financial · ASSURANT

# பன்முகக் கலைஞன் கிருஷ்ணராஜா

**ஆழத்து முத்துக்கள் 90**

1994இல் ரொறன்டோவில் நடைபெற்ற லண்டன் தமிழ் அவைக்காற்றுக் கலைக்கழகத்தின் நாடக விழாவில் இடம்பெற்ற ‘மன்னிக்கவும்’ நாடகத்தை எவரும் இலகுவில் மறந்துவிட முடியாது. ஒரு பகட்டான தம்பதியினர் தமது நண்பர் ஒருவரை விருந்துக்கு அழைத்து அவரது வாழ்வைக் கிண்டல் செய்யும் நாடகம் அது. ஒரே இடத்தில் இருந்தவாறும் பெரிதாக எந்த வசனமும் பேசாதும் தவிப்பு, வெறுப்பு, கோபம், ஆற்றாமை போன்ற பலவித குணா திசயங்களை வெளிக்காட்டி பார்வையாளர் களின் பலத்த கரகோஷத்தை அள்ளிச் சென் றார் அந்த நண்பராக நடித்தவர். அந்த நடிப் புக்குச் சொந்தக்காரரான ராஜாவை ஆழத்து முத்துக்களில் பதிவு செய்வதில் தாய்வீடு மகிழ்ச்சி அடைகிறது.

ராஜா, கே.கே. ராஜா என்று கலை இலக்கியப் பரப்பில் அறியப்பட்ட கனகசபை கிருஷ்ண-ராஜா ஓவியம், நாடகம், புகைப்படம், நூல் வடிவமைப்பு போன்ற பன்முக ஆளுமை கொண்ட கலைஞர். உயர்ந்த தோற்றம், எப்போதும் முகத்தில் தவழும் புன்சிரிப்பு, எல்லோரையும் ஆச்சரியப்படுத்தும் சுருள் சுருளான தலைமுடி, கேட்டுக் கொண்டே இருக்கலாம் எனத் தோன்றும் இனிமையான பேச்சு, இவர் தான் ராஜா.

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட ராஜா தன் ஆரம்ப கல்வியை பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியிலும் பட்டப்படிப்பை களனி வித்தியாலங்கார பல்கலைக்கழகத்திலும் மேற் கொண்டார். அங்கு சிங்களவர்கள் மட்டுமே பயின்று வந்த ஓவியமும் சிற்பமும் என்ற சிங்கள மொழி மூலமான கற்கை நெறியைப் பயின்ற முதல் மூன்று தமிழர்களில் ராஜாவும் ஒருவர். க. பவானி, சு. சிவகுமார் ஆகியோரே இவருடன் பயின்ற மற்றைய இருவருமாவர். இவரது உறவினரான பேராதனைப் பல்கலைக் கழக பேராசிரியர் காசிநாதனின் உந்துதலால் தனக்குப் பிடித்தமான கற்கைநெறியில் இவர் இணைந்து கொண்டார். பின்னர் பேராசிரியர் கைலாசபதியின் அரிய முயற்சியினாலேயே இவர்களது கற்கைநெறி யாழ்ப்பாண பல்-கலைக் கழகத்துக்கு மாற்றப்பட்டது. அங்கு பேராசிரியர் இந்திரபாலா, பேராசிரியர் சோ. கிருஷ்ணராஜா, கலாநிதி சண்முகதாசன் ஆகியோரிடம் பயிலும் பேறினை ராஜா பெற்-றிருந்தார்.

ஓவியமும் சிற்பமும் ராஜாவுக்குக் கைவரப் பெற்ற கலையாக இருந்த போதும் அந்த ஆற்றலை இள வயதிலேயே இனம் கண்டு ஊக்கப்படுத்தியவர் ஹாட்லிக் கல்லூரியின் ஓவிய ஆசிரியராகப் பணிபுரிந்த மாற்கு மாஸ்டர் அவர்களே. ஈழத் தமிழர்களிடையே நவீன ஓவியக்கலையின் முன்னோடியாகத் திகழ்ந்த ஓவியக் கலைஞரான அ. மாற்கு-விடம் தனது நான்காம் வகுப்பிலிருந்தே ஓவியத்தைப் பயிலும் பாக்கியத்தை ராஜா பெற்றிருந்தார். பின்னாளில் மாற்கு மாஸ்டரின் முக்கிய மாணவர்களில் ஒருவராக இவர் அறியப்பட்டார்.

“ஓவியம் என்பது படிப்பு அல்ல அது ஒரு உணர்வு. மாற்கு மாஸ்டரிடம் நவீன ஓவியங் கள் பற்றிய கருத்துருவை உணர்ந்து கொண் டேன். மாற்கு மாஸ்டர் ஒரு மகான். அவர் ரசிப்பதை நானும் ரசிக்க ஆரம்பித்தேன். அவர் ஓவியம் வரைவதைப் பார்த்து பிரமித்துப்போ வேன். படைப்புலகில் அவரும் ஒரு பிரம்மா தான். பின்நாளில் அவர் என்னுடைய ஆசிரிய-ரென்றில்லாமல் நல்லதொரு நண்பரானார். நான் அவருடன் இணைந்து வேலை செய்யும் காலப்பகுதியிலேயே ஓவியப் பரப்பில் எனக் கான வெளியை உணர்த்திச் சென்றவர் அவர்.” என்று மாற்கு மாஸ்டரின் ஆத்மார்த்த நினை வுகளில் அடிக்கடி மூழ்கிப் போவார் ராஜா.

ஓவியம் போலவே சிறுவயதிலிருந்து சிறப் பாகப் பாடும் வல்லமையையும் ராஜா பெற்றி ருந்தார். ஆரம்பத்தில் கல்லூரியின் கரோல் குழுவில் பாடி வந்த இவர் பின்னர் ஊர் விழாக்களில் சினிமா, பொப் பாடல்களையும் மேடைகளில் பாடினார். லண்டன் தமிழ் அவைக்காற்றுக் கலைக்கழகத்தினர் மேடை யேற்றிய பல சிறுவர் நாடகங்களுக்கு பாடக ராகவும் மற்றும் இசையமைப்பில் பணியாற்-றியதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கல்லூரி நாட்களில் பருத்தித்துறை துள்ளுமீன் விளையாட்டுக் கழகத்திற்காக, ‘கலைஞர் வட்டம்’ தயாரித்து அளித்த மூன்று நாடகங் களில் நடித்து நாடக உலகில் தன்னை இணைத்துக் கொண்டார். இரா. பஞ்சலிங்கம்



எழுதி நெறியாள்கை செய்த ‘தீக்குச்சி’ என் பதே ராஜா நடித்த முதல் நாடகமாகும். பின்னர் இரா. பஞ்சலிங்கத்தின் ‘மெழுகுவர்த்தி’, கர வைக் கிழாரின் ‘தணியாததாகம்’ (கயிலை வன்னியன் பற்றிய சரித்திர நாடகம்) ஆகிய நாடகங்களிலும் நடித்திருந்தார். தணியாத தாகம் என்ற இரண்டரை மணிநேர நீண்ட



நாடகத்தை இருதயராஜா நெறியாள்கை செய் திருந்தார். கயிலை வன்னியனாக பிரதம பாத்திரமேற்ற ராஜாவுடன் இருதயராஜா, அன்னலிங்கம், சிவா கிருஷ்ணமூர்த்தி, தாளையடி செபமாலை மாஸ்டர், ஸ்ரீஸ்க.ஃபே தேவன் ஆகியோரும் நடித்திருந்தனர்.

இம்மூன்று நாடகங்களில் நடித்தது மட்டும் அல்லாது ஒப்பனை, மேடையமைப்பு என்ப வற்றிலும் தனக்கே உரித்தான கை வண்ணத் தைக் அவர் காட்டினார். யாழ். பல்கலைக் கழகத்தினருக்காக மௌனகுருவின் நெறியாள் கையில் மேடையேற்றப்பட்ட மஹாகவியின் ‘புதியதொரு வீடு’ நாடகத்தின் மேடை அமைப்பு, ஒப்பனை என்பவற்றின் பொறுப்பா ளராகவும் இருந்தார். 1979இல் அவைக்காற்று கலைக் கழகத்திற்காக பேராசிரியர் சி. மௌன-குரு நெறிப்படுத்திய ‘அதிமானிடன்’ நாடகத் தின் பின்னணியிலும் ராஜாவின் கைவண்ணம் குறிப்பிடத்தக்கதாக அமைந்திருந்தது. தொடர்ந்து யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும், பேராத னையிலும் தமிழ் அவைக்காற்றுக் கலைக் கழகம் மேடையேற்றிய மழை, ஒரு பாலை வீடு, யுகதர்மம் போன்ற நாடகங்களுக்கு மேடையின் பின்னணியில் ராஜாவின் பங்க-ளிப்பு பளிச்சிட்டு நின்றது. அவர்களது கனடா நாடக விழாவின் போது கையில் கிடைக்கின்ற பொருட்களை வைத்துக்கொண்டு மேடைக்கு வேண்டிய உபகரணங்களை அவர் அழகாகச் செய்ததை நான் நேரில் பார்த்திருக்கிறேன்.

கலைஞர் வட்டத்தின் நாடகங்களுக்குப் பின் னர் 1979இல் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் தமிழ் அவைக்காற்றுக் கலைக்கழகம் மேடை யேற்றிய அயனஸ்கோவின் ‘இடைவெளி’ என்ற நவீன நாடகத்தில் நடித்ததன் மூலம் நடிப்பில் இவர் புதிய பரிமாணத்தைத் தொட்டார். இந் நாடகத்தில் நிர்மலா, ஜெராட் ஆகியோரும் நடித்திருந்தனர்.

1988இல் இலண்டனுக்குக் புலம்பெயர்ந்த பின்னர் இலண்டன் தமிழ் அவைக்காற்றுக் கலைக்கழகத்தினர் மேடையேற்றிய யுகதர்மம், சம்பந்தம், பாரத தர்மம், ஐயா எலெக்சன் கேட்கிறார், பலி, இரு துயரங்கள், பார்வைக் கோளாறு (தனி நபர் நடிப்பு), மழை, மன்னிக்-கவும், முகமில்லாத மனிதர்கள், பெயர்வு, எரிகின்ற எங்கள் தேசம், இடைவெளி, தரிசனம், காத்திருப்பு ஆகிய நாடகங்களில் முக்கிய பாத்திரங்கள் ஏற்று நடித்து தன் நடிப்பாற்-றலை வெளிப்படுத்தினார். மற்றும் எரிகின்ற எங்கள் தேசம் கவிதா நிகழ்விலும் பெயர்-விலும் இவரது ஓவியங்கள் காட்சிப்படுத்தப் பட்டன. 2003இல் மேடையேறிய வாசுதேவன் எழுதிய ‘காத்திருப்பு’ என்பதே ராஜா இலண்டன் தமிழ் அவைக்காற்றுக் கலைக்கழகத்திற்காக நடித்த கடைசி நாடகமாகும்.

‘மழை’ நாடகத்தில் சீரியசான டாக்டராக, முகமில்லாத மனிதர்களில் காதலனாக, ஐயா எலக்சன் கேட்கிறார் நாடகத்தில் கட்சித் தொண்டனாக, பாரத தர்மத்தில் தர்மனாக என்று பல்வேறுவிதமான பாத்திரங்களையும் ஏற்றுப் பாத்திரங்களுக்குப் பெருமை சேர்த் தார் ராஜா. எல்லாப் பாத்திரங்களும் இவருக்குப் பொருந்திவந்தன. இயல்பான நடிப்பாற்றலால் பாத்திரங்களுக்கு ராஜா உயிரூட்டினார். யுகதர்மம் நாடகத்தில் முதலாளியாகத் தோன்றி பாடி, ஆடி நடித்தது இன்றும் என் நினைவில் பசுமையாக இருக்கிறது.

இவ்வாறு நாடகக் கலையில் ஈடுபட்டிருந்தாலும் தன் உணர்வுடன் கலந்த ஓவியக் கலையில் தினமும் அவர் திளைத்திருந்தார். நாடக மேடை அமைப்பிற்குத் தன் ஓவிய ஆற்றலைப்

- ப. ஸ்ரீஸ்கந்தன் -

பயன்படுத்தினார். புத்தகங்களின் அட்டை வடிவமைப்பு, கதைகள், கவிதைகளுக்கான ஓவியம் வரைதல் என்று அவர் சுவாசமே ஓவியமாக இருக்கிறது.

இந்த வகையியல் 1974இல் எஸ்.பொ எழுதிய ‘இஸ்லாமும் தமிழும்’ எனற நூலின் அட்-டைப்பட ஓவியத்தை ராஜா வரைந்திருந்தார். இதுவே அட்டைப்படமாக முதலில் வெளிவந்த இவரது ஓவியமாகும். பின்னர் வைகறை வெளியீடாக வந்த தெளிவத்தை யோசெப் எழுதிய ‘நாமிருக்கும் நாடே’, சி.வி. வேலுப்-பிள்ளையின் ‘வீடற்றவன்’ மற்றும் என்.எஸ்.எம். ராமையாவின் ‘ஒரு கூடைக்கொழுந்து’ ஆகிய நூல்களின் அட்டைப் படங்களை வரைந்து கொடுத்தார்.

ராஜாவின் லண்டன் வருகையின் பின்னர் மாலியின் தமிழோசை மற்றும் நாழிகை, ராஜகோபாலின் தமிழன் மற்றும் புதினம், ராஜநாயகத்தின் Tamil Times போன்ற சஞ்-சிகை / பத்திரிகை ஆகியவற்றிற்கும் கணினி வரைகலை வடிவமைப்புகளை மேற்கொண் டார். தவிர, இலண்டன் நலன்புரிச் சங்கம் வெளியிட்ட இன்னுமோரு காலடி, யுகம் மாறும், கண்ணில் தெரியுது வானம் போன்ற வெளி யீடுகள், தமிழியல் வெளியிட்ட சில நூல்க-ளுக்கு அட்டைப் படத்தையும் புத்தக வடிவ மைப்பினையும் இவர் செய்தார். மேலும் தூண்டில் (ஜேர்மனி) நாழிகை (இலண்டன்), தாய்வீடு (கனடா), இருள்வெளி (பிரான்ஸ்), இனியும் சூழ்கொள் (இலக்கியச் சந்திப்பு), தோற்றுத்தான் போவோமா (பிரான்ஸ்) என்ப வற்றில் வருகின்ற சிறுகதைகள், கவிதைகளுக்கு ராஜாவின் ஓவியங்கள் பலமாக இருந்தன.

கடந்த 8 வருடங்களாக இலண்டனில் இயக் கிவரும் ‘விம்பம்’ என்ற கலை இலக்கிய அமைப்பின் மூலகர்த்தாக்களில் ஒருவரான ராஜா தொடர்ந்து அதனை இயக்கியும் வரு கிறார். வருடா வருடம் நடைபெறும் குறும் திரைப்பட விழா, இலக்கியக் கூட்டங்கள், புத்தக வெளியீடுகள் மற்றும் சிறுவர் நாடகப் பட்டறை, ஓவியப் பட்டறை புகைப்படம் பற்றிய கருத்தமர்வு போன்ற பல விடயங்களை விம் பம் அமைப்பினூடாகச் செய்து வருகிறார்.

ஓவியம் மட்டுமல்லாது கலையின் பன்முகங் களையும் ஒருசேரக் கொண்டவர் ராஜா. அக்கலைகள் ஒவ்வொன்றையும் மிகவும் ஆழ மாக அவர் தொட்டார். ஆற்றல், அறிவு, செயற்திறன், நேர்த்தி, தன்னடக்கம் போன்ற பல குணாதிசயங்கள் அவரிடம் காணப்படு கின்றன. கலை இலக்கிய உலகில் அகலக் காலப்பதித்த இந்தக் கலையுலக மார்க்கண்-டேயனைத் தாய்வீடு வாழ்த்துகிறது.



sriskandan@thaiveedu.com





# A Career for Success

## Diploma Courses
- Diploma in Office Administration
- Diploma in Accounting and payroll

### IT Application Development
- Developing Applications using JAVA
- Database Design and Development using Oracle/MS SQL Sever
- Software Engineering Principles
- Web Programming (HTML, XHTML, XML)

## Special Certificate Programs
### ENGINEERING DRAFTING & CNC PROGRAMMING WITH SETUP TRAINING
- Auto CAD
- SolidWorks
- MasterCAM X6
- MicroStation
- Blue Print Reading
- LAB VIEW
- MAT LAB

### Multimedia & Graphic Design
- Web Design
- Video Editing
- PhotoShop
- Illustrator
- QuarkXpress

### Pre-Exam Courses (For Licence)
- Industrial & Construction Electrician (309A ,442A)

***SOFTWARE QUALITY ASSURANCE TESTER**

***LINUX SYSTEM ENGINEER / ADMINISTRATOR**

### Accounting Software
- MS Office
- Quick Book / ACCPAC / Simply Accounting

**FOR FUTHER DETAIL PLEAE CALL OUR CAREER CONSULTANT**

2006க்குப்பின்
EI அல்லது
Maternity எடுத்தவர்கள்
இதை இலவசமாகக்
கற்பதற்கு தகுதி
உடையவராகலாம்

**COVERS TUITION AND LIVING EXPENSES UP TO $28,000**

-digi Media-

PROUD MEMBER OF ONTARIO ASSOCIATION OF CAREER COLLEGES

NATIONAL ASSOCIATION OF CAREER COLLEGES · L'ASSOCIATION NATIONALE DES COLLÈGES DE CARRIÈRES

**beta College**
of Business & Technology

Tel: **416.449-BETA**(2382)
**www.betacollege.ca**
info@betacollege.ca
1085 Bellamy Road, Unit 208, (Bellamy & Ellesmere)
Scarborough, ON, M1H 3C7

# கலைத்தூது அருட்கலாநிதி நீ. மரிய சேவியர் அடிகள்

**- தெளிவத்தை ஜோசப் -**

திருமறைக் கலாமன்றம் என்றதுமே நம் மனதில் எழுகின்றவர் பேராசிரியர் நீ. மரிய சேவியர் அடிகளார் அவர்கள் தான்.

ஏறத்தாழ ஒரு அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக ஈழத்தமிழ் மக்களின் கலை, இலக்கியம் தொடர்பாக நாடக அறங்கேற்றம், நாடக பயிற்சிப் பாசறைகள், நூல் வெளியீடுகள், கருத்தரங்குகள், ஓவிய, சிற்ப கண்காட்சிகள், சஞ்சிகை வெளியீடு என்று ஒரு பன்முக செயற்பாடுகளை அர்ப்பணிப்புடன் செயற்படுத்திவரும் திருமறைகலாமன்றத்தின் இயக்குனர் மரிய சேவியர் அடிகளார்.

வணக்கத்திற்குரியவர்களான ஜி.யு. போப்-கொன்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி (வீரமா-முனிவர்) ஜோசப் வாஸ், நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர், தமிழ்த்தூது சேவியர் தனி-நாயகம், கரவையூர் செல்வம் - தனிமனிதர்களாகத் தனித்து வாழ்ந்துவிடாது திருமறை வட்டத்திற்கு அப்பாலும் தமது பன்முகப் படுத்தப்பட்ட பணிகளினால் தமிழுக்கும், கலை இலக்கியத்தற்கும் சேவையாற்றி, மனிதர்களை சமூக விழிப்புணர்வுள்ளவர்களாக்கும் குறிக் கோளை முன்னெடுத்தவர்கள் வரிசையில் இன்று கலை தூதாக வரலாற்றில் இடம் பெறுபவர் கலாநிதி மரிய சேவியர் அடிகளார் அவர்கள்.

திரு திருமதி நீக்கிலாம்பிள்ளை எமிலியாம்-பிள்ளை தம்பதியினருக்கு மகனாக இளவாலையில் பிறந்த இவர் இளவாலை தமிழ் பாடசாலை என்றிக்கம்பர் கல்லூரி, சம்பத்திரிசியார் கல்லூரி ஆகியவைகளில் கல்வி கற்று கண்டி தேசிய குரு மடத்தில் தத்துவம் பயின்றவர். உயர் கல்வியின் பின் அதே குரு மடத்தில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டு இறையியல் விரிவாக்கப்பணிகளில் ஈடுபட்டவர். அச்சுவேலி, மன்னார், கிளிநொச்சி, குருநகர், உரும்பிராய் போன்ற இடங்களில் பங்கு தந்தையாக இருந்துள்ளார்.

திருமறை கலாமன்றத்தினை 1962இல் உருவாக்கி அதன் மூலம் இளைஞர்களை ஒன்றிணைத்து பணியாற்றத் தொடங்கினார்.

'திருமறை கலாமன்றத்தின் அடித்தளம் நமது தமிழ் மண். அதன் செயற்பாடுகள் மண்ணையும் நமது மொழியையும் நமது பண்பாட்டையும் மதித்து, அன்பு செய்யும் அனைவரையும் ஒன்றிணைத்து பயணித்தல் ஆகும். கலைகள் மூலம் இறைபணி, அறப்பணி ஆற்றுவதே நமது குறிக்கோள்' என்று கூறும் அடிகளார் அதனின்றும் சிறிதும் அகலாதவாறே ஒரு 50 ஆண்டு காலம் கலைப்பணி ஆற்றி வருகின்றார். அதில் அமோக வெற்றியீட்டியும் வருகின்றார்.

1965ல் இவர் நாராந்தனையில் பங்குக் குருவானவராக இருந்தபோது 'அமைதியின் அண்ணல்' என்னும் பக்தி நாடகத்தை எழுதி, நெறியாள்கை செய்து நாராந்தனையில் (3/1/1965 அன்று) மேடையேற்றினார். அதுவே திருமறைக்கலாமன்றத்தின் முதல் நாடக அரங்கேற்றம்.

ஒரு பக்தி நாடகத்துடன் ஆரம்பித்த அடிகளாரின் கலைப்பயணம் 1967ல் திருமறைக்கலா மன்றத்தினை உரும்பிராயில் புனரமைத்து நிலை கொள்ளச் செய்து கொண்டமையுடன் வேகமும் கொண்டது.

பக்தி நாடகம், நவீன நாடகம், மௌன நாடகம், இசை நாடகம் நாட்டுக்கூத்து, வரலாற்று நாடகம், ஏசுவின் திருப்பாடுகள் என்று 70 ஜனவரி வரையிலான 3 ஆண்டுகளில் பதினைந்துக்கும் மேற்பட்ட நாடகங்களை உரும்பிராயில் மேடையேற்றினார். சுன்னாகம், மல்லாகம் போன்ற இடங்களிலும் உரும்பிராயிலும் ஒன்றுக்கும் மேற்பட்ட தடவைகள் இவைகளில் ஒரு சில மேடையேற்றம் கண்டுள்ளன.


1969 மார்ச்சில் உரும்பிராயில் இரண்டு தடவைகள் மேடை ஏறிய 'அன்பில் மலர்ந்த அமரகாவியம்' என்னும் திருப்பாடுகளின் மேடையேற்றம் 300க்கும் மேற்பட்ட நடிக நடிகைகளை மேடையில் ஏற்றி நடைபெற்று வெற்றி கொண்டதாகும்.

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மதுரையில் தமிழ் படித்து வித்துவான் ஆன இந்தக் கத்தோலிக்கத் திருத்தந்தை சைவ சித்தாந்தத்திலும், லண்டன் சர்வகலாசாலையில் வரலாற்றுத் துறையிலும் கலாநிதிப்பட்டம் பெற்றவர்.

திருமறைக்கலாமன்றம் மூலமாக எண்பது-வரையிலான காலகட்டத்தில் நாட்டின் பல பாகங்களிலும் கிட்டத்தட்ட நாற்பது நாடகங்களை எழுதி இயக்கி மேடையேற்றி வெற்றி கண்ட அடிகளார் 1973ல் தமது நாடகக் குழுவினருடன் தமிழ் நாட்டுக்கும் சென்று திருச்சியில் 'களங்கம்' என்னும் திருப்பாடுகள் நாடகத்தை அரங்கேற்றிப் பாராட்டுப் பெற்றார்.

வானொலிச் சேவையிலும், ரூபவாஹினியிலும் அருட்தந்தையின் நாடகங்கள் விசேடக் கவனம் பெற்று ஒலி, ஒளிபரப்புக் கொண்டமை குறிப்பிடக் கூடியது.

எழுபதுகளுக்குப் பிந்தியதான இலங்கையின் இன வன்முறைகளூடான போர்ச்சூழல், இயல்பு நிலையின் சீரற்ற தன்மை ஆகியன திருமறைக்கலாமன்றத்தின் கலை இலக்கியச் செயற்பாடுகளை மிகவும் பாதித்தே வந்துள்ளது.




வரையறுக்கப்பட்ட செயற்பாடுகளின் மத்தியிலும் இம்மன்றத்தினர் எழுபதுகளிலிருந்து தொண்ணூறு வரையிலான இருபதாண்டு காலத்தில் பத்து நாடகங்களை மேடையேற்றியதன் மூலம் தங்களது இருப்பை நிலை நாட்டிக் கொண்டிருந்தனர். பெருஞ்சிரமங்களுடன் தக்கவைத்துக் கொண்டிருந்தனர்.

1990ல் கலைமுகம் என்னும் ஒரு காலாண்டு சஞ்சிகை திருமறைக்கலாமன்றக் கொழும்புக் கிளை பம்பலப்பிட்டி மிலாகிரிய அவனியூவிலிருந்து வெளிவரத்தொடங்கியது. 2000ஆம் ஆண்டு தொடக்கம் கலைமுகமும் யாழ்ப்பாணத்திலிருந்தே வரத் தொடங்கியது. ஒரு

## ஆழத்து முத்துக்கள் 91

தனித்துவமான சிறுசஞ்சிகையாக கடந்த 20 ஆண்டுகளாக திருமறைக்கலாமன்றத்தின் கலைமுகம் வெளிவந்து கொண்டிருக்கிறது. இதன் பிரதம ஆசிரியர் நீ.மரியசேவியர் அடிகளார். பொறுப்பாசிரியர் கி.செல்மர் எமில். செப்டம்பர் 2012 காலாண்டுக்கான இதழ் 56 ஆவது இதழாக மலர்ந்திருக்கிறது. 52 ஆவது இதழில் நமது 'தாய்வீடு' பற்றிய அறிமுகக் குறிப்பும் இடம்பெற்றுள்ளது.

நாடக அரங்கியலுக்கான இதழ் ஒன்றையும் 'ஆற்றுகை' என்னும் பெயரில் திருமறைக் கலாமன்றம் வெளியிட்டு வருகிறது என்பது முக்கியமானது.

1990 வரையும் இம்மன்றம் வெளியிட்ட அனைத்து நாடகங்களையும் (ஏறத்தாழ ஒரு நாற்பது) அருட்தந்தை மரியசேவியர் அவர்களே எழுதி இயக்க திருமறைக்கலாமன்றம் மேடையேற்றியுள்ளது.

1990 பெப்ரவரியில் ஒரு பெருமாற்றமாக அ. தாசீசியஸின் பிரபல நாடகமான 'பொறுத்தது போதும்' நாடகம் அ.பிரான்சிஸ் ஜெனத்தின் நெறியாள்கையுடன் யாழ்ப்பாணத்தில் மேடையேறியது.

அண்ணாவியார் அன்டன் பாலதாஸ், அவர்களுடைய 'நீ ஒரு பாறை' என்னும் நாட்டுக் கூத்து மரிய சேவியர் அடிகளாரின் நெறிப் படுத்தலுடன் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் அரங்கேறியது.

அ. பாலதாஸ், தூயமணி மிக்கேல்பிள்ளை போன்றோரின் நாட்டுக்கூத்துக்களும் 90களின் பின் அரங்கு கண்டன.

சங்கரதாஸ் சுவாமிகளின் 'ஞானசவுந்தரி', 'நல்லதங்காள்', 'ஜெனோவா' 'மயானகாண்டம்', மற்றும் வளையாபதி, குண்டலகேசி, சீவக-சிந்தாமணி, சகுந்தலை, சங்கிலியன், ஒத்-தெல்லோ போன்ற பழைய நாடகங்களின் மீளுருவாக்கமும் பிந்திய காலங்களில் மேடை ஏற்றம் கொண்டன.

அ. பலதாஸின் மீளுருவாக்கத்துடன் அருட் தந்தை மரிய சேவியரின் நெறியாள்கையுடன் 'ஞானசவுந்தரி' கொழும்பு, யாழ்பாணம் கிளி-நொச்சி, வவுனியா, திருக்கோணமலை போன்ற நகரங்களில் பல தடவைகள் 'இசை நாடகமாக' அரங்கேற்றப்பட்டிருக்கிறது.

வீரமணி ஐயரின் இரண்டு நடன நாடகங்கள் யாழ்ப்பாணத்தில் மேடையேற்றப்பட்டுள்ளன. 'மானில் மயங்கிய மாதும் மன்னனும்' 'இலங்கையர்கோன் விலங்கு' என்னும் இவ் விரண்டு நடன நாடகங்களும் மரியசேவியர் அடிகளார் மற்றும் நளாயினி இராஜதுரை ஆகியோரின் நெறியாள்கையுடன் மேடை-யேற்றப்பட்டன.

தொடர்தல் 112ம் பக்கம்

உங்களுக்குத் தெரிந்த கலைஞர்கள் பற்றி நீங்களும் எழுத வேண்டுமா?

கலைஞர்கள் பற்றிய விபரங்கள், அவர்களுடைய புகைப்படங்களுடன்
உங்களுடைய பெயர், தொலைபேசி எண், புகைப்படம்
மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டுக்கு அனுப்பிவையுங்கள்.

Thaiveedu
Woodside Square, P.O.Box #63581
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0

Fax : 416.849.0594
E-mail : info@thaiveedu.com

# கடன்தொல்லை?




- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

**நாங்கள் ஒரு புதிய ஆரம்பத்திற்கு வழிகாட்டுகிறோம், இனி**

- நிம்மதியான தூக்கம்
- மீண்டும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்கலாம்
- ஏக்கத்தை விட்டொழிக்கலாம்
- உங்கள் மேலிருக்கும் அந்தச்சுமையை அகற்றிவிடலாம்
- உங்களைப் பற்றி பெருமையாயும், ஆனந்தமாயும் உணருங்கள்
- இனி கட்டவேமுடியாத Billகளைப்பற்றி கவலையில்லை.
- நண்பர்கள், உறவினர்களிடம் கடன் வாங்கும் சிறுமையும் இனி இல்லை

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**SRI**

**CREDIT SOLUTION CENTRE**

Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்

80 Corporate Drive, Suite 309
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Fax: 416.439.0226
creditsolutioncentre@gmail.com



digi


Protect More. Save More.
Insure your + SAVE UP TO 45%*
HOME AUTO TRAVEL
அனைத்துவிதமான
காப்புறுதித் தேவைகளுக்கும்
Allstate
You're in good hands.
Suren Navaratnarajah
Allstate Insurance Company of Canada
416-520-6916
4525 Kingston Road, Unit H5, Scarborough, ON. M1E 2P1


RENU MOTORS Ltd.
AWARD WINNING USED CAR DEALERS
வாகன விற்பனைத்துறையில் முதல் முதலாக Platinum விருது பெற்ற கனடியத் தமிழ் மகன்
வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட வாகனங்களை விற்பது எமது விசேட திறன்
34 வருட அனுபவம்
• We Sell Bank Repossed Cars
• Traffic Tickets
HONDA
TOYOTA
GM-MINI VANS
தமது சிறப்பான சேவையால் அதி உயர் விருது பெற்ற
Radha
3030 Markham Road,
Markham and Passmore
416.412.3838
416.546.0727

# புலம்பெயர் சமூகத்தில் பேசப்படாத கூத்துக்கலை

- சாம் பிரதீபன் -

கலை என்பதும், அதன் அழகியல் என்பதும் மனிதர்களால் எப்பொழுதும் விரும்பப்படும் ஒரு மகிழ்வூட்டல் வடிவம் என்பது மறுப்பிற்கு உட்படாத ஒரு உண்மை என அனைவரும் அறிவோம். இந்த கலைகளும் அதன் சார்புள்ள அனைத்து விடயங்களும் ஒவ்வொரு இனத்தின் பண்பாட்டுத் தளங்களுள்ளும் கலாசாரத் தட்டுகளிலும் செல்வாக்குச் செலுத்துவதும், அந்தந்த இனத்தின் அடையாள மூலக் கூறுகளாக இருந்துவிடுவதும் இயல்பான ஒரு புரிதலுக்குரிய விடயமே. குறித்த இனமொன்றின் இந்த அடையாளங்களோடு வெளிப்படும் இயல்பு நிலையில் கலை இருப்பதனால்தான் இனங்களின் விரிவாக்கத்திற்கேற்ப கலைகளும் பற்பல வடிவங்களோடு உலகில் முகிழ்க்கத் தொடங்கி இன்று ஏராளமான தனித்துவங்களோடு மனிதர்களின் புருவ நுனிகளை உயர்த்தி வியக்க வைத்துக்கொண்டிருக்கின்றன. உலகின் நீண்ட நிலங்களை தமதாக்கிக்கொண்ட வல்லரசுகளாயினும் சரி, பூகோள வரைபடத்தில் குறுகித் தெரியும் சிறிய தேசங்களாயினும் சரி தத்தமக்கென தனியான பாரம்பரியங்களையும், முதிசங்களையும், வரலாறுகளையும், கொண்டமைந்தே இருக்கின்றன. இந்த தனித்துவங்களில் இருந்து வெளிப்படுகின்ற கலைகளும் மற்ற யாவற்றையும் போல தமக்கென தனித்துவமான ஒரு கட்டமைப்பினையே பெரும்பாலும் கொண்டிருக்கின்றன.

ஈழத் தமிழர்கள் நாம் இலங்கைத் தீவென்னும் சிறிய தேசமொன்றின் பூர்வீகக் குடிகளாக பன்நெடுங்காலமாக வாழ்ந்து வருகின்ற போதும், எமக்கென ஒரு பாரம்பரிய வரலாற்று நீட்சியினைக் கொண்டிருக்கின்ற போதும், அத்தேசத்தின் பெரும்பான்மைக் குடிகளோடு சமரசம் செய்துகொண்டு எமக்கான சுயங்களையும் அடையாளங்களையும் ஸ்திரப்படுத்திக்கொள்ள பலவற்றோடு போராட வேண்டியிருந்ததை நாங்கள் அறிவோம். அரசியல் அழுத்தங்கள், பொருளாதார நெருக்கீடுகள், கல்விச் சமநிலையின்மைகள், தொழில்சார் சந்தர்ப்பமின்மைகள், கைத்தொழில் போதாமைகள், சுய மொழி அங்கீகாரமின்மைகள், இனச் சுதந்திரமின்மைகள், மதப் பாகுபாடுகள் போன்ற பலவற்றிலுமிருந்து எமக்கான உரிமைகளை மீட்டெடுக்க முனைப்புக் காட்டியபோது ஏற்படுத்தப்பட்ட அழிவுகளில் இருந்து எம்மைக் காப்பாற்றிக்கொள்ள முனைந்ததன் ஒரு விளைவே புலப்பெயர்வாகும்.

யுத்தத்தின் கடும்போக்கால் ஏறத்தாழ மூன்று தசாப்தங்களுக்கு முன்பு இருந்து இன்று வரை புலப்பெயர்வில் உள்வாங்கப்பட்டிருக்கும் ஈழத்தமிழ் மக்கள் மட்டுமன்றி, யுத்தத்திற்கு அப்பாலான உயர்கல்வி மற்றும் வேலை வாய்ப்பு போன்ற பல காரணங்களால் கூட எமது மக்கள் தாயகத்திற்கு வெளியிலான இந்த மேற்குலகோடு தமது வாழ்வுக்கான வெளிகளை அமைத்திருக்கின்றார்கள். அவ்வாறு இவர்கள் அமைத்துக்கொண்ட வாழ்வுக்கான வெளிகள், வெறும் உயிர்வாழ்தலுக்கானதாக மட்டும் இருந்திருக்கவில்லை. மாறாக தமது பண்பாடுகள், கலாசாரங்கள், கலைகள், சடங்கு முறைமைகள், சமய ஆச்சாரங்கள், விழாக்கள், என பலவற்றோடும் மீள் அடையாளமிடப்படுவதாய் தொடரப்பட்டிருந்தது. எமது மக்களால் மீள் அடையாளமிடப்பட்ட பலவற்றுள் கலைகளுக்கு ஒரு தனியான இடம் இருப்பதை யாரும் மறுக்க முடியாது. நாம் வாழும் புதிய தேசத்தில் கலைகளின் தொடர்ச்சியான அளிக்கைகளும், அடுத்த சந்ததியினரை அக்கலைகளில் ஈடுபடுத்தும் ஆர்வமும் ஒட்டுமொத்தமாக புலம்பெயர்ந்த பெரும்பான்மைத் தமிழ் மக்களின் மனநிலையாகவே இருந்து வந்திருக்கின்றது. பரவலான தமிழ் கல்விக்கூடங்களின் பெருக்கமும், அங்கே தமிழ் மொழியினைக் கற்றுக் கொடுத்தலோடு மட்டும் நின்றுவிடாமல் கலை சார்ந்த பயிற்சி வகுப்புகளை நடத்துதலும் இந்த மனநிலையின் வெளிப்பாடுகளாகவே பார்க்கலாம்.

புலம்பெயர் சமூகத்தில் கலை மீதான நாட்டம் என்பது வெறுமனே நுண்கலைகள் சார் பயிலுதல்களோடும், அவற்றிற்கான விலையுயர்ந்த அரங்கேற்றங்களோடும் மட்டுமே திருப்திப்பட்டுக்கொள்கின்ற ஒரு போதாமையாகவே இருந்துகொண்டிருக்கின்றது. இதற்கு அப்பால் சிந்திக்கவோ எமக்கான சுதேசிய, தேசியக் கலைகள் பற்றிப் புரிந்து கொள்ளவோ போதிய அவகாசமற்ற அல்லது அவசியமற்ற ஒரு மனநிலையுடனேயே எம்மில் பலரும் வாழ்ந்து முடித்துக்கொண்டிருக்கின்றோம். ஆனால் இன்று நாம் எமது ஈழத்து தமிழ்க் கலை வடிவங்கள் என பூஜித்து தலைமேல் தாங்கும் இந்த நுண்கலைகளிலும் சரி, அவைக்காற்றும் கலைகளிலும் சரி, எத்தனை வீதத்தினது எமது மூலங்களோடும் வேர்களோடும் தொடர்புடைய கலை வடிவங்கள் என்ற தேடல் எமக்கு அவசியமற்றதொன்று என நாம் கருதிக்கொள்கின்றோம். இவற்றுள் பாதிக்கு மேற்பட்டவை இன்று எமது ஈழத்து தமிழ் கலைவடிவம் என்ற அந்தஸ்தினைப் பெற்று எமதுகளுக்குள் உள்வாங்கப்பட்டிருந்தாலும், காலத்தால் முந்திய வரலாறுகளில் அவை புறத்தே இருந்து எமக்குள் தருவிக்கப்பட்ட அல்லது வலிந்து திணிக்கப்பட்ட பலவற்றின் எச்ச சொச்சங்கள் என்பது இங்கு பேசப்பட வேண்டியதொன்று. இந்த கருத்து, இத்துறைசார்ந்த பலருக்கு ஆத்திரத்தை வருவிக்கும் ஒன்றாக இருக்கலாம். ஆனால் எமக்குள் இருக்கும் பல விடயங்கள் இத்தகைய முற்சார்பு ஆத்திரங்களுக்கு அப்பால் தூக்கி நிறுத்தி வியாக்கியானம் செய்யப்பட்டாக வேண்டியிருக்கின்றது.



ஆடல், அடவு போன்ற உடலியக்கம் மற்றும் முகபாவம் போன்றவற்றோடு தொடர்புடைய அவைக்காற்றுகை செய்யும் கலைகளுள் பரதக் கலை புலம்பெயர் சூழலில் மிகப் பிரபல்யமானதாக வளர்த்தெடுக்கப்பட்டிருக்கின்றது. அது ஒருவகையில் மிக மகிழ்ச்சிக்குரியதே. ஆனால் புறத்தே இருந்து இறக்குமதி செய்யப்பட்ட இந்த நடனக் கலை எமது ஈழத்து தமிழருக்கேயுரியதான சொந்த அவைக்காற்றுகைக் கலைவடிவம் ஒன்றை புறந்தள்ளும் அளவுக்கு, அல்லது மறக்கச் செய்யப்படும் அளவுக்கு, இல்லையேல் அப்படி ஒன்று இருப்பதாக அறியமுடியாத நிலைக்கு கொண்டு வந்திருப்பதே இங்கு நெருடலான விடயமாகும்.

இக் கட்டுரைத் தொடர் பரதக் கலைக்கு எதிரானதல்ல. ஆனால் எமது ஈழத் தமிழ்த் தேசியக் கலைவடிவம் ஒன்றுடன் எமக்கிருந்த உறவினை புலம் பெயர் சமூகத்துடன் மீளவும் ஒட்ட வைக்கும் ஒரு முனைப்பு மட்டுமே.

கூத்துக் கலை அல்லது நாட்டுக்கூத்து கலை வடிவம் என்ற ஒன்று ஈழத்தமிழரால் தொன்றுதொட்டு பாரம்பரியமாக ஆடப்பட்டு வந்து பிற்காலத்தில் வழக்கொழிந்து போகும் நிலையில் இருந்ததென்பதும், இன்று கல்வியியல் ரீதியில் மீண்டும் புத்தாக்கம் கண்டு புதுமெருகுடன் ஈழத்தில் ஆடப்பட்டும், கற்கை நெறியாக பயிலப்பட்டும் வரும் கலைவடிவம் என்பதும் புலம் பெயர்ந்து வாழும் கணிசமான மக்களுக்கு அந்நியமானதொரு தகவலாகவே பெரும்பாலும் இருக்கின்றது. பொதுவாகவே புலம்பெயர்ந்தவர்களின் மனநிலைகளில் இருக்கும் ஒரு இயல்பு நிலை மிகவும் வேதனையுடன் நோக்கத்தக்கதொன்று. தாம் புலம்பெயர்ந்த காலங்களில் எப்படி எமது தேசமும் அத்தேசம் சார்ந்த கலை கலாசார அம்சங்களும் இருந்தனவோ, அப்படியே இன்றும் மாற்றங்காணாது இருக்கின்றது என்ற ஒரு மனப்பாங்கு எம்மில் அதிகமானோருக்கு இருப்பதை ஏற்றுக்கொண்டாகவேண்டும். அந்த ஒரு பின்னணியில் நின்றுதான் நாடகம், கூத்து போன்ற அவைக்காற்றுகைக் கலை வடிவங்களை இன்றும் படிக்காத, பாமரத்தனமான, வேறு தொழில்களுக்கு தகுதியில்லாத, சிந்திக்கத் தெரியாத மனிதர்களால் நிகழ்த்தப்படுவதாக எம்மில் பலரும் எண்ணிக்கொள்கின்றோம். வளர்ச்சியடைந்த நாடுகள் என நாம் தஞ்சம் கோரி வந்த இந்த தேசங்களில் இத்தகைய அவைக்காற்றுகைக் கலைகள் பெருமதிப்போடு தொழில்சார்ந்த ரீதியில், உயர் கல்வி சார் ரீதியில் நிகழ்த்தப்படுவதையும் கற்கப்படுவதையும் நாம் நன்குணர்ந்த போதும்கூட எமக்கு எமது சுதேசியம் சார் கலைகளை மதிப்பிற்குரியதொன்றாக கொள்வதில் இன்னும் சிரமம் இருக்கவே செய்கின்றது. அந்த சிரமத்தின் ஒரு விளைவே இந்திய தேசத்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு எமதாக்கப்பட்ட பரதத்தின் மீதும் இன்னும் கதகளி, குச்சுப்புடி, கதக் போன்ற பலவற்றின் மீதும் எமது காதலுக்கு ஆயுள் அதிகமாகக் காரணமாயிருக்கின்றது. அதன் மற்றுமொரு விளைவாக, வருமானத்திற்கான வாசலைத் திறந்துவிடாத கலைகளாக எமது கூத்துக் கலை இருப்பதும் குறிப்பிடப்படுகின்றது. விலையுயர்ந்த வகுப்புகள், செலவு மிகுந்த அரங்கேற்றங்கள், வரையறை தாண்டிய குருதட்சணைகள் என்ற வாயில்களினூடு வரும் வருவாய்கள் கூத்துக் கலைக்கு அடைக்கப்பட்டிருப்பதும் இதற்கான காரணங்களாக கொள்ளப்படலாம். மறுபுறத்தே கற்கை நெறியாக ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு நிறுதிட்டமான ஒரு பாடத்திட்ட அலகோ அல்லது வரைவு செய்யப்பட்ட ஒரு ஆடல் பாடலுக்கான ஒழுங்கோ கூத்துக் கலையில் இன்னமும் சரியாக அமைக்கப்படாமையைக் குறிக்கலாம்.

தமிழ்த் தேசியம் பற்றி பெரு வாஞ்சையுடன் வீரியம் கொள்ளும் நாம், குறிப்பாக புலம்பெயர் சமூகம், எமக்கான தேசியக் கலை வடிவம் பற்றி அறிந்து கொள்வதும் அதனை தொழில் சார்ந்த, அந்தஸ்துமிக்க, உயர் கல்வி சார்ந்த ஒரு நிலைக்கு கொண்டு வருவதும் மிக முக்கியமான ஒரு விடயமாகின்றது. அந்நிலைக்கு இந்த கூத்துக் கலையினை கொண்டு வருவதற்கு அதன் தோற்றம், வளர்ச்சி, பரிணாமம், களம், காவுகை, பரம்பல், முறைமை, பலங்கள், பலவீனங்கள், தடைகள், சவால்கள், சுதேசியப் பண்புகள், தேசிய முக்கியத்துவம் போன்றவற்றை அறிந்து கொள்தலும் ஆய்வுக்குட்படுத்துதலும் மிக அவசியமாகின்றது. அந்த அறிதலும் ஆய்தலும் எமக்கு, குறிப்பாக புலம் பெயர்ந்த தேசங்களில் வாழும் எமது இளம் சந்ததிக்கு இன்று அவசியமாகின்றது. தமக்கான வேர்களைத் தேடி பயணிக்கும் இவர்களது கண்முன்னே விரியும் தமிழ்க் கலைகளாக ஏதோவெல்லாம் தெரிகின்றதே தவிர எமது தனித்துவங்களோடு மறைந்து கிடக்கும் கூத்தும், கும்மியும், அடவும், ஆட்டமும் பார்வைக்கு தரப்படுவதே இல்லை. எனவே எமது பாரம்பரிய கூத்துக் கலையினை புலம் பெயர் தளங்களில் பேச வைப்பதும், பரீட்சயத்திற்கு கொண்டு வருவதும், தூசு தட்டி எம் இளவல்களால் பேணப்பட அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவதும் இக் கட்டுரை வாயிலான எனது நோக்காக இருக்கின்றது.

எல்லாக் கலைகளையும் போல சமயக் கரணங்களின் அடியாகத் தோன்றி, காலத்திற்கு காலம் ஆடுகளங்களின் மாற்றங்களை உள்வாங்கி, செவி வழியும், கட்புலன் வழியும் கடத்தப்பட்டு இன்று கற்கை நெறியின் வாசல்களில் நுழைந்து வரும் எமது இந்த கூத்துக் கலைக்கு மிகப் பெரிய வரலாறு இருக்கின்றது. அந்த வரலாற்றுக் காலக் குறிப்புகள் என்ன? கூத்துக் கலையின் தோற்றுவாய் என்ன? எதிர்கொண்ட சவால்கள் என்ன? வளர்ச்சியும் வீழ்ச்சியும் என்ன? அதன் மூலக் கூறுகள் என்ன? வகைகளும் பிரிப்புகளும் என்ன? உள்ளடக்கங்கள் என்ன? ஆடுகளங்களின் வெளிகள் எத்தகையன? பாடல்களும் ராகங்களும் எந்த வகைப்பட்டன? ஆடல்களும் அடவுகளும் எப்படியானவை? ஒப்பனைகளும் வேட உடைகளும் எந்த வகைப்பட்டன? போன்ற ஒரு விசாலமான பார்வையினை இக் கட்டுரைத் தொடர் வாயிலாக நாம் பார்ப்போம்.

## சமயக் கரணங்களின் வேரில் தோன்றிய கூத்துக்கலை:

உலகின் எந்த இனத்தினது கலைவடிவங்களும் அடிப்படையில் அந்த இனக்குழுமம் சார் மத நம்பிக்கைகளிலும், சமயக் கரணங்களிலும் இருந்தே தோற்றம் பெற்றிருக்கின்றன என்பது பல ஆய்வுகளாலும் ஏலவே நிருபணம் செய்யப்பட்ட ஒரு விடயமே. மனிதனிடம் இயல்பாகவே ஒன்றைப் பிரதி செய்யும் பண்பு இருக்கின்றது என்பதை நாம் அனைவரும் அறிந்திருக்கின்றோம். அவை வார்த்தைகளாலும், குரல்களாலும், முக பாவங்களாலும், அங்க அசைவுகளாலும் என வேறுபடுகின்றது. இந்த இயல்பு நிலையில் இருந்த எமது மனித மூதாதையரும் சில விடயங்களை செய்து காட்ட முனைந்திருக்கின்றனர் எனலாம். புராதன காலங்களில் வேட்டையாடிப் பிழைத்த மனிதன் தனது வேட்டைத் தொழிலை செய்து காட்ட முனைந்ததன் வெளிப்பாடே பின்னர் அது சமயச் சடங்காகவும் காலப்போக்கில் நடனம், நாடகம் எனவும் வெளிப்பட்டது என்பர். சிலர் தம்மை வேட்டையாடுவோராகவும் வேறு சிலர் தம்மை வேட்டையாடப்படும் விலங்குகளாகவும் பாவனை செய்து மீள மீள அதை நிகழ்த்தியிருக்கின்றனர். இவ்வாறு வேட்டைக்கு செல்வதற்கு முன்னர் தமது வேட்டைத் தொழில் பற்றி நிகழ்த்திப் பார்த்து மிருகங்களைப் போல வேடமணிந்தவர்களை கொல்வது போல அபிநயிப்பதனூடாக தமது வேட்டையில் அதிக மிருகங்கள் கிடைக்கும் என இவர்கள் நம்பினர். அத்தோடு தமது வேட்டைக்கான பாதுகாப்பாகவும், வேட்டையாடலில் வெற்றிபெறவும் இது வழிகோலும் எனவும் இவர்கள் நம்பத் தொடங்கினர். அந்த நம்பிக்கையின் அடிப்படையில் மீள மீள நிகழ்த்தும் இந்த 'போலச் செய்தலே' சடங்குகளாக அந்த புராதன மனிதர்களிடம் ஒட்டிக்கொண்டிருக்கின்றது என்பதை நாடக ஆய்வாளர்கள் உறுதி செய்கின்றனர். போலச் செய்தல், பாவனை செய்தல், நம்பிக்கை வைத்தல், மீள நிகழ்த்துதல் போன்ற இந்த தொடர் செயற்பாடுகள் படிப்படியாக வேட உடை புனைதல், ஆடுதல், பாடுதல், ஊர்வலம் செல்லுதல் என புதிய அம்சங்களை உள்வாங்கத் தொடங்கியிருந்தது. இந்த செய்து காட்டலுக்கு இவர்கள்

தொடர்தல் 117ம் பக்கம்

# கனடாவின் கதை 11

நிமால் நாகராஜா

# நயகராவில் நடந்த யுத்தம்

நெப்போலியன் போனபாட். இருநூறு வருடங்கள் கழிந்தும் கூட இன்றுவரை உலக மக்களால் பெருமையாக உச்சரிக்கப்படுகின்ற ஒரு வீரன். (வீரத்தில் மட்டுமல்ல, காதலிலும் கலக்கியவன். காதலி ஜோசபைனுக்கு இவன் எழுதிய காதல் சொட்டும் கடிதங்கள் உலகப் புகழ் பெற்றவை).

நெப்போலியனுக்கும், கனடாவிற்கும் நேரடித் தொடர்பு ஒன்றும் இருக்கவில்லை. ஆனாலும் கனடிய மண்ணில் நிகழ்ந்த பெரும் போர் ஒன்றிற்கு நெப்போலியன் மறைமுக காரணமாக இருந்தான்.

நெப்போலியன் இங்கிலாந்து மீது போரைத் தொடங்கி விட, வலிமை கொண்ட பிரிட்டிஷ் கடற்படையே கலங்கிப் போனது. ஏராளமான கடற்படை வீரர்கள் எங்களுக்கு உயிர் தான் முக்கியம் என்று படையிலிருந்து ஓடித் தப்பத் தொடங்கினர். (அப்போதெல்லாம் இங்கிலாந்தில் பேதி மருந்துக்கு தேவையே இருக்கவில்லையாம், நெப்போலியனின் படத்தைப் பார்த்தாலே வயிறு கலக்கும் என்று நகைச்சுவை கூட பரவியிருந்தது.)

இதை இப்படியே விட்டுவிட்டால் தனது கடற்படையே காணாமல் போய்விடும் என்று பயந்த பிரிட்டிஷ் அரசு ஓடியவர்களைக் கண்டுபிடித்து கடுமையான தண்டனைகளைக் கொடுக்கத் தொடங்கியது. அநேகமாக மரண தண்டனை தான்.

அமெரிக்க நாட்டின் கப்பல்களை நடுக்கடலில் மறித்து அதற்குள் தனது வீரர்கள் யாராவது ஒளிந்திருக்கிறார்களா என்று பிரிட்டிஷ் கடற்படை தேடத் தொடங்கிய போது தான் அமெரிக்காவிற்கும், பிரிட்டிஷ் அரசுக்கும் முறுகல் தொடங்கியது. ஏற்கனவே சில விடயங்களில் இந்த இரு நாடுகளுக்குமிடையே சிறிய பூசல்கள் தொடங்கியிருந்தன. அத்துடன் இந்த கடற்படை தேடல்களும் ஒன்று சேர்ந்து விட, மோதலுக்குரிய அத்தனை அறிகுறிகளும் தெரியத் தொடங்கின.

அப்போது அமெரிக்க நாடு புதிதாக பிறந்து கொஞ்சக் காலம் தான். அதற்கு வலிமையான இராணுவம் ஒன்றும் கிடையாது. பிரிட்டிஷாரின் அடாவடிக்கு ஆத்திரம் வந்தாலும் கொஞ்சம் பொறுமை காக்கத் தான் வேண்டும்.

கடல்களில் மட்டுமல்லாமல், அமெரிக்க துறைமுக நகரங்களிலும் கூட தனது தேடுதல்களை பிரிட்டிஷ் அரசு முடுக்கி விட்டது. தவறணைகளில் குடித்துக் கொண்டிருக்கும் குடிமக்களை கொத்து கொத்தாக அள்ளிக் கொண்டு போகத் தொடங்கியதும், இது அக்கிரமம் என்று அமெரிக்க அரசு போர்க்கொடி தூக்கியது.

அமெரிக்க தேசம் தன் கையை விட்டு போனதால் பிரிட்டிஷ் அரசுக்கு பெரும் கோபம். தான் என்ன செய்தாலும் அமெரிக்காவால் ஒன்றும் செய்ய முடியாது என்ற ஆணவத்தில் பிரிட்டிஷ் அரசு கொஞ்சம் அதிகமாகவே வாலாட்டியது. (அமெரிக்காவை அப்போது சீண்டிப் பார்த்த பிரிட்டன், இப்போது ஆப்கானிஸ்தான், ஈராக் என்று எங்கு அமெரிக்கா கூப்பிட்டாலும் மறுபேச்சு பேசாமல் வாயைப் பொத்தியபடி போவதைப் பார்க்கும் போது சிரிப்புத்தான் வருகிறது).

அந்த நேரத்தில் அமெரிக்க குடியுரிமையை நிருபிப்பதற்கு புகைப்படம் ஒட்டிய அடையாள அட்டைகள் ஒன்றும் இருக்கவில்லை. பெரும்பாலான அமெரிக்கர்கள் பிரிட்டிஷ் வாரிசுகள் தான். அமெரிக்க குடிமக்களுக்கும், பிரிட்டிஷ்காரர்களுக்கும் வித்தியாசம் கண்டு பிடிக்க முடியாததை சாட்டாக வைத்து, தப்பி ஓடிய தனது கடற்படை வீரர்களைத் தான் கைது செய்கிறேன் என பிரிட்டிஷ் அடம் பிடித்தது.

எவ்வளவு காலத்திற்குத் தான் தலை குனிந்து கிடப்பது?

அமெரிக்க நாடு தனது முதலாவது சண்டைக்கு தயாராகத் தொடங்கியது. பிரிட்டிஷாரின் வாலை ஒட்ட நறுக்க வேண்டும். இது தான் அப்போதைய அமெரிக்க குடிமக்களின் ஒரே கனவு.

அத்திலாந்திக் கடலை கடந்து இங்கிலாந்து மீது படையெடுப்பதற்கு அப்போது அமெரிக்காவிற்கு பலம் இருக்கவில்லை.

அப்படியானால் அடுத்த வழி?

பக்கத்தில் இருக்கிறதே கனடிய நாடு, அதுவும் பிரிட்டிஷாரின் நாடு தானே. இங்கே அடித்தாலும் அங்கே வலிக்கும் தானே. அமெரிக்கா தீர்மானித்து விட்டது.

அப்போது Upper Canada என அழைக்கப்பட்ட தற்போதைய ஒன்ராரியோ மாகாணம் தான் அமெரிக்கர்களின் இலக்கு.

Upper Canada வின் மொத்த சனத்தொகை அப்போது வெறும் எண்பதினாயிரம் தான். அவர்கள் கூட அமெரிக்கப் புரட்சியின் போது வெளியேறிய பிரிட்டிஷ் விசுவாசிகள் தான். அமெரிக்கர்களின் எண்ணிக்கையோ ஏழரை மில்லியன் மக்கள்.

Upper Canada இனை ஒரு பூச்சியைப் போல் நசுக்கி விடலாம் என்று தான் அமெரிக்க அரசு நினைத்தது.

1812 ம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதி James Madison கனடா மீது போர்ப்பிரகடனம் செய்த போது கனடாவை கைப்பற்றுவதையிட்டு அவர்களுக்கு எந்தச் சந்தேகமும் இருக்கவில்லை. உண்மையைச் சொல்லப்போனால். அப்போது பிரிட்டிஷாருக்குத் தான் கனடாவை காப்பாற்றலாமா என்பதில் பெரும் சந்தேகம் இருந்தது.

வருடக்கணக்காக நீண்டு, பெரும் அழிவுகளை உண்டாக்கப் போகும் யுத்தம் தொடங்கியது.

அரசியலிலும், இராணுவ ஆற்றலிலும் அதீத திறமை கொண்ட ஜெனரல் Brock என்பவன் கனடிய படைக்கு தலைமை தாங்குகிறான். தன்னிடமிருக்கும் கொஞ்ச நஞ்ச போர் வீரர்களையும், ஆதிக்குடி நண்பர்களையும் வைத்துக் கொண்டு பத்தொன்பதாயிரம் கிலோமீட்டர் நீளமான எல்லையை எப்படிக் காப்பாற்றுவது என்று ஆரம்பத்தில் அவனுக்கு தெரியவில்லை. ஆனாலும் மிகச்சிறந்த இராணுவ வீரனான அவன் மிக விரைவாகவே அமெரிக்கர்களை வீழ்த்தும் திட்டத்தை வகுத்து விட்டான். அமெரிக்கப் படைகள் வரும் வரை காத்திராமல் முன்னேறித் தாக்க முடிவு செய்கிறான்.

அறுநூறு பேர் கொண்ட படையணி ஒன்று எல்லையைக் கடந்து அமெரிக்கர்களுடைய கோட்டை ஒன்றை முற்றுகை இடுகிறது. அமெரிக்கப் படை இதை எதிர்பார்த்திருக்கவில்லை. ஒரு குண்டை கூட சுடாமல் அமெரிக்க படை சரணடைகிறது.

இது ஒரு சின்ன வெற்றி தான். ஆனாலும் சிறு நிகழ்ச்சிகள் தான் பெரும் சண்டைகளின் போர்ச் சமநிலையை மாற்றியமைப்பதை வரலாறு பல தடவைகள் பதிந்து வைத்திருக்கிறது. மிகப்பெரும் ஆதிக்குடி படையணியின் தலைவனும், தனது அதீத போராற்றலை பல போர்க்களங்களில் வெளிப்படுத்திய பெரு வீரனும், அமெரிக்க தேசத்தில் ஆதிக்குடிகளுக்கான தனியரசை நிறுவவேண்டும் என்ற பேரவா கொண்டு அயராது உழைத்தவனுமான Tecumseh என்பவனின் கவனத்தை இந்த வெற்றி கவர்ந்து போனது. அவனது படை ஜெனரல் Brockஇற்கு ஆதரவாக போர்க்களத்தில் குதிக்கிறது.



இந்த நேரத்தில் அமெரிக்க படை தனது படையெடுப்பை தொடங்கியது. தற்போதைய Detroit நகரிலிருந்து புறப்பட்டு கனடாவின்

தொடர்தல் 109ம் பக்கம்

உங்கள் அனைத்து நிகழ்வுகளையும் பார்ப்பதற்கும் பதிவதற்கும்

www.inayam.net

Windsor நகரை கைப்பற்றுகிறது.

Tecumseh கனடிய படைகளுடன் சேர்ந்து விட்டான் என்ற செய்தி அப்போது தான் அவர்களுக்கு கிட்டுகிறது. அமெரிக்க படை கதிகலங்கிப் போனது. அவர்களுக்கு Tecumseh இனுடைய வீரம் நன்றாக தெரியும். அலறியடித்துக்கொண்டு மீண்டும் Detroit நகரத்திற்கு அமெரிக்கப் படை திரும்பி ஓடியது.

கனடியத் தளபதி ஒருகணம் யோசிக்கின்றான். எதிரி பயந்து ஓடும்போது அவனை இன்னும் பயமுறுத்துவது இலகு அல்லவா!

கட்டுக்கதை ஒன்று பரவ விடப்படுகிறது. Tecumsehஇன் தலைமையில் ஆயிரக்கணக்கான ஆதிக்குடி வீரர்கள் Detroit நகரை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள் என்ற பொய்ச் சேதி அமெரிக்கர்களுக்கு போய்ச் சேர்ந்த போது அமெரிக்க தளபதி Hull வெல வெலத்துப் போனான். Tecumseh இன் கையில் அகப்பட்டால் நடப்பது என்ன என்பது அந்நாளையில் வெகு பிரசித்தம்.

அமெரிக்க தளபதி தனது முழுப்படையுடன் சரணடைகிறான். முழு Detroit பிரதேசமும் கனடிய படைகளின் கைகளில் விழுகின்றது.

அமெரிக்க அரசு ஆடிப்போனது. கனடாவினை இலகுவாக கைப்பற்றி விடலாம் என்று கனவு கண்டவர்களுக்கு Detroit தோல்வியைத் தாங்க முடியவில்லை.

ஏதாவது செய்தாக வேண்டும். அதுவும் உடனடியாக...

அமெரிக்கா பெரும் போர்முனை ஒன்றை நயகரா பகுதிகளில் திறக்கிறது. அதிகாலை இருட்டின் துணையுடன் அமெரிக்கப் படைகள் நயகரா ஆற்றைக் கடக்கின்றன. தற்போதைய Queenston-Lewiston பாலத்திற்கு வெகு அண்மையில் தான் பெரும் சண்டை தொடங்கிற்று.

பீரங்கிகள் முழங்குகின்றன அமெரிக்க படையில் அழிவுகள் அதிகம் என்றாலும் அவர்கள் பின்வாங்குதாயில்லை. Detroit தோல்வி அவர்களது மனங்களில் தீராத வன்மமாக படிந்திருந்தது.

கனடிய படைகளின் கை ஓங்கத் தொடங்கிய நேரத்தில் இளம் அமெரிக்க தளபதியான கப்டன் John Wool என்பவன் துணிகரமான ஒரு முடிவை எடுக்கிறான்.

150 போர் வீரர்களுடன் அவன் இருட்டுக்குள் நழுவுகிறான். அமெரிக்க படைகளுக்கு அதிக உயிர்ச் சேதத்தை விளைவித்துக் கொண்டிருந்த கனடிய பீரங்கிகள் வைக்கப்பட்டிருந்த Queenston Heights பிரதேசத்தை பின் பக்கத்தால் அவர்கள் சுற்றி வளைக்கின்றார்கள். கனடிய போர்வீரர்களுக்கு சிதறி ஓடுவதை தவிர வேறு வழிகள் இருக்கவில்லை. பீரங்கிகளை அமெரிக்க படைகள் கைப்பற்றுகிறார்கள்.

மிக முக்கியமான தோல்வி இது. Queenston Heights பிரதேசத்தை இழந்ததால் முழு Upper Canada இற்கும் பாரிய ஆபத்து தான்.

கனடிய தளபதி ஜெனரல் Brock மிகவும் கவலை கொள்கிறான். அவன் Detroit இல் பெற்ற அபார வெற்றி அப்போது தான் அவனுக்கு Sir பட்டத்தை பெற்றுத் தந்திருந்தது. மிகப் பெறுமதியான அந்தப் பட்டம் கிடைத்து இன்னும் ஐந்து நாட்கள் கூட ஆகவில்லை.

வீழ்ந்து போன தனது பிரதேசத்தை மீட்டெடுக்க தனது படைகளை ஜெனரல் Brock அணிவகுத்துச் செல்கிறான். போர் மீண்டும் மூள்கிறது. கனடாவின் கதாநாயகன் என புகழப்பட்ட ஜெனரல் Brock இந்தப் போரில் இறந்து போனான். அவனது வாயிலிருந்து கடைசியாக வந்த சொற்கள், “தொடர்ந்து முன்னேறுங்கள்” என்பது தான்.

நாற்பத்து மூன்று வயதில் தனது நாட்டிற்காய் வீழ்ந்த, புகழ் பூத்த இந்த வீரன் கனடாவில் இன்றும் நினைவு கூறப்படுகிறான். அவன் இறந்த இடத்தில் மிகப் பெரும் நினைவுத் தூபி எழுப்பப்பட்டிருக்கிறது. 401 நெடுஞ்சாலையில், Kingston நகரை தாண்டி வருகின்ற Brockville நகரம், மற்றும் Brock University என்பன இவனின் ஞாபகார்த்தமாகவே பெயரிடப்பட்டன.

உதவித் தளபதி போரை தொடர்ந்து முன்னெடுக்கிறான். அவனும் படுகாயமடைந்து போகவே தாக்குதல் படு தோல்வியடைகிறது.

ஆனாலும் பிரிட்டிஷ் படை விடுவதாகவில்லை. சிறிது நேரத்தின் பின் இன்னொரு தளபதியான Sheaffe என்பவனின் தலைமையின் கீழ் மீண்டும் போர் தொடங்குகிறது. இந்த முறை Mohawk ஆதிக்குடிகளும் அவர்களுடன் சேர்ந்து கொள்கிறார்கள் அமெரிக்க படை மூன்று முனைகளில் சுற்றி வளைக்கப்படுகிறது.

ஆதிக்குடிகளின் போர்முறை எதிரியின் மனவலிமையை பெரிதும் சோதிப்பவை. அவர்களின் விஷ அம்புகளை விட மிகப் பயங்கரமானது அவர்கள் எழுப்பும் போர் ஒலிகள். எதிரிகளை அச்சமடையச் செய்வதற்காக அவர்கள் பயங்கரமான சத்தங்களை எழுப்புவார்கள். ஆயிரக்கணக்கானவர்கள் தங்களைச் சுற்றி வளைப்பதான பிரமையை அது எதிரிக்கு ஏற்படுத்தும். எதிரி நடுநடுங்கிப் போவான்.

அமெரிக்க படைகளினால் ஆதிக்குடிகளின் யுத்தத்தை எதிர்கொள்ள முடியவில்லை. எதிரிகள் புறமுதுகிட்டு ஓடினார்கள். கனடிய படை வெற்றி வாகை சூடியது.

முந்நூறு அமெரிக்கர்கள் கொல்லப்பட்டும், ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டும் தோல்வியில் முடிந்த இந்த யுத்தம் அமெரிக்கர்களுக்கு அதிக ஆத்திரத்தை மூட்டியது.

அமெரிக்க ஜனாதிபதி தனது அலுவலகத்தில் குறுக்கும், நெடுக்குமாய் நடக்கத் தொடங்கினார். அமெரிக்க காங்கிரசுக்கு அவர் பதில் சொல்லியாக வேண்டும்.

மொத்த தோல்வியையும் மறக்கக் கூடியதான பெரிய வெற்றி ஒன்று வேண்டும். கனடிய பெரு நகரம் ஒன்று தங்கள் காலடியில் விழ வேண்டும்.

Kingston நகரம் தான் அப்போதைய பெரும் நகரம். அதன் மீது கை வைப்பது அவ்வளவு புத்திசாலித்தனம் கிடையாது. அந்த நகரம் மிக வலிமையான கோட்டையையும், பெரும் படையையும் கொண்டிருந்தது.

அமெரிக்க தளபதிகள் இன்னுமொரு நகரத்தின் மீது கண் வைக்கிறார்கள். Upper Canada இன் தலைநகரமும், பெரும் கட்டிடங்களைக் கொண்டதும், முக்கிய கேந்திரத்தில் அமைந்திருந்ததுமான அந்த நகரத்தை அமெரிக்கர்கள் பலத்த அழிவுகளுடன் இன்னும் சில நாட்களில் வெற்றி கொள்ளப் போகின்றார்கள். அத்தனை கட்டிடங்களையும், அனுமான் இலங்கையை எரித்த மாதிரி, எரியூட்டப் போகின்றார்கள். தங்களின் அத்தனை தோல்விகளுக்கும் பதிலடி கொடுக்கப் போகின்றார்கள்.

பேரழிவு வருவதை அறியாமல் அமைதியாக நித்திரையில் ஆழ்ந்திருந்த அந்த நகரம், York என அப்போது அழைக்கப்பட்ட,

ரொரன்ரோ மாநகரம்.

*(போர் இன்னும் தொடரும்)*


**உசாத்துணை:**

- *The Theory of Everything, The Origin and Fate of the Universe, Stephen W. Hawking, 2002*
- *The Grand Design, Stephen Hawking and Leonard Mlodinow, Audiobook CD, 2010*
- *Big Bang, The Most Important Scientific Discovery of All Time and Why You Need to Know about It, Singh Simon, 2005*
- *God, the Universe and Everything Else, Stephen Hawking , Arthur C. Clarke , Carl Sagan DVD, 1988*
- *Becoming Human, PBS DVD, Nova, 2009*
- *The Complete Guide to Prehistoric Life, Haines Tim, 2006*
- *Dinosaurs, Rebecca L. Grambo, 2002*
- *http://www.bbc.co.uk/science/earth*
- *http://en.wikipedia.org/wiki/Timeline_of_evolution*
- *http://www.pbs.org/deepspace/timeline/*
- *http://news.nationalgeographic.com*
- *Human Origins, The story of our species, Yves Coppens, 2003*
- *The Story of Canada, Janet Lunn, Christopher Moore, 1996*
- *http://canadachannel.ca/HCO/index.php/Main_Page*




nimal.nagaraj@thaiveedu.com


மனம் பூரிக்க மங்களகரமான
மனையை தேர்ந்தெடுங்கள்...

வீடு வாங்கவும் விற்கவும் குறைந்த வட்டி விகிதத்தில்
மோட்கேஜ் ஒழுங்கு செய்வதற்கும் அழையுங்கள்...



HOMELIFE HIGHER STANDARDS

**Ravi. Paramu**
Broker
**Direct: 416-262-4176**
**Bus: 416-298-3200**
**HomeLife Today Realty Ltd.,** Brokerage*
**31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6**

MORTGAGE ALLIANCE
RIGHT BROKER - RIGHT MORTGAGE
**R&R MORTGAGES**
(LIC# 12122)



**RAVI PARAMU**
Mortgage Agent
Lic # M11000420
**Dir: 416-262-4176**
**rparamu@mortgagealliance.com**

We're here to provide our clients with the best possible financing options available in **Today's Mortgage** lending environment . we look forward to servicing your needs.

Our range of Services Include...
* Purchase & Refinance packages
* Switch and Transfer
* Open/Closed mortgages.

அனைத்து மோட்கேஜ் தேவைகளுக்கும் அழையுங்கள்

**WIN up to $100,000* One lucky Mortgage Alliance customer**

"The best compliment you can give me is the referral of your family and friends"
Thank you for your trust

5-1801 HARWOOD AVE.N., AJAX ON L1T 0K8 TEL: 416-321-0110 FAX:416-321-0150

## இலக்கிய உறவுகள் - 26

# புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை

- வி. கந்தவனம் -

ஒருமுறை உயர்ந்த தோற்றமுள்ள மாநிற மனிதர் ஒருவரை இலங்கை வானொலி நிலையத்தில் சந்திக்க நேர்ந்து. 'இவர்தான் புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளை' என்று அறிமுகம் செய்துவைத்தார் தமிழ் வானொலிக்கு அப்பொழுது பொறுப்பாக இருந்த க.செ. நடராசா அவர்கள். அன்றைய தினம் பொங்கல் கவியரங்கம் ஒன்று ஒலிப் பதிவாக இருந்தது. தலைவர் புலவர்மணி. புலவர்களுக்கெல்லாம் தலைவராக விளங்கிய அப் பெருமகனை யான் முதன்முதலாகச் சந்தித்த அந்த நாளை மறக்க முடியாது.

சந்திப்பதற்கு முன்னதாகவே புலவர்மணியைப் பற்றி நான் நிறையவே கேள்விப்பட்டிருக்கின் றேன். அவரை யாருக்குத்தான் தெரியாது?

'யாழ்நூல்' தந்த விபுலானந்த அடிகள் தோன்றிய மட்டக்களப்புத் தமிழகத்தில் மண்டூர் இயற்கை வளம் மிக்கதோடன்றித் தவ வலிமையும் கொண்ட தலையாய கிராமம். ஆம். புலவர்மணியைப் பெற்ற தவம் மண்டூருக்கு உரியதாயிற்று. அதன்பின் மண்டூர் என்றுமே மண்டிக் கிடந்ததில்லை. புலவர்மணியின் புகழுடன் அது தலை நிமிர்ந்துவிட்டது. 'ஈன்ற பொழுதிலும் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக் கேட்ட' தாயாகிவிட்டது.

புலவர்மணியும் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களும் ஒன்றாக சுன்னாகம் அ. குமாரசாமிப் புலவரிடம் தமிழ் பயின்ற வர்கள்.

குமாரசாமிப் புலவர் இலக்கண இலக்கிய வித்தகர். யாப்பருங்கலக் காரிகை – புத்துரை, கம்பராமாயணம் - பாலகாண்டம் உரைக் குறிப்பு, தமிழ்ப் புலவர் சரித்திரம் முதலிய நூல்களைச் செய்தவர். மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் முக்கிய அங்கத்தவர். மதுரைத் தமிழ்ச்சங்கத் தாபகரும் தலைமைப் புலவரு மாகிய திரு. பொ. பாண்டித்துரைத் தேவர், ஏனைய சங்கத்துப் புலவர், சிதம்பரச் சைவப் பிரகாச வித்தியாசாலைத் தலைமை உபாத்தி யாயர் திரு. ச. பொன்னம்பலபிள்ளை, ஆங் கில திராவிட பண்டிதரும் வித்தியாவினோ-தருமாகிய திரு. த. கனகசுந்தரம்பிள்ளை, யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கப் புலவர்களா-கிய திருவாளர்கள் த. கைலாசபிள்ளை, ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை, சு. சரவணமுத்துப் புலவர் போன்ற பெரும் அறிஞர்கள் மதித்துப் போற்றிய தமிழ்க் கடல் குமாரசாமிப் புலவர்.

அத்தகைய பேரறிஞரிடம் பண்டிதமணியும் புலவர் மணியும் கற்ற தமிழே பிற்காலத்தில் ஈழத்தமிழைப் பூத்துக் குலுங்கச் செய்ததெனின் மிகையாகாது.

1964ஆம் ஆண்டில் நண்பர் எம்.ஏ. ரஹ்மான் 'பகவத் கீதை வெண்பா' என்னும் நூலை எனக்கு அறிமுகப்படுத்தினார். அக்காலத்தில் ரஹ்மான் 'அரசு வெள்யீடு' என்னும் தாபனம் மூலம் பல அரிய தமிழ் இலக்கிய நூல்களை அழகான முறையில் வெளியிட்டு வந்தார். கவிதை வரிசையில் அரசு வெளியீடாக வந்த முதலாவது நூல் புலவர்மணி இயற்றிய 'பகவத் கீதை வெண்பா'வாகும். புலவர்மணி யின் சொல் வளம், கவியாடும் திறன், கற்ப-னையூற்று, பொருளை விளக்கும் ஆற்றல் என்பனவற்றை 'பகவத் கீதை வெண்பா' நன்கு எடுத்துக் காட்டுகின்றது.

புலவர்மணியின் தலைமையில் இலங்கை வானொலியிலும் மட்டக்களப்பிலும் கவியரங் கங்கள் சிலவற்றிற் பங்குபற்றும் வாய்ப்புச் சிறியேனுக்குக் கிடைத்தது. பாடும்பொழுது (ஏன், பேசும்பொழுதும்கூட) புலவர்மணியின் குரல் கணீர் என்று ஒலிக்கும். அவருடன் எனக்குப் பழக்கம் ஏற்பட்ட காலத்தில் அவ-ருக்கு வயது நிச்சயம் அறுபத்தைந்துக்கு மேலாக இருத்தல் வேண்டும். இருந்தும் குரல் மார்க்கண்டேய குரலாகவே இருந்தது எனக்கு இப்பொழுதும் நினைவிருக்கின்றது. மிக எடுப்பாகவும் மிடுக்காகவும் பாடுவார்.

நான் இளமைக் காலத்தைப் போன்று இப் பொழுது எடுப்பாகப் பாடுவதில்லை என்று அண்மையில் என்னுடன் ஒரு கவியரங்கத்தில் பங்குப்பற்றிய கவிஞர் அனலை இராசேந்திரம் அபிப்பிராயம் தெரிவித்தார். அப்பொழுது எனக்குப் புலவர்மணியின் நினைவு வந்தது.

எனக்குக் குரல் வளம் இன்னமும் குன்ற-வில்லை. வயது நிலையை ஒட்டி வேகத் தையும் நடையையும் நானாகவே மாற்றிக் கொண்டிருக்கின்றேன். உடல் வலுக்குன்றும் காலத்து வேகம் இயல்பாகத் தணியவே செய்யும். கலைஞர் மு. கருணாநிதி நல்ல உதாரணம். ஆனால் புலவர்மணி விதிவிலக் கானவர். மேடை என்று வந்துவிட்டால் வய-தையும் விஞ்சிய எழுச்சி அவரை ஆட்கொண்டு விடும்.

இத் தன்மையைக் கண்டியில் ஒரு கூட்டத்தில் நன்கு அவதானிக்கக்கூடியதாக இருந்தது. தலைவர் பேராசிரியர் வித்தயானந்தன். சிறப்புப் பேச்சாளர் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை.

'தமிழ் பல சோதனைகளைக் கண்டிருக்-கின்றது. அவற்றையெல்லாம் தாண்டி அது வளர்ந்துள்ளது. காலத்தை வென்றுவிட்டது. இன்று பேசப்படும் ஒருசில தொன்மை மிக்க மொழிகளில் தமிழும் ஒன்று. கல்வி வசதி-களும் அச்சக வசதிகளும் மிக வளர்ந்துள்ள இக்காலத்தில் தமிழ் அழிந்துவிடும் மறைந்து விடும் என்றெல்லாம் சிலர் பேசிவருவதில் அர்த்தம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. தமிழ் இனி அழியாது, அதனை யாராலும் அழிக்க முடியாது. இந்த அச்சத்தைப் போக் கித் தமிழை மேலும் வளர்த்தெடுக்கும் முயற் சியில் நாம் அதிக அக்கறை காட்டுதல் வேண்டும்' என்று ஒரு முழக்கமே செய்தார் புலவர்மணி.

இந்த முழக்கம் அந்த வயதுக்கு விஞ்சியதா கவே இருந்தது. அவரது தமிழ் உணர்ச்சி மண்டபம் முழுவதும் அலைவீசியது. அவரது பேச்சாற்றல் அனைவரையும் ஆட்கொண்டது.

தமிழ் மொழியை இனி யார் அழிக்க முடியும்? யாராலும் முடியாது. அவரது கருத்தில் நியாயம் இருந்தது என்றே பலரும் கருதியிருப்பர்.

ஆனால் தலைவர் வித்தியானந்தன் தமது குறிப்புரையில் தமிழ் மொழி காலத்தை வென்றதற்கான காரணங்களைச் சுருக்கமாக விளக்கியபின் இலங்கையில் தமிழ் திட்ட மிட்ட சதிக்கு உள்ளாகிவருகின்றது என்ற கூற்றை முன்வைத்து, அதனைப் புள்ளி விவரங்களுடன் நிறுவிக் காட்டியபோது அவை யோர் கவலைகொண்டனர்.

நீர்கொழும்பு, சிலாபம், புத்தளம் ஆகிய பகுதிகளில் இருந்த தமிழ்ப் பாடசாலைகள் பலவற்றை அரசாங்கம் படிப்படியாக மூடிவரு வதையும் அங்குள்ள தமிழ் மக்கள் வேறு வழியின்றி சிங்கள மொழியையே முதல் மொழியாகக் கற்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாக்கப்படுவதைம் புள்ளிவிவரங்களுடன் எடுத்துக்காட்டி அப்பகுதிகளைப் பொறுத்த அளவில் தமிழ் மறைந்துவிட்டதோர் மொழி-யாகும் என்று நிரூபித்தார்.

அவை தவிர மட்டக்களப்பு மாவட்டத்திலும் பல பகுதிகள் குடியேற்றம் என்ற பெயரில் சிங்களப் பகுதிகளாக மாறிவரும் விவரங் களையும் வெளியிட்டார்.

புலவர்மணி முன்வைத்த மற்றைய கருத்து என்னைப் பெரிதும் கவர்ந்தது. தமிழ் மொழியை மேலும் வளர்த்தெடுக்க வேண்டும் என்னும் புலவர்மணியின் கருத்து எவரைத்தான் கவராது? பழந்தமிழை நன்கு அறிந்தவர் அவர். இக்கால இலக்கியங்களிலும் அவருக்கு நல்ல ஈடுபாடு உண்டு. அவரது கருத்து காலத்தின் தேவையை நோக்கியது. வாய்ப் பேச்சால் தமிழை வளர்த்தல் முடியாது. தமிழ் அன்-னைக்கு அணிகலன்களாகும் ஆக்க இலக்கி யங்கள் அதிகம் வரவேண்டும். எழுத்தாளர் களையும் புலவர்களையும் ஆதரித்து அவர் களின் படைப்புகளை வெளியிட உதவும் புரவலர் வேண்டும். எந்த இலக்கியகாரரும், எந்தத் தமிழ் அபிமானியும் இக் கருத்தை வரவேற்பர்.

தமிழரசுக் கட்சியின் மகாநாடுகளில் இலக் கியத்துக்கு எப்பொழுதும் ஓர் இடம் காலை யோ மாலையோ ஒதுக்கப்படுவது வழக்கம். பல மகாநாடுகளில் கவியரங்க நிகழ்ச்சிக்கு நானும் அழைக்கப்பட்டிருக்கின்றேன். மட்டக் களப்பில் நடந்த தமிழரசுக் கட்சி மகாநாட்டில் புலவர்மணியின் தலைமையில் கவியரங்கம் ஒன்று ஏற்பாடாகி இருந்தது. நிகழ்ச்சி தொடங் குவதற்கு முன் புலவர்மணியுடன் சற்று நேரம் உரையாடும் வாய்ப்புக் கிடைத்தது.



'உங்கள் கீதை வெண்பாவைப் படித்திருக் கின்றேன்' என்று பேச்சைத் தொடங்கினேன். கடல்மடை திறந்தாற்போல் கீதையைப்பற்றிப் பேசத் தொடங்கினார் புலவர்.

'அது பெரிய இலக்கியம். என்னுடைய வெண்பாவைச் சொல்லவில்லை. பகவத் கீதையைச் சொல்லுகின்றேன். தன்னைத்தான் அறிவதற்குப் பகவத் கீதையை ஒத்த தத்து வம் வேறொன்றில்லை.

'மகாபாரதத்தில் பாண்டவருக்கும் கௌரவ-ருக்கும் போர் தொடங்கும் நேரம். இருபக் கத்துச் சேனைகளும் அணிவகுத்து நின்றன. படைகளைப் பார்த்து அர்ச்சுனனுக்குக் கலக் கம் உண்டாயிற்று. பயத்தினால் அல்ல. வெறுப்பினால். சொந்த பந்தங்களையெல்லாம் கொன்று குவிக்க வேண்டுமே. இதற்காகவா இந்தப் போர் என்னும் ஞானம் அவனுக்கு வந்துவிட்டது.

*எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்*
*எண்ணுவம் என்பது இழுக்கு*

என்றார் திருவள்ளுவர்.

'திரௌபதி தலைவிரிகோலமாக இருக்கிறாள். தனது துகிலை உரிந்தவர்கள் கொல்லப்பட்ட பின்னர்தான் அவள் குழல் முடிக்கவுள்ளாள். அது அர்ச்சுனனுக்கு நன்கு தெரியும். அதற் காகப் போர் செய்யவேண்டும் என்று துடித்-தவனே அவன்தான். ஆனால் போருக்கான சகல ஆயத்தங்களும் செய்து சண்டை தொடங்கும் நேரம் அவனுக்குப் போரிலே வெறுப்பு வந்துவிட்டது. இந்த ஞானம் அவ-னுக்கு வரக்கூடாத நேரத்தில் வந்துவிட்டது. எண்ணித் துணிந்தபின் வந்துவிட்டது. அதனால் கடமையையும் பயனையும் பற்றி அர்ச்சுன னுக்குத் தேர்ச் சாரதியாக இருந்த கண்ண பிரான் சொல்லிய கருத்துக்களே பகவத் கீதை.

'இந்தத் தேர்ச் சாரதி தத்துவமும் ஒரு சமய தத்துவந்தான். அர்ச்சுனன் தேர். குதிரைகள் அவனின் புலன்கள். புலன்களைக் கட்டுப் படுத்த வழி சொல்பவன் ஞானகுரு. இங்கே கண்ணபிரான் தேர்க் குதிரைகளைச் சரியான முறையில் செலுத்துவதைப் போல அர்ச்சுன னின் புலன்களை வழிப்படுத்துகிறான்.'

இந்தக் கட்டத்தில் கொல்லும்படி அர்ச்சுன-னைக் கண்ணன் தூண்டுவது எவ்விதம் நியாய மாகும் என்று ஒரு கேள்வியைக் கேட்டேன்.

'தம்பி, புல்லால் நெல்லுப் பாதிக்கும் என்றால் புல்லை அகற்றத்தான் வேண்டும். இது விவ சாயிகள் எல்லோருக்கும் நன்கு தெரிந்த விடயம்.

*கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்*
*களைகட் டதனோடு நேர்*

என்றார் வள்ளுவரும். தருமத்தைக் காக்க வேண்டுமாயின் அதர்மத்தைக் கொல்லுதல் வேண்டும். ஆட்களைக் கொல்லுவதாகக் கருதக் கூடாது. அதர்மத்தை அழிப்பதாகக் கொள்ளவேண்டும். கருமத்தைச் செய். பய-னைப் பற்றிக் கவலைப் படாதே. பயனை ஆண்டவனுக்குச் சமர்ப்பித்துவிடு என்பதே கண்ணன் உபதேசம்.'

புலவர்மணியின் நீர்வீழ்ச்சியில் தொடர்ந்து குளிக்க முடியாதவாறு மாநாட்டு நிர்வாகிகள் எம்மை மேடைக்கு அழைத்துச் சென்றனர்.

புலவர்மணி பரந்த நோக்குள்ள சான்றோர். பெரிய சீர்திருத்தவாதி. சாதிமத பேதங்களைக் கடந்த பக்குவ மனத்தவர். 'யாதும் ஊரே யாவரும் கேளிர், தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்று வாழ்ந்தவர். அவரின் நினைவு கள் இன்றும் என்னை வலம் வந்தவண்ணம் உள்ளன.



kandavanam.v@thaiveedu.com

# Protection for you and your loved ones!

**Alarm Monitoring**
**$20/** per month
*One time programming & Activation $99.99*

**Existing Alarm Monitoring**
**$11.99/** per month
*One time programming & Activation $99.99*

**Line Cut Technology GSM Cellular Backup**
**$9.99/** Additional per month
*One time programming & Activation $249.99*



## Security Alarm No Contract ! No Credit Check!

*Call with this Ad you will get 2 Months Free*
*Limited time offer*



## NOBLE REIGN INC
**SECURITY & COMMUNICATIONS**

**1.877.294.9669 | 416.826.5831** **www.noblereign.com**



# BUY & SELL HOMES , BUSINESS, LANDS..

**PAT PUSHPAKANTHAN**
Real Estate Broker
**13 YEARS OF SERVICE**

**416-894-1187**

Century 21 Brokerage **AFFILIATE REALTY INC** *416-290-1200*
208-80 Corporate dr, Toronto On M1H3G5




**HALL OF FAME**

## NEED MORE HOUSES...

SELLING
**COMMISSION FROM 1 %**

**FREE**
வீடு மதிப்பீடு
இலவசம்

WESTNEY/ROSSLAND





3 BM HOME with fin basement

Salem/Taunton




3BM/4 WSRM

Salem/Taunton



Fully Upgraded With Hardwood Floors Thru-Out , Granite Kitchen Counter Top

scarborough




65 ft x 200 ft

Mccowan/Highglen



4BM/ 5WSRM luxuary, sep entra

14th Ave / 9th Line




2900 sq ft luxury home

WOODBINE/HWY7




Total rent 1000/- included tmi and utilities best location

Lawrence/Mccowan rd




Detached home 50 ft/117 ft

An Ontario Secondary Private School Registered Under the Ministry of Education

**Delta Academy Inc.**

Delta Academy Inc.

Offers the Following OSSD Credit Courses

Our goal is not the quantity of students but quality of education. We ensure that the students are trained to work independently and be prepared to the next grade level with the help of our highly qualified and experienced teachers.



BSID # 667561

| Grade 10 | |
|---|---|
| English | ENG2D |
| Principle of mathematics | MPM2D |
| Science | SNC2D |
| **Grade 11** | |
| English | ENG3U |
| Functions | MCR3U |
| Biology | SBI3U |
| Chemistry | SCH3U |
| Physics | SPH3U |
| Accounting | BAT3U |
| Economics | CIA3U |
| **Grade12** | |
| English | ENG4U |
| Advanced Functions | MHF4U |
| Calculus and Vectors | MCB4U |
| Data Management | MDM4U |
| Biology | SBI4U |
| Chemistry | SCH4U |
| Physics | SPH4U |
| Accounting | BAT4M |
| Economics | CIA4U |

ART COURSES

| Grade 9 | |
|---|---|
| Vocal | |
| Violin | |
| Veena | AMU10 |
| Piano Keyboard | |
| Dance | ATI101 |
| Miruthangam | AMP10 |
| **Grade 10** | |
| Vocal | |
| Violin | |
| Veena | AMU20 |
| Piano Keyboard | |
| Dance | ATI201 |
| Miruthangam | AMP20 |
| **Grade 11** | |
| Vocal | |
| Violin | |
| Veena | AMU3M |
| Piano Keyboard | |
| Dance | ATI3M1 |
| Miruthangam | AMP3M |
| **Grade 12** | |
| Vocal | |
| Violin | |
| Veena | AMU4M |
| Piano Keyboard | |
| Dance | ATI4M1 |
| Miruthangam | AMP4M |

Classes begins on
February 23, July 3, September 24 2012.
Register with us early as the space is limited.
All courses are 110 hours.
Course fee is $500 (Including registration )

Contact

416.751.2011

deltaacademyinc@hotmail.com

1160 Birchmount Road, Unit 1B, Scarborough ON M1P 2B8

# கலைத்தூது...

104ம் பக்கத் தொடர்ச்சி...

குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களது ‘மாதொரு பாகம்’ 92ல் யாழ்ப்பாணத்திலும் ‘எதிர் கொள்ளக்காத்திருத்தல்’ 94ல் கிளிநொச்சியிலும் அரங்கேறியுள்ளது. இரண்டு நாடகங்களையும் ஜி.பி.பெர்மினஸ் இயக்கியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் முதன்முதலாக ‘பலிக்களம்’ நாடகத்தை வீடியோப்படமாகத் தயாரித்த பெருமையும் அருட்தந்தை மரிய சேவியர் அவர்களையே சாரும். அதுபற்றிக் கேட்பவர்களிடம் இறைவன் அருளால் கைகூடிய செயல் அது என்னும் அடக்கமான பதில் அவரிடமிருந்து வரும்.

அன்டர்சன், மற்றும் பி.எஸ். அல்பிரட்டின் உருவாக்கத்தில் பேர்மினஸின் இயங்கத்தில் ‘ஔவையார்’ இலக்கிய நாடகம் 93 ஜுனில் யாழ்ப்பாணத்தில் இரண்டு தடவை அரங்கேறியுள்ளது.

90களின் பின் சிறுவர் நாடகமேடையேற்றமும் நடைபெற்றுள்ளது.

முதல் சிறுவர் நாடகம் ‘சிங்கமும் முயலும்’ 92லும் ‘அறுவடை’, ‘ஒரு தோழமை’, ‘கலையாத கோலங்கள்’, ‘ஒற்றுமையே பலம்’ ஆகியவை 94லும் ‘புத்திமான்’ 99லும் மேடையேறின.

இன்னும்சில சிறுவர் நாடகங்களும் திருமறைக் கலாமன்றத்தினரால் மேடையேற்றப்பட்டுள்ளன.

15.02.1993 லிருந்து 5.3.93 வரை தலைநகர் கொழும்பில் ஒரு நாடக பெருவிழாவினை நடத்தியது திருமறைக்கலாமன்றம். நடுநாயமாக நின்றவர் அடிகளார்.

மருதானை எல்பின்ஸ்டன் அரங்கில் ஞானசவுந்தரி ‘அசோகா’ சென் பிரிஜட் கல்லூரியில் ‘பலிக்களம்’ இராமகிருஷ்ண மண்டபத்தில் ‘சத்தியவேள்வி’ ஆகிய நாடகங்களின் மேடை ஏற்றத்துடன் தமிழ்ச்சங்கத்தில் சித்திரக் கண் காட்சி, சென். பிரிஜட்கல்லூரியில் இசைமாலை போன்ற நிகழ்வுகளும் இந்த விழாவில் இடம் பெற்றன.

1993ல் ‘இலங்கைத் தமிழ்ச் சிறுகதை இலக்கியம் என்னும் ஒரு கருத்தரங்கை திருமறைக்கலாமன்றம் நடத்தியது. (24.04.1993) சிறுகதை இலக்கியம் பற்றிய ஆய்வுரையை நான் செய்திருந்தேன். பொதுவான சிறுகதை இலக்கியம் பற்றிய இக்கருத்தரங்கை ஒழுங்கு செய்த அருட்தந்தை மரியசேவியர் அவர்கள் ஒரு நான்காண்டுக்குப்பிறகு பிரதேசவாரியான ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகள் பற்றியதான ஒரு முழுநாள் கருத்தரங்கை தகவம் (தமிழ்க் கதைஞர் வட்டம்) அமைப்புடன் இணைந்து ஒழுங்கு செய்தார்.

தகவம் அமைப்பாளர் அமரர் வ. இராசையா, மதுசூதனன். மாத்தளை கார்த்திகேசு ஆகியோர் அருட்தந்தையுடன் இணைந்து முன்நின்று இக்கருத்தரங்கை நடத்தினர்.

பேராசிரியர் அமரர் சிவத்தம்பி அவர்களின் தலைமையில் நடந்த இக்கருத்தரங்கில் வட கிழக்குச் சிறுகதைகள் பற்றி மு.பொன்னம்பலமும் முஸ்லீம் சிறுகதைகள் பற்றி ஏ. இக்பாலும் முற்போக்குச் சிறுகதைகள் பற்றி பிரேம்ஜியும் மலையக சிறுகதைகள் பற்றி நானும் உரையாற்றினோம்.

அரங்கியல் ஓவியத்துறை, இலக்கியம், சஞ்சிகை வெளியீடு, நூல் வெளியீடு என்று பன்முகப்பணியாற்றிவரும் அடிகளாரின் திருமறைக்கலாமன்றத்தின் கிளைகள் பிரான்ஸ், ஜெர்மனி, அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் அமைக்கப்பட்டுப் பணியாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கதே.

1997 ஒக்ரோபரில் அடிகளார் தனது கலாமன்ற அரங்கியல் குழுவினரில் பதின்மூன்று சகல துறை வல்லுனர்களுடன் ஒரு ஐரோப்பியச் சுற்றுலா மேற்கொண்டார். இந்தப் பெரும் பயணம் திருமறைக்கலாமன்றத்தின் கலைப் பயணத்தில் ஒரு சிகரம் - ஒரு மைல்கல்.

இந்தப் பயணக்குழுவில் இயக்குனர் மரிய சேவியர் அடிகளாருடன் பதினான்குபேர் இடம் பெற்றிருந்தனர். கூடியவரை, நடிப்பு, இசை, பிரதியாக்கம், நடனம், ஒப்பனை ஆடை அணி, ஒளி, ஒலி என அரங்கு சார்ந்த விடயங்கள் அனைத்தையும் தமக்குத்தாமே கூடியளவு செய்யக்கூடியவராகவே இந்த கலைஞர் தெரிவு நடந்திருந்தது.

அருட்தந்தை நீ.மரிய சேவியர், சிற்பக் கலைஞர் ஏ.வி.ஆனந்தன், அரங்கியல் கலைஞர்களான யோ.ஜோன்சன் ராஜ்குமார், கயல்விழி சந்தியோ, ஏ.ஆர்.விஜயகுமார், யூல்ஸ் கொலின், அ.பேக்மன் ஜெயராஜ், ஜி.பி.பேர்மினஸ், ம.ஜேசுதாசன், ம.தைரியநாதன், பி.வைதேசி, நளாயினி ராஜதுரை, சாம்பிரதீபன், இசைக்கலைஞர் எ.பி.ஜெகதீஸ் ஆகியோரே ஐரோப்பிய கலைப்பயணம் மேற்கொண்ட கலைஞர்கள்.

1997 ஒக்டோபர் 10 ஆம் திகதியிலிருந்து 30 ஆம் திகதி வரையிலான 20 நாட்கள் ஐரோப்பியக் கலைப்பயணம் நடந்தது.

1997 ஒக்டோர் 12ஆம் திகதி ஜெர்மனியில் முதல் நிகழ்வு நடந்தேறியது. ஜெனோவா மற்றும் மயான காண்டம் நடந்தன.

அடுத்தநாள் சிற்பக்கலைஞர் ஆனந்தனின் கண்காட்சியும் அதைத்தொடந்து ‘சாகாத மனிதம்’ நாடகமும் இடம்பெற்றன.

‘சாகாத மனிதம்’ 95ஆம் ஆண்டின் மாபெரும் இடப்பெயர்வைக் காட்டும் நாடகம். மேடையில் மழையுடன் மக்கள் வெளியேற்றம் நடக்கிறது. நாவற்குழிப் பாலம் தாண்ட மக்கள் முண்டியடிக்கும் போது ஒரு வயோதிபர் நசுக்கி மிதிபட்டு இறக்கும்போது பார்வையாளர் பகுதியில் விசும்பும் அழுகைக்குரல் கேட்டது என்று எழுதி வைக்கின்றார் ஜோன்சன் ராஜ்குமார்.

வார்த்தைகளற்ற மௌன நாடகம் ‘அமைதி’க்கும் நல்ல வரவேற்பு இருந்தது.

இசை நாடகம் கூத்து போன்றவைகளை வயோதிபர்களும் பார்த்துப்பரவசம் கொண்டனர்.

மயான காண்டம் நடந்தபோது ஜெர்மனியில் வசிக்கும் வைரமுத்துவின் மகன் வந்திருந்தாராம்.

மயானகாண்டம் அரிச்சந்திரனை யாழ்ப்பாணத்தின் பட்டிதொட்டி எங்கும் கொண்டு சென்று ‘உண்மை பேசுதலின்’ நிறைவைப் பறைசாற்றியவர் நடிகமணி வைரமுத்து.

அரிச்சந்திரனாக நடித்த தைரியநாதன் அவர்களை வைரமுத்துவையே மேடையில் பார்த்ததுபோல் இருந்தது என்று பாராட்டியவர்கள் பலர்.


வைரமுத்தரின் மகன் கலங்கிய கண்களுடன் மேடைக்கு வந்து அரிச்சந்திரன் தைர்யநாதனை ஆறத்தழுவி ‘அப்பா செத்துப்போனார் என்று தான் நினைச்சன் இல்லை இல்லை இன்னும் அவர் சாகவில்லை’ என்று கூறியது, அன்பளிப்புச் செய்தது மிகவும் நெகிழ்ச்சியாக இருந்தது என்கின்றார் ஜோன்சன் ராஜ்குமார் அவர்கள்.

அருட்தந்தையின் ஒரு சாதனை இது.

தமிழுக்குத் தொண்டாற்றிய தனிநாயகம் அடிகளுக்கு தமிழ்தூது என்றபட்டம் கொடுக்கப்பட்டது.

அதேபோல் கலைக்குத் தொண்டாற்றும் அருட்தந்தை மரிய சேவியர் அடிகளுக்கு ‘கலைத் தூது’ என்னும் பட்டம் ஜெர்மனியில் கலாநிதி அருட்தந்தை அ.ப.ஜெயசேகரம் அவர்களால் சூட்டப்பட்டது என்பது குறிப்பிடக்கூடியது.

அடிகளாரின் பணிகள் மேலும் சிறக்கவும் தொடரவும்
வாழ்த்துக்கள்.



theliwathai.joseph@thaiveedu.com

# நான் லண்டன் வாசிதான்

**- இளைய அப்துல்லாஹ் -**

**சென்ற மாதத் தொடர்...**

நானும் நெய்தல் கிருஸ்ணனும் கன்னியாகுமரி முழுக்க மோட்டார் சைக்கிளில் அலைந்தோம். அது மிக நல்ல தருணம். பகலாச்சு பசி. பகல் மூன்று மணிக்கு மீன் சாப்பாடு தேடினால், ஒரு சாப்பாட்டுக்கடை தெரிந்தது. போனோம் பொரிச்ச மீனும் சோறும் கறியும். சமையல்காரரின் லுங்கியும் அவர் அதற்கு மேல் கட்டியிருந்த துவாயும் வாழ்நாளில் சலவை கண்டிருக்கவேயில்லை. மீன்பொரியல் கேட்டால் அந்த துண்டில் கையை துடைத்து விட்டு மீன்பொரியலை எடுத்து வந்தார். பப்படம் கேட்டபொழுதும் அப்படியே கிருஷ்ணன் சொன்னார் ‘தலையை தூக்கி மேலே பார்க்காமல் சாப்பிட்டு விட்டு வா!’ மீனுக்கு உப்பு அதிகமாக இருந்தது. கிருஷ்ணன் கடைக்காரரிடம் சொன்னார். கடைக்காரர் சொன்னார் “இனி ஒன்றும் செய்யமுடியாது”. உண்மைதான் இனி என்ன செய்வது சிரித்து சிரித்து கண்கள் குளமாகி விட்டன. கிருஷ்ணன் நண்பர்களை மகிழ்விப்பதில் அருமையான மனிதர். கிருஷ்ணனும் நானும் கன்னியாகுமரி கடற்கரையோரம் சுற்றி அலைந்தோம். காலச்சுவடு கண்ணன் நோர்வே போகமுதல் கிருஸ்ணன் என்ற அருமையான மனிதரை அறிமுகப்படுத்தி விட்டு போனது எவ்வளவு முக்கியமான விடயம்.

லண்டன் வந்த அடுத்தநாள் இரவு நாக்கு செத்துவிட்டதை நன்றாகவே உணர்ந்தேன். மனிசியின் கையால் ஒருமாதம் இறைச்சிக் கறி சாப்பிடாதது பெரிய மனக்குறையாகவே இருந்தது. அது மனக்குறை என்பதை விட மன ஏக்கம் என்று சொல்லலாம். மனிசி இல்லாத வாழ்வை நினைத்துப்பார்க்க முடியாமல் இருக்கிறது.

மனிசியின் துப்பரவு எமது நண்பர்களுக்கு தெரியும். வெள்ளிக்கிழமை இரவு 10 மணிக்கு வீட்டுக்கு வந்து வீட்டை அடித்துக் கழுவி துப்பரவாக்கிவிட்டுத்தான் படுத்தது. அடுத்த நாளும் கடையில்தான் பகல் சாப்பாடு வாங்கி சாப்பிட்டோம். ஆனால் சனிக்கிழமை இரவு மனது மனிசின் சாப்பாட்டுக்காக நாக்கு அந்தரித்தது. உடனே போய் பக்கத்து கடையில் ஆட்டிறைச்சி வாங்கிவந்து உறைப்பு இறைச்சிக்கறியும் ஒரு வெள்ளை சோறும் சாப்பிட்டாப்பிறகுதான் மனது அடங்கியது.

அந்த தாகத்தை என்னவென்று சொல்ல மனிசி அடுத்தவருடம் மூன்று மாதம் ஊரில் தங்க கேட்டு அடம் பிடிக்கிறது. சாப்பாட்டை நினைத்து இப்பொழுதே மனது சங்கடப்படுகிறது.

இம்முறை மதுரை புத்தக சந்தைக்கு போகிறேன் என்று சொன்னவுடன் மனிசி சொன்ன முதல் வார்ததை ‘இங்கே புத்தகங்களை அள்ளிக்கொண்டு வரக்கூடாது. ஏனெனில் வீட்டில் வைக்க இடமில்லை.’ அது சரியென்று பட்டது.

ஆனாலும் புத்தகங்களை சென்னையில் வாங்கி வர விமான நிலையத்தில் ஏழு கிலோ கூடி விட்டது. பிரிச்சு அடுக்க என்னிடம் பையும் இல்லை. எமிரேட்ஸ் பெண் உள்ளே விட முடியாது என்கிறாள். காலை என்னை வழியனுப்ப வருகிறேன் என்று சொன்ன புதிய தலைமுறை அரவிந்தன் தூங்கி விட்டான். வெளியில் இரண்டு கடைகளில் கேட்டேன். பை தரமாட்டேன் என்று அடம் பிடித்தார்கள். சரி பை தரத்தேவையில்லை என்று விட்டு மீனம்பாக்கம் கிருஷ்ணா சுவீட்ஸ் கடைகார பெடியனிடம் பாரமான இரண்டு புத்தகங்களை இலவசமாக கொடுத்தேன்.

சரியென்று 5 கிலோ புத்தகங்களை எடுத்து கையில் சுமந்தபடி போனேன். இமிக்கிரேசன் அலுவலர் கேட்டார்

‘என்ன அது’

‘புத்தகம்’ என்றேன்.

‘ஏன் கையில் வைத்திருக்கிறீர்கள்’ என்றார். நான் ‘படிக்க’ என்றேன்.

‘இவ்வளவையும் படிப்பீங்களா’ என்றார் இது நக்கல்.

புத்தகத்தை படிக்காமல் வேறு என்ன செய்வார்கள்? அவரிடம் நான் எழுதிய லண்டன் உங்களை வரவேற்பதில்லை புத்தகத்தை கொடுத்தேன் அவர் சொன்னார். ‘நீங்கள் எழுத்தாளரா சரி போங்கள்’.

அடுத்த வாசலுக்கு வர சுங்க அதிகாரி அவர் எனது கையில் உள்ள புத்தகங்களை பார்த்து கேட்டார் “என்ன இவ்வளவு புத்தகங்கள்? இதெல்லாம் சென்னையில் விக்கிறாங்களா?” என்னை கேள்வி கேட்கிறாராம்.

ஒவ்வொன்றாக எடுத்து பார்த்தார் எங்காவது பிரபாகரன் முகம் தெரியுதா என்று பார்த்திருப்பாரா தெரியாது.

பார்த்து விட்டு தரும்பொழுது சொன்னார் வாழ்த்துக்கள் நீங்கள் ஒரு நல்ல வாசகர்.

அப்படியா?

விகடன் மானா என்னைப்பற்றி அக்றையோடு விசாரித்துக்கொண்டிருப்பார். அவரின் வேலைப் பழுவுக்கு மத்தியில் “என்ன செய்கிறீர்கள் எப்படி வந்த விசயம் எல்லாம் நல்லா முடிந்ததா...? முடிந்ததா?” என்று அக்கறையோடு விசாரிப்பார். நானும் “ஓ நல்லா முடிந்தது”. என்று சொல்லிக்கொண்டிருந்தேன். இங்கு லண்டன் வந்த பிறகு தான் மானா சொன்னார் அப்படி விசாரித்ததற்கு காரணம் என்னை யாரும் புத்தகம் போட்டுதருகிறேன் என்று ஏமாற்றி விடுவார்களா என்று பயந்தாராம். மானா உங்களின் ஆழ்ந்த அக்கறைக்கு நன்றி. உங்கள் ஆழ்ந்த அன்புக்கும். ஆனால் அப்படி என்னை யாரும் ஏமாற்ற முடியாது நான் எல்லாவிடயத்தையும் தெளிவாக சொல்லி விடுவேன். மற்றது ஏமாற்றுபவர்கள் யாரையும் நான் இதுவரை நண்பர்களாக பெறவில்லை.



நான் லண்டனில் இருந்து வந்தாலும் பெரிய பணக்காரன் இல்லையே மானா. நானே பஜ்ஜட் போட்டு செலவு செய்கிற ஒரு மனிதன்.

மதுரையில் இரண்டு விடயங்கள் மனதை நிறைத்து நிற்கின்றன. ஒன்று நான் போன அன்று புத்தக கண்காட்சியில் திடீரென்று ஆத்மார்த்தியின் 108 காதல் கவிதைகளின் வெளியீட்டு விழாவில் மனுஸ்யபுத்திரன் பேசச் சொன்னது, சுவாரஸ்யமாக பேசியது. பேசி முடிந்தவுடன் மனுஸ்யபுத்திரன் சொன்னார் ஏற்கனவே புத்தகம் கொடுத்து பேசச்சொல்வதை விட திடீரென்று வெளியிடும் புத்தகத்தை கொடுத்து பேசச்சொன்னால் பேச்சு நன்றாக வருகிறதே என்று.

அடுத்தது வண்ணதாசன் 50 விழாவில் கலந்து கொண்டு அங்கு பெரிய இலக்கிய ஆளுமைகளை சந்தித்தது கலந்து பேசியது. மனதுக்கு உற்சாகமாக இருந்தது.

சென்னையில் விகடன் கண்ணனை சந்தித்தது ஒரு நல்ல தருணம். 20 நிமிடம் என்று பேச ஆரம்பித்த நாங்கள் 30 நிமிடம் பேசினோம். இலங்கை மக்களின் அவலத்தை சொல்லும் பொழுதே தேம்பி அழுது விட்டார். தன்னுடைய துன்பமாக மற்றவரின் துன்பத்தை நினைக்கும் அந்த மனம்தான் ஒரு எழுத்தாளருடைது. இன்னும் மற்றவர்களுக்கு எப்படி உதவி செய்யலாம் என்று நினைத்துக்கொண்டிருக்கிற மனம் வேண்டும்.

என்னிடம் இரண்டு நண்பர்கள் இலங்கையில் இருந்து கஷ்டப்பட்டு பணம் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உதவி செய்ய முடியாமல் நான் தடுமாறிக்கொண்டிருக்கிறேன்.

ஒருவர் தனது வீட்டை அடைவு வைத்து விட்டு வட்டி கட்டமுடியாமல் கஷ்டப்படுகிறார். மற்றவர் ஒரு எழுத்தாளரின் மனைவி கணவர் இறந்துபோக புத்தகம் அடித்த காசை கட்ட முடியாமல் கஷ்டப்படுகிறார். இரண்டு பேரும் எழுத்தாளர்கள், தமிழர்கள். என்ன செய்வது. எனக்குத்தெரிந்த பணக்காரர்கள் லண்டனில் நிறைய பேர் இருக்கிறார்கள். நான் அவர்களிடம் பணம் என்று கேட்டு எந்த சந்தர்ப்பத்திலும் போகவேயில்லை. யாருக்காவது சிபாரிசுக்காகவும் போகமாட்டேன். என்னிடம் இருந்த போது பலருக்கு கொடுத்துள்ளேன்.

திருச்சியில் இருந்து மதுரைக்கு பஸ்ஸில் போனேன். நண்பர் டாக்டர் தியாகராஜன் றைவர் சீற்றுக்கு பக்கத்தில் அமர சொன்னார். அந்த இடம் காலை நீட்டி வைக்க லேசாக இருந்தது. நீண்ட பயணம்தானே. பயணம் ஆரம்பித்தது எல்லாம் சரி. பஸ் கொஞ்சத்தூரம் போய்கொண்டிருந்தது. றைவர் கண்ணை மூடி மூடி வெட்டுகிறார். அடடா அவரக்கு தூக்க கலக்கம். றைவர் கொண்டுபோய் மோதும் வரைக்கும் பின்னால் இருப்பவர்களுக்கு தெரியாது. நான் கண்ணுக்கு முன்னால் இருக்கிறேன். நான் அவரை எட்டிப் பார்த்தேன். அவர் என்னை தூக்க கலக்கத்தோடு பார்த்தார். தங்க நாற்கர சாலையில் பஸ் போகிறது. வாஜ்பாயின் புண்ணியம். இல்லாவிட்டால் இந்திய றோடுகள் அப்படியேதான் இருந்திருக்கும் தார் போடுகிறேன் என்று எல்லோரும் காசை எடுத்துக்கொண்டு போய் தங்களின் வங்கியில் போட்டு விடுவார்கள் பெரும்பாதைகள் மிக நன்றாகவே இருக்கின்றன.

நல்ல காலம் இரண்டு மணி நேரம் ஓடிய பிறகு ஒரு இடத்தில் நிறுத்தி விட்டு சாப்பாடு தேனீர் எல்லாம் குடித்த பிறகு தான் பஸ் நன்றாக ஓடியது. றைவர் சுமுக நிலமைக்கு வந்து விட்டார். நான் ஆனந்த விகடனில் வட்டியும் முதலும் வாசித்து விட்டு கண்கலங்கிக்கொண்டு இருந்தேன். ராஜு முருகன் பயணம் பற்றி எழுதியிருந்தான். என்ன அருமையான பதிவு வாழ்க்கையில் ஒவ்வொருவரும் அந்த பயணத்தின் நிஜத்தை கடந்துதான் போக வேண்டும். முருகனுக்கு போன்போட்டு சொன்னேன் ‘நீ என்னை பயணத்தில் அழ வைத்து விட்டாயடா!’ என்று அவன் வழமை போல பெரிய சிரிப்பு சிரித்தான்.

இந்திய ரயிலில் நான் நீண்ட பயணம் செய்வது இது மூன்றாவது தடவை. முதல் தடவை சென்னையிலிருந்து டில்லிக்கு. இரண்டாவது தடவை சென்னையிலிருந்து திருச்சிக்கு இப்பொழுது நாகர்கோயிலிருந்து எழும்பூருக்கு. டில்லி பயணம் முதலாவது என்றதால் புதினம் பார்த்தபடி கடந்துவிட்டது ஒன்றும் விளங்கவில்லை. திருச்சி பயணம் பகல் என்றதனால் விளங்கவில்லை.

நாகர் கோயிலில் இருந்து எழும்பூருக்கு மாலை 6 மணிக்கு ஏறி காலை 8.45 இற்கு இறங்கும் நீண்ட பயணம். ஏசி பெட்டி நல்லது என்று காலச்சுவடு கண்ணன் புக் பண்ணச் சொன்னார் பண்ணியாகி விட்டது. பயணம் என்னவோ நல்லதாகத்தான் ஆரம்பித்தது. படுக்க எல்லாலோரும் தயாராகியபொழுது தான் பிரச்சினையே ஆரம்பித்தது. படுத்து கொஞ்ச நேரத்தில் என்னில் குட்டி கரப்பான் பூச்சிகள் ஏறத்தொடங்கின. ஏசி பெட்டியிலுமா? எரிச்சலாக இருந்தது. பிறகு சுற்றிவர பெட்சீட்டை போட்டு கரப்பான் பூச்சிகள் வரும் பாதையை அடைத்த பிறகுதான் தூக்கம் வந்தது. காதுக்குள் இயர்பட் வைத்துவிட்டேன்.

காதுக்குள் இந்தியாவில்வைத்து பூச்சிபோனால் அதை எடுக்க லட்சக்கணக்கில் கேட்பார்கள். அதுவும் லண்டனில் இருந்து வந்தேன் என்று கண்டுபிடித்தால் இரண்டு மடங்கு விலை போட்டுவிடுவார்கள்.

இரவு படுக்கும்பொழுது கோத்ரா ரயில் எரிப்பு சம்பவம், ரயில் பெட்டி தீப்பிடித்து எரிந்த சம்பவம் எல்லாம் கனவாக வந்து தூக்கத்தை கெடுத்துக்கொண்டிருந்தன. இங்கு லண்டன் போல இல்லாவிட்டாலும் அதன் அரைவாசிக்காவது இந்திய ரயில் சேவையை கொண்டு வரலாம். பெட்டிகள் ஓடாமல் இருக்கிறநேரம் கரப்பான் பூச்சிக்கு மருந்து அடிக்கலாம். கொஞ்சம் வாசனை தெளித்து பெட்டியை மணமாக வைத்திருக்கலாம். கக்கூசுகளை கழுவி துப்புரவாக வைத்திருக்கலாம். துப்புரவை யோசிக்கிறார்களில்லை.

2004இல் லாலு பிரசாத் யாதவ் ரயில்வே அமைச்சராக இருந்தபொழுது கரப்பான் பூச்சி இல்லாத துப்புரவான லாபகரமான இந்தியன் ரயில்வேயை நடத்தி காட்டினார்தானே.

இங்கு வந்ததன் பின்பு பேஸ் புக்கில் எனது பயண போட்டோக்களை போட்ட பொழுது தேசம் சோதிலிங்கம் போன் போட்டு உங்களை மாதிரித்தான் இருக்க வேண்டும். தமிழகத்தில் எல்லா கோயில்களுக்கும் போய் வந்திருக்கிறீர்கள். உங்களை பாராட்டுகிறேன். என்றார் உண்மையில் கோவில்களில்தான் தமிழ்நாடே கிடக்கிறது. வேறு எங்கு போய் நான் தமிழ் கலைச்செல்வங்களைப்பார்க்க? தஞ்சை கோவில், மதுரை மீனாட்சியம்மன் கோவில், ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோயில் ரங்கநாதர் பாதம் திறந்திருந்த நேரம், சரபோஜி அரண்மனை திருச்சி கல்லணை என்று எங்கும் அதிசயம் கொட்டித்தான் கிடக்கின்றது.

திருவல்லிக்கேணி றோட்டில் எனக்குத்தெரிய இரண்டு டாஸ்மாக் கடைகள் இருக்கின்றன. அந்த கடைக்கு முன்னால் குடித்துவிட்டு கசக்கிப்போட்ட காலி பிளாஸ்டிக் கிளாஸ்கள் இரவு குவிந்து அசிங்கமாக இருக்கும். பார்க்க அருவருப்பாக இருக்கும்.

இந்தப்பயணத்தில் இரண்டு முறை எனக்கு மகாபலிபுரம் போகக்கிடைத்தது. ஒரு முறை பவுத்த ஐயனாரும் நானும் ஐயனாரின் நண்பர் முரளியை சந்திக்கப்போய் நல்ல அருமையான இரவுப்பொழுதை பெரு விருந்தோடு கழித்தோம்.


இரண்டாவது ரெங்கசாமியும் பரமநாதனும் கார் எடுத்துவர மகாபலிபுரம் போனோம்.

சிலைகள், வாழ்விடங்கள், சிற்பிகள், சிலைக்கூடங்கள் என்று மனதில் அள்ளி அள்ளி அழகையும் ஆச்சரியத்தையும் நிறைத்துக் கொண்டே வந்தேன். சொக்கிப்போன இடமது. எவ்வளவு பிரமாண்டம். எவ்வளவு கற்பனை, எவ்வளவு நேர்த்தி.

பழையவர்களை நாகரிகம் தெரியாதவர்கள், பாமரர்கள் என்று சொல்கின்ற இந்தகாலத்து புத்திசாலிகளால் இடிந்து விடாமல் இருக்கும் படி ஒரு பாடசாலை கட்டடத்தை கட்ட முடியாமல் இருக்கிறது. ஆயிரம் இரண்டாயிரம் மூவாயிரம் வருடங்கள் எப்படி அசையாமல் இருக்கின்றன அந்தக்காலத்து கட்டடங்கள். மலைகளை குடைந்து பெரிய பாறைகளை நகர்த்தி என்ன ஆச்சரியம் என்ன ஆச்சரியம்.

இன்ஷா அல்லாஹ் அடுத்தவருடமும் சென்னைக்கும் நாகர்கோயிலுக்கும் போகவேண்டும்.

Ilaya.abdillah@thaiveedu.com



# மறந்துபோன பழந்தமிழர் உணவுவகைகள்

கண்டிமன்னன் ராஜாதிராஜசிங்கன் 1798இல் வாரிசு இல்லாமல் இறந்தான். இந்நிலையில் அரசியின் மருமகனாகிய கண்ணுச்சாமி என் பவன் சிறீ விக்கிரமராஜசிங்கன் என்ற பெய ருடன் கண்டியரசனாக முடிசூட்டப் பெற்றான். இக்காலப்பகுதியில் இலங்கையின் ஏனைய பகுதிகள் ஆங்கிலேயரின் ஆட்சிக்கு உட்பட்- டனவாக இருந்தன. பிரெடெரிக் நோர்த் (Frederick North) என்பவர் இலங்கையின் கவர்னராக இருந்தார். கண்ணுச்சாமியை அகற்றிவிட்டு அரசியின் மற்றொரு உறவின னான முத்துச்சாமியை பெயருக்கு அரசனாக்கி விட்டு ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற பிலிமத்தலாவ போன்ற சிங்களப் பிரதானிகள் சதியாலோசனைசெய்தனர். பிரெடெரிக் நோர்த் தின் மறைமுக ஆதரவும் இவர்களுக்கு இருந் ததாகத் தெரிகிறது. இத்திட்டத்துக்கு சம்மதம் தெரிவித்த முத்துச்சாமி யாழ்ப்பாணக் கோட் டையின் உள்ளே ஒரு வீட்டில் தங்கி, தான் அரசனாகும் நாளை எதிர்பார்த்துக் காத்தி ருந்தான். இவனுக்கு ஒருநாள் விஷப்பாம்பு கடித்துவிட்டது. அக்காலப்பகுதியில் இருபா லைச் செட்டியாரர் என்று அறியப்பட்ட ஒரு வைத்தியரின் திறமை பலரும் அறிந்த ஒன் றாக இருந்தது. எனினும் அவரது சிறிய வயதைக் கருத்திற்கொண்டு முதலில் அவரிடம் வராமல் வேறு பல மருத்துவர்களை வரவ- ழைத்து முத்துசாமிக்குச் சிகிச்சை அளித்தார் கள். ஆனால் பாம்புவிஷம் இறங்குவதாகத் தெரியவில்லை. இறுதியில் இருபாலைச் செட்டி யாரிடமே சென்றார்கள். இவரே பாம்பு விஷத்திலிருந்து முத்துசாமியைக் காப்பாற் றினார். ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை என்பவர் எழுதிய யாழ்ப்பாணச் சரித்திரம் என்னும் நூலில் இத்தகவலைக் காணமுடிகிறது.

இந்த வரலாற்றுக் குறிப்பின் மூலம் இருபா- லைச்செட்டியார் என்று அறியப்பட்ட புகழ் பெற்ற ஆயுள்வேத மருத்துவர் இன்றைக்கு இருநூற்றுப் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தவர் என்பது தெரி கிறது. இவரது இயற்பெயர் என்ன என்பது தெரியவில்லை. யாழ்ப்பாணத்தில் மீசாலை என்னும் கிராமத்தில் பிறந்த இவர் இருபாலை என்னும் கிராமத்தில் நீண்டகாலம் வாழ்ந்த தினால் இருபாலைச்செட்டியார் என அறியப் பட்டார்.

இருபாலைசெட்டியார் அமிர்தசாகரம் என்னும் வைத்தியவிளக்க நூலை எழுதிவைத்துள்ளார். இன்று நம்மவர் மறந்துவிட்ட, ஆனால் உட லுக்கு நலம் விளைக்கும் அதேசமயம் வாய்க்கு ருசியாகவும் இருக்கும் சில உணவு வகைகளின் செய்முறை பற்றியும் இன்னூலில் இவர் விளக்கியுள்ளார். அவற்றுட் சிலவற்றை இங்கு கவனிக்கலாம்.

### கறிவேப்பிலைப் பச்சடி:

தமிழ் மக்களின் சமையலில் இடம்பிடித்துள்ள கறிச்சுவையூட்டிகளுள் கறிவேப்பிலை முக்கிய மானது. கறிவேப்பிலை இல்லாமல் தாளிதம் கிடையாது. கறிவேப்பிலையைத் தொடர்ந்து உண்டுவந்தால் இளவயதில் நரைமுடி தோன்று வதைத் தவிர்க்கலாம் என்பது சிலரது நம் பிக்கை. சிறுநீரகக்கோளாறு உள்ளவர்கள் கறிவேப்பிலையை உணவில் சேர்த்துக் கொள்வது நல்லது.

*கருவேம்பின் இலை பூ நெய்யில் கதித்த பொன்-னி- றமதாக*
*விரைவதாய் வறுத்துப் பின்னர் மிளகு சீரகமோடு உப்பும்*
*உரைசெயுங்கடுகு நல்ல வெந்தயம் உறைப்புமிக்க வருமிளகாய் மற்றெல்லாம் வரிசையாச் சேர்த்துக்- கூட்டே.*

**படித்ததும் சுவைத்ததும் - 05**

*கூட்டியே சம்பீரத்தின் கொழுங்கனிச் சாறேயாதல்*
*நாட்டிய வெகின் உற்ற நற் பழப்புளியேயாதல்*
*ஆட்டிவிட்டு அரைத்துப் பாக்கின் அளவதாய் அந்தி சந்தி*
*ஊட்டியே பசுமோர் உண்ண ஒழிந்திடும் வாதம் வாயு*

கறிவேப்பிலையை எண்ணெயில் பொன்னிற மாகும் வரை வறுத்து எடுத்து அதனுடன் மிளகு, நற்சீரகம், உப்பு, கடுகு, வெந்தயம், உறைப்புக் கூடிய மிளகாய் என்பவற்றை வரிசைப்படி அளவுடன் சேர்த்து எலுமிச்சம் பழச்சாறு அல்லது பழப்புளிச்சாறு அளவுடன் விட்டரைத்துப் பாக்களவு உருண்டையாக்கிக் காலையும் மாலையும் மோருடன் சேர்த்து அருந்திவர மிக்க ருசியாக இருப்பதுடன் செமியாக்குணம், வாய்வு எல்லாம் தீரும் என்கிறார் இவ்வைத்தியர்.



### தூதுவளை ரசம்:

மருந்தாகவும் உணவாகவும் பயன்படும் மற்று மொரு மூலிகை தூதுவளை. தூதுவளையைப் பச்சடியாகவும் ரசமாகவும் செய்து சாப்பிட லாம். ஆஸ்த்மா போன்ற நுரையீரல் சம்பந் தப்பட்ட வியாதிகளுக்கு மருந்தாகப் பயன் படுவது தூதுவளை.

*தூதளை இலை கொழுந்து தூளதாய் வெட்டி நீர்விட்டு*
*ஏதமில் நாலில் ஒன்றாய் வற்றிட விட்டு இறுத்த*
*மேதகு நீரில் உப்பு வெந்தயம் மிளகு மஞ்சள்*
*தீதில் சீரகத்தினோடு பழப்புளி சேர்த்தரைத்தே*

*கருவேம்பின் இலை வெங்காயம் காய்மிளகாய்கள் துண்டாய்*
*கருவியால் வெட்டித் தெங்கின் காய்ப்பாலும் அற்பம் விட்டே*
*எரியிடையேற்றிக்காய்ச்சி இன்புறத் தாளித்தே பின்*
*பருக நீர்க்கோவை சோகம் பறந்திடும் பசியுண்டாமே.*

தூதுவளையின் இலை கொழுந்து என்பவற்றை சிறுசிறு தூளாகவெட்டி அதனுடன் நீர்விட்டுக் கொதிக்கவைக்கவும். நாலில் ஒன்றாக வற்- றியவுடன் அதில் உப்பு, வெந்தயம், மிளகு, மஞ்சள், சீரகம், பழப்புளி சேர்த்தரைத்துச் சேர்க்கவும். பின்னர் கறிவேப்பிலை, வெங்- காயம், செத்தல் மிளகாய் என்பவற்றை நறுக் கிச் சேர்த்து தேங்காய்ப் பால் சிறிதுவிட்டுக் கொதிக்கவைத்துத் தாளிதம் செய்தபின் குடிக்கவும்.

### வெந்தய ரசம்:

நீரிழிவு, செமியாக்குணம், வாய்வு, காய்ச்சல் போன்ற பல சுகயீனங்களுக்கு மருந்தாகப் பயன்படும் ஒரு கறிச்சுவையூட்டி வெந்தயம். கசப்புச்சுவையுடைய வெந்தயத்தைக் கடலை, தக்காளி என்பவற்றுடன் சேர்த்துச் சமைக்கும் போது வெந்தயத்தின் கசப்புச்சுவை தோன் றாது. தாய்மாருக்கு பால் சுரப்பை அதிகரிக் கவும் மாதவிலக்கின்போது ஏற்படும் வலியைக் குறைக்கவும் வெந்தயம் உதவும்.

*வெந்தயம் கதிக்கத்தட்டி வெள்ளுள்ளி குறையத்தட்டி*
*சிந்துரம் புளியுஞ் சேர்த்துத் தீயினிற் கொதித்தபின்னர்*
*நந்தல் இல் பெருங்காயத்தை நலமதாய் உரைத்து சுருளி*
*வந்த நற் கரிய வேம்பின் இலை வளர் கடுகு தானே.*

*சீரகம் சேர்த்து நெய்யின் அல்லது தெங்கின் நெய்யில்*
*ஏருறத்தாளிதம் செய்து இன்பமாய்க் குடிக்கப்போகும்*
*நேரிலா மந்தம் வாயு நிகழ்த்திய வாதம் அல்லால்*
*பேர் மலம் தனையும் அம்மா பின்னிடக் கழிக்கும் அன்றே.*

வெந்தயத்தை நன்கு பொடியாக்கி உள்ளியை மெதுவாக நசித்து அவற்றுடன் உப்பு, புளி சேர்த்து நீர்விட்டு கொதிக்கவைத்தபின்னர் பெருங்காயத்தை உரைத்துச் சேர்க்கவும். பின்னர் வெங்காயம், கறிவேப்பிலை, கடுகு, நற்சீரகம் என்பவற்றை நெய் அல்லது தேங் காய் எண்ணெயில் தாளிதம் செய்து இவற் றுடன் கொதிக்கவைத்த ரசத்தைச் சேர்க்கவும்.

### பிரண்டைப் பச்சடி:

இலங்கையின் வரண்ட பிரதேசங்களில் சாதா ரணமாகக் காணப்படும் ஒரு படர்கொடி பிரண்டை. தமிழர் மருத்துவத்தில் மூலவியா திக்குச் சிறந்த மருந்தாகக் கூறப்படுவது இந்த மூலிகை. மருந்தாகவும் உணவாகவும் உதவக்கூடிய தாவரங்களுள் பிரண்டையும் ஒன்று.

பிரண்டைப் பச்சடி செய்யும் முறையைப் பின் வருமாறு விளக்குகிறார் இருபாலைச் செட்- டியார்.

*பிரண்டையின் கொழுந்தை நெய்யில் பீதவன்னம் பொரித்தே*
*திரண்டி மிளகு நல்ல சீரகம் வெந்தயத்தோடு*
*அரண்டொரு மிளகாய் உப்போடு அருங்கடுகு இவை நேராக*
*முரண்டு அரச்சேர்த்து நன்றாய் முதிர்பழப்புளியும் சேரே*

*சேர்த்து அரைத்து அந்திசந்தி தின்றிட் பொருமல் மந்தம்*
*ஆர்த்திடும் வாயு வாதம் அகற்றிடும் மூலம் போக்கும்*
*பார்த்து இதைச் சாதம் சேர்த்துப் பகர் கறியாக உண்டால்*
*சேர்த்தியாம் சுவையதாகும் நீள் உடல் சுகமதாமே.*

பிரண்டைக் கொழுந்தைப் பொன்னிறமாகும் வரை எண்ணெயில் பொரித்து அதனுடன் மிளகு, நற்சீரகம், வெந்தயம், மிளகாய், உப்பு, கடுகு என்பவற்றை அளவுடன் சேர்த்து சிறி தளவு பழப்புளியும் விட்டு நன்றாக அரைத்து எடுக்கவும்.

சோற்றுடன் கறியாகச் சேர்த்துச் சாப்பிட உருசியாக இருக்கும். இந்தப் பிரண்டைப் பச்சடியைக் காலை மாலை உண்டுவந்தால் வயிற்றுப்பொருமல், வாய்வு மந்தம், மூல-

**- பால. சிவகடாட்சம் -**

வியாதி என்பவை தீரும் என்று கூறுகிறார் செட்டியார்.

### கற்றாழைக்கறி / Aloe curry:

இலங்கையின் மிகவரண்ட பிரதேசங்களில் சாதாரணமாகக் காணப்படும் இந்தத் தாவரம் இன்று வீடுகளில் பூச்சாடிகளில் அலங்காரப் பொருளாக வளர்க்கப்படுகிறது. குமரி கற்- றாழை, பிள்ளைக்கற்றாழை என்றெல்லாம் அழைக்கப்பெறும் இத்தாவரத்தை அலோ (Aloe) என்று ஆங்கிலத்தில் குறிப்பிடுவர். இத்தாவரத்தை வியாபாரரீதியாகப் பயன்படுத்தி லாபம் அடைந்தவர்கள் அமெரிக்கரேயாவர். சோப், ஷம்பூ, ஷேவிங் கிறீம் உட்பட ஏரா- ளமான அழகு சாதனப் பொருட்கள் கற்றா- ழையில் இருந்து தயாரிக்கப்படுகின்றன.

*தேசுலாம் குமரிக்குள்ளே சேர்ந்த நற்தசையை வாங்கி*
*மாசிலா ஏழு நீரில் வளம்பெறக் கழுவி வெள்ளிக்*
*காசென எடுத்து நல்ல கறிச்சரக்கு அவைகள் சேர்த்து*
*நேசமாய் அரைத்து நீயும் நிகர் உப்புப் புளியுங்கூட்டே*
*பாகமாய்ச் சமைத்துச் சோற்றில் பகர்கறியாக உண்ணப்*
*போகும் கை எரிவினோடு பொல்லாக் காலெரிவு தானும்*
*ஆகத்தை வருத்தும் மூலம் அகன்றிடும் மலமும் போகும்*
*வேகமார் மற்று நோயும் வீடும் என்று காணே*

கற்றாழைக்கு உள்ளே இருக்கும் சதையைப் பிரித்தெடுத்து அச்சதையை ஏழுதரம் தண் ணீரில் கழுவியெடுத்தபின் அதனுடன் கறிச் சரக்குகள் சேர்த்து அரைத்தெடுக்கவேண்டும். இதற்குத் தேவையான உப்பு, புளி சேர்த் துக் கறியாகச் சமைக்கவும். இந்தக்கறியை சோற்றுடன் சேர்த்துண்ண கை எரிவு, கால் எரிவு என்பவற்றுடன் மூலவியாதியும் தீரும். மலமும் ஒழுங்காகக் கழியும்.

### கோழிச்சாறு / Chicken Soup:


*கோழிக்குஞ்சு அதனை வாங்கி குடல்தனைப் போக்கி நன்றாய்ப்*
*பாழிய அம்மிதன்னில் பதியவைத்து அரைத்து அதோடே*
*காழுறு மிளகு மஞ்சள் கராம்பு சீரகம் வெள்ளுள்ளி*
*தாழ்வு இலாக் கொத்தமல்லி வசுவாசி சாதிக்காயே*

*வெந்தயம் சிற்றேலம்தான் மிளகாயே கறுவாப்பட்டை*
*சிந்துவில் உப்பு ஒவ்வொன்றும் சிறக்கவோர் அளவதாக*
*அந்தமாய்க் கூட்டி நன்றாய் அரைத்துச்சேர்த்து அளவதாக*
*நந்தலின் நீரை விட்டுக்கலக்கி நல்லெண்ணெய் காய்ந்தால்*

*காய் மிளகாயினோடே கருவேம்பின் இலை வெண்காயம்*
*நேயமாய் வெட்டிப்போட்டு நிறைதரு தணலில் வைத்தே*
*மேயதோர் சாறு காய்ச்சி மிருதுவாய் இறக்கி ஆற*
*ஆயதோர் சம்பீரத்தின் அருங்கனிச்சாறு விட்டே*

*வடித்து அதைக்கொடுத்தி பின்னர் வளர்தரு வாதசன்னி*
*விடுத்திடும் மெல்ல மெல்ல மெய்யும் நற்பெலனை மேவும்*
*கொடுத்திடும் உணவினோடே குறைவிலா மருந்துமாகும்*
*படித்திடு சான்றோர் நூலும் பகரும் இவ்வண்ண மாதே*

கோழிக்குஞ்சை வாங்கி அதன் குடலை அகற்றிவிட்டு சதையை அம்மியில் வைத்து அரைக்கவேண்டும். அவ்வாறு அரைக்கும் போது அதனுடன் மிளகு, மஞ்சள், கராம்பு, சீரகம், உள்ளி, கொத்தமல்லி, சாதிபத்திரி சாதிக்காய், வெந்தயம், ஏலம், மிளகாய், கறுவாப்பட்டை, உப்பு என்பவற்றை அளவுடன் ஒவ்வொன்றாகச்சேர்த்து அரைக்கவேண்டும். இவ்வாறு அரைத்து எடுத்தபின் அதனுடன் சுத்தமான தண்ணீர் விட்டுக் கலக்கவேண்டும். ஒரு சட்டியில் நல்லெண்ணெய் சிறிது விட்டு அது நன்கு சூடானதும் அதனுடன் செத்தல் மிளகாய் கறிவேப்பிலை வெங்காயம் அரிந்து போட்டு அரைத்துவைத்திருக்கும் இறைச்சிக் கரைசலைச் சேர்த்து நல்ல தணல் நெருப் பில் காய்ச்சவேண்டும். சாறு நன்கு கொதித்துக் காய்ந்ததும் அதனை அடுப்பில் இருந்து இறக்கி ஆறியபின் எலுமிச்சம் புளி விடவேண்டும். இச்சாற்றை வடித்து குடிக்கக் கொடுக்கவும். இந்தக் கோழிச்சாறு (chicken soup) உடலுக்கு வலுசேர்க்கும் உணவாகவும் மருந்தாகவும் பயன்படும்.



Sivakadadcham@thaiveedu.com

**TUTORING**

**SCIENCE TUTION:** GRADES 9, 10, 11 AND 12 **SCIENCE:** GRADES 9 AND 10 (SNC 1D/1P; SNC2D/2P) **BIOLOGY:** GRADE 11 AND 12 (SBI3U/SBI4U) **CHEMISTRY:** GRADE 11 (SCH3U)

**Dr. B. Sivakadadcham** (High School Teacher, Toronto)

**416 347 5720; 416 438 3946.**


HomeLife Home Warranty Program
உங்கள் வாடகைப் பணத்தை
சேமிப்பாக்குவோம்...
நீங்களும் ஒரு வீட்டுக்கு
உரிமையாளர் ஆகலாம்
By Weekly Mortgage. Pmt
$1166.72.
$609,900
9th Line / 14th Ave (Box Grove)
4 Bed Rooms, 3 Washrooms
Arista Home, Out Hardwood
Floors, Beautiful Landscaping
By Weekly Mortgage. Pmt
$1512.42.
$549,000
9th Line/ Reeves Way
4 Bed Rooms, 3 Washrooms
With 50K Upgraded, 9Ft Ceiling
By Weekly Mortgage. Pmt
$993.87.
$529,800
9th Line/ Reeves Way
4 Bed Rooms, 3 Washrooms
With 50K Upgraded, 9Ft Ceiling
By Weekly Mortgage. Pmt
$1512.42.
$779,900
9th Line / 14th Ave (Box Grove)
4+1 Bed Rooms, 4 Washrooms
With Over 100K In Upgrades
3000 Sq Ft, With 9Ft Ceiling
By Weekly Mortgage. Pmt
$734.60.
$385, 000
Brock Rd / Finch
4 Bed Rooms, 3 Washrooms
GraniteTop, Laminate, Finished Basement
By Weekly Mortgage. Pmt
$993.87.
$529,800
9th Line/ Reeves Way
4 Bed Rooms, 3 Washrooms
With 50K Upgraded, 9Ft Ceiling
By Weekly Mortgage. Pmt
$432.12.
$219, 000
Hillcrest/Hurontario
4 Bed Rooms, 2 Washrooms
Newly Renovated, Steps To Bus & Go train
Lease
$1,450
Kennedy / 401
2 Bed Rooms, 2 Washrooms
New Tridel Condo, Ttc, Go, Mall
* 25 Yrs. Amortization with10% down payment & interest Rate 2.90%. Some Condition may apply
Flexible Commission | Free Market Evaluation
Mortgage can be Arranged in Major Banks
2011-2012 PLATINUM CLUB Member
HOMELIFE HIGHER STANDARDS
Hariharan
Nadarajah
Sales Representative
Cell: 416-856-4276
harisells@gmail.com
HomeLife Today
Realty Ltd., Brokerage
Nima
Hariharan
Sales Representative
Cell: 647-866-2642
nimah02@hotmail.com
Not intended to solicit buyers or sellers under contract.
Office: 416.298.3200


Pyramid Group
This Month Special
$449,900
Vankirk/Wanless
4 Bedrooms
4 Washrooms
Hardwood Floor
Ceramic Floor
Call Pyramid Group for more Info
$265,000
Harwood/Hwy 2
Bedrooms: 3
Washrooms: 1
$299,500
Westney/Delaney
Bedrooms: 3
Washrooms: 3
$359,000
Dixie / North Park
Bedrooms: 3
Washrooms: 2
$359,500
Kennedy/Sandalwood
Bedrooms: 3
Washrooms: 2
$359,900
Sandalwood/Richvale
Bedrooms: 4
Washrooms: 2
$369,000
Kingston Rd.
Bedrooms: 3+1
Washrooms: 3
$374,900
Delaney/Reese
Bedrooms: 3
Washrooms: 3
$429,000
Ravenscroft/Rossland
Bedrooms: 3+2
Washrooms: 4
$449,900
Vankirk/Wanless
Bedrooms: 4
Washrooms: 4
$468,900
Major Oaks & Brock
Bedrooms: 4+2
Washrooms: 4
$529,900
Westney/Rossland
Bedrooms: 4
Washrooms: 4
$559,000
Britannia/9th Line
Bedrooms: 3
Washrooms: 4
$625,000
Mavis / Derry
Bedrooms: 4
Washrooms 3
$685,000
Eglinton/Erin Mills
Bedrooms: 4+2
Washrooms: 4
$732,000
Brock/Third Concession
Bedrooms: 5
Washrooms: 3
HOMELIFE
HIGHER STANDARDS
Home Life/Future Relty Inc.,Brokerage
#205-7 Eastvale Drive,Markham,ON L3S 4N8
Uthayan Sivarajah
Sales Representative
Dir: 416-301-5555
Sugan Sivarajah
Sales Representative
Dir: 416-890-9999
Raj Sivarajah
Sales Representative
Dir: 416-823-9797

# புலம்பெயர் சமூகத்...

107ம் பக்கத் தொடர்ச்சி...

தமது அங்க அசைவுகளையும் சத்தங்களையும் பயன்படுத்தியிருந்தனர். இந்த அசைவுகளே ஒருவிதமான நடனப் பாரம்பரியத்தை இவர்களிடம் கொண்டுவந்திருக்க வேண்டும் எனக் கருதலாம். வேட்டையாடும் தொழிலைப் போலவே பயிர் வளர்தலுக்காகவும் இந்த முறையினை இவர்கள் பின்னர் கையாளத் தொடங்கினர். பயிர் வளர்தலை நடனமாடி நிகழ்த்துதல் ஊடாக அதனை விளைச்சல் அடையச் செய்யலாம் என நம்பிய இவர்கள் ஒரு மந்திரத்தைப் பிரயோகிப்பதைப் போல இந்த செய்து காட்டலை நிகழ்த்தியிருந்தனர். இந்த பண்டைய சமூகத்தில் இவர்களது உழைப்பு, மதம், சடங்கு, நாடகம் என்பன தனித்தனியானதாக இருந்திருக்கவில்லை. ஒன்றோடொன்று பிரித்தெடுக்க முடியாதபடி பிணைந்திருந்தன என்றே சொல்லலாம்.

புராதன மனிதன் தனியே தனது மனித நடவடிக்கைகளோடு மட்டும் தனது பிரதி செய்தலை நிறுத்திக்கொள்ளவில்லை. மாறாக அவன் தனது நம்பிக்கைக்குரிய தெய்வ நடவடிக்கைகளையும் பிரதி செய்து காட்டத் தொடங்கியிருந்தான். இயற்கையையும், அந்த இயற்கை வாயிலாக தான் நன்மை அடைதலையும், அவற்றின் அச்சுறுத்தலில் இருந்து தான் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளுதலையும் மிக முக்கிய தேவைகளாகக் கொண்டிருந்தான். மண்ணில் இருந்து உணவு பெறுதல், மழை பெய்தல், சூரிய ஒளி கிடைத்தல், காற்று வீசுதல், மரங்கள் அசைதல் போன்ற இயற்கையின் செயற்பாடுகள் தமக்கு மீறிய சக்திகளாலேயே சாத்தியம் செய்யப்படுகின்றன என நம்பினான். அந்த சக்திகளை தெய்வங்களாக உருவகிக்கத் தொடங்கவுமானான். இந்த உருவகத்தின் நீட்சியே பலமான ஆவிகள் பற்றியதான இவனது நம்பிக்கைகளை கிளறிவிட்டிருந்தது. மலை முகடுகளில், ஆறுகளின் நீட்சியில், ஆகாயங்களின் மேற்தட்டுகளில், காற்றின் வீச்சுத் திறனில் எல்லாம் இந்த ஆவிகளின் இருப்புகள் உள்ளதென்றும், அந்த ஆவிகளை தம்வசப்படுத்துவதனூடாக தம்மால் இயற்கையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிட முடியும் எனவும் பலமாக நம்பினர். இந்த நம்பிக்கைகளின் அடியாகவே தாம் தம்மை ஆவிகளாக அபிநயித்துக்கொண்டு நடனமாடி ஆவிகளைத் தமவசப்படுத்துவதாக எண்ணிக்கொண்டனர். இத்தகைய தொடர் செயற்பாடுகளே சடங்குகளாக பர்ணமித்தது என்பது ஆய்வாளர்களின் சான்றாகக் கிடக்கின்றது.

குறித்த அந்த மனிதக் குழுவில் இத்தகை செயற்பாடுகளை தலைமை தாங்கி முன்னின்று நடத்துபவன் அவர்களின் குருவாகவும், மத ரீதியாகப் பார்க்கும் போது அவன் அக்குழுவின் மதகுருவாகவும் சடங்கினை நிகழ்த்துபவனாகவும் கருதப்பட்டான். பலமிக்க சக்திகளாக இவர்களால் உணரப்பட்ட இந்த ஆவிகளைப் பற்றிய கற்பனைகள் இவர்களின் அறிவு, அனுபவ வெளிகளுக்கு ஏற்ப புதிய புதிய வடிவங்களைப் பெற்றது. இந்த புதிய வடிவங்கள் இந்த சடங்குகளின் ஊடாக புதிய கதைகளை உருவாக்கத் தொடங்கியது. உருவாகிய இந்த கதைகளே பின்னர் கற்பனைக் கதைகளாகவும், கட்டுக்கதைகளாகவும், காலப் போக்கில் ஐதீகங்களாகவும் புழக்கத்தில் வந்தன எனலாம். இந்த சடங்குகளில் எல்லாம் பெரும்பான்மையாக நாடகத் தன்மையே துருத்தி நின்றிருக்கின்றன. அதனாலேயே பிற்காலத்தில் நாடகத் தன்மை வாய்ந்த இந்த சடங்குகளில் இருந்து நாடகம் தனியாக தன்னை பிரித்தெடுக்கக்கூடியதாக இருந்திருக்கின்றது. எல்லாச் சடங்குகளுமே நாடகமாக பரிணமித்தது எனக் கூற முடியாது. ஆனால் எல்லாவற்றிலுமே நாடகத் தன்மைகள் அதிகமாக இருந்திருக்கின்றன என்றே கூறலாம்.

வரலாற்று ரீதியாகப் பார்க்கும்போது, உலகின் மிகத் தொன்மையான நாடகங்களின் அல்லது சடங்குககளின் சான்றுகள் பெரும்பாலும் கிரேக்க நாகரிகத்திலேயே கண்டெடுக்கக் கூடியதாக இருந்திருக்கின்றது. இந்த கிரேக்கத்தின் தொன்மையான நாடகங்கள் ‘டித்ராம்’ என்ற சடங்குத் தன்மையான பாடலின் அடியாகத் தோன்றியிருக்கின்றதெனக் கூறுகின்றது அரங்கியல் ஆய்வு. அது மட்டுமல்லாது ‘தெஸ்பிஸ்’ என்ற முதல் நடிகனே இந்த போலச்செய்தல் அல்லது செய்து காட்டலின் அடியாகத் தோன்றியவன் எனவும் இந்த ஆய்வு கூறுகின்றது. ‘தியோனிசஸ்’ விழா எனப்படும் மிகப்பெரிய புராதன விழாவாக கிரேக்கத்தில் நிகழ்த்தப்பட்ட விழா இவர்களின் சடங்குத்தன்மையான விழாவாகும். இறந்த மனிதன் ஒருவனின் உடலை உயிருடன் இருப்பவர்கள் பகிர்ந்து உண்பதன் ஊடாக இறந்தவன் மீண்டும் தமக்கூடாக உயிர்வாழ்கிறான் என்ற ஐதீகத்தின் அடியிலேயே இச் சடங்கு அங்கு உருவாகியிருந்தது. இந்த ஐதீகத்தின் தொடர்ச்சியாகவே கத்தோலிக்க மதத்தில் இயேசுநாதர் தனது மரணத்துக்கு முந்திய இறுதிஇரவில் ஒரு அப்பத்தை எடுத்து ‘‘இது என் உடல். இதை வாங்கி அனைவரும் உண்ணுங்கள்’’ என்று கூறுவதும், தொடர்ந்து திராட்சை இரசத்தை எடுத்து ‘‘இது எனது இரத்தம். இதை அனைவரும் வாங்கி அருந்துங்கள்’’ எனக் கூறுவதும் ஆகும். இந்த புராதன ஐதீகத்தின் அடியிலேயே இன்றும் கிறீஸ்தவர்கள் தமது சமயச் சடங்குத் திருப்பலியில் இதை நினைவுகூருவதை நாம் பார்க்கலாம். எனவே எந்த ஒரு இனத்தினது அளிக்கை கலை வடிவங்களும் முதலில் சமயச் சடங்குகளில் இருந்தே தோற்றம் பெற்றிருக்கின்றது என்ற முடிவுக்கு ஆய்வுகள் எம்மைக் கொண்டு வந்திருக்கின்றன.

எமது தமிழ்க் கலைகளையும் அதன் தோற்றுவாய்களையும் ஆய்வு ரீதியாக பார்க்கும் போது கூட இத்தகைய ஐதீகங்களோடும் சமயக் கரணங்களோடும் பெருமளவு தொடர்புபட்டிருப்பதை நாம் காணலாம். தமிழ் இலக்கிய வரலாற்று ஆவணங்களைப் பார்க்கும் போதும் இந்த விடயங்கள் அங்கு நிரூபணமாகியிருக்கின்றது. தமிழ் இலக்கியத்தில் சங்ககாலம்பற்றி கிடைத்திருக்கின்ற தரவுகளில் வெறியாட்டு, தை நீராடல், துணங்கைக் கூத்து போன்ற சடங்குத் தன்மை வாய்ந்த நடனங்கள் அக்காலத்தில் இடம்பெற்றிருக்கின்றன என்பதற்கான சான்றுகள் கிடைத்திருக்கின்றன. அதற்கு பின்னதான சிலப்பதிகார காலத்தில் வேட்டுவவரி, கானல்வரி, குன்றக் குரவை போன்ற ஆதாரங்களும் இத்தகைய சடங்கின் அடி தோன்றிய அளிக்கைகளை உறுதி செய்வதாக அமைகின்றது. இன்றும் தமிழக கிராமங்களில் குழந்தைப் பேறு வேண்டி நிகழ்த்தப்படும் ‘கருவளச் சடங்கு’ ஒரு அளிக்கைப் பண்புக்கேற்ப நடைபெற்றுவருவதை நாம் காணலாம்.

இந்த ஒட்டுமொத்தமான உலகப் பொதுமைக்கு எமது ஈழத்து கூத்து மரபும் விதிவிலக்கான-தொன்றல்ல. எம்மிடையே உள்ள கூத்தின் சுவடுகள் சில இன்னமும் சமயம்சார் சடங்கில் இருந்து பூரணமாக விடுபடாமல் இருப்பதை நாம் இன்றும் காணலாம். விசேடமாக மலையக மக்கள் மத்தியில் இன்றும் ஆடப்படும் காமன் கூத்து, அருச்சுணன் தபசு, போன்ற கூத்து-களையும் யாழ்ப்பாணத்தில் ஆடப்படும் காத்தவராயன் கூத்துக்களையும் இதற்கு ஆதாரமாகக் கொள்ளலாம். மழை வேண்டி வசந்தன் கூத்து ஆடப்படுவதும், அப்படி ஆடப்படுவதால் மழை பொழிந்து வரட்சி போகும் என்ற ஐதீகமும் இன்றுவரை ஒரு தொடர்சியைக் கொண்டிருப்பதை நாம் காணலாம். எனவே இயற்கையையும் கடவுளரையும் மையப் பொருளாகக் கொண்டு ஐதிகங்களுடனும் சமயக் கரணங்களுடனும் எமது கூத்துக்கள் ஆடப்பட்டு வந்திருக்கின்றன என்பதனை நாம் புரிந்து கொள்ளலாம்.

இந்த கூத்துக்கள் எப்படி ஆடப்பட்டன? இதன் அளிக்கை வெளி எப்படி இருந்தன? பாடு பொருள்கள் எவற்றைப் பற்றி அமைந்திருந்தன? வேட உடைகள், ஒப்பனைகள் எந்த வகையின? ஆடியவர்கள் யார்? மீட்டப்பட்ட இசைகளும் வாசிக்கப்பட்ட வாத்தியங்களும் எப்படிப்பட்டன? எந்தெந்த காலங்களில் இவை ஆடப்பட்டன? இவற்றின் சமூகப் பெறுமானங்கள் எவை? அணியப்பட்ட அணிகலங்கள் எவை? பாவிக்கப்பட்ட அரங்கப் பொருட்கள் எப்படி இருந்தன? என்ற பல பல கேள்விகளுக்கான விடைகளையும், எமது இந்த கூத்து மரபின் ஏனைய மூலக்கூறுகள் பற்றியும் தொடர்ந்து நாம்
பேசவேண்டும்



sam.pratheepan@thaiveedu.com




# ஆயுட் காப்புறுதி விண்ணப்பமும் மருத்துவப் பரிசோதனைகளும்

ஆயுட் காப்புறுதிக்கு விண்ணப்பிக்கும் போது ஆயுட் காப்புறுதி நிறுவனத்தால் எடுக்கப்படும் மருத்துவ பரிசோதனைகள் பற்றிய தகவல்கள்.

ஆயுட் காப்புறுதி நிறுவனங்களின் மருத்துவ பரிசோதனைகள் நீங்கள் பெற்றுக் கொள்ளும் காப்புறுதித் தொகை, உங்கள் வயது என்பவற்றைப் பொறுத்து ஏற்பாடு செய்யப்படும். Para Medical எனப்படும் மருத்துவ பரிசோதனை அதிகமாக எல்லா ஆயுட் காப்புறுதி விண்ணப்பங்களுக்கும் தேவைப்படும். அதில் சிலவேளைகளில் உங்கள் Urine Sample, Blood Weric அல்லது EKG என்ற பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும். இந்த பரிசோதனைகள் நிறுவனத்திற்கு நிறுவனம் மாறுபடலாம். காப்புறுதித் தொகை அதிகரிக்கும் போது மருத்துவ பரிசோதனைகளும் அதிகமாகும்.

இந்தப் பரிசோதனைகள் செய்வதற்கு ஆயுட்காப்புறுதி நிறுவனம் ஒரு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ தாதி ஒருவரை அனுப்புவார்கள். (Licensed Health Professional) அல்லது (Registered Nurse) இதற்காக பணம் எதுவும் நீங்கள் செலுத்த வேண்டியதில்லை. மருத்துவ பரிசோதனைக்கான ஏற்பாடுகள் பணச் செலவுகள் யாவும் ஆயுட்காப்புறுதி நிறுவனத்தால் வழங்கப்படும். உங்களுக்கு என்ன பரிசோதனை செய்ய வேண்டும் என்பதை ஆயுட் காப்புறுதி நிறுவனம் உங்கள் முகவர் மூலம் உங்களுக்கு அறியத் தருவார்கள். மருத்துவ பரிசோதனைக்கான நாள் நேரம் என்பவற்றை நீங்கள் தீர்மானிக்கலாம். அத்துடன் உங்களுக்கு விரும்பிய இடத்துக்கு அவர்களை அழைத்து மருத்துவ பரிசோதனையைச் செய்ய முடியும்.

உங்கள் மருத்துவ பரிசோதனை முடிந்த பின்பு தகவல்கள் யாவும் ஆயுட் காப்புறுதி நிறுவனத்திற்கு அனுப்பிவைக்கப்படும்.

நீங்கள் கொடுத்த தகவல்கள் மற்றும் உங்கள் மருத்துவ பரிசோதனை முடிவுகளைப் பொறுத்து ஆயுட் காப்புறுதி நிறுவனம் உங்கள் காப்புறுதியின் மாதாந்தக் கட்டணத்தை தீர்மானிப்பார்கள்.

உங்கள் ஆயுட் காப்புறுதிக்கான மாதாந்த கட்டணம் உங்கள் மருத்துவ பரிசோதனைகளின் பின்பு அதிகரிக்கலாம். அல்லது உங்களுக்கு ஆரம்பத்தில் கூறப்பட்ட கட்டணத்தை விட குறைவாகவும் வர முடியும். அல்லது சில சமயங்களில் ஆயுட் காப்புறுதி இப்போது தரமுடியாது என்று நிராகரிக்கப்படும்.

### ஆயுட்காப்புறுதிக்கான விண்ணப்பம்

- ஏற்றுக்கொள்ளப்படல். Accepted
- நிராகரிக்கப்படல் Declined
- மாதாந்தக் கட்டணம் அதிகரித்தல் Rated
- விண்ணப்பம் தற்காலிகமாகத் தள்ளிவைக்கப்படல் Postponed

இந்த நான்கு விடயங்கள் மட்டுமே உங்கள் விண்ணப்பத்திற்கு ஏற்படும். எனவே ஒரு ஆயுட் காப்புறுதி விண்ணப்பம் காப்புறுதி நிறுவனத்தால் நிராகரிக்கப்படலாம் அல்லது மாதாந்தக் கட்டணம் அதிகரிக்கப்படும் அல்லது தற்காலிகமாக தள்ளிவைக்கப்படும் (Postpone).

எனவே ஆயுட்காப்புறுதி நிறுவனத்திற்கு எப்படி உங்கள் மருத்துவ பரிசோதனையை கொடுக்க வேண்டும் என்பது அவசியமாகின்றது.

உங்கள் மருத்துவ பரிசோதனையை காலை நேரத்தில் செய்வது மிகவும் சிறந்தது. காரணம் மருத்துவ பரிசோதனையின் போது (Blood Pressure) இரத்த அழுத்தப் பரிசோதனை செய்வார்கள்.

- காலை நேரத்தில் இரத்த அழுத்தம் சாதாரணமாக இருக்கும் எப்போதும் நீண்ட நித்திரையின் பின்பு செய்வது சிறந்தது.
- மருத்துவ பரிசோதனைக்கு முன்பு காப்பி, மதுபானம் (Coffee, Alcohol) போன்றவற்றை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.
- மருத்துவ பரிசோதனைக்கு முன்பு நன்றாக நீர் அருந்த வேண்டும். அத்துடன் அதிகளவு கொழுப்பு சாப்பாடுகள் சாப்பிடுவதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.
- நித்திரை குறைவாக அல்லது மிகவும் கடினமான வேலைக்கு பின்பு மருத்துவ பரிசோதனை செய்வதை தவிர்க்க வேண்டும். உதாரணமாக மருத்துவ பரிசோதனைக்கு முதல் நாள் நல்ல நித்திரை அளவான உணவு போன்றவை உங்களுக்கு நல்ல முடிவைத் தரும்.
- நீங்கள் பாவிக்கும் மருந்துகள், மற்றும் உங்கள் குடும்ப வைத்தியரின் பெயர் போன்ற தகவல்கள் கொடுக்கப்பட வேண்டும். நீங்கள் இதற்கு முன்பு ஏதாவது மருத்துவ பரிசோதனைகள் செய்திருந்தால் அது பற்றிய தகவல்கள் கொடுக்கப்பட வேண்டும்.

ஆயுட் காப்புறுதி நிறுவனம் ஏற்பாடு செய்ய மருத்துவ பரிசோதனையின் பின்பு சில சமயங்களில் உங்கள் ஆயுட் காப்புறுதி வழங்குவதற்கு மேலும் தகவல்கள் தேவைப்படும். அப்போது உங்கள் குடும்ப வைத்தியரிடம் இருந்து ஆயுட் காப்புறுதி நிறுவனம் சில தகவல்களைப் பெற்றுக்கொள்வார்கள். இதனை (APS - Attending Physician's Statement என அழைப்பார்கள்)

எனவே குடும்ப வைத்தியர் உங்கள் தகவல்களை அனுப்பிய பின்பு தீர்மானம் எடுக்கப்படும். சில குடும்ப வைத்தியர்கள் இந்தத் தகவல்களை உரிய நேரத்தில் அனுப்பாவிட்டால் உங்கள் காப்புறுதி கிடைப்பது தாமதமாகலாம். காரணம் உங்கள் குடும்ப வைத்தியரிடம் நீங்கள் ஒருவருடத்துக்கு மேலாக போகாவிட்டால் அவர்களுக்கு உங்கள் தற்போதைய தகவல்கள் அனுப்புவது கடினமாக இருக்கும். எனவே அடிக்கடி உங்கள் குடும்ப வைத்தியரிடம் சென்று பரிசோதிப்பது நல்லது. வருடத்தில் ஒருமுறையாவது உங்கள் குடும்ப வைத்தியரிடம்



சிறீதரன் துரைராஜா
- ஆயுட் காப்புறுதி முகவர் -

மருத்துவ பரிசோதனை செய்வது ஆயுட் காப்புறுதி பெறுவதற்கு இலகுவாக இருக்கும்.

### The Medical Information Bureau:

நீங்கள் ஏதாவது ஒரு ஆயுட் காப்புறுதி நிறுவனத்தில் ஆயுட் காப்புறுதிக்கு விண்ணப்பம் செய்தவுடன் உங்கள் மருத்துவ ரீதியான தகவல்கள் யாவும் MIB என அழைக்கப்படும் மருத்துவத் தகவல்களுக்கான நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்டுவிடும். இதன் பின்பு உங்கள் மருத்துவத் தகவல்கள் இந்த நிறுவனத்தில் மிகவும் பாதுகாப்பாகப் பேணப்படும். இந்தத் தகவல்களை ஆயுட் காப்புறுதி நிறுவனங்கள் மட்டும் ஒருவர் ஆயுட் காப்புறுதிக்கு விண்ணப்பிக்கும் போது பார்வையிட முடியும். எனவே நீங்கள் ஏற்கனவே ஆயுட்காப்புறுதி பெற்றிருந்தால் அல்லது விண்ணப்பித்து நிராகரிக்கப்பட்டிருந்தால் அந்தத் தகவல்கள் ஆயுட் காப்புறுதி நிறுவனத்திற்கு கிடைக்கும்.

ஆயுட் காப்புறுதி விண்ணப்பத்தில் எல்லா தகவல்களையும் சரியாகக் கொடுப்பது அவசியம். ஆயுட் காப்புறுதி நிறுவனங்கள் தற்போதை உங்கள் மருத்துவ ரீதியான உடல் நிலையைப் பொறுத்தே தீர்மானம் எடுப்பார்கள். எனவே உங்களின் பழைய மருத்துவத் தகவல்களை மறைப்பதால் பாதிப்பு உண்டு. சரியான, உண்மையான தகவல்களைக் கொடுப்பதால் பாதிப்பு இல்லை.

sritharan@thaiveedu.com

■ ■ ■

## ஒரு ஆயுட்காப்புறுதிப் பத்திரத்தின் சுய விமர்சனம்

*எனக்கும் உங்களுக்கும் இந்த உலகில் பல கடமைகள் உள்ளது. ஆராய்ந்து பார்த்தால் இருவருக்கும் உள்ள கடமைளில் சில ஒற்றுமைகள் உள்ளது. உங்களின் முக்கிய கடமைகள் உங்களின் குடும்பத் தவருக்கு உணவு, உடை, உறைவிடம், கல்வி போன்ற பல விடயங்களை வழங்குவது. நீங்கள் இவற்றை எல்லாம் செய்யும் போது என்னை ஒரு பாதுகாப்பான இடத்தில் போட்டு வையுங்கள். நான் ஒரு வெறும் கடதாசிப் பத்திரம். ஆனால், உங்கள் வருமானத்தில் ஒரு சிறிய பகுதியை எனக்கு செலுத்துவதன் மூலம் இந்தப் பத்திரத்தை பயனுள்ளதாக மாற்ற முடியும். எதிர்பாரா விதமாக நீங்கள் இந்த உலகத்தை விட்டுப் போய்விட்டால், நான் உங்கள் கடமைகளில் சிலவற்றை செய்யத் தொடங்குவேன். உங்கள் குடும்பத்துக்கு தேவையான உணவு, உடை, உறைவிடம் அத்துடன் உங்கள் குழந்தைகளின் கல்விக்கான பணம் போன்றவற்றை நீங்கள் இல்லாத நேரத்தில் என்னால் வழங்க முடியும். நீங்கள் எனக்காகச் செலுத்தும் பணம் ஒரு பெரும் சுமையாக இருந்தால் கவலைப்படாதீர்கள். நீங்கள் இல்லாத நேரத்தில் என்னால் உங்கள் குடும்பத்துக்கு கிடைக்கும் உதவி நீங்கள் கட்டிய பணத்திலும் பலமடங்கு அதிகமாகவே இருக்கும்.*

*எனவே, நீங்கள் இந்த சிறு தொகையை மாதாந்தம் அல்லது வருடா வருடம் செலுத்தி என்னைப் பாதுகாத்துக் கொண்டால் நான், நீங்கள் இல்லாத வேளையில் எனது கடமையை சரியாகச் செய்வேன் என உங்களுக்கு உறுதியுடன் உத்தரவாதம் அளிக்கின்றேன்.*

*இப்படிக்கு உங்கள்*
*ஆயுட்காப்புறுதி*

**Saree Blouse**

உங்கள் சகலவிதமான
சட்டை (சாறி புளவுஸ் / Saree Blouse)
தைப்பதற்கும்
அழையுங்கள்.

416 264 6400

இறுக்கமான சூழலில் இலகுவான தீர்வு

Life100
INSURANCE & INVESTMENTS INC.

சிறீதரன் துரைராஜா
காப்புறுதி முகவர்
MDRT The Premier Association of Financial Professionals®
416.918.9771
info@life100.ca



Serving you in two locations
759 Warden Ave., Scarborough, ON M1L 4B5, Tel: 416-830-0386
10 Milner Business Court, Suite 208, Scarborough, ON M1B 3C6 Tel: 416.321.2500



# WHO WANTS TO BE AN INSURANCE AGENT?

## Become an Insurance Advisor

We provide you with Exceptional Service:

- Life Licensing Qualification program
- Free Seminars and workshops for career development
- Free product and sales training
- Providing best advice and knowledge in the field of financial industry
- Competitive compensation packages
- Ongoing training and support
- Mentoring and motivational support by professionals

## உயர் கல்வியே உங்கள் குழந்தைகளுக்கு நீங்கள் வழங்கும் அதிஉன்னத கொடை

# RESP

- கனடிய அரசினால் வழங்கப்படும் மானியம் 20% - 40%
- காப்புறுதி நிறுவனம் வழங்கும் விசேட சலுகை 15%
- கனடிய கல்வி மானியமாக வருடம் 500 டொலர்
- இவை அனைத்தையும் பெறுவதற்கு RESP திட்டத்தை இன்றே ஆரம்பியுங்கள்

**MEDICAL INSURANCE FOR SUPER VISA 100% REFUND IF VISA DENIED**

## கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டால் 2 மில்லியன் வரை காப்புறுதி

நோய் ஏற்படாதுவிட்டால் கட்டிய பணம் முழுவதையும் மீளப்பெறுங்கள்.

## வயோதிபர்களுக்கான காப்புறுதி

- மருத்துவப் பரிசோதனை வேண்டியதில்லை
- உடனடியாக காப்புறுதித் திட்டம் அமலாகும்
- வேறு நிறுவனங்களால் நிராகரிக்கப்பட்டவர்களும், நீரிழிவு நோயால் இன்சுலின் பாவிப்பவர்களும் பெற்றுக்கொள்ளலாம்

- digi Media -

**Life100**
INSURANCE & INVESTMENTS INC.

LIFE INSURANCE • CRITICAL ILLNESS
GROUP INSURANCE • HEALTH & DENTAL
MORTGAGE INSURANCE • RRSP • RESP

## சிறீதரன் துரைராஜா
CLU, CHS

Direct: **416.918.9771**
Business: **416.321.2500**
10 Milner Business Court, Suite 208, Scarborough, ON M1B 3C6
Web: www.life100.ca, E-mail: info@life100.ca

MDRT
Member of Million Dollar Round Table

**Are you getting Million Dollar advice?**

DIGI MEDIA CREATIONS
graphic designers
info@digimedias.com | Phone: 416.467.4952
www.digimedias.com | Fax: 416.850.4349

PRINT FAST.ca
imagine create print promote
1000 Full colour Business Cards $19
416.752.3278
print@printfast.ca

MARANAM.COM
HEAVEN CARES
www.maranam.com
Working with Chapel Ridge
416-431-3600
E-Mail: info@maranam.com
8911 Woodbine Ave., Markham, ON L3R 5G1



Puzzle Solver for your Real Estate needs....
Ramanan Ramachandran
Broker of Record
Direct: 416-670-6467
HomeLife Today Realty Ltd., Brokerage
Independently Owned and Operated
Office: 416-298-3200
100% Proven Results visit www.agentram.com

Just Listed
DAISY MART
14TH AND 9TH LINE
$1800-$2000 LOTTO PER MONTH, $ 21,000-$24,000 PER MONTH OTHER SALES
AMPLE PARKING
$99,900+STOCKS

Just Listed
IN BOX GROVE AREA
9TH LINE AND ROUGE BANK
5 MONTHS OLD HOME BY ARISTA, APRX 2700 SQ. FULLY UPGRADED, FULLY HARDWOOD TOP TO BOTTOM. MAIN FLOOR POT LIGHTS, HARDWOOD STAIRS WITH IRON RAILIN,NO SIDE WALK, 4 CAR PAR, WALK TO BUS, ALL SCHOOLS, MALL, HWY
ASKING $799,900
OR BEST OFFER

Just Listed
IN BOX GROVE AREA
9TH LINE AND 14TH AVE
5 BEDROOMS HOME
2 1/2 YEARS OLD, 3500 SQ HARDWOOD MAIN FLOOR, NEW PAINTS. CORNER HOME WITH LARGER BACK YARD.
WALK TO BUS, ALL SCHOOLS, MALL, HWY 7, HWY 407
ASKING $829,900
OR BEST OFFER







இம்மாதப் புகைப்படக் கலைஞர்

## கவினி சேகர்

Driftwood Public School இல் பாலர் வகுப்பில் கல்வி கற்கும் இவர் தனது விடுமுறைப் பயணத்தின் பொழுது எடுத்த படங்களிற் சில.

**உங்களிடம், நீங்கள் எடுத்த அழகான புகைப்படங்கள் இருக்கின்றனவா? அவற்றை நாங்கள் பிரசுரிக்க விரும்புகிறோம்.**

புகைப்படம் எடுத்தவரின் பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல், புகைப்படம், எடுக்கப்பட்ட காட்சி அல்லது எடுக்கப்பட்டவருடைய விபரங்கள் என்பவற்றுடன் நீங்கள் எடுத்த புகைப்படத்தையும் அனுப்பிவையுங்கள். அவை இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.

திறமை, தொழில் ஆற்றல், தகுதி உள்ள தமிழ் சட்டத்தரணியின் உதவியைப் பெற வேண்டுமாயின்,
அபி சிங்கம் சட்ட நிறுவனத்தை அணுகுங்கள்.
ABIMANYU S. SINGAM
Barrister, Solicitor & Notary Public
Professional. Competent. Accessible.
Abi Singam LAW PROFESSIONAL CORPORATION
• REAL ESTATE LAW (Purchase, Sale, Refinance)
• FAMILY LAW (Agreements, Divorce, Custody, Support)
• IMMIGRATION LAW (Sponsorships, Business class and skilled immigration, Visitor Visas etc)
• WILLS, POWER OF ATTORNEYS, AFFIDAVITS
ABI SINGAM LAW PROFESSIONAL CORPORATION
8130 Sheppard Ave. E, Suite 201, Toronto, Ontario M1B 3W3
Tel: 416 724 4ABI (4224) Fax: 416 724 4225

iNFORCE LIFe
Financial Services Inc.
காப்புறுதி தொடர்பான சேவைகளுக்கு...
Group Benefits | Life | Critical Illness | Non-Medical
Mortgage Insurance | Long Term Care Insurance
Disability Insurance | Super Visa | Travel & Visitors
RESP | Investments
Chandran Rasalingam CHS
Managing Director
Bus: 416 321 6000
Direct: 416 909 0400

YOUR PARTNER IN MORTGAGES
Ragavan Ramanathan 416.579.7533
Dirresh Krishnapillai 416.819.4373